செம்பியர் திலகம்

2



ஜ.ஏ.வடிவேலு



மின்னுலாக்கம் - சீயான்

செம்பியர் திலகம்

இரண்டாவது புத்தகம்

ஜி. ஏ. வடிவேலு

பூம்புகார் பதிப்பகம்
63, பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108
தொலைபேசி 5267543

விலை ரூ. 175.00

பூம்புகார் வெளியீட்டு எண் 506
முதற் பதிப்பு பிப்ரவரி, 2002
உரிமை ஆசிரியர்க்கு
P.C.: 98108111

அச்சிட்டவர்கள் ஈகிள் பிரஸ், சென்னை - 600 013

பூம்புகார் பதிப்பகம் பற்றி ஒரு சில வாக்கியங்கள்.

தமிழ் மக்களின் அன்பால் அரவணைப்பால் வளர்ந்து வரும் எங்கள் பூம்புகார் பதிப்பகம் கால் நூற்றாண்டைத் தாண்டி கன்னித் தமிழ் வளர்ச்சிக்குத் தனது எளிய பங்கை இனிதே வழங்கி வருகிறது.

1975ஆம் ஆண்டு தோற்றம் கண்ட பூம்புகார் பதிப்பகம் 'காமராஜ் ஒரு சரித்திரம்' என்ற நூலை முதல் வெளியீடாக்கித் தனது வரலாற்றைத் தொடங்கியது.

முன்னாள் மத்திய உள்துறை அமைச்சர் திருமிகு பிரம்மானந்த ரெட்டி அவர்கள் கரங்களால் வெளியிடப்பட்டு டாக்டர் சிவாஜிகணேசன், கவிஞர் கண்ணதாசன், தமிழ்வாணன் ஆகியோரால் பெற்றுக்கொள்ளப்பட்ட 'காமராஜ் ஒரு சரித்திரம்' பூம்புகாரின் முதல் வெளியீட்டு விழாவாகும்.

புகழ்மிக்க அம் மனித மாமணி பற்றிய ஓர் நூல் பத்துப் பதிப்புகள் கண்டது; ஐம்பதாயிரம் படிகளை விற்பனையில் தாண்டியது என்பது சாதனை நாயகருக்கும் பெருமை, எங்களுக்கும் பெருமை. வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறி வகுத்த வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறள் நூலுக்கு எங்கள் பதிப்பக புதிய உரை இப்போது பதினோராவது பதிப்பு வெளிவந்துள்ளது. ஒரு இலட்சத்துப் பதினோராயிரம் படிகள் தமிழ் மக்கள் கரங்களுக்குச் சென்று சேர்ந்துள்ளன.

தரத்தில் சிறந்த எங்கள் வெளியீடுகளில் பல, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறைப் பரிசுகளைப் பெற்றுள்ளன.

தமிழகத்தின் தலைசிறந்த எழுத்து வேந்தர்களின் படைப்புக்களை வெளியிடும் பெரும் பேறு பெற்றிருக்கிறது எங்கள் பூம்புகார்.

மகாகவி பாரதி, திரு. வி. க., பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, கல்கி, நாமக்கல் கவிஞர், க. திரவியம், கலைஞர் மு. கருணாநிதி, பேராசிரியர் க. அன்பழகன், டாக்டர். கா காளிமுத்து, ஏ. பத்மநாபன், ஈரோடு தமிழன்பன், பொன். பரமகுரு, சௌந்தரா கைலாசம், கவிஞர் இ. முத்துராமலிங்கம், சொ. பொ. சொக்கலிங்கம், ஸ்ரீ வேணுகோபால், பட்டுக்கோட்டை பிரபாகர், அனுராதா ரமணன், ராஜேஷ்குமார் என்று நீளும் பட்டியலில் பெருமைக்குரிய எழுத்தாளர்களின் பெயர்களால் பூம்புகார் பதிப்பகம் பளிச்சிட்டு மின்னுகிறது.

கவிதை, நாவல், சிறுகதை, தத்துவம், ஆன்மீகம், அறிவியல், நுண்கலை எனத் துறைதோறும் பயனளிக்கிற, பண்பை வளர்க்கிற, படிப்பவர் சுவையுணர்வைப் பேணுகிற படைப்புகள் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றன.

வள்ளுவப் பெருந்தகை வரையிறுத்துக் கூறும் '**இலங்கு நூல்! நவில்தொறும் நயம் பயக்கும் நூல் – நுண்ணிய நூல்**' என்பன எங்கள் இதய தாகமாகவும், இலட்சிய வெறியாகவும் உள்ளன.

அவ்வப்போது வாசகப் பெருமக்களைத் திரளாகக் காணும் வகையிலும் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையிலும் பூம்புகார் பதிப்பகம் வெளியீட்டு விழாக்களைத் தனது குடும்ப நிகழ்ச்சிபோல் குதூகலத்துடன் கொண்டாடி வருகிறது.

பேரறிஞர் அண்ணாவின் சீரிய எழுத்துச் செல்வம் இதுவரை பதின்மூன்று பெரும் தொகுதிகளாக எங்கள் பூம்புகார் வாயிலாக வெளிவந்துள்ளது.

பூம்புகார் பதிப்பகத்து நூல்கள் அச்சுக் கலையின் உச்சத்தை முத்தமிட்டு ஒளிர்வன. கட்டமைப்புக்கும், கண்கவர் கலை நேர்த்திக்கும் கட்டியங்கூறி மிளிர்வன. கண்களில் பட்டாலும், கைகளில் தொட்டாலும், தாங்கள் பொலிவுமிக்க பூம்புகார்ச் செல்வங்கள் என்பதைத் தவறாமல் சொல்லவல்லன. கவனத்தை வெல்லவல்லன.

தமிழகத்தில் பதிப்புத்துறையில் தனக்கென ஒரு தடம் போட்டு, புடம்போட்ட தங்கமாய் விளங்கிவரும் எங்கள் பூம்புகார் பதிப்பகத்தின் 506-வது வெளியீடாக திரு. ஜி.ஏ. வடிவேலு அவர்கள் எழுதிய சரித்திர புகழ்மிக்க நாவலான **செம்பியர் திலகம் – இரண்டாம் புத்தகத்தை** வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறது.

முன்னுரை

நில மகளின் திலகமெனத் திகழும் தமிழகத்துக்கு பெருமை சேர்த்தவர்கள் சோழ மன்னர்களும் பாண்டிய அரசர்களும். வரலாற்றின் ஒரு முக்கிய கட்டத்தின் நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டு புனையப்பட்ட புதினம் செம்பியர் திலகம்.

இளம் வயது முதலே மனதில் உருவான எண்ணத்தை அசைபோட்டு எத்தனையோ நூல்களைப் படித்து, ஏராளமான ஆதாரங்களைச் சேகரித்து என்னுடைய இலட்சியப் படைப்பாக இந்நூலை உருவாக்கியுள்ளேன்.

ஐயாயிரம் ஆண்டுப் புகழ் படைத்த தமிழகத்துக்கு முறையான வரலாறு இல்லாதது மிகப் பெரிய துரதிர்ஷ்டமாகும். திரு. நீலகண்ட சாஸ்திரியும் சதாசிவப் பண்டாரத்தாரும் ஓரளவு இக்குறை நீங்க உதவியுள்ளனர்.

பண்டைய இலக்கியங்களும், கோயில் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் கடந்த காலத்தைக் காண உதவும் கண்ணாடிகளாகத் திகழ்கின்றன. அவற்றிலுள்ள மிகைகளை நீக்கி ஓரளவுக்கு அக்கால நிகழ்வுகளை உய்த்துணர வேண்டியுள்ளது. அவற்றையெல்லாம் துருவித் துருவி ஆராய்ந்தேன். அறிஞர்கள் பலரைச் சந்தித்துப் பேசித் தெளிவு பெற்றேன். அதன் பின்னரே இப்பெரும் பணியை மேற்கொள்ளும் துணிவு பிறந்தது.

சமயங்கள் தமிழக வரலாற்றில் சிறப்பான இடம் வகிக்கின்றன. சைவ, வைணவ, சமண, பௌத்த நூல்கள் தமிழில் உள்ள அளவுக்கு இந்திய மொழிகள் எதிலும் கிடையாது எனலாம். சமயச் சண்டைகளுக்கும் இங்கு பஞ்சமில்லை. வரலாற்றுப் போக்கையே மாற்றவும் அவை உதவியுள்ளன.

வரலாறு என்பது உண்மையில் இலக்கியமேயாகும். உண்மை நிகழ்ச்சிகள் நல்ல முறையில் விளக்கப்படுமாயின் கற்பனைக் காவியத்தைவிட சிறப்பாகவும் சுவையுடைய தாகவும் அமையும். இலக்கியம் படைக்க வரலாறு வேண்டும். வரலாறு எழுத இலக்கியம் வேண்டும். குறைகளையும் நிறைகளையும் மிகைப்படுத்திக் கூற இலக்கியம் இடமளிக்கிறது. எனவே

இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு வரலாற்றை உணர முற்படும்போது இந்த மிகை அம்சத்தைத் தள்ளிவிட்டே பார்க்க வேண்டும்.

குறைகளை அடியோடு மறைப்பதோ, நிறைகளை மிகைப்படுத்துவதோ கூடாது. குறைகளும், நிறைகளும் கொண்டவனே மனிதன். அரசர்களும் அதற்கு விலக்கல்ல என்பதை இப்புதினத்தை எழுதும்போது மறவாமல் என் மனதில் கொண்டிருக்கிறேன். இந்நூலில் வலம் வரும் இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், திருச்சிற்றம் பலமுடையார், வேதவனம், நல்லமன், மகீதரன் போன்ற வரலாற்றுப் புகழ்மிக்க பாத்திரங்களை உள்ளபடி காட்டியிருக்கின்றேன். கற்பனையில் உருவானது கோதை மட்டுமே. தனது குறிக்கோளையடைய தவறான வழிகளைக் கையாண்ட அவளும் கூட மதவெறியின் விளைவுகளைக் காட்டப் பயன்பட்டிருக்கிறாள். இறுதியில் அவளும் சிறப்புப் பெறுகிறாள். ஈழத்துடன் தமிழகத்துக்கு இருந்த உறவும், பூசலும் வரலாற்று நிகழ்ச்சிகள். இப்புதினத்தில் அவை முக்கிய இடம் பெறுகின்றன.

ஆசை பற்றி அறையலுற்றேன் என்று கவிசக்ரவர்த்தி கம்பர் கூறியது போல என்னுடைய அறிவுப்பசியின் வெளிப்பாடே இப்பெரு முயற்சி. குற்றம் நீக்கிக் குணம் நாட வேண்டுகிறேன்.

இந்நூலை உருவாக்குவதில் உறுதுணையாக இருந்தவர்கள் பலர். எழுதத் துவங்கிய நாளிலிருந்தே வழிகாட்டி யாக இருந்து உதவியவர் கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞர் புலவர் போ. வெங்கட் ராமன் அவர்கள். நூலில் இடம் பெறும் ஊர்களுக்கெல்லாம் உடன் வந்து உற்சாக மூட்டியவர் திரு. தனபால். சிவராஜ் தம்பதி ஆர்வத்தை வளர்த்து அனைத்து உதவிகளையும் செய்தவர்கள்.

இந்நூலை பூம்புகார் பதிப்பகம் வாயிலாக அழகுற இரண்டு புத்தகங்களாக அச்சிட்டுத் தந்த ஈகிள் பிரஸ் உரிமையாளர் திரு. எம்.ஜே. பிரதாப்சிங் அவர்களுக்கும் நன்றி பாராட்டுவது என் கடமை.

என் லட்சியப் பணியை முடித்துவிட்ட மனநிறைவுடன் தமிழக வாசகர்கள் முன் இந்நூலைப் படைத்துள்ளேன். மேற்கொண்ட பணியில் எந்த அளவு வெற்றி பெற்றுள்ளேன் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு இனி வாசகர்களாகிய உங்களுடையதாகும். வணக்கம்.

ஜி. ஏ. வடிவேலு

பொருளடக்கம்

வரிசை எண்		பக்க எண்
1.	திருமாறன் தோன்றினான்.	9
2.	நாரணன் விளையாட்டு	23
3.	உத்திரகுமரன் கதை	45
4.	தென்திசை இலங்கை நோக்கி	59
5.	சிம்மகிரி	74
6.	கனவு உலகம்	87
7.	அமாவாசை நிலவு	99
8.	ஈழ நாட்டு இளவரசி	110
9.	வாள் உடைந்தது	120
10.	திடீர் திருப்பம்	133
11.	இடி இறங்கிவிட்டது	140
12.	காதலுக்கு கண் இல்லை	153
13.	காதலி கடவுளானாள்	161
14.	வரலாற்று நாயகனானார்	177
15.	துர்க்கா தேவியின் மீது ஆணை	190
16.	விட அம்பு	202
17.	புதிய நண்பன்	215.
18.	காமன் கதை	230
19.	புதிய உறவு	245
20.	மற்றுமொரு மன்மதன்	256
21.	தலைகளுக்கு ஆபத்து	264
22.	நவீன கைகேயி	273
23.	மற்றுமொரு பலி	286
24.	புதிய பானம்	296

வரிசை எண்		பக்க எண்
25.	பிரிந்தவர் கூடினர்	305
26.	உண்மைக்கு விலையா?	313
27.	கெட்ட கனவு	331
28.	வெற்றிவேல், வீரவேல்	342
29.	படை புறப்பட்டது	355
30.	திருவரங்கத்து அமுதனார்	371
31.	மீண்டும் பேய் முலையாள்!	383
32.	தில்லை பொது நடம் போற்றி, போற்றி!	394
33.	வெற்றி தந்த வேதனை	406
34.	ஆ, கோதை நீயா?	419
35.	கொல்லாமை மோசமான கொள்கை!	425
36.	மன்னர் அழுதார்	437
37.	திருமால் தில்லைக்கு வந்தார்	451

செம்பியர் திலகம்

(இரண்டாவது புத்தகம்)

1. திருமாறன் தோன்றினான்

ஈழவேந்தன் பராக்கிரமபாகு கட்டிய கோட்டை களெல்லாம் சரிந்து பொடிப் பொடியாகி விட்டன. அவை அனைத்தும் வெறும் மணல் கோட்டைகள் போர்களில் வெற்றியன்றி வேறொன்றும் காணாத பராக்கிரமபாகுவால் தமிழ்நாட்டில் பட்ட அடியைத் தாங்க இயலவில்லை.

ஈழப்படைகள் ஓடி ஓடி பாண்டி நாட்டைப் பிடித்தன. எதிர்த்து நின்றவர்கள் எமன் உலகிற்கு அனுப்பப்பட்டார்கள். வீராதி வீரர்களான இலங்காபுரி தண்டநாயகனும் சகத்விசய தண்டநாயகனும் எதிர்ப்பின்றி தமிழகத்தில் புகுந்து விளையாடினார்கள். ஈழ நாணயமான காகபணம் பாண்டி நாட்டின் நாணயமாக இருந்தது. சேரநாடு ஏற்கனவே பலவீனமாகிவிட்டிருந்தது. இனி, சோழ நாட்டை மட்டுமே பிடிக்க வேண்டும். அத்துடன் தமிழகத்து மூவேந்தர்களின் கதை முடிந்துவிடும். தென் மதுரையில் மட்டுமல்ல. பழையாறையிலும் அரசு தர்பார் நடத்துவேன் என்று ஆவலோடு திட்டங்கள் தீட்டியிருந்தான் பராக்கிரமபாகு.

தமிழகத்துடன் நடைபெற்ற கொடிய போருக்கு ஏராளமான படை வீரர்களையும், ஆயுதங்களையும் அனுப்பி வைத்தான். அவை அனைத்தையும்விட மேலாக தம்முடைய இரு கரங்களான வீராதிவீரர்கள் இலங்காபுரி தண்டநாயகனையும், சகத்விசய தண்டநாயகனையும் போருக்கு தலைமை தாங்க அனுப்பினான். கூற்றையும் ஆடல் கொள்ளும் ஆற்றல் மிக்க அவ்வீர சேனாபதிகள் போரில் கொல்லப்பட்டார்கள். இது எதிர்பாராதது.

போரில் சேனாபதிகள் கொல்லப்படுவது கூட இயல்புதான். படைகள் நிர்மூலமாக அழிவதும் இயல்புதான்; ஆனால் சோழர்கள் மாவீரர்களான இரு சேனாபதிகளை கொன்றதோடு நிற்கவில்லை. அதற்கும் மேலே போய் செய்யக்கூடாத செயலைச்

செய்து விட்டார்கள் சேனாபதிகளின் சிரங்களை வெட்டினார்கள். துண்டிக்கப்பட்ட சிரங்களை கழிகளில் செருகி மதுரை கோட்டை வாயிலின் இருபுறங்களிலும் நட்டு விட்டார்கள். அப்பப்பா திட்டமிட்டே ஈழத்தை அவமானப் படுத்த சோழக் குள்ளநரிகள் செய்த சூழ்ச்சி இது. இதனை நினைக்கும்போது பராக்கிரமபாகுவால் பொறுக்க முடியவில்லை. உள்ளம் கொதித்தது. உடல் அனலாக வாட்டியது.

பழிக்குப்பழி வாங்கியே தீருவேன் என்று நாளைக்கு ஆயிரம் முறை சூளுரைத்தான் பராக்கிரமபாகு. அதே நினைவில் தினமும் துடித்துக் கொண்டு இருந்தான். அந்நிலையில் அவனுக்கு ஒரு நல்ல சகுனம் தென்பட்டது. மகிழ்வான செய்தி கிடைத்தது. சோழ அரசின் பயங்கரக் கழுகு, ஈழ சேனாபதிகளின் தலைகளை அரண்மனைக்கு எதிரில் கழிகளில் பொருத்தி வைக்க ஏற்பாடு செய்த கொடியவரான சிற்றம்பலமுடையார் எமபுரிப்போய் சேர்ந்து விட்டார். இச்செய்தி ஈழ வேந்தனுக்கு தேனினும் இனிதாக இனித்தது.

'சோழ மன்னன் உலகமறியாத பச்சிளம் குழந்தை. அவனுடைய அமைச்சரும் அப்படியே. அவன் பால்மனம் மாறாத பிள்ளை. இருவருமே போர் என்றால் அஞ்சி ஓடுவார்கள். அவர்களைத் தூக்கி பந்தாடுவது கடினம் அல்ல. இதுதான் சோழ நாட்டின்மீது படையெடுக்க தக்க தருணம். நெடுங்காலமாக எதிர்பார்த்திருந்த வாய்ப்பு கிடைத்துவிட்டது. இம்முறை ஈழப்படைகளுக்கு நானே தலைமைதாங்கி தமிழகம் செல்லப் போகிறேன். எதிர்த்து நிற்கும் தமிழ் மன்னர்களை எமனுலகிற்கு அனுப்பப் போகிறேன். இராசாதிராசன் ஆட்சிக்கு மட்டும் முடிவு கட்டப் போவதில்லை. அவனுடைய தயவில் பாண்டிய நாடாளும் அந்தத் துரோகி குலசேகர பாண்டியன் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப் போகிறேன். மதுரையிலும், பழையாறையிலும் வீர அபிடேகம் செய்து கொண்டு மதுரையையும், பழையாறையும் கொண்ட ஈழ கேசரி பராக்கிரமபாகுவாக ஈழத்திற்குத் திரும்புவேன்.' பராக்கிரமபாகு திட்டங்களைத் தீட்டினான்.

ஆனால் ஈழத்தின் உண்மையான நிலை வேறு விதமாக இருந்தது. அதனை அரசன் அறியாது இல்லை. ஆனால் ஆத்திரம் அவனுடைய அறிவை மறைத்தது. ஈழப்படைகளில் பெரும்பகுதி தமிழகப் போரில் மடிந்து விட்டது. ஏராளமான போர் ஆயுதங்களை சோழர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள்

தற்பொழுது ஈழத்திற்கு சேனாபதிகூட இல்லை. அந்த ஆற்றல்மிக்க பதவிக்கு ஏற்றவர் கிட்டவேயில்லை. போர் ஆயுதங்களுக்கும் பெரும் பஞ்சமாக இருந்தது.

ஆயினும் தமிழகத்தின்மீது உடனே படையெடுக்க வேண்டும் என்பதில் மன்னன் உறுதியாக இருந்தான். அவனுக்கு தக்க அறிவுரை கூறும் உற்ற நண்பர் யாரும் இல்லை. இடித்துரைக்கும் அமைச்சரும் இல்லை. அதற்கான துணிவு யாருக்கும் இல்லை. அவனுடைய அமைச்சர்கள் அனைவரும் அரசன் எது சொன்னாலும் ஆமாம் போடுபவர்களாகவே இருந்தார்கள். அவர்களையும் அரசன் நம்பவில்லை.

போருக்கு உடனே ஆயத்தம் செய்ய வேண்டும். படை பலம் பெருக்க வேண்டும். போர்க் கருவிகளை செய்து குவிக்க வேண்டும். இவைகளே மன்னனுடைய உடனடி திட்டங்களாக இருந்தன. இதற்காக பல இடங்களுக்கு அவனே நேரடியாகச் சென்று படைகளைத் திரட்ட ஏற்பாடுகள் செய்தான் தலைநகரைவிட்டு வெளியூர்களுக்குச் சென்று நாட் கணக்கில் தங்கினான் அங்கு முழுமுயற்சி எடுத்து படைகளைத் திரட்டினான். புதுப்புது இராட்சத மரக்கலங்கள் கட்டப்பட்டன. கொல்லர் பட்டறைகளில் இரவும், பகலுமாக போர்க் கருவிகள் செய்து குவிக்கப்பட்டன. அரசின் வருவாய் முழுவதும் படைபலம் பெருக்கவே பயன்பட்டது.

யாழ்பாணத்திற்கு மேற்கே ஒரு தீவு இருக்கிறது. அதில் ஊரத்துறை* என்னும் நகரம் உள்ளது. ஊர்காவல் துறை என்பதுதான் ஊரத்துறையாக மாறிவிட்டது. அந்நாறில் அது ஈழத்தின் சிறந்த கடற்படை பட்டினமாகும்.

ஈழநாட்டின் சிறப்புமிக்க இரு புண்ணிய ஸ்தலங்களில் மாதோட்டம் ஒன்றாகும். அதில் கோயில் கொண்டுள்ள திருக்கேதீஸ்வரனை சைவ சமய குரவர்கள் பாடியிருக்கிறார்கள்.

மன்னார்குடாவிற்கு அரை காத தொலைவில் உள்ளது வல்லிகாமம்.

புலைச்சேரி** என்ற ஊர் ஈழ நாட்டின் பிரசித்திப் பெற்ற வரலாற்று நூலான மகாவம்சத்தில் இடம் பெற்றுள்ளது.

---

* ஊரத்துறை இந்நாளில் இது கயட்டஸ் என்று வழக்கப்படுகிறது.

புலைச்சேரி - தற்போழுது உள்ள இடம் தெரியவில்லை.

மட்டிவாழ் என்ற நகரம் யாழ்ப்பாணத்திற்கு கிழக்கே அரைக்காத தொலைவில் இருக்கிறது.

அந்நாளில் சீரும் சிறப்பும் பெற்றிருந்த இந்த ஐந்து நகரங்களுக்கு ஈழ வேந்தன் தானே நேரடியாகச் சென்றான். அங்கு பல நாட்கள் தங்கினான். இந்நகரங்களில் இருந்த வாலிபர்கள் அனைவரும் படையில் சேரவேண்டும் என்று அவசர சட்டம் பிறப்பித்தான். இந்த செயல்களால் ஈழப்படையின் எண்ணிக் கையும் வலிவும் மிகக்குறுகிய காலத்திலேயே நான்கு மடங்கு அதிகமாகப் பெருகி விட்டது.

இதனை அறிந்து பராக்கிரமபாகு மனம் பூரித்தான். ஏற்பட்ட இழப்பு ஈடு செய்யப்பட்டது என மனநிறைவு பெற்றான். இனி தமிழகத்தின்மீது மோதலாம் என்ற புத்துணர்வுடன் தலைநகருக்குத் திரும்பினான்.

பராக்கிரமபாகு கப்பகல்லகம் என்ற பெயர் பெற்ற ஈழ அரச மாளிகையில் ஒருநாள் பகலில் வீற்றிருந்தான். அவனுடைய உள்ளம் மகிழ்வால் நிரம்பி இருந்தது.

தமிழகத்தில் ஏற்பட்ட தோல்விகளை மறந்து விட்டான். எதிர்காலத்தைப்பற்றி திட்டமிட்டான். நல்ல நாள் பார்த்து தமிழகத்தின்மீது படை எடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தான். திறமைமிக்க சேனாதிபதிகள் இல்லை என்பது உண்மைதான். ஆனால் அந்த இழப்பை ஈடுகட்ட தானே படைகளுக்குத் தலைமைதாங்கிச் செல்வது என முடிவு செய்து விட்டான்.

படைஎடுக்க ஏற்றநாளை குறித்துக் கொடுக்க அரச சோதிடரை அழைத்து வருமாறு ஏவலாளியைப் பணித்திருந்தான். அவரை எதிர்பார்த்துதான் அப்பொழுது ஆசனத்தில் வீற்றிருந்தான்.

ஒரு பணியாள் மன்னனுடைய எதிரில் வந்தான் தொலைவில் நின்றவாறே வணங்கினான். அரசருடைய குறிப்பறிந்த அவன் தமிழகத்தில் இருந்து யாரோ ஒருவர் அவரைக் காண வந்துள்ளதாகப் புகன்றான். அவனை அழைத்து வருமாறு ஈழவேந்தன் பணித்தான்.

சற்று நேரத்தில் தலைப்பாகை அணிந்த ஒருவன் மிடுக்குடன் அவ்விடத்திற்கு வந்தான். அவன் சிரம் தாழ்த்தி மன்னருக்கு வணக்கம் செலுத்தினான். அவனைக் கண்டவுடன்

மன்னனுடைய முகத்தில் ஒரு இனம் தெரியாத உணர்வு ஏற்பட்டது. அவனையே கூர்ந்து பார்த்தான். அவன்மீது ஏதோ ஒரு விதமான ஐயம் ஏற்பட்டது.

அரசனுடைய மன ஓட்டத்தை வந்தவன் உணர்ந்து கொண்டான். அவன் தன்னுடைய தலைப்பாகையை எடுத்து அதனுள் வைத்திருந்த மீன் இலச்சினையை கையில் எடுத்தான். மன்னன் அருகில் நடந்து சென்று பக்தியோடு அந்த இலச்சினையை அவனுக்குக்காட்டினான். ஈழமன்னனுடைய முகத்தில் ஏற்பட்டிருந்த கடுகடுப்பு இலச்சினையை கண்டதும் குறைந்துவிட்டது.

'யார் நீ? உனக்கு என்ன வேண்டும்? இங்கு வந்த நோக்கம் என்ன? பாண்டி நாட்டில் மிக உயர்ந்த பதவியில் இருப்பவர் பயன்படுத்தும் இலச்சினை உன்னிடம் எப்படி வந்தது?' ஈழவேந்தன் கம்பீரமான குரலில் வினாக்களைத் தொடுத்தான்.

வந்தவன் மறுமொழி கூறினான்.

'ஈழபூபதி, தங்களுடைய பாதகமலங்களில் இந்த ஏழை முதலில் தண்டனிடுகிறேன் அதனை ஏற்று அருள வேண்டுகிறேன். என்னை திருமாறன் என்று அழைப்பார்கள் பாண்டியநாட்டு படை வீரர்களில் அடியேனும் ஒருவன். பாண்டி நாட்டு மன்னர் என்னைத் தங்களிடம் தூது அனுப்பி இருக்கிறார். தங்களுக்கு என்னைப் பற்றி ஐயம் ஏற்படுவது இயல்பு. அதனைப் போக்கவே இந்த இலச்சினையைத் தங்களிடம் காண்பிக்குமாறு பணித்து என்னை இங்கு அனுப்பினார்.'

'நீ குலசேகர பாண்டியனின் தூதுவனா?'

'இல்லை, அரசே! நான் வீரபாண்டிய மன்னரின் தூதுவன்.'

'என்ன, நாடிழந்து ஓடிய வீரபாண்டியனைப் பற்றி குறிப்பிடுகிறாயா? போர்க் களத்திலிருந்து ஓட்டம் பிடித்து. அஞ்சி நடுங்கி, தலைமறைவாக நாடோடிபோல சுற்றிக் கொண்டு இருப்பவனுக்கு உங்களுடைய நாட்டில் மன்னன் என்று பெயரா?'

'இல்லை அரசே! வீரபாண்டியார் வீராதிவீரர். அவர் உயிருக்கு அஞ்சி போர்க் களத்திலிருந்து ஓட்டம் பிடிக்க வில்லை.'

'பின் எதற்காக ஓடினான்?'

'பழிக்குப் பழி வாங்க. அவர் அன்றைக்கு போர் முனையில் இருந்து தப்பிச் செல்லாது இருப்பின் நிச்சயமாக மாண்டு

இருப்பார். சோழன் மனநிறைவோடு தமிழகம் முழுவதையும் ஆண்டிருப்பான். ஆனால் இதனை எங்களுடைய மன்னர் விரும்பவில்லை. எனவேதான் போர் முனையிலிருந்து தப்பினார்.'

'நன்றாகத்தான் பேசுகிறாய்.'

'அரசே தங்களைப் போன்ற பெரியோர்களுடைய ஆசியும், உதவியும் இருப்பின் வீரபாண்டியர் மீண்டும் அரசுக் கட்டிலில் அமர எவ்வளவு நேரமாகும்?'

'அது இருக்கட்டும், வீரபாண்டியன் உன்னை என்னிடம் அனுப்பியதின் நோக்கம்?'

'வீரபாண்டியர் ஒரு முக்கியமான செய்தியைத் தங்களுக்கு எடுத்துரைக்கவே என்னை அனுப்பினார். போரில் தப்பிய வீரபாண்டியர் சும்மா இருக்கவில்லை. நெல்லைப் பகுதியில் தலைமறைவாக இருக்கிறார். தலைமறைவாக இருந்து கொண்டே பலரைச் சந்தித்து தினமும் பேசுகிறார். அல்லும் பகலும் உழைக்கிறார் இப்பொழுது தன்வசம் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு விட்டார்.'

'மகிழ்ச்சி! வீரபாண்டியன் படையைத் திரட்டட்டும். நன்றாகவே பெரும் படையைத் திரட்டட்டும். இச்செய்திக்கும், எனக்கும் என்ன தொடர்பு? இந்த மகத்தான செய்தியைச் சொல்லத்தான் கடல்கடந்து வந்தாயா?' பராக்கிரமபாகு பலமாக சிரித்தான்.

'திருமாறான் தன்னுடைய பேச்சைத் தொடர்ந்தான். 'அரசே எங்களுடைய படைபலத்தை எடுத்துக்கூற நான் வரவில்லை. நான் சொல்ல வந்தது வேறு. அது தங்களுடைய மைத்துனரைப் பற்றிய செய்தி.'

'யாரைக் குறிப்பிடுகிறாய்? அந்த துரோகி சீவல்லபனைப் பற்றிச் சொல்கிறாயா?'

'ஆம், அரசே, சீவல்லபர் சோழநாட்டில் தங்களுக்கு விரோதமாக செயல்பட்டுக் கொண்டு இருந்தார். ஆனால் சோழர்களுக்கு அவர்மீதே ஐயம் ஏற்பட்டு விட்டது.'

'அப்படியா?'

'ஆம், அரசே! சோழர்கள் சீவல்லபரைச் சிறையில் அடைத்து விட்டார்கள்.'

'மெத்த மகிழ்ச்சி. நல்ல செய்தி. இதனை மீண்டும் சொல். கேட்க குளிர்ச்சியாக இருக்கிறது. துரோகிக்கு ஏற்ற வெகுமதி கிடைத்திருக்கிறது. என்னுடைய எதிரியாக இருந்தாலும்கூட சோழனை நான் பாராட்டுகிறேன் துரோகிக்கு தக்க தண்டனைதான் கொடுத்திருக்கிறான்.'

'இதனைவிட மகிழ்ச்சியான செய்தி இன்னும் இருக்கிறது அரசே! சீவல்லபர் சிறை தப்பிவிட்டார்.'

'அப்படியா? இது எனக்கு மகிழ்ச்சியான செய்தி இல்லையே! ஏற்பட்ட மகிழ்ச்சியில் மண்ணைப் போடும் செய்தி' அல்லவா இது!'

'அரசே! உண்மையில் இது மகிழ்ச்சியான செய்திதான். கதை தலைகீழாக மாறிவிட்டது. சீவல்லபர் சோழர்களுக்கு எவ்வளவோ விசுவாசமாக இருந்தார். ஈழநாட்டு அரசியல் இரகசியங்கள் அனைத்தும் அந்த எதிரிகளுக்கு எடுத்து கூறிக் கொண்டு இருந்தார். அதற்கு ஈடாக ஈழத்தின்மீது படையெடுக்க தமக்கு படைகளைக் கொடுத்துதவுமாறு வேண்டினார். ஆனால் சோழர்கள்தான் எப்பொழுதுமே நன்றி கெட்டவர்களாயிற்றே! சீவல்லபருக்கு உதவவில்லை என்பது மட்டுமல்ல, அவரை சிறைக்குள்ளேயே தள்ளிவிட்டார்கள் இதனைக் கண்ட சீவல்லபருடைய ஈழத்து இரத்தம் கொதித்தது. சோழர்களை பழிக்குப்பழி வாங்கியே தீருவேன் என்று சூளுரைத்தார் அவர்களைப் பழி வாங்கவே சிறை தப்பி வெளியே வந்தார்.'

'அப்படியா? நீ கூறுவது உண்மையானால் மெத்த மகிழ்ச்சி அடைய வேண்டியதே.' மன்னர் தூதுவனை ஒரு விதமாகப் பார்த்தார்.

'மாமன்னரே! ஒரு காலத்தில் சோழருக்கு பெரும் துணையாக இருந்தவர் சீவல்லபர். இன்று அவர் சோழர்களுக்கு பெரும் வைரியாகிவிட்டார். தற்பொழுது சோழநாடு மிகவும் பலவீனமாக இருக்கிறது. ஆதிசேடன் இப்பூவுலகை சுமப்பது போல சோழ நாட்டை திருச்சிற்றம்பலம் என்ற முதலமைச்சர் சுமந்துகொண்டு இருந்தார். அவர் தற்பொழுது மண்டையைப் போட்டு விட்டார். அந்த நாட்டின் இன்றைய மன்னன் ஒரு குழந்தை. சேனாபதியும் மற்றொரு பச்சைக் குழந்தை. எனவே இன்றைக்கு ஏற்பட்டுள்ள நல்ல சூழ்நிலையை நழுவவிட்டு விடக் கூடாது. அதனை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இதுதான் எங்களுடைய அரசர் வீரபாண்டியருடைய திட்டம். மேலும் தென்பாண்டி நாட்டிலும் நிலைமை தலைகீழாக திரும்பிவிட்டது. இன்று அங்கு வீரபாண்டியர் கை ஓங்கிவிட்டது. குலசேகரனுக்கு துணையாக இருந்தவர்களில் பெரும்பகுதி வீரபாண்டியருடன் சேர்ந்துவிட்டார்கள். வீரபாண்டியருடைய அணியிலேயே நாள்தோறும் புதுப் புதுப்படைகள் குவிகின்றன.'

'ஆம், திருமாறா! தமிழகத்தின் நிலைமையை நீ நன்கு புரிந்துவைத்திருக்கிறாய். இவைகளைப் பற்றியெல்லாம் நானும் ஓரளவிற்கு ஒற்றர்கள் மூலம் அறிந்து வைத்திருக்கிறேன். உன்னைப்போன்ற புத்திசாலி உண்மையிலேயே வீர பாண்டியருக்கு பெரும்பலம். இத்தகைய தூதுவனைப் பெற்ற வீரபாண்டியன் பாராட்டுக்குரியவனே!' இது ஈழமன்னன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வந்த வார்த்தைகள். திருமாறன் மேலும் தொடர்ந்தான்:

'அரசே தமிழக நிலை அப்படியென்றால் ஈழத்தின் நிலையை எவ்வாறு சொல்லுவது என்று எனக்குப் புரிய வில்லை. போரில் வெற்றியும் தோல்வியும் இயல்பு. ஆனால் தோல்விகண்ட ஈழத்திற்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி மிகவும் வேதனையானது. ஈழ சேனாபதிகள் போரில் கொல்லப்பட்டார்கள். அதனைப் புரிந்துகொள்ள முடியும். ஒரு போரில் இறப்பு என்பது இயல்பே ஆனால் மாண்ட சேனாபதிகளின் சிரங்களை பாண்டி நாட்டு அரண்மனை வாயிலில் வைத்திருக்கிறார்களே, அது வரலாறு காணாத கொடுமையிலும் கொடுமை. இதனை நினைத்து நினைத்து வீரபாண்டியர் வேதனைப்படுகிறார் தமக்கு உதவியதால் தானே ஈழத்திற்கு இந்த அவல நிலை வந்தது என்று கண்ணீர் வடிக்கிறார். ஈழ சேனாபதிகளின் மரணத்திற்காக அவர் வேதனைப்படாத நாளேயில்லை.'

'திருமாறா, இதெல்லாம் பழைய கதைகள். அவற்றை நினைவுபடுத்தி என்னுடைய வேதனையைப் பெருக்காதே. இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும், வீரபாண்டியன் என்னிடம் என்ன எதிர்பார்க்கிறான்? அதனைச் சொல்?'

'அரசே, தாங்கள் உடனே தமிழகத்தின்மீது படையெடுக்க வேண்டும். அதற்கு இத்தருணத்தை விட்டால் வேறு தக்க தருணம் வாய்ப்பது அரிது. தமிழகம் முழுவதையும் தங்களுடையயை காலடிக்குக் கொண்டுவர வேண்டும். பாண்டி நாட்டு அரண்மனையின் வாயிலில் வைக்கப்பட்டுள்ள ஈழ

சேனாபதிகளின் தலைகளை அப்புறப்படுத்த வேண்டும், அதே கழிகளில் சோழ மன்னன் தலையையும், இன்றைய பாண்டி மன்னன் குலசேகர பாண்டியன் தலையையும் மாட்ட வேண்டும்.'

'சபாஷ்! மெத்த மகிழ்ச்சி! திருமாறா! உன்னுடைய சொல்லைக் கேட்க மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய ஆவலும் அதுவே, நான் போட்டுள்ள திட்டமும் அதுவே. என்னுடைய மனதில் உள்ளதை அப்படியே சொல்லிவிட்டாய். அதற்காக திட்டத்தை வீரபாண்டியர் ஏதேனும் கூறினாரா?'

'ஆம் அரசே! அதற்கான திட்டம் வீரபாண்டியரிடம் இருக்கிறது. ஈழர் போரில் உறுதியாக வெற்றி பெற ஏதுவான திட்டம் எங்களுடைய அரசரிடம் இருக்கிறது.'

'என்ன திட்டமோ?'

'அரசே, மன்னிக்க வேண்டும். அந்த திட்டத்தை சொல்லத்தான் வீரபாண்டியர் என்னை அனுப்பினார். ஆனால் தங்களைக் கண்டவுடன் அதனை எடுத்துரைக்கும் துணிவு என்னைவிட்டுப் போய்விட்டது. அதனைச் சொல்லவே அச்சமாக இருக்கிறது?, திருமாறன் தயங்கித் தயங்கி பயந்து கொண்டு பதிலுரைத்தான். மேலும் பேசமுடியாமல் திணறிக் கொண்டு தலை தாழ்ந்து நின்றான்.

மன்னன் தொடர்ந்தான்:

'சொல் திருமாறா, அஞ்சாமல் சொல், உன்னை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. மனதில் உள்ளத்தை மறைக்காமல் சொல்.'

'மாமன்னரே, தங்களுடைய இதயத்தில் இடம் பெற்றது இந்த சிறியவன் செய்த பேறு. ஒரு நாட்டின்மீது படையெடுப்பதாயின் அதற்கு முன்னர் எதிரியின் பலம் எது, பலவீனம் எது எனத் தெளிவாக அறிய வேண்டும். எதிரியினுடைய துணைபலம் என்ன என்பதையும் உணர வேண்டும். அதனையெல்லாம் உணராமல் ஈழம் படை எடுத்தது. அதனால்தான் தோல்வி கண்டது என்பது என்னுடைய கருத்தல்ல, இது எங்கள் அரசர் வீரபாண்டியர் கருத்து. இம்முறை அந்த நிலை மீண்டும் நேரக் கூடாது என அவர் விரும்புகிறார்.'

'திருமாறா! அது உன்னுடைய கருத்தோ, உன்னுடைய மன்னருடைய கருத்தோ அதனைப் பற்றி எனக்கு கவலையில்லை. நீ சொல்வதெல்லாம் சரியானதே. உண்மையில் நீ சிறந்த

புத்திசாலி. நீ ஒரு அரசுக்கே அமைச்சனாக இருக்க வேண்டியவன். உங்களுடைய திட்டம் என்ன? நான் என்ன செய்ய வேண்டும்? சொல். தயங்காமல் சொல்,

'அரசே. சொன்னால் கோபிக்க மாட்டீர்களே?'

'நிச்சயமாக கோபிக்க மாட்டேன். என்னை நீ நம்பலாம். உன்னை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது என்பதை முன்பே சொல்லி இருக்கிறேன். தைரியமாகச் சொல்!'

'அரசே, அது நான் செய்த பேறு. எனக்கு தெரிந்ததைச் சொல்லுகிறேன். அதனை ஏற்பதும், ஏற்காததும் தங்களுடைய விருப்பம்.'

'ஆகட்டும், சொல்.'

சோழர்களுடைய இன்றைய நிலைமை முழுவதும் நன்கு அறிந்து வைத்திருக்கும் ஒரே ஒருவர் சீவல்லபர்தான். தாங்கள் அவரை அணுகி தங்களின்பால் இழுக்க வேண்டும். அவர் தலைமையில் படைகளை அனுப்பினால் வெற்றி முக்காலும் உறுதி. அதற்கு நாங்கள் உத்திரவாதம் அளிக்கிறோம். தாங்கள் அருள்கூர்ந்து சீவல்லபரைச் சரிக்கட்ட வேண்டும். அவர் தலைமையில் தமிழகத்திற்கு படைகளை அனுப்ப வேண்டும். அதனால் பயன் உண்டு அரசே!'

'திருமாறா, என்ன சொல்லுகிறாய்? உனக்கு திடீரென சித்தம் கலங்கி விட்டதா? எதிரியின் வசம் என்னுடைய படைகளை ஒப்படைக்கும்படிக் கூறுகிறாயா? முட்டாள்தனமான தற்கொலை கருத்து இது. என்னுடைய வாக்குறுதியை முதலிலேயே பெற்றாய். எனவே நீ பிழைத்தாய், மன்னன் சீறினான். அவனுடைய வதனம் அனல் பிழம்பென சிவந்தது.

'அதனால்தான் என்னுடைய கருத்தைச் சொல்ல அஞ்சினேன். இனி சொல்ல மாட்டேன். ஆனால் மன்னர் என்னுடைய கருத்து முழுவதையும் கேட்டு முடிவுக்கு வந்திருந்தால் என்னையும் மதித்தாரே என மகிழ்ந்திருப்பேன்.' அஞ்சி நடுங்கிக் கொண்டே திருமாறன் பேசினான்.

'ஆகட்டும் அஞ்சாமல் சொல்.'

'அரசே, சீவல்லபன் தங்களுடைய பெரும் எதிரி. அவர் எதிரியோடு சேர்ந்து கொண்டு தங்களைக் காட்டிக் கொடுத்தவர்.

இதனை எல்லாம் வீரபாண்டியர் அறிவார். அடியேனும் அறியாது இல்லை. ஆனால் அரசியலில் நிரந்தரமான நண்பனும் இல்லை, நிரந்தரமான பகைவனும் இல்லை என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். மன்னரை அடிஃயேன் பணிவோடு ஒன்று கேட்கலாமா?'

'கேள்'

'சீவல்லபர் சோழர்களுக்கு உற்ற நண்பனாகத்தானே இருந்தார். அப்படியாயின் அவரை சோழர்கள் சிறையில் தள்ளக் காரணம்?'

'ஆம். என்ன காரணம்?'

'காரணம் என்னவாகவாவது இருக்கட்டும், அரசே! இச்செயலிலிருந்து சீவல்லபருக்கு சோழர்கள் வேண்டாதவர் களாகி விட்டார்கள் என்பது தெளிவாகிறது அல்லவா?'

'ஆம்.'

'எதிரியினுடைய எதிரி நம்முடைய நண்பன் என்று எங்களுடைய தமிழில் ஒரு பழமொழி உண்டு.'

'இருக்கட்டும். அடுத்துச் சொல்.'

'சோழர்களுடைய எதிரியான சீவல்லபனை இன்று தாங்கள் ஈழத்தின் நண்பனாக்கிக் கொண்டால் பல நன்மைகள் ஏற்படும். முதலாவதாக சீவல்லபன் வீராதி வீரன். அவருக்கு நிகரான வீராதி வீரன். இன்று தமிழ் மண்ணில் யாருமே இல்லை. எத்தகைய வீராதி வீரனையும் ஒரே நொடியில் வீழ்த்தும் ஆற்றல் மிக்கவர் அவர் என எங்கள் வீரபாண்டிய மன்னர் அடிக்கடி சொல்லுவார். அடுத்ததாக சீவல்லபருக்கு நம்முடைய எதிரிகளான சோழர்களுடைய பலவீனங்கள் நன்கு தெரியும். போருக்கு முன்னர் தெரிய வேண்டியவை அவை. இதனை நான் தங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய தேவையில்லை; எனவே அவரைத் தாங்கள் உடன் சேர்த்துக்கொள்வது இருவகையில் ஆதாயம் என்பது அடியேன் கருத்து.'

'திருமாறா, நீ சொல்லுவது சிந்திக்க வேண்டியதாகத்தான் தென்படுகிறது; உணருகிறேன். ஆனால் சீவல்லபன் நம்மிடம் வரவேண்டுமே! அவனிடம் சென்று என்னை கெஞ்சச் சொல்லுகிறாயா?'

'பிரபு, தங்களுடைய நிலைமை எனக்குப் புரிகிறது. சீவல்லபரிடம் தங்களைப் பணியுமாறு ஒருக்காலும் சொல்ல மாட்டேன். இந்த இலங்கை மண் முழுவதையும் காலடிக்குள் கொண்டுவந்து ஆளும் தாங்கள் எங்கே, ஒன்றுமேயில்லாது ஏன் தங்களுடைய பரந்த இதயத்தில் பெற்றிருந்த இடத்தையும் இழந்துவிட்டு அயல் நாட்டு மண்ணில் நாடோடியாகச் சுற்றும் சீவல்லபர் எங்கே?'

'திருமாறா, என்னை நீ நன்கு புரிந்து கொண்டிருக்கிறாய். என் சிந்தனையையும் தூண்டி விட்டிருக்கிறாய். உன்னுடைய சொல்லில் ஆழ்ந்த பொருள் இருக்கிறது. ஏற்கனவே என்னைப் பகைத்துக்கொண்டு தமிழகத்திற்கு ஓடியவன் சீவல்லபன். இனி நான் சொல்லுவதையா அவன் கேட்கப் போகிறான்? அப்படித்தான் அவனைச் சேர்த்துக் கொள்வதாகவே வைத்துக்கொள்வோம். அதன் பின்னர் என்ன திட்டம்?'

'அதனையும் எங்கள் மன்னர் கூறி அனுப்பியுள்ளார் அரசே! நிலைமையை நன்கு உணர்ந்தே நான் பேசுகிறேன். சீவல்லபன் சோழரைப் பழிவாங்க துடிக்கிறார். உண்மையைச் சொல்லப் போனால் அவர் சோழரை எதிர்க்க எங்களுடைய மன்னர் வீரபாண்டியருடைய உதவியை நாடி வந்தார்.'

'அப்படியா?'

'ஆம், சீவல்லபர் எங்கள் அரசரிடம் வந்தார். எங்களுடைய அரசர் அவரை நன்கு பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறார். ஆனால் என்றுமே தங்களிடம் நன்றிக்கடன் பட்டுள்ள வீரபாண்டியர் தங்களுடைய கருத்துக்கு மாறாக எதுவும் செய்யமாட்டார். எனவே வீரபாண்டியர் சீவல்லபரிடம் என்ன கூறினார் சொல்லவா?'

'சொல், விரைவில் சொல்.'

'முதலில் தங்களிடம் சென்று செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்குமாறு எங்களுடைய அரசர் ஆலோசனை கூறினார். தங்களுடைய மன்னிப்பைப் பெற்ற பின்னர் தங்களுடைய அறிவுரைப்படி நடந்து கொள்ளுமாறு புத்தி புகன்றார்.'

'மெத்த மகிழ்ச்சி; வீரபாண்டியர் அப்படிக் கூறினாரா?' வீரபாண்டியனைப் பற்றிக் குறிப்பிடும்போது ஈழ வேந்தனுடைய சொற்களில் ஒரு மரியாதை தென்பட்டதை திருமாறன் கவனிக்கத் தவறவில்லை.

'ஆம், சீவல்லபரும் உலகை நன்கு உணர்ந்தவர். கசப்பான அனுபவம் கண்டவர். நல்லது எது, தீயது எது என்பதை அனுபவத்தால் அறிந்தவர். எனவே எங்களுடைய மன்னரின் கருத்தை ஒப்புக்கொண்டார். ஆனால் அவர் தங்களிடம் வர அஞ்சுகிறார். எனவே அவரை மன்னித்தாகக் கூறி பகைமையைப் பாராட்டாது ஒரு தூதுவனை அவரிடம் அனுப்ப வேண்டுகிறேன். அப்பொழுது எல்லாம் நல்லதாக முடியும். தங்களுடன் நேருக்கு நேர் நின்று பேசும் தகுதி எனக்கு இல்லை. தங்களை சந்தித்து பேசும் வாய்ப்பு கிடைத்ததே நான் செய்த பாக்கியம். எனவே இந்த சிறியவன் தங்களுக்கு ஏதோ அறிவுரை கூறுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இது வெறும் ஆலோசனைதான். இதனை ஏற்பதும் தள்ளுவதும் தங்களுடைய விருப்பம். ஆனால் இதுதான் எங்கள் மன்னனுடைய கருத்து.'

'திருமாறா, உன்னுடைய பேச்சு என்னுடைய சிந்தனையைத் தூண்டுவதாக முன்பே கூறியிருக்கிறேன். உன் விருப்பப்படியே சீவல்லபன் என்னுடன் சேருவதாகவே வைத்துக்கொள். அடுத்து என்ன செய்யவேண்டும் என்கிறாய்?'

'எங்களுடைய ஆசை இது. ஈழப்படைகள் சீவல்லபனுடைய தலைமையில் தமிழகத்தை மோத அனுப்பப்பட வேண்டும். ஈழப்படைகள் தென்பாண்டி நாட்டில் அடி எடுத்து வைத்தவுடன் அத்துடன் வீரபாண்டியர் தலைமையில் உள்ள படைகளும் ஒன்று சேர்ந்துவிடும். இரண்டு அணிகளும் ஏககாலத்தில் சென்று மதுரையைத் தாக்கும். வெகு எளிதில் அந்நகரை வீழ்த்தி விடலாம். பின்னர் அங்கிருக்கும் படைகளையும் உடன் சேர்த்துக் கொண்டு நம்முடைய படைகள் சோழநாட்டை நோக்கிப் புறப்படும். பலவீனப்பட்டு, இரு பிள்ளைகளின் பொறுப்பிலுள்ள அந்நாடு வெகு எளிதில் நம்முடைய வசமாகிவிடும். இதனைச் சொல்லவே எங்களுடைய அரசர் என்னைத் தூது அனுப்பினார். அதனைப் பற்றி முடிவு செய்ய வேண்டியது தங்கள் பொறுப்பு. என்னுடைய கடமை முடிந்து விட்டது. இந்த சிறியவனுடைய கருத்துக்கு செவிமடித்தற்காக என்னுடைய நன்றி. எனக்கு விடையருளுமாறு வேண்டுகிறேன்.' திருமாறன் மன்னரைப் பணிவோடு வணங்கி நின்றான்.

மன்னர் மேலும் தொடர்ந்து பேசினார்:

'திருமாறா, நில்! போகாதே. வீரபாண்டியர் என்னை அனுப்பியதில் பொருள் இருக்கிறது. உன்னுடைய கருத்தைப் பற்றி

நான் சிந்திக்கிறேன். என்ன இருந்தாலும் சீவல்லபன் ஒரு நன்றி கெட்ட நாய். அவனை நினைத்தால் எனக்கு பற்றி எரிகிறது. அரசு வேண்டுமென்பதற்காக என்னைப் பகைத்துக் கொண்டான். அதனை நான் புரிந்துக் கொள்ள முடியும். அவன் என்னிடம் மன்றாடியிருக்கலாம். ஏன், போர்கூட புரிந்திருக்கலாம். ஆனால் அவன் இரண்டும் செய்யவில்லை. எதிரியினுடைய காலில் போய் விழுந்தான். முன்பொரு காலத்தில் இதே ஈழமண்ணில் பிறந்து இந்த மண்ணிற்கு களங்கம் தேடித்தந்த வீடணனைப் போல! வீடணன் அயோத்தி இராமனிடம் இவனைப் போலத்தான் சரணடைந்தான். சகோதரனைக் காட்டிக் கொடுத்தான். சகோதரனுடைய புதல்வன் மேகநாதன் மரிக்கக் காரணமானான். அவனால் இலங்கை அரசே அழிந்தது. சீவல்லபன் அதே செயல்தான் புரிந்தான். ஆனால் இன்று எதிரியால் ஏமாற்றப்பட்டு விட்டான். மீண்டும் என்னிடம் வந்து அடைக்கலம் கேட்கிறான். அவனை ஏற்கலாமா, வேண்டாமா என்று நான் சிந்தித்துத்தான் முடிவு செய்ய வேண்டும். ஒருக்கால் அவன் வந்து என்னுடைய பாதத்தில் விழுந்தால்கூட ஏற்கலாம். ஆனால் அவனை ஒரு பொருட்டாக மதித்து தூது அனுப்ப வேண்டுமென்பதை என்னுடைய மனம் ஏற்கவில்லை. ஆயினும் உன்னுடைய கருத்தை நான் தள்ளிவிடவில்லை. மீண்டும் யோசிக்கிறேன். நாளை காலையில் என்னுடைய இறுதியான முடிவைச் சொல்லுகிறேன். உங்களுடைய நல்லெண்ணத்தை நான் உணருகிறேன். இதனைச் சொன்ன உன்னைப் பாராட்டுகிறேன். உன்னை தூது அனுப்பிய வீரபாண்டியனை பாராட்டுகிறேன். உன்னுடைய உண்மையான உள்ளமும், அறிவும் ஆற்றலும் என்னை மிகவும் கவர்ந்து விட்டன. என்னுடைய விருந்தாளியாக நீ இங்கேயே தங்கலாம்.'

மன்னன் இரு கரங்களையும் சேர்த்து தட்டினான். ஒரு காவலாளி ஓடி வந்தான். திருமாறனை அழைத்துச் சென்று விருந்தினர் விடுதியில் தங்க ஏற்பாடு செய்யுமாறு ஆணை யிட்டான்.

காவலன் பின் தொடர, திருமாறன் மன்னரை வணங்கி விட்டு வெளியேறினான். திருமாறன் மறையும்வரை மன்னன் அவனையே பார்த்துக்கொண்டு நின்றான்.

2

நாரணன் விளையாட்டு

அன்றொருநாள் திருவாரூர் தெருவிலே நம்பியாரூரர் நடந்து கொண்டு இருந்தார். 'எந்தை இருப்பதும் ஆரூர்! அவர் எம்மையும் ஆள்வாரோ? கேளீர்!' என திருப்பதிகம் பாடிக் கொண்டே அப்பெரியார் தெருக்களில் நடை போட்டார்.

அதே போல இன்றும் நகரேசு காஞ்சியின் சன்னதித் தெருவிலே ஒரு இளம் துறவி நடந்து கொண்டு இருந்தார்.

அத்துறவி இளம் வயதினர். அவர் முற்றும் துறந்து ஞானியைப் போல விளங்கினார். அவர் உண்மை அன்பினர், திருத்தொண்டு செய்யும் திருக்கையினர், திருவெண்ணீறு விளங்கும் மெய்யினர் வெள்ளை உள்ளத்தினர் இன்ப துன்பங்களை சமமாகக் கருதுபவர். அவர் அணியும் ஆரம் உருத்திராட்சமே. உடுத்தும் உடை கந்தையே. செய்யும் தொழில் சிவனடியாரைப் பற்றிப் பாடுவதே.

சன்னதித் தெருவில் மேன்மேலும் நடந்து கொண்டிருந்த அப்பெரியாருடைய நினைவிலே காஞ்சியின் பண்டைய பெருமைகள் ஒவ்வொன்றாகத் தோன்றின. அவைகளை யெல்லாம் நினைத்து மனம் மகிழ்ந்தார். உலக இலக்கியங்கள் அம் மாநகரைப் பற்றிக் கூறிய கருத்துக்களெல்லாம் வரிசையாக அவர் நினைவில் அலைஅலையாக வந்து மோதின.

புஷ்பேசு ஜாதி, புருசேஷு விஷ்ணு
நாரீஷு ரம்பா, நகரேஷு காஞ்சி

'புஷ்பங்களில் அழகுமிக்கது பாரிஜாதம். புருஷர்களில் அழகுமிக்கவர் மகாவிஷ்ணு, பெண்களில் அழகுமிக்கவள் இரம்பை, நகரங்களில் அழகுமிக்கது காஞ்சி!' இவ்வாறு வடமொழிப் புலவர் ஒருவரால் இமயத்தின் உச்சியில் தூக்கி வைத்து ஏற்றிப் போற்றப் பட்டது காஞ்சி மாநகரம்!

கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் புத்தபிரான் காஞ்சிக்கு வந்து சமய நெறிகளைப் போதித்தார். இந்த வரலாற்று உண்மையை இந்தியாவிற்கு மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் தமிழகத்திற்கு வந்த சீன யாத்திரிகர் யுவான்சங் எழுதி வைத்திருக்கிறார்!

அசோக சக்ரவர்த்தி காஞ்சி மாநகரில் பல ஸ்தூபிகளை நாட்டினார்!

மணிமேகலை காஞ்சிக்கு வந்து தங்கி இருக்கிறாள். அங்கு புத்த பீடிகையை அமைத்தாள். மணிமேகலா தெய்வத்தை வழிபட கோட்டங்கள் பல அமைத்தாள்!

கடம்ப அரசர் மரபைத் தோற்றுவித்த மயூரசிம்மன் காஞ்சிக்கு வந்து கடிகாவில் வடமொழி கற்றான்!

மகேந்திரவர்மன், அவருடைய அரும்புதல்வன் நரசிம்மவர்மன் முதலிய நானிலம் போற்றும் பல்லவ சக்ரவர்த்திகள் காஞ்சி மாநகரில் வீற்றிருந்தே நீதி பரிபாலனம் செய்தார்கள்!

'கல்வியில் கரையிலாத காஞ்சி மாநகர்' என்று அப்பர் சுவாமிகளால் பாடப்பட்ட நகரம் இது!

'பூம்பொழில் சூழ் நகர்' 'கல்லுயர்ந்த நெடுமதில் சூழ் கச்சி' என்றெல்லாம் பக்தர்கள் இந்நகரைப் பற்றி பாடியிருக்கிறார்கள்! 'விண்ணுரவோங்கிய பல்ப்படை புரிசை' என மதுவிக் காஞ்சி நூல் காஞ்சியின் பெரும் மதிப்பினைப்பற்றி பாடுகிறது.

'வடக்கே ஒரு காசி, தெற்கே ஒரு காஞ்சி!' என்பார்கள்!

உலகை ஈன்ற கன்னிகையான உமையவள் முப்பத்திரண்டு அறங்களையும் உலகிற்கு உணர்த்தியதையும், எம்பிரானாரைக் கம்மையாற்றில் வழிபட்டதும் காஞ்சி மாநகரில்தான் என்று புராணங்கள் போற்றும் புண்ணிய ஸ்தலம் காஞ்சி மாநகரம்!*

காஞ்சி மாநகரில் இத்தகைய சிறப்புகளை நினைத்த வண்ணம் அத்தூயவர் மேலும் நடந்து கொண்டே இருந்தார். உள்ளத்தில் பெருமையும், மகிழ்வும் பொங்க தலை நிமிர்ந்து நடந்தார்.

கொஞ்ச காலமாகவே சோழநாட்டில் இருள் கப்பிக் கொண்டு இருந்தது. எங்கும் சோகத்தின் நிழலே தோற்றமளித்தது. ஒவ்வொருவருடைய மனதிலும் ஒவ்வொரு கவலை. இருளடைந்த உள்ளத்தினராய் இருந்தனர்.

---

* பிற்காலத்தில் நகரமைப்புத் திட்ட உலகப்புகழ் வல்லுனரான கெட்டிஸ்துரை எழுதுகிறார்: 'காஞ்சி நகரமைப்புக்கு இணையாக இந்தியாவில், ஏன் உலகத்திலேயே எங்குமே இல்லை.

வெள்ளை உள்ளத்துடன் என்றுமே கலகலப்பாக இருக்கும் அரச கவிஞர் ஆனந்த வரத கூத்தருக்கு அந்நிலை வேதனை அளித்தது. பழையாறையில் இருக்கவே அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே அந்த கவிஞர் பெருமான் பழையாறையை விட்டு தீர்த்த யாத்திரைக்கு புறப்பட்டார். பற்பல புண்ணியம்பதிகளைத் தரிசித்தார். அத்தலங்களைக் கண்டு பரவசப்பட்டு பாடினார். தீர்த்த யாத்திரைக்குச் சென்ற வழியில்தான் காஞ்சி மாநகரத்திற்கு வந்தார்.

புலவர் காஞ்சி மாநகரில் அடியெடுத்து வைத்த உடனேயே நேராக ஏகாம்பரநாதன் திருக்கோயிலுக்குச் சென்றார். கற்றைச் சடைமதி வைத்த துறவியாம் ஏகாம்பரனைக் கண்டு வணங்கினார். திருக்காம கோட்டத்தைத் தொழுதார். அன்னையாம் காமாட்சி தேவியின் சன்னதிக்குச் சென்றார். ஆதிபராசக்தியின் எதிரில் அடிபணிந்து வணங்கினார். அவளுடைய புகழைப் பாடினார். சிவகாஞ்சிக்கு சென்று இறைவனை துதித்த அவர் புத்த காஞ்சி, ஜைன காஞ்சி, கோட்டங்களுக்குச் சென்று இறைவனை வணங்கத் தவறவில்லை.

பின்னர் கால்நடையாகவே விஷ்ணு காஞ்சிக்குச் சென்றார்.

மாலை நேரம். மனதிற்கினியான் நாமங்களை மனதால் ஓதியவாறு விஷ்ணு காஞ்சி சன்னதி தெருவில் நடந்தார். அப்பொழுதுதான் அம்மாநகரின் பண்டையப் பெருமைகளை நினைத்தவாறு தலை நிமிர்ந்து நடந்து கொண்டிருந்தார்.

அச்சமயம் எதிர்பாராத செயல் ஒன்று நடந்து விட்டது. அவருடைய நெற்றியின் மீது ஒரு சிறு கல் வந்து தாக்கியது. கல் சிறியதாயினும் வேகமாக தாக்கியதால் கூத்தனாருக்கு நல்ல அடிபட்டுவிட்டது. 'சிவசிவ' என்று கூறியபடியே அடிபட்ட இடத்தை அழுத்திப் பிடித்து கொண்டார். வலி பொறுக்க இயலாது அங்கேயே அமர்ந்தார். காயத்திலிருந்து இரத்தம் கொட்டியது.

அண்மையில் சற்று தள்ளி நின்றிருந்த ஒரு சிறுவன் அதனைப் பார்த்துவிட்டான். மனம் துடித்து கூத்தனாரிடம் ஓடி வந்தான். அடிபட்ட இடத்திலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து கொட்டுவதைப் பார்த்தான். நெற்றியிலிருந்து கொட்டிய இரத்தம் முகத்தில் வழிந்து ஓடியது. சிறுவன் தன்னுடைய வலது கரத்தால் கூத்தனாருடைய காயத்தை அழுத்திப் பிடித்தான். இரத்தம் நிற்கவில்லை. தான் அணிந்திருந்த சட்டையைக் கிழித்தான். காயத்தின்மீது துணியை வைத்து அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

பின்னர் அதே துணியால் தலையைச் சுற்றிக் கட்டி, காயத்திற்கு கட்டுப் போட்டான். கூத்தனாரை மெதுவாக தாங்கி

பிடித்துக்கொண்டு நிற்க வைத்தான். அவருடைய வலது கரத்தைப் பிடித்தவாறு அழைத்துச் சென்றான். அண்மையில் இரு வீடுகளுக்கு அப்பால் இருந்த தன்னுடைய இல்லத்திற்கு அழைத்துக் கொண்டு நடந்தான்.

வீட்டின் முற்றத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சலின் மீது ஒரு வைணவப் பெரியார் அமர்ந்திருந்தார் அவர் நாரணன்மீது ஒரு பாடலை முனகியவண்ணம் தெருவைப் பார்த்து அமர்ந்திருந்தார். அப்பொழுது தெருவிலிருந்து ஒரு பெரியவரும், பிள்ளையும் தம்முடைய இல்லத்தை நோக்கி வருவதைப் பார்த்தார். அங்கு வந்து கொண்டிருந்த பெரியவரின் தலையில் தென்பட்ட துணிக்கட்டையும் முகத்தையும், ஆடையையும் நனைத்திருந்த இரத்ததையும் பார்த்தார். பதை பதைத்துவிட்டார் கூத்தனாரைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டார். மெதுவாக தம்முடைய இல்லத்தின் முற்றத்திற்கு அழைத்து வந்தார். ஊஞ்சலின் மீது அவரைப் படுக்க வைத்தார்.

வைணவப் பெரியார் கூத்தனாரை அழைத்து வந்த சிறுவனுடைய முகத்தை உற்று நோக்கினார். அவருடைய முகத்திலே ஏக்கம் நிறைந்த வினா எழுந்தது. அதனைப் புரிந்து கொண்ட சிறுவன் கூறினான்:

'அப்பா, பாவம் இந்த பெரியவர் யாரோ தெரியவில்லை! இவரை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை. தெருவோடு போய்க் கொண்டு இருந்தார். நெற்றியில் நீறு பூசியிருந்தார். அதனைக் கண்ட நம்முடைய தெருப்பிள்ளைகள் இவரை ஏளனம் செய்தார்கள். அவர்களைத் திரும்பிப் பார்த்தார். அப்பொழுது ஒரு பையன் வெண்ணீறு அணிந்திருந்த இவருடைய நெற்றியை நோக்கி ஒரு கல்லை வீசினான். அது இவருடைய நெற்றியைத் தாக்கிவிட்டது. நல்ல அடி அப்பா! காயத்தில் இரத்தம் கொட்டுகிறது. தெருவெல்லாம் இரத்தம். இன்னும் அது நிற்கவில்லை.'

'இராமா, இராமா!' என்று வைணவர் துடிதுடித்தார் ஊஞ்சலில் படுத்திருந்த கூத்தனாரைப் பார்த்து வேதனையோடு கூறினார்:

'ஐயா, தங்களைப் பார்த்தால் என்னைவிட இளம் வயதினராகத் தென்படுகிறீர்கள். ஆயினும் நான் தங்களின் தாள் பணிந்து மன்னிப்பு வேண்டுகிறேன். இங்குள்ள அறியாத சிறுவர்கள் செய்த தவறுக்காக எங்களை மன்னித்து அருள

வேண்டுகிறேன். அப்பாவி மக்கள்! அரியும், சிவனும் ஒன்றே என்பதை அறியாத பாமரர்கள் இவர்கள். இது சிறுவர்களுடைய தவறு அல்ல. பெரியவர்கள் அவர்களை அப்படி வளர்த்து விட்டார்கள். எங்களை மன்னியுங்கள் ஐயா!"

நா தழுதழுக்கப் பேசிய வைணவப் பெரியார் கூத்தனாரின் கரத்தைப் பற்றிக்கொண்டு கெஞ்சினார். அவருடைய கண்ணில் இருந்து கொட்டிய கண்ணீர் கூத்தனாரின் கரத்தை நனைத்தது. அவரால் பேசவும் இயலவில்லை. வைணவப் பெரியாரையே உற்றுப் பார்த்தார்.

'அரியும் சிவனும் வேறாகத்தான் இருக்கட்டுமே அப்பா, அதற்காக இந்தப் பெரிய அரிபக்தர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு தெருவோடு சென்று கொண்டிருந்த சிவபக்தரைத் தாக்கலாமா? நல்லவேளை இப்பொழுது தம்பி இங்கு இல்லாமல் போய்விட்டான். அதனால் கல்லை எறிந்த பையன் பிழைத்தான்!' வீராவேசத்துடன் கூறினான் கூத்தனாரை அழைத்துக் கொண்டு வந்த சிறுவன்.

இருவர்களுடைய சொற்களையும் கேட்ட கூத்தனார் மெதுவாகப் பேசினார்:

'ஐயா, தங்களைப் பார்த்தால் மெத்தவும் கற்ற பெரியவராகத் தென்படுகிறீர்கள். தங்களுடைய புதல்வனோ இந்த இளம் வயதிலேயே ஒரு ஞானியைப் போலப் பேசுகிறான். அடிபட்ட இந்த காயத்தை விடுங்கள். இது அற்பமானது. ஓரிரு நாட்களில் ஆறிவிடும். சொல்லப் போனால் இந்த காயம் எனக்கு ஏற்பட்டதற்கு மகிழ்ச்சியே அடைகிறேன். பிள்ளைகளுக்கு இது ஒரு விளையாட்டு, எனக்கு இந்த காயத்தை ஏற்படுத்திய சிறுவனைப் பாராட்டுகிறேன்.'

'ஐயா, தங்களுடைய வார்த்தை எனக்கு புதுமையாக இருக்கிறது. அடி கொடுத்தவனுக்குப் பாராட்டா? புரியவில்லையே!'

'ஆம். அடித்தவனைப் பாராட்டுகிறேன். அவன் இச்செயலைச் செய்யாது இருப்பின் பெரியவரான தங்களுடைய தரிசனத்தை நான் கண்டிருக்க முடியுமா? இத்தகைய சிறந்த குணவானான தங்களுடைய புதல்வனுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டிருக்குமா?'

'பெரியீர், எங்களை அதிகம் புகழ்கிறீர்கள். அது தங்களுடைய மேலான பண்பைக் காட்டுகிறது. தங்களுடைய புகழ்ச்சிக்கு நாங்கள் அருகதை உள்ளவர்கள் அல்ல ஐயனே.'

'அது இருக்கட்டும் ஐயா, தாங்கள் யார் என அடியேன் அறியலாமா? இத்தகைய நல்ல உள்ளம் கொண்டவரைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் மேலிட்டது. எனவே இந்த வினாவைத் தொடுத்து விட்டேன். தவறாக எண்ணமாட்டீர்களே? தாங்கள் விரும்பாவிடின் என்னுடைய வினாவிற்கு மறுமொழி அளிக்கத் தேவையில்லை.' வினயத்துடன் கேட்டார் கூத்தனார்.

'ஐயா, இதில் என்ன தவறு இருக்கிறது? நாம் பழகியது சில நொடிகளாயினும் தங்களோடு நீண்டகாலம் தொடர்பு கொண்ட உணர்வு என் உள்ளத்தில் எழுகிறது. எனவே அறிமுகம் செய்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் அடியேனை நாதமுனிபட்டர் என்று அழைப்பார்கள் கலியுகவரதனாம் எம்பெருமானான உலகளந்த நாயகன் வரதராசப் பெருமானை நாள்தோறும் பூசித்துக் கொண்டு உயிர்வாழும் ஏழைப் பிராமணன் நான். இவன்....' பேச்சை இழுத்தார் நாதமுனிபட்டர். அவனைப் பற்றி யாருக்கும் எதுவும் சொல்லக் கூடாது என்பது அவருக்கு இடப்பட்டிருந்த கட்டளை. அவனை அறிமுகப்படுத்த வேண்டும். உண்மையைச் சொல்ல இயலாது. பொய் சொல்ல அவர் நா ஏழவில்லை. எனவே பேச்சை இழுத்தார்.

'தெரிகிறது! இவன் தங்களுடைய அருமைப் புதல்வன் என்று தெரிந்து கொண்டேன்.' கூத்தனாரே இவ்வாறு கூறி முடித்துவிட்டார். இதனால் நாத முனிபட்டர் பொய் சொல்ல வேண்டிய வாய்ப்பு இல்லாது போய்விட்டது. அது அவருடைய மனதில் இருந்த சுமையைக் குறைத்தது. பெருமூச்சு விட்டார்.

'தங்களுடைய இளைய புதல்வன்?' அடுத்த வினாவைத் தொடுத்தார் கூத்தர்.

'இளைய புதல்வனா? அவனைப் பற்றி தங்களுக்கு எப்படித் தெரியும் ஐயா?' வியப்போடு கேட்டார் நாதமுனி பட்டார்.

'அவனை எனக்குத் தெரியாது. நான் பார்த்ததுகூட இல்லை. உங்களுடைய மூத்த புதல்வன் முன்பு இங்கு சொல்லவில்லையா, அதிலிருந்து ஊகித்துக் கொண்டேன்.'

'என்ன கூறினான்?'

'நல்லவேளையாக தம்பி இங்கு இல்லாமல் போய் விட்டான் என்று அவன் சொல்லவில்லையா? அந்த சொல்லைக் கொண்டு தங்களுக்கு மற்றொரு இளைய புதல்வன் இருப்பதாக அறிந்துக் கொண்டேன். அதனால் அவனைப் பற்றி விசாரித்தேன். அவன் பெரிய சூரனாக இருப்பான் போலத் தெரிகிறது.' சிரித்துப் பேசியபடியே எழுந்து ஊஞ்சலின்மீது அமர்ந்தார் கூத்தர்.

'ஆம் ஐயா, இருவரும் இரண்டு விதம். பெரியவனான இவனுக்கு என்றுமே இறைவழிபாட்டில்தான் நாட்டம். அடக்கமானவன். அன்பு உள்ளத்தினன். ஆனால் இவனுக்கு இளையவனோ நேர்மாறானவன். முரடன், சண்டை என்றால் விடமாட்டான். ஆனால், சிறிது நேரத்திற்கு முன்னர் ஒரு பாவமும் அறியாத தங்களைத் தாக்கினார்களே, அந்த பிள்ளைகளைப் போல ஊர் சண்டைக்குப் போகமாட்டான். நியாயம் இருந்தால்தான் தலையிடுவான். நியாயத்தை நிலைநாட்ட யாரையும் எதிர்க்கத் தயங்க மாட்டான். அநீதி என்று தென்பட்டால் அதனை எதிர்க்கத் துடித்து எழுவான்.'

'மெத்த மகிழ்ச்சி. இந்தக் காலத்தில் அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சமாளிப்பது கடினம். இரண்டுவிதமான உத்தம புத்திரர்களைப் பெற்றெடுத்த தாங்கள் பாக்கியசாலி!'

'ஐயா மன்னிக்க வேண்டும். பிள்ளைகளைப் பற்றி அதிகம் புகழ்ந்து பேசி விட்டேன். காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு என்பார்கள். பிள்ளைகளைப்பற்றி பேசியதின் விளைவாகப் பெரியவரான தங்களுடைய திருநாமத்தைக் கேட்கும் பண்பைக்கூட மறந்துவிட்டேன்.'

'ஐயா, என்னை ஆனந்தவரதக் கூத்தன் என்று அழைப்பார்கள், நான் வசிப்பது பழையாறை.'

'என்ன சொன்னீர்கள்! கவிச்சக்ரவர்த்தி ஓட்டக்கூத்தப் பெருமானின் பேரப்பிள்ளை ஆனந்த வரதக் கூத்தரா தாங்கள்?'

'ஆம், ஐயா.'

இந்த மறுமொழியை பட்டர் எதிர்பார்க்கவில்லை. ஆனந்தம் மேலிட்டு ஆனந்த வரதக் கூத்தரை அப்படியே தழுவிக் கொண்டார். அவருடைய மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை.

எதிர்பாராத சந்திப்பு அது. 'ஐயா, தாங்கள் இந்த எளியவனுடைய குடிசையில் பாதம் வைத்தது எங்கள் குலம் செய்த பேறு!' நாக்குழற நவின்றார் நாதமுனிபட்டர்.

அதே நேரத்தில் அந்த இளைஞன் கூத்தனாரின் இரு பாதங்களையும் தொட்டு வணங்கினான். கூத்தர் அவனை மனப்பூர்வமாக ஆசிர்வதித்தார்.

கூத்தர் சிறிது நேரத்திலேயே அந்தக் குடும்பத்துடன் மிகவும் நெருங்கியவர் போல ஆகிவிட்டார். பட்டர் வெளியில் சென்று ஏதோ ஒரு பச்சிலையை பறித்துக் கொண்டு வந்தார். அதனைக் கசக்கி காயத்தின் மீது வைத்துக் கட்டினார். நெற்றியில் பட்ட காயம் ஆறி பூரண நலம்பெறும்வரை தம்முடைய விருந்தினராகத் தங்க வேண்டும் என அவரை வேண்டிக் கொண்டார் அச்சிறுவனும் 'ஆம், தாங்கள் போகக் கூடாது.' என்று அவருடைய கரத்தைப் பற்றிக் கொண்டு உரிமையோடு கூறினான். அன்பு உள்ளங்களின் வேண்டுகோளைக் கூத்தரால் மீற இயலவில்லை. அவர்களுடன் சில நாட்கள் கழித்தார். காயம் ஆறிக் கொண்டு வந்தது.

பட்டரும், அவருடைய இருபிள்ளைகளும் கூத்தரை மிகவும் அன்போடு உபசரித்தார்கள். பத்தியோடு அவருக்கு பணிவிடை செய்தார்கள். கூத்தருக்கு அந்த இல்லம் மிகவும் பிடித்துவிட்டது.

இரு பிள்ளைகளில் மூத்தவனான நல்லமன் கவிஞரை மிகவும் கவர்ந்துவிட்டான். அவன் பெரிய ஞானியைப் போல கூத்தரிடம் தர்க்கம் செய்வான். இளம் வயதிலேயே அவன் பெற்றிருந்த அறிவாற்றலைக் கண்டு அவர் வியந்தார் பிற்காலத்தில் அவன் நாடு போற்றும் ஞானியாவான் என்று அவருடைய உள்ளம் கூறியது.

நல்லமன் சிறு பிள்ளையாக இருப்பினும் தவறாமல் நாள் தோறும் காலையும், மாலையும் வரதராசப் பெருமான் சன்னதிக்குச் செல்வான். ஓங்கி உலகளந்த உத்தமர் எதிரில் தன்னை மறந்து வெகு நேரம் மோன நிலையில் அமர்ந்துவிடுவான். பின்னர் மனதிற்கினியான் மீது துதிபாடலை உருக்கத்தோடு பாடுவான். அவனுடைய பக்தியைக் கண்ட கூத்தர் பரவசப்பட்டார். அவன் கூத்தனாரை மிகவும் கவர்ந்து விட்டான். அவனுடைய நிலையும் அதுவே. அவன் கூத்தருக்கு சீடனாகவே ஆகிவிட்டான்.

நல்லமன் நாரணன் பக்தன். கூத்தர் சிவபக்தர். ஆனால் அன்பு உள்ளங்களின் இணைப்பை மதங்களின் பாகுபாடு பிரிக்கவில்லை. அன்பு நிலையே இறைவன்! சிவனும் அவனே, திருமாலும் அவனே! அன்பு ஒன்றேயாகும், இறைவனும் அப்படியே!

நாட்கள் சில ஓடின. கூத்தரால் ஓரிடத்தில் இருக்க இயலவில்லை. புண்ணிய தல தரிசன யாத்திரையைத் தொடரத் துடித்தார். எனவே ஒருநாள் காலை அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார். தானும் அவருடன் வருவதாக நல்லமன் பிடிவாதம் பிடித்தான். அவனைப் பிரிவது கூத்தருக்கும் ஏக்கம் அளித்தது. ஆனால் அவர் முற்றும் துறந்தவர். ஒரு கால்கட்டை மாட்டிக் கொள்ள அவரால் இயலுமா? அப்படித்தான் அவரால் இயன்றாலும் மற்றவருடைய பிள்ளையை நம்முடன் அழைத்துச் செல்ல முடியுமா? பட்டர்தான் அனுப்புவாரா? விரைவில் அங்கு மீண்டும் வருவதாக அவனுக்கு ஆறுதல் கூறினார். தம்முடைய பயணத்தைத் தொடர்ந்தார்.

கூத்தர் தமிழகத்தில் இருந்த பல புண்ணிய தலங்களுக்குச் சென்றார். ஆங்காங்கு கோயில் கொண்டிருந்த மூர்த்தியைக் கண்டு வணங்கினார். ஆனால், அவருடைய உள்ளம் முன்போல இறைவன்பால் ஒன்றவில்லை. கண்களை மூடிக்கொண்டு இறைவனை நினைத்தபோது அவருக்கு நல்லமனே தோற்றமளித்தான். இறைவா, இது என்ன புதிய சோதனை என்று ஏங்கினார். நல்லமனை மறக்க முயன்றார். பந்த பாசம் தம்மை பலவீனப்படுத்தி விட்டதாக உணர்ந்தார். அது தவறு என அவர் அறிவார். ஆனால் அவரால் அதிலிருந்து விடுபட இயலவில்லை. முற்றும் துறந்து ஞானியைப் போல பற்றற்று வாழ்ந்த கூத்தனாருக்கு இது மிகவும் வேதனை அளித்தது.

நல்லமனை கூத்தனார் பிரிந்து இரு வாரங்கள் ஆயின. அதற்குமேல் அவரால் பொறுக்க இயலவில்லை. மீண்டும் மனம் பதைபதைக்க காஞ்சிக்குத் திரும்பினார். நாதமுனிபட்டர் இல்லத்திற்கு விரைந்து சென்றார்.

ஆனால் நாதமுனிபட்டர் இல்லத்தின் நிலையும் வேறு விதமாக இருந்தது. கூத்தனாரின் நினைவாகவே நல்லமன் ஏங்கினான். அதே ஏக்கத்தில் அவன் படுத்த படுக்கையாகி விட்டான். நாளுக்கு நாள் அவனுடைய உடல்நிலை மோசமாகி வந்தது. கூத்தனாரை நினைத்து பித்து பிடித்தவனைப் போலப் பிதற்ற ஆரம்பித்து விட்டான். நாதமுனிபட்டர் பயந்துவிட்டார். கூத்தனாரைத் தேடி அழைத்துவர பல இடங்களுக்கு ஆட்களை அனுப்பியிருந்தார்.

அந்நிலையில்தான் அங்கு கூத்தனார் வந்து சேர்ந்தார். படுக்கையோடு படுக்கையாக ஒட்டியப்படி பிதற்றிக் கொண்டு இருந்த நல்லமனைப் பார்த்தார். அவன் கண்கள் மூடியிருந்தன. அவனுடைய நிலையைக் கண்டு துடித்த கூத்தர் அவனுக்கு அருகில் படுக்கையில் அமர்ந்தார். அவனுடைய நெற்றியைத் தடவியவாறு 'நல்லமா, நல்லமா,' என அழைத்தார். அவருக்கு அழுகையே வந்து விட்டது. அவருடைய சூடான கண்ணீர் நல்லமனுடைய முகத்தின்மீது விழுந்தது.

அன்பு அரவணைப்பால் மெய்சிலிர்த்த நல்லமன் ஆசைக்குரலைக் கேட்டு கண்களைத் திறந்து பார்த்தான். எதிரேயிருந்த கூத்தனாரை நோக்கினான் வாடியிருந்த அவனுடைய முகத்திலே புன்னகை மலர்ந்தது, மப்பும் மந்தாரமுமாக இருந்த வானிலே ஒரு மின்னல் வெட்டு தென்பட்டது போல! அவரைப் பார்த்து ஏதோ பேச விரும்பினான். உதடுகள் துடித்தன. பேச்சு வரவில்லை. 'நல்லமா' என்று கதறியபடியே கூத்தனர் அவனை அப்படியே தூக்கி அணைத்துக் கொண்டார்.

சிலநாட்களிலேயே நல்லமன் பழைய நிலைக்கு வந்து விட்டான். அவன் உடல்நிலை தேறிவிட்டது. புது உற்சாகம் பெற்றான். அல்லும் பகலும் கூத்தரோடேயிருந்தான். அவரைக் கட்டிக் கொண்டு ஆடினான்!, பாடினான், அவரோடு சேர்ந்து கொண்டு தானும் கூத்தாடினான். இருண்டு இருந்த அந்த இல்லத்திலே மீண்டும் மகிழ்ச்சி ஒளி பரவியது.

எத்தனை நாட்கள்தான் பிறர் வீட்டில் தங்கி இருக்க இயலும்? இந்த சிந்தனை கூத்தருக்கு எழுந்தது. மேலும் அவர் தமிழகத்தில் சிறப்புமிக்க கோயில்கள் அனைத்தையும் பார்த்துவிட உறுதிபூண்டு இருந்தார். பாதியிலேயே யாத்திரையை நிறுத்த அவர் விரும்பவில்லை. புறப்பட முடிவு செய்து விட்டார். அந்த நாளும் வந்தது.

நல்லமனுக்கு அவர் புறப்படும் செய்தி தெரிந்து விட்டது. 'என்னை விட்டுப் போகாதீர்கள், என்னை விட்டுப் போகாதீர்கள்!' என்று அவருடைய கால்களைப் பிடித்துக் கொண்டு அழுதான். 'நீங்கள் என்னைவிட்டுச் சென்றால் நான் இறந்து விடுவேன்' என்று அவன் கூறியதைக் கேட்ட கூத்தர் அழுது விட்டார். மனதைத் தொடும் இந்த சோகக் காட்சியைக் கண்ட பட்டரும் கண்ணீர் விட்டார்.

கூத்தனார் நாதமுனிபட்டரை ஏக்கத்தோடு பார்த்தார். பட்டருக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. அவருடைய

கவலையே வேறு. அதனை வெளியிடவும் அவர் விரும்பவில்லை. ஏன், அதனை வெளியிட முடியாத நிலை! கவலைகளைச் சுமந்து கொண்டு உள்ளம் குமுறினார். கூத்தனாருக்கு அதெல்லாம் தெரிய நியாயம் இல்லை. கூத்தனார் தயக்கத்துடன் நாதமுனி பட்டரைப் பார்த்தார். பணிவாக மெதுவாகக் கேட்டார்:

'நாதமுனிபட்டரே, தாங்கள் என்னை நம்புகிறீர்களா?'

'அபச்சாரம், அபச்சாரம்! கூத்தபிரானே! என்னைப் பார்த்து எத்தகைய வினா தொடுத்துவிட்டீர்கள்! தங்களுக்கு என்பால் இந்த ஐயம் ஏற்பட்டதற்கான காரணத்தை அடியேன் அறியலாமா?'

'பட்டரே, பதட்டம் வேண்டாம். நான் சொல்ல வந்ததே வேறு. தங்களிடம் வேண்டுகோள் விடுக்க என் மனம் விரும்புகிறது. ஒன்றை யாசிக்கிறேன். அதனை வெளியிடவும் தயக்கமாக இருக்கிறது!'

நாதமுனிபட்டர் ஒன்றுமே புரியாமல் விழித்தார் கூத்தபிரான் போட்ட பீடிகை பெரிதாக இருக்கிறது. அவருக்கு கொடுக்கும் அளவிற்கு தன்னிடம் என்ன உள்ளது என சிந்தித்தார். பின்னர் பேசினார்:

'கவிஞர் பெருமானே, தங்களுக்கு அடியேன் ஏதாவது கொடுக்கும் வாய்ப்பு இருப்பின் அது என்னுடைய பாக்கியம் என கருதுவேன். தாராளமாகக் கேளுங்கள். என்னிடம் இருப்பது எதைக் கேட்டாலும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.'

'மெத்த மகிழ்ச்சி பட்டரே! என்னுடைய வேண்டுகோள் இதுதான். என்னுடைய திட்டப்படி நாளை அதிகாலை தலயாத்திரை துவக்கியாக வேண்டும். நல்லமன் என்னைப் பிரிய இயலாது வேதனைப்படுகிறான். உலகறியா சிறுவன் பாசம் அவ்வாறு இருப்பது இயல்பே. ஆனால் வயது முதிர்ந்த என்னுடைய மனநிலையும் குழந்தையின் மனநிலையில் இருக்கிறதே! இறைவன் என்னை ஏன் இப்படி சோதிக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. அவன் இந்த விளையாட்டை என்னைக் கொண்டு ஏன் நடத்துகிறான் என்று என்னுடைய அறிவிற்கு எட்டவில்லை. நான் யாசிப்பது இதுதான்.....' கூத்தர் தயங்கினார். பேச்சு நின்றது. பட்டர் பேசினார்:

'சொல்ல வந்ததைச் சொல்லுங்கள் சுவாமி!'

'நாதமுனிபட்டரே, அருள்கூர்ந்து நல்லமனை என்னுடன் அனுப்பி வையுங்கள். அவன் என்னுடன் வரட்டும். அவன் பல

புனித தலங்களை தரிசிக்கட்டும்; புண்ணிய துறைகளில் நீராடட்டும். அவனுடைய பரந்த அறிவும், ஞானமும் என்னுடன் வருவதால் விரிவு பெறும். எனக்கும் பயனாக இருக்கும். இமை கண்ணைக் காப்பது போல அவனை நான் காப்பாற்றுவேன். என்னுடன் வருவதால் அவனுக்கு ஒரு குறையும் வராது.' இவ்வார்த்தைகளை ஒரே மூச்சில் கூறிய கூத்தர், ஆவலோடு நாதமுனிகளின் முகத்தைப் பார்த்தார். அவர் முகம் வாடிவிட்டது. வருத்தத்தோடு மறுமொழி புகன்றார்:

'கவிஞரே! சொல்லக் கூடாததைச் சொல்லுகிறேன். தங்களுடைய மன நிலையை நான் உணருகிறேன். எனவே என்னுடைய எல்லையை மீறிச் சொல்லுகிறேன். நல்லமன் என்னுடைய சொத்து அல்ல. அவனைத் தங்களுடன் அனுப்பும் உரிமை எனக்கு இல்லை. இதற்குமேல் அருள் கூர்ந்து என்னை எதுவும் கேட்க வேண்டாம். அப்படிக் கேட்டால் நான் தங்களிடமே பொய் பேச வேண்டி வரலாம். அருள் கூர்ந்து சத்தியம் தவறிய பாவத்திற்கு என்னை ஆளாக்க வேண்டாம் கவிஞரே!'

'நல்லமன் யாருடைய சொத்து என்று நான் கேட்க வில்லை பட்டரே! அவன் யாருடைய சொத்தாக இருந்தால் என்ன? பிள்ளையின் சிறப்புதானே ஈன்றெடுத்த பெற்றோரின் நோக்கமாக இருக்க இயலும்? மீண்டும் சொல்லுகிறேன் பட்டரே! நல்லமன் என்னுடன் வருவதின் மூலமாக உயர்வு பெறுவான் என்று என் உள் உணர்வுக்கூறுகிறது. தயங்காதீர்கள். அவனை அனுப்புங்கள். அண்ட சராசரங்களை ஆளும் முக்கண்ணன் நல்லதே செய்வான். அவன்மீது பாரத்தைப் போட்டு விட்டு பிள்ளையை என்னுடன் அனுப்புங்கள்.' கூத்தர் கண்ணீர் விட்டுக் கொண்டே நல்லமனை தூக்கி அணைத்துக் கொண்டு அவன் கன்னத்தில் மாறி மாறி முத்தமழை பொழிந்தார்.

நாதமுனிபட்டர் மெத்தப்படித்தவர் வால்மீகியையும், கம்பனையும் நன்கு கற்றவர். இராமச்சந்திரனை தம்முடன் அனுப்புமாறு வாதிட்ட விசுவாமித்திர முனிவரின் நினைவுதான் நாதமுனிபட்டருக்கு வந்தது.

ஆம். கௌசிக முனிவர் இதுதான் அன்று கூறினார்.

தயரதா! குழந்தை இராமச்சந்திரனை என்னுடன் நீ அனுப்புவதால் ஒரு தீங்கும் வராது. மாறாக அவன் மேலும் சிறப்புகள் பெற வழி தென்படும்.'

தயரதன் முதலில் மறுத்தான். பின்னர் இராம இலக்குவணர்களை முனிவருடன் அனுப்பினான். தயரதன்

பயந்தவாறு பிள்ளைகளுக்கு யாதொரு தீங்கும் ஏற்படவில்லை. அது மட்டுமல்ல, தாடகை வதத்துக்கு அதுவே காரணமாயிற்று, சீதா கல்யாணம் நிகழ்ந்தது. இராமன் பல அத்திரங்களைப் பெற வாய்ப்பு ஏற்பட்டது. ஏன், இராமாயண மாகாவியம் உதிக்க, அதர்மம் அழிந்து தர்மம் நிலை நாட்டப்பட அன்றைய அச்செயலே ஆதாரமாக அமைந்தது.

இந்த இதிகாச வரலாற்றை நாதமுனிபட்டர் சிறிதுநேரம் சிந்தித்தார். தான் தயரதன் அல்ல என்பது அவருக்குத் தெரியும். தயரதனுக்கு இராகவனை அனுப்பும் உரிமை இருந்தது. ஆனால் அது பட்டருக்கு இல்லை.

'எப்படியோ இருக்கட்டும். நல்லமனை கூத்தருடன் அனுப்புவதால் நன்மையே ஏற்படும். அவனுடைய உயர்வுக்காக நாராயணன் காட்டிய பாதை அதுவென்றால் அதனை அடைப்பது தருமமல்ல. அதனால் எனக்கு தீமை வரலாம். அனைத்தும் கிருஷ்ணார்ப்பணம் என்று அந்த கிருஷ்ணன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு விளைவுகளை ஏற்கிறேன்.' இந்த முடிவிற்கு பட்டருடைய மனம் வந்து விட்டது. அவருடைய உள்ளத்தில் தெளிவு பிறந்தது. அது முகக் கண்ணாடியின் வழியாகத் தெரிந்தது. தெளிவோடு!, உறுதியோடு பேசினார்.

'கவிஞர் பெருமானே, அவனன்றி ஓர் அணுவும் அசையாது. எல்லாம் அவன் இச்சைப்படித்தான் நடக்கும். அந்த சூத்திரதாரி ஆட்டுவிக்கும் பாவைகள் நாம். அவன் வகுத்த வழியைத் தடுக்க நான் யார்? நல்லமனைத் தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். நல்லபடியாகத் திரும்பி வாருங்கள். அருள் கூர்ந்து விரைவில் பிள்ளையோடு வந்து சேர வேண்டுகிறேன்.'

அடுத்த நாள் அதிகாலை ஆனந்த வரதக்கூத்தர் நல்லமனுடன் க்ஷேத்திராடனம் புறப்பட்டார் நாதமுனி அடிகளும், இளைவன் மகீதரனும் காஞ்சியின் எல்லைவரை சென்று வழியனுப்பினார்கள். பிரியும் பொழுது நல்லமன் நாதமுனி பட்டரின் பாதத்தில் விழுந்து ஆசி பெற்றான். 'போய் வா, மகனே! அந்த நாராயண மூர்த்தி உனக்கு சர்வ மங்களங்களும் அளிப்பான். இனிதே சென்று மீண்டுவா!' நா தழுதழுக்க இவ் வார்த்தைகளைக் கூறிய பட்டர் பிள்ளையைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டு ஆசி கூறினார். அப்பொழுது அவருடைய கண்களிலிருந்து பெருக்கெடுத்த நீர் நல்லமனின் கன்னத்தை சூடாக்கியது. மீண்டும் நல்லமனை இந்த வாழ்வில் பார்க்க இயலுமா என்ற இனம் தெரியா ஏக்கம் பட்டருடைய உள்ளத்தில்

ஏற்பட்டது. பட்டரும் மகீதரனும் பார்த்துக்கொண்டு நிற்கும்பொழுதே கூத்தரும், நல்லமனும் புறப்பட்டார்கள். அவர்கள் பார்வையை விட்டு மறையும் வரை பட்டர் கண் இமைக்காமல் பார்த்த வண்ணம் மரமாக நின்றார். அவர்கள் மறைந்த பின்னர் கனத்த உள்ளத்தோடு மகீதரன் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு இல்லத்தை நோக்கி நடந்தார்.

கூத்தரும், நல்லமனும் தல யாத்திரை புறப்பட்டு ஒரு திங்கள் கழிந்தது. பல்வேறு கவலைகளால் பீடிக்கப்பட்ட நாதமுனி பட்டர் உடல் இளைத்து மெலிந்து நோய்வாய்ப் பட்டார். ஒரு நாள் இரவு முதல் யாமம். ஊஞ்சலின் மீது படுத்துக்கொண்டு இருந்தார் எதை எதையோ பற்றி சிந்தித்த வண்ணம் படுத்திருந்தார்.

அப்பொழுது ஒருவன் வந்து வாயிற்படியில் நின்றான். 'பட்டர் சுவாமிகளே!' என்று மெதுவாக அழைத்தான். அவனை உள்ளே வருமாறு பட்டர் கூறவே, அவன் அவர் எதிரில் வந்தான். படுத்திருந்த பட்டர் எழுந்த ஊஞ்சலின் மீது அமர்ந்தார். வந்தவன் பட்டருக்கு வணக்கம் செலுத்தினான். பட்டர் அவன் வந்த காரணம் யாது என வினவினார் வந்தவன் தன்னுடைய கச்சையிலிருந்து ஒரு ஓலையை எடுத்தான். அதைப் பட்டரிடம் நீட்டினான்.

நாதமுனி பட்டர் மெதுவாக எழுந்தார். ஓலையை எடுத்துக் கொண்டு விளக்கருகில் சென்றார் அதனைப் படித்தார் படித்தவுடன் அப்படியே அதே இடத்தில் இடிந்து உட்கார்ந்து விட்டார். பேய் அறைந்தவரைப் போல ஆனார். அவருடைய அனைத்து நாடிகளும் ஒடுங்கி விட்டன. நெற்றி நரம்பு புடைத்துக் கொண்டு நின்றது. சிறிது நேரம் உணர்வற்று இருந்தார். பின்னர் உணர்வு பெற்றவுடன், 'நான் பின்னர் வருகிறேன். நீ புறப்படலாம்,' என்று கூறினார். வந்தவன் பட்டருக்கு வணக்கம் செலுத்தி விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

பட்டருடைய மனம் பதைபதைத்தது. 'நமோ நாராயணா, ஆபத்பாந்தவா, அனாதை இரட்சகா, முதலையின் வாயில் சிக்கிய யானையை காப்பாற்றிய ஆதிமூலமே என்னைக் காப்பாற்று.' இவ்வார்த்தைகளைக் கூறியபடியே வீட்டில் மாட்டப்பட்டிருந்த திருமால் படத்தின் முன்னர் நின்று கொண்டு வணங்கினார். எல்லாம் அவன் விட்ட வழிப்படியே நடக்கும் என்று கூறியபடியே

மகீதரனை அழைத்துக் கொண்டு வெளியில் புறப்பட்டார். இருவரும் ஒரு ஒற்றை மாட்டு வண்டியில் ஏறினார்கள். எருது இருளில் மெதுவாக நடைபோட்டது.

காஞ்சி மாநகரிலிருந்து ஒன்றரைக் காதம் தொலைவில் பாலாறு, செய்யாறு, வேகவதி ஆகிய மூன்று நதிகளும் ஒன்றாகக் கலக்கின்றன. இங்கு மூன்று நதிகளும் கலப்பதால் இப்புனித தலம் சங்கமம் திருமுக்கூடல் என்று பெயர் பெற்றது. திருமுக்கூடலை யொட்டி ஒரு அழகான குன்று இருக்கிறது. அதன் பெயர் பத்மகிரி என்பதாகும். இது அந்நாளில் சீரும் சிறப்பும் மிக்க எழிலாந்த வைணவப் புண்ணிய தலமாக இருந்தது.

இன்றும் குன்றின் மீது இலட்சுமி பெருமாள் சாந்த சொரூபியாக வீற்றிருக்கிறர். வரதராசப் பெருமான் முதலில் இங்குதான் கோயில் கொண்டிருந்தாராம். இங்கிருந்துதான் பின்னர் காஞ்சிக்கு சென்றுவிட்டாராம். அவருக்கு இந்த பத்மகிரி தாய்வீடு. பற்றற்றான் என்று வணங்கப்படும் இறைவனுக்கும் பிறந்தவீட்டு பற்று விடவில்லை போலும்! எனவே காஞ்சி வரதராசப் பெருமான் ஆண்டுக்கு ஒருமுறை தாய்வீடான பத்மகிரிக்கு வருகிறார். ஒரு நாள் தங்குகிறார். அங்கிருந்து திருமுக்கூடலுக்கு உலா செல்கிறார்!

இரவு கடைசி யாமம் நடக்கிறது. கிருட்டிண பட்சத்து தேய் நிலவு ஒளியிழந்து விண்ணில் கீழ்த் திசையில் தொங்கிக் கொண்டு இருக்கிறது. இலட்சுமி பெருமாள் கோயிலின் கர்ப்பக் கிரகத்தில் தொங்கவிடப்பட்ட ஓர் அகல் விளக்கு எரிந்து கொண்டு இருக்கிறது. விளக்கு காற்றினால் தாக்கப்பட்டு அலைந்து ஆடிக் கொண்டிருந்தது. அதன் மங்கலான ஒளியில் ஒரு கரிய உருவம் அமர்ந்திருந்தது. அதன் உடல் முழுவதும் கருப்புத் துணியால் போர்த்தப்பட்டிருந்தது. இலட்சுமி பெருமான் முன்னர் அமர்ந்திருந்த அவ்வுருவம் அடிக்கடி எழுந்து வெளியில் சென்றது. குன்றின் கீழ் செல்லும் பாதையை உற்றுப் பார்த்தது. எதுவுமே தென்படவில்லை. பின்னர் மீண்டும் கர்ப்பக்கிரகத்திற்கு வந்து அமர்ந்தது. இவ்வாறே இரவின் வெகுநேரம் அந்த இருளில் கழிந்து விட்டது.

எங்கோ தொலைவில் மாட்டுவண்டி சதங்கை ஒலி மெதுவாகக் கேட்டது. அந்த உருவம் பரபரப்போடு எழுந்து சென்று குன்றுக்குக் கீழே சென்ற பாதையை உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றது. சதங்கை ஒலி வரவர அதிகமாகிக் கொண்டு வந்தது.

பாதையில் வந்து கொண்டு இருந்த ஒற்றை மாட்டு வண்டி பத்மகிரிக்கு அருகில் வந்தவுடன் நின்றது. அதிலிருந்து இருவர் இறங்கினார்கள் பத்மகிரியின்மீது ஏறினார்கள். அதிக உயரமில்லாத சீரான படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ள அக்குன்றின் மீது ஏறுவது கடினமான தல்ல. ஆயினும் வந்தவர்கள் மெதுவாகவே மேலே ஏறினார்கள். அவர்கள் பாதி தூரத்தை ஏறியிருப்பார்கள். அவர்கள் யார் என்பதை மேலே இருந்த உருவம் உணர்ந்து விட்டது. எனவே வந்தவர்களை வரவேற்க அது வேகமாக படிகளில் இறங்கி வந்தது.

மேலிருந்து இறங்கி வந்த உருவம் பரபரப்போடு குழந்தை மகீதரனை தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டு அதன் கன்னங்களில் மாறி, மாறி முத்தமழை பொழிந்தது. பின்னர் பட்டருக்கு வணக்கம் செய்தது. பட்டரும் பதில் வணக்கம் செய்தார்.

'வாருங்கள், வாருங்கள், பட்டர் பிரானே! நலம்தானே?, அந்தக் கரிய உருவம் முகமன் கூறி பட்டரை வரவேற்றது.

'அம்மா, கோதை! இலட்சுமி பெருமாள் அருளால் நலமே! அவன் அருளால் அனைத்தும் நல்லபடியே நடக்கும். உன்னைக் கண்டு எத்தனை நாட்கள் ஆகிவிட்டன! இன்று உன்னைக் காண்பதில் மெத்த மகிழ்ச்சி! தாயே, நீ நலமா? உன்னுடைய பெற்றோர்கள் நலமா?' அன்போடு வினவினார் நாதமுனி பட்டர்.

பட்டர் பேசும்பொழுதே கோதை பிள்ளையை தூக்கியவாறே பத்மகிரியின் உச்சியை நோக்கி படிகளில் நடந்தாள். அவர் அவளைப் பின் தொடர்ந்தார். அவர்கள் பத்மகிரியின் உச்சிக்கு வந்துவிட்டார்கள். அங்கிருந்து ஒரு பாறையின் மீது கோதை அமர்ந்தாள்.

'பட்டரே, அமருங்கள்!' என கோதை கூறவே அவரும் எதிரில் அமர்ந்தார். மகீதரனைத் தனக்கு அருகில் கோதை அமர்த்திக் கொண்டாள். அவனுடைய தோள்மீது கையைப் போட்டு அவனை இறுக்கி அணைத்துக் கொண்டே பட்டரை நோக்கி கேட்டாள்:

'பட்டரே, நான் இப்பொழுதே அவசரமாகச் செல்ல வேண்டியுள்ளது. பிள்ளைகளைப் பார்த்து பல நாட்கள் ஆகி விட்டன. என்னுடைய மனம் பொறுக்கவில்லை. அவர்களுடைய நினைவு அடிக்கடி வந்து வாட்டியது. பார்த்துவிட்டு போக வந்தேன் ஆமாம், பிள்ளைகள் இருவரையும் அழைத்து

வரும்படிதானே ஓலையில் குறிப்பிட்டிருந்தேன்! மகீதரனை மட்டும் அழைத்து வந்திருக்கிறீர்களே? அன்புச் செல்வன் நல்லமனை ஏன் அழைத்து வரவில்லை? அவன் உடல் நலத்திற்கு ஏதாவது....?' கோதை பதட்டத்தோடு கேட்டாள்.

'தாயே, இலட்சுமி பெருமாள் அருளால் நல்லமனுக்கு ஒரு குறையும் இல்லை. அவன் நல்லபடியே இருக்கிறான்!' இது பட்டருடைய மறுமொழி.

'அப்படியாயின் அவனை ஏன் அழைத்து வரவில்லை சுவாமிகளே?'

இந்த வினாவிற்கு விடை கிடைக்காததால் கோதை யினுடைய பதட்டம் அதிகமாயிற்று. பதறிக் கொண்டு கேட்டாள்:

'சொல்லுங்கள் பட்டரே! ஏன் தயங்கிறீர்கள்? என்னுடைய அன்பு நல்லமன் எங்கே? எங்கே?'

இதற்கு மறுமொழியில்லை. பட்டர் வாய் திறக்க வில்லை. அவருடைய முகத்தில் தென்பட்ட சோகத்தை இருளில் கோதையால் காண இயலவில்லை.

'அம்மா, அண்ணா இல்லை. அண்ணா ஊருக்குப் போய்விட்டான்!' இது மகீதரன் மொழி. இதனைக் கேட்டு பதறிய கோதை பட்டரைப் பார்த்துக் கேட்டாள்:

'என்ன நாதமுனி பட்டரே, குழந்தை மகீதரன் சொல்லுவது உண்மையா? நல்லமன் எங்கு போனான்? ஏன் போனான்? எனக்குத் தெரியாது அவனை எந்த ஊருக்கு அனுப்பினீர்கள்?'

'அம்மா, கோதை! என்னை மன்னித்து விடு. நல்லமன் புண்ணியத் தலங்களுக்குப் போக ஆசைப்பட்டான். என்ன சொல்லியும் கேட்காது பிடிவாதம் பிடித்தான்; அனுப்பிவிட்டேன்.'

'என்ன பட்டரே, நல்ல விளையாட்டு இது! சிறு பிள்ளையைத் தீர்த்த யாத்திரைக்கு அனுப்புவதா? தனியாகவா?'

'தாயே நல்லமனை தக்கதுணையோடுதான் அனுப்பி இருக்கிறேன்.'

'யார் அந்த துணை?'

'தாயே, கூத்தரோடு அனுப்பியிருக்கிறேன்.'

'அது யார், கூத்தர் என்றால்?'

'கவிராயர் ஆனந்த வரதக்கூத்தருடன் அனுப்பியிருக்கிறேன்.'

'ஆனந்த வரதக் கூத்தனா? சோழர்களின் அரசு கவிஞனா?'

'ஆம், அம்மா.'

'பட்டரே, நான் யார் என்று தெரியுமல்லவா? நான் எதற்கும் துணிந்தவள் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.' இச்சொற்களைக் கூறிக்கொண்ட கோதை தன்னுடைய இடுப்பில் தொங்கிய கட்டாரியை தடவியபடியே மேலும் கேட்டாள்:

'அந்த சோழர்களின் அடிவருடியுடன் நல்லமனை அனுப்பக் காரணம்? இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. சொல்லுங்கள். உண்மையை மறைக்காமல் சொல்லுங்கள். இன்றேல் இப்பொழுதுதே இலட்சுமி பெருமாளுக்கு ஒரு நரபலி கிடைக்கும்.' கட்டாரியை கையில் எடுத்தாள்.

ஏற்கெனவே உறக்கமற்று வண்டியில் பயணம் செய்து வந்த மகீதரனுக்கு உறக்கம் வந்துவிட்டது. குன்றின்மீது வீசிய குளிர்ந்த காற்று அவனைக் கொஞ்சி வருடிக் கொடுத்தது. கோதையின் மடிமீது தலையை வைத்து பாறையின் மீது நீட்டிப் படுத்தான். சிறிது நேரத்திலேயே உறங்கிவிட்டான்.

நாதமுனிபட்டர் நல்லவர். நான்கு வேதங்களையும் ஆறு ஆகமங்களையும் பயின்றவர். வரதரசப் பெருமானுக்கு தொண்டு செய்வதே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர். குற்றமற்ற மரபினர் நல்லொழுக்கம் தவறாதவர் தமக்குத் தாமே உவமையானவர். இத்தகைய சீலமிகு வைணவ பக்த சிரோன்மணி மன வேதனையால் துடித்தார். கண்களில் நீர் கொட்ட தலை சாய்ந்த வண்ணம் குற்ற உணர்வோடு அமர்ந்திருந்தார் கோதையின் வெறி ஓரளவிற்கு அடங்கியது. கட்டாரியை உறைக்குள் செருகினாள். பட்டரைப் பார்த்து வேதனையோடு அழுதுகொண்டே பேசினாள்:

'நாதமுனி பட்டரே, தாங்கள் சோழர்களிடம் என்னைக் காட்டிக்கொடுப்பீர்கள் என்று நான் நினைக்க வில்லை. எனக்கு நம்பிக்கை துரோகம் செய்து விட்டீர்கள் என் உள்ளம் துடிக்கிறது. நான் தங்களுக்கு என்ன தீங்கு செய்தேன்?'

'அம்மா கோதை. நான் மனமறிய உனக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. உன்னுடைய கண்ணீரைப் பார்த்து என் மனம் பொறுக்கவில்லை. உன்னுடைய கட்டாரியை விட கண்ணீர்தான்

என்னை அதிகமாக வேதனைக்கு ஆளாக்குகிறது. நான் செய்தது தவறுதான். என்னை உன் கட்டாரியால் குத்தி மனதை சாந்தம் செய்து கொள்.' பட்டர் உருக்கத்தோடு கூறவே கோதையின் மனம் மேலும் சற்று இளகியது.

'பட்டரே. நல்லமன் யார் என்று சொல்லி விட்டீர்களா? என்னுடைய பொறுப்பில்தான் அவன் இருக்கிறான் என்பதையும் சொல்லிவிட்டீர்களா?' இந்த வினாக்களை அடுக்கிய கோதைக்கு பட்டர் மறுமொழி கூறினார்.

'இல்லை தாயே, அந்தத் தவறை நான் செய்யவில்லை. உன்னை நான் காட்டிக் கொடுக்கவில்லை.'

'நல்லது பிள்ளையையும், என்னையும் எதிரிகளிடம் காட்டிக் கொடுக்காமல் விட்டு வைத்தீர்களே; இந்த அளவிற்காவது உதவினீர்களே, அது போதும். பிள்ளைகளை நீங்கள் வளர்த்தது போதும். இந்த மகீதரனையாவது யாருக்கும் தானம் செய்யாமல் விட்டு வைத்திருக்கிறீர்களே' அதற்காக என்னுடைய நன்றி. ஒன்று மட்டும் நினைவிருக்கட்டும். உங்களுக்கு ஒரு திங்கள் தவணை கொடுக்கிறேன். அதற்குள் நல்லமன் எங்கிருந்தாலும் தேடிப்பிடித்து அவனை என்னிடம் ஒப்படைக்க வேண்டும். இன்றேல் என்னுடைய கட்டாரிக்கு தப்பமாட்டீர்கள்.

'இனி தங்களை நம்பி இந்தப் பிள்ளையை உம்மிடம் விட முடியாது. இவனுக்கு ஒரு புதிய ஏற்பாடு செய்ய வேண்டும். நான் தற்பொழுது அவசரமாகப் போக வேண்டும். ஒரு திங்களுக்குள் மீண்டும் வருவேன். அப்பொழுது இவனுக்கு ஒரு புதிய ஏற்பாடு செய்கிறேன்.

'கண்ணே, மகீதரா நான் வரட்டுமா?'

மகீதரன் தூக்கம் தெளிந்தது. மறுமொழி கூறினான்:

'முடியாது அம்மா, முடியாது! தங்களைவிட்டு நான் பிரிய மாட்டேன். உங்களோடுதான் வருவேன்.

'மகீதரா, என்னுடைய அன்புக் கண்ணே! நான் சொல்லு வதைக் கேள். பிடிவாதம் பிடிக்காதே'

'முடியாது. நான் தங்களுடன் கட்டாயம் வருவேன்.'

'மகீதரா, நீ நல்லபிள்ளை. என்னுடைய பேச்சைத் தட்டாதே. என்னுடைய வழி கரடு முரடானது. இப்பொழுது என்னுடன் நீ வர இயலாது. நமக்கும் ஒரு நல்ல காலம் வரும். அப்பொழுது

உன்னை என்னுடன் அழைத்துக் கொள்ளுகிறேன். அன்பு மகனே, எனக்கு இந்த உலகத்தில் இருக்கும் ஒரே பற்றுக்கோல், நீயும் உன்னுடைய அண்ணனும்தான் அப்பா!' இதனைக் கூறும் பொழுது கோதையினுடைய நா தழுதழுத்தது. கண்களிலிருந்து நீர் கொட்டியது. அவனைத் தூக்கி அணைத்துக் கொண்டாள்.

'உம், முடியாது. நான் வருவேன். உங்களைப் பிரிந்திருக்க என்னால் முடியாது.' மகீதரன் ஆழ ஆரம்பித்து விட்டான். நின்றிருந்த அவளுடைய கால்களை சேர்த்துப் பிடித்துக் கொண்டு அழுதான்.

கோதை அவனுடைய தலையைத் தடவிக் கொண்டே எவ்வளவோ சமாதானம் கூறிப் பார்த்தாள். யாதொரு பயனும் ஏற்படவில்லை.

'அம்மா என்னை அழைத்துக் கொண்டு போக வேண்டும். இல்லாவிட்டால் மறுமுறை என்னைப் பார்க்க மாட்டீர்கள். நானும் அண்ணனைப் போல யாருடனாவது போய் விடுவேன். இல்லாவிட்டால் வேகவதி ஆற்றில் விழுந்து செத்துவிடுவேன்.' அழுதுக்கொண்டே அந்த பிஞ்சு பேச ஆரம்பித்தது. கோதை பதறிவிட்டாள். 'அப்படிச் சொல்லாதேடா கண்ணா!' எனக்கூறி அவனுடைய வாயை தன்னுடைய வலது கரத்தால் அழுத்திக் கொண்டாள். அவனுடன் சேர்ந்து அவளும் விம்மி விம்மி அழுதாள். இருவருடைய அழுகையையும் பார்க்க நாதமுனி பட்டருடைய கண்களிலிருந்தும் கண்ணீர் கொட்டியது.

கோதை செய்வதறியாது வேதனைப்பட்டாள். அவளுடைய மனம் துடித்தது. மகீதரனோ சிறியவன். தன்னுடைய பாதையோ பயங்கரங்கள் நிறைந்தது. தனக்கு எந்த நேரத்தில் எதுவும் நேரலாம். அப்பிள்ளையை தன்னுடன் அழைத்துப்போக இயலுமா? அப்பாதையில் பிள்ளைகளுடன் நடக்க இயலுமா? மகீதரன் அவளை விடுவதாகத் தெரியவில்லை. எப்படியும் விட்டுவிட்டுப் போகலாம் என்றாலும் பட்டர்மீது வைத்திருந்த நம்பிக்கை போய் விட்டது. எஞ்சியுள்ள ஒருவனையும் தெருவில் போவோருடன் அவர் அனுப்பிவிட்டால்? அப்படியும் அவரை நம்பி விடலாம் என்றாலும் பிள்ளை வேகவதி ஆற்றில் விழுந்து சாகிறேன் என்கிறானே! சிறு பிள்ளையினுடைய மனது இப்படி நினைக்கலாமா? 'தில்லைத் திருமாலே. இதென்ன சோதனை!' அவள் செய்வதறியாது திகைத்தாள். தன்னுடைய கரடு

முரடான வாழ்க்கைப் பாதைக்கும் பிள்ளை பாசத்திற்கும் ஏற்பட்டிருக்கும் போராட்டத்தை உணர்ந்தாள். கதறி அழுதாள். வெகு நேரத்துக்குப் பின்னர் 'நடப்பது எல்லாம் நாரணன் விளையாட்டு! அவன் திருவுளப்படியே அனைத்தும் நடக்கும்,' என்ற தெளிவிற்கு ஓரளவு வந்தாள்.

'மகீதரா, அழாதே, என் கண்ணே! நான் உயிரோடு இருக்கும் வரை உன்னுடைய கண்களில் நீர் சிந்தக் கூடாது. எங்கோ சிறப்பாக வாழ வேண்டியவன் நீ. உனக்கு நான் தீங்கு செய்துவிட்டேன். அறியாமையால் பெரும் பிழை செய்து விட்டேன். அதற்கு ஈடுசெய்ய உன் கண்களில் நீர் சிந்தாது நான் வளர்க்கிறேன். அழாதே.' அவனை மீண்டும் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டாள்.

அண்மையில் தலை சாய்ந்தவாறு நின்றிருந்த பட்டரைப் பார்த்துப் பேசினாள்:

'பட்டரே, மகீதரன் என்னுடன் வருவான். நல்லமன் எங்கிருந்தாலும் அவனைத் தேடிப்பிடித்து அழைத்து வந்து பத்திரமாக வளர்த்து வரவேண்டும். ஒரு திங்கள் கழித்து நான் வருவேன். அப்பொழுது அவன் தங்களுடன் இருக்க வேண்டும். நாங்கள் வருகிறோம்.'

கோதை மகீதரனுடைய கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு பத்மகிரியின் படிகளில் இறங்கினாள்.

பட்டர் அவர்களைப் பின் தொடர்ந்தார். அவர் வாய் திறந்து எதுவுமே பேசவில்லை. கோதையினுடைய குடும்பத்தோடு மிகவும் நெருக்கமான பழக்கம் கொண்டவர் அவர். கோதை ஒரு நாள் எதிர்பாராத வகையில் இரு பிள்ளைகளை அழைத்து வந்தாள். அவர்களைப் பத்திரமாக வளர்க்க வேண்டுமென வேண்டினாள். அவளுடைய வேண்டுகோள்படி அவர்களை வளர்த்தார். இரு பிள்ளைகளையும் உயிராக வளர்த்தார்.

நல்லமன் கூத்தரோடு ஒட்டிக் கொண்டான். அவரை விட்டுப் பிரிந்தால் உயிர் வாழ இயலாது என்ற நிலைக்கு அவன் வந்து விட்டான். எனவே அவனை அவருடன் அனுப்பினார். அவனைப் பிரிவது பட்டருக்கும் மிகவும் வேதனை அளித்தது. மேலும் தம்முடன் வருவது நல்லமனுக்கு நல்லது என்று கூத்தர் வாதிட்டார். அவனுடைய எதிர்கால நல்வாழ்விற்கு தாம்

இடையூறாக இருக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் அவனை அனுப்பி விட்டார். ஆயினும் மற்றொரு பிள்ளை தமக்கு பற்றுக் கோலாக இருப்பான் என்று நம்பினார். இப்பொழுது அவனும் பிரிந்து செல்லுகிறான். நல்லமன். திரும்பி வந்தாலும் இனி கோதை அவருடன் இருக்க விடமாட்டாள். இனி அவர் தனிமரம்.

நாதமுனி பட்டருடைய வாழ்வின் இரு பற்றுக்கோல்களும் போய்விட்டன. எங்கிருந்தோ இரு பிள்ளைகள் வந்தார்கள். ஆயர்பாடியில் யசோதாதேவி கண்ணனை வளர்த்தது போல பட்டர் இரு பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கினார். பெற்ற பிள்ளைகள்மீது தந்தை பொழியும் அன்பைவிட மேலான அன்பைப் பொழிந்தார்.

இன்று அந்த பந்த பாசத்திற்கு முடிவு வந்துவிட்டது. 'ஒருசில நாட்கள் பிள்ளை நல்லமனோடு பழகிய கூத்தரால் அவனுடைய பிரிவு தாங்க இயலவில்லை. இத்தனைக் காலம் பிள்ளைகளுடன் பழகி அவர்களை வளர்த்த நான் இனி எப்படி அவர்களைப் பிரிந்து வாழ்வேன் இறைவா?' இவ்வாறு நினைத்த பட்டரின் கண்களிலிருந்து நீர் கொட்டக் கொட்ட கோதையும் மகீதரனையும் தொடர்ந்தார்.

அம்மூவரும் பத்மகிரியை விட்டுக் கீழே இறங்கி விட்டார்கள். குன்றின் அடியில் நின்றிருந்த உயர்சாதி புரவியின் மீது முதலில் மகீதரனை கோதை ஏற்றினாள், பின்னர் தானும் ஏறினாள். புரவியை தட்டி விட்டாள்.

நாதமுனி பட்டர் அவர்களை பார்த்தபடியே நெடுமரமாக நின்றார் உணர்வற்று நின்றர்ர். டக் டக் என்ற புரவியின் குளம்பொலிகள் அவருடைய நெஞ்சின்மீது புரவி நடப்பது போல அவருக்குப் பட்டது.

3

உத்திரகுமாரன் கதை

ஈழவேந்தன் பராக்கிரமபாகுவினுடைய குழப்பம் குறையவில்லை. சிந்திக்க, சிந்திக்க அது மேலும் அதிகரிக்கவே செய்தது.

திருமாறன் கூறிய ஆலோசனையை நிராகரிப்பதற்கு இல்லை. உரிய முக்கியத்துவம் கொடுத்து சிந்திக்க வேண்டியதே அது என கருதினான். அவன் சிந்தித்து முடிவிற்கு வரப் போதிய காலம் தேவைப்பட்டது. எனவே பின்னர் முடிவு கூறுவதாகச் சொல்லி திருமாறனை தன்னுடைய விருந்தினனாகத் தங்கும்படி பணித்தான். திருமாறன் அவ்விடத்தைவிட்டு வெளியேறினான். அரசன் தனிமையில் மீண்டும் சிந்தித்தான்.

தமிழகத்தின்மீது உடனே படையெடுக்க வேண்டும் என்ற முடிவில் ஈழத்து அரசன் உறுதியாக இருந்தான். அதற்கான படைபலத்தையும் பெருக்கிவிட்டான்.

இதற்கிடையில் வீரபாண்டியனுடைய தூதுவன் வந்தான். அவன் கூறிய கருத்தும் ஈழவேந்தனுடைய முடிவிற்கு ஒத்தாக இருந்தது. உடனே தமிழகத்தைத் தாக்க வேண்டும். அதற்கு உற்ற தருணம் அதுவே என்றுதான் வீரபாண்டியனுடைய தூதுவனாக திருமாறனும் கூறினான்.

ஆனால் திருமாறன் மற்றொன்றும் கூறினான். போரில் இறங்குவதற்கு முன்னர் போதிய துணைவலி பெற வேண்டும் என்று கூறினான். இது ஈழவேந்தன் இதுவரை சிந்திக்காததாகும். வீரபாண்டியனுடைய துணை வலியைப் பெறுவதில் பராக்கிரமபாகுவிற்கு தடையேதும் இல்லை. போரில் தமிழகத்தை வென்ற பின்னர் ஈழத்தில் இருந்து கொண்டே அதனை ஆண்டுவிட முடியாது, எப்படியும் அடியாட்கள் வேண்டியதே. அத்தகைய அடியாட்களில் ஒருவனாக வீரபாண்டியனை வைத்துக் கொள்வதில் தடையேதும் இல்லை. மேலும் அவன் பழைய தோழன். தமிழ்நாட்டுக்காரன். எதிரிகளின் பலவீனங்களை நன்றாக உணர்ந்தவன்.

முன்னொருகாலத்தில் ஈழவேந்தனான இராவணனுக்கும், அயோத்தி இராமனுக்கும் போர் நடைபெற்றது. அச்சமயம் ஈழவேந்தனுடைய சகோதரன் வீடணன் இராமனுடன் போய்ச் சேர்ந்துவிட்டான். அவன் இராமனுக்கு இராவணனுடைய பலவீனங்களையும் அவனுடைய படையை வெல்லும் தந்திரங்களையும் கூறினான். அவைகள் எல்லாம் தெரிந்ததால் தான் இராமன் வெல்ல முடிந்தது. அன்று ஈழத்தை தோற்கடிக்க, ஈழ மண்ணில் பிறந்த குலத்தைக் கெடுக்கும் ஒரு கோடரிக்காம்பு உதவியாக இருந்தான். இன்று அதற்கு சவாலாக தமிழ்நாட்டை வெல்ல, ஏன் ஒரு தமிழனை பயன்படுத்திக் கொள்ளக் கூடாது? அதுதான் பதிலுக்கு பதில். மேலும் வீரபாண்டியனிடம் படைபலம் உள்ளதாகவும் தெரிகிறது. என்ன இருந்தாலும் திருமாறன் வீரபாண்டியனுடைய தூதுவன். அவன் தனது அரசனுடைய படைபலத்தை மிகைப்படுத்தி கூறியிருக்கலாம். ஆயினும் ஓரளவு படைபலம் வீரபாண்டியனுக்கும் இருக்கத்தான் செய்யும்.

திருமாறனுடைய கூற்றில் இவையெல்லாம் தென் படுகின்றன. அவை அனைத்தும் உண்மையானவையே. ஆனால் அவனுடைய கூற்றில் உள்ள கசப்பான பகுதி சீவல்லபனுடன் ஒத்துப் போக வேண்டும் என்பதுதான். அது கசப்புதான் என்பதை திருமாறனும் ஒத்துக் கொள்கிறான். ஆனால் அது கசப்பான மருந்து என்கிறான் அவன். அது உடல் பிணியை போக்கும் கசப்பான மருந்தா அல்லது உடலிலிருந்து உயிரைப் பிரிக்கும் கொடிய விஷமா? இதுதான் முடிவுசெய்ய வேண்டிய பிரச்சினை; மூளையைக் குழப்பும் பிரச்சினை. ஈழவேந்தன் சிந்தனை ஓடியது.

திருமாறனுடைய ஆலோசனையை ஏற்பதும் ஏற்காததும் ஈழ வேந்தனுடைய விருப்பமே. அவனுடைய கூற்றில் ஒரு புதுமை தென்படுகிறது. சீவல்லபன் சோழர்களுடைய சிறையிலிருந்து தப்பிவிட்டதாகக் கூறுகிறான். அவன் மனம் திருந்திவிட்டதாகவும் கூறுகிறான். இதனை நம்பலாமா? நம்ப முடியுமா? இதில் சூது இருக்குமா?

இவைகளைப் பற்றியெல்லாம் ஈழவேந்தன் அமைச்சர் தலைவனுடன் கலந்தான். திருமாறனுடைய கூற்றை நம்புவதற்கில்லை என்றே அமைச்சர் தலைவன் எடுத்துவித்தான். இதில் ஏதாவது சூது இருக்கலாம் என வாதித்தான். உண்மையில் சீவல்லபன் மனம் திருந்தி இருப்பின், அவன் வீரபாண்டியனுடைய உதவிக்கு ஏன் போக வேண்டும்? ஈழவேந்தனிடம் நேராக

வரவேண்டியது தானே என அமைச்சர் தலைவன் மீண்டும் மீண்டும் வாதிட்டான். அதில் உண்மை இருக்கிறது. ஆனால் அதுவே முழு உண்மையல்ல.

ஈழவேந்தனை வெல்ல படைபலம் வேண்டி சோழர்களிடம் மண்டியிட்டவன் சீவல்லபன். அவன் தற்பொழுது உண்மையில் மனமாற்றம் பெற்றிருப்பினும் ஈழவேந்தனை அணுக அஞ்சுவது இயல்புதானே! எனவே தன்னை ஈழவேந்தனுடன் சேர்க்க மூன்றாவது மனிதனை நாடியதில் தவறு என்ன? இது மன்னனுடைய வாதம். அதற்கு மறுமொழி கூற இயலாது அமைச்சர் தலைவன் விழித்தான்.

மன்னரும், அமைச்சர் தலைவனும் செய்து கொண்ட விவாதங்கள் முடியவில்லை. அப்பொழுது ஒரு நிலையில் ஒற்றர் தலைவனை அழைத்து வருமாறு மன்னன் பணித்தான்.

ஒற்றர் தலைவன் வந்து மன்னனை வணங்கி நின்றான். சீவல்லபனைப் பற்றிய செய்தி ஏதாவது உண்டா என மன்னன் கேட்டான். 'சோழர்களுடைய சிறையில் இருந்து சீவல்லபன் தப்பிவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது; ஆனால் இன்னும் உறுதிப்படுத்தப் பட வில்லை, எனவே அச்செய்தியை அரசரின் கவனத்திற்கு கொண்டு வராது விடுத்தேன்' இது ஒற்றர் தலைவனுடைய மறுமொழி.

இச்செய்தி மன்னனுக்கு ஒரு புதிய தெம்பு அளித்தது. சீவல்லபன் சிறை தப்பிய செய்தி உறுதிப்படுத்தப்படாவிடினும் அது திருமாறன் கூறிய செய்தியுடன் ஒத்திருந்தது. அப்படியாயின் திருமாறன் கூறியது உண்மையாகவே இருக்கலாம். அது உண்மையாயின் திருமாறன் நம்புவதற்கு உரியவனே. இந்த முடிவிற்கு வந்த பின்னர் ஈழவேந்தனுக்கு திருமாறன் மீது ஒரு புதிய நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. ஏன், அவன் மீது ஒரு பற்றும் பிறந்தது.

அடுத்து சிந்திக்க வேண்டியது சிறை தப்பிய சீவல்லப னுடைய நிலை என்ன? அவன் நிச்சயமாக சோழர்களுடைய எதிரியாகத்தான் இருப்பான். இல்லாவிட்டால் அவர்கள் அவனை சிறையில் அடைப்பார்களா, அவன்தான் சிறையிலிருந்து தப்பி ஓடுவானா?

திருமாறன் கூறியது போல சோழர்களுடைய எதிரி ஈழத்தின் நண்பனே! அதனை அப்படியே ஒப்புக் கொள்ளலாம்.

ஆனால் சீவல்லபன் மனப்பூர்வமாக ஈழ அரசுக்கு உதவ முன்வருவானா? அவன் சோழநாட்டைப் பழி வாங்க ஆசைப்படுகிறானா?

இவையெல்லாம் உண்மையென்றே வைத்துக் கொள்வோம். சீவல்லபனை ஒரு பொருட்டாக மதித்து அவனிடம் தூது அனுப்புவதா? ஏற்கனவே அவன் மண்டை கனம் பிடித்தவன். தூது அனுப்பியும் அவன் வர மறுத்தால் ஈழ அரசின் நிலை மிகவும் கேவலமாகி விடும். ஈழ அரசு பலவீனப்பட்டு விட்டதாக ஈழ மக்களே நினைப்பார்கள். மன்னனைப் பார்த்து எள்ளி நகைப்பார்கள்.

மேலும் சீவல்லபன் எப்பொழுதும் தன்னைப்பற்றி அதிகமாகவே நினைத்துக் கொண்டு இருப்பவன். அவனை மதித்து தூது அனுப்பினால் ஈழம் பலவீனப்பட்டு விட்டதாக நினைத்துவிடுவான். அதனால் அவன் ஈழத்திற்கு மேலும் அதிக தொல்லை கொடுத்தாலும் வியப்பில்லை. இது அமைச்சர் தலைவனுடைய வாதம்.

இந்தக் கருத்திலும் பசையிருப்பதாக மன்னன் கருதினான். எந்த முடிவும் செய்ய இயலாது குழம்பிக் கொண்டு இருந்தான். இரு நாட்கள் ஓடின. திருமாறன் மன்னனுடன் நெருங்கிப் பழகத் தொடங்கினான். மன்னனுக்கும் அவனை மிகவும் பிடித்து விட்டது. அவன் தமிழகத்தின்மீது படையெடுக்க வேண்டும் என அடிக்கடி வற்புறுத்தினான் ஆனால் அவனுக்கு பற்பல சமாதானங்களைக் கூறி மன்னன் காலத்தை ஓட்டி வந்தான். அவன் கருத்தை நிராகரிக்கவும் அவன் விரும்பவில்லை. மேலும் அவனுடைய உற்சாகத்தைத் தான் குறைக்கக்கூடாது என்று மன்னன் கருதினான்.

ஒரு நாள் அவன் அரண்மனையில் தனிமையில் அமர்ந்திருந்தான். சிந்தனையில் இலயித்திருந்தான். அப்பொழுது ஒரு காவலன் வந்து எதிரில் நின்றான். தலை சாய்த்து வணக்கம் செய்தான் மன்னன் தலையசைத்து என்ன செய்தி என பாவத்தின்மூலம் கேட்டான்.

மன்னரைக் காண ஒருவர் வந்திருப்பதாகவும், அவசரமாக அவரைப் பார்க்க வேண்டுமென விரும்புவதாகவும் அவன் கூறினான். மன்னன் கேட்டான்:

'முட்டாள், வந்திருப்பது யார் என்று நீ விசாரிக்க வில்லையா?'

'பிரபு, வந்தவர் யாரென நான் விசாரிக்காமல் இல்லை. ஆனால் அவர் அதற்கு விடையளிக்க மறுத்து விட்டார். என்னை முறைத்துப் பார்த்து விட்டு சும்மா இருந்தார். அவரைப் பார்த்தால் சீவல்லபருடைய நினைவு வருகிறது.'

'அப்படியா வரச்சொல்!' மன்னன் பதட்டத்தோடு பணித்தான். ஒருக்கால் வந்தவன் சீவல்லபவன்தானோ என நினைத்தான். காவலன் வெளியேறினான். மன்னன் ஆவலோடு வாயிலை பார்த்தவாறு வைத்த விழி வாங்காது இருந்தான். சிறிது நேரத்தில் ஒருவன் வந்தான். மன்னரை நோக்கி வேகமாக நடந்துவந்தான். அவருடைய பாதங்களில் நெடுமரமாக விழுந்து விட்டான். இரண்டு கைகளாலும் மன்னனுடைய இரு பாதங்களையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டே பேசினான்:

'மாமா, என்னை மன்னித்து விடுங்கள்! நான் தவறு செய்து விட்டேன். தங்களுடைய மேலான உள்ளத்தைப் புரிந்து கொள்ள முடியாத மூடன் நான். அரசு ஆசையில் தங்களைப் பகைத்துக் கொண்டேன். மாற்றானோடு போய்ச் சேர்ந்தேன். தங்களைக் காட்டிக் கொடுக்க முனைந்தேன். அதற்குத் தக்க தண்டனையும் பெற்று விட்டேன். நன்றி கெட்ட சோழர்கள் என்னைப் பாதாளச் சிறையில் அடைத்து விட்டார்கள். எத்தனையோ இன்னல்களை அனுபவித்து விட்டேன். ஆண்டவன் அருளாலும் தங்களுடைய ஆசியாலும் என்னுடைய ஆற்றலாலும் கொடிய பாதாளச் சிறையிலிருந்து தப்பித்து விட்டேன். எனக்கு புத்தி வந்துவிட்டது. மாமா, மாமா! என்னை மன்னித்து அருளுங்கள் இந்தச் சிறியவனை மன்னித்ததாக தாங்கள் கூறினால்தான் தங்களுடைய பாதங்களை விடுவேன் மாமா!' சீவல்லபன் புலம்பினான். அவனுடைய கண்களிலிருந்து கொட்டிய கண்ணீர் அரசனுடைய பாதங்களை நனைத்தது.

'சீவல்லபா! எழுந்திரு. இப்பொழுதாவது உனக்கு புத்தி வந்துவிட்டதா? மனம் திருந்தி விட்டாயா?' இனியாவது நல்ல பிள்ளையாக நடப்பாயா?' வினாக்களைத் தொடுத்துக் கொண்டே பராக்கிரமபாகு சீவல்லபனைத் தூக்கி நிறுத்தினான்.

'மாமா, எனக்கு அரசும் வேண்டாம், அதிகாரமும் வேண்டாம். பதவியும் வேண்டாம், பட்டமும் வேண்டாம். புத்தி, புத்தி!' இவ்வார்த்தைகளைக் கூறியபடியே மீண்டும் சீவல்லபன் மன்னனுடைய இரு கரங்களையும் சேர்த்து பற்றிக் கொண்டு அழுதான்.

'சீவல்லபா, அழாதே. உன்னுடைய மனம் திருந்தி விட்டது. அதுபோதும் எனக்கு! உன்னுடைய பிழைகளையெல்லாம்

மன்னித்து விட்டேன். அரச குடும்பத்தில் பிறந்த நீ அதிகாரத்திற்கு ஆசைப்பட்டதில் தவறில்லை. ஆனால் தீட்டிய மரத்தையே பதம் பார்ப்பதுதான் கேவலம். மாற்றானோடு சேர்ந்து கொண்டு பிறந்த நாட்டையே காட்டிக் கொடுப்பதுதான் இழிவு. நமக்குள் ஆயிரம் இருக்கலாம். நீ இங்கேயே இருந்து கொண்டு என்னை எதிர்த்துப் போரிட்டிருந்தாலும் அதனை தவறு என்று நான் சொல்ல மாட்டேன்.

'மாமா, எனக்கு அதிகாரமும் வேண்டாம். வேறு எதுவும் வேண்டாம். இனி என்றென்றும் தாங்களே எனக்கு வழி காட்டி. இன்னும் நூறு ஆண்டுகள் தாங்களே அரசு பீடத்தில் இருந்து கொண்டு நாட்டிற்கும், எனக்கும் நல்வழி காட்ட வேண்டும் மாமா! இதுதான் என் ஆசை!

'மெத்த மகிழ்ச்சி சீவல்லபா!' மன்னன் சீவல்லபனுடைய தோள்மீது தட்டிக் கொடுத்தான்.

'மாமா, எனக்கு ஒரே ஒரு ஆசை, அதனை நிறைவேற்றுவீர்களா?' தயங்கித் தயங்கி ஒரு பீடிகை போட்டான் சீவல்லபன்.

'என்ன வேண்டும்? சொல் சீவல்லபா!'

'மாமா எனக்கு சொல்ல பயமாக இருக்கிறது. என்னடா இவன் வந்தவுடன் கோரிக்கை போடுகிறானே என்று நினைக்கமாட்டீர்களே?'

'சொல் சீவல்லபா, மனதில் உள்ளதைச் சொல். நீ என்ன எனக்கு அன்னியனா? என்னுடைய சொந்த அக்காள் பெற்றெடுத்தவன் நீ. உன்னுடைய ஆசையை நிறைவேற்ற நான் மறுப்பேனா? சொல். உனக்கு என்ன வேண்டும்? பொன் வேண்டுமா? பொருள் வேண்டுமா? அல்லது காலியாக உள்ள சேனாபதி பதவி வேண்டுமா? எதற்கு ஆசைப்படுகிறாய் சொல்.'

'இல்லை மாமா, இதற்கெல்லாம் நான் ஆசைப் படவில்லை ஒரு காலத்தில் பதவிக்கு ஆசைப்பட்டது உண்மை. இப்பொழுது என் மனம் திருந்திவிட்டது. இப்பொழுது என்னுடைய ஆசை ஒன்றே ஒன்றுதான். சோழர்களிடம் ஆதரவு நாடி அண்டினேன். அபயம் கொடுத்தார்கள். ஆனால் அது வெறும் ஏமாற்று வித்தை, என்மீது வீண்பழி சுமத்தினார்கள் பாதாள சிறையில் அடைத்தார்கள். அந்தக் கொடியவர்களை பழிக்குப் பழி வாங்க வேண்டும். அவர்கள் மமதையோடு வீற்றிருக்கும் மாளிகையின்

மீது நம்முடைய ஈழக்கொடி பட்டொளி வீசிப் பறக்க வேண்டும். நம்முடைய சேனாபதிகளைக் கொன்றவர்களைப் பழி வாங்க வேண்டும். அவர்கள் செய்த அதே வேலையை நாம் செய்ய வேண்டும். சோழ மன்னனுடைய தலையைத் துண்டிக்க வேண்டும். அவருடைய சேனாபதியும், அமைச்சர் தலைவனுமான வேதவனம் தலையையும் துண்டிக்க வேண்டும். பழையாறை சோழ அரண்மனையின் வாயிற்கு வெளியில் அவ்விருவர் தலைகளையும் சூழிகளில் பொருத்தி வைக்க வேண்டும். நம்முடைய சேனாபதிகளான இலங்காபுரி தொண்டைமான், சகத்விசய தொண்டைமான் ஆகியோருடைய தலைகளை பொருத்தி இருக்கும் அதே கழிகளில் அவர்களுடைய தலைகளைப் பொருத்த வேண்டும். நம்முடைய சேனாபதிகளைக் கொன்று அவர்களுடைய தலைகளை மதுரை அரண்மனைக்கு முன்னர் வைத்திருக்கும் அந்த கசாப்புக்கடைக்காரர்களைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும். ஆம், பழிக்குப் பழி, தலைக்குத் தலை!

'மாமா, எனக்கு நாடு வேண்டாம், போர் வேண்டும்! பதவி வேண்டாம். பழி வாங்கும் வாய்ப்பு வேண்டும்! அருமை மாமா, என்னை ஒரு அம்பாகப் பயன்படுத்துங்கள். அது போதும் எனக்கு. சோழர்களை பழிக்குப் பழி வாங்க எனக்கு அனுமதி கொடுப்பீர்களா?'

இச்சமயம் 'பலே' என்று குரல் கேட்டது. மன்னன் தன்னுடைய பார்வையை வாயிற்படி பக்கம் திருப்பினான். திருமாறன் மிடுக்குடன் உள்ளே வந்து கொண்டிருந்தான். 'புலிக்குப் பிறந்தது பூனையாகாது மன்னவா!' என்று கூறிக்கொண்டே நெருங்கி வந்தான்.

மன்னன் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. முகம் மலர, அகம் குளிர திருமாறனைப் பார்த்துக் கேட்டான்;

'திருமாறா, இவன் யார் என்று உனக்குத் தெரிகிறதா?'

'இதென்ன வினா மன்னவா! இவர் அனுப்பித்தானே நான் தங்களிடம் தூது வந்திருக்கிறேன்!'

'ஓ அப்படியா? ஏன் இதனை இதுவரை சொல்லாமல் மறைத்தாய்?'

'அரசே! உண்மையை உடனே சொல்லும் துணிவு வரவில்லை. மேலும் தங்களுடைய மனதை கொஞ்சம்

கொஞ்சமாக மாற்றி சீவல்லபரின்மேல் இருக்கும் கோபத்தைப் போக்க வேண்டாமா?'

'பலே, புத்திசாலி நீ!' இவ்வார்த்தையைக் கூறிய மன்னன் பெருமிதத்தோடு சீவல்லபனுடைய பக்கம் திரும்பி மேலும் கூறினான்:

'சீவல்லபா, திருமாறா நீங்கள் இருவரும் இரண்டு சூரர்கள், இலங்காபுரியும், சகத்விசயனையும் போல! அவ்விரு வீரர்களையும் உங்கள் மூலமாக மீண்டும் பெற்று விட்டேன். உங்களுடைய விருப்பத்தின்படி படைகளைக் கொடுக்கிறேன். சென்றுவாருங்கள். தமிழகம் முழுவதையும் வென்று வாருங்கள்! போருக்குப் பின்னர் உங்கள் இருவருக்கும் தக்க பதவிகளை கொடுக்கப்படும்.'

சீவல்லவன் மறுமொழி கூறினான்:

'மாமா, மன்னிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்கு மாறாகப் பேசுவதாக நினைக்க வேண்டாம். ஒரு விண்ணப்பம்.'

'என்ன வேண்டும்? சொல்ல சீவல்லபா, தயங்காதே.'

'மாமா, எனக்கு ஒரே ஒரு ஆசை. நான் மட்டும் தனியாகவே படைகளை நடத்திச் சென்று தமிழகத்தில் வெற்றிக் கொடி நாட்ட வேண்டும். அந்த வாய்ப்பு எனக்கு அளிக்க வேண்டும். திருமாறன் என்னுடைய உயிர்த் தோழன்தான். ஆனால் அவன் ஒரு தமிழன்தானே! தமிழனுடைய உதவியால் சீவல்லபன் தமிழகத்தை வென்றான் என்று நாளைய வரலாறு எழுதக்கூடாது. ஈழமே நேரடியாக படையெடுத்துச் சென்று தமிழகத்தை வென்றது என வரலாற்று ஆசிரியர்கள் எழுத வேண்டும். அதற்கு உதவி செய்ய வேண்டும். மாமா!'

இதனைக் கேட்ட திருமாறன் தலை கவிழ்ந்தான். அவனுடைய முகம் கருத்தது. விரக்தியோடு பேசினான்:

'புரிகிறது, சீவல்லபரே! தாங்கள் சொல்லுவது என்ன என்பது எனக்கு நன்கு புரிகிறது. தமிழனை நம்பக்கூடாது, சமயம் வந்தால் எதிரிகளின் பக்கம் சேர்ந்துவிடுவான் என்னு ஐயப்படுகிறீர்கள். என்ன இருந்தாலும் நான் வேற்று நாட்டான்தானே!'

திருமாறனின் பேச்சில் சூடு இருந்தது. இத்தகைய ஒரு விவாதத்தை மன்னன் விரும்பவில்லை. நல்ல நேரத்தில் ஒரு புது

பிரச்சினை முளைப்பதைத் தடுக்க விரும்பினான். இரத்த வலிவுள்ள வீரர்களுக்குள் மோதல் எழுவது இயல்பே. ஆனால் அவையெல்லாம் இப்பொழுது தேவைதானா? மன்னன் இருவரையும் பார்த்துப் பேசினான்:

'சீவல்லபா, திருமாறா! உங்களை எனக்குத் தெரியாதா? இப்பொழுது தேவையற்ற வீண்பேச்சுக்கள் எதற்கு? நீங்கள் இருவரும் சூராதி சூரர்கள். நீங்கள் ஒன்று பட்டால் எதையும் சாதிக்கும் ஆற்றல் மிக்கவர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களுக்குள் சண்டை சச்சரவு வரவே கூடாது. என்ன சீவல்லபா?'

'ஆகட்டும், மாமா'

'திருமாறா, உன்னை எனக்குத் தெரியாதா? உன்னை அயலான் என்று நான் கருதுவேனா? உண்மையில் சீவல்லபனை என்னுடன் சேர்த்து வைத்தவன் நீதானே! நீ இல்லாவிட்டால் இந்த இனிய சூழ்நிலை உருவாகி இராது என்பதை நான் அறிவேன். இங்கு இருக்கும் அமைச்சர்களுக்கெல்லாம் மூளை மழுங்கிவிட்டது. தோல்வி உணர்ச்சி ஏற்பட்டு தன்னம்பிக்கை இழந்து விட்டார்கள். எனவே எனக்குத் தக்க ஆலோசனைகள் வழங்க நீ உடன் இருக்க வேண்டும். சீவல்லபன் முதலில் அவன் விரும்பியபடியே படைகளை நடத்திக் கொண்டு போகட்டும். பின்னர் தேவையானால் உன்னைப் படைகளுடன் தமிழகத்திற்கு அனுப்புகிறேன். வருந்த வேண்டாம். நான் சொல்லுவது புரிகிறதா?' அறிவுரை வழங்கிய அரசனுக்கு திருமாறன் பதில் கூறினான்:

'அரசே, தங்களது ஆணையை மீறுவேனா? மகிழ்ச்சி. இந்த எளியவனை தங்களுடனேயே இருந்து ஆலோசனை கூறும்படிப் பணித்தது நான் செய்த பாக்கியம்.'

மன நிம்மதி பெற்ற மன்னன் சீவல்லபனைப் பார்த்துக் கூறினான்:

'சீவல்லபா, உன் விருப்பப்படியே படைகளுடன் தமிழகத்திற்குச் சென்று வா. தனித்தே நீ செல்லலாம். தமிழ் மண்ணை நீ வென்ற செய்தியை கேட்க ஆவலோடு நானும், திருமாறனும் காத்திருப்போம். செய்தி கிடைத்தவுடன் நானே நேராக திருமாறனுடன் தமிழகத்திற்கு வருகிறேன். ஈழப் பேரரசின் பிரதிநிதியாக நீ தமிழகத்தை ஆளுவாய். நானே உனக்கு முடி சூட்டி வைப்பேன். உனக்கு அமைச்சர் தலைவனாகவும்,

சேனாபதியாகவும் திருமாறன் நியமிக்கப்படுவான். நாளையே நீ போருக்குப் புறப்படலாம். மகிழ்ச்சிதானே?'

'மெத்த மகிழ்ச்சி மாமா!'

'திருமாறா நீ எதுவும் சொல்லவில்லையே?'

'இதனினும் எனக்குப் பெரும் பாக்கியம் உண்டா அரசே! பாண்டி நாட்டில் ஓர் எளிய போர்வீரனாக இருந்தவன் நான். எனக்கு இத்தகைய பெரும் பதவிகள் கிடைக்கும் என்று நான் கனவிலும் கருதியதில்லை. தங்களுடைய பெருந்தன்மைக்கு ஏழேழு பிறவிகளிலும் கடமைப்பட்டிருக்கிறேன்.'

'சீவல்லபா, நாளை காலை போருக்குப் புறப்பட வேண்டும். நீ இப்பொழுது சென்று நன்கு ஓய்வெடுத்துக் கொள்.' மன்னனைப் பார்த்து சீவல்லபன் கூறினான்:

'மன்னரே, என்னை நம்பி மாபெரும் பொறுப்பினை ஒப்படைத்தற்காக என்னுடைய நன்றியை எப்படி வெளியிடுவது என்றே தெரியவில்லை. மேலும் ஒரு விண்ணப்பம்.'

'இன்னும் கோரிக்கை இருக்கிறதா? சொல் சீவல்லபா!'

'மாமா, போரின் முறைகளைப் பற்றித் தங்களுடன் கலந்து பேசி தங்கள் அனுமதி பெற வேண்டுமென்பது என்னுடைய ஆவல். பாண்டி நாட்டைப் பற்றிக் கவலையே வேண்டாம். அதன் இன்றைய மன்னன் குலசேகரனை ஒரு நொடியில் வென்று விடுவேன். ஆனால் சோழர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. அவர்களை நேருக்கு நேர் நின்று மோதுவது மிகவும் கடினம்.'

'ஏன்?'

'அவர்கள் குள்ள நரிகள். தந்திரத்தால்தான் அவர்களை முறியடிக்க முடியும்.'

'அப்படியே செய். உன்னுடைய விருப்பப்படியே செய். உனக்குத்தான் முழு உரிமையும் முன்பே கொடுத்து விட்டேனே!'

'மாமா, அதில் தாங்கள் செய்ய வேண்டியதுதான் அதிகம் இருக்கிறது.'

'என்ன அது?'

'ஈழநாட்டு சேனாபதிகளைக் கொன்று ஈழத்தை அவமதித்த சோழ நாட்டையும் பாண்டி நாட்டையும் பழி வாங்க

ஈழப்படைகள் தமிழகத்தை நோக்கிப் புறப்படுகிறது என தாங்கள் முதலில் போர் பிரகடனம் செய்ய வேண்டும். நாளை அரசவையைக் கூட்டி அதில் முறைப்படி பிரகடனம் செய்ய வேண்டும். படைகளுக்கு நான்தான் தலைமை தாங்கிச் செல்லுவேன் என்பதையும் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும். ஈழப் படைகள் பாண்டி நாட்டு தொண்டி துறைமுகத்தில் போய் இறங்கும். அங்கிருந்து போர் துவங்கும் என்றும் தாங்கள் அவையில் அறிவிக்க வேண்டும்.'

'அப்படியே செய்வோம். பின்னர்?'

'ஆனால் அப்படி நடக்காது. படைகள் குறிப்பிட்ட நாளில் இங்கிருந்து புறப்படாது. தொண்டி துறை முகத்திலும் இறங்காது. என்னுடைய தலைமையிலும் அவை செல்லாது. இரண்டு நாட்கள் கழித்து நமது படைகளை தனித் தனியாக படகுகளில் அனுப்புவேன். அவை மரக்கலங்களில் செல்லாது. தொண்டி துறைமுகத்திற்குப் பதிலாக கொற்கையில் போய் இறங்கும். கடைசி படையில் நான் புறப்படுவேன்.'

'சீவல்லபரே தாங்கள் கூறியது எனக்கு ஒன்றும் புரிய வில்லை. தொண்டியில் படைகள் இறங்கும் என அறிவித்து விட்டு கொற்கையில் இறங்குவதா? படைத் தலைவன் கடைசி படையில் செல்லுவதா? ஈழத்திற்கு எண்ணற்ற மரக்கலங்கள் இருக்க, நமது படைகளை படகுகளில் அனுப்புவதா? எல்லாம் புதுமையாக இருக்கிறது!' வினாக்களை தொடுத்தான் வியப்பு மேலிட்ட திருமாறன். மன்னனும் இந்த வினாக்களுக்கு விடையை எதிர்பார்த்து சீவல்லபனை உற்று நோக்கினான். சீவல்லபன் கூறினான்:

'ஆம், திருமாறா! அதுதான் சோழர்களிடம் நான் கற்ற நயவஞ்சகப் பாடம். முள்ளை முள்ளால் எடுக்கும் பாடம். நாளைக்கு நாம் செய்யப் போகும் போர்ப் பிரகடனம் சோழ மன்னனுக்கும், அவனுடைய கைப்பாவையான மதுரை மன்னன் குலசேகரனுக்கும் எட்டும். சோழர்கள் என்னுடைய ஆற்றலை அறிந்தவர்கள். என் தலைமையில் ஈழப்படைகள் வருகிறது என்றாலேயே கதி கலங்குவார்கள். நம்மை எதிர்த்து போரிட தங்கள் முழு பலத்தையும் திரட்டிக் கொண்டு வந்து தொண்டியில் காத்திருப்பார்கள். ஆனால் நம்முடைய படைகள் எதிர்ப்பவர்கள்

இன்றி கொற்கையில் இறங்கும். விளம்பரமற்று படகுகளில் செல்லும். நமது படைகள் கொற்கையை அடுத்துள்ள தமிழகத்துக் காடுகளில் புகுந்து மறைந்து கொள்ளும். தொண்டியில் தங்கி ஈழத்தை நோக்கிக் கண் வைத்து காத்து நிற்கும் தமிழ் நாட்டவர் படைகளை கொற்கையில் இறங்கும் நம்முடைய படைகள் பின்புறம் போய் வளைத்துக் கொள்ளும். இதனை சோழர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள். நம்முடைய படைகள் பின்புறமிருந்து அவர்களைத் தாக்கும். எதிர்பாரத இந்தத் தாக்குதலால் தமிழ் படைகள் நிலை குலையும். அவற்றை எளிதில் நம்முடைய படைகள் அழித்து நிர்மூலமாக்கிவிடும்.'

இதனைக் கேட்ட ஈழ மன்னரும், திருமாறனும் வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்டார்கள். மன்னனுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஓடிச்சென்று சீவல்லபனை அணைத்துக் கொண்டான். மகிழ்வு பொங்கக் கூறினான்:

'மிகச் சிறந்த திட்டம், சீவல்லபா! அபாரம்!'
திருமாறன் ஆனந்தக் களிப்போடு பேசினான்:

'சீவல்லபரே, இந்த திட்டம் நிகரற்றது. இத்தனை நாட்கள் பழகியும் தங்களுடைய அறிவின் ஆற்றலை இன்றுதான் கண்டேன்.' சீவல்லபனுடைய கரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு திருமாறன் மகிழ்ச்சியால் துள்ளினான். அப்பொழுது ஈழ வேந்தன் கேட்டான்:

'சீவல்லபா, ஒன்றுதான் எனக்குப் புரியவில்லை. படைத் தலைவனான நீ ஏன் கடைசிப் படையில் செல்ல வேண்டும்? படைத்தலைவன்தானே முன்னணியில் இருக்க வேண்டும்?'

'அரசே, இங்குதான் தந்திரமே இருக்கிறது. படைத் தலைவனான நான் ஈழத்தில் இருக்கும் வரை ஈழப்படைகள் புறப்படவில்லை என் எதிர்கள் கருதுவார்கள். அசட்டையாக இருப்பார்கள். நாமும் படகுகளைக் கூட்டம் கூட்டமாக அனுப்ப மாட்டோம். இரவு நேரங்களில் தனித்தனியாக படகுகளில் படைகளை அனுப்புவோம். அவற்றில் செல்லும் வீரர்கள் கொற்கையில் இறங்கியவுடன் படகுகளை நீரில் விட்டு விடுவார்கள். அங்கிருந்து தனித்தனியாகப் பிரிந்து விடுவார்கள். கொற்கையை ஒட்டியுள்ள காடுகளில் பதுங்கிக் கொள்ளுவார்கள். நான் கடைசிப் படகில் சென்றவுடன் எல்லோரும் என்னுடன்

சேர்ந்து விடுவார்கள் நான் அவர்களை நடத்திச் சென்று தொண்டியில் காத்திருக்கும் தமிழ்ப் படைகளை வளைத்துக் கொள்ளுவேன். எமனுலகிற்கு எல்லோரையும் அனுப்பி விடுவேன்.'

'சீவல்லபா, உண்மையிலேயே நீ ஈழம் ஈன்றெடுத்த ஈடு இணையற்ற இராசதந்திரி. உன்னுடைய அறிவை மெச்சுகிறேன். ஆற்றலைப் போற்றுகிறேன். இத்தகைய அறிவும் ஆற்றலும் மிக்க சூராதி சூரனை நான் இதுவரை பகைத்துக் கொண்டு இருந்தேனே, அது எத்தகைய பெரிய தவறு! இப்பொழுதுதான் நான் உண்மையை உணருகிறேன். உன்னை மட்டும் நான் பகைக்காது இருப்பின் இன்று ஈழத்திற்கு இந்த இழி நிலை வந்திருக்காது. ஈழத்தின் சிறப்புமிக்க இரு சேனாபதிகளும் பலியாகி இருக்க மாட்டார்கள்.

'ஆம், அரசே சீவல்லபருடன் எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டுதான். ஆனால் இவர் இத்தகைய ஆற்றல் மிக்க இராசதந்திரி என்பதை இன்றுதான் அறிந்து கொண்டேன். அரசே, சென்ற காலத்தை நினைத்து என்ன பயன்? நடக்க வேண்டியதில் நாட்டம் செலுத்துவோம். சீவல்லபரை வாழ்த்தி வழியனுப்புங்கள் நான் படைகளோடு தமிழகம் செல்ல வேண்டிய தேவையே வராது. சீவல்லபர் அத்தகைய நிலையை ஏற்படுத்த மாட்டார் என்ன சீவல்லபரே? தங்களுடைய முடிசூட்டு விழாவிற்காவது நான் மன்னருடன் வரலாமா? தங்களுக்கு ஆட்சேபனை இல்லையே? அப்பொழுதும் என்னை தமிழன் என்று ஒதுக்குவீர்களா?' திருமாறன் கூற்றைக் கேட்டு, மன்னனும், சீவல்லபனும் பலமாக நகைத்தார்கள். திருமாறனும் அவர்களோடு சேர்ந்து கொண்டு நகைத்தான்.

'திருமாறா, ஐயப்படவேண்டாம், சீவல்லபன் தமிழ் நாட்டு மன்னன். அவனுடைய அமைச்சர் தலைவன் நீதான் என முன்பே அறிவித்து விட்டேனே! அமைச்சர் தலைவர் இல்லாமல் மன்னனா?' சிரித்துக் கொண்டே மன்னன் கூறினான். மற்ற இருவரும் மேலும் சிரித்தார்கள்.

சீவல்லபனுடைய திட்டப்படியே அனைத்தும் நன்கு நடைபெற்றன. படைகள் படகுகளில் தனித் தனியாக இரவு நேரங்களில் புறப்பட்டன. அவை கொற்கைக்குச் சென்று இறங்கின. இது வரலாற்று நிகழ்ச்சி.

கடைசியாக புறப்பட்ட மூன்று படகுகளுடன் படைத் தலைவன் சீவல்லபன் புறப்பட்டான். மன்னனும், திருமாறனும் தோணித்துறைக்குச் சென்று சீவல்லபனை வாழ்த்தி வழியனுப்பினார்கள்.

சீவல்லபன் தமிழக மண்ணில் அடியெடுத்து வைத்தான். ஆனால் கொற்கையில் தயார் நிலையில் இருந்த சோழப்படைகள் அவனை எதிர்த்து நின்றன.

சீவல்லபன் கொற்கையில் இறங்குவது சோழப் படைகளுக்கு எப்படித் தெரிந்தது? முன்னரே இத்தகவல் தெரியுமா? ஈழ அரசினுடைய இரகசிய திட்டம் எதிரிக்கு எப்படித் தெரிந்தது? அதற்கு முன்பே சென்று கொற்கையில் இறங்கிய ஈழப் படைகள் என்னவாயின? அவை காடுகளில் மறைந்து இருக்கின்றனவா, அல்லது அப்படைகள் போரிட்டு மடிந்தனவா? அப்படைகளுடன் அனுப்பப்பட்ட போர் ஆயுதங்கள், தளவாடங்கள் முதலியன என்னவாயின?

மூன்று படகுகளுடன் சென்ற சீவல்லபனால் பெரும் சோழர்படையை எதிர்த்து நிற்க இயலவில்லை. போரிட்டுப் பார்த்தான். ஆனால் வெகு எளிதில் தோற்று விட்டான்.

சீவல்லபன் மீண்டும் கைது செய்யப்பட்டு பழையாறைக்கு கொண்டு போகப்பட்டான். மீண்டும் அதே பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டான். வீரதீரத்துடன் போருக்குப் புறப்பட்ட அவன் கதை வெகு எளிதில் முடிவுற்றது, அரண்மனையில் வீரம் பேசிவிட்டு போர்க்களத்தில் தடுமாறிய உத்திர குமாரனுடைய கதையைப் போல!

4

தென்திசை இலங்கை நோக்கி

அன்றைய பகலின் மூன்றாவது யாமம் முடிவுற்றது. நான்காவது யாமம் தொடங்கியது. ஆனால் அதற்குள்ளேயே திடீரென உலகம் இருண்டுவிட்டது. பகலவன் இருக்கும் இடமே தெரியவில்லை. இந்த திடீர் இயற்கை மாற்றத்தைக் கண்டு அஞ்சிய பறவைகள் அங்குமிங்குமாக அலைந்து கொண்டு ஓடின. அப்பொழுது அங்கு எழுந்த நானாவிதமான ஒலிகள் சூழ்நிலையின் அச்சத்தை அதிகமாக்கின.

விண்ணெங்கும் கரிய மேகங்கள் கவ்விக் கொண்டன. இடியும், மின்னலும் விண்ணில் கண்ணாமூச்சி விளையாடின.

ஒரு கொடிய போர் நிகழும்போது வியூகம் கலைந்த பின்னர் தாறுமாறாக ஓடும் யானைகளைப் போல மேகங்கள் அங்குமிங்குமாக ஓடின. மேகங்கள் ஒன்றையொன்று மோதி அடித்துக் கொண்டன. தீப்பொறி பறந்தது. தோல்வியுற்ற சேனையில் அழுகையைப் போல மழை கொட்டியது.

இயற்கை செய்த இந்த பயங்கரமான செயல்களைப் பொருட்படுத்தாது சேதுக்கரையில் கடல்நீர் பரப்பைத் தொட்டவாறு ஒருவன் மணல்மீது நின்று கொண்டிருந்தான். அவனுக்கு அருகில் ஒரு படகு இருந்தது. அவனை மழையும், மின்னலும், இடியும் அசைத்துப் பார்க்க இயலவில்லை. அவன் அவைகளைப் பொருட்படுத்தவேயில்லை. அவன் மனநிலை எங்கோ இருந்தது. வேகமாகவீசிய காற்று அவனை பிடித்துக் கீழே தள்ள முயன்று பார்த்தது. ஆனால் அவன் சமாளித்துக் கொண்டு உறுதியாக கால் ஊன்றி நின்றான்.

கடலின் சீற்றம் அதிகமாக இருந்தது. அலைகள் மலைபோல ஓங்கி உயர்ந்து வந்து கரையை தாக்கின அவனையும் தாக்கின. அவன் அசையவில்லை. அலைகளையும் இரைச்சலையும் கவனிக்காது அவன் பார்வையை எங்கோ தொலைவில் செலுத்தியவாறு நின்றிருந்தான். யாரையோ

எதிர்பார்த்து ஏக்கத்துடன் தவித்துக் கொண்டு இருந்தான். நேரம் ஆக ஆக அவனுடைய ஆவல் அதிகமாயிற்று. ஏக்கம் பெருகியது. ஆனால் அவன் எதிர்பார்த்தது வீணாகவில்லை.

கொட்டும் மழையையும், ஓங்கி வீசும் காற்றையும் பொருட்படுத்தாது ஒரு உயர்சாதிப் புரவி அவனை நோக்கிப் பறந்து வந்தது. அவன் அதனை ஆவலோடு பார்த்தான். படகை விட்டுத் தள்ளி சில அடிகள் எடுத்து வைத்து முன்னேறி வந்தான். குதிரையில் வந்தவரை வரவேற்க!

அங்குக் காத்திருந்தவனை நெருங்க, நெருங்க குதிரையின் வேகம் குறைந்தது. நின்றிருந்தவனுக்கு அருகில் வந்தவுடன் புரவியின் மேல் வீற்றிருந்தவன் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து அதனை நிறுத்தினான். புரவியின்மீது இருவர் வீற்றிருந்தார்கள். ஒருவன் வாலிப வயதுடையவன். மற்றவன் சுமார் பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க இளைஞன்.

அவர்களைக் கண்டவுடன் படகோட்டி திடுக்கிட்டான். அவன் எதிர்ப்பார்த்தவர் வேறு ஒருவர். ஆனால் வந்தது? அவனுக்குப் பழக்கமில்லாத இருவர் இதில் ஏதோ சூது இருக்கிறது என்ற சிந்தனையோடு வந்தவர்களுடைய முகத்தை உற்றுப் பார்த்தான்.

வாலிபனைப் போல் தோற்றமளித்தவன் முதலில் குதிரையிலிருந்து கீழே குதித்தான். அவன் அலட்சியமாக கீழே குதித்ததிலிருந்து குதிரை ஏற்றத்தில் பயிற்சி பெற்ற பெரும் வீரனாக அவன் இருக்கலாம் என படகோட்டி நினைத்தான். முதலில் கீழே குதித்த வாலிபன் உடன் வந்த இளைஞனை இறக்கி விட்டான். இருவரும் படகோட்டியை நெருங்கி வந்தார்கள். படகோட்டி செய்வதறியாது கவலையோடு அவர்களைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

'என்ன காடுவெட்டி! ஆந்தை போல விழிக்கிறாய்!' இந்தக் குரலைக் கேட்டவுடன் காடுவெட்டியின் முகத்தில் வியப்பின் அறிகுறி தென்பட்டது. அவன் அசந்து விட்டான். இக்குரல் அவனுடைய அச்சத்தைப் போக்கிவிட்டது. அவன் சிரித்துக் கொண்டே கூறினான்:

'தாயே, தவறு, தவறு; மன்னிக்கவேண்டும். இந்த உடையில் தாங்கள் அசல் ஆண் பிள்ளையைப் போலவே இருக்கிறீர்கள்! என்னால்கூட தங்களை அடையாளம் கண்டு கொள்ள இயலவில்லை. தங்களுடைய குரலைக் கேட்ட பின்னர்தான் புரிந்து கொண்டேன்.'

'காடுவெட்டி, என்ன செய்வது ஒவ்வொரு நாளும் இப்படி எத்தனையோ வேடங்கள் போட வேண்டி இருக்கிறது அப்பா! ஆனால் காரியம் என்றுதான் முழுவதுமாகக் கை கூடுமோ!'

'தாயே, தாங்கள் படும் துயர் என்னுடைய மனதை வாட்டுகிறது. இதற்கெல்லாம் விடிவு ஏற்படுமா? இந்தத் துன்பம் தங்களுக்கு தேவைதானா?'

'காடுவெட்டி, என்ன சொன்னாய்? இதற்கெல்லாம் மனம் கலங்கலாமா? இலட்சியம் இல்லாதவர்களுக்குத்தான் உடலின் உபாதைகள் துன்பமாகத் தென்படும். உள்ளத்தில் குறிக்கோள் இருப்பின் உடல் படும்பாடுகள் எல்லாம் துன்பமேயல்ல!'

'ஆகட்டும், தாயே, மற்றொன்றைத் தங்களை முன்பே கேட்க மறந்து விட்டேன். தங்களோடு புதிதாக வந்திருக்கும் இந்தச் சிறுவன் யார் என நான் அறியலாமா?'

காடுவெட்டி இந்த வினா தொடுத்தபோது மகீரதன் சற்று தள்ளி நின்றுகொண்டு ஆர்ப்பரிக்கும் கடலை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்தான் கடல் இரைச்சலில் இவர்களுடைய பேச்சு அவன் செவியில் விழுந்திருக்காது. கோதை மறுமொழி கூறினாள்:

'ஓ! அதனை நான் சொல்லவில்லையா? இவன்தான் மகீதரன். காஞ்சியில் இரு பிள்ளைகள் வளர்ந்தார்களே, அவர்களில் சிறியவன் இவன். இன்னும் சொல்லப் போனால்.....

'சொல்லுங்கள் தாயே.'

'உன்னால் உயிர்ப் பிச்சை பெற்றவன் இவன்.'

'என்ன சொல்லுகிறீர்கள், விளங்கவில்லையே!'

'விளங்கவில்லையா? அன்றொரு நாள் திரும்புறம்பியம் பள்ளிப்படைக்கு அருகில் சோழ அரசகுமார்கள் என்று தவறாகக் கருதி இரு பிள்ளைகளைக் கொல்ல வாளை வீசினேனே, அன்று நீ தடுத்தாயல்லவா?'

'ஆம்.'

'அந்த இரு பிள்ளைகளில் இவன் இளையவன்.'

'தாயே, இவன் யாராக இருந்தால் என்ன? இந்த துன்ப மயமான பயணத்திற்கு இவன் தேவைதானா? இவனை உடன் அழைத்துச் செல்வதால் ஏதாவது பயன் உண்டு எனக் கருதுகிறீர்களா?'

'நிச்சயமாக இந்தச் சிறு பிள்ளையால் யாதொரு பயனும் இருக்காது, தொல்லைதான்மிகும். ஆனால் நான் என்ன

செய்வேன் காடுவெட்டி? நானும் மனிதப் பிறவிதான்! மனிதப் பிறவிக்கு வேண்டிய ஆறு அறிவுகளும் பெற்று சீரும் சிறப்புமாக வளர்ந்தவள்தான் நான். அதிலும் பெண் பிறவி எடுத்தவள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவை முழுக்க முழுக்கப் பெற்றிருந்தேன். அது மட்டுமல்ல. என்னுடைய இதயத்தில் உயிர்களின்பால் இரக்கம் குடி கொண்டிருந்தது. ஆனால் தெரிந்தோ, தெரியாமலோ ஒரு குறிக்கோளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். அந்த இலட்சிய தேவதையின் காலடியிலே எனக்கு இருந்த பெண்மை குணங்களைப் `பலியிட்டு விட்டேன். மனிதப் பிறவிக்கு இருக்கும் இயற்கையான உணர்வுகளையும் கொன்று புதைத்து விட்டேன். இன்று நான் பட்ட மரம். ஆனால் ஒரே ஒரு நெறியை மட்டும் இன்று வரை காத்து வந்துவிட்டேன். அதுதான் என்னுடைய கற்பு. அதனை நான் காப்பாற்றக் காரணம் கற்பு இழப்பதால் தீமை அல்லது பாவம் என்பதால் அல்ல. என்னுடைய இளமையையும், கன்னித் தன்மையையும் பயன் படுத்தி காரியம் சாதிக்கும் வாய்ப்பை மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதினால்தான்.'

'தாயே என்ன சொல்லுகிறீர்கள்?'

'நான் அரசகுமாரியாகப் பிறவி எடுத்தேன். திருக்கோவிலூர் மன்னருடைய ஏக புதல்வியாக எல்லாப் பேறுகளும் பெற்று சீறும் சிறப்புமாக வளர்ந்தேன். இன்று....

'இன்று?'

'அந்த பழைய திருக்கோவிலூர் மன்னன் மகள் என்றோ செத்து விட்டாள் அவளுடைய உள்ளத்தில் நீக்கமற குடிகொண்டிருந்த தாய், தந்தை பாசம், ஈகை, இரக்கம் முதலிய பண்புகளெல்லாம் அவளுடைய உள்ளச் சிதையில் வெந்து சாம்பலாகிவிட்டன. இன்று உன் எதிரில் சுற்றிக் கொண்டு இருப்பது ஒரு காலத்தில் உயிரோடு இருந்த கோதை என்ற பெண்ணினுடைய ஆவி. அதுதான் இன்று பேய் உருவில் அலைந்து கொண்டிருக்கிறது. பேய்களுக்கு அச்சம் இல்லை. இந்தப் புயல், மழை, இடி, போன்ற எதுவுமே பேயை அசைக்க இயலாது.'

'இதுதான் கொள்கைப் பற்று கொண்டவர்களுக்கு வேண்டிய குணமென்று தாங்கள் முன்பே சொல்லியிருக்கிறீர்கள் தாயே!'

'ஆனால் காடுவெட்டி, என்னிடம் இன்னும் குறை இருக்கிறது; நான் இன்றும் பரிபூரணமாகப் பேயாக மாறவில்லையே என ஏங்கித் தவிக்கிறேன்.'

'ஏன்?'

'உற்றார், பெற்றோர் அனைவரையும் உதறித் தள்ளி விட்டேன். ஊரும், பேரும் இல்லாது ஒழித்து விட்டேன். இன்பம், துன்பம், இரண்டிற்கும் பாகுபாடு காண இயலாத மேலான நிலைக்கு மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டு விட்டேன். ஆனால் காடுவெட்டி, ஒரு பலவீனம் என்னுடைய உள்ளத்தில் இருந்து கொண்டு என்னை ஆட்டுவிக்கிறதே! அதனை அழிக்க இயலாமல் அல்லும், பகலும் அவதிப்பட்டுக்கொண்டு துடிக்கிறேன் அப்பா.'

'தாயே, தங்களுக்கும் பலவீனமா!'

'ஆம். ஏக்கம்.'

'புரியவில்லை தாயே.'

'சொல்லுகிறேன் காடுவெட்டி. யாருடனாவது மனம் திறந்து பேச வெகு காலமாகத் துடித்துக் கொண்டு இருந்தேன். இன்று அந்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. மனம் திறந்து சொன்னால்தான் என் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் புண் சற்று ஆறிய மாதிரி தற்காலிகமாகவேனும் மனநிறைவு பெறுவேன், சொல்லுகிறேன். நான் தேர்ந்தெடுத்த பாதையில் தோல்வி கண்டிருக்கலாம். ஆனால் நாராயண மூர்த்தி எனக்கு நிர்ணயித்தப் பாதையில் குறி தவறாமல் செல்லுவதாகவே நம்பினேன் ஆனால் ஒரே ஒருமுறை என்னுடைய அறிவின்மை காரணமாகப் பெரும் பிழை செய்துவிட்டேன். அதனுடைய விளைவை அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன்.'

'அது என்ன தாயே?'

'குளத்தூரில் இரு பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந் தார்கள். அவர்கள்தான் சோழகுமாரர்கள் என தவறாக்க் கருதிவிட்டேன். சிந்தையாலும் ஒரு தீங்கும் அறியாத, உலகம் புரியாத அப்பிள்ளைகளைக் கடத்திக் கொண்டு வந்துவிட்டேன். என்னுடைய எதிரிகள் அவர்கள் அல்ல. பின்னர்தான் உண்மையான எதிரிகள் யார் என அறிந்து கொண்டேன். அவர்களைக் கடத்தினேன். பழி தீர்த்துக் கொண்டேன். ஆனால் ஒரு பாவமும் அறியாத அப்பாவிப் பிள்ளைகளைக் குளத்தூரில் இருந்து கடத்திக் கொண்டு வந்துவிட்டேன். அவர்களைக் கொலை செய்யவும் வாளை ஓங்கிய பாவி நான். ஆனால் நாராயண மூர்த்தி உன்னுடைய உருவத்தில் வந்து அந்த பெரும் பாவத்திலிருந்து என்னைக் காப்பாற்றி விட்டார்!'

'இதெல்லாம் பழைய கதை.'

'ஆம். பழைய கதைதான். எங்கோ தங்களுடைய பெற்றோர்களுடன் சீரும் சிறப்புமாக வளரவேண்டிய அந்தச் செல்வங்கள் இன்று என்னிடம் சீரழிந்து கொண்டு இருக்கிறார்கள்.

'ஆம், உண்மை. அதனால்தான் அவர்களை மீண்டும் கொண்டுபோய் குளத்தூரில் விட்டுவிடலாம் என்று நானே தங்களிடம் பலமுறை சொல்லிவிட்டேன்!'

'ஆம் காடுவெட்டி, இந்த கருத்தினை நீ சொல்லி இருக்கிறாய். நியாயமான கருத்து இது. அதன்படி பிள்ளைகளைக் கொண்டு போய் உரியவர்களிடம் சேர்ப்பித்துவிடப் பல நாட்கள் நினைத்தேன்.'

'ஏன் கொண்டுபோய் விடவில்லை தாயே? இன்னும் காலம் தாழ்ந்து விடவில்லை.'

'இங்குதான் என்னுடைய மனதில் பலவீனம் புகுந்து விட்டது. அவர்கள் யாரோ, நான் யாரோ! இன்னும் சொல்லப் போனால் நான் அவர்களைக் கடத்தி வந்த கடத்தல்காரி. அவர்களைக் கொல்ல வாளை ஓங்கிய கொலைகாரி!'

'மேலே சொல்லுங்கள் அம்மா.'

'காடுவெட்டி, கடவுளுடைய சோதனையைப் பார் அத்தகையவர்களின் மீது இந்தப் பேதை உள்ளத்தில் எப்படியோ அன்பு புகுந்துவிட்டது. பாலைவனத்தில் ஒரு சோலை! அவர்கள் மீது என் உள்ளத்தில் ஏதோ ஒருவித பாசம் ஏற்பட்டுவிட்டது. அந்தப் பாசம் அல்லும் பகலும் என்னைக் கசக்கிப் பிழிகிறது. எனக்குப் பிளளையைப் பெற்ற அனுபவம் இல்லை. ஆனால் நானே என்னுடைய வயிற்றிலிருந்து அவர்களை ஈன்றெடுத்திருப்பினும்கூட அவர்களின் மீது இந்த அளவிற்கு அன்பு செலுத்தி இருப்பேனா என ஐயப்படுகிறேன். ஆம், பெற்ற தாயும்கூட இவர்களின் மீது நான் செலுத்தும் அன்பிற்கு நிகரான அன்பைச் செலுத்த மாட்டாள். அதனால் அவர்களைப் பிரிய என்னால் இயலவில்லை. அவர்களை உற்றவர்களிடம் சேர்ப்பிக்க மனம் ஒப்பவில்லை. அவர்களுடைய மலர்வதனம் காணாவிட்டால் என்னுடைய உடலில் உயிர் தங்காது காடுவெட்டி. ஆனால் இருவரில் ஒருவன் என்னைப் பிரிந்துவிட்டான். அவன் எங்கிருந்தாலும் தேடிக் கண்டு பிடித்து விடுவேன். இங்கு இருக்கிறானே, இவன். என்னைப் பிரிந்தால் உயிர் வாழ மாட்டேன் எனக் கூறிவிட்டான். அந்த வார்த்தை

என்னுடைய இதயத்தில் ஈட்டி எனப் பாய்ந்து விட்டது. எனவே நடப்பது நடக்கட்டும் என்று நாராயணன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு இவனையும் உடன் அழைத்துக் கொண்டு வந்து விட்டேன்.'

'இவன் தங்கள் உடன் இருந்தால் தாங்கள் எடுத்துக் கொண்டுள்ள வேலைகளுக்கு இடையூறாக இருப்பான்.'

'ஆம், அது எனக்கும் தெரியும். ஆனால் நான் என்ன செய்யட்டும்? என் முன்னர் இருப்பது மூன்று இலட்சியங்கள். முதலாவது சோழக் குழந்தைகளைக் கொன்று தீர்ப்பது. அது நிறைவேறிவிட்டது. இரண்டாவது இராசாதிராசனுக்கு முடிவு கட்டுவது. மூன்றாவது திருமலையில் உள்ள திருமாலைத் தில்லையில் பிரதிஷ்டை செய்வது. அடுத்தது...

'மேலும் புதிய இலட்சியம் இருக்கிறதா?'

'ஆம், மேலும் புதிய இலட்சியம் ஒன்று முளைத்து விட்டது. இந்தப் பிள்ளைகளுக்கு நான் ஏற்படுத்திய தீமைக்கு பிராயச்சித்தம் செய்ய வேண்டும். இவர்களைச் சீரும், சிறப்புமாக வளர்த்து ஆளாக்கி உன்னத நிலைக்கு கொண்டு வருவதுதான் அது. இவர்களை ஒரு கனமும் பிரியாமல் உண்மைத் தாயாக இவர்களோடு வாழ்வதுதான் அது. ஆனால் மற்ற இலட்சியங்கள் அனைத்தும் கைகூடிய பின்னர்தான் அது முடியும். காடுவெட்டி அதோ, மகீதரன் வந்துவிட்டான். நம்முடைய பேச்சுகள் எதுவும் அவனுக்குத் தெரிய வேண்டாம். வா, பயணத்தைத் தொடரலாம்.'

அவள் தன்னை நெருங்கி வந்த மகீதரன் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டாள். காடுவெட்டி படகை இழுத்து நீரில் மிதக்கவிட்டான். கோதை மகீதரனை மெதுவாக படகில் ஏற்றிவிட்டு தானும் ஏறி அமர்ந்தாள். அவனை அணைத்தவாறு அமர்ந்தாள். காடு வெட்டியைப் பார்த்து புறப்படலாமெனக் கூறினாள்.

'அம்மா, இடியும், மின்னலும் வர வர அதிகமாகிறதே யொழிய, குறைவதாகத் தெரியவில்லையே! சூறைக் காற்று வந்தாலும் வியப்பில்லை. மழைத்தூறலும் அதிகமாகி வருகிறது. சற்று நேரம் பொறுத்துப் புறப்படலாமா?' இவ் வார்த்தைகள் கோதையின் மன உறுதியை மாற்றவில்லை காடுவெட்டியை நோக்கி அவள் கூறினாள்:

'நிறுத்தாதே, புறப்படு. துடுப்பைப் போடு. நம்மைப் போன்றவருக்கு ஏற்ற நேரம் இதுவே.'

தான் தடுப்பதால் பயன் இல்லை என்பதை அறிந்த அவன் வேகமாக துடுப்பைப் போட்டான். மழைத் தூறல் அதிகமாகியது. அவன் கொடுத்த தாழம் குடையை கோதை மகீதரனுக்குப் பிடித்தாள்.

காடுவெட்டி உண்மையிலேயே துடுப்பைப் போடத் திணறினான். அவன் கைதேர்ந்த அனுபவமுள்ள படகோட்டி தான். ஆயினும் அவனால் இயலவில்லை. அன்று கண்டது போன்ற சீற்றமான அலைகளை அவன் வாழ்நாளில் என்றுமே கண்டதில்லை. அலைகள் வெண்நுரைகளை வாரி வாரி இறைத்தன. அவை உண்டாக்கிய பேரிரைச்சல்கள் அவர்களுடைய காதுகளை அதிரடித்தன. குன்றுகளை யொத்த மேகங்கள் விண்ணில் ஆங்காங்கு ஓடி அலைத்தன. அவை இடியிடித்துப் பேசின. மின்னிச் சிரித்தன. அதனால் உற்சாகம் பெற்ற கடல் கூத்தாடியது.

மெதுவாக படகு திணறிக் கொண்டு ஊர்ந்தது. கோதை மேல் திசையை நோக்கினாள் மேகங்கள் சிறிது நேரம் முன்னதாகத் தென்பட்டதைவிட மேலும் பிரம்மாண்டமாக வளர்ந்து விட்டன. வானம் முழுவதையும் கவ்விக் கொண்டு விட்டன. இருள் அதிகமாகிக் கொண்டு வந்தது. கரிய மேகங்கள் கடல் நீரில் கரிய மை போல தென்பட்டது. கடல் எங்கே முடிகிறது, வானம் எங்கே தொடங்குகிறது என்ரு கண்டு பிடிக்க முடியவில்லை. கடலும் வானமும் பாகுபாடற்று கரிய இருள்போல தோற்றமளித்தன. காற்றின் வேகத்தால் படகு சுழன்று, சுழன்று வந்தது. ஆயினும் சமாளித்துக் கொண்டு உயிரைக் கையில் பிடித்தவாறு படகோட்டி முன்னேறினான். அச்சமே அறியாத கோதைகூட அச்சத்துடன் மகீதரனை அணைத்துப் பிடித்துக் கொண்டு நடுங்கினாள்.

எப்படியோ அன்று அவர்கள் தப்பியது வியப்பே! அன்றைய இரவின் கடைசியாமம் முடியும் நேரத்தில் ஈழத்தின் கரையை ஏறி விட்டார்கள்.

எழில்மிக்க ஈழத்தின் பொலிவை அன்று இரவு பெய்த மழை மேலும் எழிலாக்கியது. இரவெல்லாம் மழையில் துடித்த பறவைகள் மழை நின்றதன்றி விடியும் நேரமும் வரவே விடுதலை விடுதலை என பாடிப் பறந்தன. கொடிகளிலும் செடிகளிலும் இருந்த மொட்டுகள் வெடித்து மலர்ந்தன. எங்கிருந்தோ வந்த வண்டுகள் இதழ் விரித்த மலர்களைச் சுற்றிக் கொண்டு இன்னிசை பாடின. கீழ்வானம் பொன் வண்ணமாகத் தோற்றமளித்தது.

கோதை காடுவெட்டிக்கு ஏதோ புதிய பொறுப்பை ஒப்படைத்தாள். அவன் அங்கேயே நின்று கொண்டான்.

அவன் மகீதரனுடன் அந்நேரத்திலே ஈழ பூமியில் நடந்தாள். எழில்மிக்க ஈழத்தைப் பார்த்த அவள் பரவசப்பட்டு விட்டாள். பூமாதேவியின் கழுத்தில் அணிந்த நித்திலப் பதக்கம் போல அமைந்திருக்கும் தீவு அது. ஆகவே கவிஞர்கள் அதனை நித்திலத்தீவு எனப்பாடியிருக்கிறார்கள். நாற்புறமும் கடல் சூழ,, நடுவே மலைச்சிகரங்கள் சூழ பசுமைகொழிக்கும் நாடு அது. காடெல்லாம் பசுமை மலையெல்லாம் பசுமை, காணும் வயலெல்லாம் பசுமை, எங்கும் தென்னை, வாழை, கமுகு! அந்நாட்டில் கருமையே காண முடியாது, விண்ணில் தவழும் கருத்து மேகங்களைத் தவிர!

ஈழத்தில் பௌத்தமும், சைவமும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறன. வைணவம் இல்லை. நடந்து கொண்டே இதனை நினைத்த கோதை வேதனைப்பட்டாள் அங்கு வைணவம் தழைக்க வழி காண அவளுடைய உள்ளம் துடித்தது. அந்த நாராயணனே அங்கு போக மறுத்து விட்டார் என்றால் பேதைப் பெண்ணான அவளால் இயலுமா?

ஆம், ஈழத்தில் இராம இராவண யுத்தம் முடிவுற்றது. இராகவன் ஈழத்தில் சிறைப்பட்டிருந்த சீதாபிராட்டியாரை மீட்டுக் கொண்டு வெற்றிகரமாக அயோத்திக்கு வந்தான். முடிசூட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

ஈழவேந்தனான வீடணன்மீது அன்புபொழிய, அவன் செய்த உதவிக்கு என்ன வரம் வேண்டும் கேள் எனக் கேட்டான் இராகவன்.

வீடணன் இராமபிரான் வணங்கி வந்த அரங்கநாதனையே தனக்கு அளிக்குமாறு வேண்டினான். வள்ளல் இராகவன் இல்லை என்னாது அரங்கனை அளித்தான். ஆனால் ஒரு நிபந்தனை. அரங்கனை வழியில் எங்கும் கீழே வைக்கக் கூடாது என்பதுதான் இராகவன் இட்ட ஆணை.

வீடணன் அரங்கனைச் சுமந்தவாறு அயோத்தியை விட்டு ஈழத்திற்கு சென்று கொண்டு இருந்தான். வழியிலே வளமைமிக்க பொன்னி வளநாட்டைக் கண்டான். காவிரியில் நீராட வேண்டுமென்ற ஆவல் மேலிட்டது. ஆனால் அரங்கனைக் கீழே வைக்கக் கூடாதே! ஒருபக்கம் நீராட வேண்டும் என்ற ஆசை, மறுபக்கம் அரங்கனைக் கீழே வைக்க இயலாத நிலை. என்ன செய்வது என அவன் ஏங்கித் தவித்தான்.

அப்பொழுது வினாயகப் பெருமான் ஒரு அந்தணச் சிறுவனாக உருக்கொண்டு அவன் எதிரே வந்தார். அவரைப் பார்த்த வீடணன் சிறிது நேரம் அரங்கனை அமர்த்தியுள்ள விமானத்தை வைத்திருந்து உதவுமாறு வேண்டினான். அந்தணச் சிறுவன் இசைந்தான். வீடணன் அவனிடம் விமானத்தைக் கொடுத்தான் அதனைக் கீழே வைக்கக் கூடாது என்றும் வேண்டினான்.

அந்தணச் சிறுவன் வேடத்தில் இருந்த பிள்ளையாரும் ஒரு நிபந்தனை விதித்தார். 'அதிக நேரம் என்னால் விமானத்தைத் தாங்க இயலாது. நேரமாகிவிட்டால் உங்களை மூன்று முறை கூப்பிடுவேன். அதற்குள் தாங்கள் வந்து விமானத்தை வாங்கிக் கொள்ள வேண்டும். இன்றேல், கீழே வைத்துவிடுவேன்.' இவ்வாறு பிள்ளையார் கூறினார் வீடணன் நிபந்தனையை ஏற்றுக் கொண்டு அந்தணச் சிறுவனிடம் விமானத்தைக் கொடுத்து விட்டுக் குளிக்கச் சென்றான்.

பொன்னிப் பிரவாகத்தால் கவரப்பட்ட வீடணன் அவசர அவசரமாக குளித்தான். ஆனால் அவன் கரையேறுவதற்குள் மூன்று முறை அந்தணச் சிறுவன் கூப்பிட்டு விட்டான் வீடணனுடைய காதில் அக்குரல் விழவில்லை. பிள்ளையார் விமானத்தைக் கீழே வைத்து விட்டார். அரங்கன் அங்கேயே குடிகொண்டுவிட்டான். ஏமாற்றம் அடைந்த வீடணன் வெறுங் கையோடு இலங்கை சென்றடைந்தான். அன்று பிள்ளையார் செய்த சதியின் விளைவுதான் இன்று ஈழத்தில் வைணவம் இல்லாது போய் விட்டது என கோதை பிள்ளையாரை மனதில் நிந்தித்தாள்.

ஆயினும் அரங்கன் வீடணன் வேண்டியபடி,

'குடதிசை முடியை வைத்து

குணதிசை பாதம் நீட்டி

வடதிசை பின்பு காட்டி

தென்திசை இலங்கை நோக்கி'

திருவரங்கத்தில் பள்ளி கொண்டான்! இலங்கையைப் பார்த்துக் கொண்டே இருப்பேன் என ஒப்புக் கொண்டார். அன்று அவர் சொல்லியவாறே இன்றும் ஈழத்தைப் பார்த்தபடியே இருக்கிறார்! அப்பொழுது கோதை அப்பாடலை முணுமுணுத்தாள்.

கோதை பிள்ளையோடு நடந்து கொண்டு இருந்தாள். எதிரில் பாலவி நதி தென்பட்டது. அதில் காலை நேரத்தில் பிள்ளையோடு அகம் குளிரக் குளித்தாள்.

இராமேசுவரத்திற்கு அக்கரையில் உள்ள ஈழத்தைச் சேர்ந்த மாதோட்டம் கவின்மிகு நகராகும். பசுமையான மரங்கள், அடர்ந்த சோலைகள், மா, பலா, தென்னை, கமுகு, கதலி, கரும்பு முதலியன சூழ்ந்த எழிலார்ந்த இன்ப பூமி அது.

'வண்டு பண் செயும் மாமலர்ப்பொழில்
மஞ்சை நடமிடு மாதோட்டம்'

என மாதோட்டத்தின் எழிலைப் பற்றி திருஞானசம்பந்தர் பாடிப் பரவசப்பட்டுள்ளார். ஆண் உடையில் மகீதரனுடன் இந்த எழில் களஞ்சியங்களையெல்லாம் கண்டுகளித்துக் கொண்டே கோதை மாதோட்டத்தைக் கடந்தாள்.

ஈழம் மேடு பள்ளங்கள் நிறைந்த நாடு. நிலத்தில் ஆங்காங்கு மேடு பள்ளங்கள் மாறி மாறி வந்தன. மனிதவாழ்வில் மேடும், பள்ளமும் இயல்பு என்று போதிப்பது போல அவை இருந்தன, உதார குணத்தவரின் உத்தம உள்ளம் போன்ற உயர்ந்த மேடுகள், உலோபிகளின் உலுத்த உள்ளம் போன்ற தாழ்ந்த பள்ளங்கள்.

யானைகளைக்கூட இடுப்பளவிற்கு இறக்கும் சேறு உள்ள சகதி நிலங்களும், மனிதனின் இடுப்பளவு வளர்ந்த நெற்பயிரைக் கொண்ட வளமான நிலங்களும் அடுத்தடுத்து இருந்தன.

அவைகளைத் தொடர்ந்து வானோங்கிய தேக்கு மரங்களும், கந்தங்கமிழ் சந்தன மரங்களும் கம்பீரமாக ஓங்கி வளர்ந்து விண்ணை இடித்துக் கொண்டு நின்றன.

அடுத்து ஒரு சிறு நதி தென்பட்டது. அது துன்பத்தால் அல்லல்படுபவரின் கண்களைப் போல எப்பொழுதும் நீரைப் பெருக்கியபடி இருந்தது. அடுத்து பல ஏரிகள், குளங்கள். அவை கணவனால் தள்ளி வைக்கப்பட்ட பெண்ணின் கண்களைப் போல எப்பொழுதும் நீர் நிரம்பி இருந்தன.

எங்கு நோக்கினும் பூமாதேவியான புது மணப்பெண் தன்னுடைய காதலனான பகலவனுடைய உக்கிரமான கண்பார்வையில் தன்னுடைய உடம்பு தீயாமல் மரம், செடி, கொடி, புதர் முதலியவைகளால் தன்னுடைய மேனியை மூடி மறைத்துக் கொண்டிருந்தாள். அதில் மலைகளைப் போன்ற யானைகளும், குன்றுகளைப் போன்ற காட்டெருமைகளும் பயமின்றித் திரிந்தன. சிறு யானைக் குட்டிகள் துதிக்கைளை வீசி நடந்தன. வாலிபப் பெண்கள் தங்களுடைய அழகான கரங்களை வீசி பந்தடிப்பது போல!

பல்வேறு மிருகங்கள் காட்டில் பல பயங்கரனமான ஒலிகளை எழுப்பின. கோதை இவற்றையெல்லாம் பார்த்தபடியே மகீதரன் தோள் மீது கையைப் போட்டுக்கொண்டு பாதையில் நடந்து கொண்டிருந்தாள். மகீதரன் மிகவும் சோர்ந்துவிட்டான். அவனுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே அவள் நடந்தாள்.

அவர்கள் நடந்த பாதை அனுராதபுரம் சிம்மகிரி இராசபாட்டையில் போய்ச் சேர்ந்தது. வழியில் தம்பள்ளை தென்பட்டது. அங்கு ஓரிடத்தில் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டார்கள். இத்தனைத் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு பிள்ளையோடு நடக்க வேண்டி வந்ததற்காக கோதை பெருமூச்சுவிட்டாள். ஏக்கத்தோடு அவன் முகத்தைப் பார்த்தாள். அவளுடைய கண்கள் குளமாயின.

மீண்டும் நடந்தார்கள். தம்பள்ளையிலிருந்து பார்க்கும் போதே ஒருகாத தூரத்தில் இருந்த வானமளாவிய சிம்மகிரி தென்பட்டது. மகீதரன் அதனைப் பார்த்து பிரமிப்பு அடைந்தான். அதனைப்பற்றி அன்னையிடம் கேட்டான். அவனுடைய சோர்வைப் போக்கவும், அவனுடைய உடல் துன்பத்தைப் பற்றிய அவனுடைய நினைவை வேறுபக்கம் திருப்பவும் கோதை முயன்றாள். எனவே பிள்ளையைப் பார்த்துக் கூறினாள்:

'மகீதரா, இப்பொழுது உனக்கு நல்லதொரு இராசா கதையைச் சொல்லுகிறேன். கேட்டுக் கொண்டே என்னுடன் வேகமாக நடக்க வேண்டும். என்ன?'

'கதையா, இராசா கதையா? சொல்லுங்கள் அம்மா!' உற்சாகத்தோடு அவன் கேட்டான். கோதை தொடர்ந்தாள்:

'மகீதரா, கதை சொல்லுகிறேன். கவனமாகக் கேட்க வேண்டும்.'

'ஆகட்டும், அம்மா.'

'சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தாதுசேனன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் இந்த இலங்கைத் தீவை ஆண்டு கொண்டு இருந்தான். அவனுக்கு இரண்டு மனைவிகள் அவர்களில் ஒருவள் பட்டத்து இராணி. அவளுடைய வயிற்றில் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள்.

'எங்களைப் போல!' என இடைமறித்துக் கேட்டான் மகீதரன்.

'அதுதான் இல்லை. அவர்களில் ஒருவன் ஆண்பிள்ளை. மற்றது பெண்பிள்ளை. ஆண்பிள்ளையின் பெயர் மொக்கல்லானன் என்பது!'

'என்ன மொக்கல்லானனா?'

'ஆம், அது ஈழநாட்டுப்பெயர், நமக்கு வேடிக்கை யாகத்தான் இருக்கும் மகீதரா.'

'சரியம்மா, கதையை மேலே சொல்லுங்கள்.'

'அந்த அரசனுக்கு இரண்டு பெண்டாட்டிகள் என்று சொன்னேனல்லவா, அந்த மற்றொரு மனைவிக்கும் ஒரு பையன் பிறந்தான். அவனுடைய பெயர் காசிபன்.'

'உம்.'

ஈழ மன்னனான தாதுசேனன் பட்டத்து அரசியின் வயிற்றில் பிறந்த தன்னுடைய மகளைத் தன்னுடைய சொந்த தங்கை மகனுக்கு திருமணம் செய்து கொடுத்தான் மாப்பிள்ளையைத் தன்னுடைய படைத் தலைவனாக ஆக்கிக் கொண்டான்.

'படைத்தலைவனுடைய இல்லற வாழ்க்கை இனிமை யானதாக அமையவில்லை. மனைவியை, அதாவது மன்னன் மகளை மிகவும் கொடுமைப்படுத்தினான். இதற்கு அவனுடைய தாயாரும் உடந்தையாக இருந்தாள். இது மன்னனுடைய செவிக்கு எட்டியது. அவன் மிகவும் கோபம் கொண்டான். தன்னுடைய தங்கையான படைத் தலைவனுடைய அன்னையை உயிரோடு நெருப்பில் போட்டுக் கொன்றான்.'

'அய்யோ, பாவம்.'

'இந்தச் செய்தியை படைத்தலைவன் அறிந்து மிகவும் சீற்றங்கொண்டான். மன்னனைப் பழிக்குப்பழி வாங்க முடிவு செய்தான். காசிபனை அணுகினான். அவனுக்கு அரசை அபகரித்துக் கொடுப்பதாக வாக்களித்து அவனுடைய மனதைக் கலைத்தான். படைத்தலைவனும், காசிபனும் திட்டமிட்டு சதி செய்து மன்னனைச் சிறையில் அடைத்துவிட்டார்கள். காசிபன் தானே அரசன் எனப் பிரகடனப்படுத்திக்கொண்டு சிம்மாதனம் ஏறினான்.'

'அப்புறம் அந்த மொக்கல்லானன்?'

'அவன் இனி ஈழத்தில் இருப்பது உயிருக்கு ஆபத்து என உணர்ந்தான். நம்முடைய தமிழ்நாட்டிற்கு ஓட்டம் பிடித்தான்.

'சிறையில் மன்னனுக்கு உணவே கொடுக்கவில்லை. எனவே அவன் பட்டினியால் பரிதவித்து உயிர்விட்டான்.

'ஆனால் தவறான வழியில் அரசு பெற்ற காசிபனுக்கு மன நிம்மதி ஏற்படவில்லை. என்றைக்காவது பட்டத்திற்குரிய மொக்கல்லானன் வருவான். தன்னைப் பழி வாங்குவான் என்று அவன் அஞ்சி நடுங்கினான். அதனால் அதோ நம் முன்னே ஓங்கி உயர்ந்து தெரிகிறதே, அந்த சிக்கிரி குன்றின் மேல் பலமான கோட்டையைக் காட்டினான். அதற்குள் அரண்மனையை அமைத்தான். அதில் குடியேறிவிட்டான்.'

'கெட்டிக்காரன் அவன்! எதிரி மலையேறிவந்து சண்டை போட முடியாது என்றுதானே?'

'ஆம், பதினெட்டு ஆண்டுகள் ஓடி மறைந்தன. தமிழ் நாட்டில் வாழ்ந்த மொக்கல்லானன் தமிழ் மன்னன் ஒருவனுடைய நட்பை நாடினான். அவனுடைய உதவியுடன் படை பலம் பெற்றான். மீண்டும் இலங்கைக்கு படைகளோடு வந்தான். சிக்கிரிக் கோட்டையை முற்றுகையிட்டான். எத்தனை நாட்கள் காசிபன் உள்ளே பதுங்கி இருக்க முடியும்? தேவையான உணவு வேண்டாமா? வெளியே வந்தான். தன்னுடைய படைகளுக்கு தலைமை தாங்கி காசிபன் போரிட்டான்.

'போர் பயங்கரமாகவே நடைபெற்றது. காசிபன் ஏறிக் கொண்டு வந்த யானை ஓரிடத்தில் சேற்றுக்குட்டையில் இறங்கப் போனது. அவன் அதனைத் தடுத்து யானையை வேறுவழியில் நடத்தினான். இதனைப் பின்னால் வந்த வீரர்கள் பார்த்தார்கள். மன்னன் போரில் தோற்று விட்டதால்தான் அஞ்சி திரும்பி விட்டார் என அவர்கள் நினைத்தார்கள். எனவே அவர்கள் உயிரைக் காத்துக் கொள்ள ஓடத் தலைப்பட்டார்கள். மொக்கல் லானன் வெகு எளிதில் வெற்றி பெற்று விட்டான். காசிபன் தற்கொலை செய்து கொண்டான்.'

'வேண்டும்! பெற்ற தகப்பனாருக்கு உணவு கொடுக்காது சிறையில் தள்ளிக் கொன்றவனுக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்.'

'மகீதரா! அந்த மன்னன் காசிபன் மண்ணாகி விட்டான். ஆனால் அவன் பதினெட்டு ஆண்டுகள் சிக்கரிக் கோட்டையில்

வாழ்ந்தபோது பல ஓவியங்களை அங்கு எழுதினான். அவை இன்று உலக வரலாற்றில் இடம் பெற்று விட்டன.'

'அப்படியா? என்ன அவை தற்பொழுதும் இருக்கிறதா?'

'ஆம் குழந்தாய்! இன்றும் அந்த ஓவியங்கள் புத்தம் புதிதாகத் தோற்றமளிக்கின்றன.'

'ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியதா?'

'ஆம், அதுதான் கலையின் சிறப்பு.'

'அம்மா, அவைகளைப் பார்க்க எனக்கு மிகவும் ஆசையாக இருக்கிறது.'

'குழந்தாய் மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவனும் நிச்சயம் பார்க்க வேண்டிய ஓவியங்கள் அவை. ஒரு நாளைக்கு உனக்கும் காட்டுகிறேன்.'

'உம், இப்பொழுதே பார்க்க வேண்டும்.'

'மகீதரா, இன்று அவைகளைப் பார்க்க முடியாது.'

'உம். இன்றே எனக்குக் காட்ட வேண்டும். எனக்கு ஆசையாக இருக்கிறது அம்மா!' மகீதரன் கோதை யினுடைய கரத்தைப் பிடித்துக் கொண்டு மலையை நோக்கி இழுக்கத் துவங்கினான். கோதை தொடர்ந்து பேசினாள்:

'மகீதரா, உன்னுடைய பிடிவாத புத்தி இன்னும் விட வில்லையே! இம்மலைமீது ஏறுவது விளையாட்டில்லை. சிம்மகிரியின் உயரம் எவ்வளவு தெரியுமா? அறுநூறு அடி.'

'இருக்கட்டுமே! ஏறுவோம், நான் தயார்.'

மகீதரன் மலையை நோக்கி வேகமாக நடக்கத் துவங்கினான். கோதையால் அவனைத் தடுக்க இயல வில்லை. அவனோடு வேகமாக நடக்கவும் இயலவில்லை. அவனுடைய பிடிவாதத்திற்காக வருந்தியபடியே வேறு வழியின்றி அவனைத் தொடர்ந்து அவளும் நடந்தாள்.

5

சிம்மகிரி

பகல் பொழுதில்கூட சிம்மகிரி குளிருக்குப் பயந்து கொண்டு மேகம் என்னும் வென்போர்வையைப் போர்த்திக் கொண்டிருந்தது. செங்குத்தான அந்த மலைமீது கோதையும், மகீதரனும் ஏறிவிட்டார்கள். மகீதரனுடைய உற்சாகம் எல்லை கடந்து இருந்தது. அவனுடைய சோர்வெல்லாம் தொலைந்து விட்டது. அவனுடைய ஆனந்தத்தைக் கண்ட கோதையும் மகிழ்ச்சி அடைந்தாள்.

என்ன வியப்பு, அது பூவுலகா அல்லது விண்ணுலகா? அந்த மலையின் உச்சியில் இருக்கும் கோட்டையில் தென்பட்ட ஓவியங்களைக் கண்டு அவர்கள் பிரமிப்படைந்தார்கள். உலகம் வியக்கும் வண்ண ஓவியங்களைக் கண்டு களித்தார்கள். ஆம், சிம்மகிரி மலை சித்திர உலகின் சிறப்புச் சிகரம், எத்தனை, எத்தனை ஓவியங்கள், எத்தனை எத்தனை 'பா'வங்கள்! எண்ணிலா கனவு உலகக் கன்னியர் அங்கு கொலு வீற்றிருந்தார்கள்.

ஒரு எழிலார்ந்த கன்னி மயக்கும் விழிகளை வீசி வந்தவர்களை வரவேற்கிறாள். மற்றொருத்தி சற்றே பணிந்து, குனிந்து கரத்தில் வண்ண மலரேந்தி வரவேற்கிறாள். பணிப் பெண் ஒருத்தி வண்ண மலர்த் தட்டேந்தி பின்னே வர தலைவி எழிலார்ந்த மேனியுடன் ஓயிலார்ந்த நடை நடந்து முன்னே செல்கிறாள். அந்தத் தலைவியினுடைய கயல் விழிகளில் கவிதை மிதக்கிறது. தூய செம்பவளத்தையொத்த அவளுடைய கனி இதழ்களில் நிலவு பொழிகிறது.

மின்னல் கொடிகளைப் போல நிற்கும் பணிப் பெண்களின் மேனியழகே அழகு! ஓங்கி முன்னிற்கும் மார்பின் பொலிவு, நீண்ட மூக்கு, அகண்ட விழிகள் இன்னும் அழகுததும்பும் அலங்காரங்கள் எத்தனை எத்தனை! அத்தனைக் காவியங்களும் ஓவியத்தில் வடித்துக் காட்டப்பட்டுள்ளன.

கையில் மலரேந்தி மற்றொருத்தி வருகிறாள். அவளுடைய விரல்களே மலரின் இதழ்களாகத் தோற்றமளிக்கின்றன. மலர்ந்த

அந்த இதழ்கள் மலராத மலரையும் மலர வைப்பதுபோல உள்ளன. அவள் மலர் பிடித்திருக்கும் 'பா'வம் பார்க்கக் கண்கள் ஆயிரம் வேண்டும். தலையில் அணிந்திருக்கும் அணிகளின் அழகும், அவற்றின் அமைப்பும், கழுத்தணியில் காணும் கலை நயத்தின் சிறப்பும் கை வளையல்களின் எழிலுமாகச் சேர்ந்த அவளை நம்முடைய கண் முன்னே ஒரு யௌவன மோகினியாகக் கொண்டு வந்து நிறுத்துகின்றன. அந்த மோகினிப் பெண் பாரிசாத மலரினுடைய அடித்தண்டு நிறத்தைப் பெற்றிருக்கிறாள். அவளுடைய கூந்தல் பளபளப்பான கருநிறம், அவள் ஆடையில் செந்தாமரை மலரின் நிறம். கையில் ஏந்திய மலரோ வெள்ளை வெளேரென்றிருக்கும் தும்பைப் பூவின் நிறம். எல்லாம் கண்ணுக்கினிய கண் கொள்ளா நிறங்கள். இன்னும் எத்தனை எத்தனையோ!

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட அந்த ஓவியங்களின் உயிர்க்களை சிறிதுகூட மாறவில்லை. வர்ணங்கள் மங்கவில்லை. இன்றுதான் எழுதப்பட்டது போல அவை புத்தம் புதிதாகக் காட்சியளிக்கின்றன.

காசிபன் சிங்க உருவில் இக்கோட்டையை அமைத்தான். எனவே அதற்கு சிம்மகிரி என்று பெயர் வந்தது. பிற்காலத்தில் அது திரிந்து சிக்கிரியாக மாறி விட்டது.

இவற்றையெல்லாம் கோதையும் மகீதரனும் கண்டு களித்தார்கள். ஆனந்தப் பரவசப்பட்டார்கள். நேரம் போனதே தெரியவில்லை. அவற்றைப் பிரிய மகீதரனுக்கு மனமேயில்லை. மீண்டும் ஒருநாள் வரலாம் என்று கூறி கோதை அவனை வற்புறத்தி அழைத்துக்கொண்டு கீழே இறங்கினாள்.

அவர்கள் பாதி மலை இறங்குவதற்குள் மாலை நேரம் வந்துவிட்டது. மாலை மங்கி, இருள் உலகைக் கவ்விக் கொண்டிருந்தது. வேகமாக இறங்கினார்கள். கால் வலி உயிரை வாங்கியது. இருவருமே துன்பப்பட்டுக் கொண்டு இறங்கினார்கள். வர வர இருள் அதிகமாகி வந்தது. எங்கே தங்குவது. இரவை எப்படி கழிப்பது என கோதை ஏக்கமுற்றாள். சிறு பிள்ளையின் பிடிவாதத்திற்கு பணிந்து அம்மலை ஏறியதற்காக அவள் தன்னையே நொந்து கொண்டாள். பாசத்தின் விளைவாக தவறு செய்து விட்டதாக வருத்தப்பட்டாள்.

எப்படியோ இரவில் இரண்டாவது யாமத்தில் சிம்மகிரியின் அடிவாரத்தை வந்து அடைந்தார்கள். அடுத்து என்ன செய்வது,

இருளில் எங்கு செல்வது எனத் தெரியாது கோதை வேதனையோடு காட்டை நோக்கினாள். எங்கும் நீக்கமற இருள் வியாபித்திருந்தது.

அப்பொழுது அங்கு நான்கு பேர் நடந்து வந்தார்கள். அவர்கள் ஏதோ பேசிக்கொண்டு அவளைக் கடந்து செல்வது போலத் தென்பட்டது. அந்த பயங்கர இருள் மண்டிக் கிடக்கும் காட்டில் மனித அரவத்தைக் கேட்ட கோதை சற்று ஆறுதல் அடைந்தாள். அவர்களை நெருங்கி 'ஐயா, ஐயா' என அழைத்தாள். அவர்கள் அவளை நெருங்கி வந்தார்கள். அவர்களைப் பார்த்து ஆண் வேடத்தில் இருந்த அவள் கேட்டாள்:

'ஐயா, நாங்கள் இன்றைய இரவைக் கழிக்க அண்மையில் ஏதாவது விடுதி இருக்கிறதா?'

'ஈழத்தில் தங்கும் விடுதிகளுக்கு என்ன குறை? நீங்கள் யார்? பார்த்தால் வெளிநாட்டுக்காரர்களைப் போல தென்படுகிறது?'

'ஆம், நாங்கள் தமிழ் நாட்டுக்காரர்கள். சிம்மகிரியை பார்க்க வந்தோம்.'

'நல்லது, வாருங்கள், நாங்களும் சிம்மகிரியைப் பார்த்து விட்டுத்தான் வருகிறோம். இரவைக் கழிக்க நாங்கள்கூட விடுதியை நாடித்தான் போய்க் கொண்டிருக்கிறோம். இல்லாவிட்டால் இந்த பயங்கரமான காட்டில் இரவை எப்படி கழிக்க முடியும்?'

'மெத்த நன்றி ஐயா, நாங்களும் உங்களுடன் வருகிறோம்.'

'வாருங்கள் போகலாம்.'

கோதையும், மகீதரனும் அந்த நால்வரைத் தொடர்ந்து நடந்துச் சென்றார்கள். காட்டின் கொடி வழியில் எல்லோரும் நடந்தார்கள். அந்த பயங்கர இருளில் எதற்கும் அஞ்சாத கோதையின் உள்ளம்கூட கதி கலங்கியது.

வழியில் ஒரு பெரிய மரம். அதில் குடி கொண்டிருந்த இலட்சோபலட்சம் மின்மினப் பூச்சிகள் ஒளியை உமிழ்ந்து கொண்டு இருந்தன. அந்த ஒளியில் ஓரளவு மரத்தின் அளவைக் காண முடிந்தது.

மரத்தின் அடியில் நடக்கும்போது அந்த நால்வரில் ஒருவன் வாயில் விரல்வைத்து பலமாக சீட்டியடித்தான். அடுத்த

நொடியில் அவர்கள் கோதையின்மீதும், மகீதரன் மீதும் பாய்ந்தார்கள். ஒவ்வொருவரையும் இருவர் வீதம் முதலில் இறுக்கிப் பிடித்துக் கொண்டார்கள். கோதையும் மகீதரனும் எதிர்பாராதது அது. அவர்கள் ஐயோ, ஐயோ என அலறித் துடித்தார்கள் கூக்குரலிட்டுக் கத்தினார்கள் கோதை செய்வதறியாது புலம்பித் துடித்தாள். அன்றுடன் தனக்கும், பிள்ளைக்கும் முடிவு வந்து விட்டதாகவும், தன்னுடைய இலட்சியக் கோட்டைகள் எல்லாம் இடிந்து பொடிப் பொடியாகி விட்டதாகவும் நினைத்து ஏங்கினாள்.

கொள்ளையர்கள் வேகமாக வேலை செய்தார்கள். கோதை 'கண்மணி மகீதரா, மகீதரா!' என்று கத்தினாள். கதறித் துடித்தாள். பிள்ளையும் 'அம்மா, அம்மா' எனக் கதறினான். வந்தவர்கள் அவர்களுடைய வாயில் துணியை அடைத்து விட்டார்கள். அவர்களுடைய இரு கரங்களையும் பின்னால் சேர்த்துக் கயிற்றினால் இறுக்கிக் கட்டிவிட்டார்கள்.

கொள்ளையர்கள் மரத்தின்கீழ் கட்டப்பட்டிருந்த புரவிகளை அவிழ்த்துக் கொண்டு வந்தார்கள். முதலில் மகீதரனை ஒரு புரவியின்மீது ஏற்றினார்கள். அவனை முன்னால் விட்டு ஒருவன் புரவியின் பின்னால் ஏறி அமர்ந்தான். மகீதரன் இளம் சிங்கம்தான் புரவியின்மீது ஏற மறுத்து எவ்வளவோ சமாளித்தான். எதிர்த்துப் பார்த்தான். அதற்குமேல் அவன் என்ன செய்ய இயலும்? மகீதரனை தாங்கி இருந்த புரவியை செலுத்தியவன் அதன் வயிற்றின்மீது ஓங்கி ஒரு உதை கொடுத்தான். அது அவ்விடத்தை விட்டு காற்றாகப் பறந்தது.

அதேபோல எஞ்சியிருந்தவர்கள் கோதையை மற்றொரு புரவியின் மீது ஏற்றினார்கள். அவளுக்கு பின்னால் ஒருவன் ஏறி அமர்ந்து கொண்டான். அவனும் குதிரையின் வயிற்றின்மீது ஓங்கி உதைத்தான். அது ஓடத் துவங்கியது. மற்ற இருவரும் தனித்தனி புரவிகளின் அமர்ந்தவாறு அவர்களைத் தொடர்ந்தார்கள். மகீதரனைக் கொண்டு சென்ற புரவி மற்ற புரவிகளை விட உயர்சாதி புரவி. அதிக வலிவுள்ளது. அது நாலுகால் பாய்ச்சலில் காற்றெனப் பறந்தது. கோதையைக் கொண்டு சென்ற புரவியால் அதற்கு ஈடுகொடுக்க இயலவில்லை. ஏனவே அது பின்னால் தங்கிவிட்டது. மற்ற இரு புரவிகளும் அதனைத் தொடர்ந்தே சென்றன. மேலும் கொள்ளையர்கள் மகீதரனை விட கோதையைக் கடத்திச் செல்வதில்தான் அதிக

ஆர்வம் காட்டினார்கள். வரவர மகீதரனுக்கும் கோதைக்கும் இடையே இருந்த இடைவெளி அதிகமாகிக் கொண்டே வந்தது.

அவர்கள் அடர்ந்த அந்த காட்டில் ஒரு கொடி வழியில் சென்றார்கள். குறுகிய அந்த வழியில் ஒரு புரவி செல்வதே கடினமாக இருந்தது. புரவியையும் அதில் சென்றவர்களையும் முட்புதர்களும், மரக்கிளைகளும் ஆங்காங்கு ஓரங்களில் தாக்கின. எனவே புரவியின் வேகத்தை பல இடங்களில் மட்டுப் படுத்தியவாறு செல்ல வேண்டி வந்தது.

மகீதரனை ஏற்றிச் சென்ற புரவி மேற்கு திக்கு நோக்கிச் சென்று கொண்டு இருந்தது. அதே வழியில் மேற்கிலிருந்து கிழக்கு திக்கு நோக்கி எதிரில் வேறொரு புரவி வந்துக்கொண்டிருந்தது. புதிதாக புரவியை செலுத்திக் கொண்டு வந்தவன் எதிரில் ஒரு புரவி வருவதைக் கண்டான். தன்னுடைய வேகத்தை மட்டுப் படுத்தினான். அப்பாதையில் எதிர் எதிராக வரும் இருபுரவிகளும் ஒன்றையொன்று கடந்து செல்வது கடினம். பக்கங்களில் முட்புதர்கள் சூழ்ந்திருந்தன. எனவே புதிதாக வந்தவன் மகீதரனைக் கடத்திச் சென்றவனுக்கு வழி விட்டு மெதுவாக ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்றான்.

ஆனால் மகீதரனை அழைத்துச் சென்றவன் எதிரில் ஒரு புரவி வருவதைக் கண்டு திடுக்கிட்டான். ஏனெனில், அவன் குற்றமுள்ளவன். ஒருவனுடைய கை, கால்களைக் கட்டி, வாயை அடைத்துவிட்டு கடத்திச் செல்லும் அவன் மற்றவர்களைப் பார்த்து அஞ்சுவது இயல்பே. எதிரில் எவனோ வந்து விட்டான். அவன் எத்தகையவனோ, யாரோ? பேசாமல் சென்றால் கவலையில்லை. ஒருவனைக் கடத்திக் கொண்டு செல்வதைப் பார்த்து அவன் போரிடவும் வரலாம். ஒருக்கால் அப்படி ஒரு போரை எதிர் நோக்கும் நிலை ஏற்பட்டால் அதற்கு தனக்கு உதவ பின்னால் தன்னுடைய ஆட்கள் வருகிறார்களா எனத் திரும்பிப் பார்த்தான். யாரும் வருவதாகக் காணோம். உடன் வந்த குதிரைகளின் குளம்பொலி கேட்கவில்லை. எனவே துணை வலியற்ற அந்நிலையில் வந்தவனுடன் எதிர்த்துப் போரிடுவதை விட தப்பி ஓடுவதே ஏற்றது. இந்த முடிவிற்கு அவன் வந்து விட்டான். வந்த வழியிலேயே திரும்பி ஓட குதிரையைத் திருப்பினான். முட்புதர்களில் குதிரையைத் திருப்புவது மிகவும் கடினமாக இருந்தது.

ஆனால் எதிரில் வந்த புதிய மனிதனுக்கு ஐயமேற்பட்டு விட்டது. தன்னைப் பார்த்து அவன் ஏன் புரவியைத் திருப்ப வேண்டும்? அது மட்டுமல்ல, அந்தக் குதிரையை ஓட்டிச் செல்பவனுக்கு முன்னர் ஏதோ ஒன்று உயரமாகத் தென்படுகிறதே அது என்ன? அது ஒரு மனிதனாகத்தான் இருக்க வேண்டும். அவன் தவறான முறையில் கடத்தி வரப்பட்டவனாக இருக்க வேண்டும். மேலும் புரவியில் முன்னால் அமர்ந்திருக்கும் அவன் கைகால்களை அடித்துக் கொண்டு திணறுவது போலத் தென்படுகிறதே! ஏதோ தவறு நடந்திருக்கிறது. இதனை விடக்கூடாது என்ற முடிவிற்கு அவன் வந்தான்.

திரும்பி ஓடும் குதிரையை வேகமாக துரத்திச் சென்றான். இரண்டு புரவிகளும் வெகுநேரம் ஓடின. ஒரு நிலையில் புதிதாக வந்தவன் முட்புதர்களில் பாய்ந்து முதலில் சென்ற குதிரையைக் கடந்தான். அதன் எதிரில் போய் நின்றான். அவனுடைய கரத்தில் கூரிய வாள் பளபளத்தது.

'யாரடா அவன்? அப்படியே நில். அசைந்தால் உன்னுடைய சிரம் தரையில் விழும்!' அவன் அதட்டினான். மகீரதனைக் கடத்திச் சென்றவனும் உறையில் தொங்கிய வாளைக் கரத்தில் எடுத்துக் கொண்டான். புதிதாக வந்தவனுடைய கழுத்தை நோக்கி வீசினான்.

புரவிகளில் அமர்ந்தவாறே இருவரும் போரிட்டார்கள். புரவிகள் சுற்றிச் சுற்றி வந்தன. முட்புதர்கள் மிதிபட்டன. புதிதாக வந்தவன் வெகு எளிதில் மகீரதனைக் கடத்தி வந்தவனுடைய மார்பில் கத்தியைப் பாய்ச்சி விட்டான். அவன் பரிதாபமாக அலறிக் கொண்டே புரவிமீது இருந்து தரையில் வீழ்ந்தான்.

அச்சமயம் கோதையைக் கடத்தில் வந்தவர்கள் அங்கு வந்து விட்டார்கள். நடக்கும் போரைக் கண்டார்கள். அந்நிலையில் அங்கிருப்பது தங்களுக்கும் ஆபத்தாக முடியலாம் எனக் கருதி குதிரைகளைத் திருப்பிக் கொண்டு வந்த வழியே ஓட்டம் பிடித்தார்கள். போரில் வேகமாக ஈடுபட்டிருந்தாலும், இருள் மண்டி இருந்ததாலும் புதிதாக வந்தவன் அவர்கள் வந்ததையும், திரும்பிச் சென்றதையும் காணவில்லை.

மகீதரனைக் கடத்தியவன் தரையில் வீழ்ந்தவுடன் புதிதாக வந்தவன் தன்னுடைய புரவியை விட்டுக் கீழே குதித்தான். மகீதரன் அமர்ந்திருந்த புரவியை நெருங்கினான் தன்னுடைய

கைகொடுத்து மகீதரனைக் கீழே இறக்கி விட்டான். பின்புறம் சேர்த்துக் கட்டப்பட்டிருந்த அவனுடைய கைகளை அவிழ்த்து விட்டான். வாயின்மீது கட்டப்பட்டிருந்த கட்டை அவிழ்த்தான். வாயில் திணிக்கப்பட்டிருந்த துணியை வெளியே எடுத்தான். பேசும் நிலையைப் பெற்றுவிட்ட மகீதரன் முதல் குரலாக பரபரப்போடு கூவினான்:

'ஐயா, ஐயா! என்னுடைய அம்மாவைக் காப்பாற்றுங்கள். அம்மாவைத் திருடர்கள் கடத்திக் கொண்டு போகிறார்கள். காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள்!' மகீதரன் தாயைக் கடத்திக் கொண்டு அதே வழியில்தான் பின்னால் கள்வர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்தான்.

அந்நிலையில் பேசிக் காலம் தாழ்த்துவது உற்றதல்ல. எனவே புதிதாக வந்தவன் அவசர அவசரமாக மகீதரனைத் தூக்கி தன்னுடைய புரவிமீது ஏற்றிக் கொண்டான். தானும் அதன்மீது ஒரே பாய்ச்சலில் பாய்ந்து ஏறி அமர்ந்து கொண்டான். கோதையைக் காப்பாற்ற வேகமாக புரவியைச் செலுத்தினான். நெடுந்தூரம் சென்று விட்டார்கள். சிம்மகிரி அடிவாரத்திற்கு வந்துவிட்டார்கள். யாருமே தென்படவில்லை. பல திக்குகளிலும் தேடினார்கள். யாதெரும் பயனும் ஏற்படவில்லை.

மகீதரன், 'அம்மா, அம்மா' என்று பரிதாபமாக அழ ஆரம்பித்து விட்டான். உடனிருந்தவன் அவனுடைய அன்னையை எப்படியும் மீட்டுக் கொடுப்பதாக உறுதி கூறினான். ஏதோதோ சமாதானம் சொல்லிப் பார்த்தான். ஆறுதல் கூறினான். ஆனால் அவனுடைய அழுகை ஓயவில்லை. அவனைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருந்தது.

கள்வர்கள் காட்டிற்குள் ஓடி எங்கோ பதுங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்றும், அடுத்த நாள் எப்படியும் அவனுடைய அன்னையை மீட்டுக் கொடுப்பதாகவும், வந்தவன் பலமுறை உறுதி கூறினான். மகீதரனுடைய அழுகை சற்று மட்டுப்பட்டது. பின்னர் வந்தவன் அவனைப் பார்த்துக் கூறினான்:

'தம்பி, என்னைக் கண்டு பயப்படாதே, நான் உனக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டேன்.'

'தங்களைப் பார்த்தவுடன் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது ஐயா.'

'நல்லது; அப்படியானால் நீ அழக்கூடாது. நான் கேட்பதற்கு மறுமொழி சொல்ல வேண்டும்.'

'உம்'

'நீங்கள் யார்? எப்படி இங்கு கள்வரிடம் மாட்டிக் கொண்டீர்கள்?'

'ஐயா, நாங்கள் தமிழ்நாட்டுக்காரர்கள் என்னுடைய அன்னையுடன் ஈழநாடு பார்க்க வந்தேன் சிம்மகிரியைப் பார்த்துவிட்டு கீழே இறங்கி வந்தபோது எங்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுவிட்டது.'

'கள்வர்கள் உங்களைத் துன்புறத்தினார்களா?'

'இல்லை. அந்தக் கோழைகள் பின்னாலிருந்து தாக்கினார்கள். எதிர்பாராத வகையில் நான்குபேர் சேர்ந்து கொண்டு பின்புறமிருந்து எங்களை வளைத்துப் பிடித்து விட்டார்கள். நேருக்கு நேராக வந்திருந்தால் அந்த நான்கு பேரையும் உயிரோடு விட்டிருக்கமாட்டேன்.'

'தம்பி, இந்த வயதில் உன் உள்ளத்தில் குடிகொண்டு இருக்கும் வீர உணர்வைப் பாராட்டுகிறேன். விட்டுத் தள்ளு, நாளைக் காலை அவர்களை ஒரு கை பார்த்து விடுகிறேன். நல்ல பாடம் போதித்துக் காட்டுகிறேன். உன்னுடைய பெயரென்ன? உன்னுடைய பெற்றோர்கள் யார்? தமிழ்நாட்டில் நீங்கள் எந்த ஊர்? சொல்லத் தடையில்லையே?'

'ஐயா, இவைகளைச் சொல்லுவதில் எனக்கு என்ன தடை? என் பெயர் மகீதரன். என்னுடைய அப்பாவின் பெயர் நாதமுனி பட்டர் அம்மா சுமத்திரை, எங்களுடைய ஊர் காஞ்சி, அம்மாவுடன் இந்த நாட்டைப் பார்க்கவந்தேன்.'

இவைதான் மகீதரன் அறிந்தவை. கோதை தன்னுடைய பெயர் சுமித்திரை என்றே சொல்லிக் கொண்டு வந்தாள். மகீதரனுக்கும் அப்பெயரையே சொல்லி வைத்தாள். மிகவும் நெருக்கமானவர்களைத் தவிர, மற்ற அனைவரும் அவளை சுமத்திரை என்றுதான் அறிவார்கள் அதேபோல நாதமுனிபட்டர்தான் தன்னுடைய பிதா என்று பிள்ளைகளை நம்பச் செய்தாள். கோதை ஈழத்திற்கு வந்ததற்கு முக்கியமான காரணம் உண்டு. ஆனால் அந்த நாட்டைப் பார்க்க வந்ததாக மட்டும் மகீதரனிடம் சொல்லி வைத்தாள்.

தலையில் பெரிய முண்டாசு கட்டியிருந்த அந்தப் புதிய மனிதன் வெகுவிரையில் மகீதரனுடன் நன்கு பழகிவிட்டான்.

அவனை மகீதரனுக்கு மிகவும் பிடித்து விட்டது. அவனுக்காக புதிய வீரன் மிகவும் மனம் இரங்கினான். கடத்தப்பட்ட அவனுடைய அன்னையை எப்படியும் மீட்டுக் கொடுப்பதாகக் கூறினான்.

இருவரும் புரவியில் மெதுவாக போய்க் கொண்டு இருந்தார்கள். சூரியோதய வேளையில் அனுராதபுரத்தை நெருங்கினார்கள்.

அனுராதபுரம் சாலையில் இடிந்து சிதைந்திருக்கும் புத்த விஹாரங்களை மகீதரன் பார்த்தான். அவை அவனுக்கு வியப்பு அளித்தன. உலகிலேயே மிகப் பெரியதான, வயதான போதி மரத்தைக் கண்டு தன்னை மறந்தான். அவன் வாழ்நாளில் அத்தகைய மரத்தைக் கண்டதேயில்லை. அதனைக் கண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சியில் அன்னையையும் மறந்தான். மாபெரும் ஞானிகளுக்கெல்லாம் வியப்புக் குறியாக நிற்கும்அம்மரத்தைக் கண்டதும் அந்த சிறியவனுக்கு வியப்பு ஏற்பட்டதில் விந்தையேதும் இல்லை. அந்த மரத்தைப் பற்றி புதிய நண்பரிடம் ஆவலோடு கேட்டான்.

கபிலவாஸ்துவைச் சேர்ந்த சித்தார்த்தன் உலக இன்னல்களைக் கண்டான். அவைகளைப் போக்க உறுதி பூண்டான். அதற்கான மார்க்கத்தைக் காண புத்த கயாவில் ஓர் போதி மரத்தடியில் தவமிருந்தான். அவனுடைய புனிதமான தவம் வெற்றி பெற்றது. அவனுடைய உள்ளத்தில் ஞானம் உதித்தது. சித்தார்த்தன் புத்தரானார். அதனால் அம்மரம் உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது.

மகதநாட்டு மன்னன் அசோகச் சக்ரவர்த்தி அந்த மரத்திலிருந்து ஒரு கிளையை எடுத்தான். அதனைத் தன்னுடைய அருமைப் புதல்வி சங்கமித்திரை மூலமாக ஈழத்திற்கு அனுப்பினான் அந்த அரச மரக்கிளை தங்கத் தட்டில் வைக்கப்பட்டது. பொன்தேரில் வைத்து கொண்டு போகப்பட்டது.

அன்றைய ஈழமன்னன் தேவனாம் பிரியதீஸன் சங்கமித்திரையிடமிருந்து பயபக்தியுடன் அக்கிளையைப் பெற்றான். ஈழமண்ணில் நட்டான். அதுதான் ஓங்கிப் பரவி வளர்ந்து இன்று உலகையே கவரும் உன்னத மரமாகத் தோற்றமளிக்கிறது. இந்த விவரத்தைத் தன்னுடன் வந்தவன் சொல்லக் கேட்ட மகீதரன் வியப்பின் எல்லையை அடைந்தான்.

அவர்கள் போய்க் கொண்டே இருந்தார்கள். வழியில் ஒரு இடிந்த புத்த விஹாரம் தென்பட்டது. எழில்மிக்க அந்த விஹாரம் சிறுவனை மிகவும் கவர்ந்து விட்டது. ஆனால் அது ஒரு பக்கம் இடிந்து விட்டிருந்தது. அதனைக் கண்டவுடன் அச்சிறுவனுடைய முகம் சுருங்கியது.

'அடடா, என்ன அழகான புத்தர் கோயில். எந்தப் பாவியோ இடித்து விட்டான்!' அங்கலாய்த்தான் மகீதரன். அதனைத் தொடர்ந்து அப்புதிய வீரன் கூறினான்:

'மகீதரா! தப்பு. தப்பு. அப்படிச் சொல்லாதே. இந்த புத்த விஹாரத்தை இடித்தவர் பாவியல்ல. மிகப் பெரிய புனித ஆத்மா.'

'என்ன ஐயா இது! கோயிலை இடித்தவர் புனித ஆத்மாவா? ஈழநாட்டில் கோயில்களை இடிப்பது புனிதச் செயலா? எங்களுடைய சோழ நாட்டில் கோயில்களைக் கட்டுவதுதான் புண்ணியத்திலும் புண்ணியம்.'

'அப்பா, ஈழநாட்டிலும் கோயில்களைக் கட்டுவது புண்ணியச் செயல்தான். ஆனால் இது ஒரு புதுமையான வரலாறு. இந்த புத்தர் கோயிலைக் கட்டியவரைவிட இடித்தவர்தான் அதிகமாகப் போற்றப்படுகிறார். இதனை இடித்தவர் ஈழநாட்டு வரலாற்றில் சிறப்பான இடம் பெற்று விட்ட மாமன்னர்!'

'ஐயா, தாங்கள் கூறுவது மிகவும் விந்தையான இருக்கிறது. விளங்கவில்லை.'

சொல்கிறேன் மகீதரா! எல்லாள சோழன் என்று ஒரு சிறந்த மன்னர் இருந்தார் அவர் முன்னொரு காலத்தில் அனுராதபுரத்தைச் சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தார். எல்லா மதங்களையும் சமநோக்குடன் பார்த்த சத்தியசீலர் அவர். எல்லா மதங்களும் போதிக்கும் முழு முதல்வன் ஒருவனே என்ற உண்மையைக் கண்டவர் அவர். அவர் ஒரு சைவராயினும் எல்லா மதங்களையும் நேசித்தார்.

எல்லாள சோழன் ஒருநாள் இவ்வழியே தேரில் சென்று கொண்டு இருந்தார். எதிர்பாராத வகையில் தேர் இந்த புத்த விஹாரத்தின்மீது மோதிவிட்டது. விஹாரம் கொஞ்சம் சிதைந்து விட்டது. இதனை அந்த மன்னர் பார்த்தார். மனம் துடித்தார்; தம்மால்தானே புனித புத்த விஹாரம் சிதைந்து விட்டது எனக் கண்ணீர் விட்டார்.

புத்த பிக்குகள் உறையும் இடத்திற்கு கால் நடையாகவே ஓடினார் அவர்களுடைய தலைவர்களான தேரோக்களின் பாதங்களில் விழுந்தார். இறைஞ்சினார்.

'பெரியீர்! நான் பெரும் பிழை செய்து விட்டேன். புத்த விஹாரத்தைச் சேதப்படுத்திவிட்டேன். அந்தத் தவறுக்கு பரிகாரம் செய்தால்தான் நான் நற்கதி பெறுவேன். அதற்கு ஏற்ற பரிகாரம் என்னுடைய தலைமீது அதே தேரை ஓட்டி தலையை சிதைப்பதுதான். எனவே அருள் கூர்ந்து என்னுடைய தலைமீது இப்பொழுதே தேரை ஓட்டி என்னைச் சிதைத்துக் கொல்லுமாறு இறைஞ்சுகிறேன்' என்றார். இத்தகைய தர்மம் காத்த புண்ணிய ஆத்மாக்கள் ஆண்ட பூமி இந்த அனுராதபுரம், மகீதரா!'

'அப்படியா! நான் அந்த தர்மசீலரான எல்லாளசோழரை தவறாகப் பேசி விட்டது தப்பு. தப்பு. என்ன இருந்தாலும் சோழர் சோழர்தான்!'

'என்ன மகீதரா, எல்லாள சோழரைப் பற்றி சொன்ன உடனேயே உனக்கு சோழ அரச பக்தி வந்து விட்டதா?'

'ஆம் ஐயா, இதுபோல அரும் செயல் புரிந்த மற்றொரு சோழரைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது அவருடைய நினைவு வந்துவிட்டது.'

'அது யார்?'

'அவர் பெயர் மனுநீதிச் சோழர்!'

'அவர் என்ன செய்தார்?'

'மனுநீதிச் சோழருடைய மகன் ஒரு பசுவின் கன்றின் மீது தவறுதலாக தேரை ஓட்டிக் கொன்றுவிட்டான். அதனுடைய தாய்ப்பசு மனுநீதி சோழனுடைய அரண்மனையை நெருங்கி, ஆராய்ச்சி மணியடித்து நீதி கேட்டது. தம்முடைய புதல்வன் செய்த தவறை அறிந்த மன்னர் துடித்தார். தம்முடைய புதல்வனை அதே தெருவில் படுக்கவைத்து தம்முடைய தேரை அவன்மீது ஓட்டினார்.'

'மெத்த மகிழ்ச்சி! இத்தகைய பெரியார்களால்தான் உலகம் இன்னும் இருக்கிறது மகீதரா! நீயும் பெரியவனானால் இத்தகைய நியாய புத்தி படைத்தவனாகத் திகழ வேண்டும்.'

'ஓ அப்படியே!'

அனுராதபுரத்தில் குதிரையின் மீது அமர்ந்தவாறு அவர்கள் மெதுவாகச் சென்று கொண்டு இருந்தார்கள். ஓரிடத்தில் ஒரு சிறிய இல்லம் தென்பட்டது.

குதிரை வீரன் குதிரையை இழுத்துப் பிடித்து அந்த வீட்டின் எதிரில் நிறுத்தினான். புரவியிலிருந்து கீழே குதித்தான். மகீதரனும் கீழே இறங்க உதவினான்.

மகீதரனுடைய தோள்மீது கைபோட்டுக் கொண்டே புதிய வீரன் அங்கு தென்பட்ட இல்லத்தை நோக்கி நடந்தான். இல்லத்தின் அருகில் வந்துவிட்டார்கள். அதன் கதவு மூடப்பட்டு இருந்தது. அவ்வீரன் இருமுறை கதவை ஓங்கித் தட்டினான். கதவு திறக்கப்பட்டது.

ஒரு முதியவர் வெளியே வந்தார். வந்தவர்களைக் கண்டார்.

'வரவேண்டும், வரவேண்டும்,' என முகமன் கூறிக் கொண்டே கரங்களைக் கூப்பி வந்தவரை வரவேற்றார். உள்ளே இருந்து வந்தவர் அந்த அதிதி அப்பொழுது வருவார் என எதிர்பார்க்கவில்லை. குதிரை வீரனைக் கண்ட அவர் திடுக்கிட்டார். உள்ளத்தில் அச்சம் ஏற்பட்டது. முகத்தில் பக்தியும், பயமும் கப்பிக் கொண்டன. வந்த வீரனை பயபக்தியோடு வணங்கி சிரம் தாழ்ந்து நின்றார்.

'சிம்மபாகு, உன்னுடைய வீட்டிற்குள் வர தற்பொழுது எனக்கு நேரமில்லை. உன்னிடம் பேச வேண்டிய செய்திகள் பல இருக்கின்றன. பிறிதொரு நாள் வருகிறேன். இப்பொழுது நான் அவசரமாகப் போக வேண்டும். இதோ என்னுடன் வந்திருக்கும் சிறுவனைப் பார். இவன் எனக்கு மிகவும் வேண்டியவன். தற்பொழுது இவனை உன்னிடம் ஒப்படைக்கிறேன். பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். இவனுக்கு ஒரு குறையும் ஏற்படக் கூடாது. இது என்னுடைய ஆணை, நினைவிருக்கட்டும்.' வந்த வீரன் அதிகாரக் குரலில் பணித்தான்.

சிம்மபாகு எனப் பெயர் கொண்ட அந்த முதியவர் குதிரை வீரன் கூறியதைப் பயபக்தியுடன் கேட்டார். 'ஆகட்டும் ஐயா,' என மறுமொழியும் கூறினார்

அவ்வீரன் மகீதரனுடைய தோள்மீது கை போட்டவாறு கூறினான்:

'மகீதரா, நான் இப்பொழுது அவசர வேலையாக உடனே வெளியில் போக வேண்டிய நிலைமையில் இருக்கிறேன். அது

ஏற்கனவே திட்டமிட்டபடி இன்றே செய்ய வேண்டிய பணி. அதனை முடித்துவிட்டு விரைவில் திரும்பி வருகிறேன். உன்னுடைய அன்னையை நான் மறந்து விட்டதாக நினைக்காதே. அவரை எப்படியும் கண்டுபிடித்துக் காப்பாற்றி அழைத்து வந்து உன்னிடம் சேர்ப்பிக்கிறேன். நீ இங்கு அமைதியாக இருக்க வேண்டும். இது உன்னுடைய சொந்த வீடு போல. இங்கு ஒரு குறையும் உனக்கு ஏற்படாது.'

'ஆம், வா குழந்தாய்!' என்று கூறிக் கொண்டே சிம்ம பாகு மகீதரனுடைய கரத்தைப் பிடித்து அழைத்தார்.

மகீதரனை மீட்டு வந்த வீரன் வெகு மிடுக்குடன் புரவியின்மீது தாவி ஏறினான். அது வாயு வேகத்தில் பறந்தது.

6

கனவு உலகம்

சீவல்லபனுடைய தலைமையில் ஈழப்படைகள் தமிழகத்தின்மீது படையெடுத்துச் சென்று சுமார் ஒரு திங்கள் ஓடிவிட்டது. அவற்றினுடைய நடவடிக்கைகளைப் பற்றி எந்த செய்தியும் வரவில்லை. தமிழகத்தின்மீது படை யெடுப்பதாக அறிவித்து விட்டு பெருத்த விளம்பரத்துடன் அணிஅணியாக வீரர்களையும் ஆயுதங்களையும் அனுப்பி இருப்பின் நிலைமையே வேறு. அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கும். போர் நிலைமையை அவ்வப்போது தெரிந்து கொள்ள வாய்ப்பு இருந்திருக்கும். அவ்வாறு அனுப்பித்தான் சென்றமுறை ஈழத்திற்கு நல்ல பாடம் கிடைத்தது. எனவே இம்முறை ஈழமன்னன் வேறு முறையைக் கையாண்டான் கூட்டமாக மரக்கலங்களில் படைகளை அனுப்பாமல், தனித்தனியாகப் படகுகளில் அனுப்பினான் சீவல்லபனுடைய ஆலோசனைப் படியே மன்னன் நடந்துகொண்டான். படைத் தலைவனான சீவல்லபனும் எவ்வித ஆடம்பரமும் இன்றி தமிழகத்திற்குச் சென்றான். கடைசியாகச் சென்ற மூன்று படகுகளுடன் அவன் சென்றான்.

எனவே அனுப்பப்பட்ட படைகளின் செயல்களைப் பற்றி தகவல் ஈழமன்னனுக்கு எட்டவேயில்லை. ஒற்றர் மூலமாகவும் நிலைமையை அறிய இயலவில்லை. அவை எங்கு எவ்வாறு சோழர்களுடன் மோதின என்பதும் தெரியவில்லை.

நாட்கள் ஆகஆக ஈழமன்னனுக்கு அச்சம் வந்துவிட்டது. ஈழப் படைகளுக்கு ஏதாவது இடுக்கண் நேர்ந்து விட்டதா? அப்படி நேர்ந்திருப்பின் ஈழத்தின் பாடு திண்டாட்டம்தான். குறுகிய காலத்தில் பெரும் படையையும், ஆயுத தளவாடங்களையும், தயாரித்து வரலாற்றைப் படைத்தான் பராக்கிரமபாகு. அந்த படைகள் முழுவதும் போருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. போரின் முடிவு என்ன? அது ஈழத்திற்கு பாதகமாக இருந்தால்? இதனை நினைத்தாலே ஈழமன்னன் தலை சுற்றியது.

நிச்சயமாக இப்போரில் ஈழத்திற்கு பாதகமான நிலை ஏற்படாது. சீவல்லபன் சூராதி சூரன். அவன் சோழர்களிடம் ஏற்கனவே சரியான சூடு பட்டவன். எனவே அவன் அவர்களைப் பழிவாங்காது விடமாட்டான். மேலும் போரில் கைப்பற்றப் போகும் தமிழ் நாட்டிற்கு அவனையே அரசனாக நியமிப்பதாக ஆசை காட்டப்பட்டிருக்கிறது. அதனால் அவன் மதி மயங்கி விட்டான். எப்படியும் அவன் வென்று விடுவான். ஈழத்திற்கு வெற்றி உறுதி; முக்காலும் உறுதி.

சிந்தனையை ஒட்டியவாறு ஈழமன்னன் அரண்மனையில் தனிமையான இடத்தில் ஆசனத்தில் அமர்ந்திருந்தான். மனதில் அச்சமும் ஆறுதலும் மாறிமாறித் தோன்றின.

அச்சமயம் ஒரு போர் வீரன் மன்னனின் எதிரில் வந்து வணங்கினான். அவனுடைய முகத்தில் அச்சமோ அல்லது மரியாதையோ தென்படவில்லை. அதற்குப் பதிலாக அவன் தன்னுடைய முகத்தில் பல கோணல்களைச் செய்து காட்டினான். அவனுடைய உடல் வளைந்து நெளிந்து ஆடியது. முகத்தில் ஒருவிதமான ஏளனப் புன்னகை விளையாடியது.

மன்னன் அவனை உற்று நோக்கினான். அந்த மனிதனுடைய முகத்திலிருந்து மன்னன் பல செய்திகளைப் படித்துக் கொண்டான். எனவே அங்கு வந்தவனுக்கு தன்னுடைய வாயைப் பயன்படுத்தும் தேவையே வரவில்லை. அவனுக்கு செவிகளை மட்டும் பயன்படுத்த வேண்டிய தேவை வந்தது. 'என்னுடைய அந்தரங்க அரண்மனையில் சந்திப்போம்.' இது மன்னனுடைய சுருக்கமான சொல். வந்தவன் வணங்கி விட்டு அவ்விடத்தைவிட்டு வெளியேறினான்.

அரண்மனையின் எழில்மிகு பொழிலின் இடையே ஒரு அழகான சிறிய குடில். அதில் ஒரு விசாலமான முற்றம். அதன் மத்தியில் இருந்த தங்கக் கட்டிலின்மீது இலவம் பஞ்சு மெத்தை விரிக்கப்பட்டிருந்தது. அதன்மீது அழகிய வேலைப் பாடமைந்த பட்டுத்துகில். அது மேலே நானாவித மலர்கள் தூவப் பட்டிருந்தது. மலர்களின்மீது ஈழவேந்தன் உல்லாசமாக அமர்ந்திருந்தான்.

சற்று முன்னர் மன்னனைக் கண்டு பேசிய போர்வீரன் அப்பொழுது மீண்டும் அங்கு வந்தான். பல் இளித்துக் கொண்டே பேசினான்:

'வேந்தே!'

'சொல்.

'நானும் நம்முடைய ஆட்களில் மூவரும் சிக்கரி மலையின் அடிவாரத்திற்குச் சென்றோம். அங்கு ஒரு அழகான மயிலைக் கண்டோம். அழகான பொருட்களெல்லாம் அரசுக்கு உரியதல்லவா! எனவே அதனைத் தங்களிடம் சமர்ப்பிக்க பிடித்துக் கொண்டு வந்தோம்!'

'மடையா, மயில் எதற்கடா? அரண்மனை நத்தவனத்தில் மயில்களுக்கு என்னடா குறைவு?'

'அரசே, உண்மையில் அது மயில் இல்லை. மயில் போன்ற ஓயில் கொண்ட மங்கை!'

'ஆ, அப்படியா? சிக்கிரி மலை அடிவாரத்தில் மங்கை சிக்கினாளா?'

'ஆம், அரசே! மயில் தானாகவே வலிய வந்து எங்களுடைய வலையில் விழுந்து மாட்டிக் கொண்டது.'

'என்னடா உளறுகிறாய்?'

'ஆம் அரசே! நேற்று இரவு சிக்கிரி மலையின் அடிவாரத்தில் இருந்தோம். எழில் மங்கையர் யாராவது தென்பட்டால் அவர்களைக் கடத்திக் கொண்டு வந்து மன்னரிடம் சமர்ப்பிப்பது தான் எங்களுடைய பணி ஆயிற்றே! எனவே யாராவது யாத்திரிகர்கள் வருவார்களா என மலை அடிவாரத்தில் காத்திருந்தோம். நாங்கள் எதிர்பார்த்தது வீணாகவில்லை. இருவர் மலைமீது இருந்து இறங்கி வந்தார்கள். அவர்களில் ஒருவன் இளம்பிள்ளை. மற்றொருவன் ஆண்.'

'போதுமடா நிறுத்து, மயில் என்கிறாய், மங்கை என்கிறாய், பின்னர் ஆண் என்கிறாய்! என்ன உன்னுடைய சித்தம் குழம்பி விட்டதா?'

'இல்லை அரசே. ஒருவன் இளம்பிள்ளை. மற்றது ஆண் உடையில் இருந்த பெண். அவள் எங்களைப் பார்த்து இரவு தங்க அருகில் விடுதி இருக்கிறதா எனக் கேட்டாள். அவளுடைய குயில் போன்ற குரல் அவளைக் காட்டிக் கொடுத்து விட்டது. அவள் பெண்ணாக இருக்கலாம் என்று எங்களுக்கு ஐயம் வந்தது. பின்பு அவளைப் பிடித்துக் கட்டியபோது அவள் பெண்தான் என்று உறுதியாகிவிட்டது. இன்று காலை அவளுடைய தலையில் கட்டியிருந்த துணியைப் பிரித்தோம். முகத்தில் ஒட்டியிருந்த மீசையை அகற்றினோம். அப்பொழுதுதான் தெரிந்தது,

அவள் மானிடப் பெண் அல்ல, அது ஒரு அழகு தேவதை என்று! தேவதையை மன்னருக்கு அர்ப்பணிக்க பக்தியோடு கொண்டு வந்திருக்கிறோம்.'

'அப்படியா, எங்கே அவள்?'

'அரசே, இதோ உலகில் உள்ள எழில்கள் அனைத்தும் ஒன்று சேர்த்து அமைக்கப்பட்டு உள்ள எழில் ராணியைப் பாருங்கள்.'

பெருமிதத்தோடு அவன், வெளியில் சென்றான். சிறிது நேரத்தில் உடல் முழுவதும் போர்த்தப்பட்ட ஒரு உருவத்தை அழைத்துக் கொண்டு அங்கு வந்தான். அவர்களுக்குப் பின்னால் இருவர் நடந்து வந்தார்கள். அதுவரை அவ்விருவரும் அவ்வுருவத்தை அந்த அரண் மனைக்கு வெளியே நிற்க வைத்து காவல் காத்துக் கொண்டிருந்தார்கள்.

மன்னரின் எதரில் நிறுத்தப்பட்ட அவ்வுருவத்தின் மீது மூடப்பட்டிருந்த சேலையை அவளை அழைத்து வந்தவன் அகற்றினான்.

மன்னன் கண்டான், கண்களைக் கசக்கிக் கொண்டு கண்டான். அவன் வாழ்நாளில் அதுவரை கண்டறியாத எழிலைக் கண்டான்.

மேகங்களால் மறைக்கப்பட்டு இருந்து, திடீரென மேகங்கள் விலகினால் எப்படி சந்திரன் ஒளிர்வானோ அத்தகைய ஒளிவிடும் எழிலின் இலக்கணத்தைக் கண்டான்! அவனுடைய இமைகள் அசையாது அப்படியே நின்றன.

அது என்ன, தந்தச் சிலையா? இல்லை. அதற்கு உயிர் இருக்கிறது! சிலை முறுவலிக்க முடியுமா?

விண்ணிலிருந்து மண்ணிற்கு இறங்கிவந்த தேவதையா? இல்லை. தேவதையாய் இருப்பின் அதனுடைய பாதங்கள் தரையில் பட நிற்குமா? கண்கள் இமைக்குமா?

முகராத நறுமலரை, கைநகம் கிள்ளாத பசும் தளிரை, வெட்டாத வைரக்கல்லை, சுவைக்காத புதிய இனிய தேனைப் பார்த்தான். பார்த்தபடியே நின்றான்.

அழகுக்கு அழகு செய்ய வந்த எழில் இராணியைக் கண்டு மருண்டான். திங்கட்கொழுந்தைக் கண்டு திக்கு முக்காடினான்.

அமுதத்திலே திங்களின் குளிர்ச்சியைக் கலந்து குழைத்துச் செய்த மின்னல் கொடியில் பொன்னும், மணியும்

மலர்ந்திருப்பதைக் கண்டான். கண் இமைக்காது கண்டான். கண்டபடியே நின்றான்.

கண் இமைத்ததால், அடிகள் காசினியில் தோய்தலால், வண்ண மலர் மாலை வாடுதலால் தமயந்தி தேவர்களின் இடையிலே நளனை அடையாளம் கண்டு கொண்டாளாம், தமயந்தியைப் போலத்தான் ஈழவேந்தனும் முடிவு செய்தான். அங்கு எதிரில் நிற்பது மானிடப் பெண்தான் என்று!

தன்னை மறந்து சொக்கி, சிலையெனச் செயலற்று நின்ற அவன் மெதுவாக இப்பூவுலகிற்கு வந்தான். வாய் திறந்து கேட்டான்:

'பெண்ணே, உண்மையில் நீ மானிடப் பெண்தானா? அல்லது பாதை தவறிப் பூவுலகிற்கு வந்துவிட்ட தேவேந்திர னுடைய இராணியா? மன்மதனுடைய அன்புக் காதலி இரதியா? ஊர்வசி, இரம்பை, திலோத்தமை ஆகிய மூவரில் ஒருவளா? இருக்காது. உன்னுடைய கால் தூசுக்கு அவர்கள் நிகராகமாட்டார்கள்.'

'அரசே!' என்று விளித்த அவளுடைய குரலிலே கிண்கிணி நாதம் ஒலித்தது. அதில் அமுதம் கொட்டியது.

'சொல், என்ன சொல்ல வந்தாய்? சொல்லி விடு. வீணையின் நாதத்தைப் போன்ற, வேய்ங்குழலின் கீதத்தைப் போன்ற உன்னுடைய குரலைக் கேட்க என்னுடைய செவிகள் துடிக்கின்றன.'

'அரசே, இத்தனை தடியர்கள் இப்பொழுது இங்கு தேவைதானா?'

'புரிகிறது, பெண்ணே! நீ மனதில் என்ன நினைக்கிறாய் என்பது எனக்கு நன்றாகப் புரிகிறது. நான் ஒரு முட்டாள். நிலைமையையும், சூழ்நிலையையும் புரிந்து கொள்ளாமல் பேசிக் கொண்டே இருக்கிறேன்.' மன்னன் அங்கு நின்ற காவலர்களை முறைத்துப் பார்த்தான். 'எல்லோரும் வெளியே செல்லுங்கள்' என்று பலமாகக் கத்தினான், அவர்கள் வெளியே ஓடினார்கள்.

'பெண்ணே, உன்னுடையப் பஞ்சு பாதங்கள் இத்தரையின் மீது படலாமா? கூடாது. அருகில் வா. என்னுடைய மடிமீது வந்து அமர்ந்து கொள்!' மன்னன் கரம் நீட்டி அவளை அருகில் அழைத்தான்.

'அரசே, எனக்கு இந்த ஆசனமே போதும்,' அவள் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

'பெண்ணே!' என்று ஏதோ பேச மன்னன் வாயெடுத்தான். அவள் இடைமறித்துப் பேசினாள்:

'வேந்தே! போதும். தங்களுடைய குழைவும், வரவேற்பும்! நான் தவறு செய்துவிட்டேன். அதற்காக வருந்துகிறேன்.'

'என்ன தவறு செய்து விட்டாய்? இத்தனை நாட்கள் என்னைச் சந்திக்காத தவறா?'

'இல்லை. தங்களை ஒரு சிறந்த அரசர் என்று கேள்விப்பட்டேன். எனவே பாண்டி நாட்டிலிருந்து பல இன்னல்களை ஏற்று தங்களைக் காண ஈழத்திற்கு வந்தேன்.'

'நல்லது. மெத்த மகிழ்ச்சி. உனக்கு கொடுத்த வரவேற்பு போதாது என்கிறாயா? நீ வருவதை முன்கூட்டி அறிவித்து இருப்பின் இப்படியா நடந்திருக்கும்? உன்னுடைய மலர் பாதங்களில் அன்றலர்ந்த மலர்தூவி மேளதாளத்துடன் வரவேற்றிருப்பேன். ஈழப்படைகள் அணிவகுத்து மரியாதை செய்து உன்னை வரவேற்றிருக்கும்.'

'அந்த வரவேற்பெல்லாம் யாருக்கு வேண்டும்? ஈழமன்னரைக் காண தமிழகத்திலிருந்து வந்து கொண்டு இருந்தேன். தங்களுடைய காவலர்கள் என்னைக் கேவலமான முறையில் கடத்தினார்கள். மூட்டையாகக் கட்டித் தூக்கிக் கொண்டு வந்து இங்கே சேர்த்திருக்கிறார்கள். ஈழ நாட்டு வரவேற்பு இப்படியா இருக்கும்? பெண்களை மோசடி செய்து ஏமாற்றிக் கடத்திக் கொண்டு வர ஒரு தனி படையை வைத்துக் கொண்டு நாடாளுகிறீர்கள்! குடிகளுக்கெல்லாம் தந்தையாக இருக்க வேண்டிய மன்னருக்கு இது அழகா? அவமானம், அவமானம்!'

ஈழவேந்தன் தலை குனிந்தான் நேரடியாக அவள் அவனுடைய நெஞ்சை நோக்கி அம்பு பாய்ச்சுவாள் என அவன் எதிர்பார்க்கவில்லை. நிலை கலங்கி விட்டான். சிறிது நேரம் வாளாவிருந்தான். அவள் கொடுத்த சாட்டையடி அவனுக்கு நன்கு வலித்தது. மோக கிறுகிறுப்பு சற்று தணிந்தது. மெதுவாக, இப்பொழுது சற்று அடக்கமாகப் பேசினான்:

'பெண்ணே அதற்காக நான் வருந்துகிறேன். அதிருக்கட்டும், எப்படி இவர்களிடம் நீ சிக்கிக் கொண்டாய்?'

'அரசே தங்களைப் பார்க்கவே தமிழகத்திலிருந்து வந்தேன். என்னுடன் வந்த பிள்ளை வழியில் சிக்கரிக் கோட்டையைக் காண வேண்டுமென்று ஆசைப்பாட்டான்.'

'பிள்ளையா, அது யார்? உன்னுடைய பிள்ளையா?'

'இல்லை. என்னுடைய உறவினருடைய பிள்ளை.'

'மெத்த மகிழ்ச்சி, மேலே சொல்.'

'சிக்கிரிக் கோட்டையைக் கண்டுவிட்டு பிள்ளையும் நானும் அடிவாரத்திற்கு வந்தோம். அப்பொழுது எங்களைத் தங்களுடைய அடியாட்கள் கடத்தி விட்டார்கள். அரசே, ஒன்று மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் பெண்தான். ஆனால் எனக்கும் கொஞ்சம் விளையாடத் தெரியும். உள்ளத்தில் உரமுண்டு. உடலில் வலிவுண்டு. இதோ, என்னுடைய இடுப்பில் தொங்குகிறதே, இந்த கட்டாரியைப் பாருங்கள் இது எத்தனையோ வீராதி வீரர்களுடைய குருதியைச் சுவைத்த கட்டாரி. தங்களுடைய ஆட்களை எளில் கொன்றிருக்க என்னால் முடியும். இவர்கள் தங்களுடைய ஆட்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன் தங்களிடம்தான் என்னைக் கொண்டு போகிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டேன். எனவே பேசாமல் வந்தேன். மொத்தத்தில் ஈழமண்ணில் அடியெடுத்து வைத்தவுடன் எனக்கு கிடைத்தது நல்ல வரவேற்பு!'

'பெண்ணே, நடந்ததற்கு மிகவும் வருந்துகிறேன் அருள்கூர்ந்து அதனை மறந்து விடு. நடப்பதைப் பற்றி சிந்திப்போம் அழகு இராணியான உன்னுடைய பெயரை அடியேன் அறியலாமா?'

'அறியலாமே! என்னுடைய பெயர் கோதை.'

'கோதை! அழகான பெயர்; சுவையான பெயர். இன்னும் உனக்கு திருமணம் ஆகவில்லையே?'

'இல்லை. எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.'

'மெத்த மகிழ்ச்சி. இரட்டை மகிழ்ச்சி!'

'அரசே, நான் வீரபாண்டிய மன்னருடைய காதலி.'

'அப்படியா? மற்றொருவன் காதலியா? அதனால் என்ன, தவறில்லை, இதுவரை வீரபாண்டியனுடைய காதலியாக இருந்தாய். என்னுடைய எழிலைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய். என்னுடைய புகழ் கடல் கடந்து பெருகி இருக்கிறது. அது உன்னுடைய செவிக்கும் எட்டியிருக்கும். எனவே என்னைக் காண வந்திருக்கிறாய். பாவம், வீரபாண்டியன், அவனுக்கு என் அனுதாபங்கள்! இனம் இனத்தோடுதான் சேரும். குயில் கோட்டானோடு சேர்ந்திருக்க முடியுமா? முடியாது.'

'அரசே, வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிக் காலத்தை வீணாக்க வேண்டாம். நேராகப் பிரச்சினைக்கு வருகிறேன். தற்பொழுது நான் வீரபாண்டியனுடைய தூதாக வந்திருக்கிறேன். தங்களிடம் உதவி வேண்டி வந்திருக்கிறேன்.'

'கோதை, உனக்கு என்ன வேண்டும்? தயங்காமல் சொல். என்னுடைய உயிரே வேண்டுமா?'

'அரசே, அழகாகப் பேசுகிறீர்கள் இவையெல்லாம் இலக்கியத்திற்கு பொருந்தும். ஆனால் உண்மை உலகிற்கு ஒத்து வராது. கனவு உலகை விட்டு நடப்பதில் நாட்டம் செலுத்துங்கள்.'

'உம், சொல். நான் என்ன செய்ய வேண்டும்?'

'மன்னரே நான் முதலில் என்னுடைய அன்புச் செல்வம் மகீதரனைப் பார்த்தாக வேண்டும்.'

'அது யார் மகீதரன்? கேள்விப்பட்டதில்லையே!'

'கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். என்னுடன் ஒரு பிள்ளை வந்தானென்று முன்பு கூறினேன் அல்லவா, அவன்தான் மகீதரன். அவனையும் தங்களுடைய ஆட்கள்தான் கடத்திக் கொண்டு வந்தார்கள் முதலில் அவனை அழைத்து வரும்படி ஆணையிடுங்கள் அரசே!'

'அப்படியே ஆகட்டும்.' மன்னன் உரத்த குரலில் யாரங்கே?' என இரைந்தான். கோதையைக் கடத்தி வந்தவர்களின் தலைவன் மீண்டும் அங்கு வந்தான். அவனைப் பார்த்த மன்னன் கேட்டான்:

'நீங்கள் இந்தப் பெண்ணுடன் ஒரு சிறியவனையும் கடத்தினீர்களா?'

'ஆம் அரசே!'

'அவனை இங்கு உடனே அழைத்துக் கொண்டு வா!'

வேகத்துடன் மன்னன் ஆணையிட்டான். வந்தவன் வெளியே சென்றான். அவனுடைய உடலில் நடுக்கம் கண்டது. கடத்தப்பட்ட சிறுவன் அவனுடைய பொறுப்பில் இல்லை. அவனை எப்படி ஒப்படைக்க முடியும்? அது முடியாத காரியம்.

அச் சிறுவனைக் கடத்தி வரும்போது யாரோ ஒருவன் புதிதாக முளைத்து விட்டான். அவன் மகீதரனைக் கொண்டு சென்ற ஈழ வீரனைக் குத்திக் கொன்று விட்டான். புதிதாக வந்தவனுக்கும், ஈழ வீரனுக்கும் போர் நடப்பதை அக்கூட்டத் தலைவன் பார்த்தான். எனவே அவன் வந்த வழியில் திரும்பி ஓடி விட்டான்.

மறுநாள் காலை அக் கூட்டத்தலைவன் போர் நடந்த இடத்திற்குச் சென்று பார்த்தான். அங்கு மகீதரனைக் கொண்டு சென்ற ஈழ வீரனுடைய பிணம் தரையில் நாற்றம் எடுத்துக் கொண்டு இருந்தது. மகீதரனும் இல்லை. புதிதாக முளைத்தவனும் இல்லை. பிணத்தின் அருகில் புரவிதான் கண்ணீர் விட்டுக் கொண்டு இருந்தது. இதிலிருந்து புதிதாக வந்தவன் மகீதரனைக் கொண்டு போய்விட்டான் எனத் தெரிந்தது.

இப்பொழுது அந்தப் பிள்ளையை எப்படி மன்னரிடம் ஒப்படைக்க முடியும்? அவனைக் கொன்று சென்றவன் என்ன செய்தானோ, எங்கு வைத்திருக்கிறானோ? இந்த உண்மையைக் கூறினால் மன்னன் அவனை உயிரோடுவிடமாட்டான். கடத்தி வரப்பட்ட பெண்ணின்மீது மோக வெறி கொண்டு அவன் நிலை தவறி தடுமாறுகிறான். இந்நிலையில் அப்பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக அப்பிள்ளை இல்லை என்று சொன்னால் மன்னன் நிச்சியமாக அவர்கள் அத்தனை பேருடைய சிரங்களையும் சீவி விடுவான்!

அவர்கள் மன்னனுக்கு உதவத்தான் செயல் பட்டார்கள். அவனுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தத்தான் விரும்பினார்கள். அதனால் சன்மானமும், பதவி உயர்வும் பெற முடியும் எனக் கனவு கண்டார்கள். ஆனால் இப்பொழுது அச்செயல் அவர்களுடைய தலைக்கே ஆபத்தாக வந்துவிட்டது. அவர்கள் கண்டெடுத்துக் கொண்டு வந்த ஆயுதமே அவர்களுடைய சிரங்களைச் சீவ உதவப் போகிறது. இந்த ஏக்கத்தில் அந்த மூவரும் அழுதுக் கொண்டே தரைமீது அமர்ந்து விட்டார்கள்.

மகீதரன் நலமாகவே இருப்பான். அவனை விரைவில் மன்னனுடைய ஆட்கள் கொண்டு வந்து சேர்ப்பிப்பார்கள் என்று கோதை மனப்பூர்வமாக நம்பினாள். எனவே அவனைப் பற்றிய கவலையை விட்டுவிட்டு வேறு பேச்சுக்களில் நாட்டம் செலுத்தினாள். மன்னனைப் பார்த்து மீண்டும் பேசினாள்:

'அரசே, ஓர் ஆண் ஒரு பெண்ணின்மீது மோகம் கொள்வதில் தவறு இல்லை. மன்னனுக்கு மட்டுமென்ன, ஒவ்வொரு உயிர் இனத்திற்கும் இயற்கையில் இருக்கும் உணர்வு அது. அதனால்தான் எங்களுடைய தமிழ் இலக்கியங்கள் போருக்கும், காதலுக்கும் சமமான இடத்தைக் கொடுத்திருக் கின்றன. ஆனால் தங்களுடைய காதல்....! அப்பப்பா, அது கொடுமையானது. சோழர்களிடம் ஈழநாடு படு தோல்வி

கண்டுவிட்டது. ஈழப் படைகள் நிர்மூலமாகிவிட்டன. உலகமே இதுவரை கண்டறியாத கேவலமான செயலை சோழர்கள் செய்திருக்கிறார்கள். ஈழ சேனாபதிகளின் தலைகளைத் துண்டித்து மதுரை புகழாபரண அரண்மனையின் இரு புறங்களிலும் கழிகளில் பொருத்தி வைத்திருக்கிறார்கள். இங்கு என்னடாவென்றால் ஈழ மன்னர் அடியாட்களை வைத்துக் கொண்டு பெண்களைக் கடத்தி வரச் செய்து இன்பம் கண்டு கொண்டு இருக்கிறார்!

'நான் தவறு செய்து விட்டேன். தாங்கள் பெரிய வீராதி வீரர் என்று வீரபாண்டியர் கூறினார். அந்தத் தவறான தகவலை உண்மை என நம்பி விட்டேன். அதனால் தங்களிடம் வந்தேன். தாங்கள் இத்தகையவர் என்று தெரிந்திருந்தால் இங்கு வந்திருக்கவே மாட்டேன்!'

'கோதை, கோபிக்காதே. நீ சொல்லுவதில் உள்ள நியாயத்தை நான் உணருகிறேன். ஈழம் பெற்றுவிட்ட தோல்வி சம்பந்தமற்ற உன்னுடைய உள்ளத்தையே இப்படி சுடுகிறது என்றால் அதனுடைய மன்னனான என்னை எப்படிச் சுடும்! நீ உணர மாட்டாய். ஆனால் ஒன்று மட்டும் தெரிந்து கொள். நான் மாபெரும் அவமானம் அடைந்த பின்னர் தோல்வியை ஒப்புக் கொண்டு சும்மா இருக்கவில்லை. அந்த சோழர்களை பழிக்குப்பழி வாங்க, தமிழ் நாட்டு வரைபடத்தில் சோழநாடு என்று ஒன்று இல்லாது செய்ய என்ன செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் செம்மையாகச் செய்து விட்டேன். நீ தமிழகத்தை விட்டுப் புறப்பட்டு நாட்களாகி இருக்கும். எனவே அங்கு தற்பொழுது நடப்பது உனக்குத் தெரிய நியாயமில்லை. நீ கோபிப்பதில் தவறு இல்லை!'

'அரசே, ஏன் வீணாகப் பேச்சை வளர்க்க வேண்டும்? நேராக பிரச்சினைக்கு வருகிறேன். வீரபாண்டியர் தென் பாண்டி நாட்டில் தமக்க சாதகமாக பெரும் படையைத் திரட்டி விட்டார். தற்பொழுது நெல்லையில் இருக்கிறார். இன்னும் ஓரிரு வாரங்களில் மதுரை மாநகரை முற்றுகையிட முடிவு செய்து விட்டார். இம்முறை அவர் வெற்றி பெறுவது முக்காலும் உறுதி. தங்களுக்கு அநீதி இழைத்த சோழர்களையும், குலசேகர பாண்டியனையும் முடியடிக்க தாங்கள் விரும்புவீர்கள் என நம்புகிறோம். எனவே தாங்களும் தங்களுடைய உதவிப் படைகளை அனுப்பினால் போரை எளிதில் வெற்றிகரமாக முடிப்போம். அதன்பின்னர் பாண்டி நாடு, ஏன் தமிழகமே என்றென்றும் ஈழத்துடன் நட்பாக இருக்கும்.'

'கோதை, தமிழகம் ஈழத்துடன் நட்பாக இருப்பது இருக்கட்டும். நீ இந்த பராக்கிரமபாகுவோடு நட்பாக இருப்பாயல்லவா'? அதனை முதலில் சொல்.'

கோதை ஈழ மன்னனை நோக்கி ஒரு மோகன முறுவலை வெட்டினாள். அதனைக் கண்ட அவன் நிலை குலைந்து போனான். அவளுடைய பார்வையிலிருந்து ஓராயிரம் விடைகள் கிடைத்து விட்டன.

'கோதை போதும்! அது போதும் எனக்கு. உன்னுடைய உள்ளத்தைத் தெளிவாகத் திறந்து காட்டி விட்டாய். என்னைப் பற்றியும் தெரிந்து கொள். என்னை சாதாரண மன்னன் என்று நினைக்காதே. நான் பெரும் தீர்க்கதரிசி. சிறந்த அரசியல் மேதை. நீ என்னிடம் எதனைக் கேட்டாயோ, அதனை நீ கேட்பதற்கு முன்பே கொடுத்து விட்டேன்! எப்படி என்னுடைய அறிவும் ஆற்றலும்?'

'தாங்கள் கூறுவது எனக்குப் புரியவில்லை அரசே!'

'புரியும்படி சொல்கிறேன். தற்பொழுது உனக்கு வேண்டியது ஈழப்படை உதவிதானே?'

'ஆம்.'

'ஒரு திங்களுக்கு முன்பே பெரும்படையே தமிழகத்திற்கு அனுப்பி விட்டேன். வீரபாண்டியன் விரும்பியபடியே படைகளை அனுப்பிவிட்டேன். எப்படி!' மன்னன் பெருமையோடு அவளைப் பார்த்தான். வலது கையால் மீசையை முறுக்கி விட்டான். அதே கையால் மார்பைத் தட்டி காட்டினான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட கோதை திடுக்கிட்டாள். அவளுடைய முகத்தில் இருள் கப்பியது. மனம் குழம்பி விட்டது. அவள் பதறிக்கொண்டே கேட்டாள்:

'அரசே! விளக்கமாகச் சொல்லுங்கள். வீரபாண்டியர் தங்களை எப்பொழுது படை கேட்டார்? தாங்கள் எப்பொழுது அனுப்பினீர்கள். எனக்கு எதுவும் புரியவில்லை. இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது.'

'இல்லை, கோதை, ஒரு சூதும் நடக்கவில்லை. நீதான் விவரம் புரியாமல் பேசுகிறாய். வீரபாண்டியன் விருப்பப்படியே படைகளை அனுப்பினேன். அதுவும் அவைகளை நடத்திச் சென்றவன் சாதாரணமானவன் அல்ல. மிகப் பெரும் அறிவாளி. இராசதந்திரி. அவனடைய ஆலோசனைப்படி படைகளைத்

தனித்தனியாக படகுகளில் அனுப்பினேன். எனவே அதனை நீ அறிந்திருக்க நியாயமில்லை.'

'அரசே, அத்தகைய வீராதிவீர சேனாபதி யார் என்பதை நான் அறியலாமா?'

'ஓ, அறியலாமே, என்னுடைய மைத்துனன் சீவல்லபன்!'

'என்ன சொல்லுகிறீர்கள். மீண்டும் சொல்லுங்கள். சோழ நாட்டில் சோழர்களின் கையாளாகச் செயல்பட்டானே, அந்த சீவல்லபனுடைய தலைமையிலா தாங்கள் படைகளை அனுப்பினீர்கள்?'

'ஆம், அதே சீவல்லபன் தலைமையில்தான் படைகளை அனுப்பினேன் நீ அச்சப்படுவது இயல்பே. சீவல்லபன் சோழர்களின் கையாளாகத்தான் இருந்தான். எனக்கு எதிராகச் செயல்பட்டான். ஆனால் நன்றி கெட்ட சோழர்கள் அவனையே சிறையில் அடைத்துவிட்டார்கள். அவன் சிறை தப்பி இங்கு ஓடி வந்தான். என்னைப் பகைத்துக் கொண்டதற்காக வருத்தப் பட்டான் மன்னிப்புக் கேட்டு மண்டியிட்டான். அவனை மன்னித்து விட்டேன். சோழர்களையும் பாண்டியர்களையும் பழிக்குப் பழி வாங்கத் துடித்தான். அதற்காக படைகளைக் கேட்டான். அவன் வேண்டிய அளவிற்கு கொடுத்தனுப்பினேன். இந்நேரம் அவன் வீரபாண்டியனிடம் சேர்ந்து போரில் குதித்திருப்பான். மதுரையையும், பழையாறையையும் கைப்பற்றி இருப்பான். எந்த நேரத்திலும் அந்த நல்ல செய்தி வரலாம். அதனை எதிர்பார்த்துக் கொண்டு காத்து இருக்கிறேன்.

'கோதை! சீவல்லபனை தமிழ் மண் முழுவதற்கும் மன்னனாக நியமிப்பதாக நான் உறுதி கூறியிருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் நீ விரும்பினால் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுகிறேன். உன்னுடைய வீரபாண்டி யனையே தமிழகம் முழுவதற்கும் அரசனாக்கி விடுகிறேன். போதுமா? ஆனால் அதற்கு விலை உண்டு.'

பராக்கிரமபாகு அவள்மீது ஒரு மோகப் பார்வையை வீசிக்கொண்டே அவளுடைய மார்பகத்திற்கு நேராக தன்னுடைய ஆள்காட்டி விரலை நீட்டிக் காட்டினான்.

7

அமாவாசை நிலவு

கோதையினுடைய மூச்சே நின்றுவிடும் போல இருந்தது. அவளுடைய சந்திர வதனம் இருண்டு அமாவாசை நிலவு ஆகிவிட்டது. உள்ளம் நடுங்க பதட்டத்துடன் வேதனையோடு கூறினாள்:

'ஈழமன்னரே, தாங்கள் மோசம் போய் விட்டீர்கள். மிகப்பெரிய மோசடி நடந்திருக்கிறது. சீவல்லபன் திட்டமிட்டே சதி செய்திருக்கிறான். தங்களை ஏமாற்றி விட்டான். ஈழப்படைகளைக் கொண்டுபோய் சோழர்களுக்கு காணிக்கையாகப் படைத்திருக்கிறான்.'

'கோதை, என்ன? நீ என்ன சொல்லுகிறாய்? நீ சொல்லுவது உண்மையாக இருக்காது. முக்காலும் அப்படி இருக்கவே இருக்காது. சீவல்லபனை நான் அறிவேன். அவன் நல்லவன். என்னுடன் இரத்த சம்பந்தம் உள்ளவன் என்னுடைய சகோதரியின் புதல்வன். அவன் எனக்குத் துரோகம் செய்யவே மாட்டான்.

'மேலும் சீவல்லபனுடைய ஆத்ம நண்பன் இங்குதான் இருக்கிறான். அவன் நேர்மையின் இலக்கணம். ஈடு இணையற்ற அறிவாளி. இன்று என்னுடைய அந்தரங்க ஆலோசகன் அவனே. அறிவிலும், ஆற்றலிலும் வல்லவனான திருமாறன் கூறும் ஒவ்வொரு கருத்திலும் ஈழத்தின் மகோன்னதமான எதிர் காலத்தைத் தெளிவாகக் காண்கிறேன். நான் அவனை முழுக்க நம்புகிறேன்.

அவனுடைய ஆலோசனைப்படிதான் சீவல்லபனுடைய தலைமையில் தமிழகத்திற்கு படைகளை அனுப்பி இருக்கிறேன்.'

ஈழமன்னன் சற்று உணர்ச்சி வசப்பட்டான். ஆயினும் மிடுக்குடன் பேசினான். திருமாறனைப் பற்றி புகழும் போது அத்தகையவனை ஆலோசகனாகப் பெற்றதற்காக மார்பைத் தட்டிக் கொண்டு பேசினான்.

ஆம்!, ஈழ மன்னனே வாயால் உரைத்தது போலவே, அப்பொழுது அவன் அந்தரங்க ஆலோசகன் திருமாறன்தான். மன்னன் முதலில் திருமாறனை நம்பவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவன் கூறியதெல்லாம் தவறாமல் நடந்திருக்கிறது. சீவல்லபன் சோழச் சிறையிலிருந்து தப்பி ஈழம் வந்தடைந்தான் சீவல்லபன் சோழர்களுக்கு வைரியாகிவிட்டான், அவன் சிறை தப்பிவிட்டான், அவன் ஈழ மன்னனிடம் வருவான் என்றெல்லாம் கூறியவன் திருமாறன். அவன் கூறியது அனைத்தும் பின்னர் உண்மையே எனத்தெரிந்தது. அதிலிருந்து மன்னனுக்கு திருமாறன்மீது அசைக்க இயலாத நம்பிக்கை வந்து விட்டது. அப்பொழுது இருந்து அனைத்திற்கும் திருமாறன்தான். அவனைக் கலக்காமல் ஈழவேந்தன் அரசு சம்பந்தமான முடிவுகள் எடுப்பதில்லை. அமைச்சர்களெல்லாம் கூட பின்னால் தள்ளப்பட்டு விட்டார்கள்.

ஈழ நாட்டில் அப்பொழுது மன்னருக்கு அடுத்து செல்வாக்குப் பெற்றிருந்தவன் திருமாறன்தான். எனவே மக்கள் மன்னருக்கு அடுத்து திருமாறனுக்கே மரியாதை செலுத்தினார்கள். செல்வாக்கு மிக்க அவன் எந்த நேரத்தில் எங்கு வேண்டுமானாலும் போகலாம். வரலாம். மன்னர் உட்பட யாரிடமும் அவன் முன் அனுமதி பெறத் தேவையில்லை. அந்தரங்க அரண்மனையில் அரசர் கோதையோடு பேசும் போது அங்கேயே அவன் வந்து விட்டான். ஏதோ அவசரச் செய்தியை மன்னருக்கு அறிவிக்க அங்கு வந்தான்.

'இல்லை அரசே, இது பெரும் கொடுமை. மிகப் பெரும் மோசடி நடந்திருக்கிறது.' ஏமாற்றப்பட்டு விட்டீர்கள். உங்களுக்கு அழிவை நீங்களே தேடிக் கொண்டீர்கள்.

இது திருமாறனையும், சீவல்லபனையும் புகழ்ந்து பேசிய மன்னனுக்கு கோதை அளித்த மறுமொழி. கோதை ஆழ்ந்த வேதனையோடு இதனைச் சொல்லும்போது திருமாறன் அவளுக்குப் பின்புறமாக இருந்த வாயில் மூலமாக உள்ளே புகுந்தான். அப்பொழுது அவள் கூறியதும் அவனுடைய செவிகளில் பட்டது.

'எது மோசடி?' என்று கேட்டுக் கொண்டே புன்முறுவல் பூக்க அவன் உள்ளே புகுந்தான். ஒரு புதுக் குரலைக் கேட்டு கோதை பின்புறம் திரும்பிப் பார்த்தாள். திருமாறன் அங்கு தென்பட்டான்.

கோதை திடுக்கிட்டாள். அவள் பாதம் பட்டிருந்த இடத்தில் பூமியே பிளந்து விட்டதைப் போல நடுங்கினாள். திருமாறனுடைய நிலையும் அதுவே. அவளை அவன் அங்கு

எதிர்பார்க்கவில்லை. நிலை கலங்கிப் போனான். அவனுடைய கை, கால்கள் படபடவென நடுங்கின பூமியின்மீது நிற்கவே அவனுடைய கால்களுக்கு வலுவில்லை. எப்படியோ சமாளித்துக் கொண்டு நின்றான். இருவரும் ஒருவரையொருவர் அங்கு சந்திப்போம் எனக் கனவிலும் கருதியவர்கள் இல்லை.

தன்னை சமாளித்துக் கொண்ட திருமாறன் பேசினான்:

'ஆம் அரசே! அந்தப் பெண் கூறியது முற்றிலும் உண்மை. அதனை நான் அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறேன். மோசடிதான் நடந்துவிட்டிருக்கிறது. இவள் கூறியதையே நான் மீண்டும் உறுதி செய்கிறேன்.'

என்ன திருமாறா, உன்னுடைய அறிவு தடுமாறி விட்டதா? இந்தப் பெண்தான் ஏதோ புரியாமல் பேசுகிறாள் என்றால் நீயும் அப்படியே அவளை ஆதரித்துப் பேசுகிறாய்!' அவளுக்கு ஒத்து ஊதுகிறாய். அழகான இந்தப் பெண்ணைப் பார்த்து சொக்கிவிட்டாயா? மதி மயங்கி விடாதே. நினைவிருக்கட்டும். இவள் என்னுடைய விருந்தாளி. எனக்கு வேண்டியவள். அவளைப் பற்றி தவறாக மனதாலும் நினைக்கக்கூடாது. தெரிந்துகொள். நீ என்ன புரிந்து கொண்டு இவளுக்கு ஒத்து ஊதி விட்டாய்? உன்னுடைய நண்பன் தமிழகத்திற்கு படைகளைக் கொண்டு மோனது மோசடி என்கிறாள் இவள் அதனை நீ ஒத்துக்கொள்ளுகிறாயா?' மன்னன் திருமாறன்மீது சீறி விழுந்தான். அவன் அப்பெண்ணைக் கண்டு மயங்கி விட்டான் என்ற எண்ணம் ஏற்பட்டதால் மன்னன் உள்ளத்தில் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. அவனுடைய முகத்தில் அனல் தெறித்தது. எள்ளும் கொள்ளும் வெடித்தன.

'மாமன்னரே, சீவல்லபர் தமிழகத்திற்குப் படைகளைக் கொண்டு போனது மோசடி என்று நான் சொல்லவில்லையே! அந்த அளவிற்கு என்னுடைய சித்தம் கலங்கிவிடவில்லை. அரசே! சூரியன் திசைமாறி மேற்கில் உதித்தாலும் சீவல்லபனுடைய செயலில் மோசடி இருக்காது. அவர் சுத்தவீரர் என்று எனக்கு தெரியும். நான் கூறியதே வேறு. இதோ இங்கு நிற்கிறாளே பெண் உருக்கொண்ட இந்தப் பேய்தான் மோசடியின் மொத்த உருவம் என்றேன். அழகாக மோகினி உரு கொண்டு வந்திருக்கும் இந்த சூர்ப்பனகையைத்தான் மோசடி என்று குறிப்பிட்டேன்.' திருமாறன் அப்பெண்ணைப் பார்த்து சினத்தோடு இச்சொற்களை கூறினான்.

'திருமாறா நீ என்ன சொல்லகிறாய்? புரியும்படிச் சொல். இந்தப் பெண்ணை இதற்கு முன்பே நீ அறிவாயா?'

வினா தொடுத்த மன்னனுக்கு திருமாறன் மறுமொழி கூறினான்:

'அரசே, எனக்கு வளைத்துப் பேசத்தெரியாது. வெளிப்படையாகப் பேசுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். இந்தப் பெண் பேய் யாரென்று தெரிந்து கொண்டீர்களா?' அவள் பின்னணியை அறிவீர்களா?'

'யாரடா அவன்? மரியாதையாகப் பேசு. இந்தப் பெண் என்னுடைய கௌரவமான அதிதி. மீண்டும் இந்த அழகு இராணியைப் பேய் எனக் குறிப்பிட்டால் இனி என்னால் பொறுக்க முடியாது. நினைவிருக்கட்டும்.' மன்னன் அனல் பறக்க திருமாறனை நோக்கிச் சீறினான். மீசையை வலது கர ஆள்காட்டி விரலால் தடவினான்.

கோதையின் முகம் தீப்பிழம்பாயிற்று. இடுப்பில் தொங்கிய கட்டாரியைத் தடவிக் கொண்டே பேசினாள்:

'மன்னரே, ஈழ நாட்டிற்கு வந்ததற்காக எனக்கு வரிசையாக கிடைத்த மரியாதைகள் போதும். முன்பு என்னடாவென்றால் என்னை மூட்டையாக கட்டி தூக்கிக் கொண்டு வந்தார்கள். என்னுடைய பிள்ளை இதுவரை என்னிடம் வந்து சேரவில்லை. இப்பொழுது இங்கு ஒரு கயவன் என்னைப் பேய் என இருமுறை சொல்லி விட்டான். தங்களுக்காக இதுவரை பொறுத்திருந்தேன். இனி என்னால் பொறுக்க இயலாது. நான் வருகிறேன். தங்களுக்கு ஒரு கும்பிடு.' கோதை அவ்விடத்தை விட்டு வெளியே செல்ல ஆசனத்தை விட்டு எழுந்து நின்றாள்.

'அம்மா, தாயே! அவ்வளவு எளிதில் இந்த இடத்தை விட்டு நீ தப்பிப் போய்விட முடியாது. தப்பி விடலாம் எனக் கனவு காணாதே. எங்களுடைய அரசர் ஏமாந்தவர் அல்ல.' கோதையைப் பார்த்து இச்சொற்களைக் கூறிய திருமாறன் அரசரைப் பார்த்துக் கேட்டான்:

'அரசே, இவள் தான் யாரென்று கூறினாளா?'

'ஆம். அவளே கூறினாள்.'

மீண்டும் வேண்டுமானால் நான் யாரென்று சொல்லுகிறேன். இங்கு யாரும் செவிடு இல்லையென நம்புகிறேன். நன்றாகக் காதை தீட்டிக் கொண்டு கேளுங்கள். என்னுடைய பெயர் கோதை. வீர பாண்டியனின் காதலி. நேர்வழியில் ஈழத்துக்கு வந்தவள். பெயரை மறைத்துக் கொண்டு ஏமாற்ற

வந்தவள் நான் அல்ல. வீரபாண்டியருக்கு ஈழப்படை உதவி வேண்டி இங்கு வந்திருக்கிறேன். மற்றவர்களைப் போல இம்மன்னனுக்கு மோசம் செய்ய வந்தவள் அல்ல நான்!' உரத்த குரலில் பேசியவாறு கோதை திருமாறனை உற்றுப் பார்த்தாள்.

'ஆம், திருமாறா, இவைகளையெல்லாம் இப்பெண் முன்பே என்னிடம் சொல்லி இருக்கிறாள். பொறுமையாகப் பேசு. இதில் ஐயப்பட என்ன இருக்கிறது? அவள் சொல்லியதில் ஏதாவது மோசடி உனக்குத் தென்படுகிறதா?' மன்னன் நிதானமாகவே திருமாறனைப் பார்த்து கேட்டான்.

'பெண்ணே, உன்னுடைய பெயர் கோதை என்று குறிப்பிட்டாய். இது உண்மையான சொல். அப்படியே ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் ஒரு வினாவிற்கு மட்டும் மீண்டும் மறுமொழி சொல். என்னைப் பார்த்துச் சொல்! நீ யாருக்காக உதவி கேட்டு இங்கு வந்தாய்? வீரபாண்டியனுக்கா? அல்லது சோழ மன்னன் இராசாதிராசனுக்கா? மறைக்காமல் இதற்கு விடை சொல்ல வேண்டும்.' இது கோதையைப் பார்த்து மிடுக்குடன் திருமாறன் தொடுத்த வினா.

'உன்னை ஒரு பொருட்டாகக் கருதி நான் உனக்கு விடை அளிக்க வேண்டுமா? சொல்லாவிட்டால்?' அலட்சியத்தோடு திருமாறனைப் பார்த்துக் கேட்ட கோதை அதற்கு மேல் எதுவும் பேசாது நின்றாள். அரசன் கோதையைப் பார்த்துக் கூறினான்:

'கோதை, அவன் கேட்பதற்கு விடை சொல்லி விடு. இதில் கௌரவக் குறைவு என்ன இருக்கிறது?'

'அரசே, தாங்கள் ஆயிரம் கேள்விகள் கேளுங்கள். மறு மொழி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இவன் யார் என்னை நோக்கி வினாக்களைத் தொடுக்க?'

'கோதை உன்னிடம்தான் குற்றம் இல்லையே! அது எனக்குத் தெரியும். எனவே இவனுக்கு மறுமொழி கூற நீ ஏன் தயங்க வேண்டும்?'

'அரசே, தங்களுடைய விருப்பம் அதுவாயின் மறு மொழி கூற எனக்கு எந்தத் தடையும் இல்லை. நான் மீண்டும் சொல்கிறேன். இராதிராசனை முறியடிக்க வீரபாண்டிய மன்னருக்குப் படை உதவி கேட்டுத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.'

'அப்படியா? வீரபாண்டியனுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? அவனுக்கு உதவிகேட்டு நீ ஏன் இங்கு வரவேண்டும்?' இது திருமாறன் வினா.

'நான் வீரபாண்டியனின் காதலி. இதனையும் முன்பே வெளிப்படையாக, தெளிவாகச் சொல்லி இருக்கிறேன்!'

'இங்குதான் பிரச்சினையே வருகிறது. நீ சொல்லியதை நான் மறுக்கிறேன். இது முழுக்கப் பொய் என்று நான் சொல்லுகிறேன்.'

'அப்படியானால்?'

'நீ வீரபாண்டியனுடைய காதலி இல்லை. சோழ அரசன் இராசாதிராசனுடைய ஆசை நாயகி என்கிறேன்.' சீவல்லபன் சினத்தோடு இதனை உரக்கக் கூறினான்.

'முட்டாள். வாயை மூடு. நீ எதனைப் பழித்தாலும் நான் பொறுப்பேன். ஆனால் ஒரு தமிழ்ப் பெண் தன்னுடைய கற்பைப் பிறன் பழித்தால் விட மாட்டாள்.என்ன நடக்கும் தெரியுமா? கோபாவேசத்துடன் கூறிய கோதை வேகமாக தன்னுடைய இடுப்பில் தொங்கிய உரையில் இருந்த கட்டாரியைக் கையில் எடுத்தாள்.

மன்னன் பதறிவிட்டான். கோதையை நெருங்கி, அவள் ஓங்கிய கட்டாரியைத் தடுத்துப் பிடித்துக் கொண்டு கூறினான்:

'கோதை, கோபிக்காதே, இவனை நான் கவனித்துக் கொள்கிறேன். அதிருக்கட்டும். ஏதோ கற்பு என்று கூறினாயே! அப்படியென்றால் என்ன?' இந்த வினாவை ஈழவேந்தன் தொடுத்தான். அது சிரிப்பதற்குரிய வினாதான். ஆனால் அப்பொழுது அங்கு யாரும் சிரிக்கும் நிலையில் இல்லை. மூவரும் மூன்று விதங்களின் உணர்ச்சி வயப்பட்டிருந்தார்கள். திருமாறன் துணிவாகப் பேசினான்:

'அரசே கற்புக்கு இலக்கணம் பின்னர் படிப்போம். இந்த நயவஞ்சகியைத் தாங்கள் விட்டுவிடக் கூடாது. அழகாக இருக்கிறது என்பதற்காக யாரும் நாகப்பாம்பைப் பாலூட்டி வளர்ப்பதில்லை. அதனை கட்டி அணைத்துக் கொள்ளுவதில்லை. அழகான அதனுடைய தலையை நசுக்கிக் கொல்வார்கள். அதே போலத்தான் இவளைக் கொல்ல வேண்டும்.'

இதனைக் கேட்ட மன்னனுக்குக் கோபம் பொத்திக் கொண்டு வந்தது.

'திருமாறா, இன்று உன் பேச்சு சரியாக இல்லை. முதலிலிருந்து நான் கவனிக்கிறேன். உன் பேச்சு திசை தப்பிப்போகிறது.'

'ஆம் அரசே, என்னுடைய வயிறு பற்றி எரிகிறது. இவள் வீரபாண்டியன் காதலி என்று பொய் சொல்லி தங்களை ஏமாற்றி படைபலம் பெறப் பார்க்கிறாள், என்னால் அதனைச் சகித்துக் கொண்டு இருக்க இயலவில்லை.'

'திருமாறா, சொன்னதையே திருப்பித் திருப்பி அழுத்தமாகச் சொல்கிறாய். அதனால் பொய் உண்மையாகி விடாது. இவள் தான் வீரபாண்டியரின் காதலி என்கிறாள் நீ இராசாதி ராசனுடைய காதலி என்கிறாய்' நீ இப்படி உறுதியுடன் சொல்லக் காரணம்?

ஒரு பெண்மீது வீண்பழி சுமத்தக்கூடாது. ஆதாரமில்லாது பழி சுமத்துவது பாவம் திருமாறா!' இவளிடம் மன்னிப்புக்கேள்.'

'புரியாதவர்களுக்கு மீண்டும் இடித்துச் சொல்லுங்கள் அரசே!' இடைமறித்தாள் கோதை. அரசர் திருமாறனைப் பார்த்துக் கூறினார்:

'திருமாறா, இப்பொழு எனக்கு ஒன்று தெரிய வேண்டும். உனக்கும் இவளுக்கும் ஏதாவது முன் பகை இருந்திருக்க வேண்டும். அல்லது இவளுடைய அழகில் நீ மயங்கி இருக்க வேண்டும். இவள் உன்னை ஏற்க மறுத்திருக்க வேண்டும்.'

'இரண்டும் இல்லை அரசே!'

'அப்படியானால் இவள் சோழ மன்னுடைய காதலி என்று நீ பழி சுமத்தக் காரணம்? எந்த ஆதாரத்தின் அடிப்படையில் பேசுகிறாய்?'

'ஆதாரம் இருக்கிறது அரசே!'

'என்ன ஆதாரம் இருக்கிறது' சொல். இப்பொழுதே சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் இந்தக் கட்டாரி உன்னுடைய மார்பைச் சுவைக்கும்.' கோதை திருமாறனை நோக்கி பயங்கரமாகச் சீறினாள் கட்டாரியை தூக்கி ஓங்கி வீசிக் காட்டினாள்.

திருமாறன் சிரித்தான். சிரித்துக் கொண்டே தன்னுடைய கச்சையில் மறைத்து வைத்திருந்த ஒரு ஓலைக் குழலை எடுத்தான். அதனைத் திறந்தான். அதிலிருந்து ஒரு ஓலையை எடுத்தான்.

ஓலையின் பெரும்பகுதியை கையால் மறைத்து மூடிக் கொண்டான். கோதையை நெருங்கினான். அவன் தன்னை நெருங்குவதை கவனித்த கோதை ஒரு அடி பின்புறம் எடுத்து வைத்தாள். ஆனால் அவன் அவளுக்கு நேருக்கு நேராகப் போய் நின்றான். ஓலையை அவளுக்கு நீட்டிக் காட்டிக் கொண்டே கேட்டான்:

'பெண்ணே, இந்த ஓலையில் உள்ள கைச்சாத்து யாருடையது? உன்னுடையதா, இல்லையா? உன்னுடையது இல்லையென்றால் சொல்லி விடு, நான் வற்புறத்தி உன்னிடம் எனக்குச் சாதகமான மறுமொழி வாங்குவதாக எண்ணி விடாதே.'

'இல்லை என்று மறுத்தால்?'

'நீ மறுக்கலாம். ஆனால் நமக்குப் பெரியவராக மன்னர் இங்கு இருக்கிறார். அவரே உன்னுடைய கைச்சாத்தை வேறு ஒரு ஓலையில் எழுதும்படிச் சொல்லுவார். அதனையும் இந்த ஓலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பார் தக்கதோர் தீர்ப்பு வழங்குவார். அரசே, நான் கூறியது சரியானதுதானா?'

'ஆம் திருமாறா, உன்னுடைய கருத்து மிகவும் சரியானதே.' இது அரசருடைய மறுமொழி.

கோதை அந்த ஓலையில் திருமாறன் கையால் 'மூடப் படாதிருந்த பகுதியை சிறிது நேரம் உற்றுப் பார்த்தாள். பின்னர் அமைதியாகக் கூறினாள்:

'ஆம். இது நான் எழுதியதுதான். இந்த ஓலைக்கும் இப்பொழுது நடக்கும் பேச்சுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

'இதனை எதற்காக, எப்பொழுது எழுதினேன் என்று எனக்கே நினைவில்லை. எங்கே, அந்த ஓலையைக் கொடுங்கள், பார்க்கலாம்.' கோதை ஓலையை வாங்கக் கையை நீட்டினாள். திருமாறன் அதனைக் கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக சிறிது தூரம் பின்னால் போய் நின்று கொண்டான்.

'கோதை நீ கெட்டிக்காரி. உன்னுடைய ஆற்றல் எனக்குத் தெரியும். இதனைக் கொடுத்தால் அடுத்த நொடியில் என்ன

செய்வாய் என்பதும் எனக்குத் தெரியும். பலரை நீ ஏமாற்றி இருக்கலாம். ஆனால் என்னிடம் உன்னுடைய நடிப்பு பலிக்காது. மீண்டும் கேட்கிறேன். இதில் உள்ள எழுத்துக்கள் நீ எழுதியவைதானா?'

'ஆம் நான் எழுதியவைதான். இதனையும் முன்பே சொல்லிவிட்டேன். எனக்குப் பொய் பேச வராது. அது மற்றவர்களின் சொத்து. என்னுடையதல்ல.'

'பெண்ணே, ஒரு தேர்வுக்கு நீ தேவை ஏற்படுத்தவில்லை. உண்மையை அப்படியே ஒப்புக் கொண்டாய். மகிழ்ச்சி. உண்மை விளம்பியே, உன்னைப் பாராட்டுகிறேன்.'

'மெத்த நன்றி பாராட்டுகளுக்கு' அலட்சியமாக முகத்தைக் கோணலாக்கிக் கொண்டு கூறினாள் கோதை.

'பெண்ணே, இந்த ஓலையில் எழுதப்பட்டிருக்கும் செய்தி உனக்கு நினைவிருக்கிறதா?'

'இல்லை.'

'நீ எழுதியது உனக்கே நினைவில்லையா?'

'எத்தனையோ ஓலைகளை எழுதுகிறேன். எல்லாம் நினைவில் நிற்குமா என்ன?'

'அதுவும் சரியே. நீ சொல்லுவதில் நியாயம் இருக்கிறது.'

'உன்னுடைய பாராட்டுக்கு மீண்டும் என் நன்றி.'

'அடுத்த பிரச்சினைக்கு வருவோம். ஓலையின் அடியில் இட்டிருக்கும் கையொப்பம் யாருடையது?'

கோதை யோசித்தாள். அவன் நீட்டிய ஓலையை உற்றுப் பார்த்தாள். திருமாறன் மீண்டும் கேட்டான்:

'தயங்காமல் சொல். இந்தக் கையொப்பம் உன்னுடையதா, இல்லையா? இல்லை என்று நீ சொன்னால் மன்னர் வேறு ஒரு ஓலையில் உன்னைக் கையொப்பம் இடுமாறு ஆணையிடுவார். இரண்டும் ஒப்பிட்டு தீர்ப்புச் சொல்லுவார்.'

'ஆம்,' இது அரசருடைய ஆமோதிப்புக் குரல்.

'இது என்னுடைய கையொப்பமே.' இது கோதை.

'மன்னரே, இந்த ஓலையை எழுதியது தான்தான் என இந்தப்பெண் ஒப்புக்கொண்டாள் அதன் அடியில் நாட்டியிருக்கும் கையொப்பமும் தன்னுடையதே என்பதை ஒப்புக் கொண்டாள். இரண்டும் தெளிவான உண்மைகள்.' திருமாறன் உற்சாகத்தோடு கூறினான்.

'ஆம்.' மன்னர் ஆமோதித்தார்.

'அரசே, இதோ இந்த ஓலையைப் பாருங்கள். அருள் கூர்ந்து தாங்கள் படிக்க வேண்டுகிறேன். பல புதிர்களுக்கு இதில் விடை காண்பீர்கள். பின்னர் தாங்கள் என்ன முடிவு செய்தாலும் சரியே.' திருமாறன் மன்னரை நெருங்கி அவரிடம் ஓலையைக் கொடுத்தான்.

மன்னர் அதனை வாங்கிப் படித்தார். அது ஒரு காதல் காவியம். அன்பில் நனைத்து காதல் சுவை சொட்டச் சொட்ட எழுதப்பட்ட அழகு ஓவியம்.

அதனைப் படித்த ஈழ வேந்தனுடைய முகம் அனல் எனச் சிவந்தது. கடுகடுப்பு தாண்டவமாடியது. மீசை துடித்தது. அவனுடைய கண்களில் கொட்டிய அனல் எரித்து விடுவதைப் போல கோதையைத் தாக்கியது. பலமாகக் கத்தினான். எரிமலையிலிருந்து கொட்டும் தீக்குழம்பென வார்த்தைகள் அவனுடைய வாயிலிருந்து கொட்டின.

'பெண்ணே, இந்த ஓலை ஒரு காதல் காவியம். நீ காதலிதான். ஆனால் நீ சொல்லியதைப் போல வீரபாண்டியனுடைய காதலி அல்ல. ஈழத்தின் பரம எதிரியான சோழன் இராசாதிராசனுடைய காதலி. திருமாறன் கூறியது அந்தனையும் உண்மை. இது நீ இராசாதிராசனுக்கு எழுதிய காதல் ஓலை. உன்னுடைய அழகில் நான் ஒரு கணம் மயங்கிவிட்டது உண்மைதான் அந்த மயக்கத்தின் விளைவாக ஈழ பூமிக்கே இழுக்குத் தேட இருந்தேன். அந்த மாபெரும் பாதகத்திலிருந்து என்னைத் திருமாறன் காப்பாற்றி விட்டான்.

'திருமாறா, உன்னால் ஈழ நாடே பிழைத்தது. ஒரு பெண்ணுக்காக ஈழ வேந்தன் பராக்கிரமபாகு மதி மயங்கி நாட்டையே கோட்டை விட்டான் என்ற பழிச் சொல்லிலிருந்து என்னைக் காப்பாற்றி விட்டாய். என்னை இழித்து, பழித்து வரலாறு எழுதாமல் காப்பாற்றி விட்டாய்.

'யாரடா அங்கே, ஓடி வாருங்கள். இந்தப் பெண்ணை இழுத்துக் கொண்டு போய் பாதாளச் சிறையில் அடையுங்கள். இந்த மோசக்காரியை துண்டு துண்டாக வெட்டிப் போட வேண்டும். நாய், நரி, கழுகுகளுக்கு இரையாகப் படைக்க வேண்டும். இவளுக்கு மரண தண்டனை விதிக்கிறேன்' பயங்கரமான வெறிகொண்டு கோபத்துடன் பேசிய மன்னுடைய குரல் அந்த அரண்மனை எங்கும் எதிரொலித்தது.

காவலர்கள் ஓடி வந்தார்கள். கோதையினுடைய இரு புறங்களிலும் நின்றார்கள். அவள் தலை குனிந்து தரையைப் பார்த்து நின்றாள். 'உம்' என்ற குரல் கேட்டு காவலர்களைத் தொடர்ந்து நடந்தாள்.

திருமாறன் மிடுக்கோடு அவள் காவலர்களுக்கு இடையில் நடந்து போவதைப் பார்த்துக்கொண்டே இருந்தான். வெற்றி கண்ட அவன் வதனத்தில் புன்முறுவல் விளையாடியது.

மன்னன் அவனை மார்போடு தழுவிக் கொண்டான் பின்னர் அவனுடைய தோள்மீது கரத்தைப் போட்டுக் கொண்டு கம்பீரமான நிமிர்ந்து நின்றான்.

திருமாறன் பலமாகச் சிரித்தான். அந்த சிரிப்பொலி கோதை வெகுதூரம் சென்ற பின்னரும் அவளுடைய செவிகளில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

8

ஈழ நாட்டு இளவரசி

ஈழ அரச அரண்மனையான கப்பகல்லகத்தைச் சூழ்ந்து ஒரு எழில்மிகு பொழில் வியாபித்திருந்தது. ஈழத்திற்கே சிறப்பு அளித்தவைகளில் அந்த அரசப் பூங்காவும் ஒன்று.

ஒருநாள் அந்தப் பூங்காவில் திருமாறன் அங்கும் இங்குமாக நடந்து கொண்டு இருந்தான். அவனுடைய முகத்தில் சிந்தனை ரேகைகள் படர்ந்திருந்தன. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இலயித்திருந்தான்.

அப்பொழிலில் ஓர் இடத்தில் ஒரு செயற்கைப் புதர். அழகான வண்ணமிகு இளந்தளிர்களைத் தாங்கிய கொடிகள் அப்புதரின் மீது படர்ந்து இருந்தது. அப்பொழுது பட்ட மரங்களெல்லாம் துளிர்க்கும் வசந்த காலம். கொடிகளிலும் பல்வேறு செடிகளிலும் தளிர்கள்தான் இருந்தன. இன்னும் அரும்புகள் விடவில்லை.

புதரின் ஓரம் திருமாறன் நடக்கும்போது ஒரு பெரிய அன்றலர்ந்த மலர் வந்து அவனுடைய முகத்தின்மீது விழுந்தது. அவன் திடுக்கிட்டு உற்றுப் பார்த்தான். அண்மையில் இருக்கும் புதரில் ஒரு அரும்புகூட இல்லை. எனவே புதரிலிருந்தோ அல்லது தலைக்குமேல் வியாபித்து இருக்கும் மரத்திலிருந்தோ வந்து மலர் மேலே விழ நியாயமில்லை. மேலே இருந்த மரமும் இன்னும் பூக்கவேயில்லை. எனவே அந்த மலர் எப்படி வந்தது என அவன் சிந்தித்தான், திரும்பிப் பார்த்தான்.

பின்னால் அவன் கண்ட தோற்றம்! அற்புத அழகுமிகு பளிங்குச்சிலை ஒன்று அங்கு நின்றிருந்தது. அவன் அந்தச் சிலையை விழித்துப் பார்த்தான்; உற்று நோக்கினான். அதனுடைய கண்கள் இமைத்தன. ஆ, அது சிலை அல்ல, பெண்! ஈழநாட்டு எழில் மடந்தை ஒருவள் எழில் சொட்ட முகத்தில் புன்முறுவல் பூத்தவாறு நிலத்தைப் பார்த்தபடியே நின்றாள். திருமாறன் திடுக்கிட்டான், திணறி விட்டான். அச்சம் அவனை ஆட்கொண்டது.

அந்தப் பாவையைப் பார்த்தால் அவள் சாதாரண மானிடப் பெண்ணாகத் தெரியவில்லை. அகில உலகத்திலுள்ள அழகிகளை எல்லாம் ஒன்று கூட்டி ஒரு அழகிப் போட்டி நடத்தினால் முதல் பரிசை அவளே தட்டிக் கொண்டு போவாள். அத்தகையவள் அரச அரண்மனைத் தோட்டத்தில் நிற்கிறாள் என்றால் அவள் சாதாரணப் பெண்ணாக இருக்க முடியாது. அரச குடும்பத்தைச் சேர்ந்தவளாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிடில் அரசனுக்காக அடியாட்களால் கொண்டு வரப்பட்டு படைக்கப்பட்ட பாவையாக இருக்க வேண்டும். எப்படி இருப்பின் என்ன? அது பெரிய இடத்து விவகாரம். எனவே அங்கிருந்து அப்பால் ஓடுவதே தன்னுடைய நிலையைப் பாதுகாத்துக் கொள்ள ஏற்ற செயல் என்று கருதிய அவன் அவ்விடத்தைவிட்டு வேகமாக நடந்தான்.

ஆனால் அவள் அவனைத் தொடர்ந்து ஓயிலாக நடந்து வந்தாள். ஒருக்கால் அவள் வேறு எங்கோ செல்லலாம் என்ற எண்ணத்தில் அவன் அவளுக்குப் பாதை விட்டு ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்றான். அவளும் நின்றாள். அவன் நடந்தான். அவள் தொடர்ந்தாள்.

இனியும் வாளாவிருப்பது ஏற்றதல்ல என்ற முடிவிற்கு அவன் வந்தான். பின்புறம் திரும்பினான். அவளைப் பார்த்துக் கேட்டான்:

'மாதரசி, நீ யார்? என்னை ஏன் தொடர்ந்து வருகிறாய்? உனக்கு என்னால் ஆக வேண்டியது என்ன?'

'இத்துடன் வினாக்கள் முடிந்து விட்டனவா இன்னும் இருக்கின்றனவா?, ஒலித்தது ஒரு கிண்கிணிநாதம்.

'உம்' என்றான் அவன். அவளையே வைத்து கண் வாங்காது உற்றுப் பார்த்தான். ஐயமும், அச்சமும் அவனுடைய விழிகளில் விளையாடின.

'ஒரு முக்கியமான வினாவைக் கேட்காமல் விட்டு விட்டீர்களே!' அவள் முத்துப்பல் வரிசை வெளியே தெரிய கூறினாள்.

என்னிடம் என்ன வினாவை எதிர்பார்க்கிறாய்? நான் என்ன ஆசிரியரா? இங்கு தேர்வா நடத்துகிறேன், வினாக்களைத் தேடிப்பிடித்துக் கேட்க?'

'இந்த வினாக்களைத் தாங்கள் அடுக்கக் காரணம் ஒரு மலர். தங்களுடைய முகத்தாமரையின்மீது ஒரு மலர் வந்து விழுந்தது. திடுக்கிட்டீர்கள் திரும்பிப் பார்த்தீர்கள். என்னை நோக்கி வினாக்களும் தொடுத்தீர்கள்!'

'ஆம்.'

'ஆமாம், என்னைப் பற்றி ஏதோதோ விசாரிக்கிறீர்களே, நான் யாராக இருந்தால் தங்களுக்கு என்ன? நான் இங்கு நின்றால்தான் தங்களுக்கு என்ன? தாங்கள் இந்த மண்ணின் காவலனா, அல்லது இந்தத் தோட்டத்தின் காவலனா என்னைப் பற்றி விசாரிக்க?'

'மாதரசி, நான் இரண்டுமே இல்லை. கேட்டது தவறுதான்.' அவன் திரும்பிச் செல்ல ஒரு அடி எடுத்து வைத்தான். ஆனால் அவள் மீண்டும் பேசினாள்:

'நில்லுங்கள். நான் சொல்ல வந்தது வேறு. தாங்கள் என்னைக் கேட்டு இருக்க வேண்டிய கேள்வி, என்மீது ஏன் மலரை எறிந்தாய் என்பதாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்ல வந்தேன்.

'அந்த வினா கேட்க வேண்டிய தேவையே இல்லை. பார்த்தாலே புரிகிறதே! விடைதான் தெளிவாகத் தெரிகிறதே!'

'விடை தெரிந்து கொண்டீர்களா? தங்களுடைய மலர் வதனத்தின் மீது நான் ஏன் மலரை எறிந்தேன் என்பதைப் புரிந்து கொண்டீர்களா? அது போதும். இனி வினாவிற்கும் இடமில்லை, அதற்கு மறுமொழி கூறி நேரத்தையும் வீணடிக்க வேண்டிய தேவையில்லை.'

'நல்லது, நான் வருகிறேன்.'

'ஏன் அவ்வளவு அவசரமா?'

'வீண் பேச்சு எதற்கு?' அவன் வேகமாக நடக்கத் துவங்கினான். பின்னால் ஓடி வந்தாள். அவன் சலிப்போடு மீண்டும் நின்றான்.

'என்னுடைய பெயர் சங்கவை. தங்களுடைய அன்பிற்காக அல்லும் பகலும் ஏங்கித் துடிக்கும் ஏழை. தங்களுடைய வினாக்களுக்கு இந்த பதில் போதுமா?'

'பெண்ணே, என்னுடைய அன்பிற்காக நீ ஏங்குகிறாயா? நான் யார் என்று அறிவாயா? இடம் மாறி காதல் வசனம்

பேசுகிறாய் என்று நினைக்கிறேன். நான் அயல் நாட்டுக்காரன். அதுவும் ஒரு எளிய போர் வீரன்.'

'இருக்கட்டுமே, தாங்கள் யார் என்று எனக்குத் தெரியாதா என்ன? எனக்கு மட்டுமா, தங்களை இங்கு யாருக்குத்தான் தெரியாது? ஈழ அரசரின் அந்தரங்க ஆலோசகரைப் பற்றித் தெரியாதவர்கள் இன்று இந்நாட்டிலேயே யாரும் இருக்க முடியாது.'

'நல்லது, அரண்மனையில் நடப்பதுகூட கவனித்து இருக்கிறாயே! நீ அரண்மனையில் பணிபுரியும் தோழியா? அல்லது உன்னுடைய தகப்பனார் அரண்மனையில் பணி செய்கிறாரா?'

'ஆம், என்னுடைய தகப்பனார்தான் இங்கு பணிபுரிகிறார்.'

'உன்னுடைய தகப்பனார் பெயர் என்ன? தொழில்?'

'என்னுடைய தகப்பனார் பெயர் பராக்கிரமபாகு. தொழில் அரசு ஆளுதல். நாடு ஈழம். உறைவிடம் கப்பகல்லகம். இது போதுமா? இன்னும் என்னைப் பற்றிய விவரங்கள் வேண்டுமா?'

'என்ன, என்ன! தாங்கள் சக்கரவர்த்தியின் திருமகளா?' திருமாறனுடைய வியப்பு உச்சிக்கே போய்விட்டது. அவனுடைய முகத்தில் அச்சம் படர்ந்தது.

'ஆம் பிரபு' அவள் மெதுவாகக் கூறினாள்.

'ஐயையோ, தாங்கள் யாரோ ஒரு சாதரணப் பெண் என்று நினைத்து விட்டேன். அலட்சியமாகவும் பேசி விட்டேன் இவ்வளவு நேரம் நிற்க வைத்தே நேருக்கு நேர் நின்று பேசிவிட்டேன். தாங்கள்தான் அரசகுமாரி என்று எனக்குத் தெரியாமல் போய்விட்டது. இது அரண்மனை மகளிர் உறையும் இடம் எனத் தெரிந்திருந்தால் இந்தப் பக்கமே வந்திருக்க மாட்டேன். வருகிறேன், மறுமுறை இப்பக்கம் தலைகாட்ட மாட்டேன் என்னை மன்னித்து விடுங்கள் தாயே!' இச்சொற்களை உதிர்த்த அவன் இரு கைகளையும் குவித்து அவளுக்கு வணக்கம் செலுத்தினான். பதட்டத்தோடு வேகமாக நடை போட்டான்.

'ஐயா, நீங்கள் போகக் கூடாது. நில்லுங்கள்.'

சங்கவை வேகமாக அவனைப் பின் தொடர்ந்தாள் நடந்தாள். அவன் நிற்கவில்லை. ஓரிடத்தில் அவள் அவனைக் கடந்து போய் முன்னாள் சென்றாள். அந்த சிறிய பாதையை

மறித்துக் கொண்டு அவன் எதிரில் இரு கரங்களையும் பக்க வாட்டில் நீட்டியபடி நின்றாள்.

திருமாறன் கதிகலங்கி விட்டான். செய்வதறியாது துடித்தான். நாலாபுறமும் திரும்பிப் பார்த்தான். யாரோ அண்மையில் அங்கு நடப்பதை கவனிப்பது போலத் தெரிந்தது. அண்மையில் இருந்த புதரின் அடியில் மறைந்து கொண்டு கவனிப்பது போலத் தென்பட்டது. அது ஈழமன்னராகத்தான் இருக்க வேண்டும். ஆனால் தலைப்பாகை மட்டும் அவனுடைய பார்வையில் பட்டு விட்டது. அவன் எச்சரிக்கையானான்.

மன்னரைக் கவனித்துவிட்டதாக அவன் காட்டிக் கொள்ளவில்லை. மன்னரே மறைந்தபடி அவனைக் கண் காணிக்கும்போது அவன் எப்படி அவரைக் கண்டு விட்டதாகக் காட்டிக் கொள்ள முடியும்? எனவே அவரைப் பார்க்காதது போலவே நடித்தான். சங்கவையைப் பார்த்துக் கூறினான்:

'அரசகுமாரி, தங்களை இதுவரை நான் கண்டதே இல்லை. என்னுடைய வழியை ஏன் மறிக்கிறீர்கள்? நான் அவசரமாக அரசரைப் பார்க்க வேண்டும். வழிவிட்டு நில்லுங்கள் தாயே!'

'ஆம், என்னைத் தாங்கள் கண்டிருக்க முடியாது. ஈழநாட்டு அரச குடும்பத்துப் பெண்கள் அந்நியருக்கு முன்னால் வரும் வழக்கமில்லை.'

'இது நல்ல வழக்கம். ஆனால் தாங்கள் அந்த வழக்கத்திற்கு மாறாக என் முன்னர் ஏன் வந்து நிற்கிறீர்கள் என்பதை அடியேன் அறியலாமா?'

சங்கவை இதற்கு மறுமொழி கூறவில்லை. அவளை நாணம் பிடுங்கித் தின்றது. முகம் குப்பெனச் சிவந்து விட்டது. தலை தாழ்ந்தவாறு நின்றாள். வலது பாதத்தின் பெருவிரல் தரையில் கோலங்களைத் தீட்டியது.

அவனே மீண்டும் பேசினான்:

'அரசகுமாரி, தாங்கள் அந்நியருக்கு முன்னால் வருவதும். வராததும் தங்களுடைய விருப்பம். அதனைப் பற்றிக் கேட்க நான் யார்? சொல்லப்போனால் நான் இந்த வினாவைத் தொடுத்திருக்கவே கூடாது. இது என்னுடைய தவறுதான்.'

'ஐயா, என்னுடைய பெயர் அரசகுமாரி என்பது அல்ல. சங்கவை என்று முன்பே சொல்லி இருக்கிறேன்.'

'நல்லது, சங்கவை என்பது அழகான பெயர்தான். நன்கு தேர்ந்தெடுத்தே தங்களுக்கு அரசர் பெயர் சூட்டி இருக்கிறார்.'

'ஐயா, என்னுடைய வயது பதினெட்டு. தங்களைவிட நான் சிறியவள்.'

'இருக்கட்டுமே, அதனால்?'

'என்னைப் பெயர் வைத்தே கூப்பிடலாம் என்கிறேன்.'

'அரசகுமாரி, பெயர் வைத்துக் கூப்பிட அடிப்படையானது வயது இல்லை. நான் ஒரு எளிய போர் வீரன். தாங்களோ ஈடு இல்லா ஈழ வேந்தருடைய ஏகப் புதல்வி. நான் தங்களைப் பெயர் வைத்து அழைப்பது தகுமா?'

'ஓ, அழைத்துப் பாருங்களேன். அதனால் ஆகாயம் பூமிக்கு வந்துவிடாது. மலைகள் பிளந்து மண்ணாகி விடாது. பூமி வெடித்துச் சிதறி விடாது.'

'அரசி, அழகாகத்தான் பேசுகிறீர்கள்!'

'என்னுடைய பேச்சு மட்டும்தான் அழகா?'

'தாங்களும் அழகானவர்தான். அரசகுமாரி!'

'மகிழ்ச்சி, ஆனால் மீண்டும் அந்த அரச்குமாரி தானா? என்னுடைய பெயர் சங்கவை என்று எத்தனை முறை சொல்வது?'

'தங்களுடைய விருப்பப்படியே அழைக்கிறேன் சங்கவை! நான் யாரென்று தெரிந்து கொண்டுதான் இப்படிப் பேசுகிறீர்களா?'

'ஓ, தெரியுமே, வீராதிவீரர் சூராதிசூரர் திருமாறர்! பாண்டி நாட்டு அரசன் வீரபாண்டியனுடைய உயிர்த் தோழர். ஈழ சக்ரவர்த்தியினுடைய அந்தரங்க ஆத்ம தோழர். அத்தகையவரை அறியாதவர் உண்டா? அறியாமல் இருக்கலாமா? இருக்கத்தான் முடியுமா? அது அரச தண்டனைக்குரிய குற்றமல்லவா?'

'இளவரசி, நன்றாகத்தான் பேசுகிறீர்கள்!'

'தங்களுடைய நற்சான்றுக்கு மெத்த மகிழ்ச்சி. நன்றி.'

'இளவரசி, இவ்வளவு நேரம் தங்களை நிற்க வைத்துக் கொண்டு தனிமையில் பேசியதே நான் செய்த தவறு. பேச்சை வளர்த்துவது நம் இருவருக்கும் நல்லதல்ல. தங்களுடைய உள்ளத்தின் ஓட்டத்தை நான் உணருகிறேன். அது தவறானது. அருள் கூர்ந்து அந்த எண்ணத்தைக் கிள்ளி எறிந்து விடுங்கள். சபலத்தை அகற்றி விடுங்கள் தங்களுடைய அன்பிற்குப் பாத்திரமாகும் தகுதி எனக்கு இல்லை.'

'ஏன் இல்லை?'

'முதலாவதாக நான் ஒரு பரம ஏழை. ஒரு எளிய போர் வீரன். ஈடும் இணையும் அற்ற ஈழநாட்டு அரசரின் புதல்வி எங்கே, ஒண்ட ஒரு வீடும் அற்ற இந்தப் போர் வீரன் எங்கே? இமயத்தின் உச்சியையும், ஆழ்கடலின் ஆழத்தையும் சமமாக்க இயலுமா தேவி?' அன்பரே, தமிழகம்தான் காதலுக்கு இலக்கணம் வகுத்தது எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த மண்ணில் பிறந்த தாங்கள் இப்படிப் பேசலாமா? இருப்பவர் இல்லாதவர், இவர் மன்னர் அவர் ஏவலாளி என்ற பேதங்களெல்லாம் காதலுக்கு உண்டா? அனைத்தையும் கடந்ததே அன்புநிலை என்பதை அறியாதவரா தாங்கள்? என்னைத் தாங்கள் உண்மையிலேயே புரிந்து கொள்ள வில்லையா? அல்லது என்னை அழ வைத்து வேடிக்கை பார்க்கிறீர்களா சுவாமி?' சங்கவையின் கண்களில் நீர் கொட்டி முகத்தின் வழியாகச் சென்று மார்பை நனைத்தது.

திருமாறன் அவ்விடத்தைவிட்டு அப்பால் செல்ல நடக்கத் துவங்கினான் சங்கவை அழுது கொண்டே நின்றாள். அவளுடைய விம்மல் ஒலியைக் கேட்ட அவனால் தொடர்ந்து நடக்க இயலவில்லை. மீண்டும் அவளிடமே திரும்பி வந்தான். அவளை உற்றுப் பார்த்தான். பெருமூச்சு விட்டான்.

அதுமட்டுமல்ல, அருகிலிருந்த புதரையும் உற்றுப் பார்த்தான். அங்கு மன்னர் அப்படியே மறைந்தவாறு இருப்பதும் தெரிந்தது. இளவரசியைப் பார்த்து வேதனையோடு பேசினான்:

'இளவரசி, நானும் மனிதப் பிறவிதான். மனிதனுக்கு இறைவன் படைத்த அத்தனை உணர்வுகளும் கொண்ட வாலிபன்தான் நான். எனக்கும் காதல் உணர்வு உண்டு. அழகு தேவதையை ஆராதிக்க தெரியாதவன் அல்ல நான். இன்று நான் தங்களுடைய அன்பிற்குத் தகுந்தவன் அல்ல. அருள் கூர்ந்து என்னுடைய உள்ளத்தில் சலனம் ஏற்படுத்த வேண்டாம்.'

'இன்று என்றால்?'

ஆம். இன்றுதான். எதிர்காலத்தில் எதுவும் நடக்கலாம், யார் கண்டார்கள்?'

'பிரபு' எனக் கூறிக்கொண்டே சங்கவை திருமாறனுடைய காலில் விழுந்தாள். அவனுடைய இரு பாதங்களையும் தொட்டு தன்னுடைய கண்களில் ஒத்திக் கொண்டாள் இதனைத் திருமாறன் எதிர்பார்க்கவில்லை. வேகமாக அப்பால் ஒதுங்கிக் கொண்டான். அவள் எழுந்து நின்றாள். வெட்கமும் வேதனையும்

அவளைப் பிடுங்கித் தின்றன. உணர்ச்சியால் ஆட்கொள்ளப் பட்ட அவள் தன்னையும் மீறி அவன் பாதத்தில் விழுந்து விட்டாள். தலையைத் தாழ்த்திக்கொண்டு குற்ற உணர்வோடு நின்றாள். அவள் கண்களில் இருந்து கொட்டிய கண்ணீர் தரையை நனைத்தது. திருமாறன் மெதுவாகப் பேசினான்:

'ஈழத்து இளவரசி!'

'ஐயா போதும். அருள்கூர்ந்து என்னை மீண்டும் இளவரசி என அழைக்க வேண்டாம். தங்களுக்கும் எனக்கும் இடையில் ஆழ் பள்ளமாக நிற்பதே இந்தப் பட்டம்தான். என்னைத் தங்களை விட்டுப் பிரிக்கும் இந்தப் பட்டம் எனக்கு வேண்டியதில்லை. இப்பொழுதே இதனை நான் துறக்கத் தயார். நான் ஒரு எளிய பெண்ணாக தங்களுக்குப் பின்னால் ஓடி வருகிறேன். நாம் இருவரும் சுதந்திரப் பறவைகளாக விண்ணில் பறந்து சுற்றுவோம். ஈழத்தைச் சுற்றி எண்ணற்ற தீவுகள் இருக்கின்றன. மனித அரவமற்ற தீவுகளும் இருக்கின்றன. அவற்றில் ஏதாவது ஒரு தீவில் நாம் குடியேறுவோம். எனக்கு நீங்கள், தங்களுக்கு நான். நாம் இருவர்தான் இருக்கவேண்டும். இடையில் யாருமே இருக்கக் கூடாது!'

'தேவி, தங்களுடைய கற்பனை உன்னதமானது!'

'ஆம், உன்னதமானதுதான். தங்களையும் பணிவோடு வேண்டுகிறேன். இக்கொடிய போர்த்தொழிலை விட்டு விடுங்கள். மனிதனை மனிதன் அழித்துக் கொண்டு சாகும் கொடிய அநாகரிக செயலுக்கு தாங்கள் ஒரு கருவியாக இருக்கக் கூடாது. இதிலிருந்து விடுபட்டு வாருங்கள் இனி எனக்கு ஊரும் வேண்டாம், உறவும் வேண்டாம்; உற்றாரும் வேண்டாம், சுற்றமும் வேண்டாம். காலமெல்லாம் தங்களுக்குப் பணிவிடை புரியும் ஒரு பணிப் பெண்ணாக ஏற்றுக் கொள்ளுங்கள். அது போதும் எனக்கு.'

'தேவி!'

'மீண்டும் என்ன தேவி பட்டம்? தெளிவாகச் சொல்லி விடுங்கள். என்னைத் தங்களுக்குப் பிடிக்கவில்லையா?'

'தேவி, இது என்ன வினா? மலரை விரும்பாத வண்டு உண்டா? நிலவை விரும்பாத கடல் உண்டா? ஆனால்...

'ஆனால் என்ன?'

'நான் சுத்த வீராதி வீரரான ஈழ மன்னருடன் கொஞ்ச காலம்தான் நெருங்கிப் பழகும் பேறு பெற்றேன். அந்தக் குறுகிய காலத்திலேயே அவர் எத்தகைய சத்தியசீலர் என்பதை உணர்ந்து கொண்டேன். அன்பின் சிகரம் அவர். அந்த மகத்தான மன்னருக்கு நான் துரோகம் செய்ய மாட்டேன். அவருக்குத் தெரியாமல் உன்னுடன் தொடர்பு கொள்ள மாட்டேன். அதே நேரத்தில் உன்னை என்னுடைய இதயத்தில் ஏற்றிப் பூசித்து வருவேன்.

'இப்பொழுது ஈழ வேந்தனின் மனம் புண்பட்டு இருக்கிறது. அம் மாவீரர் ஈழம் தமிழகத்தில் பெற்ற தோல்வியினால் துவண்டு இருக்கிறார். எனவே அத் தோல்வியைத் துடைக்க என்னால் இயன்ற அத்தனையும் செய்வதுதான் என்னுடைய குறிக்கோள். அதே நேரத்தில் உன்னை அடைய முயலுவேன். அதற்காக என்ன செய்வேன் தெரியுமா? மன்னருக்குத் தெரியாமல் நீ சொல்லும் கண் காணாத இடத்திற்கு உன்னுடன் ஓட மாட்டேன். ஒருகால் நாளைய போரில் என் வீரம் வெளிப்பட்டால் மன்னரேகூட என்னை உனக்கு மணம் முடிக்கலாம். அவ்வாறு நிகழ வாய்ப்பு ஏற்படவில்லையாயின் நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என நினைத்து உன்னை என் சிந்தையில் வைத்துப் பூசிப்பேன். இப்பிறவியில் உன்னைத் தவிர வேறு எவரையும் மனதால்கூட தீண்ட மாட்டேன். உன் நினைவாகவே இறப்பேன். இது உறுதி!' இச்சொற்களை உருக்கமாகக் கூறிவிட்டு, அவன் அவ்விடத்தை விட்டு வேகமாக நடந்தான். சங்கவை மறையும்வரை அவனைப் பார்த்துக் கொண்டே பெருமூச்சு விட்டவாறு நின்றாள்.

புதரின் மறைவில் மறைந்திருந்த மன்னன் திருமாறன் கூறிய சொற்கள் அனைத்தையும் தெளிவாகக் கேட்டான். அவனுடைய உள்ளம் மகிழ்ச்சியால் விம்மியது. இவன் அல்லவா மனிதன் என அவனை மனதால் பாராட்டினான். இத்தகைய மாப்பிள்ளை தனக்கு வாய்க்க இருப்பது தான் செய்த பேறு எனக் கருதினான்.

போர் வெற்றிகரமாக முடிந்த பின்னர் முதல் வேலையாகத் திருமாறனுக்கும் சங்கவைக்கும் திருமணம் முடிக்க வேண்டுமென உறுதி பூண்டான்.

அதே நேரத்தில் இன்னொரு புதிய திட்டமும் உள்ளத்தில் உதயமாயிற்று. ஈழம் தமிழகத்தை வென்ற பின்னர் அதற்கு திருமாறனைத்தான் மன்னனாக நியமிக்க வேண்டும்.

தன்னுடைய மாப்பிள்ளை ஒரு அரசனாக இருப்பதுதான் தனக்கும் சிறப்பு. தன்னுடைய புதல்விக்கும் சிறப்பு என்று கருதினான். அப்படியானால் சீவல்லபனுக்கு கொடுத்த வாக்கு? அவனை ஏமாற்றிவிட வேண்டியதே! அரசியலில் இதெல்லாம் இயல்பு.

இத்தகைய எண்ணங்களை மனதில் ஓடவிட்ட மன்னன் சங்கவைக்குத் தெரியாமல் அவ்விடத்தை விட்டு நடந்தான். அவனுடைய மனதில் மகிழ்ச்சி நிரம்பி இருந்தது. விண்ணில் பறப்பது போல ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்து பறந்து கொண்டிருந்தான் ஈழவேந்தன்.

9

வாள் உடைந்தது

சோழர்களுடைய வேவுக்காரி. சோழ மன்னன் இராசாதிராசனுடைய காதலி என்ற பட்டங்கள் கோதையின் மீது தக்க ஆதாரங்களுடன் சூட்டப்பட்டு விட்டன. நம்பத்தக்க முறையில் திருமாறன் அதனைச் செய்து முடித்தான். அதற்குத் தக்க ஆதாரமாகக் கோதை தன்னுடைய கைப்பட எழுதிய ஒரு ஓலை கிடைத்ததால் திருமாறனுடைய கூற்றை ஈழ மன்னன் முழுக்க நம்பி விட்டான். அவளுக்கு மரண தண்டனை விதித்து பாதாளச் சிறையில் தள்ளி அடைத்து விட்டான்.

வேவுகாரியான கோதையின்மீது ஈழ வேந்தன் எல்லையில்லா கோபம் கொண்டான். திருமாறன் மட்டும் தக்க தருணத்தில் அவளுடைய முகமூடியைக் கிழிக்காதிருப்பின் நிலைமை என்னவாகி இருக்கும்? இதனை நினைக்கவே ஈழ மன்னன் நடுங்கினான். அவன் மட்டும் தோன்றாத் துணைவனாக வந்து சேராதிருப்பின் ஈழ மன்னன் கோதையின் எழிலில் சிக்கி இருப்பான். அவள் ஆட்டுவித்தபடி ஆடியிருப்பான். அதனால் ஈழத்திற்குப் பேரிழப்பு நேர்ந்திருக்கும். நல்ல வேளையாக திருமாறன் தக்க தருணத்தில் வந்து ஈழ மன்னன் தவறு செய்யாது தடுத்துவிட்டான். அந்தக் கொடிய நாகப்பாம்புக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும். அதனுடைய தலையை நசுக்க வேண்டும். அடுத்த நாள் காலையே அவளைத் தூக்கில் தொங்கவிட வேண்டும் என்று ஈழ வேந்தன் முடிவு செய்து விட்டான். தண்டனையை நிறைவேற்றுமாறு ஏவலர்களைப் பணித்தும் விட்டான்.

மனித மனம் ஒரு குரங்கு எனப் பெரியோர்கள் கூறியுள்ளார்கள். பாரக்கிரமபாகு தன்னுடைய அருமைப் புதல்வி சங்கவைமீது உயிரே வைத்திருந்தான். திருமாறனிடம் அவள் காதல் காவியம் படித்தாள். புதரில் மறைந்தவாறு மன்னன் அத்தனையும் கேட்டுக் கொண்டு இருந்தான். திருமாறன் சங்கவை சந்திப்பு முதலில் அவனுக்கு சினமே அளித்தது. ஆனால் காதல்

வார்த்தைகள் காதில் மோதமோத, அவன் உவகையை அடைந்தான். தன்னுடைய புதல்வி உலகம் அறியாத சிறுமி என்று அதுவரை நினைத்து இருந்தான். ஆனால் அவள் போட்ட போடு! அப்பப்பா, பிரமாதம் என அரசன் வியந்தான். அவள் எவ்வளவு கெட்டிக்காரி? சங்கவை பாடிய காதல் காவியத்தை மீண்டும், மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து பூரித்தான் ஈழ பூபதி.

அவன் தன்னுடைய புதல்வி உலகம் அறியாத பெண் என்று மனப்பூர்வமாக நம்பிக்கொண்டு இருந்தான். ஆனால் அது எவ்வளவு பெரிய தவறு! அவன் உண்மையிலேயே கெட்டிக்காரி, அவள் எப்படி காதல் கலையில் அத்தனை ஆற்றல் பெற்றாள் என்று வியந்தான். ஆனால் சங்கவை ஒரு திருட்டுப் பெண்! மன்னன் செல்லமாக மனதில் அவளைக் கடிந்து கொண்டான்.

'நான் அவள்மீது உயிரையே வைத்திருக்கிறேன். அவள்தான் எனக்கு உயிரும் உலகமும் என நம்பிக் கொண்டு இருக்கிறேன். ஆனால் அவள் நேற்று வந்த திருமாறனுக்காக என்னை விட்டுக் கண் காணாத இடத்திற்கு ஓடத் தயாராகி விட்டாள். நல்ல வேளை, திருமாறன் நல்லவனாக இருக்கிறான் இல்லாவிட்டால்இந்நேரம் இருவரும் இந்நகரை விட்டே ஓடியிருப்பார்கள்!' அப்படி ஒன்றும் நேராததற்காக ஆறுதல் அடைந்தான்.

காதல், நல்ல காதல்! காதல் வலிமையானதுதான் என்று மன்னன் நினைத்து புன்முறுவலித்தான். காதலைப் பற்றிய கற்பனையை ஓடவிட்டான். காதலுக்காக உயிர் நீத்தவர்களைப் பற்றிய அமர காவியங்களை நினைவுக்கு கொண்டு வந்தான். அந்த காவியங்களில் அழியாத இடம் பெற்ற எழில் இராணிகளெல்லாம் ஒவ்வொருவராக நினைவுக்கு வந்தார்கள். அந்த வரிசையிலே மன்னனுக்கு முன்னர் ஒரு புதிய எழில் இராணி வந்து நின்றாள். புன்னகை சிந்த கண் சாடை காட்டி அவனை அருகில் அழைத்தாள்.

'ஆ! அவள் மானிடப் பெண்ணே அல்ல. அழகுக்கே அழகு செய்பவள் அவள். அந்த மோகன முறுவலுக்கும், முல்லைச் சிரிப்பிற்கும் மூன்று உலகங்களும் ஈடாக மாட்டாது. அந்த எழிலரசியின் பாதம் பட்டதே ஈழ நாட்டு செய்த பாக்கியம். அந்த நாட்டின் மன்னன் செய்த பெரும் பேறு! அவள் மட்டும் தீய எண்ணத்தோடு அங்கு வராதிருப்பின் இந்நேரம் பாதாளச் சிறையிலா இருப்பாள்? பட்டத்து இராணியாக மன்னனின் பக்கத்தில் அமர்ந்திருப்பாள்!

'என்ன கொடுமை! எழிலரசி கோதை கொடிய பாதாள சிறையில் எப்படி எல்லாம் துன்பப்படுகிறாளோ? உணவு உண்டிருப்பாளோ, இல்லையோ? பாவம் பட்டினி கிடந்ததால் அந்த எழில் பிம்பம் இளைத்து விட்டதோ?

'நாளை காலை அவளுக்கு மரண தண்டனை நிறை வேற்றுவார்கள். ஈடற்ற அந்த எழில் இராணியைக் கொன்று விடுவார்கள். அவளுடைய கயல் கண்கள் பிதுங்கிக் கொண்டு வெளியே வந்துவிடும். அவளுடைய நா நீண்டு கோரமாகத் தொங்கும். கொடுமை, கொடுமையிலும் கொடுமை!

'அவளைக் கொல்லுவது என்பது அழகுக்கே அநீதி செய்வதாகும். பல நாட்கள் தவமிருந்து இறைவன் படைத்த அந்த அழகு உருவத்தைக் கொல்லுவதின் மூலமாக இறைவனுக்கே சவால் விடுகிறேனா? எழில் என்றால் என்ன என்பதை இவ்வுலகோருக்குக் காட்ட இறைவன் படைத்த படைப்பு அவள்! அவளை அழிப்பதின் மூலமாக இறைவன் விருப்பத்திற்கு எதிராக செயல்படுகிறேனே', இவ்வாறு எல்லாம் ஈழவேந்தன் சிந்தனையை ஓட்டினான்.

'ஆனால் இப்பொழுது நினைத்தாலும் அவளைக் காப்பாற்ற முடியும். அவளைக் காப்பாற்றுவதா? அவள் செய்தது சாதாரணக் குற்றமல்ல. அவள் அரச துரோகி. எதிரியின் வேவுக்காரி. ஈழத்தின் பரம வைரியான இராசாதிராசனின் அன்புக் காதலி. அவளைக் கொல்லத்தான் வேண்டும். இதில் மீண்டும் ஆலோசிக்க இடமே இல்லை.

'அந்த எழில் பெட்டகம் இதே அரண்மனையில், என்னுடைய நிழலில், என்னுடைய பாதுகாப்பில் இருக்கிறாள். அவளை நான் என்ன வேண்டுமானாலும் செய்ய இயலும். அந்த அழகை ஆராதிக்கவும் இயலும், அழிக்கவும் இயலும். அவளை அழிக்கும் துர்ப்பாக்கிய நிலையில் நான் இருக்கிறேன். அவள் அழகானவள்தான். ஆனால் அழகாக உள்ளது என்பதால் நச்சுப் பாம்பை அணைத்துக் கொள்ள முடியுமா? நாளை காலை கொல்லப்பட வேண்டியவளே அந்த எழிலரசி.

'இந்நேரம் அவள் எப்படி இருப்பாள்? நாளைக் காலை மரண தண்டனை என்ற செய்தி அவளுக்கு எட்டி இருக்கும். மயங்கி விழுந்திருப்பாளோ? அந்தோ பாவம்! ஒரே ஒரு முறை அவள் எப்படி இருக்கிறாள் என்று பார்த்தால் என்ன?

தொலைவிலிருந்து பார்த்தால் என்ன தவறு? நான் என்ன குற்றவாளியைக் காப்பாற்றுவதற்காகவாஅங்கு போகிறேன்?

'அவள் மாபெரும் குற்றவாளி. அத்தகையவளை நான் ஏன் போய்ப் பார்க்கவேண்டும்? அவள் எப்படி துடித்தால் எனக்கு என்ன? இதுவரை எத்தனையோ பேரைத் தூக்கில் மாட்டுமாறு ஆணையிட்டு இருக்கிறேன். அவர்களெல்லாம் எப்படிக் கண்ணீர் விடுகிறார்கள் என்று இதற்கு முன்னர் போய்ப் பார்த்து இருக்கிறேனா? இவளை மட்டும் ஏன் பார்க்க வேண்டுமென்று உள்ளம் நினைக்கிறது?' இவ்வாறும் மன்னன் மனம் ஓடியது. அவளைப் பார்க்கலாம், கூடாது என்ற மனப்போராட்டம் அவனுடைய உள்ளத்தில் தீவிரமாக நடைபெற்றது.

'உலகம் காணாத அழகு இன்னும் ஒருசில நாழிகைகளில் அழியப் போகிறது. அவளுடைய துரோக உள்ளத்திற்கு அல்ல, அழகு உடலுக்கும் அனுதாபம் தெரிவிக்கும் முகத்தான் ஒரே ஒருமுறை அவளைப் போய்ப் பார்த்தால் என்ன? ஆனால் யாராவது பார்த்துவிட்டால் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? ஆனால் இந்த நடுநிசியில் யார் என்னை கவனிக்கப் போகிறார்கள்?

'அதிகமாகப் போனால் பாதாளச் சிறைக் காவலர்கள் என்னைப் பார்க்க வாய்ப்பு உண்டு. அவர்கள்தான் வெளி உலகிற்கு வரவே கூடாது எனத் தடை விதிக்கப்பட்டு இருக்கிறதே! எனவே அவர்கள் என்னை பாதாளச் சிறையில் பார்த்தாலும் அதனை யாருடனும் சொல்ல வேண்டிய நிலை ஏற்படாது.

'நாளைக் காலையில் உயிர்விடப் போகிறோமே என்ற கவலையில் கோதை அழுது கொண்டு இருப்பாளோ அல்லது உறங்கிக்கொண்டு இருப்பாளோ? விழித்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருப்பாளோ? இருக்காது. அவள் கல் மனதுக்காரி. மரண தண்டனையைப் பொருட்படுத்தாது மல்லாந்து படுத்து தூங்கிக் கொண்டு இருப்பாள். ஆடை குலைய உறங்கும் அவளுடைய மார்பகங்கள் மலைகளுக்குப் போட்டியிடும்! ஒரே ஒருமுறை அவற்றைப் பார்த்து விட்டால் என்ன? இப்பொழுது விட்டால் இனி வாழ்நாளில் அவ்வாய்ப்பு கிட்டவே கிட்டாது. நான் என்ன அவளைக் கட்டி அணைக்கவா போகிறேன்? குற்றவாளியை விடுதலை செய்யவா போகிறேன்? ஒரே ஒருமுறை அவளைக் கண்ணால் கண்டு களிக்கப் போகிறேன். இதில் என்ன தவறு? இதனால் யாருக்கு என்ன பாதிப்பு?' அவனுடைய சிந்தனை சபலங்களால் ஆட்கொள்ளப்பட்டு ஆடியது. காமவெறி தலைக்கு ஏறி தத்தளித்தான். பெற்ற

மகளுடைய காதலைப் பற்றி சிந்திக்கப் போய் அது வேறு உருவெடுத்து மன்னனுடைய உள்ளத்திலே காமத்தீயாக வளர்ந்து விட்டது.

அதே இரவு, அதே நடுநிசி. திருமாறனுக்கும் உறக்கமே வரவில்லை. அவன் இதயத்தில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள். விடிந்தால் கோதை தூக்கில் தொங்குவாள். அந்தப் பேயின் வாழ்வு அத்துடன் முடிவு பெறப் போகிறது. இனி அவளால் யாருக்கும் எந்த தீமையும் ஏற்படாது. அவளுடைய ஆட்டமும், பாட்டும் அடங்கி ஒழியப் போகிறது. இனி அவளை யாராலும் காப்பாற்ற முடியாது. அவளைப் படைத்த நாராயண மூர்த்தியாலும் அவளுடைய முடிவைத் தடுக்க முடியாது. அது மகிழ்ச்சிக்குரியது. மனப்பூர்வமாக வரவேற்க வேண்டியதே!

இந்த சிந்தனைகளின் மகிழ்ச்சியில் திளைத்திருந்த அவனுடைய உள்ளத்திலும் ஒரு விபரீத ஆசை தலை தூக்கியது. கோதையை ஒரே ஒருமுறை பார்த்தால் என்ன? ஈழ மன்னனுக்கு ஏற்பட்டது போல திருமாறனுக்கு அவள் மீது ஆசைவந்து விடவில்லை. கவர்ச்சி ஏற்பட்டு விடவில்லை.

ஒரு முக்கியமான செய்தியைப் பற்றி அவளைக் கேட்க அவன் விரும்பினான். அன்று இரவு அவளைக் கேட்காவிட்டால் இனி என்றுமே கேட்கும் வாய்ப்பு இருக்காது. அவள் உயிருடன் இருந்தால்தானே கேட்பதற்கு? அதனைப் பற்றி அவளிடம் கேட்டுப் பார்த்தால் என்ன?

'மரணத்தின் நிழலில் நிற்கும் மனிதனுக்கு ஞானோதயம் தோன்றுகிறது எனப் பெரியோர் சொல்லுவார்கள். கோதையும் இப்பொழுது மரணத்தின் வாயிலில் நிற்கிறாள். ஒருக்கால் அவள் தான் செய்த தவறுகளை நினைத்து மனம் ஏங்கலாம். திருத்திக் கொள்ளுவதற்கு ஏதுவான தவறுகளை திருத்திக் கொள்ளலாம் என அவள் மனம் நினைக்கலாம். கேட்கும் தகவலை அவள் உள்ளபடி சொன்னாலும் சொல்லலாம். எனவே அவளைச் சந்தித்துக் கேட்டால் என்ன? முயன்று பார்க்கலாம்.'

இத்தகைய சிந்தனையுடன் திருமாறன் பாதாளச் சிறையை நோக்கி நடைபோட்டான். ஈழ மன்னனின் அந்தரங்க நண்பனான அவன் எந்த நேரத்திலும், எங்கும் போகலாம். அவனுக்கு அரண்மனையில் எவ்விதமான தடையும் கிடையாது. அவனைத் தடுப்பார் யாரும் இல்லை. மிடுக்குடன் பாதாளச் சிறைக்குப் புறப்பட்டான்.

ஈழ அரசு அரண்மனைக்கு அடியில் அமைக்கப்பட்டு இருந்தது பாதாளச் சிறை. சிறையின் வரிசையாக பல அறைகள் இருந்தன. கோதை ஒரு அறையில் அடைக்கப் பட்டிருந்தாள். மற்ற அறைகள் அனைத்தும் காலியாகவே இருந்தன. கோதை அடைக்கப்பட்டிருந்த அறையின் கதவு இரும்புக் கம்பிகளால் செய்யப்பட்டிருந்தது. கம்பிகளுக்கிடையில் இருந்த இடைவெளியின் மூலமாக அவள் உள்ளே அமர்ந்திருப்பது நன்றாகத் தெரிந்தது. கதவிற்கு இருபுறங்களிலும் வெளியே இரு பந்தங்கள் எரிந்து கொண்டு இருந்தன. அவற்றின் ஒளி அவள் மீது பட்டதால் அவளை நன்றாகவே காண முடிந்தது. பந்தங்களை ஒட்டி பக்கத்திற்கு இரு காவலர்கள் வீதம் நின்ற நிலையிலேயே அவளைக் காவல் காத்தார்கள்.

திருமாறன் கையில் ஒரு பந்தம் தாங்கிக் கொண்டு மேலிருந்து படிகளின் மூலமாக இறங்கி அங்கு வந்தான். அவனைக் காவலர்கள் எதிர்பார்க்கவில்லை. அவனைக் கண்டவுடன் திடுக்கிட்டார்கள். பயபக்தியுடன் வணங்கினார்கள். அடக்கமாக ஒதுங்கி நின்றார்கள். திருமாறன் அவர்களை பார்த்துக் கூறினான்:

'காவலர்களே, இந்தக் கைதியிடம் நான் மரண வாக்குமூலம் வாங்க வேண்டும். எனவே இங்கு யாரும் இருக்கக் கூடாது. நீங்கள் அப்பால் போய் அதோ அந்தக் கடைசி அறையின் ஓரமாக நில்லுங்கள். நான் அழைக்கும் போது வந்தால் போதும்.'

காவலர்கள் அவனுடைய ஆணையின்படி கடைசி அறையின் ஓரமாக நின்று கொண்டார்கள். அங்கு இருளில் நின்றவாறு காத்திருந்தார்கள்.

திருமாறன் தன்னுடைய கரத்தில் தாங்கிக் கொண்டு சென்ற பந்தத்தை சிறைக்கதவுக்கு அருகில் செருகி வைத்தான். உள்ளே இருந்த கோதை அவன் வருவதைக் கதவுக் கம்பிகளின் இடைவெளி வழியாகப் பார்த்தாள். அவனை பொருட்படுத்தாது அலட்சியமாக அமர்ந்து கொண்டிருந்தாள். அவன் வெளியில் நின்றபடியே அவளைப் பார்த்தான். அவனாகவே பேச்சைத் துவங்கினான்.

'கோதை! உன்னைத்தான் பார்க்க வந்தேன். அருள் கூர்ந்து சற்று முன்னால் வர முடியுமா?'

'ஓ திருமாறரா! வரவேண்டும், வரவேண்டும். உமது வரவு நல்வரவு ஆகுக!' இவ்வாறு கூறிக் கொண்டே கோதை எழுந்து

நின்றாள். இரு கரங்களையும் கூப்பி அவனை வரவேற்பது போல பாவனை காட்டி நடித்தாள். அவளுடைய போலித்தனமான நடிப்பு திருமாறனுக்குத் தெரியாது இல்லை. அவளைக் கேட்டான்:

'பெண்ணே, இன்னும் இரண்டு யாமங்கள் கழித்து இறக்கப் போகிறாய். விளையாட வேண்டிய தருணமா இது?'

'ஐயா, ஏன் விளையாடக் கூடாது? இரண்டு யாமங்கள் கழித்து நான் இறப்பது உறுதி என்று ஆகிவிட்டது. பெருத்த முயற்சி எடுத்து எமனைத் தேடிப் பிடித்து என்னை அழைத்துக் கொண்டு போக ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். அதில் பெரும் வெற்றி பெற்று விட்டீர்கள். மரணம் உறுதி என்று ஆகிவிட்ட பின்னர் அழுது புலம்பினால் மறலி கருணை காட்டி விட்டுவிடவா போகிறான்? அழுது கொண்டே சாவதைவிட ஆனந்தமாக இருந்துவிட்டு சாவது சிறப்பல்லவா? மேலும், இந்நிலையில் நான் மகிழ்ச்சியாக இருப்பது தங்களுக்கு ஏமாற்றமாக இருக்கும். தங்களுடைய ஏமாற்றம் எனக்கு மகிழ்ச்சியை அதிகமாக்குகிறது!

'பெண்ணே, உண்மையிலேயே உனக்கு உயிரின்மீது ஆசையில்லையா?'

'எனக்கு உயிரின்மீது ஆசை இல்லை என்று நான் தங்களிடம் எப்போது கூறினேன்?'

'அப்படியானால்.....!'

'சொல்லுங்கள், அப்படியானால் என்ன? உயிர்ப் பிச்சை வேண்டுமா என்று கேட்பீர்கள். நான் 'ஆம்' என்று கூறி உயிருக்கு மன்றாடுவேன் என எதிர்பார்ப்பீர்கள். அதற்கு விலை கொடு என்று கேட்பீர்கள்! அல்லவா? ஐயா, இதெல்லாம் வழக்கமான பாடம். வாய்ப்பு ஏற்படும் பொழுதெல்லாம் உயர்நிலையில் நிற்பவர்கள் கீழ்நிலையில் நிற்பவர்களைப் பார்த்துத் தொடுக்கும் வினாக்கள் இவை. ஆனால் நான் அப்படி எல்லாம் யாசகம் கேட்கும் பெண் அல்ல என்பது தங்களுக்கே தெரிந்திருக்க வேண்டும்.'

'பெண்ணே, நான் மனம் வைத்தால் உன்னை மரணத்தின் வாயிலிருந்து மீட்க மடியும். ஏன், உனக்கு விடுதலை தேடித் தரவே என்னால் இயலும்.'

'முடியலாம், தாங்கள்தான் சூராதிசூரர் ஆயிற்றே! தங்களால் எல்லாம் முடியும். ஆனால் இப்பொழுது இந்த

வீரப்பிரதாபங்களை எல்லாம் என்னிடம் வந்து ஒப்புவிக்கக் காரணம்?'

'காரணமா? உன்மீது உள்ள பற்றுதான்.'

'என்மீது தங்களுக்குப் பற்றா? நான் செய்த பாக்கியம்!' அவள் வாய்விட்டு சிரித்தாள்.

'உனக்கு இப்பொழுது என்ன வேண்டும் கேள்?'

'தாங்கள் இவ்விடத்தை விட்டுப் போனால் போதும்.'

'விளையாடாதே.'

'துன்பத்தை மறக்க விளையாட்டுதான் தக்க மருந்து.'

'நேரடியாகக் கேட்கிறேன். நீ விடுதலையை விரும்புகிறாயா?'

'ஐயா, தாங்கள் வினா தொடுக்கிறீர்கள். விடையையும் சொல்லுகிறீர்கள். என்னைக் காப்பாற்றுங்கள் என்று தங்கள் பாதத்தில் மண்டியிட்டு நான் கெஞ்ச வேண்டும் என எதிர் பார்க்கிறீர்கள். அது எனக்குத் தெரியும். மற்றொன்றும் தெரியும். அதுதான் இந்த உயிரினுடைய மதிப்பு. ஒருக்கால் உங்களுடைய தயவில் இன்று உயிர் பிழைப்பதாகவே வைத்துக் கொள்ளுவோம். என்றுமே தாங்கள் என்னைக் காப்பாற்ற முடியுமா? இந்த உயிர் நிலையானதா? அழிவற்றதா என்ன? நாளை போனால் என்ன, நான்கு நாட்கள் கழித்துப் போனால் என்ன? எனவே இந்த அற்ப வாழ்விற்காக தங்களிடம் உயிர்ப் பிச்சைக் கேட்கும் இழிவானவள் நான் என்று நினைக்க வேண்டாம். இந்தக் கோதையை இன்னும் உங்களுடைய கூட்டம் நன்கு புரிந்து கொள்ளவில்லை!'

'கோதை, நீ உயிர்ப் பிச்சைக் கேட்க வேண்டாம். நீ பெரியவளாகவே இரு. நான் உன்னிடம் ஒரு பிச்சை கேட்கிறேன். உன்னிடம் பணிந்து யாசிக்கிறேன். ஒரு உதவி செய்வாயா?'

'ஐயா, உயிர் விடப்போகும் இந்தக் கைதியிடம் என்ன இருக்கிறது. தாங்கள் யாசிப்பதற்கு?'

'இருக்கிறது.'

'என்னவோ?'

'கோதை, இரண்டு சோழ அரச குமாரர்களை நீ அரண்மனையிலிருந்து கடத்திக் கொண்டு போனாய் அல்லவா?'

'ஆம். நான் இல்லை என்று சொல்லவில்லையே!'

'கோதை, அருள் கூர்ந்து அந்த இரு பிள்ளைகள் தற்பொழுது எங்கு இருக்கிறார்கள் என்று சொல்லி விடு. உன்னைக் கைகூப்பி வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.'

'ஐயா, போதும். தாங்கள் கைகூப்பி மன்றாடி கேட்கும் அளவிற்கு அவர்கள் உள்ள இடம் இரகசியமானது அல்ல.'

'அப்படியானால், சொல் எங்கே இருக்கிறார்கள்?'

'உங்களுடைய ஒற்றன் அந்த சமணப் பேய் சித்தன் அறிவானே! அவனைக் கேட்டிருக்கலாம்.'

'அப்படியா? அப்பிள்ளைகள் இருக்குமிடம் சித்தனுக்குத் தெரியுமா?'

'ஆம், அவனுக்கு நன்றாகத் தெரியும். உண்மையில் தங்களுக்கு அவர்களைப் பற்றித் தெரியாதா?'

'சத்தியமாகத் தெரியாது.'

'தாங்கள் சொல்லுவதை நம்புகிறேன். தெரிந்திருந்தால் இந்த நேரத்தில் இங்கு வந்து என்னைக் கெஞ்ச மாட்டீர்கள். ஆனால் அந்தக் கிழவன் சிற்றம்பலம் கெட்டிக்காரர். சித்தன் இந்த உண்மையை யாருக்கும் வெளியிடாமல் அவர் தடுத்திருக்கிறார்.'

'அவர் எப்படியோ இருக்கட்டும். அருள்கூர்ந்து எனக்கு உண்மையைச் சொல் கோதை! சோழ குமாரர்கள் எங்கே இருக்கிறார்கள்?'

'திருச்சிற்றம்பலமுடையாருடன் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள்.'

'அவர்தான் இறந்துவிட்டாரே! அது தெரியாதா உனக்கு?'

'தெரியும். அது தெரிந்தால்தான் சொல்லுகிறேன்.'

'இறந்தவரோடு உயிரோடு இருக்கும் பிள்ளைகள் எப்படி விளையாட முடியும்? புரியவில்லையே.'

'எமபுரியில் திருச்சிற்றம்பலமும், பிள்ளைகளும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்லுகிறேன்.'

'என்ன உளறுகிறாய்? உண்மையைச் சொல்ல மாட்டாயா?' திருமாறனுடைய பேச்சில் பணிவு போய் சூடு தென்பட்டது.

'ஆம், ஐயா! உண்மையைச் சொன்னால் உடம்பு எரிகிறதா? அதற்கு நான் என்ன செய்ய இயலும்? நான் சொல்லுவது

உண்மை. காலன் வாயிற்படியில் நிற்கிறேன். இப்பொழுது கூட உண்மையைச் சொல்லாவிட்டால் வேறு எப்பொழுது சொல்ல முடியும்? உண்மை கசப்பானதுதான். பொய்தான் இனிப்பானது. தங்களுக்கு இனிப்பு வேண்டுமென்றால் பொய் சொல்ல நான் தயார்!' கோதை கேலியும் கிண்டலுமாகப் பேசினாள். திருமாறன் வேதனையோடு கேட்டான்:

'கோதை, நீ என்னதான் சொல்லுகிறாய்?'

'ஐயா, சோழ அரச குமாரர்களை நான் கொன்று பகை முடித்துக் கொண்டேன். இதற்கு உங்களுடைய சித்தனே சாட்சி. அவன் கண் எதிரிலேயே பிள்ளைகளைப் பலியிட்டோம். உடல்களை வெள்ளாற்றில் எறிந்தோம். சித்தன் இச்செய்தியை உங்களுக்கெல்லாம் சொல்ல வேண்டுமென ஆசைப்பட்டேன். அதனால்தான் அன்று அவனை அப்பிள்ளைகளுக்குத் துணையாக அனுப்பாமல் உயிர் வாழவிட்டேன்.

'ஆனால், உண்மையிலேயே உங்களுடைய அமைச்சர் திருச்சிற்றம்பலம் மிகவும் கெட்டிக்காரர். என் நோக்கத்தைப் புரிந்து கொண்டு, அதனைக் கெடுத்து விட்டார் என்று இப்பொழுது தெரிகிறது. சித்தனுடைய வாயை அடைத்து விட்டிருக்கிறார்.'

'எப்படி இதனை இவ்வளவு தெளிவாகச் சொல்கிறாய்?'

'இல்லாவிட்டால் இதனைப் பற்றி இப்பொழுது என்னைக் கேட்டிருக்க வேண்டிய தேவையே வந்திருக்காதே! என்ன இருந்தாலும் திருச்சிற்றம்பலம் அறிவாளி! பாவம், எமன் அழைத்துக் கொண்டான். அந்தப் புண்ணியவான் உண்மையை மறைத்தது ஊரை ஏமாற்றத்தான். ஆனால் உண்மை ஒரு நாளைக்கு வெடித்தே தீரும்.' இச்சொற்களைக் கூறிய கோதை நிறைந்த மனதுடன் கலகலவெனச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு பாதாளச்சிறை எங்கும் பயங்கரமாக எதிரொலித்தது.

'பாதகி! உண்மையிலேயே குழந்தைகளைக் கொன்று விட்டாயா?' பதட்டத்தோடு திருமாறன் கேட்டான். அச்செய்தி அவனுக்குப் புதியது. அது அவனுக்கு அச்சத்தையும் அதிர்ச்சியையும் அளித்தது. நிலை குலைந்து விட்டான்.

'ஆம். ஐயா, எத்தனை முறை சொல்லுவது? இது சத்தியம். மீண்டும் சொல்கிறேன். அவர்களை யமனுக்கு விருந்தாகப் படைத்து விட்டேன்.'

'அரச இளவல்களைக் கொன்று முடித்த மனநிறைவினால் தான் இப்படி மகிழ்ச்சியுடன் இருக்கிறாயா? சாவைக் கண்டு கலங்காது இருப்பதின் காரணம் வேலையை முடித்து விட்டோம் என்பதாலா சண்டாளி!'

'தாங்கள் நினைப்பது தவறு, மரணம் எனக்கும் வருத்தம் அளிக்காமல் இல்லை. உண்மையில் நான் உயிர் பிழைக்கவே விரும்புகிறேன். ஆனால் அது நடக்காதே!'

'பாதகி, இரு இளம் உயிர்களின் இரத்தத்தைக் குடித்து விட்டாயா? பிணம் தின்னும் கழுகே, பிறர் உயிர் உனக்கு அற்பம். ஆனால் உன்னுடைய உயிர்மீது மட்டும் அத்தனை ஆசையா?'

'ஆம். உண்மையிலேயே இப்பொழுது உயிர் விடுகிறாமே என்ற வேதனை இல்லாது இல்லை. ஏனென்றால் இன்னொரு முக்கியமான வேலை பாக்கி இருக்கிறது. அதற்கு இந்த உயிர் பயன்படாமல் முன் கூட்டியே போகிறதே என்பதுதான் என் ஏக்கம்.'

'உனக்கும் இன்னும் வேலை இருக்கிறதா?'

'ஆம், இருக்கிறது.'

'அது என்ன வேலை?'

இராச கம்பீரன், இராச மார்த்தாண்டன். வீராதி வீரன், சூராதி சூரன் இராசாதிராசனை எமனுலகிற்கு அனுப்பி வைப்பது!'

இதனை 'பாவத்தோடு' மேலே விண்ணை நோக்கி வலது கரத்தை நீட்டியவாறு கூறினாள். திருமாறனைப் பார்த்து ஏளனப் புன்னகை புரிந்தாள். ஆனால் இந்தச் சொல்லைக் கேட்டு திருமாறனுடைய உடலெல்லாம் பற்றி எரிந்தது; கோபமாகக் கத்தினான்:

'நர மாமிசம் உண்ணும் பேயே, உனக்கு எவ்வளவு மமதை? மனிதர்களின் பச்சை இரத்தத்தைப் பருகத் துடிக்கும் காட்டேரியே, உனக்கு மனித இரத்தத்தின்மீது இவ்வளவு வெறியா? நாளைக் காலைவரை உன்னை உயிரோடு விட்டு வைத்திருப்பதே பாவம். இதோ இப்பொழுதே உன்னை முடித்து விடுகிறேன்.'

அந்தச் சிறைச்சாலை அதிரும்படி வேகமாக வெறி கொண்டு கூறிய திருமாறன் தன்னுடைய இடையில் தொங்கிய

வாளை வேகமாக இழுத்தான். அது உறையிலிருந்து அனல் பொறி எழுப்பிக் கொண்டு வெளியே வந்தது. சிறைக்கு வெளியிலிருந்து கொண்டே கதவின் இடைவெளி வழியாக வாளைப் பாய்ச்சி அவளைக் கொல்ல அதனை ஓங்கினான். கோதை வெறி கொண்டவள் போல இடி சிரிப்பு சிரித்தாள். சிரித்துக் கொண்டே கூறினாள்:

'ஐயா, என்னைக் கொல்லுங்கள் ஆனால் சற்றுப் பொறுங்கள். என்னுடைய கழுத்தைக் கதவு சந்திற்கு நேராக கொண்டு வந்து நீட்டுகிறேன். இதுவும் எனக்கு இலாபகரமானதே. எப்படியும் விரைவில் இந்த உயிர் போகப் போகிறது. ஆனால் இந்த உயிர் தங்களுடைய வாளின்மூலம் என்னுடைய உடலை விட்டுப் பிரிந்தால் அதில் இலாபம் இருக்கிறது!' வாளை ஓங்கிப் பிடித்தபடியே திருமாறன் கேட்டான்:

'நான் உன்னைக் கொல்லுவதனால் உனக்கு இலாபமா? என்னால் மரணம் அடைந்தால் உனக்கு நற்கதி கிடைக்கும் என்ற நம்பிக்கையா?'

'நற்கதி'! நரகம் என்பதெல்லாம் இருக்கட்டும். தங்களால் நான் மரணமடைந்தால் அது எனக்கு நிச்சயமாக இலாபகரமானதுதான். இவை எல்லாம் புரிந்துகொள்ள உங்களுக்கு ஏது அறிவு? அறிவு இருப்பின் இத்தனை அனர்த்தங்கள் செய்திருப்பீர்களா?'

'எனக்கு அறிவு இல்லை என்கிறாயா?'

'ஆம். ஆயிரம் முறை சொல்லுவேன்! அறிவு இருப்பின் இந்த நிலைமையில் இப்பொழுது என்னைக் கொல்ல வாளை வீசுவீர்களா?'

'உன்னைக் கொன்றால் என்ன தவறு?'

'என்ன தவறு என்று கேட்கிறீர்களா? அதனைச் சொல்லத்தான் வேண்டுமா?'

'ஆம், சொல்'

இதற்கு விடையாகத் கோதை ஒரு பெயரைக் குறிப்பிட்டாள். அதனைத் தொடர்ந்து, 'அத்தகைய வீராதி வீரர் ஒரு நிராயுதபாணியான பெண்ணைக் கொன்றார். அதுவும் சிறைக்குள் அடைபட்டிருந்த பெண்ணை- வெளியிலிருந்து வாளை வீசிக்

கொன்றார். இவ்வாறு எதிர் காலம் சொல்லும். வரலாற்று ஆசிரியர்கள் எழுதுவார்கள். உலகம் உங்களுடைய யோக்யதையை உணரும். உங்களையும், உங்களுடைய அரசையும் பார்த்து சிரி, சிரி எனச் சிரிக்கும். அது எனக்கு வெற்றியே! உம், நடக்கட்டும். நான் நகரமாட்டேன். இதோ இப்படியே இந்த கதவு சந்தின் நேராக கழுத்தைக் காட்டிக் கொண்டு நிற்கிறேன். வேலை முடித்து விடுங்கள்!'

கோதை வெறியோடு கத்தினாள். கதவு சந்தின் நேராக நெருங்கி வந்து தலையை வளைத்துக் கொண்டு நின்றாள். இதற்கு முன்னர் குறிப்பிட்ட அதே பெயரை மீண்டும் குறிப்பிட்டு, 'விரைவில் வேலை முடியட்டும்!' எனவும் கத்தினாள்.

ஓங்கிய திருமாறனுடைய வாள் அப்படியே உயரத்தில் நின்றது. பின்புறமிருந்து ஒரு கரம் வந்து அந்த வாளை அதே நிலையில் இறுக்கிப் பிடிப்பதாக திருமாறன் உணர்ந்தான். வேகமாக பின்னால் திரும்பிப் பார்த்தான்.

ஈழவேந்தன் முகத்தில் அனல்பொறி பறக்க கோபமே உருவாக நின்றிருந்தான். அவனை கண்ட திருமாறனுடைய பிடி தளர்ந்தது. ஈழவேந்தன் கையில் பிடித்திருந்த திருமாறனுடைய வாளை அலட்சியமாக அப்பால் வீசி எறிந்தான். அது அண்மையில் இருந்த கல்தூணின்மீது மோதி நெருப்பைக் கக்கிக் கொண்டு இரண்டாக உடைந்து கீழே விழுந்தது.

10

திடீர் திருப்பம்

கோதையின்மீது ஏற்பட்ட காமவெறி ஈழ மன்னனுடைய உச்சிக்குப் போய்விட்டது. அவன் பித்தனானான். அதே நேரத்தில் பாதாளச் சிறைக்குப் போகவும் தயக்கம். அந்த நள்ளிரவில் அரண்மனை நந்தவனத்திற்குச்சென்றான் கரிய இருளில் விண்ணைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். விண்மீன்களைப் பார்த்தான். அவற்றிலே கோதையின் கண் ஒளி பளிச்சிட்டது. சோலை மரங்கள் காற்றில் அசைந்தாடி சலசலப்பு உண்டாக்கின. அந்த சலசலப்பு கோதை கலகலவென சிரிப்பது போல அவனுடைய செவிகளில் பட்டது. மிருதுவான தென்றல் அவனைத் தழுவியது. கோதையே தன்னைத் தழுவுவதுபோலக் கற்பனை செய்து களிப்புற்றான் சூழ்நிலை அவனுடைய விரகதாபத்தை பெருக்கவே உதவியது. இனி அவளைப் பார்க்காவிட்டால் தலை வெடித்துவிடும் என அஞ்சினான். எனவே ஒரே ஒருமுறை அவளைக் கண்ணால் பார்த்துவிட முடிவு செய்து கொண்டான்.

கோதை சிறையில் அடைபட்டிருக்கும் குற்றவாளி. அவள் எழிலைக் கண்களால் பருக வேண்டும். ஏதோ விசாரிக்கும் சாக்கில் அவளிடம் வாய் கொடுத்தால் எப்படிப் பிழையாகும்? அவள் குரலிலிருந்து வரும் சங்கீத நாதத்தை ஒரே ஒருமுறை செவியில் பருகினால் என்ன பிழை? இத்தகைய சிந்தனையில் அவன் இறங்கினான். அவனுடைய கால்கள் அவனுடைய அனுமதி யின்றியே பாதாளச் சிறையை நோக்கி நடைபோட்டான்.

என்ன இருந்தாலும் மனதில் குற்ற உணர்வு. அதன் விளைவாக ஈழ வேந்தன் எப்பொழுதும் போல மிடுக்குடன் நடக்க இயலவில்லை. குற்றம் புரியும் கள்வனைப் போல தயங்கித் தயங்கி நடந்தான். அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டே அச்சத்துடன் நடந்தான். பாதாளச் சிறையின் படிகளில் இறங்கினான்.

அவன் பாதாளச் சிறையின் கடைசி படியிலிருந்து அடி எடுத்துக் கீழே வைத்தான். அப்பொழுது மேல்படியில் பந்தத்தின்

வெளிச்சம் தென்பட்டது. இந்நேரத்தில் பாதாளச் சிறைக்கு யார் வருவார்கள்? இந்நிலையில் இங்கு தன்னை கண்டுவிட்டால் நாடும், நகரமும் தன்னைப்பற்றி என்ன பேசும்? இந்த எண்ணம் மன்னனுக்கு நடுக்கம் ஏற்படுத்தி விட்டது. உடல் கடகடவென அதிர்ந்தது. வர வர மேலிருந்து வந்த வெளிச்சம் அதிகமாகிறது. யாரோ இறங்கி வருகிறார்கள், ஐயமில்லை.

அச்சம் மேலிட்ட மன்னன், அண்மையில் இருந்த பெரிய தூணுக்கு அருகில் ஓடினான். படிகளில் இறங்கி வருபவர் கண் பார்வையில் படாதபடி தூணில் ஒண்டிக் கொண்டான். ஒளிக்கு எதிர்ப்புறம் நின்று இருட்டில் தன்னை மறைத்துக்கு கொண்டான். அந்நேரத்தில் அங்கு வருபவர் யார் என அறிய அவனுக்கு ஆவல் மேலிட்டது. தூணில் ஒட்டி நின்றவாறே பார்வையைச் செலுத்தினான்.

அப்பொழுது யார் வருகிறார்கள், எதற்காக வருகிறார்கள்? பாதாளச் சிறையில் அப்பொழுது அடை பட்டு இருந்தது ஒரே ஒரு கைதி கோதைதான். அவள் இன்னும் இரண்டு யாமங்களில் தூக்கில் தொங்கப் போகும் கைதி. அவளைப் பார்க்கப் புதிதாக யார் வருகிறார்கள்? இதில் ஏதோ சூது இருக்கிறது. அவளை வெளியில் கடத்திக் கொண்டு போக முயற்சி நடக்கிறதா? மன்னன் தன்னுடைய சிந்தனைக் குதிரையை ஓட்டினான். வருபவரைக் கூர்ந்து கவனித்தான். அது அவனுடைய கடமையல்லவா?

மேலிருந்து ஒருவன் கீழே இறங்கி வந்தான். கையில் ஒரு பந்தத்தைத் தாங்கியவாறு வந்தான். அவன் தனியாகவே வந்தான். கடைசி படியை விட்டும் இறங்கிவிட்டான்.

அவன் யார்? பந்தத்தின் ஒளியில் முகம் தெரிகிறதே! ஆ, என்ன வியப்பு! அவன் திருமாறன்தான். இந்நேரத்தில் அவன் ஏன் இங்கு வரவேண்டும்? கைதியை விடுதலை செய்யவா? நிச்சயமாக இருக்காது. கோதையினுடைய சூழ்ச்சியை நன்கு அறிந்திருப்பவன் அவன்தான். அவளுக்கு அங்கு பெரிய எதிரி அவனே. ஏன் அவள் பாதாளச் சிறையில் பரிதவிக்க, அடுத்த நாள் காலை தூக்கு மேடை ஏற அவன்தான் காரணம். எனவே அவன் அவளை விடுதலை செய்ய வரமாட்டான். அவளிடம் வாய் கொடுத்துப் பேசி புதிய தகவல் ஏதாவது அறிய வருவான்.

அவனுக்கு அந்தக் கைதியுடன் என்ன பேச்சு வந்தது? ஒருக்கால் தான் பாதாளச் சிறைக்கு வருவதைப் பார்த்து விட்டுத் தன்னைத் தொடர்ந்துதான் வருகிறானோ? இருக்காது.

அப்படியானால் திருமாறனும் கோதையின் எழிலில் சொக்கிவிட்டானா? மோகத்தால் துரத்தப்பட்டுதான்

வருகிறானோ? இருக்கலாம். அவன் அப்படி நடந்து கொள்ள மாட்டான் என்று எப்படிக் கூற முடியும்? இந்த எண்ணம் ஏற்பட்டவுடன் அரசனுடைய மனதில் திருமாறன் மீது அசூயை ஏற்பட்டது. அதனால் சினம் சீறிக் கொண்டு வந்தது. பெண்ணைப் பற்றிய பிரச்சினையல்லவா? அரசன் நட்பை மறந்தான். திருமாறன்மீது வைத்திருந்த அன்பை மறந்தான் அவன் தன்னுடைய எதிர் கால மாப்பிள்ளை என்ற உறவையும் மறந்தான். காமவெறியன் என அவனை மனதில் சபித்தான்.

மன்னன் கோதையின்மீது மோகவெறி கொண்டு தான் அங்கு சென்றான். அது அவனுக்கு நியாயமாகப் பட்டது. ஆனால் திருமாறன் அதே உணர்வுடன் அங்கு வந்திருக்கிறான் என்று நினைத்தபோது அவனுக்குக் கோபம் சீறிக் கொண்டு வந்தது. தான் செய்தால் நல்லது. அதே செயலைப் பிறர் செய்தால் குற்றம்! இதுதான் உலகம்.

'கைதியிடம் திருமாறன் ஏதாவது தகாத வார்த்தைகளைப் பேசட்டும், தவறாக நடக்கட்டும், அவனை என்ன செய்கிறேன் பார்!' மன்னன் இடுப்பில் தொங்கிய கத்தியின்மீது கையை வைத்துத் தடவினான். ஆடாது, அசையாது நின்று கொண்டு அங்கு நடப்பதைக் கவனித்தான்.

கோதையும், திருமாறனும் பேசியவற்றைப் பொறுமையாக கேட்டுக் கொண்டே வந்தான் ஒரு நிலையில் கோதை திருமாறனை ஒரு புதிய பெயர் வைத்து விளித்து விட்டாள். அதனைக் கேட்ட ஈழ மன்னன் இடியின் ஒலி கேட்ட நாகமானான். அப்பெயர் அவனுடைய நெஞ்சில் ஈட்டியாகக் குத்தியது. அவன் சென்னியின்மீது எரிமலைக் குழம்பாகக் கொட்டியது. அவனுடைய செவிகளில் தீக்குழம்பாகப் பாய்ந்தது. அவன் நின்றிருந்த பூமி அதிர்ந்தது. கிடுகிடு என ஆடியது. அவனால் நிற்க இயலவில்லை. அவன் ஆடினான். தூண்கள் சுற்றிச் சுற்றி வந்தன. பாதாளச் சிறை சுற்றியது. கோதையும், திருமாறனும் சுற்றிச்சுற்றி வந்தார்கள். பிரளயம் வந்து விட்டதா? அகில உலகத்திற்கே முடிவு காலம் வந்து விட்டதா? அவனுடைய உள்ளம் கட்டுமீறி விட்டது. வெறி கொண்டவன் ஆனான். அப்பொழுது அவன் ஆயிரம் யானைகளின் பலத்தைப் பெற்றுவிட்டான். மதயானையைப் போல வெறிகொண்டு திருமாறனை நோக்கி ஓடினான்.

அப்பொழுதுதான் கோதையை வெட்டி வீழ்த்த திருமாறன் வாளை ஓங்கினான். அதனைப் பார்த்த ஈழவேந்தன் அவ்விடத்திற்கு ஒரே தாவாகத் தாவினான். திருமாறன் ஓங்கிய வாளை அப்படியே பிடித்துக் கொண்டு பலமாகக் கத்தினான்.

மன்னன் வீசி எறிந்த திருமாறனுடைய வாள் கல்தூணில் மோதி இரண்டாக உடைந்து 'டணால்' என்ற ஒலியுடன் கீழே விழுந்தது. வியப்பும் பரபரப்பும் மேலிட்ட திருமாறன் வேகமாகத் திரும்பிப் பார்த்தான்.

மன்னன் அக்கூர்மை மிக்க அரக்க வாளை வேகமாக அழுத்திப் பிடித்தபோது அது அவனுடைய உள்ளங் கையை ஆழமாக காயப்படுத்தி விட்டது. காயத்திலிருந்து இரத்தம் கொட்டியது. அவன் அந்த காயத்தையும் அதிலிருந்து பெருக்கெடுத்து வழியும் இரத்தத்தையும் பொருட்படுத்த வேயில்லை. அவன் கரத்தைக் கீழே நீட்டியபோது இரத்தம் தரையின்மீது சிந்தி தேங்கியது.

வெறி கொண்ட மன்னன் தன்னுடைய முகத்தை உள்ளங்கையால் தடவினான். அப்பொழுது முகமெங்கும் இரத்தம் பூசப்பட்டு உறைந்துவிட்டது. அந்த இரத்தத்தின் மீது பந்தத்தின் ஒளி படவே ஈழவேந்தன் ஒரு பயங்கரமான பூதமாகத் தோற்றமளித்தான். அந்தத் தோற்றத்தைக் கண்ட கோதை கூட நடுங்கிவிட்டாள்.

மன்னன் வெறி கொண்டு கத்தினான்:

'யாரடா அங்கே? ஓடி வாருங்கள். ஓடி வாருங்கள்!'

அடுத்த நொடியில் தொலைவில் இருந்த சிறைக் காவலர்கள் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள். மன்னன் தொடர்ந்து இரைந்தான்:

'இதோ இந்தத் துரோகியை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள். அவன் திமிறினால் உங்கள் அத்தனை பேருடைய வாட்களும் ஏக காலத்தில் அவன் நெஞ்சில் பாயட்டும், கழுத்தை சீவட்டும், உடலைத் துண்டு, துண்டாக வெட்டட்டும். அவன் திமிராவிடில் இப்பொழுது கொல்ல வேண்டாம்?'

காவலர்கள் மன்னனுடைய ஆணையின்படி ஓடிப் போய் திருமாறனை இறுகப் பிடித்துக் கொண்டார்கள். உணர்வு அற்று இருந்த திருமாறன் அவர்களை எதிர்க்கவேயில்லை. எதிர்பாராது அங்கு நடந்த சம்பவங்களால் அவனுடைய வீர உணர்வு எங்கோ பயந்து பதுங்கிக் கொண்டு விட்டது.

மீண்டும் மன்னன் மூச்சுவாங்கப் பேசினான்:

'உங்களில் ஒருவன் ஓடிப்போய் சிறைக்கதவைத் திறக்க வேண்டும். சிறைக்கு உள்ளே உள்ள பெண்ணை வெளியே

அனுப்புங்கள். இவனை இப்படியே இழுத்துக் கொண்டு போய் அதே அறைக்குள் தள்ளி கதவை மூடுங்கள். நன்றாகப் பூட்டுங்கள்.' ஒரே மூச்சில் மன்னன் கத்தினாள். அந்நேரத்திலே அவனுடைய குரல் கணீர் என சிம்ம கர்ஜனையாக ஒலித்தது. மீசை துடித்தது. புருவங்கள் நெறிந்தன.

கோதை இத்தனையையும் பார்த்துக் கொண்டே இந்தாள். சிறைக்கதவு திறக்கப்பட்டவுடன் மன்னன், 'பெண்ணே வெளியே வா!' எனக் குரல் கொடுத்தான். கோதை பரபரப்புடன் வெளியே வந்தாள். காவலர்கள் திருமாறனைத் தள்ளிக்கொண்டு போய் சிறை அறையில் அடைத்தார்கள். கதவை மூடிப் பூட்டினார்கள்.

மன்னனுடைய வெறி சற்று தணிந்தது. தன் அருகில் நின்ற கோதையைப் பார்த்தவுடன் முகத்தின் கடுகடுப்பை மறைக்க முயன்றான். புன்முறுவல் புரிய முயற்சி செய்து பார்த்தான். இரத்த சிகப்பேறிய முகத்திலே தென்பட்ட அவனுடைய பற்கள் இரட்சதனின் கோரைப் பற்களைப் போலத் தோன்றின கோதையைப் பார்த்த அவன் தாழ்ந்த குரலில் பேசினான்:

'கோதை! யாருக்கும் வணங்காத ஈழநாட்டு வேந்தனாகிய நான் உன்னிடம் சிரம் தாழ்ந்து இறைஞ்சுகிறேன். என்னை மன்னித்துவிடு. உன்னுடைய உயர்ந்த உள்ளத்தை அறியாது பிழை செய்த அறிவிலி நான். நிரபராதியான உன்னைத் தூக்கில் தொங்கவிட இருந்தேன். இந்தத் துரோகியினுடைய பேச்சைக் கேட்டு மோசம் போய் விட்டேன். என்னை மன்னித்து விடு பெண்ணே!' மன்னன் கோதையின் இருகரங்களையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டான் அம்மாவீரன் சிறுபிள்ளையைப் போல தேம்பித் தேம்பி அழுதான்.

நாடகக் காட்சியில் திடீர் திருப்பம் ஏற்பட்டு விட்டது. கதை தலைகீழாக மாறிவிட்டது. யாருமே எதிர்பாரத திருப்பம் அது. யார்தான் எதிர்பார்க்க முடியும்? சற்று நேரத்திற்கு முன்னர் சிறைக்கு உள்ளே இருந்த கோதை வெளியே கம்பீரமாக நிற்கிறாள். வெளியே அரசனுக்கு அடுத்த ஆட்சி செலுத்தியவன் உள்ளே! திருமாறன் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு நின்றிருந்தான். எப்பொழுதும் புன்முறுவல் பூத்துக் குலுங்கும் அந்த இளைஞனின் வதனம் மேகத்தால் மறைக்கப்பட்ட சந்திரனைப் போல ஒளிகுன்றி மங்கி இருந்தது.

கோதை மன்னனை கவனிக்கவேயில்லை. அவன் அவளுடைய கரங்களைப் பிடித்துக் கொண்டு கூறியதை எல்லாம்

அவள் பொருட்படுத்தவே இல்லை. அவனுடைய கண்ணீரைப் பற்றி அவள் கவலைப்படவேயில்லை. சிறைக்கம்பிகளுக்கு உள்ளே இருந்த கைதியைப் பார்த்தாள். மீண்டும் மீண்டும் பார்த்தாள். பலமாக சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. ஒரு பேயைப் போலச் சிரி சிரி எனச் சிரித்தாள் தொடர்ந்து மூச்சுத் திணறும்வரை சிரித்தாள். அந்த சிரிப்பு அப்பாதாளச் சிறையில் எதிரொலித்தது. எதிரொலி அவளுடைய சிரிப்பொலியை மேலும் அதிகமாக்கிக் காட்டியது. அவளுக்குச் சித்தம் கலங்கிவிட்டதோ என்ற அச்சத்துடன் காவலர்கள் அவளைப் பார்த்தார்கள், ஒருவாறு சிரிப்பு அடங்கிய பின்னர் உள்ளே இருந்த திருமாறனைப் பார்த்து அவள் கத்தினாள்:

'கைதி! கதை எப்படிமாறிவிட்டது பார்த்தாயா? இது தான் உலகம்! புரிந்து கொள். வாழ்வில் மேடும் பள்ளமும் இயல்பு. என்றுமே உங்களுக்கு ஏற்றம் என்று நம்பி ஏமாற வேண்டாம். எங்களுக்கும் நல்லகாலம் வரும். நீள் இரவுக்குப் பிறகு பகல் வந்தே தீரும். அமாவாசையை அடுத்து நிலவு பொழியும் நாட்கள் வந்தே தீரும். புரிந்து கொள்!' கோதை இடிமுழக்கத்துக்குப் பின்னர் அவனைப் பார்த்து ஏளனப் புன்னகை புரிந்தாள்.

திருமாறனுடைய தலை தாழ்ந்து விட்டது. தரையைப் பார்த்துக் கொண்டே நின்றான். மன்னனையோ அல்லது அப்பெண்ணையோ நேருக்கு நேராகப் பார்க்க அவனால் இயலவில்லை. கண்களில் நீர் கலங்க மரமாக நின்றான்.

'பாவம், வீராதிவீரனே, சிறைத் தண்டனையைக் கண்டு சித்தம் கலங்குகிறாயா? அழாதே. மன்னர் மரண தண்டனை விதிப்பார் என்று மனம் கலங்குகிறதா? நான் உன்னைப் போல இரக்கம் இல்லாத அரக்கி அல்ல. என்ன இருந்தாலும் நீ எங்களுடைய நாட்டுக்காரன். உனக்காக மன்னரிடம் மன்றாடி மன்னிப்பு வாங்கிக் கொடுக்கட்டுமா? உயிர்ப் பிச்சை பெற்றுத் தரட்டுமா? அழவேண்டாம். சோழ நாட்டை வாழ்விக்க வந்த வள்ளலே, அழவேண்டாம்!'

கோதையினுடைய வார்த்தைகள் திருமாறனுடைய செவிகளில் நாராசமாகப் பாய்ந்தன. பழுக்கக் காய்ச்சிய ஈட்டியாக நெஞ்சில் குத்தின. அவனுக்குக் கோபம் பீரிட்டுக் கொண்டு வந்தது. தலையை உயர்த்தினான். கண்ணீரால் கழுவப்பட்டு ஈரமாக இருந்த அவன் முகத்தின் மீது பந்தத்தின் ஒளி வீசியது.

அப்பொழுது அவனுடைய முகம் பளபளவென ஒளித்தது. வெறி பிடித்தவனைப் போல அவன் கத்தினான்:

'சோழ நாட்டினை ஒழிக்கப் பிறந்த பேயே, காட்டேரியே! எனக்கு நீ உயிர் பிச்சை வாங்கிக் கொடுக்கிறாயா? கோடரிக் காம்பே. என்னைப் பற்றி உனக்குத் தெரியாதா? உன்னுடைய திட்டங்கள் அத்தனையும் உருப்படாமல் செய்தவன் நான். அது மட்டுமல்ல, உன்னுடைய அன்புக் காதலன் வீரபாண்டியன் இருக்கும் இடம் தெரியாது செய்த வீராதிவீரன் நான். நானா கோழை? உன்னிடமா உயிர் பிச்சை கேட்பேன்? சிங்கம் சிறு நரியிடம் தஞ்சம் கேட்குமா?'

'அப்படியானால் உன்னுடைய கண்ணீருக்குக் காரணம் என்னடா?' இது மன்னன் தொடுத்த வினா.

'கண்ணீருக்குக் காரணம் சொல்ல வேண்டுமா? சொல்லுகிறேன். இந்தக் கொடியவள் செய்த கொடுமைதான் என் கண்ணீருக்குக் காரணம். உலகம் அறியாத, ஆனால் உலகாளப் பிறந்த இரு இளவல்களை இந்தப் பேய் கொன்று தின்று விட்டாள். இக்கொடிய பாதகி சற்று முன் சொன்ன இந்த வேதனைமிக்க செய்திக்காகத்தான் கண்ணீர் விடுகிறேன். என்னுடைய உயிருக்கு அஞ்சி அல்ல அரசே!'

திருமாறன் மீண்டும் அழத் துவங்கி விட்டான். அவர்களைப் பார்க்கக் கண் கூசியதால் எதிர்ப்புறமாக இருந்த தூணின்மீது பார்வையைத் திரும்பிக் கொண்டான்.

'அரசே, புறப்படுங்கள். விடியும் நேரம் நெருங்கி விட்டது. போய் உறங்குவோம். இந்தக் கைதியுடன் பேசி நாம் ஏன் உறக்கத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டும்? இவனுக்கு அழிவு நெருங்கி விட்டது. சரிந்து விழுந்து கொண்டு இருக்கும் சோழ அரசை தான் தாங்கிப் பிடித்திருக்கிறேன் என்று இவன் மமதையோடு இருந்தான். பாவம், விட்டில் பூச்சி விளக்கில் வந்து விழுந்துவிட்டது. அடுத்து முறைப்படி என்ன செய்ய வேண்டுமோ, அதனை நாளைக் காலை செய்வோம்.'

'ஆம். புறப்படுவோம்' என்று மன்னன் கூறியவாறு அவளுடைய தோள்மீது கையைப் போடப் போனான். அவள் தூரமாக விலகியவாறு நடந்தாள். அவ்விடத்தை விட்டு அவர்கள் வெளியேறினார்கள்.

11

இடி இறங்கிவிட்டது

மறுநாள் பகல் இரண்டாவது யாமம். ஈழ மன்னன் பராக்கிரமபாகு அரண்மனையில் ஒரு ஆசனத்தில் வீற்றிருந்தான். அண்மையில் இருந்த ஆசனத்தில் கோதை கம்பீரமாக அமர்ந்திருந்தாள்.

ஈழ வேந்தன் அவளை நொடிக்கு ஒரு முறை பார்த்து பெருமூச்சு விட்டான். அவன் மட்டும் முந்தைய இரவில் பாதாளச் சிறைக்குச் செல்லாது இருப்பின் நிலைமை என்னவாகி இருக்கும்? அவனுடைய நன்மையில் நாட்டம் கொண்ட இதயராணி பிணமாகி இருப்பாள். சோழநாட்டைச் சேர்ந்த பயங்கர வைரி ஈழத்தை மட்டுமல்ல, அதன் மன்னனான தன்னையும் ஆட்டி வைத்துக் கொண்டு இருப்பான். 'நல்ல வேளையாக நாடு பிழைத்தது. கோதை பிழைத்தாள். நானும் பிழைத்தேன்' என அவன் மனமகிழ்ந்தான். ஏக்கம் மேலிட்டு அவளைப் பார்த்துப் பார்த்து பெருமூச்சு விட்டான்.

அவளுக்கு அது மறு பிறவி. அவள் என்றையும்விட எடுப்பாக அன்று உடுத்தியிருந்தாள். அவளுடைய எழில் வதனம் அன்றலர்ந்த தாமரையைப் போல மலர்ந்திருந்தது. அகமும் மலர்ந்திருந்தது. கண்டவர்களைச் சுண்டி இழுக்கும் அவளுடைய கவர்ச்சி அன்று ஒரு படி மேலே ஓங்கி இருந்தது.

அன்றைய பகலைக் காண முடியாது என நினைத்தவள் விடுதலை பெற்றாள். அவள் வெளியிலே, ஆனால் அவளைச் சிறைக்குள் தள்ளியவன் அப்பொழுது சிறையிலே! எதிர்பாராத இந்தத் திருப்பம் அவளுக்கு குதூகலத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

அவளுடைய அகத்தின் எழில் முகத்தில் பிரதி பலித்தது. முகத்தின் எழிலும், அகத்தின் எழிலுமாக அவள் வானுலக ஊர்வசியைப் போலத் தோன்றினாள்.

அவளுடைய எழில் மன்னனைச் சுண்டி இழுத்தது. அவள்மீது ஏற்பட்ட மோகம் அவனை கிறுகிறுக்கச் செய்தது.

காமவெறியோடு அவளைப் பார்த்தான். எடுத்ததற்கெல்லாம் கோதை, கோதை என அவளுடைய நாமத்தை உச்சரித்து இன்பம் கண்டான்.

இதனை அவள் அறியாது இல்லை. அடிக்கடி வெட்கித் தலை குனிந்தாள். ஓரப் பார்வையால் மன்னனைப் பார்த்தாள். அவள் உதிர்த்த மோகனப் புன்னகை அவனை பம்பரமாக ஆட்டி வைத்தது. அவளுடன் சலிப்பின்றி பேசிக் கொண்டே இருந்தான்.

'கோதை, அந்த இறைவன்தான் உன்னுடைய உருவில் வந்து இந்த நாட்டைக் காப்பாற்றினான். நேற்று மட்டும் நான் பாதாளச் சிறைப் பக்கம் வராதிருப்பின் என்னவாகி இருக்கும்? நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது!'

'அரசே, என்னவாகி இருக்கும்? இந்நேரம் இப்பூவுலகத்திற்கு ஒரு உயிரின் பாரம் குறைந்திருக்கும்.'

'ஆ, எவ்வளவு எளிதில் சொல்லி விட்டாய் கோதை! நான் உனக்கு மரண தண்டனை கொடுத்ததென்னவோ உண்மைதான். ஆனால் நீயின்றி நான் உயிர் வாழ்ந்திருப்பேன் என்று நம்புகிறாயா?'

'அப்படியானால், எனக்கு ஏன் மரண தண்டனை விதித்தீர்கள்?'

'வருந்துகிறேன். கோதை, அதை நினைத்தால் என்னுடைய நெஞ்சே வெடிக்கிறது.'

'அது இருக்கட்டும் அரசே! தாங்கள் நேற்றைய இரவு ஏன் பாதாளச் சிறைக்கு வந்தீர்கள் என நான் அறியலாமா? இதனை நினைக்க, நினைக்க என்னுடைய உள்ளத்தில் பூரிப்பு பொங்குகிறது அரசே!'

அரசருடைய தலை கவிழ்ந்தது. முகத்தில் கள்ளப் புன்னகை விளையாடியது. கோதை அதனை உணராது இல்லை. வேண்டுமென்றே அப்படி ஒரு வினா தொடுத்து வைத்தாள். அரசர் அவள் கேட்டதற்கு மறுமொழி கூறாமல் வேறு ஒரு வினா தொடுத்தார்.

'ஆமாம், கோதை! திருமாறன் என்ற பெயரில் என்னை ஏமாற்றிய பகைவன் யார் என்று உனக்கு முன்பே தெரிந்திருக்கிறது. அப்படி இருந்தும் அப்பொழுது நீ ஏன் எனக்கு சொல்லவில்லை?'

'அரசே, நான் பேசுவதற்கு தாங்கள் எங்கே வாய்ப்பு கொடுத்தீர்கள்? எதிரி சொல்லுவதற்கு ஏற்ப பம்பரமாக

ஆடினீர்கள். நான் வாய்திறந்து பேச விடாமல் அவன் என்னை அதட்டி, அதட்டி விடைகளை வாங்கினான். அவனுக்குத் தக்க மறுமொழி சொல்லுவதற்குள்ளேயே எனக்கு மரண தண்டனை என்று அறிவித்து விட்டீர்கள். பாதாளச் சிறைக்கு அனுப்பி விட்டீர்கள். தங்களுக்கு எதிரில் நான் பேசாமல் செய்து விட்டான் எதிரி. அதுதான் அவனுடைய ஆற்றல். அதற்குத் தாங்கள் இரையாகி விட்டீர்கள்.'

'ஆம் உண்மை, எப்படியோ எல்லாம் நல்லபடியாக முடிந்துவிட்டது. தக்க தருணத்தில் வந்து இந்த நாட்டையும் என்னையும் காப்பாற்றி விட்டாய். உனக்கு இந்த நாடே கடமைப்பட்டு இருக்கிறது. நான்...'

'சொல்லங்கள் அரசே.'

'நான் உன்னுடைய அடிமை.'

'அரசே!'

'சொல் கோதை!'

'தாங்கள் இனி அப்படி சொல்லக் கூடாது. என்னால் அந்த வார்த்தையைத் தாங்க இயலாது. இந்த அடியாள்தான் தங்களுடைய அடிமை. தாங்கள் அல்ல.'

'இல்லை கோதை. இனி இங்கு நீ சொல்லுவதைப் போலத்தான் எல்லாமே நடக்கும். உன் சொல்லைக் கேட்க மறுத்ததற்காக இனி வட்டியும், முதலுமாக உன் சொற்படியே செயல்படுவேன். உன்னுடைய ஆசைதான் எனக்கு ஆணை.'

'அரசே, இது நான் செய்த பாக்கியம்.'

'கோதை, துரோகி திருமாறனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்? நீயே சொல்.'

'மன்னா, நான் எங்கோ இருந்து வந்த அனாதைப் பெண். இந்த அளவிற்குத் தங்களுடைய அன்பிற்கு ஆளாகி இருப்பது நான் பெற்ற பேறு. தாங்கள் என்ன செய்தாலும் எனக்கு மகிழ்ச்சியே.'

'மீண்டும் சொல். நான் என்ன செய்தாலும் உனக்கு மகிழ்ச்சிதானா?'

'ஆம்.'

'நான் சொல்லும் வார்த்தையை தட்டி நடக்க மாட்டாயே?' மன்னன் அவளை ஓரக்கண்ணால் பார்த்தான். அவள்

அவனுடைய உள்ள ஓட்டத்தைப் புரிந்து கொண்டாள் அவனுடைய கருத்தைப் புரிந்து கொண்டேன் என்பதைக் காட்டுவதற்காக ஆம் என்று சொல்லி வைத்தாள். மன்னனுடைய உச்சி குளிர்ந்தது. பற்கள் அனைத்தும் வெளியே தெரிந்தன. தலை பல கோணங்களில் ஆடியது. அவன் கிளிப்பிள்ளையைப் போல ஒப்புவித்தான்:

'கோதை, துரோகி திருமாறனுக்கு என்ன தண்டனை என்று ஏற்கனவே முடிவு செய்துவிட்டேன். நீ என்ன சொல்லுகிறாய் என்று அறியத்தான் உன்னுடைய கருத்தைக் கேட்டேன். அவன் செய்த குற்றம் சாதாரணமானது அல்ல. ஒரு பாவமும் அறியாத உன்னைத் தூக்கில் தொங்கவிட ஏற்பாடு செய்தான். அதனை நினைத்தாலும் நெஞ்சு நடுங்குகிறது. அடுத்தது, அவன் ஈழநாட்டிற்கு வேவு பார்க்க வந்த ஒற்றன்.'

'ஆம் மன்னரே, தாங்கள் சொல்லுவது அத்தனையும் உண்மை.'

'எனவே அவனுக்கு மரணதண்டனை விதிக்கிறேன். உன்னை எந்தத் தூக்கு மேடையில் தொங்க ஏற்பாடு செய்தானோ, அதே தூக்கு மேடையில் அவன் தொங்க வேண்டும். என்ன, கோதை என்னுடைய தீர்ப்பு சரியானது தானே?'

'அரசே, தாங்கள் என்னை நன்றாக ஏமாற்றுகிறீர்கள். நான் பெண் என்பதால்தானே?'

'நானா?'

'ஆம்.'

'என்ன சொல்லுகிறாய் கோதை?' மன்னன் பதட்டத்துடன் கேட்டான்.

'அரசே, அந்த உளவாளிக்கு மரண தண்டனை விதிப்ப தென்று ஏற்கனவே முடிவு செய்து விட்டீர்கள். அதன் பின்னர் என்னுடைய கருத்தைக் கேட்கிறீர்கள். இதன் பொருள் என்ன? என்னை ஏமாற்றுவது என்பதே!'

இதனை கேட்ட மன்னன் கலகலவென சிரித்தான். சிரித்துக் கொண்டே பேசினான்:

'ஓ, நீ அப்படி பொருள் எடுத்துக் கொண்டாயா? தவறு. வேண்டுமானால் அவனை விடுதலை செய் என்று நீ சொல். உன்னுடைய சொல்லைக் கேட்கிறேனா, இல்லையா என்று பார்.'

'அரசே, தங்களுடைய உள்ளத்தை நான் அறிய மாட்டேனா? வெறும் விளையாட்டிற்காக அப்படிக் கேட்டேன். தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.'

ஆகட்டும், இப்பொழுது சொல் அவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?'

'அரசே, அதுபோதும். மரணதண்டனையைவிட பெரிய தண்டனை இல்லை. எனவே இத்துடன் நாம் மன நிறைவு பெற வேண்டியதே. வேறு வழியில்லை.'

'கோதை நன்றாகப் பேசுகிறாய். உன்னுடைய பேச்சில் தென்படும் தெளிவும், நகைச்சுவையும் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன. அந்த ஒற்றனுக்கு மரணதண்டனை அளிப்தோடு இப்பிரச்சினையை முடித்து விடக்கூடாது. அவன் மூலமாக இதர துரோகிகளுக்கு பாடம் கற்பிக்க வேண்டும். இனி இத்தகைய ஒற்று வேலை செய்யக் கூடாது என்ற பாடத்தை நம்முடைய எதிரிகள் செம்மையாகக் கற்க வேண்டும். எனவே ஒற்றன் திருமாறன் நம்முடைய கப்பகல்லகம் கோட்டை முன்னர் பகிரங்கமாக நாளை மறுநாள் பகலில் தூக்கில் இடப்படுவான். இச்செய்தி பறை சாற்றி மக்களுக்கு அறிவிக்கப்படும். மக்கள் வெள்ளமெனத்திரண்டு வந்து துரோகி உயிர்விடும் வேடிக்கையைக் கண்டு களிக்கட்டும். இத்தகவல் எதிரிகளுக்கு எட்டாமல் போகாது. இனி தவறான எண்ணத்துடன் ஈழத்தில் அடி எடுத்து வைப்பவர்கள் கதி இதுதான் என்று உலகம் உணரட்டும்.'

'மகிழ்ச்சி மன்னரே, மெத்த மகிழ்ச்சி! இந்தத் தீர்ப்பில் தங்களுடைய பகை முடிக்கும் ஆற்றல் மட்டும் தென்பட வில்லை, தங்களுடைய அறிவு, தொலைநோக்கு முதலிய அனைத்தையும் அடியாள் காண்கிறேன். ஆனால் ஒரு விண்ணப்பம்.'

'சொல் கோதை. அவனை விடுதலை செய்யட்டுமா? நீ கூறினால் எதுவும் செய்யக் காத்திருக்கிறேன்.'

'அரசே, நான் அத்தகைய வேண்டுகோளை விடுப்பேனா? மேலும் அரசருடைய ஆணைக்கு மாறாக நினைப்பதே குற்றம் என்ற கருத்து கொண்டவள் நான். என்னுடைய விண்ணப்பம் அதுவல்ல. அவனை நம்முடைய கோட்டையின் முன்னர் தூக்கில் இடுவதோடு நிறுத்தி விடக்கூடாது. ஈழ சேனாபதிகளைக்

கொன்று மதுரை புகழாபரணம் அரண்மனைக்கு முன்னர் அவர்களுடைய தலைகளைத் தொங்க விட்டார்கள் அல்லவா?'

'ஆம். இந்த நல்ல நேரத்தில் அதனை ஏன் நினைவு படுத்துகிறாய் அன்பே'

'பழியை என்றும் மறக்கக்கூடாது மன்னா! எதிரிகள் நம்முடைய சேனாபதிகளின் தலைகளைத் தொங்க விட்டது போலவே நாமும் நம்முடைய கோட்டையின் முன்னர் இவனுடைய தலையைத் தொங்க விடவேண்டும். அதனைப் பார்த்தால் இனி இங்கு தவறான எண்ணத்தோடு வரும் துரோகிகள் அஞ்சித் திரும்புவார்கள்.'

'மகிழ்ச்சி! மிகச் சிறந்த கருத்து இது. பழிக்குப்பழி, தலைக்குத் தலை! எனக்கு இந்த நல்ல எண்ணம் வராமல் போய்விட்டது பார் கோதை! உன்னுடைய அறிவே அறிவு. மெத்த மகிழ்ச்சி. அப்படியே செய்வோம்.'

'மன்னரே, இதில் பூரிப்பு அடைய எதுவும் இல்லை. ஈழம் இழந்தது இரண்டு தலைகள். இப்பொழுது கிடைத்திருப்பதோ ஒரே ஒரு தலைதான். அசலுக்குக் கூட ஈடாகவில்லை. இரு தலைகளுக்குப் பதிலாக நான்கு தலைகளைத் தொங்கவிட்டால் தான் முதலும், வட்டியுமாக வசூலித்ததாகும்.'

'ஆம் நன்றாகக் கூறினாய் கோதை. உன்னைப் போன்ற அறிவும், ஆற்றலும், அன்பும், பண்பும் ததும்பும் அணங்கு அருகில் இருக்கும் போது நான்கு தலைகள் என்ன, நாலாயிரம் தலைகளை வெட்டி கொழும்பு நகரத்தின் தெருக்களில் எல்லாம் தோரணமாகத் தொங்கவிடுவேன்.'

'ஆம், அப்பணிக்கு இந்த ஏழைப் பெண்ணின் ஒத்துழைப்பு என்றுமே உண்டு, பூபதி!'

'கோதை, நீ இப்படி பேசுவது எனக்குப் பிடிக்க வில்லை.'

'ஏன், மன்னருக்கு என்னுடைய ஒத்துழைப்பு தேவை இல்லையா? என்ன இருந்தாலும் நான் அந்நியநாட்டுப் பெண். மேலும், தங்களுடைய ஆணையை நிறைவேற்றக் கடமைப் பட்டுள்ள அடிமை. ஒத்துழைப்பு அளிக்கிறேன் எனப் பெரிய வார்த்தை குறிப்பிட்டது என்னுடைய பிழைதான். மன்னியுங்கள் மன்னரே!'

கோதை, இதற்கே உன்னுடைய கண்கள் கலங்கி விட்டனவே! முதலில் கண்களைத் துடைத்துக் கொள்

உன்னுடைய கண்ணீரை என்னால் தாங்க இயலாது. என் நெஞ்சு வெடித்து விடும். அந்தத் திருமாறனுக்கு முன்னாலேயே நான் எமபுரிக்குப் போய் விடுவேன்.'

'நான் என்ன பிழை செய்தேன் அரசே? தாங்கள் எமபுரிக்குப் போய் விட்டால் நான் உயிரோடு இருப்பேன் என்று நம்புகிறீர்களா?'

'அப்படியானால் நீ ஒத்துழைக்கிறேன் என்று எப்படிச் சொல்லலாம்? யாருக்கு யார் ஒத்துழைப்பது, நாம் இருவரும் இரு உயிர்கள் என்றால்தானே ஒருவருக் கொருவர் ஒத்துழைக்க முடியும்? நாம் இருவரல்ல, ஒருவராகவே ஆகிவிட்டோம். எனவே இனி ஒத்துழைப்பு என்பதற்குப் பொருளே இல்லை.'

'அரசே, தங்களுடைய இதயம் பரந்து விரிந்தது. இந்த அடிமைப் பெண்ணை தங்களுடைய ஆன்மாவோடு இணைத்துக் கொண்டீர்கள். இது என் குலம் செய்த பாக்கியம். என்னுடைய உயிரில் கலந்த உயிரான தங்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு காலத்தில் வீரபாண்டியன் என்னுடைய இதயத்தில் பெற்றிருந்த இடத்தைத் தாங்கள் இன்று பெற்று விட்டீர்கள்.'

'ஆ, அப்படியா? மீண்டும் சொல்?'

'ஆம், ஈழவேந்தே, இனி என்னுடைய இதய வேந்தனும் தாங்கள்தான்!'

'கோதை! இதை ஆயிரம் முறை சொல். சொல்லிக் கொண்டே இரு.'

'அரசே, ஆனால் ஒன்று!'

'என்ன? நிபந்தனை விதிக்கிறாயா கோதை?'

'ஆம் அரசே! என்னுடைய முதற் பணி ஈழம் கண்ட தோல்விகளுக்குப் பழி வாங்க வேண்டும். என்னுடைய இதய மன்னர் ஈழத்திற்கு மட்டுமல்ல. தமிழகத்திற்கும் அரசராக வேண்டும். அதனைச் செய்து விட்டுத்தான் மறுபணி செய்வேன். அதுவரை எனக்கு ஊண், உறக்கம், காதல், கல்யாணம் எதுவுமே இல்லை, இது உங்கள்மீது சத்தியம்.'

'கோதை! நீ சொன்னதெல்லாம் நல்லதே. உன்னுடைய ஆற்றல் அளவற்றது. உன்னால் நினைத்ததை முடிக்க முடியும். நுண்ணியபெண் ஒருத்தியின் கண் அசைவிலே நூறு மலைகளைச்

சாடலாம் என்பார்கள். ஆனால் ஈடற்ற உன் கண் அசைவிலே ஒரு கோடி மலைகளைச் சாட முடியும். அந்தக் கண் அசைவு எப்பொழுது கோதை? உன்னுடைய இலட்சியம் வெற்றி அடையும்வரை என்னால் பட்டினியாக இருக்க இயலாது. உடல்களும், உள்ளங்களும் ஒன்றாக இணைந்தவண்ணமே இருவரும் ஒன்றுபட்டு இலட்சியப் போரிடுவோம். நான் சொல்வது புரிகிறதல்லவா? இன்று இரவு.....

'புரிகிறது அரசே, புரிகிறது. காலம் வரும். அதுவரை காத்திருப்போம் அன்பே!'

'கோதை இனி என்னால தாங்க இயலாது. இரவுவரை கூடக் காத்திருக்க இயலாது. இதோ இப்பொழுதே அந்தக் காலம் வந்து விட்டது.'

மன்னன் தன்னுடைய இருக்கையைவிட்டு எழுந்தான். அவளை நோக்கி கரங்களை நீட்டிக் கொண்டே அடி எடுத்து வைத்தான். அங்கு நின்றிருந்த பணிப்பெண்களைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. கோதை அச்சத்துடன் அரசனைப் பார்த்தாள். உடல் நடுங்கியது. நா எழவில்லை.

அப்பொழுது ஒரு சேவகன் வேகமாக அங்கு வந்தான். மன்னரை வணங்கிவிட்டு நின்றான். 'மன்னரே' என்று குரல் கொடுத்தான். அந்த நேரத்தில் அவன் அங்கு வந்தது, ஈழவேந்தனுக்கு எரிச்சலை அளித்தது. அவனைப் பார்த்து முறைத்தான். கோபத்தோடு கத்தினான்:

'மன்னருக்கு இந்த சமயத்தில் என்னடா வந்துவிட்டது. ஏன் இந்த அவசரம்? எந்தப் படை பறிபோய்விட்டது?'

'சீவல்லபர் தலைமையில் தமிழ் நாட்டிற்கு அனுப்பிய படைகள் மன்னரே!'

'என்னடா உளறுகிறாய்? உனக்குப் பித்துப் பிடித்து விட்டதா?' வெறிபிடித்து கத்திய மன்னன் தன்னுடைய வலது பாதத்தால் தரையை ஓங்கி உதைத்தான்.

அப்பொழுது ஈழ நாட்டு முதலமைச்சர் அங்கு வந்து சேர்ந்தார். வாயிற் படியைக் கடந்து உள்ளே வரும்போதே பேசினார். 'ஆம், மன்னவா! அவன் கூறியது உண்மைதான்!'

'எது உண்மை முதல் அமைச்சரே?'

'அரசே! சீவல்லபன் தலைமையில் நாம் தமிழகத்திற்கு அனுப்பிய படைகள் படுதோல்வி அடைந்து விட்டன.

நம்முடைய படைகளையும் ஆயுதங்களையும் சோழர்கள் கைப்பற்றி விட்டார்கள். சீவல்லபனை சோழர்கள் மீண்டும் கைது செய்து விட்டார்கள்.'

'ஆ என்ன கொடுமை? இச்செய்தியை என்னால் தாங்க முடியவில்லை. என்னுடைய நெஞ்சே வெடித்து விடும் போல இருக்கிறது. அத்தனைப் படைகளும் எதிரியின் வசமா? குறுகிய காலத்தில் எவ்வளவு பெரிய முயற்சி செய்து பெரும் படையைத் திரட்டினேன்! அத்தனையும் வீணாகி விட்டனவா? நான் திரட்டிய ஆயுதங்கள், தளவாடங்கள் அத்தனையும் எதிரிக்கு சொந்தமாகி விட்டனவா?'

மன்னன் சிறிதுநேரம் நெடுமரமாக நின்றான். அவனுடைய காமமும் மோகமும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன. சோகமே உருவாக நின்றான். நெஞ்சை வலது கரத்தால் அழுத்திக்கொண்டே நின்றான். நெடுநேரத்திற்குப் பின்னர் மெதுவாகப் பேசினான்:

'வீராதிவீரன் சீவல்லபன் தோற்றுவிட்டானா? அமைச்சர் தலைவரே, இத்தோல்வியை என்னால் தாங்க இயலவில்லை.'

அமைச்சர் தலைவர் மறுமொழி கூறாது தலையை தொங்க விட்டவாறு சோகமாக நின்றார். மன்னன் அவரைக் கூர்ந்து பார்த்துவிட்டு கோதையின் பக்கம் பார்வையைத் திருப்பினான். கோதை தலையை உயர்த்தி அவனைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். அவளைப் பார்த்து மன்னன் பேசினான்:

'கோதை நடந்திருக்கும் கூத்தைப் பார்த்தாயா? வீராதி வீரன் சீவல்லபன் தோற்றுவிட்டான்.'

'மன்னரே, தாங்கள் போடுவது தப்புக் கணக்கு. சீவல்லபன் வீராதிவீரன்தான் அவன் தோற்கவில்லை. வெற்றி பெற்றுவிட்டான்.' இந்த உண்மையைக்கூட உணர முடியாத குழந்தையா தாங்கள்?

'என்ன சொல்லுகிறாய் நீ? சீவல்லபன் வெற்றி பெற்று விட்டானா? உனக்கு எப்படித் தெரியும்? உன்னுடைய எதிரிலேயே இவர்கள் சொன்னதை நீ கேட்க்க வில்லையா?'

மன்னன் பரிதாபமாகக் கேட்டான். அமைச்சர் தலைவரும் குழப்பத்துடன் கோதையை உற்றுப் பார்த்தார். கோதை பேசினாள்:

'அரசே. இவர்கள் கூறியதை நானும் கேட்டேன். இவர்கள் கூறிய செய்தி தங்களுக்குப் புதுமையாக இருக்கலாம். ஆனால் எனக்கு இதில் புதுமை தென்படவில்லை. என்றைக்கும் சீவல்லபனுடைய தலைமையில் படைகள் போருக்கு புறப் பட்டதாக தாங்கள் என்னிடம் கூறினீர்களோ அன்றே எனக்குத் தெரியும், சீவல்லபனுக்கு வெற்றி என்று!'

'தாயே, தாங்கள் சோதிடம் மூலமாக அறிந்து இதனைச் சொல்லுகிறீர்கள் என்று நினைக்கிறேன். சோதிடம் பொய்த்து விட்டது. இந்த நாட்டு ஒற்றர்கள் கொண்டுவந்த செய்தி இது. இது பொய்யாக இருக்க முடியது. எங்கள் ஒற்றர்களை நாங்கள் நம்புகிறோம்.'

தலைமை அமைச்சர் கோதையை முறைத்துப் பார்த்துக் கொண்டே இவ்வாறு சூடாகப் பேசினார் அவருக்கு அவளுடைய சொல் எரிச்சலைக் கொடுத்தது. அவள் அமைச்சர் தலைவரைப் பார்த்துக் கூறினாள்:

'அமைச்சர் தலைவரே, நிதானத்தைக் கைவிடாமல் அமைதியாகப் பேசுங்கள். தங்களுடைய ஒற்றர்கள் கொண்டு வந்த செய்தி பொய்யானது என்று நான் கூறவில்லையே?'

'என்ன கோதை, எங்களைக் குழப்புகிறாய்? ஒன்றுமே புரியவில்லை. இந்த நேரத்தில் கூட விளையாட்டா? சலித்துக் கொண்டே மன்னன் விரக்தியுடன் அவளைப் பார்த்தான்.

'மன்னரே, அமைச்சர் தலைவர் சொல்லுவதும் பொய் அல்ல. நான் சொல்லுவதும் பொய் அல்ல. இரண்டும் உண்மைகளே!'

'இரண்டும் முரண்பட்ட செய்திகள். அவை எப்படி உண்மையாக இருக்க முடியும்? ஏதாவது ஒன்றுதானே உண்மையாக இருக்கும்?'

'ஏன் முடியாது மன்னரே? இரண்டும் உண்மையாக முடியும்.'

'விபரமாகச் சொல் கோதை. மனதில் உள்ளதைத் தெளிவாகச் சொல். என்னால் தாங்க இயலவில்லை. என்னுடைய உடம்பெல்லாம் பற்றி எரிகிறது.'

'சொல்லுகிறேன் அரசே! ஈழத்தைப் பொறுத்தவரை இது தோல்வி. ஏனென்றால் ஈழ நாட்டின் படைகள் பறிபோய் விட்டன. புதிய அவமானம் வேறு கூடிவிட்டது. சீவல்லபனைப்

பொறுத்து இது பெரும் வெற்றி. ஏனென்றால் அவனுடைய திட்டம் வெற்றி பெற்றுவிட்டது. திட்டமிட்டே அவன் தங்களிடம் வந்தான். தங்களை மயக்கினான். ஈழப் படைகளைக் கொண்டுபோய் சோழர்களிடம் ஒப்படைத்து விட்டான். அதனால்தான் அவன் வெற்றி பெற்று விட்டான். என்று ஆணித்தரமாகச் சொல்லுகிறேன்!'

'என்ன சொல்கிறாய் கோதை? அப்படியும் இருக்குமா? என்னுடைய நெஞ்சில் பழுக்கக் காய்ச்சிய வேல் பாய்ச்சுவது போல இருக்கிறதே!'

'அரசே, இரண்டும், இரண்டும் கூட்டினால் நான்கு தான். ஐந்து ஆக முடியாது. இந்தக் கணக்கைச் சொல்ல ஒரு அறிவாளி தேவை இல்லை. முதல் பாடம் படிக்கும் குழந்தை இதனைச் சொல்லும்.'

இதனைக் கேட்ட மன்னன் இடியோசை கேட்ட நாகமானான். விரக்தியோடு அமைச்சர் தலைவரைப் பார்த்து ஒப்புவித்தான்.

'மகாமந்திரியாரே, கோதையின் வாயிலிருந்து பொருள் இல்லாது எந்த வார்த்தையும் வராது. அவளுடைய வார்த்தைகளில் ஆழ்ந்த கருத்து இருக்கும். எதற்கும் நம்முடைய ஒற்றர்களை நன்கு விசாரியுங்கள்.'

கோதை மன்னனை நோக்கிக் கூறினாள்:

'கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டியதில்லை அரசே! வீண்வேலை எதற்கு? அதனால் காலம்தான் விரையமாகும்.'

'கோதை, எப்படி இவ்வளவு உறுதியாக அடித்துப் பேசுகிறாய்? அதுதான் எனக்குப் புரியவில்லை. உன்னுடைய கூற்றிற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? ஆதாரம் இருந்தால் தயவு செய்து விளக்கமாகச் சொல். என்னுடைய மண்டை வெடிப்பதற்குள் சொல்லிவிடு. உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன்.'

'கலங்காதீர்கள் அரசே! மனதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். எந்த நிலையிலும் மனதைத் தளர விட்டுவிடக் கூடாது. உறுதியான உள்ளமிருப்பின் ஓராயிரம் தோல்வி களையும் வெற்றியாக மாற்ற முடியும்.'

'அறிவுரை அப்புறம் பேசலாம் கோதை! ஆதாரத்தைச் சொல்.'

'ஆம்.'

'சீவல்லபனைத் திருமாறன் வீராதிவீரன் என்று புகழ்ந்தான். அவனுடைய தலைமையில் தமிழ் நாட்டிற்குப் படைகளை அனுப்புமாறு தங்களிடம் வேண்டினான். அவன் சொற்படி ஆடினீர்கள். படைகளை அனுப்பினீர்கள்.'

'ஆம், அதெல்லாம் பழைய கதை. அதற்கு இப்பொழுது என்ன?'

'தொடர்பு இருக்கிறது அரசே! சீவல்லபனுக்காக சிபாரிசு செய்த திருமாறன் சோழர்களின் ஆள் என்று எண்பிக்கப்பட்டு விட்டது. திருமாறன் சோழர்களின் ஆள் என்றால் அவனால் சிபாரிசு செய்யப்பட்ட சீவல்லபன் சோழர்களின் ஆளாகத்தானே இருக்க முடியும்? சோழர்களின் வலது கரம் திருமாறன் உண்மையிலேயே சீவல்லபன் பாண்டியனோடு சேர்ந்து சோழ நாட்டைத் தாக்குவதாக வைத்துக் கொள்ளுவோம். அதற்குத் திருமாறன் ஆதரவு அளிப்பானா? அவன் ஆதரவு அளித்தால் அதற்கு என்ன பொருள்? இங்குதான் ஆழ்ந்து யோசிக்க வேண்டுகிறேன்.'

'ஆம், இப்பொழுது எனக்கு எல்லாம் புரிகிறது!' அங்கலாய்த்தான் மன்னன்.

'கண் கெட்டபின்னர் செய்யும் சூரிய நமஸ்காரம் இது. சீவல்லபனுடைய சொல்லில் சூது இருக்கும்; அவனை நம்ப வேண்டாம் என்று அன்றே கூறினேன். என்னைச் சிறையில் தள்ளி விட்டீர்கள். ஆனால் தங்களுக்குத் தவறான ஆலோசனை கூறிய துரோகி திருமாறனுடன் சேர்ந்து கொண்டு ஆடினீர்கள். தாங்கள் செய்த செயல்களின் பலாபலன்களை ஏற்க வேண்டியதே.'

'ஆம் கோதை! நான் தவறு செய்துவிட்டேன் ஈழநாட்டிற்குப் பெரும் தீங்கு தேடி விட்டேன். பெருத்த அளவு ஈழப் படைகளை யுத்தமின்றி, இரத்தமின்றி சோழர்களுக்கு சீதனமாகக் கொடுத்துவிட்டேன். மோசம் போய்விட்டேன். மதிகெட்டு நாட்டிற்கு பெரும் சேதம் ஏற்படுத்தி விட்டேன்.'

பராக்கிரமபாகு பரிதாபமாக அங்கலாய்த்தான். எதற்கும், என்றும் கலங்காத அம்மன்னன் கலங்கினான். ஈழ நாடு பெற்றெடுத்த தலை சிறந்த வீரன் என வரலாறு போற்றும் அவனுடைய கண்களிலே அப்பொழுது நீர் கொட்டியது. அமைச்சர் தலைவருடைய முகம் பேய் அறைந்ததைப் போல இருந்தது. அவர் ஆடாது. அசையாது தூணாக நின்றார்.

ஈழ மன்னனுடைய சோகம் கோபமாக மாறியது. அவனுக்கு வெறி பிடித்துவிட்டது. கத்தினான்:

'கோதை, இத்தனைக்கும் காரணமான சோழர்களின் கையாள் திருமாறனை நாளை மறுநாள் வரை விட்டு வைக்கக் கூடாது. இப்பொதே அவனைத் துண்டு துண்டாக வெட்டிப் போடுகிறேன்.' அரசன் இவ்வறு கூறிக் கொண்டே வாளை வீசிக் கொண்டு பாதாளச் சிறையை நோக்கி நடந்தான்.

அவள் அவனுக்கு எதிரில் போய் நின்றாள். அவனுடைய கரத்தைப் பற்றிக் கொண்டு கூறினாள்:

'வேண்டாம் அரசே, வேண்டாம். நடந்தது நடந்து விட்டது. இனி நடக்கப் போவதைக் கவனிப்போம். கோபம் அறிவை மறைக்கக் கூடாது. ஏற்கனவே முடிவு செய்தபடி மக்களுக்கு அறிவித்து அவர்களின் முன்னர் அவனைக் கொல்லுவதுதான் இந்நிலையில் பயனுள்ளதாக இருக்கும். இது சோழர்களுக்கு ஒரு பாடமாக அமையும். இதனைப் பற்றியே எங்கும் ஈழ மக்கள் பேசுவார்கள். இதனால் நாம் பெற்ற தோல்விகளை அவர்கள் மறப்பார்கள். அவர்களுடைய கவனம் வேறு பக்கம் திரும்ப அவனை மக்கள் முன்னர் பலியிடுவது பயனாக இருக்கும். யோசித்துப் பாருங்கள்.'

கோதை மன்னன் கரத்தில் இருந்த வாளைத் தானும் தன் கரத்தால் தாங்கிப் பிடித்தாள். அப்பொழுது அவள் அவன்மீது நெருக்கமாக மோதினாள். அவன் அப்படியே நின்றுவிட்டான்.

'கோதை, தோல்விகள் அதிகமாக, அதிகமாக என்னுடைய கோபமும் அதிகமாகிறது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்த இறைவன்தான் ஈழநாட்டின்மீது கருணை கூர்ந்து உதவ உன்னை அனுப்பி இருக்கிறான்.' உருக்கமாகக் கூறிய அவன் தலை சாய்ந்து நின்றான்.

'மன்னரே, நான் ஒரு சாதாரணப் பெண். அருள்கூர்ந்து என்னைப் புகழ வேண்டாம். இனி நல்லதே நடக்கும். நடந்ததை மறந்து நடக்கப் போவதற்குத் திட்டம் வகுப்போம்.' அவள் மன்னனைத் தேற்றினாள்.

அவன் சிறு குழந்தையைப் போல அழுதான். அவள் தன்னுடைய மேல் ஆடையால் அவனுடைய கண்ணீரைத் துடைத்தாள். அது அவனுடைய மனதிற்கு இதமாக இருந்தது.

12

காதலுக்கு கண் இல்லை

ஈழ நாட்டு பாதாளச் சிறையில் அடைபட்டு இருக்கும் திருமாறன் அடுத்த நாள் காலை தூக்கில் மாட்டப்படுவான். அதுவும் அரச அரண்மனைக்கு எதிரில் மக்களின் முன்னர் கொல்லப்படுவான்.

இந்தச் செய்தியைப் பறைசாற்றிக் கொழும்பு நகரெங்கும் அறிவித்தார்கள். நாடெங்கும் செய்தி காட்டுத் தீ போலப் பரவியது. மக்கள் ஆங்காங்கு இதனைப் பற்றியே பேசினார்கள். ஈழநாட்டைச் சேர்ந்த ஏராளமான படைகளும், ஆயுதங்களும் எதிரியின் அணிக்குக் கிடைக்கக் காரணமாக இருந்தவன் திருமாறன். இது அவன் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு. இத்தகைய மாபெரும் குற்றம் இழைத்தவனுக்கு மன்னர் தக்க தண்டனையே கொடுத்திருக்கிறார் என மக்கள் ஆமோதித்தார்கள். அவரைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள், திருமாறனை வாயில் வந்தபடி தூற்றினார்கள். அவன் கொல்லப்படுவதைக் கண்டுகளிக்க மக்கள் ஆவலாக இருந்தார்கள் முதல் நாள் மாலையிலிருந்தே அரண்மனை முன்னர் மாபெரும் கூட்டம் கூடிவிட்டது. ஈழ நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து இக்காட்சியைக் காண மக்கள் வந்து குவிந்தவண்ணம் இருந்தார்கள்.

இந்தச் செய்தி மன்னன் பராக்கிரமபாகுவின் செல்வப் புதல்வியான சங்கவையின் செவிகளுக்கு எட்டியதில் வியப் பில்லை. தன்னுடைய அருமைக் காதலுனுக்கு மரண தண்டனை என்று கேட்டாள். அந்த நொடியிலேயே அடியில் வெட்டப் பட்ட மரம்போலத் தரையில் சாய்ந்தாள். மயக்கம் போட்டு விழுந்தாள். அவளுடைய தோழிகள் வெகுநேரம் முயற்சி செய்து மயக்கத்தைத் தெளிவித்தார்கள். அவளுடைய இருதயமே வெடித்துவிடும்போல இருந்தது. துடிதுடித்து விட்டாள். வெகு நேரத்திற்குப் பின்னர் உணர்வு வந்தது. அவளுடைய மாசற்ற அன்பு உள்ளத்தால் அப்பேரிடியைத் தாங்க இயலவில்லை. கண்ணீர் விட்டு அழுதாள். காதலன் உயிர்விடும் அதே நேரத்தில்

தானும் உயிர் விட வேண்டும். அதுதான் காதலுக்குச் செய்யும் ஆராதனை என்ற முடிவிற்கு வந்துவிட்டாள்.

'திருமாறனைப் பிரிந்து என்னால் வாழ்வது என்பது கனவிலும் நினைக்க இயலாதது. அவர் இறந்தால் நானும் இறக்க வேண்டியதே! அதுதான் தூய காதலின் இலக்கணம். இதில் தளர்ச்சிக்கு இடமேயில்லை. உலக வாழ்வில் பற்று உள்ளவர்களுக்குதான் உயிர் பெரிதாகத் தென்படும். ஆனால் எனக்கு உள்ள ஒரே ஒரு பற்றுக்கோல் திருமாறன்தான். எனவே அவர் உயிர்விடும்போது நானும் உயிர் விடுவதுதான் தர்மமாகும்.

'மேலும், உயிர் விடுவது என்பது எளிது. அது என்னுடைய அதிகாரத்தில் இருப்பது. நான் நினைத்தால் உயிர் விடுவது மிகமிக எளிது.

'ஆனால் உயிர்வாழ ஒரு முயற்சி செய்து பார்த்தால் என்ன? நான் வாழ வேண்டுமானால் திருமாறன் வாழ வேண்டும். அவர் இல்லாது நான் இல்லை. அவர் அரசு துரோகியாக இருக்கலாம். மிகவும் கொடியவராக இருக்கலாம். போர் வீரனாக இருக்கட்டும், அல்லது ஒரு நாட்டின் சேனாபதியாகத்தான் இருக்கட்டும். அதனைப் பற்றி எல்லாம் எனக்கு என்ன? அவர் என்னுடைய காதலர்! அது போதும். எனவே கடைசி முயற்சி செய்து பார்த்தால் என்ன? அவரை விடுதலை செய்ய முயற்சித்ததுப் பார்த்தால் என்ன? ஏன், என்னுடைய தந்தையாரிடம் சென்று அவருக்கு உயிர்ப்பிச்சை அளிக்குமாறு வேண்டினால் என்ன? திருமாறன் இறந்தால் நான் இறப்பேன் என்று கூறினால் அவர் என்னுடைய ஆசைக்கு இசைவார். உயிருக்கு உயிராக என்னை நேசிக்கும் தந்தையார் என்னுடைய மரணத்தைக் காண நிச்சயம் விரும்ப மாட்டார். அவரிடம் செல்வேன். காதல் பிச்சைக் கேட்பேன். வெற்றி பெறுவேன்.' இந்த முடிவுக்கு வந்தாள் அவள்.

ஆனால் இதனை நிறைவேற்றுவது அத்தனை எளிதா? திருமாறன்மீது அவள் கொண்டிருக்கும் காதலை ஈழ மன்னர் ஏற்பாரா? நிச்சயம் ஏற்கமாட்டார். துரோகியை நேசிக்கும் அவளை மன்னரே கொன்று போட்டாலும் வியப்பில்லை!

திருமாறன் செய்தது சாதாரணக் குற்றமா? ஈழ நாட்டு மன்னனை ஏமாற்றினார். அதைவிட பல ஆயிரம் மடங்கு பெரிய குற்றம் செய்திருக்கிறார் ஈழப் படைகளைக் கத்தியின்றி, இரத்தமின்றி, எதிரிகள் வசம் ஒப்படைத்திருக்கிறார் அத்தகையவருக்கு அரசர் விடுதலை அளிப்பாரா? அது எதிர் பார்க்கக்கூடியதா? அடுத்த நொடியில் சங்கவை சிந்தித்தாள்.

'சும்மா இருப்பதில் பயனில்லை. காலம் ஓடிக் கொண்டே இருக்கிறது. விரைந்து செயல்பட வேண்டும். விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் செயல்பட வேண்டும். வெற்றி பெற்றால் திருமாறனுடன் இந்த உலகில் வாழ்வேன். தோல்வி என்றால் அவருடன் விண்ணுலகில் வாழ்வேன். எப்படியும் என்னுடைய கடைசி மூச்சுவரை என்னுடைய அன்புக் காதலர் விடுதலைபெறப் பாடுபடுவேன்.' இந்த எண்ணம் மேலிட்ட சங்கவை புதிய பலமும், துணிவும் பெற்று தந்தையாரிடம் ஓடினாள்.

அப்பொழுது ஈழ வேந்தன் தங்கக் கட்டிலின்மீது பரப்பப்பட்ட ஒரு இலவம் பஞ்சு மெத்தையின்மீது அமர்ந்திருந்தான். அதே மெத்தையின்மீது சற்றுத் தள்ளி கோதை வீற்றிருந்தாள். அவ்விருவரும் ஏதோ பேசிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் எதிர்பாராத வகையில் சங்கவை அங்கு ஓடி வந்தாள். மன்னருடைய காலடியில் மரமாக விழுந்தாள்.

'அப்பா, என்னைக் காப்பாற்ற வேண்டும்!' என்று கூறியபடியே அவள் தந்தையாருடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு கதறினாள். அவனுடைய பாதங்களின் மீது தன்னுடைய சிரத்தைப் பொதித்து அவற்றைக் கண்ணீரால் கழுவினாள்.

மன்னன் திடுக்கிட்டு விட்டான். பதைபதைத்துக் கொண்டு வேகமாக எழுந்தான். தன்னுடைய அருமை மகளைத் தூக்கி நிறுத்தினான். அவளை மெத்தையின்மீது உட்கார வைத்துத் தானும் அருகில் உட்கார்ந்து, அவளை அணைத்துக் கொண்டே கேட்டான்:

'சங்கவை, என்ன இது? உனக்கு என்ன வந்துவிட்டது? நான் உன்னை எதற்காகக் காப்பாற்ற வேண்டும்? உனக்கு யார் என்ன தீங்கு செய்தார்கள்? உனக்குத் துன்பம் செய்யத் துணிந்தவர் யாராவது இவ்வுலகில் பிறந்திருக்கிறார்களா? சொல். அழாதே. உடனே சொல். என்னுடைய நெஞ்சம் வெடிப்பதற்கு முன்பாகச் சொல்லிவிடு அம்மா!'

மன்னனுடைய கண்களில் நீர் வந்து விட்டது. நா தழு தழுக்க அவளைக் கேட்டான். அவள் திருமாறனைக் காதலிப்பதை அவன் அறிவான். ஆயினும் அவனுக்காகத்தான் அப்பொழுது அவள் அங்கு வந்து அழுகிறாள் என்று அவன் நினைக்கவில்லை. அவள் விம்மி, விம்மி அழுதாள். மீண்டும் மன்னன் கேட்டான்:

'சொல், அம்மா அழாதே, மனதில் உள்ளதைச் சொல்.'

'அப்பா, நான் சிறு வயதிலேயே தாயை இழந்து விட்டேன். எனக்குத் தாய், தந்தை, உற்றார், உறவு அனைத்தும் தாங்களே. தாங்கள் அன்றி எனக்கு யாருமே கதி இல்லை.'

'ஆமாம், இதனை நீ சொல்லித்தான் நான் தெரிந்து கொள்ள வேண்டுமா? எனக்கு இதெல்லாம் நினைவு படுத்த வேண்டிய தேவை இப்பொழுது என்ன வந்தது? உனக்கு என்ன குறை? எது தேவையானாலும் எடுத்துக்கொள்ள வேண்டியதுதானே! சங்கவை, நீ கேட்டுப் பெறும் நிலையிலா உன்னை நான் வைத்திருக்கிறேன்? சொல், உனக்கு என்ன வேண்டும்?'

'அப்பா, எனக்கு மாங்கல்யப் பிச்சை வேண்டும்.'

'என்ன அரசே, சங்கவை பேச்சு வினோதமாக இருக்கிறது! திருமணமாகாத பெண்ணுக்கு மாங்கல்யப் பிச்சை கொடுப்பதா? இது என்ன புதுமை! கோதை மன்னரைப் பார்த்துக் கேட்டாள். அவள் ஏளனத்துடன் சங்கவையை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

'ஆம், சங்கவை! கோதை கேட்பதற்கு மறுமொழி சொல்.'

'அப்பா, நான் தங்களுடன் மட்டுமே பேச வந்திருக்கிறேன். வேறு யாருடனும் நான் பேச விரும்பவில்லை. என் பிரச்சினையில் வேறு யாரும் தலையிட வேண்டாம்.' சங்கவை கோதையைப் பார்த்து சுருக்கெனக் கூறினாள். அவளுடைய கண்களில் நெருப்பு கொட்டியது.

கோதை இதனைப் புரிந்து கொண்டாள். 'அம்மா, சங்கவை! தப்பு, தப்பு! அரசே, நான் இங்கு இருப்பது பெரும் தவறுதான். தெரியாமல் பேசி விட்டேன். இது தங்களுடைய குடும்பப் பிரச்சினை. நான் வெளியே செல்லுகிறேன்.' கோதை மிடுக்குடன் எழுந்து வெளியே நடந்தாள் சங்கவையை கோபத்துடன் முறைத்துப் பார்த்துவிட்டு வெளியேறினாள்.

மன்னன் எழுந்து நின்று, 'கோதை, கோதை!' என்று அழைத்துக் கொண்டே அவளைத் தொடர்ந்து சில அடிகள் எடுத்து வைத்தான். ஆனால் கோதை மன்னன் அழைத்ததைப் பொருட்படுத்தாது வேகமாக நடந்து சென்று மறைந்து விட்டாள். மன்னன் புதல்வியை கோபத்தோடு பார்த்துக் கொண்டே பேசினான்:

'சங்கவை, நீ இப்பொழுது பேசியது தவறு. கோதை அந்நியப் பெண் அல்ல. அவள் உனக்கு அன்னையைப் போல! உன்னைப் பற்றி பேச அவளுக்கு முழு உரிமை உண்டு. அவள் நம்முடைய நலனில் நாட்டம் கொண்டிருப்பவள். நம்மில் ஒருவள். நீ அவளை எடுத்தெறிந்து பேசி இருக்கக் கூடாது.'

'அப்பா!'

'போகட்டும், நடந்தது நடந்து விட்டது. வந்த காரியம் என்ன? சொல்.' மன்னன் மகளை அருகில் அமர்த்திக் கொண்டு அவளுடைய முகத்தை உற்றுப் பார்த்தான். அப்பொழுதுதான் அவனுக்கு அரண்மனைத் தோட்டத்தில் சங்கவையும், திருமாறனும் சந்தித்துப் பேசிய சொற்கள் நினைவிற்கு வந்தன. அவள் அப்பொழுது பேசிய காதல் மொழிகள் அவனுடைய செவிகளில் ஒலித்தன. கதை போகும் போக்கை மன்னன் யூகித்துக் கொண்டான். சங்கவை தலை சாய்த்தபடியே மெல்லிய குரலில் பேசினாள்:

'அப்பா, சொல்லப் பயமாக இருக்கிறது!'

'என்னிடம் என்னம்மா பயம்? நான் உன்னைப் பெற்ற தகப்பன் அல்லவா? பயம் வேண்டாம். மனதில் இருப்பதைச் சொல்லம்மா!'

'அப்பா, நான் ஒருவரை உளமாற நேசிக்கிறேன்.'

'நல்லது.'

'அவர் இல்லாவிட்டால் நான் உயிர் வாழ முடியாது.'

'உன்னுடைய இதயத்தைக் கொள்ளை கொண்ட அந்த அரசகுமாரன் யார்? அவன் எந்த நாட்டின் இளவரசன் மகளே?'

'அப்பா, முதலில் என்னை வாழ வைப்பேன் என்று உறுதி சொல்லுங்கள்.'

'சங்கவை, இதென்ன பொருளற்ற வேண்டுகோள். தந்தை மகளை வாழ வைப்பேன் என்று வாக்குறுதி அளிக்க வேண்டுமா? பெற்ற பிள்ளையை வாழ வைப்பது பெற்றவனுடைய கடமை ஆயிற்றே!'

'அப்பா, சொல்ல மனம் தயங்குகிறது!'

'சங்கவை, நேரத்தை வீணாக்காதே. உன் மனதில் உள்ளதை நேரடியாகச் சொல். நீ யாரைக் காதலிக்கிறாய்? எனக்கு எது நல்லது, எது கெட்டது என்று தெரியும். நல்லது எனத் தென்பட்டால் அதனை உடனே நிறைவேற்றுவது என்னுடைய கடமை. சொல். உன்னுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன் யார்?'

'அப்பா, அவருடைய பெயர் திருமாறன். அவரை எனது உயிரினும் மேலாக நேசிக்கிறேன்.'

'திருமாறன் என்றால்?'

'அவர் நம்முடைய பாதாளச்சிறையில் இருக்கும் ஒரு கைதி.'

'சிறையில் எத்தனையோ கைதிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்கள் எல்லாம் என்னுடைய நினைவில் எங்கே இருக்கப் போகிறது! நீ சொல்லும் திருமாறன் யார்?' மன்னனுடைய வினாக்களிலே சூடு தெறித்தது. அவள் கூறினாள்:

'அப்பா, நாளைக் காலை நம்முடைய கோட்டையின் முன்னர் தூக்கில் தொங்கவிடுவதாகப் பிரகடனப்படுத்தி இருக்கிறீர்களே, அந்தக் கைதிதான் அப்பா!' சங்கவை மீண்டும் தந்தையாருடைய காலடியில் வேர் பறிக்கப்பட்ட மரம் போல சாய்ந்தாள்.

அவன் அவளை அப்படியே தூக்கி, மீண்டும்தான் அமர்ந்திருந்த மெத்தையின்மீது உட்கார வைத்தான். அவளால் உட்கார முடியவில்லை. அவள் அழகிழந்து, களை இழந்து சோகமே உருவாக அவன்மீது சாய்ந்து கொண்டாள். அவன் அவளுடைய தலையைத் தடவி விட்டுக் கொண்டே நிதானமாகப் பேசினான்:

'அம்மா, சங்கவை! நீ சொல்லும் கைதி யார் என்று புரிந்து கொண்டேன். உனக்கு மதி மயங்கி விட்டதா? நீ எத்தகையவனை நேசிக்கிறாய் என்பதை அறிவாயா?'

'காதலுக்கு குலமும், கோத்திரமும் உண்டா அப்பா?'

'அப்படியா? காதலைப் பற்றி நிறைய தெரிந்து வைத்திருக்கிறாய்! அது இருக்கட்டும், அவன் செய்த குற்றம் என்ன என்பதை அறிவாயா?'

'அறிவேன் அப்பா.'

'அப்படி இருந்தும் அவனை நேசிக்கிறாயா? இன்று உன்னுடைய தந்தை தலை குனிந்து நடக்கக் காரணமானவன் அவன். ஈழ நாட்டின் படைபலம் முழுவதையும் சோழர்களிடம் ஒப்படைத்தவன் அவன். அத்தகையவனை நீ நேசிக்கிறாயா? உன்னுடைய தந்தைக்கு எமனாக முளைத்தவனை நீ காதலிக்கிறாயா?'

'அப்பா!'

'அவனுடன் சேர்ந்து கொண்டு நம்முடைய தாய் நாட்டையும், என்னையும் கொன்றுவிட முடிவு செய்து விட்டாயா நான் பெற்ற மகளே?'

'அப்பா, அவர் இன்றேல் நான் இல்லை!' சங்கவை விம்மி அழுதாள்.

'சங்கவை இவை எல்லாம் மோகவெறி கொண்டவர்கள் இயல்பாகச் சொல்லும் வார்த்தைகளே! பேச்சை வளர்த்த இது நேரமில்லை. என்னுடைய ஒரே புதல்வியினுடைய அறிவு இப்படிக் கீழ் நிலைக்குப் போகும் என்று கனவிலும் நான் கருதியது இல்லை. உனக்கு விரைவில் திருமணம் செய்ய வேண்டுமென்பதை நீ உணர்த்தி விட்டாய். விரைவில் கடமையைச் செய்து முடிக்கிறேன். கவலைப்படாமல் போ.'

'அப்பா, நான் அவரைத் தவிர வேறு யாருக்கும் மாலையிட மாட்டேன்.'

'பிடிவாதம் பிடிக்காதே. கைதி திருமாறன் ஒரு அற்பமானவன். எண்ணற்ற அரசகுமாரர்கள் என்னுடைய தாள் பணிந்து உன்னைப் பெண் கேட்க சித்தமாக உள்ளார்கள். அவர்களில் ஒருவனை நீயே தேர்ந்தெடுத்துக் கொள்.'

'அப்பா, எனக்கு எந்த அரச குமாரனும் வேண்டாம்.'

'ஏன், அரச குமாரனிடம் பணிபுரியும் ஒரு வேலைக் காரனைத்தான் நீ விரும்புகிறாயா? எனக்குத் தடையில்லை.

ஒரு வேலைக்காரனையே உனக்கு மணம் முடித்துப் பின்னர் அவனை மன்னனாக்குகிறேன். இந்தத் துரோகியை மட்டும் நீ கனவிலும் கருதாதே.'

'அது நடக்காத காரியம் அப்பா!'

'என்னை என்னதான் செய்யச் சொல்லுகிறாய்?'

'என்னுடைய காதலனுக்கு உயிர்ப் பிச்சை கொடுங்கள் அப்பா! உங்களைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன்.'

'சங்கவை, தெரிந்து கொள். கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தாலும் அது நடக்காது.'

'அப்படியானால் எனக்கு ஒரு உதவி செய்யுங்கள்.'

'சொல். அதனைத் தவிர வேறு எதுவானாலும் செய்கிறேன்.'

'திருமாறனைத் தூக்கிலிடுவதற்குமுன்பு என்னைத் தங்கள் வாளால் வெட்டிக் கொன்று விடுங்கள். மேல் உலகத்திலாவது நாங்கள் ஒன்றுபட்டு வாழ உதவி செய்யுங்கள்.' சங்கவை

தந்தையினுடைய இரு கரங்களையும் சேர்ந்துப் பிடித்துக் கொண்டு மன்றாடினாள்.

'இனி இதனைப் பற்றி உன்னிடம் பேசினால் என்னுடைய உள்ளத்தில் சுரக்கும் பாசம் வறண்டு விடும். நான் மிருகமாகி விடுவேன். அந்த நிலைக்கு என்னை கொண்டு வந்துவிடாதே?

மன்னன் திடீரென ஆசனத்தை விட்டு எழுந்தான்.

சங்கவை அப்படியே படுக்கையில் சாய்ந்து விட்டாள். அவளைப் பொருட்படுத்தாத மன்னன் அவ்விடத்தைவிட்டு வேகமாக வெளியேறினான். பணிப் பெண்கள் அவளைச் சூழ்ந்து கொண்டார்கள்.

13

காதலி கடவுளானாள்

ஈழ நாட்டின் புகழ் பெற்ற கப்பகல்லகம் அரண்மனையில் இருள் மண்டிக் கிடந்தது. இரவின் மூன்றாவது யாமம் நடை போட்டுக் கொண்டு இருந்தது.

அரண்மனையில் வாழ்ந்த உயர்நிலையில் இருந்த பிரமுகர்கள் அனைவரும் மஞ்சங்களில் படுத்துக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் அவர்களை உறக்கம் அண்ட வில்லை. ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் ஓராயிரம் கவலைகள் அரித்துக் கொண்டு இருந்தன. பெரிய மனிதர்கள் ஆகிவிட்டால் உறக்கம் ஏது?

கோதை அதே மாளிகையில் தனி அறையில் படுத்திருந்தாள். அது அரசனுடைய அறைக்குப் பக்கத்து அறைதான். கோதை படுத்தபடியே அடுத்து செய்ய வேண்டிய செயலைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருந்தாள். அவள் நிகரற்ற அறிவாளி. திட்டமிட்டே செயல்களைச் செய்தாள். ஆயினும் தோல்விகளும் வந்து குவிந்தன இதனால் அவள் சோர்ந்துவிட வில்லை வெற்றிகளைக் கண்டாள். இதனால் இறுமாப்பும் கொள்ளவில்லை. தன்னுடைய மகத்தான இலக்கைப் பற்றியே சிந்தித்தவாறு இருந்தாள். திருமாறன் காலையில் எமன் உலகிற்குப் போய் சேரப் போகிறான். அடுத்து செய்ய வேண்டியது என்ன? இது அவளுடைய சிந்தனை.

ஈழவேந்தன் பராக்கிரமபாகுவிற்கோ பல குழப்பங்கள். பல கவலைகள். இதுவரை வெற்றிகளையே கண்டவன் அவன். இப்பொழுது ஏமாற்றங்களும், தோல்விகளும் அவனுடைய தலையைச் சுற்ற வைத்தன. 'சீவல்லபனும், திருமாறனும் சேர்ந்து செய்த சூழ்ச்சிகளால் ஈழத்தின் படைகள் பறி போய் விட்டன. இனி சோழநாட்டை எப்படி பழி வாங்குவது? கோதை அன்போடுதான் பேசுகிறாள். ஆசையோடுதான் பழகுகிறாள். ஆனால் அவள் ஒரு அளவுடன் நின்று விடுகிறாள். எல்லைக் கோட்டைத் தாண்டி அப்பால் வர மறுக்கிறாள்! என்னுடைய

ஆட்சியின் கீழ், என்னுடைய அரண்மனையில், ஏன் இன்னும் சொல்லப் போனால் எனக்கு அடுத்த அறையில் அந்த வேரில் பழுத்த பலா இருக்கிறது. பயன் என்ன? அவளை நெருங்க இயலவில்லை. இது ஒருபுறம். மறபுறமோ, அருமைப் புதல்வி சங்கவையினுடைய நிலையை நினைத்தால் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் தூக்கில் தொங்கப் போகும் குற்றவாளியைக் காதலிக்கிறாள். பாவம், தாயில்லாத அப்பெண் படும் துன்பம் நெஞ்சை வெடிக்கச் செய்கிறது. ஆனால் என்ன செய்ய முடியும்? அவளுடன் சேர்ந்து கொண்டு அழத்தான் முடியும்!' இந்த சிந்தனைகளை மனதில் ஓட்டிய மன்னன் கவலைக் கடலில் ஆழ்ந்திருந்தான்.

அதே அரண்மனையைச் சேர்ந்த பாதாளச் சிறையில் இருந்த திருமாறனுடைய நிலையே மிகவும் மோசமானது. மற்றவர்களைவிட அதிக வேதனையானது. அவன் இன்னும் சில நாழிகைகளில் தூக்கில் தொங்கப் போகிறான். அவனுடைய ஆட்டமும் பாட்டமும் முடிந்து விட்டன. அதுதான் அவனுக்குக் கடைசி இரவு. இனி அவனைக் காப்பாற்றுவார் யாருமில்லை. 'உயிர் போவதைப் பற்றி கவலை இல்லை. அது இன்று இல்லையேல் நாளை போகக் கூடியதே. ஆனால் சோழ நாடு இன்று இருக்கும் நிலையில் அதற்கு பயன்படாமல் போகிறோமே என்ற வேதனைதான் என்னுடைய உள்ளத்தை வாட்டுகிறது. இனி பிழைக்க வழியே இல்லை. என்னுடைய தந்திரங்களும், ஆற்றலும் தோற்று விட்டன. அந்த பினாகபாணியைத் தவிர யாருமே இனி என்னைக் காப்பாற்ற முடியாது.' இத்தகைய கவலைகள் என்ற வண்டுகள் உள்ளத்தாமரையை அரிக்க அவன் கண்களை மூடினான். அவன் கைப்பிடித்த அன்பு மனைவி எதிரே வந்து நின்றாள். அவளைப் பார்த்து தேம்பித் தேம்பி அழுதான். எண்ணிலா திட்டங்களைப் போட்டான். அனைத்தையும் தன்னுடைய வாழ்வில் நிறைவேற்றுவேன் எனக் கனவு கண்டான். எல்லாம் வீண். மணல் கோட்டை சரிந்து விழுந்து விட்டது. அவனுடைய இதயத்தில் இடம் பெற்ற அன்புக் காதலியுடன் ஒருநாள் கூடச் சேர்ந்து நாள் முழுவதும் பழக நேரம் இருந்ததில்லை. இனி அவளைக் காணவே இயலாது. ஏக்கத்தோடு கண்களைத் திறந்தான். அந்தக் கற்பனை உருவம் மறைந்தது. மீண்டும் கண்களை மூடிப் பார்த்தான். அவள் எதிரில் வரவே இல்லை!

அந்த அரண்மனையில் தெளிந்த திட்டத்துடன் குழப்பமற்று இருந்தது சங்கவை மட்டும்தான். ஆம், அவள் ஒரே ஒருவள்தான் மனதில் சரியான செயல் திட்டத்துடன் இருந்தாள்.

தனி அறையில் படுத்திருந்த அவள் நடுநிசியில் படுக்கையை விட்டு எழுந்தாள். அனைவரும் உறங்கட்டும் எனக் காத்திருந்தாள். அவளுக்கு உறக்கம் ஏது, படுக்கை எதற்கு? உறங்குவது போல நடித்தாள். இப்பொழுது மெதுவாக எழுந்து நின்றாள்.

அவளுடைய உள்ளத்தின் உறுதி முகத்தில் பிரதிபலித்தது. யாராவது தன்னைக் கவனிக்கிறார்களா என அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியே நோட்டம் விட்டாள். எல்லா திக்குகளிலும் பார்வையை ஓட விட்டாள். யாரும் கவனிப்பதாகத் தென்படவில்லை. மீண்டும் உள்ளே சென்றாள் ஒரு கரிய போர்வையை எடுத்தாள். உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை அப் போர்வையால் தன்னுடைய உடலை மூடிப் போர்த்திக் கொண்டாள்.

பின்னர் அவள் பூனையைப்போல மெதுவாக அடி எடுத்து வைத்து நடந்தாள். அரண்மனையின் பிரதான கூடத்தை வந்தடைந்தாள். அந்தக் கூடத்தை ஒட்டினாற் போல ஒரு சிறிய அறை இருந்தது. அந்த அறையினுடைய கதவு எப்பொழுதும் மூடியே இருக்கும். அவள் அந்த அறையை நோக்கி நடந்தாள். தான் ஏற்கனவே திட்டமிட்டு தந்தையாரிடமிருந்து களவாடிக் கொண்டு வந்த திறவுக் கோலால் அந்த அறையினுடைய பூட்டைத் திறந்தாள். கதவு திறந்தது. உள்ளே சென்று மீண்டும் உள்ளிருந்தபடியே கதவை மூடிவிட்டாள்.

அந்தச் சிறிய அறையின் உள்ளே கதவின் ஓரத்திலே வரிசையாக பந்தங்கள் வைக்கப்பட்டு இருந்தன. அவைகளை ஏற்றுவதற்கான சக்கி முக்கிக் கற்களும், பஞ்சும் அருகில் வைக்கப்பட்டிருந்தன. இவற்றை எல்லாம் சங்கவை அன்றைய பகலிலேயே பார்த்து வைத்திருந்தாள். எனவே அந்த அறைக்கு உள்ளே சென்றவுடன் கதவை மூடினாள் சக்கி முக்கிக் கற்களையும், பஞ்சையும் சேர்த்து உராய்த்தாள் தீப்பொறி எழுந்தது. அதனைக் கொண்டு பந்தத்தைப்பற்ற வைத்தாள். பந்தத்தின் ஒளியிலே சுவற்றில் மாட்டப்பட்டிருந்த பல்வேறு அளவுள்ள கத்திகளையும் குறுவாட்களையும் கண்டாள் அவற்றில் ஒரு குறுவாளை எடுத்துத் தன்னுடைய இடுப்பில் கட்டி மறைத்துக் கொண்டாள்.

அந்த அறையின் நடுவிலே ஒரு பலகை பரப்பப்பட்டு இருந்தது. அந்த பலகையின் ஒரு ஓரத்தில் ஒரு பிடி இருந்தது. அந்தப் பிடியை பிடித்தவாறு பலகையை இழுத்தாள். அது

அசையவில்லை. பந்தத்தை அருகில் வைத்தாள். மீண்டும் பிடியைத் தன்னுடைய இரண்டு கரங்களாலும் பிடித்து பலமாக இழுத்தாள். பலகை பெயர்த்துக் கொண்டு வந்தது. அது பாதாளச் சிறையின் கதவு. அந்த பலகைக் கதவு ஒரு பக்கம் பொருத்தப்பட்டு திறப்பதற்கு ஏதுவாக இருந்தது.

சங்கவை அந்தக் கதவைத் திறந்தவுடன் ஒரு பள்ளம் தென்பட்டது. பந்தத்தை கையில் எடுத்துக் கொண்டு பள்ளத்தின் அருகில் சென்றாள். தீப்பந்தத்தின் ஒளியில் பள்ளத்தை உற்றுப் பார்த்தாள். பல படிகள் வரிசையாக கீழ்நோக்கிச் செல்வது அந்த ஒளியில் நன்றாகத் தெரிந்தது.

அவள் அச்சத்துடன் அந்தப் பள்ளத்தில் கால் எடுத்து வைத்து இறங்கினாள். படிகள் போய்க் கொண்டே இருந்தன. மெதுவாக அவற்றின்மீது நடந்தாள். பாதங்களை அழுத்தி வைத்துக் கீழே இறங்கினாள்.

அவள் கடைசி படியை விட்டுத் தரையில் இறங்கும் போது அங்கு நான்கு காவலர்கள் உருவிய வாட்களுடன் நின்றார்கள். மேலே இருந்து ஒளி வருவதை அவர்கள் முன்பே பார்த்து விட்டார்கள். எனவே அவர்கள் எச்சரிக்கையாகி விட்டார்கள். கடைசி படியிலிருந்து அடி எடுத்து கீழே வைக்கும்போது வருபவர்கள் யார் என்று தெரிந்துவிடும்; சந்தேத்திற்கு உரியவரானால் வேலையை முடித்துவிட வேண்டும். இந்த திட்டத்துடன் அவர்கள் உருவிய வாட்களுடன் தயார் நிலையில் இருந்தார்கள்.

இது சங்கவை எதிர்பார்க்காதது அல்ல. எனவே, அவர்களை நெருங்கும் முன்பே, படிகளின் மேல் நின்றவாறு 'ஒதுங்கி நில்லுங்கள்' என்று கம்பீரமாக ஆணையிட்டாள்.

'யார் நீ? உடலை மறைத்திருக்கும் போர்வையை விலக்கு. இன்றேல் எமபுரிக்கு அனுப்புவோம்.' மிடுக்கோடு கத்தினான், அந்த காவலர்களின் தலைவன்.

'யாரடா அவன்? அடக்கமாகப் பேசு. நாக்கை அறுத்து விடுவேன். வந்திருப்பது யார் என்பதை முதலில் தெரிந்து கொள்.' வேண்டுமென்ற அவள் தன் இயற்கைக்கு மாறாக அதிகாரத் தொனியில் பேசினாள். முகத்தை மறைத்திருந்த திரையை விலக்கி,' தெரிந்து கொண்டாயா, வந்திருப்பது யார் என்று?' என மிடுக்குடன் கேட்டாள்.

'ஆ, அரசகுமாரி!' என்றான் காவலர் தலைவன். அவனுடைய கால்கள் நடுங்கின அவன் மரமாக நின்றான். மற்றவர்களும் அச்சத்துடன் அப்பால் போய் நின்று கொண்டார்கள். அவள் அந்நேரத்தில் அங்கு ஏன் வரவேண்டுமென்று காவலர்கள் குழம்பினார்கள். அவள் கேட்டாள்:

'உங்களுடைய தலைவன் யார்?'

'அடியேன்தான், இளவரசி.'

'நீ மட்டும் பேசு, இங்கு திருமாறன் என்று ஒரு கைதி இருக்கிறாரா?'

'ஆம் தாயே.'

'அந்தக் கைதியை நான் பார்க்க வேண்டும்.'

'தாயே, திருமாறன் நாளைக் காலையில் தூக்கில் தொங்கப் போகும் கைதி.'

அது எனக்குத் தெரியும். கேட்பதற்கு மட்டும் மறு மொழி சொல். அதிகமாகப் பேசாதே.'

'உத்திரவு தாயே.'

'அந்தக் கைதி இருக்கும் அறையைத் திறந்து விடு. அவரைப் பார்க்க வேண்டும்.'

'அவனை இப்பொழுது யாரும் பார்க்க இயலாது இளவரசி.'

'என்ன சொல்லுகிறாய்? நான் கூடவா அவரைப் பார்க்க இயலாது என்கிறாய்?'

'மன்னிக்க வேண்டும் தாயே! அடியேன் அரசருடைய ஆணையை நிறைவேற்றும் அடிமை.'

'அந்தக் கைதி யார் என்று தெரியுமா?

'ஓரளவிற்குத் தெரியும் தாயே.'

'அவருடன் சில முக்கியமான அரசியல் செய்திகளைப் பேச வேண்டும். அதற்காகத்தான் மன்னர் என்னை அனுப்பினார். அந்தத் திருமாறன் யார் என்று கூட எனக்குத் தெரியாது. இதற்குமுன் அவரை நான் பார்த்துகூட இல்லை. முதலில் அந்தக் கைதியை எனக்குக் காட்டுங்கள்.'

'தாயே, அவனைக் காட்டுவதில் எங்களுக்குத் தடை எதுவும் இல்லை. ஆனால் தங்களை அரசர்தான் அனுப்பினார்

என்பதற்கான ஆதாரம் ஏதாவது இருக்கிறதா? இந்த வினா தொடுப்பதற்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன். ஆனால் இது என்னுடைய கடமை. அருள்கூர்ந்து கோபிக்காதீர்கள் தாயே!'

'என்னிடமே ஆதாரம் கேட்கிறாயா? நான் கோபிக்க வில்லை. உன்னுடைய கடமை உணர்வைப் பாராட்டுகிறேன். இதோ ஆதாரம்!' சங்கவை சேலைத் தலைப்பில் இருந்த ஒரு முடிச்சை அவிழ்த்தாள். அதிலிருந்து ஒரு ஈழ அரசு முத்திரை மோதிரம் எடுத்தாள் அதனைக் காவல் தலைவனுக்குக் காட்டினாள்.

சங்கவை இதெல்லாம் எதிர்பார்த்ததே! எனவே அன்று பகலிலேயே திட்டமிட்டு மன்னரிடமிருந்து முத்திரை மோதிரத்தையும், பாதாள அறையின் திறவு கோலையும் களவாடி வைத்திருந்தாள்.

அது ஈழ நாட்டின் மிகப் பெரிய பதவிகளில் இருப்பவர்கள் பயன்படுத்தும் உயர்ந்த முத்திரை மோதிரம். அதனைப் பார்த்த காவலர்கள் அசந்து விட்டார்கள். அவளை ஐயுற்றதற்காக மன்னிப்புக் கேட்டார்கள். திருமாறனைச் சந்திக்க ஏதுவாக அவன் இருக்கும் அறைக்கு அருகில் அவளை அழைத்துக் கொண்டு சென்றார்கள்.

'நீங்கள் இங்கேயே நில்லுங்கள். காவல் தலைவன் மட்டும் வந்து கதவைத் திறந்து விடட்டும்.' இச்சொற்களை சங்கவை கூறவே அவர்களுக்கு குழப்பமாகப் போய் விட்டது. அது அவர்களுடைய முகங்களில் பிரதிபலித்தது. அவர்கள் தலைவனைப் பார்த்தார்கள்.

'தாயே, கைதியுடன் எந்த இரகசியம் வேண்டுமானாலும் பேசுங்கள். நாங்கள் அப்பால் சென்று விடுகிறோம். ஆனால் சிறைக்கதவைத் திறக்க வேண்டியது தேவைதானா?'

'ஆம், கதவு திறக்க வேண்டும்.'

'வெளியில் இருந்து கொண்டே பேசக் கூடாதா?'

'இயலாது.'

'தாயே, தூக்கில் தொங்கப் போகும் கைதி தங்களை எதுவும் செய்யத் தயங்க மாட்டான்.'

'காவல் தலைவா, காலத்தை வீணாக்காதே. இந்தக் கைதி தூக்கில் தொங்க அதிக நேரம் இல்லை. காலம் குறுகிக் கொண்டு

இருக்கிறது. அதற்குள் அவனிடம் சில முக்கியமான அரசியல் தகவல்களை நான் அறிய வேண்டும். சில உண்மைகளை அவனைக் கக்க வைக்க வேண்டும். அவன் வெளியிட மறுத்தால் சாட்டைக்கும் வேலை இருக்கும். எனவே என்னிடம் ஒரு சாட்டையையும் கொடுங்கள். கதவைத் திறந்து விட்டுவிட்டு நீங்கள் அனைவரும் அதோ அந்தக் கடைசி அறையையும் தள்ளி சுவற்றின் ஓரம் போய் நில்லுங்கள். கைதி என்னதான் கத்தினாலும் யாரும் நெருங்க வேண்டாம். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.'

காவல் தலைவன் ஒரு சாட்டையை எடுத்து அவளிடம் நீட்டினான். இதனால் அவள்மீது காவலர்களுக்கு ஏற்பட்ட ஐயம் அகன்றது. அவள் கைதியிடம் அனுதாபம் கொண்டவள் அல்ல என உறுதியாக நம்பி விட்டார்கள். அவளால் எந்தத் தீங்கும் நேராது என்று அவர்கள் தெளிவான முடிவு செய்து விட்டார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட குழப்பம் மறைந்தது.

காவல் தலைவன் முன் நடக்க, அவன் பின்னே சென்றாள். மற்றவர்கள் அங்கேயே நின்றார்கள்.

'இருவரும் திருமாறன் இருந்த அறைக்கு எதிரே சென்றார்கள். எவ்விதமான அரவமும் இல்லை. அவள் கையில் பிடித்திருந்த பந்தத்தின் ஒளி சிறைக்கம்பிகளின் இடைவெளி மூலமாக அறைக்குள் பாய்ந்தது. அவள் காவல் தலைவனை நோக்கிப் பேசினாள்:

'காவல் தலைவா, விரைவில் பூட்டைத் திறந்த விடு.'

'தாயே, பூட்டைத் திறந்துதான் ஆகவேண்டுமா?'

'நீ என்மீது மீண்டும், மீண்டும் ஐயப்படுகிறாயா? கதவைத் திறக்க இயலுமா, இயலாதா என்பதை உடனே சொல்லிவிடு. நான் போகிறேன். பின்னர் மன்னரே வரட்டும். என்னை மட்டுமல்ல, அரசு முத்திரை மோதிரத்தையும் மதிக்காத உங்களை அவரே கவனித்துக் கொள்ளட்டும்.' கோபமாக சங்கவை பேசினாள்.

'மன்னிக்க வேண்டும் தாயே, என்னைத் தாங்கள் தவறாக நினைத்து விட்டீர்கள். நான் தங்களின் மீது ஐயப்படவில்லை: தாங்கள் இடும் ஆணையை மீறவும் இல்லை. அது என்னால் இயலுமா? இந்தக் கைதியால் தங்களுக்கு ஏதாவது இடையூறு நேர்ந்தால் என்ன செய்வது என்ற அச்சத்தால்தான் தயங்கினேன்.'

'அப்படி ஒன்றும் நேராது. என்னை கவனித்துக் கொள்ள எனக்குத் தெரியும். என்னிடம் ஆயுதம் இருக்கிறது. அவன்

நிராயுதபாணி. அதற்கும் மீறி ஆபத்து நேருமானால் குரல் கொடுப்பேன். நீங்கள் எதற்கும் ஆயத்தமாக இருங்கள்.'

சிறை அறைக்குள் ஒரு மூலையில் ஈரத்தரையில் ஒரு கம்பளம் தாறுமாறாக சுருண்டு கிடந்தது. அதன்மீது திருமாறன் படுத்திருந்தான். அவன் சிந்தனையில் ஆழ்ந்து இருந்தான். இன்னும் சில யாமங்களில் உயிர்விடப் போகும் கைதிக்கு உறக்கம் வருமா? கையை மடக்கி தலையணையாக வைத்துக் கொண்டு படுத்தப்படியே சிந்தனையில் ஆழ்ந்து இருந்தான்.

சிறைக்கதவு பக்கம் அரவம் கேட்கவே திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தான். ஒரு காவலன் அந்த அறையின் கதவைத் திறந்து கொண்டு இருந்தான் அவன் அருகில் உச்சி முதல் உள்ளங்கால்வரை கறுப்புத் துணியால் போர்த்தப்பட்ட ஒரு உருவம் நின்றிருந்தது.

கதவைத் திறந்த காவலன் அப்பால் சென்று விட்டான். அந்தக் கரிய உருவம் சிறை அறைக்குள் புகுந்து அவனை நோக்கி நடந்து வந்தது. அது கையில் ஒரு பந்தத்தை தூக்கிக் கொண்டு வந்தது. அதனை அவன் உற்றுப் பார்த்தான். யார் எனத் தெரியவில்லை. பாதங்களில் தென்பட்ட சலங்கை அங்கு வந்திருப்பது ஒரு பெண் எனக் காட்டிக் கொடுத்து விட்டது.

அந்நேரத்தில் அவனைப் பார்க்க ஏன் ஒரு பெண் வர வேண்டும்? அது யாராக இருக்கும்? உடனே அவனுடைய மனதில் பளிச்சிட்டவள் கோதைதான். அவளுக்குத்தான் அப்படி வரும் மனோதிடம் உண்டு. மேலும் அவளுக்கு அவனிடம் வேலையும் இருக்கலாம். உயிர் ஆசை காட்டி அவனிடம் ஏதாவது சலுகை பெறுவது அவளுக்கு நோக்கமாக இருக்கலாம். அவளைத் தவிர யாரும் அவ்வளவு துணிவாக தனியே கைதி இருக்கும் அறைக்குள் வரமாட்டார்கள்!

சிந்தனைவரவே அவனுடைய உடல் பற்றி எரிந்தது. ஆயிரம் தேள்கள் ஏககாலத்தில் உடலைத் தீண்டியது போலத் துடித்தான். 'கோதை கொடுமையின் உருவம். இரக்கமில்லாத அரக்கி. சோழ இளவல்களைக் கொன்று தின்று விட்டாள். தன்னையும் இன்னும் ஒருசில யாமங்களில் கொன்று இரத்தம் குடிக்க ஏற்பாடு செய்து விட்டாள் சோழ வேந்தன் இராசாதி ராசன் மீது குறி வைத்துவிட்டாள். சோழ நாட்டைப் பிடித்த பேய் இவள். இவளுடைய எண்ணங்கள் கைகூடி வருகின்றன. இவளுக்கு இனி

எஞ்சி இருக்கும் இலக்கு சோழ வேந்தன்தான். அவரைக் காப்பாற்ற துர்க்காபரமேஸ்வரி தான் எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்திருக்கிறாள். ஆம், என்னுடைய வாழ்வின் கடைசி நேரத்தில் சோழ குலத்திற்கு ஒரு சிறந்த தொண்டு செய்வேன். அதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கத்தான் அந்த முருகக் கடவுளே கருணைகூர்ந்து இந்நேரத்தில் அவளை இங்கு அனுப்பி இருக்கிறான்.

'காலத்தை வீணாக்கக்கூடாது. காவலர்கள் வந்து விடலாம். அவளை எதிர்கொண்டு அழைப்பது போல நெருங்கிச் சென்று வேலையை முடித்துவிட வேண்டும். அவளுடைய கழுத்தைப் பிடித்து நெறித்துக் கொன்றுவிட வேண்டும். அந்த புனிதப் பணியை செய்வதற்கான நேரம் நெருங்கி விட்டது. அதோ அவள் நெருங்கிவிட்டாள். வரட்டும், வரட்டும்!'

கையில் பந்தம் ஏந்தியக் கொண்டு தன்னை நெருங்கி வந்த சங்கவையை நோக்கி அவன் ஓடினான். அவளுடைய கழுத்தைத் தன்னுடைய இரு கரங்களாலும் சேர்த்துப் பிடித்தான். பின்னர் கழுத்தை வேகமாக நெருக்கி அவளைக் கொல்ல முற்பட்டான். அவனுடைய நோக்கத்தை உணர்ந்து கொண்ட அவள் பதைபதைத்துக் கத்தினாள்: 'ஐயா, நான் சங்கவை, சங்கவை! தங்களுக்கு உதவுவதற்காகவே இங்கு வந்தேன் அவன் அவளுடைய கழுத்தை அழுத்திப் பிடித்ததால் அவள் சங்கவை, சங்கவை என்று கூறிய குரல் மட்டுமே கேட்டது. அடுத்துக் கூறியது வெறும் உளறல் போலக் கேட்டது.

அவன் திடுக்கிட்டான். அவனுடைய கரங்கள் தளர்ந்தன. ஓரடி பின்னால் எடுத்து வைத்து நின்று கொண்டு ஒன்றும் புரியாமல் அவளை விழித்துப் பார்த்தான். அவள் தன்னை மூடியிருந்த போர்வையைக் கழற்றி அப்பால் எறிந்தாள் எழில்ராணி சங்கவை அழகுப் பிம்பமாக எதிரில் நின்றாள். திருமாறன் பேய் அறைந்தவனைப் போல ஆனான். நிதானமான மூச்சு வாங்கிக் கொண்டே பேசினான்!

'இளவரசி, தாங்களா! தங்களுடைய தாள்பணிந்து வேண்டுகிறேன். என்னை மன்னித்து விடுங்கள் இந் நேரத்தில் தாங்கள் இந்தக் கைதியைத் தேடி வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எனவே தெரியாமல் தங்களைக் கொல்லத் துணிந்துவிட்டேன்.'

'அப்படியானால் தாங்கள் வேறு யாரையோ எதிர் பார்த்து இருக்கிறீர்கள்!'

'நான் யாரையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் வந்தவள் கோதையாகத்தான் இருப்பாள் என்று நினைத்து ஏமாந்து விட்டேன்.'

'கோதைக்கும், தங்களுக்கும் அத்தனை நெருங்கிய உறவு உண்டு போலும்!'

'இளவரசி, அருள்கூர்ந்து தவறாக நினைக்க வேண்டாம். இந்நேரத்தில் இப்படித் தனிமையில் வரக் கூடிய அளவிற்கு மன உறுதி படைத்தவள் அவள் மட்டுமே என்று நினைத்தேன். எனவே இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அந்தப் பேயை முடித்துவிட முனைந்தேன். அவளுடன் எனக்கு நெருக்கம் இருப்பின் கழுத்தையா பற்றி இருப்பேன்!'

'ஆம், கழுத்தைப் பற்றி இருக்க மாட்டீர்கள். வேறு எங்காவது பற்றி இருப்பீர்கள்!'

'இளவரசி, விளையாட்டுப் பேச்சு பேச இது நேரமல்ல. தாங்கள் இந்த துர்பாக்கியம் செய்த கைதியை நாடி வந்த காரணத்தை அடியேன் அறியலாமா?'

'தங்களைப் பார்க்கத்தான் வந்தேன்.'

'இளவரசி, இந்நேரத்தில் இந்த இடத்திற்குத் தாங்கள் வரலாமா? இது மன்னருக்குத் தெரியுமா? தாங்கள் செய்தது தவறு. உடனே புறப்படுங்கள். நான் பிழை செய்து விட்டேன். அதற்குத் தக்க தண்டனையை அவர் கொடுத்திருக்கிறார். அவர் நிலையில் யார் இருந்தாலும் இந்த தண்டனையைத்தான் கொடுப்பார்கள். நான் மரணத்திற்கு அஞ்சிய கோழை அல்ல. இந்தக் கைதியை காணவந்த தங்களுக்கு என் நன்றி. தாங்கள் புறப்படலாம்.'

'ஐயா, அருள்கூர்ந்து என்னை வதைக்க வேண்டாம். இந்நிலையில் தங்களை விட்டுவிட்டு நான் போகவா?'

'போகாமல் என்ன செய்வீர்கள்? எனக்கு இறுதி நேர உபதேசம் செய்யலாம். செய்யுங்கள்!' திருமாறன் சிரித்தான். சங்கவை தொடர்ந்தாள்:

'ஐயா, நகைப்பிற்கு இதுவா நேரம்? தங்களுடைய இன்னுயிர் காலனுக்கு இரையாக இன்னும் சிறிது நேரமே இருக்கிறது.'

'அதை எனக்கு அறிவித்து விட்டார்கள்.'

'செயல்பட வேண்டிய தருணம் இது.'

'செயல்படுவதா? இந்த அறைக்குள் என்ன செயல்பட முடியும்? உடற்பயிற்சி வேண்டுமானால் செய்யலாம். சில நொடிகளில் அழியப் போகும் இந்த உடம்பிற்கு உடற்பயிற்சி தேவைதானா?'

'ஐயா, விளையாட வேண்டாம். ஆக வேண்டியதை சிந்தியுங்கள்.'

'லீலைபுரியச் சொல்லுகிறீர்களா?' அவன் சிரித்தான்.

'ஐயா, தங்களுடன் லீலை புரியும் பாக்கியம் எனக்கு இல்லை என்பதை அறிந்து கொண்டேன். ஆனால் தங்களை நான் உளமாற நேசிக்கிறேன்.'

'இளவரசி, அன்றோரு நாள் அரண்மனைத் தோட்டத்தில் சந்தித்தோம். அப்பொழுது காதல் மொழிகளைக் கொட்டினீர்கள். அது பருவக்கோளாறு. ஏன், இயல்பு என்று கூட வைத்துக் கொள்ளலாம். ஆனால் இன்னும் சில நாழிகைகளில் உயிர் விடப் போகும் ஈழ நாட்டு எதிரியை இப்பொழுதும் காதலிக்கிறீர்களா? வியப்புதான்! தங்களுடைய மனநிலையில்தான் ஏதோ கோளாறு இருக்கிறது.'

'போதும் ஐயா, இதனை எல்லாம் பேச நேரமில்லை.'

'என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்? தெளிவாகச் சொல்லுங்கள் தர்ங்கள் இங்கு வந்த காரணம் என்ன? தங்களுடைய மாசற்ற அன்பிற்குத் தலை வணங்குகிறேன்.'

சங்கை அவனுடைய காதருகில் முகத்தைக் கொண்டு சென்றாள் ஏதோ மெதுவாகக் கூறினாள். அப்பொழுது அவனுடைய முகம் அவளுடைய உதட்டின்மீது பட்டது. மெய்மறந்து நின்றாள். ஆனால் அவள் கூறியதைக் கேட்ட அவன் திடுக்கிட்டான். பதட்டத்துடன் பேசினான்:

'இளவரசி, என்ன சொல்லுகிறீர்கள்? என்னுடைய செவிகளை நம்ப இயலவில்லையே!'

'தங்கள் செவிகளை நம்புவது இருக்கட்டும். என்னை நம்புகிறீர்களா?'

'நிச்சயமாகத் தங்களை நம்புகிறேன்.'

'அப்படியானால் நான் சொல்லுவதைக் கேட்க வேண்டும்.'

'முடியாது.'

'நிச்சயமாக முடியாதா? அவள் அவனுடைய கரத்தைப் பற்றிக் கொண்டு அழுதாள். அவன் கூறினான்:

'இளவரசி, தங்களுடைய சொற்படி நாம் இவ்விடத்தை விட்டு வெளியேறுவதாகவே வைத்துக் கொள்ளுவோம். காவலர்கள் நம்மை சும்மா விட்டு விடுவார்களா? என்னைக் கொன்றுபோட்டு விடுவார்கள். என்னிடம் ஆயுதம் இல்லை. அவர்களிடம் இருக்கின்றன.'

'ஆம், அது எனக்குத் தெரியும்.'

'என்ன தெரியும்?'

'வெளியில் போவது இருவரல்ல ஒருவர்!'

'என்னைக் குழப்பாதீர்கள். விவரமாகச் சொல்லுங்கள்'

'ஆம், தாங்கள் வெளியே போவீர்கள். நான் உள்ளே இருப்பேன்.'

'இளவரசி, தாங்கள் சித்தத் தெளிவுடன்தான் பேசுகிறீர்களா?'

'ஆம், மிகவும் தெளிவாக இருக்கிறேன்.'

'அப்படியானால் நான் எப்படி வெளியேற முடியும்?'

'காவலர்களுடைய பார்வையில் இங்கு வந்த சங்கவை வெளியே செல்வாள். உண்மையில் வெளியேறுவது தாங்கள்.'

'குழப்புகிறீர்கள்!'

'நான் குழப்பவில்லை ஐயா! விளக்கமாகச் சொல்லுகிறேன். பொறுமையாகக் கேளுங்கள். தாங்கள் என்னுடைய உடையை அணிந்து கொண்டு சங்கவையாக வெளியே செல்லுவீர்கள். நான் தங்கள் உடைகளைத் தரித்துக்கொண்டு இந்த அறையில் கைதியாகப் படுத்திருப்பேன்.'

'ஓ, புரிகிறது. இப்பொழுது நன்றாகப் புரிகிறது. நல்ல திட்டம் இது! ஒரு பெண்ணின் உடையில் நான் சிறை தப்ப வேண்டும் அல்லவா?'

'இதில் இழிவு ஒன்றுமே இல்லை. தங்கள் குறிக்கோள் நிறைவேற எத்தனையோ வேடங்களைப் பூண்டிருக்கிறீர்கள். அவற்றில் இதுவும் ஒன்று.'

'உயிர் பிழைப்பதுதான் என்னுடைய குறிக்கோள் என்று நினைத்து விட்டீர்களா?'

'இல்லை. இலக்கை அடைய உயிரைப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும். சுவற்றைக் காப்பாற்றி வைக்கா விட்டால் சித்திரம் தீட்ட முடியுமா? எனவே சுவற்றை இடிக்கக் கூடாது!'

'அப்படியே வைத்துக் கொள்வோம். என்னைத் தாங்கள் நேசித்த ஒரே குற்றத்திற்காக தங்களை சிறையில் தள்ளிவிட்டு நான் ஓடவா?'

'காதலின் விலை நான் படப்போகும் துன்பம்.'

'சங்கவை! நான் மனம் திறந்து சொல்லுகிறேன். தாங்கள் தெய்வமகள். இதுவரை தங்களுடைய காதலை வெறும் பருவக் கோளாறு என்றே நினைத்தேன். அதற்கு மேல் நான் நினைத்ததில்லை. இப்பொழுதுதான் என்னுடைய கண்கள் திறந்தன. தங்களுடைய தூய உள்ளத்தைக் காண்கிறேன். ஈரேழு உலகங்களும் கூட ஈடாக வைக்க முடியாத தங்களின் மாசற்ற அன்பின் முன்னர் நான் ஒரு சிறய புழு. தங்களுடைய பாத தூசுக்கும் ஈடற்றவன் நான். தங்களுக்கு இது காதலின் விலையாக இருக்கலாம். ஆனால் எனக்கு இது துரோகத்தின் பரிசு.

'நேரம் ஆகிக் கொண்டே இருக்கிறது. உடைகளைக் கழற்றுங்கள்.'

'சங்கவை, தங்களுடைய அன்பிற்கு நான் தலை வணங்குகிறேன். மீண்டும் சொல்லுகிறேன். அருள்கூர்ந்து இந்த இடத்தை விட்டுப்போய் விடுங்கள் ஒருக்காலும் இந்த திட்டத்திற்கு நான் ஒப்ப மாட்டேன். என்னைக் குழப்ப வேண்டாம். அன்பு உள்ளத்தைப் பலியிட்டு உயிர் வாழும் ஈனன் அல்ல நான். மரணத்தைக் கண்டு அஞ்சுபவனும் அல்ல. அப்படி அஞ்சி இருப்பின் இத்தகைய செயலில் நான் ஈடுபட்டே இருக்க மாட்டேன். சென்று விடுங்கள்.'

'ஐயா, நான் வந்தபடியே செல்வதற்காக இங்கு வரவில்லை. தங்களை விடுதலை செய்யத்தான் இத்தனை இன்னல்களையும் ஏற்றுக் கொண்டு வந்தேன். தாங்கள் வெளியே துரத்தினாலும் நான் போக மாட்டேன். இங்கேயே நானும் இருப்பேன்.'

'இளவரசி, அரசர் இதனை அறிந்தால் தங்களையும் கொன்றுவிடுவார்.'

'அது நான் செய்த பாக்கியம். காதலுக்கு நான் கொடுக்கும் விலை என மகிழ்ச்சி அடைவேன் ஐயா.'

'காதலியின் இரத்தத்தை குடித்து உயிர் வாழும் கயவன் அல்ல நான்.'

'அருள்கூர்ந்து பொறுமையாக நான் சொல்லுவதைக் கேளுங்கள். தங்களைத் தப்புவிக்கச் செய்தால் அரசர் என்னைக் கோபிப்பார். அவரைச் சமாளிக்க எனக்குத் தெரியும். அப்படி நான் இறந்தாலும் அதனால் யாருக்கும் பாதிப்பு இல்லை. ஆனால் தாங்கள் இறந்தால் எத்தனையோ பேருக்கு பாதிப்பு ஏற்படும். சிந்தனை செய்யுங்கள். நல்லதைச் செய்ய எனக்கும் ஒரு வாய்ப்பை அருளுங்கள்.' அவள் அவனுடைய காலடியில் விழுந்தாள். பாதங்களைப் பற்றியவாறு அழுதாள்.

அவன் அவளைத் துக்கி நிறுத்தினான். அவளுடன் சேர்ந்து கொண்டு அவனும் அழுதான்.

'சங்கவை,' என்று அவன் பரிதாபமாகக் கொஞ்சும் பாணியில் விளித்தான்.

'சொல்லுங்கள் சுவாமி.'

'என்னுடைய உள்ளத்தைத் தங்கள் புரிந்து கொள்ள வேண்டும். தாங்கள் காதல் தெய்வம். தங்களுடைய பாதங்களில் என் பாவங்களைக் கொட்டினால்தான் எனக்கு நற்கதி கிடைக்கும். இப்பொழுதுகூட நான் உண்மையைப் பேசாவிட்டால் இனி என்றுமே அந்த வாய்ப்பு ஏற்படாது. தாங்கள் என்னைவிட வயதில் சிறியவர். ஆனால் உள்ளத்தால் மிகவும் பெரியவர். தங்களுக்கு முன்னால் நான் மிகவும் தாழ்ந்தவன். என்னுடைய இதயத்தைத் திறந்து உண்மையைச் சொல்லுகிறேன். கேளுங்கள்! உண்மையை நான் சொன்னால் என்னை விடுதலை செய்யும் ஆசையையே தாங்கள் விட்டு விடுவீர்கள்,'

'சொல்லுங்கள்.'

'இளவரசி, என்னை மன்னித்து விடுங்கள். நான் ஏற்கனவே ஒரு பெண்ணிடம் என்னுடைய இதயத்தைப் பறி கொடுத்து விட்டேன். காதலித்த அவளைத் திருமணமும் செய்து கொண்டேன்.'

'இது உண்மையா?'

'ஆம், உன்னுடைய அன்பின்மீது ஆணை.'

'இதனை நான் நம்ப முடியாது. என்னுடைய திட்டம் நிறைவேறாது இருக்க தாங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள்!'

'சங்கவை, என்னை நம்புங்கள். நான் தங்களை ஏமாற்றி விட்டேன். தங்களை நான் நேசிக்கவே இல்லை. அன்றொரு நாள் நாம் சந்தித்து அரண்மனைத் தோட்டத்தில் பேசியதை அரசர் மறைந்திருந்து கவனித்தார். அவரை ஏமாற்றி அரசியல் ஆதாயம் பெறவே தங்களை நேசிப்பது போல நடித்தேன். இதுதான் உண்மை.'

அவள் அப்படியே அதிர்ச்சி அடைந்து நின்று விட்டாள். கண்களில் நீர் கொட்டியது, அவன் அதனைத் துடைக்க அவளை நெருங்கினான். அவள் அப்பால் விலகிக் கொண்டாள். முகத்தில் ஒரு அமைதி ஏற்பட்டது. மெதுவாகப் பேசினாள்:

'ஐயா, தாங்கள் சொல்லுவதை நம்புகிறேன். இதனால் நான் வைத்திருக்கும் அன்பு குறைந்து விடாது, இன்னும் சொல்லப்போனால் பொய்யாக நடித்து உயிர் வாழ மாட்டேன் என்ற தங்களின் தூய உள்ளத்தை இப்பொழுது மேலும் ஒரு படி அதிகமாக நேசிக்கிறேன், நாம் ஒன்று கொடுத்தால் அதற்குப் பிரதியாக மற்றவர் ஒன்றைக் கொடுக்க வேண்டுமென்பது வியாபாரம், நான் வியாபாரி அல்ல, என்னுடைய காதலும் ஒரு வியாபாரப் பொருள் அல்ல, என்னுடைய உள்ளத்தை தங்கள்பால் செலுத்தி விட்டேன். அதுதான் காதல் என்றால் அதற்கு உண்மையாக இருப்பது என்னுடைய கடமையாகும், தாங்கள் என்னைக் காதலிக்கிறீர்களா, இல்லையா என்று நான் ஏன் கவலைப்பட வேண்டும்? நான் தங்களைக் காதலிக்கிறேன், அதற்காக என்னையே பலியிட்டு காதல் தெய்வத்தைப் பூசிப்பேன்.'

'சங்கவை, உண்மையைச் சொல்லியும் தங்களுடைய உள்ளம் மாறவில்லையா?'

'இல்லை, அதனை மாற்றத் தங்களாலும் இயலாது, நம்மைப் படைத்த இறைவனாலும் இயலாது,'

'மீண்டும் சொல்லுகிறேன், அருள்கூர்ந்து சென்று விடுங்கள். விடியும் நேரம் ஆகிவிட்டது, விடிந்தால் தங்களுடைய தகப்பனார் என்னைக் கொல்லப் போகிறார். ஆனால் தாங்கள் அன்பால் இப்பொழுதே என்னைக் கொல்லுகிறீர்கள். இது அறம் அல்ல, என்னைக் கொல்ல வேண்டாம், போய் விடுங்கள்' இச் சொற்களைக் கூறிய திருமாறன் சுவற்றின் பக்கம் திரும்பி நின்று கொண்டான், தேம்பித் தேம்பி அழுதான்.

'ஐயா, திரும்பிப் பாருங்கள், கடைசியாகக் கேட்கிறேன். என்னுடைய திட்டத்தை ஏற்க முடியுமா, முடியாதா? ஏற்கவில்லையாயின் இப்பொழுதே என் மார்பில் குத்திக்

கொண்டு உயிர் விடுவேன். தாங்கள் இறக்கும் செய்தியைக் கேட்ட பின்பு நான் உயிர் வாழ இயலாது, எப்படியும் விடிந்த பின்னர் சாகப்போகும் நான் இதோ, இப்பொழுதே தங்களுடைய காலடியில் உயிரை விடுகிறேன்.' அவள் தன்னுடைய மார்பில் குத்திக் கொள்ள குறுவாளை ஓங்கினாள்.

திருமாறன் இதனை எதிர்பார்க்கவில்லை, அவள் குறுவாளுடன் வந்திருப்பாள் என நினைக்கவும் இல்லை. கண் இமைக்கும் நேரம் தாமதித்தால்கூட அவள் பலியாவாள், அவன் விரைந்து அவளை நெருங்கி அவளுடைய கரத்தைப் பிடித்து வாளைப் பறித்து அப்பால் எறிந்தான். சங்கவையை அப்படியே அள்ளி இறுக்கி அணைத்துக் கொண்டான். 'என்னுடைய காதல் தெய்வமே! இறைவனுடைய அருள் இதுவானால் உன்னுடைய விருப்பப்படியே நடக்கட்டும்.' இச்சொற்களை மெதுவாக அவளுடைய காதருகில் கூறினான்.

'அப்படியா! இந்த இன்பமே என் வாழ்நாள் முழுவதற்கும் போதும். இது போதும். நான் பேராசைக்காரி அல்ல. கிடைத்ததைக் கொண்டு மகிழ்வடைவேன். போரில் தான் பட்ட புண்களை நினைத்து பூரிக்கும் போர் வீரனைப் போல என் வாழ்நாளெல்லாம் இந்த ஒரு நொடியை நினைத்து பூரித்துக் கொண்டே இருப்பேன்! தாங்கள் என்னை அணைத்துக் கொண்டதை நினைத்து, நினைத்து அகமகிழ்வேன்!' அவள் அவனை இறுக அணைத்துக் கொண்டாள். அவனுடைய முகத்தில் மாறி மாறி முத்தமிட்டாள்.

இருவருடைய உடைகளும் மாறின. சன்னிதானத்தில் தேவியை பக்தியுடன் வணங்கும் பக்தனைப் போல அவன் அவளுடைய பாதத்தைத் தொட்டு வணங்கினான். அப்பொழுது அவனுடைய கண்ணீர் அவளுடைய பாதத்தை பூசித்தது. பெண் உடை தரித்த அவன் கருப்பு போர்வையை போர்த்தியவாறு வெளியேறினான்.

அன்று மட்டுமல்ல, அவன் வாழ்நாள் முழுவதும் போற்றி வணங்கும் மகாசக்தியாக சங்கவை ஆகிவிட்டாள். அந்த தெய்வத்தாய் சங்கவையை அவன் அதன் பின்னர் தன்னுடைய வாழ்நாளில் சந்திக்கவே இல்லை. அப்பிறவியில் அந்த காதல் தெய்வத்தின் தரிசனம் அவன் கண்டதில்லை. ஆனால் அவன் தன்னுடைய வாழ்வின் கடைசி மூச்சுவரை அந்த தெய்வத்தை வணங்கிய வண்ணமே வாழ்ந்தான்.

14

வரலாற்று நாயகனானார்

ஈழவேந்தன் பராக்கிரம பாகுவினுடைய சகோதரியான மித்ராவின் புதல்வன் சீவல்லபன் சோழ அரசிடம் தஞ்சம் அடைந்தான். சோழ அரசு சீவல்லபனுக்கு ஒரு நாட்டு அரசனுக்கு உரிய மரியாதை அளித்தது. அவனைச் சிறப்புற நடத்தியது. தேவையான உதவிகளை அளிப்பதாகவும் உறுதி அளித்தது. ஆனால் அவனுக்கு சதிகாரி கோதையுடன் தொடர்பு இருக்கிறது எனத் தென்பட்டது. அவள் சோழ இளவல்களை அரண்மனையிலிருந்து கடத்திக் கொண்டு போனபோது சீவல்லபனுடைய மாளிகைக்குச் சென்றாள். அங்கிருந்துதான் அவள் மறைந்தாள். இவைகள் எல்லாம் சித்தன் கண்ணால் கண்டவையாகும்.

இதன் விளைவாக சீவல்லபன் கைது செய்யப் பட்டான். பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டான். ஆனால் அவன் சிறை தப்பினான். ஈழ நாட்டிற்குச் சென்றான். சோழ நாட்டைத் தாக்க தனக்கு படைகளைக் கொடுத்து உதவுமாறு ஈழவேந்தனை வேண்டினான். அவனும் படைகளை .கொடுத்து உதவினான். சீவல்லபன் படைகளுடன் தமிழகத்திற்கு வந்தான்.

சீவல்லபன் தென் பாண்டி நாட்டில் படைகளுடன் இறங்கினான். ஆனால் அவன் வந்து இறங்கிய உடனேயே சோழர் படைகளால் கைது செய்யப்பட்டான். இவை எல்லாம் நாம் அறிந்ததே. நன்றி மறந்த சீவல்லபனுடைய செயல் சோழ மன்னருக்கு பெரும் சினத்தை ஏற்படுத்தியது. சீவல்லபனை சோழ அரசு சீரும் சிறப்பாக நடத்தியது. ஆனால் அவனடைய செயல் அதற்கு ஏற்ப அமையவில்லை. மீண்டும் அந்த எலி கூண்டில் சிக்கிக் கொண்டது. அதற்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என மன்னர் விரும்பினார்.

சீவல்லபனுக்கு அளிக்கப் போகும் தண்டனையை நாடும் நகரமும் அறிய வேண்டும். அது மட்டுமல்ல, அச்செய்தி ஈழ

நாட்டிற்கும் எட்ட வேண்டும். இது ஈழ நாட்டிற்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும். சோழ நாட்டு மக்களுக்கு உற்சாகம் அளிக்கும். எனவே அரசு அவையைக் கூட்டி பகிரங்கமாக சீவல்லபனை விசாரிக்க வேண்டும், அவையிலேயே அவனுக்கு தண்டனை அளிக்க வேண்டும் என மன்னர் விரும்பினார்.

அதற்காகவே அரச அவை கூடியது. அந்தச் சபையில் சோழ அரசின் பெரும் புள்ளிகள் எல்லாம் வீற்றிருந்தார்கள். பல சிற்றரசர்கள் வீற்றிருந்தார்கள். நாடு காவல் அதிகாரிகள் வந்திருந்தார்கள் வேளிர் படைத் தலைவர்களும், கைக் கோளர்படைத் தலைவர்களும் அவரவர்களுக்குரிய ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள். பல்வேறு படைப் பிரிவுகளின் தலைவர்களும், நானா தேசத் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் என்று புகழ் பெற்ற வர்த்தக மண்டலத் தலைவர்களும் சபைக்கு வந்திருந்தார்கள்.

அரச சபைக்கு மன்னர் இராசாதிராசன் வந்தார். அனைவரும் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் செலுத்தினார்கள். 'சோழ மாமன்னர் இராசாதிராசர் வாழ்க!' என வாழ்த்தொலிகள் முழங்கின. மன்னர் அனைவரையும் வணங்கிவிட்டு ஆசனத்தில் அமர்ந்தார் அதன் பின்னர் சபையினரும் தங்களுடைய ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

கைதி சீவல்லபனை அழைத்து வருமாறு மன்னர் பணித்தார். சிறிது நேரத்தில் காவலர்கள் அவனை அழைத்து வந்தார்கள். அவனுடைய இரு கரங்களிலும் விலங்குகளை மாட்டி அழைத்து வந்தார்கள். இரு புறங்களிலும் காவலர்கள் சூழ கைதி சபைக்கு வந்தான். சபையின் நடுவில் நிறுத்துப்பட்ட கைதி கம்பீரமாக அனைவரையும் ஒருமுறை பார்த்து விட்டு அடலேறுவென நின்றான். அவனுடைய நிமிர்ந்தநடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் எவர்க்கும் அஞ்சா துணிவும் சபையை வியப்பில் ஆழ்த்தின. மன்னர் இராசாதிராசர் கைதியை நோக்கி விசாரணையை துவக்கினார்.

'சீவல்லபா, உன்னுடைய குற்றங்களுக்கு விசாரணையே தேவையில்லை. அவைகள் தெள்ளத் தெளிவானவை. விசாரிக்காமலேயே உனக்கு தண்டனை அளிக்க முடியும். ஆனால் ஆராய்ச்சி மணி கட்டி ஆண்ட இந்தச் சோழ சிம்மாதனத்தில் சிறப்பிற்கு மாசு வரக்கூடாது. அதற்காகவே உன்னை விசாரிக்கிறேன். சபையின் முன்னர் விசாரிக்கவே விரும்புகிறேன். அப்பொழுதுதான் உன்னுடைய தவறுகள் சோழ நாட்டிற்கு வெளிப்படையாகத் தெரியும். உன்னுடைய மன்னன் பராக்கிரமபாகுவும் அவற்றை அறிய ஒரு வாய்ப்பாக இருக்கும்.'

'அரசே, மெத்த மகிழ்ச்சி, தங்களுடைய பெரிய மனதிற்காக என்னுடைய பாராட்டுகள்!'

'கைதி, உன்னுடைய நாக்கு நீளுகிறது. எனக்கு ஒரு குற்றவாளியின் பாராட்டு தேவை இல்லை.'

'அரசே, என்னைக் கைது செய்தீர்கள். குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி இருக்கிறீர்கள். விசாரணை தொடங்குவதற்கு முன்னர், தான் செய்த குற்றம் என்ன என அறியும் உரிமை ஒவ்வொரு கைதிக்கும் உண்டு. அந்த உரிமையின் அடிப்படையில்தான் கேட்கிறேன். என் மீது சுமத்தப் பட்ட குற்றப்பட்டியலை நான் அறியலாமா?'

'குற்றப்பட்டியல் வேண்டுமா? எண்ணிக் கொள். சதிகாரி கோதையுடன் தொடர்பு கொண்டது முதல் குற்றம். பாதாளச் சிறையிலிருந்து தப்பியது இரண்டாவது குற்றம். ஈழப்படைகளை சேர்த்துக் கொண்டு படை எடுத்து வந்தது மூன்றாவது குற்றம்.'

'இன்னும் பட்டியல் இருக்கிறதா அரசே?'

'கைதி, வினா தொடுக்க வேண்டியவன் நான். விடை அளிக்க வேண்டியது நீ. எனவே உன்னுடைய வினாவிற்கு என்னிடமிருந்து எந்த விடையும் எதிர்பார்க்காதே. காலத்தை வீணாக்காதே. கேட்பதற்கு மட்டும் மறுமொழி சொல்ல வேண்டும்.'

'நல்லது அரசே! இனி எதுவும் கேட்க மாட்டேன் கேட்பதற்கு மட்டுமே மறுமொழி சொல்கிறேன்.'

அச்சமயத்தில் அமைச்சர் தலைவரும், சோழ சேனாபதியுமான வேதவனம் அம்மை அப்பனான பல்லவராயன் சபைக்குள் புகுந்தார். சபையிலிருந்த அனைவரும் மரியாதையோடு எழுந்து நின்று அவருக்கு வணக்கம் செலுத்தினார்கள்.

மன்னர் ஆசனத்தை விட்டு எழுந்து சிறிது தூரம் நடந்து போய் சேனாபதியைத் தழுவிக் கொண்டார். அவருடைய கரத்தைப் பிடித்து அழைத்து வந்து தமக்கு அருகில் வல புறத்தில் இருந்த ஆசனத்தில் அமருவாறு கோரினார். சேனாபதி சபைக்கு வணக்கம் செலுத்தினார். பின்னர் அமர்ந்தார்.

சபையினர் 'சோழ சேனாபதி பல்லவராயர் வாழ்க' என வாழ்த்தொலி எழுப்பினார்கள்.

பாண்டிநாட்டு நிர்வாகத்தை செம்மைப்படுத்த சேனாபதி பழையாறையை விட்டுப் போய் பல நாட்கள் ஆகிவிட்டன.

சென்ற வேலை முடிந்துவிட்டது. அங்கிருந்து புறப்பட்டு அப்பொழுது தான் நகருக்கு வந்தார். அரசு அவை கூடியிருப்பதுகேட்டு நேராக அங்கு வந்தார். அரசரும் அப்பொழுது தான் அவரைக் கண்டார். மற்றவர்களும் அவரைக் கண்டு பல நாட்கள் ஆகிவிட்டன. எனவேதான் அவருக்கு அனைவரும் குதூகலமாக வரவேற்பு அளித்தார்கள்.

அரசர் அன்போடு அவருடைய நலனை விசாரித்தார்.

'என்ன அமைச்சர் தலைவரே. நலமா? இத்தனை நாட்கள் எங்களையும் இந்த நாட்டையும் மறந்து விட்டீர்களா? இன்று தான் நினைவிற்கு வந்ததா?'

'அது இயலுமா அரசே? நான் மறக்கினும் என் நா மறக்குமா நமசிவாயா என்னும் நாமம் என்கிறார் அப்பர் சுவாமிகள். அதுபோலத்தான் எனக்கும் சொல்லத் தோன்றுகிறது. சோழ நாட்டை நானே மறக்க விரும்பினாலும் அது இயலுமா மன்னரே! தென் பாண்டி நாட்டில் பல சிக்கல்கள் முளைத்து விட்டன. வீரபாண்டியனுடைய ஆட்டம் ஒடுங்கவில்லை. அவற்றை எல்லாம் செம்மைப்படுத்த இத்தனை நாட்கள் ஆயிற்று. அது இருக்கட்டும், அனைவரும் நலம்தானே?'

'அந்த துர்க்கா பரமேஸ்வரியின் அருளால் அனைவரும் நலமே. சேனாபதி! இதோ நிற்கும் கைதியைத் தங்களுக்கு நினைவு இருக்கிறதா?'

'தெரியவில்லையே, எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறது.'

'தெரியவில்லையா? இவன்தான் ஈழ அரசனுடைய மைத்துனன், சீவல்லபன்.'

'ஆம். இப்பொழுது நினைவுக்கு வருகிறது.'

'இவன் ஈழப்படைகளுக்குத் தலைமை தாங்கி தென் பாண்டி நாட்டில் நம்முடைய படைகளைத் தாக்கினான். தாங்கள் இவனை கைது செய்து இங்கு அனுப்பினீர்கள். இப்பொழுது நினைவுக்கு வருகிறதா?'

'ஆம், நன்றாகத் தெரிகிறது. ஈழப்படைகளுடன் வந்து தமிழ் மண்ணில் இறங்கி நம்மையே தாக்கிய இந்த எதிரியை மறக்க இயலுமா? உருவம்தான் நினைவில் நிலைக்காது இருந்தது. இப்பொழுது புரிந்து கொண்டேன். நான் இடையில் வந்துவிட்டதால் விசாரணை தடைபட்டுவிட்டது போலத் தெரிகிறது. அரசே, அது தொடரட்டும்.'

'ஆம் அமைச்சர் தலைவரே, தங்களுடன் எவ்வளவோ பேசவேண்டி இருக்கிறது. அதற்குள்ளாக இவனுடைய பிரச்சினையை விரைவில் முடித்துவிடுவோம்.'

'அரசே, விசாரணை மெதுவாகவே நடக்கட்டும். நீதி வழங்குவதில் என்றும் அவசரம் காட்டக்கூடாது. தவறாக முடிந்துவிடும்.'

'ஆம், ஆனால் இவனுடைய குற்றங்கள் மிகவும் தெளிவானவை.'

'அப்படியா, விசாரணை தொடரட்டும், வேந்தே!'

'மன்னர் சீவல்லபனைப் பார்த்துக் கேட்டார்:

கைதி, உன்னுடைய குற்றங்களுக்கு ஏதாவது சமாதானம் கூற விரும்புகிறாயா?'

'ஆம், அரசே.'

'ஆகட்டும் முதலில் முதல் குற்றத்திற்கு சமாதானம் சொல்.'

'அரசே, கோதை ஒரு சதிகாரியாக இருக்கலாம். ஆனால் அவள் அரண்மனையில் வளர்ந்த ஒரு சிற்றரசருடைய புதல்வி. அவள்மீது அனைவரும் அன்பு பொழிந்தார்கள். சோழ மன்னரும் இதற்கு விதிவிலக்கு அல்ல. அவள் ஒரு நாள் இரவு நான் வசித்த மாளிகையை நெருங்கி வந்து கதவைத் தட்டினாள் அரண்மனையில் அரசரிடம் பெரும் செல்வாக்கு பெற்ற ஒருவள் கதவைத் தட்டினால் திறக்காமல் இருக்க முடியுமா? கதவைத் திறந்தேன். உள்ளே வந்தாள். உடனே மாயமாக மறைந்தாள். அவள் ஏன் என்னிடம் வந்தாள். ஏன் சென்றாள் என்று இன்றுவரை எனக்குத் தெரியாது. இது என்னுடைய குற்றமா? இதனைத் தவிர அப்பெண்ணுடன் எனக்கு ஏதாவது தொடர்பு உண்டு என்று கூற இயலுமா?'

'அந்தச் சதிகாரி நீ வசித்த மாளிகையின் கதவைத் தட்டினாள். நீ திறந்தாய். இது நீயே ஒப்புக் கொள்ளும் உண்மை. உன்னைத் தண்டிக்க இந்த குற்றம் ஒன்றே போதுமே.'

'அரச அரண்மனையில் அன்போடு வளர்ந்தாள் அப்பெண். அரசருடைய அபிமானத்திற்கும், அன்பிற்கும் பாத்திரமானவள் அவள் அத்தகையவளை நான் எப்படி சதிகாரி என்று கருத முடியும்?'

மன்னர் தடுமாறினார் அவன் கூறியதில் நியாயம் இருப்பது போலத்தான் தென்பட்டது. அவருடைய உள்மனம் அவரைக் குத்தியது. கோதை சதிகாரிதான். ஆனால் அந்த

சதிகாரியை அவர் காதலிக்கவில்லையா? அவளை நம்பி மோசம்போகவில்லையா? அவர் அவளுடைய ஓலையை நம்பி ஓடி பாண்டியனிடம் சிறைப்பட வில்லையா? சீவல்லபன் குற்றவாளி என்றால் இராசாதிராசர் அவனைவிட பெரும் குற்றவாளி. இதனை எண்ணி அவர் பெருமூச்சு விட்டார்.

மன்னருடைய எண்ண ஓட்டத்தை முதலமைச்சர் புரிந்து கொண்டார். அவரைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். அதனைக் கவனித்து மன்னர் வெட்கித் தலை குனிந்தார். அவருடைய வதனம் கருத்து விட்டது.

சீவல்லபன் சிரித்துக் கொண்டே நின்றான். அவன் வீசிய அம்பு சரியான இடத்தில் பட்டுவிட்டது என்பதை அவன் உணர்ந்து கொண்டான். அக் கைதியைப் பார்க்கவே மன்னர் தயங்கினார். சபையினருக்கு ஒன்றும் புரியவில்லை. அரசரையும் கைதியையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.

அமைச்சர் தலைவர் அச் சூழ்நிலையை மாற்ற விரும்பினார். அவரே பேச்சைத் துவக்கினார்.

'அரசே, இந்தக் கைதி சொல்லுவதில் பொருள் இருப்பதாகவே எனக்குப் படுகிறது. கோதை சூழ்ச்சிகளில் வல்லவள். இது எண்பிக்கப்பட்டதாகும். சீவல்லபனுக்கும் சோழ நாட்டிற்கும் நெருக்கமான நட்பு இருந்தது. அதனைக் குலைக்க அப்பெண் திட்டமிட்டே செய்த சதியாகவும் இது இருக்கலாம் அல்லவா?'

'இருக்கலாம்.' மன்னர் தயங்கியவாறு மறுமொழி அளித்தார். அவருடைய சிரம் தாழ்ந்தே இருந்தது.

அவருடைய உள்ளத்தின் ஓட்டம் முகத்தில் தெளிவாக பிரதிபலித்தது. சேனாபதி கூறினார்:

'ஆம், அரசே! இதில் ஐயத்திற்கு இடமே இல்லை. இது கோதையின் சூழ்ச்சியே என்று நான் திடமாகக் கூறுகிறேன்.'

'அப்படியா, தாங்கள் சொல்லுவது உண்மை என்றே வைத்துக் கொள்வோம். இந்தக் குற்றம் இவன் செய்யவில்லை என்றே கருதுவோம். ஆனால் இது மட்டுமல்ல, இதனைவிட இன்னும் இரு பெரும் குற்றங்களையும் செய்திருக்கிறான்.'

'அவை என்ன அரசே?'

'இவன் நம்முடைய பாதாளச் சிறையிலிருந்து தப்பி இருக்கிறான். இவன் குற்றமற்றவனாகவே இருக்கட்டும். சிறையில் அடைக்கப்பட்டது தவறாகவேகூட இருக்கட்டும். ஆனால் சிறை தப்புவது குற்றம்தானே?'

'அரசே, இவன் சிறை தப்பினானா அல்லது விடுதலை செய்யப்பட்டானா? என்று தாங்கள் விசாரிக்க வேண்டாமா?'

'சேனாபதி என்ன சொல்லுகிறீர்கள்? இவன் விடுதலை செய்யப்பட்டானா? எனக்குத் தெரியாமல் எப்படி விடுதலை ஆவான்?'

'அரசே, சிறைச்சாலைக்குச் சென்று இவனை நன்கு விசாரித்தேன். குற்றமற்றவன் என்று எனக்குத் தெளிவாகப் பட்டது. அவனை சிறையில் அடைத்திருப்பது நாம் செய்யும் தவறு என்ற முடிவிற்கு வந்தேன். எனவே எனக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி நான் இவனை விடுதலை செய்யுமாறு ஆணையிட்டேன்.'

'ஆ, அப்படியா? அமைச்சர் தலைவரே, இதனை நம்புவது கடினமாக இருக்கிறது. தாங்கள் அவனை விடுதலை செய்ததில தவறு இல்லை. ஆனால் என்னிடம் கூட ஏன் சொல்லவில்லை? அவன் சிறை தப்பினான் என்று ஏன் அறிவிக்கப்பட்டது?'

'அரசே, அது அரசியல் இரகசியம் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக அப்படிச் செய்ய வேண்டி வந்தது. உண்மையை மறைக்க வேண்டி வந்தது. பின்னர் இதனை விளக்கமாகச் சொல்லுகிறேன்.'

'சேனாபதி, தவறு செய்து விட்டீர்கள். தங்களுடைய செயலின் விளைவை உணருகிறீர்களா?'

'அரசே, சீவல்லபரை சிறையிலிருந்து விடுதலை செய்ததைப் பற்றி தங்களிடம்கூட நான் அறிவிக்காதது என்னுடைய பிழையே. ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நான் உணர்ந்து வருந்தும் அளவிற்கு என்னுடைய செயலால் என்ன தீய விளைவுகள் ஏற்பட்டுவிட்டன அரசே?'

'விளைவுகளை நான் சொல்ல வேண்டுமா?'

'ஆம்.' செல்லுங்கள்.'

'இவனை தாங்கள் விடுதலை செய்தால்தான் ஈழ மன்னனிடம் சென்று சரண் அடைந்தான். அவனிடமிருந்து படைகளைப் பெற்றுவந்து தமிழகத்தைத் தாக்கினான்.'

'அரசே, இவன் ஈழ மன்னனுடைய படைகளை பெற்றுக் கொண்டு வந்தது உண்மை. ஆனால் சோழ நாட்டை எங்கே தாக்கினான்? எப்பொழுது தாக்கினான்? நமக்கு எவ்வளவு சேதம் ஏற்படுத்தினான்? சேதத்தின் அளவை அருள் கூர்ந்து சொல்ல இயலுமா?'

அரசரால் மறுமொழி கூற இயலவில்லை. அவரை வேதவனம் நன்கு வளைத்துக் கொண்டார். அரசருடைய வாய் அடைத்து விட்டது. அமைச்சர் தலைவரைப் பார்த்து விழித்தார். அமைச்சர் தலைவர் மீண்டும் அதே வினாவை ஆணித்தரமாகக் கேட்டார். அரசர் பேசவே இல்லை.

சபையினருக்கு அந்த வழக்கு போகும் போக்கு உற்சாகம் அளித்தது. குதூகலத்துடன் மன்னரையும், சேனாபதியையும் மாறி மாறிப் பார்த்தார்கள். மன்னருக்கும், சேனாபதிக்கும் கருத்து வேறுபாடு வந்துவிட்டதோ என்று சிலர் கவலைப்பட்டார்கள். ஆங்காங்கு தங்களுக்கு தோன்றியவாறு பேச ஆரம்பித்தார்கள். இரைச்சல் அதிகமாக இருந்தது.

மன்னர் அனைவரையும் அமைதியாக இருக்குமாறு கையினால் சைகை செய்தார். பிறகு மெதுவாகக் கூறினார்:

'அமைச்சர் தலைவரே, சீவல்லபனுடைய படை எடுப்பினால் நமக்கு சேதம் எதுவும் இல்லை என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன் ஏராளமான ஈழப் படைகளும் போர் ஆயுதங்களும் அவனிடமிருந்து நாம் கைப்பற்றி இருக்கிறோம். ஆனால் நல்ல வேளையாக தாங்கள் அச்சமயம் தென்பாண்டி நாட்டில் இருந்தீர்கள். நிலைமைக்கு ஏற்ப செயல்பட்டு எளிதில் வெற்றி பெற்று விட்டீர்கள் இவனுடைய திட்டங்களை முறியடித்து விட்டீர்கள், இன்றேல் நிலைமை என்னவாகி இருக்கும்!'

'அரசே, மன்னிக்கவும், நடக்காததைப் பற்றி கற்பனை செய்து கொண்டு நாம் ஏன் விவாதிக்க வேண்டும்? நடை பெற்ற நிகழ்ச்சிகளையும் அவற்றின் விளைவுகளையும் பார்போம்.'

'ஆகட்டும்.'

'அப்படியானால் தங்களுடைய கூற்றின்படியே பார்ப்போம். சீவல்லபனுடைய படை எடுப்பினால் நமக்கு சேதம் இல்லை. அதற்கு மாறாகப் பெருத்த பயன் உண்டு அல்லவா அரசே!'

'ஆம், ஒப்புக்கொள்ளுகிறேன்.'

'அரசே, சீவல்லபன் கோதையுடன் சேர்ந்து சதி செய்யவில்லை. அவனாக சிறை தப்பவில்லை. அவன் விடுதலை செய்யப்பட்டான். அவன் தமிழகத்தைத் தாக்கவில்லை. அவன் கொண்டுவந்த படைகள் அனைத்தும் நம் வசமாகிவிட்டன. உண்மைதானே?'

'ஆம், இவை அனைத்தையும் ஒப்புக்கொள்ளுகிறேன்.'

'தாங்கள் அவன்மீது சுமத்திய மூன்று குற்றச் சாட்டுகளும் பொய்த்துவிட்டன அல்லவா?'

'ஆம்.'

'அப்படியாயின் நிரபராதியை விலங்குகளுடன் சபையில் நிற்க வைத்திருப்பது நியாயமா? ஈழ நாட்டின் பட்டத்து வாரிசுக்கு சரிசமமான சிம்மாதனம் அளிப்பதுதானே பண்பு அரசே!'

'ஆம், அதுவே உற்றது. நான் செய்தது தவறுதான். ஆத்திரத்தில் அறிவிழந்துவிட்டேன். சீவல்லபரே, என்னை மன்னித்துவிடுங்கள்.' இச்சொற்களை கூறியவாறே மன்னர் ஆசனத்தை விட்டு எழுந்தார். சீவல்லபனை நோக்கி நடந்தார். அவனை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டார்.

சீவல்லபனுடைய கரங்களை இறுக்கிக் கொண்டு இருந்த விலங்குகள் அகற்றப்பட்டன. மன்னர் அவனுடைய தோள் மீது கை போட்டவாறு அழைத்துச் சென்று தம்முடைய ஆசனத்திற்கு அருகில் இடபுறத்தில் இருந்த ஆசனத்தில் அமரச் செய்தார். அவர் மகிழ்வுடன் சீவல்லபனை பாராட்டினார். அவனுக்கு தண்டனை கொடுப்பதின் மூலம் செய்ய இருந்த பெரும் தவறிலிருந்து காப்பாற்றியதற்காக வேதவனத்தை பாராட்டினார். சீவல்லபனை நோக்கி மீண்டும், மீண்டும் கூறினார்:

சீவல்லபரே, கத்தியின்றி, இரத்தமின்றி ஈழ நாட்டின் பெரும்படையை எங்களிடம் ஒப்படைத்த தங்களுக்கு ஓராயிரம் முறை நன்றி கூறினாலும் போதாது.'

'இதற்கெல்லாம் நன்றியைப் பெரும் தகுதி பெற்றவன் நான் அல்ல அரசே! அந்தத் தகுதி பெற்றவர் தங்கள் சேனாபதிதான். நான் ஓர் அம்புதான். அதனை எய்தவர் தங்களுடைய சேனாபதியே.'

'சீவல்லபரே, தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? எனக்கு விளங்கவில்லையே! தங்களுடைய செயலுக்கும் சேனாபதிக்கும் என்ன தொடர்பு?' மன்னர் இந்த வினாவை சீவல்லபனிடம் தொடுத்தார் ஆனால் விடையை சேனாபதியிடமிருந்து ஆவலோடு எதிர்பார்த்தார். சேனாபதியையே உற்றுப் பார்த்தார்.

அப்பொழுது சீவல்லபன் சேனாபதியைப் பார்த்துக் கேட்டான்:

'மன்னருக்கு விடை அளிக்கட்டுமா? திருமாறன் அவர்களே?'

'என்ன திருமாறனா? அது யார், அவர் எங்கு இருக்கிறார்?' வினாவை மன்னர் வியப்போடு தொடுத்தார். அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

'அரசே, இதோ இங்கே வீற்றிருக்கிறாரே, இந்த பல்லவராயர்தான் திருமாறன். தங்களுடைய அன்பு சேனாபதியும், முதலமைச்சருமான இந்த வேதவனம்தான் அவர்.'

'எனக்கு ஒன்றுமே புரியவில்லை. விளக்கமாகச் சொல்லங்கள் சேனாபதி.'

மன்னர் ஆவலோடு சேனாபதியை நோக்கினார். 'ஆம் விளக்கம் வேண்டும்' என ஏக காலத்தில் சபையில் பல குரல்கள் எழுந்தன.

அம்மையப்பன் அண்ணன் பல்லவராயனான வேதவனம் தென் பாண்டி நாட்டு அரசியலை செம்மைப்படுத்துவதாக அறிவித்துவிட்டு தாம் ஈழநாடு சென்றதையும் அங்கு திருமாறனாக நடித்ததையும் எடுத்துரைத்தார். அதனை சீவல்லபன் புன்முறுவலோடு கேட்டுக் கொண்டு இருந்தான். இதனை எல்லாம் கேட்ட மன்னர் மெய்மறந்து விட்டார். அவருடைய வியப்பு எல்லைக் கோட்டையும் தாண்டிவிட்டது.

சபையினருக்கு இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் பெரும் வியப்பு அளித்தன. வேதவனத்தின்மீது அவர்கள் வைத்திருந்த அன்பும், மரியாதையும் பன்மடங்கு அதிகமாகிவிட்டன. இதை விந்தை, விந்தை என்றார்கள் சிலர் அதிசயம் என்று கூறி பாராட்டினார்கள் சிலர். அன்று வீர அனுமான் இலங்கையில் விளையாடியதைவிட அதிகமாக இன்று வேதவனம் விளையாடி விட்டார் என்றனர் பலர். உணர்ச்சிவசப்பட்ட சபையினரால் ஆசனத்தில் அமர்ந்திருக்க இயலவில்லை. எல்லோரும் எழுந்துவிட்டார்கள். அவர்களுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. எங்கும் ஆரவாரம். 'பல்லவராயர் வாழ்க, சீவல்லபன் வாழ்க' என்று வெகுநேரம் முழக்கமிட்டார்கள்.

மன்னர் வேதவனத்திடம் தாவிப் பாய்ந்து அவரை அணைத்துக் கொண்டார், பின்னர் சீவல்லபனிடம் ஓடினார். அவனையும் அணைத்துக் கொண்டு பரவசப் பட்டார். ஆனந்தக் கூத்தாடினார். ஏன், கோபமும் கொண்டார்.

'வேதவனம்!' என்று சம்பிரதாயத்தையும் மறந்து விட்டு பெயர் சொல்லியே அரசர் அழைத்தார்.

'தாங்கள் செய்தது ஏற்றச் செயல் அல்ல என்பது தங்களுக்கு புரியவில்லையா? எதிரியின் பாசறையில் இவ்வாறு புகுந்து

விளையாடலாமா? சங்கவை மட்டும் இல்லாது இருப்பின் சோழநாடு தவமியற்றிப் பெற்றெடுத்த புதல்வனை இழந்திருக்குமே! நச்சுப் பாம்பு கோதை தங்களைக் கடித்துக் கொன்றிருப்பாளே! இந்த பயங்கர விளையாட்டு தேவைதானா?' பேசும்போது மன்னர் உணர்ச்சி வசப்பட்டார். மேற்கொண்டு வாயிலிருந்து வார்த்தை வரவில்லை. அழுகை வந்தது. இரண்டு கண்களிலிருந்தும் நீர் கொட்டியது.

'அரசே, அரசு பணிக்கென்று அர்பணித்துக் கொண்ட பின்னர் இன்னலைப் பார்த்தால் இயலுமா?'

'அதற்காக எதிரியினுடைய வலையில் நாமாகப் போய் சிக்கிக் கொள்வதா?' பல குரல்கள் ஏக காலத்தில் சபையிலிருந்து எழுந்தன.

'அரசே, சபையினரே! உங்கள் அனைவருடைய உணர்வுகளுக்கும், அன்பிற்கும் தலை வணங்குகிறேன். நீங்கள் என்மீது வைத்திருக்கும் அன்பிற்காக ஏழேழு பிறவிகளிலும் இந்த நாட்டிற்கு தொண்டு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் தேவையானபோது கடமையைச் செய்யத் தவறுபவன் சேனாபதி ஆவானா? கடமையைச் செய்யும் போது உயிர் அற்பம். அதுதான் எனக்கு என்னுடைய அன்புத் தெய்வம், வழிகாட்டி திருச்சிற்றம்பலமுடையார் போதித்த பாடம்.'

சேனாபதி இவ்வார்த்தைகளை கூறும்போது அவருடைய கண்களில் நீர் கசிந்தது. அவர் உணர்ச்சி வசப்பட்டு விட்டார். சபையினர் 'திருச்சிற்றம்பலமுடையார் நாமம் வாழ்க!' என மீண்டும் முழங்கினார்கள்.

மன்னர் அனைவரையும் இருக்கையில் அமருமாறு கரம்கூப்பி வேண்டினார். அவர்கள் அமர்ந்து விட்டார்கள். அமைதி நிலவியது. பின்னர் வேதவனத்தின் முகத்தை நோக்கினார். வேதவனம் மீண்டும் பேசினார்:

'அரசே, சபையோர்களே, நாட்டினுடைய நிலை, உயிரை பயணம் வைத்து செயல்பட வேண்டிய நிர்ப்பந்தத்தில் என்னைக் கொண்டு போய் விட்டது. அன்று மட்டும் நான் பகைவனுடைய பாசறைக்குள்ளே புகுந்து இந்தச் செயல் புரியாது இருப்பின் இந்நேரம் நிலைமை எப்படி இருக்கும்? அந்தப் பெண் கோதையினுடைய திட்டப்படி வீரபாண்டியனுக்கு உதவியாக ஈழப் படைகள் போய் சேர்ந்திருக்கும். அப்பொழுது நம்முடைய படைபலம் பலவீனமாக இருந்தது. அதன் விளைவாக இந்நேரம் பழையாறை நகரில் பயங்கரப் போர் மூண்டிருக்கும். தலைகள்

உருண்டிருக்கும். இரத்த ஆறு ஓடி இருக்கும். மாபாரதப்போர் நடந்திருக்கும்.' உணர்ச்சிவசப்பட்டு சேனாபதி குறிப்பிட்டார்.

மன்னர் சீவல்லபனை நோக்கிப் பேசினார்:

'ஆம், சீவல்லபரே, சோழ நாட்டின் உற்ற நண்பரே, என்னுடைய ஆருயிர் நேசனே! தாங்களும், வேதவனமும் திட்டமிட்டு இந்த நாட்டைக் காப்பாற்றி விட்டீர்கள். இந்த இளம் வயதிலேயே நீங்கள் இருவரும் சேர்ந்து செய்த மகத்தான சாதனையில் மூலமாக சோழ நாட்டு வரலாற்றில் நீங்காத இடம் பெற்று விட்டீர்கள்.' மன்னர் மீண்டும், மீண்டும் சீவல்லபனை அணைத்துக் கொண்டார். அவனைத் தன்னுடனே அணைத் தவாறே இழுத்துக் கொண்டு சேனாபதியின் இருப்பிடத்திற்குச் சென்றார். சேனாபதி எழுந்து நின்றார். அவரையும் சேர்த்து அணைத்துக் கொண்டார். தம்முடைய இரு கரங்களாலும் இருவரையும் அணைத்துக் கொண்டே நின்றார் அவர் கண்களிலிருந்து நீர் கொட்டியது. அது ஆனந்தக் கண்ணீர்.

'அந்தப் பெண் சங்கவை மட்டும் இல்லாதிருப்பின் இந்நேரம் என்ன நடந்திருக்கும்?' மீண்டும் அரசர் பேச்சை எடுத்தார்.

'அது பெண் அல்ல அரசே, பெண் தெய்வம். அந்த தெய்வத்திற்கு நான் அநீதி இழைத்து விட்டேன். அவளை சிறையில் தள்ளி விட்டு நான் தப்பினேன். இதுதான் என்னுடைய உள்ளத்தை அல்லும் பகலும் வாட்டி எடுக்கிறது. இதயத்தை ஈட்டியாகக் குத்துகிறது.' வேதவனம் கண் கலங்கியவாறு கூறினார்.

'சேனாபதி, தாங்கள் அப்பொழுது சிறையில் இருந்து வெளியேறாதிருப்பின் அப்பெண் சங்கவை தன்னைத் தானே குத்திக்கொண்டு உயிர்விட்டிருப்பாள். அந்நிலையில் தாங்கள் செய்ததைத்தான் வேறு யாராக இருந்தாலும் செய்திருப்பார்கள்.' சீவல்லபர் சேனாபதிக்கு சமாதானம் கூறினார். அதற்கு சேனாபதி மெதுவாக எங்கோ ஆழ்ந்து நோக்கியபடியே பதில் கூறினார்:

'சீவல்லபரே, ஈழவேந்தன் சங்கவையை இந்நேரம் என்ன செய்திருப்பாரோ?'

'அமைச்சர் தலைவரே, ஈழமன்னர் சங்கவையை ஒன்றும் செய்திருக்க மாட்டார். இது எனக்குத் தெரியும். மன்னருக்கு தன்னுடைய ஒரே மகள் என்றால் உயிர். அவளை நிச்சயம் மன்னித்திருப்பார்.' சீவல்லபன் ஆறுதல் கூறினான்.

இந்நிலையில் மன்னர் அவ்விருவரையும் அணைத்திருந்த கரங்களை விலக்கிக் கொண்டார். தன்னுடைய வலது கரத்தை விண்ணை நோக்கி உயர்த்தி தீர்க்கமாகக் கூறினார்.

'சபையோர்களே, சேனாபதி, சீவல்லபரே! மனிதப் பிறவி எடுத்தால் ஒரு நாளைக்கு இறப்பு உறுதி. ஆனால் அந்த தியாக மாதா சங்கவை காதலுக்கர்க தன்னையே பலியிட்டுக் கொண்டாள். அத்தெய்வம் என்றென்றும் சோழ மக்களின் இதயங்களில் கோயில் கொண்டு வாழுவாள். அவளுக்கு நல்லதே நடக்கவேண்டும் என்று பிரார்த்திப்போம். இதனைத்தான் இப்பொழுது நான் கூறமுடியும்.

மன்னர் வேதனையோடு சேனாபதி, சீவல்லபன் முகங்களைப் பார்த்தார். அவை தரையைப் பார்த்தன.

'சோழ சேனாபதி வேதவனம் பல்லவராயர் பல்வேறு உத்திகளைக் கையாண்டு ஈழப்படையெடுப்பை தடுத்தார். அவர் மட்டும் அன்றைக்கு அந்த யுக்திகளை கையாளாது இருப்பின் சோழநாடு எளிதில் ஈழத்திற்கு அடிமையாகி இருக்கும்.' இவ்வாறு வரலாற்று ஆசிரியர்கள் ஒருமுகமாக வேதவனத்தைப் பாராட்டி எழுதி இருக்கிறார்கள்.

15

துர்க்கா தேவியின் மீது ஆணை

சோழ மன்னர் இராசாதிராசன் ஈழநாட்டில் சீவல்லபனும், வேதவனமும் புரிந்த சாதனைகளைப் பற்றி மீண்டும், மீண்டும் கேட்டார். அதனைக் கேட்பதில் அவருக்கு தனிப் பெரும் மகிழ்ச்சி. அவர்களும் சலிப்பின்றி அவைகளைப் பற்றி எடுத்துரைத்தார்கள். கேட்கும்போதெல்லாம் மன்னர் ஆனந்தப் பூரிப்பு அடைவார்.

ஈழத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் சேனாபதியின் செல்வாக்கை மக்களிடம் பெருக்கிவிட்டன. அந்த இளம் வயதில் அத்தனை ஆற்றல் புரிந்த அவரைத் திருச்சிற்றம்பலத்திற்கு ஈடாகக் கூறினார்கள் சிலர் அவர் இன்னும் கொஞ்ச காலத்தில் திருச்சிற்றம்பலத்தையும் மிஞ்சி விடுவார் என பேசிக் கொண்டார்கள் பலர். சீவல்லபனை இராமாயண வீடணனோடு ஒப்பிட்டுப் பேசினார்கள். அவன் சோழ நாட்டில் மிகவும் உயர்ந்த செல்வாக்குப் பெற்றுவிட்டான்.

மேலும், ஈழத்து சம்பவங்கள் மன்னரையும், சேனாபதியையும், சீவல்லபனையும் மிகவும் நெருங்கிய உளமொத்த நண்பர்களாக்கி விட்டன. மூவரும் இளைஞர்கள். ஏறக்குறைய சம வயதினர். ஒரே குறிக்கோளைக் கொண்டவர்கள். அவர்களுடைய சிந்தனையின் போக்கும் ஒத்தே இருந்தது. அம்மூவரும் தங்களுடைய பதவி, தகுதி அத்தனையும் மறந்து உற்ற உயிர்த் தோழர்களாகப் பழகினார்கள். மன்னர், அமைச்சர் தலைவர் மற்றவர் என்பதெல்லாம் மறந்து உளம் ஒத்துச் செயல்பட்டார்கள் மற்றவர்கள் முன்னர்தான் அவர்கள் பெயரளவியல் சம்பிரதாயங்களைக் கையாண்டார்கள்.

ஈழநாட்டு சம்பவங்கள் மன்னருக்கு ஒரு புது தெம்பு அளித்தன. அவை அரச பரிபாலனம் செய்ய புதிய உற்சாகமும், ஆர்வமும் அவருக்கு அளித்தன. சீவல்லபனையும் வேதவனத்தையும் பிரிந்து ஒரு நாள் கூட தனித்து இருப்பது வர

வர அவருக்குக் கடினமாகிவிட்டது. மூவரும் எங்கும் ஒன்று சேர்ந்தே இருந்தார்கள்.

ஆனால் முதலமைச்சர் வேதவனத்திற்கு மட்டும் உள்ளத்தில் மகிழ்ச்சி இல்லை. மற்றவர்களுக்காக அவர் மகிழ்ச்சியாக இருப்பது போல நடித்தார். ஆனால் வாட்டமுற்றே தென்பட்டார். அல்லும், பகலும் அவருடைய உள்ளத்தை கவலைகள் பிடுங்கி தின்று கொண்டு இருந்தன. அதனால் அவருடைய உடலும் இளைத்து விட்டது.

வேதவனத்தின் நிலைமையை அரசர் உணராது இல்லை.

ஒருநாள் வேதவனத்தை மட்டும் தனியாக அரண்மனைப் பூங்காவிற்கு அழைத்துச் சென்றார். இருவரும் ஒரு பளிங்கு மேடையின் மீது அமர்ந்தார்கள். வேதவனம் தரையைப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தார். நொடிக்கொருமுறை மன்னரைப் பார்த்து பெருமூச்சு விட்டார். மன்னர் வேதவனத்தைப் ப்ார்த்து வேதனையோடு பேச்சைத் துவக்கினார்.

'வேதவனம், தங்களுடன் நான் தனிமையில் பேச விரும்புகிறேன். அதற்காகவே தங்களை இங்கு அழைத்து வந்து இருக்கிறேன்.'

'சொல்லுங்கள், அரசே.'

'தாங்கள் ஈழத்திலிருந்து வந்ததிலிருந்து ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள். நிம்மதியற்று தவிக்கிறீர்கள். அது ஏன் என்று நான் அறியலாமா?'

'எனக்கு ஒரு குறையும் இல்லை வேந்தே! என்றும் போல மனநிறைவுடன் இருக்கிறேன்.'

வேதவனம் மன்னரைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார். மறுமொழி கூறவில்லை. மீண்டும் தலையைத் தாழ்த்திக் கொண்டார்.

'வேதவனம், தங்களுடைய மன பாரத்தை என்னிடம் கூட சொல்லக்கூடாதா? நான் என்ன அந்நியனா? தங்களுடைய அந்தரங்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் தகுதியை இன்னும் நான் பெறவில்லையா?' மன்னர் உருக்கமாகக் கெஞ்சும் பாவனையில் பேசினார்.

'அரசே, ஏன் அவ்வாறு எல்லாம் பேசுகிறீர்கள்? அருள்கூர்ந்து என்னைத் துன்புறுத்த வேண்டாம். எனக்கு தங்களை விட இந்த உலகத்தில் நெருங்கியவர்கள் யார் இருக்கிறார்கள்?'

'தாங்கள் கூறுவது உண்மையானால் தங்களுடைய மனதிலிருப்பதை எனக்குச் சொல்ல வேண்டும். தங்களுடைய கவலையில் எனக்கும் பங்கு கொடுக்க வேண்டும்.'

'அரசே, அருள் கூர்ந்து என்னை வற்புறுத்த வேண்டாம். மனதில் உள்ள வேதனையைச் சொல்லி மற்றவர் உள்ளங்களைப் புண்படுத்த நான் விரும்பவில்லை.'

'நான் மற்றவனா?'

'அரசே!'

'வேதம், தாங்கள் சொல்லத் தயங்கினால் நான் என்னுடைய மனதில் படுவதைக் கேட்கட்டுமா? தங்களுக்கும், தங்கள் இல்லாள் திலகவதிக்கும் ஒத்து வரவில்லையா? காதலித்து செய்து கொண்ட திருமணம் அல்லவா அது!'

'அரசே, அந்த தெய்வம் திருச்சிற்றம்பலமுடையார் செல்வி தவறாக நடக்க இயலுமா? திலகவதி மாசறுபொன். என்னுடைய இதயராணி. அன்பின் அரசி. அவள்மீது நான் இந்த வாழ்வின் எந்த மாசையும் காண இயலாது.'

'வேதவனம், தவறு. தங்களுடைய இல்லாளை பேச்சுக்கு இழுத்தது என்னுடைய தவறுதான். தெரியாமல் அப்படி கேட்டுவிட்டேன். உண்மையை உணர முடியாததால் மனதில் யூகங்கள் தவறான திசையில் ஓடுகின்றன. உண்மைக் காரணத்தை தெரிந்து கொண்டால், இத்தகைய தவறான ஊகங்கள் உள்ளத்தில் எழாது அல்லவா!'

'அரசே, என்னுடைய கவலைகளின் சுடுகாடாக என் இதயமே அமையட்டும். என்னால் வேறு யாருக்கும் துன்பம் வேண்டாம்.'

'வேதவனம், தங்களுக்கு அப்படி என்னதான் துன்பம் வந்துவிட்டது? நான் அந்நியனாகிவிட்டேன்! இனி பேசிப் பயன் என்ன? வருகிறேன் நான்.' கோபத்தோடு பேசிய மன்னர் அவ்விடத்தைவிட்டு அகல, வேகமாக எழுந்தார். ஓர் அடி எடுத்து வைத்தார். அதற்குள் வேதம் கூறினார்:

'அரசே! ஆத்திரப்படாதீர்கள் ஒரு நாளைக்கு உண்மையைச் சொல்ல வேண்டி வரும்.' வேதவனம் அழ ஆரம்பித்துவிட்டார். மன்னருக்கும் அழுகை வந்து விட்டது. மீண்டும் வேதவனத்தின் அருகில் நெருக்கமாக அமர்ந்து கொண்டு அவருடைய கண்ணில் வடிந்த நீரை தம்முடைய விரலால் துடைத்தார். சேனாபதி யினுடைய மனப்புண்ணை கிளறிவிட்டதற்காக வேதனைப் பட்டார். அவருடைய மனதை

வேறு பிரச்சினையில் ஈடுபடுத்தி கவலையை மறக்கச் செய்ய நினைத்தார். எனவே கேட்டார்:

'சேனாபதி, அது இருக்கட்டும். எனக்கு ஒரு ஐயம். அதற்கு இதுவரை விளக்கம் கேட்கத் தவறிவிட்டேன். இப்பொழுதுதான் நினைவிற்கு வருகிறது. ஆமாம், கோதை எனக்கு எழுதியதுபோல ஒரு ஓலை எழுதி அதன் அடியில் அவளே கையொப்பமிட்டது போன்ற ஒரு ஓலையை தயாரித்து ஈழவேந்தனிடம் காட்டி இருக்கிறீர்கள், அதனை அவளும் தன்னுடைய ஓலைதான் என்று ஒப்புக் கொண்டாள்! இதனை நினைத்தால்தான் எனக்கு வியப்பாக இருக்கிறது. அது எப்படி முடிந்தது? அந்த நச்சுப்பாம்பு எப்படி இந்த தந்திரத்திற்கு இரையாகி விட்டாள்?'

'கோதை தந்திரத்திற்கு இரையாகிவிட்டாளா? நான் அப்படிக் கூறவில்லையே! அவளை ஏமாற்ற அந்த எமனால் கூட முடியாது. என்னால் இயலுமா? அது அவள் கைப்பட எழுதிய ஓலைதான்.'

'வேதம், என்ன சொல்லகிறீர்கள்? அவள் எழுதியதா?'

'ஆம், அரசே.'

'எனக்கு அவள் எழுதியதா? எனக்கு குழப்பமாக இருக்கிறது!'

'அரசே. இதில் குழப்பிக் கொள்ளுவதற்கு ஒன்றுமே இல்லை. சோழ வேந்தனை பாண்டி நாட்டு சிறைக்குள் தள்ளியது அந்த பிரசித்தி பெற்ற ஓலைதான்.'

'என்ன சொல்லுகிறீர்கள்? என்னைத் திருமாலிருஞ் சோலைக்கு வரும்படி கோதை எழுதிய ஓலையைக் குறிப்பிடுகிறீர்களா?'

'ஆம்.'

'அது தங்களுக்குத் தெரியுமா?'

'தெரியும்.'

'அந்த ஓலை தங்களிடம் எப்படிக் கிடைத்தது?'

'பாண்டி நாட்டில் போர் நடக்கும்போது சிறையில் இருந்த தங்களை மீட்பிக்க வந்தேன் அல்லவா?'

'ஆமாம்.'

'இருவரும் சிறையிலிருந்து வெளியேறினோம். அப்பொழுது தங்களுக்கும் தெரியாமல் தங்கள் தலை மாட்டில் இருந்த ஓலையை நான் எடுத்து மறைத்து வைத்துக்கொண்டேன். அது தக்க சமயத்தில் பேருதவி செய்தது.'

'அப்படியா? கோதைகூட உண்மையை ஒப்புக் கொண்டாள். இது வியப்பிற்குரியதுதான்.'

'நான் முழு ஓலையையும் காட்டி இருந்தால் அவள் ஒப்புக்கொள்ள மறுத்திருக்கலாம். தனித்தனியாக சில பகுதிகளையும் கையெப்பத்தையும் காட்டியதால் அவை தன்னுடையது என ஒப்புக்கொண்டாள்.'

மன்னருக்கு வெட்கமாகிவிட்டது. சதிகாரியின்மீது தீராத மோகம் கொண்டு அவர் மோசம் போகக் காரணமான ஓலை அது. அவர் முகம் கறுத்தது. உள்ளத்தில் ஏற்பட்ட வேதனையை முகம் பளிச்செனக் காட்டியது. இப்பொழுது வேதவனம் திசை திருப்ப விரும்பிப் பேசினார்:

'அரசே, இதெல்லாம் பழைய கதை. இனி நடக்கப் போவதைப் பற்றி பேசுவோம்.'

'ஆம், நானும் அதனைத்தான் சொல்லுகிறேன். நடக்க வேண்டியதைப் பற்றி கவனிப்போம். தங்கள் மனதில் உள்ள வேதனைகளுக்கு முடிவு கட்டுவோம். கவலைகளுக்கு அறுவை சிகிச்சை செய்வோம். அருள் கூர்ந்து அவைகளைச் சொல்லுங்கள்.'

மன்னர் மீண்டும் பழைய இடத்திற்கே வந்து விட்டார். அவர் விடுவதாகத் தெரியவில்லை. வேதவனத்தினுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டே வெகுநேரம் சும்மா இருந்தார். வேதவனம் பெருமூச்சு விட்டார். சிரம் கவிழ்ந்து கொண்டார். மௌனமாக எதையோ சிந்தித்தார். பிறகு மெதுவாகப் பேசினார். அவருடைய குரல் அடிபட்ட பறவையின் ஓலமாக ஒலித்தது.

'அரசே, ஒரு நாளைக்கு உண்மை வெளிவந்தே தீரும். அரசருக்கு தெரியாமல் அரச இரகசியங்களை மறைப்பது தவறு என்பது எனக்குத் தெரியும். ஆயினும்கூட தங்கள் மீது உள்ள பற்றால் அந்தத் தவறை இன்றுவரை நான் செய்து கொண்டு வந்தேன். இனியும் அந்தத் தவறைச் செய்து வேதனையை நானே தாங்கிக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன். அருள்கூர்ந்து என்னை விட்டு விடுங்கள். தங்களுக்கு துன்பம் கொடுக்க நான் விரும்பவில்லை.'

'வேதம் இப்பொழுதுதான் தங்களுடைய மனதில் இருப்பதை உடனே அறிய வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு அதிகமாகி விட்டது. நான் துன்பத்தில் இருந்து தப்ப வேண்டும்

என்பதற்காக, தங்களை பலிகடா ஆக்க நான் விரும்பவில்லை. வருவது வரட்டும். எல்லாம் விதிப்படியே நடக்கும். நம்மால் ஆவது ஒன்றும் இல்லை. தங்கள் மனதில் உள்ள வேதனையைச் சொல்லுங்கள். துன்பத்தைப் பகிர்ந்து கொள்பவன்தான் நண்பன்.'

'சொல்லுகிறேன் அரசே, இனி சொல்லுவதைத் தவிர வழி இல்லை. மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். நம்முடைய அரண்மனையிலிருந்து கோதையால் கடத்தப்பட்ட அரச குமாரர்கள் உயிருடன் இல்லை. அவர்கள் பலியிடப்பட்டார்கள்.'

'என்ன, என்ன சொல்கிறீர்கள்? என்னுடைய செவிகள் என்னை ஏமாற்றவில்லையே? சொல்லுங்கள் வேதம், மீண்டும் சொல்லுங்கள். இராசராச சோழர் பெற்றெடுத்த அந்தப் பச்சிளம் குருத்துக்கள் கொல்லப்பட்டனவா? என்னை ஏமாற்ற வேண்டாம். உண்மையைச் சொல்லுங்கள்.' பதட்டத்தோடு கேட்ட மன்னர் தம்முடைய மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டார். பளிங்கு மேடையின்மீது சாயப்போன அவர் தவறிக் கீழே இருந்த புல்தரையின் மீது விழுந்தார் சுழற் காற்றில் வேருடன் பறிக்கப்பட்ட நெடுமரம் போல தரையில் விழுந்தார். 'ஆ! என்ன சொன்னீர்கள் வேதம்?' என அலறினார். பின்னர் கண்கள் மூடிக் கொண்டன. அப்படியே ஆடாமல், அசையாமல் உணர்வற்றுப் படுத்திருந்தார்.

வேதவனம் எதிர்பார்த்ததுதான் இது. அவர் துடிதுடித்து விட்டார். மன்னருக்கு இறுதி நேர்ந்து விட்டதா என அஞ்சினார். தரையில் அரசருக்கு அருகில் அமர்ந்தார். அவருடைய தலையைத் தூக்கித் தம்முடைய மடிமீது வைத்துக் கொண்டார்.

'அரசே, அரசே!' என்று பரிதாபமாக அழைத்தார். அழுது புலம்பினார், சிறிது நேரம் கழிந்தது. அரசருடைய கண்கள் திறந்தன. மெதுவாக உட்கார்ந்தார். நிமிர்ந்து உட்கார இயல வில்லை. வேதத்தின்மீது சாய்ந்து கொண்டார். அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கேட்டார்:

'வேதம் சற்று நேரத்திற்கு முன்னர் நான் கேட்டது உண்மையா? நான் கனவு காணவில்லையே? உண்மையைச் சொல்லுங்கள். இச்செய்தியை தங்களுக்கு யார் சொன்னது?'

'கோதை.'

'இராசாதிராசர் பயங்கரமாகச் சிரித்தார். இடி இடி எனச் சிரித்தார். அத்தகைய சிரிப்பு அவர் சிரித்து வேதம் கண்டதே இல்லை. அரசருக்கு சித்தப் பிரமை பிடித்துவிட்டதா என அஞ்சி

அவருடைய முகத்தையே உற்றுப் பார்த்தார். அரசர் ஒருவாறு சிரிப்பு அடங்கிய பின்னர் பேசினார்:

'வேதவனம், தாங்கள் சொன்னதைக் கேட்டு உண்மையிலேயே பயந்து விட்டேன். இவ்வளவு பெரிய அறிவாளியான தாங்கள் அந்தச் சதிகாரி சொன்னதை நம்பி விட்டீர்களே! அவள் என்று உண்டு என்றால் அது இல்லை என்றுதானே பொருள்.'

'அரசே, இப்பிரச்சினையில் அவள் சொன்னதை நான் முழுக்க, முழுக்க நம்புகிறேன். ஈழத்தில் அவள் இச் செய்தியை என்னிடம் கூறினாள்.'

'வேதம், தங்களுடன் நம்பிக்கைக்கு ஆதாரம்?'

கொலைகளை நேரில் பார்த்த சித்தன்.'

'என்ன சொல்லுகிறீர்கள்? அரச குழந்தைகளைக் கொலை செய்ததை சித்தன் பார்த்தானா? அவன் அதைத் தடுக்கவில்லையா? அதனை ஏன் அவன் என்னிடம் சொல்லவில்லை? எல்லோரும் சேர்ந்து கொண்டு எனக்கு எதிராக சதி செய்கிறீர்கள். நீங்கள் அனைவரும் என்னைச் சேர்ந்தவர்களா? அல்லது அந்த சதிகாரி கோதையின் ஆட்களா?'

'அரசே, குழந்தைகளைக் கோதை கொன்றுவிட்டாள். தாங்கள் வார்த்தைகளால் என்னைக் கொல்ல வேண்டாம். சற்றுப் பொறுங்கள். இதோ வருகிறேன்.' வேகம் வேகமாக அவ்விடத்தை விட்டு அப்பால் சென்றார். மன்னர் கண்களை மூடியவாறு புல்தரையில் நீட்டிப் படுத்து விட்டார்.

சிறிது நேரம் கழிந்தது. வேதம் சித்தனை அழைத்துக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார். கண்களை மூடியிருந்த அரசரைப் பார்த்து, 'அரசே' என அழைத்தார். அரசர் கண்களைத் திறந்து பார்த்தார். எதிரில் வேதமும், சித்தனும் நிற்கவே அவர் புல்தரையின் மீது உட்கார்ந்துவிட்டார். சித்தனை உற்றுப் பார்த்தார். பார்வையாலேயே வினா தொடுத்தார். அதனைப் புரிந்து கொண்ட சித்தன் தயங்கித் தயங்கி கண்களில் நீர் கொட்ட வெள்ளாற்றங்கரையில் அரச குழந்தைகள் பலியிடப்பட்ட விவரத்தைக்கூறினான். அனைத்தையும் கூறிய பின்னர் விக்கி அழுதான். மன்னர் அனைத்தையும் கூர்ந்து கேட்டார். பின்னர் வினா தொடுத்தார்:

'சித்தா, இவைகளை எல்லாம் அப்பொழுது நீ சொல்லாமல் மறைத்ததின் காரணம்?'

'அரசே, அப்பொழுதே இந்த விவரங்களை எல்லாம் என்னுடைய குருநாதரான மகாமந்திரியார் சிற்றம்பல முடையாரிடம் கூறினேன். ஆனால் அவர்தான் இதனைவேறு யாரிடமும் வெளியிடக்கூடாது எனக் கட்டளையிட்டு விட்டார்.'

'அதற்குக் காரணம்?'

'கோதையினுடைய திட்டத்தைத் தோற்கடிப்பதற்காக அவளுக்கு வெற்றி கிடைக்காது தடுப்பதற்காக?

'அப்படி என்றால்?'

'கோதை குழந்தைகளைக் கொன்றாள். என்னை மரத்தில் கட்டி வைத்துவிட்டு என்னுடைய எதிரிலேயே அவர்களைக் கொன்றாள். அவளுக்கு நானும் பெரிய எதிரி. அவளுடைய திட்டங்களை எல்லாம் குலைத்தவன் நான். அப்படி இருக்க என்னைக் கொல்லாமல் விட்டு விட்டாள். காரணம் அங்கு நடந்தவற்றை நான் மற்றவர்களுக்கு சொல்ல வேண்டுமென்று அவள் விரும்பியதேயாகும். குழந்தைகள் கொல்லப்பட்டார்கள் என்று நான் சொன்னால் மக்கள் நம்புவார்கள். புதிய மன்னர் இராசாதிராசர் அரசு பதவியை நிலை நிறுத்திக் கொள்ள திட்டமிட்டே இந்த சதியை செய்தார். அவர்தான் பிள்ளைகளைக் கொன்றார். இவ்வாறு பிரசாரம் செய்யலாம் என்பது அவளுடைய திட்டம். என்னைப் பயன்படுத்திக் கொண்டு அவளுடைய திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளக் கருதினாள் என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால் அவள் என்னைக் கொல்லாதுவிடக் காரணம் இல்லை.

'இதனை எல்லாம் திருச்சிற்றம்பலமுடையாரிடம் எடுத்துரைத்தேன். அந்த தீர்க்கதரிசியோ அவளுடைய திட்டத்தில் மண்ணைப் போட்டு விட்டார். தங்களுடைய பதவியை காப்பாற்றி விட்டார். சோழ நாட்டில் கலவரம் ஏற்படாமல் தடுத்து விட்டார். நடந்தது நடந்து விட்டது. சோழ நாடாவது வாழட்டும் என்ற சீரிய சிந்தனையின் விளைவாகத்தான் என்னுடைய வாயை மூடிவிட்டார்.'

'அப்படியா செய்தி! தெய்வமே, இதற்கு நான் என்ன செய்வேன்!' மன்னர் கண்ணீர் விட்டுக் கதறினார். அவருடைய உள்ளக் குமுறல் குறையட்டுமென்று மற்ற இருவரும் வேதனையோடு அவரைப் பார்த்துக் கொண்டே சும்மா இருந்தார்கள். மரமாக நின்றார்கள். அரசர் வேதவனத்தைப் பார்த்து அங்கலாய்த்தார்.

'வேதவனம், சித்தன் கூறிய செய்தியைக் கேட்டீரா? அதில் தென்படும் உண்மையைக் கவனித்தீரா? திருச்சிற்றம் பலமுடையார் மிகவும் உயர்ந்தவர். இமயத்தைவிட உயர்ந்தவர் அந்த சோழீஸ்வரனுடைய அவதாரமே அவர் என்பதை எண்பித்துக் காட்டி விட்டார்.'

'ஆம் அரசே, அந்த இறைவன் இனியும் நம்மைக் கைவிடமாட்டார். விண்ணில் தெய்வமாக வாழ்ந்து கொண்டு நமக்கு வழி காட்டுவார்.' வேதவனமும் கண்ணீர் விட்டுக் கொண்டே கூறினார்.

'வேதவனம், சித்தா, நீங்கள் இருவரும் உங்களுடைய கடமையைச் செவ்வனே செய்திருக்கிறீர்கள். திருச்சிற்றம் பலத்தைப் பற்றி சொல்லும் தகுதி எனக்கு இல்லை. அவர் தக்க முறையில் வழிகாட்டி இருக்கிறார். உங்கள் மூவருக்கும் நான் தலை வணங்குகிறேன். இனி நம்மில் எஞ்சி நிற்பது நான் மட்டும்தான். என்னுடைய கடமையை நான் செய்ய வேண்டும். அரச குழந்தைகளிடம் உரிய காலத்தில் ஆட்சியை ஒப்படைத்து இருக்க வேண்டியது என்னுடைய கடமை. அவர்களிடம் அரசை ஒப்படைக்கும் வரை ஒரு தர்மகர்த்தாவாக இருந்து செயல்படவே என்னைப் பேரரசர் இராசராசர் நியமித்தார்.

'இப்பொழுது அரசுக்கு உரிய அரச குமாரர்கள் இல்லாது போய்விட்டார்கள். இனி அவர்களுடைய தர்மகர்த்தாவாக நான் செயல்படுவதில் எந்தப் பொருளும் கிடையாது. இந்த அரசுப் பொறுப்பில் இனி நான் நீடிப்பது பாவம். அரசு கட்டிலில் வீற்றிருக்கும் ஒவ்வொரு விநாடியும் என்னுடைய பாவங்களைப் பெருக்கவே செய்யும். உடனே இந்த அரசை நான் துறப்பதுதான் தருமம். அதுதான் நான் செய்ய வேண்டிய கடமை. நாளையே அரச அவையின் அவசரக் கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யுங்கள். அதில் நிலைமையை அறிவித்து விட்டு பதவியைத் துறந்து விடுகிறேன். என் சொந்த ஊரான கங்கை கொண்ட சோழபுரத்திற்குச் சென்று விடுகிறேன். அரசு பாரம் சுமந்தது போதும். இனி எனக்குச் சக்தி இல்லை.'

'அரசே, சற்றுப் பொறுங்கள். தாங்கள் உணர்ச்சிவசப்பட்டு மேற்கொண்ட இந்த முடிவு நல்லதல்ல.' இது வேதவனம்.

'இதில் யாருடைய ஆலோசனையையும் நான் நாடவில்லை. மன்னிக்கவும்.'

'அரசே, நான் சொல்லுவதை ஒரு நொடி செவி கொடுத்து கேட்குமாறு வேண்டுகிறேன். நான் சிறியவன். தங்களுடைய உப்பை தின்று வாழும் எளிய ஊழியன். நான் தங்களுக்கு ஆலோசனை சொல்வதாக அருள்கூர்ந்து நினைக்க வேண்டாம். எனக்கு அந்தத் தகுதி இல்லை.' தயங்கித் தயங்கி மன்னரைப் பார்த்துக் கூறினான் சித்தன்.

'சித்தா, உனக்கும் இந்த சம்பிரதாயமும், பீடிகையும் வேண்டுமா? நீ என்ன சொல்ல விரும்புகிறாய்? சொல். விரைவில் சொல்.'

'அரசே, ஒன்றைத் துறப்பது எளிது, பெறுவது கடினம். மகாமேதையான திருச்சிற்றம்பலமுடையாருக்கு நிகரான ஒருவரை இச்சோழ மண்டலம் இதுவரை அமைச்சர் தலைவராக பெற்றிருக்குமா என்று ஐயுறுகிறேன்.'

'ஆம். இதில் என்ன ஐயம்?'

'அந்தப் பெரியவரிடம் அரச குமாரர்கள் கொல்லப் பட்ட செய்தியை நான் கூறினேன். ஆனால் அவர் அதை மூடி மறைத்தார். என்ன காரணம்? சோழ நாட்டில் பதவிக்காக கலவரங்கள் வரக் கூடாது. தாங்கள் அரச பொறுப்பில் நீடித்து இருக்க வேண்டும் என்பதுதான்.'

'ஆம், அதுதான் சரியான காரணம்!' சித்தன் சொல்லிய வார்த்தையை ஆமோதித்தார் வேதவனம்.

'இருக்கலாம்.' இது மன்னர்.

'ஆனால் தாங்கள் பதவியைத் துறப்பதின்மூலம் இன்று விண்ணுலகில் இறைவனோடு கலந்து இறைவனாகி நம்மை கவனித்துக் கொண்டு இருக்கும் இராசராசசோழரும் திருச்சிற்றம்பலமுடையாரும் மனம் நோகச் செய்யலாமா? அந்தத் தெய்வங்களின் கருத்துக்கு மாறாக நடக்கலாமா? தாங்கள் நினைப்பது போல பதவியைத் துறந்தால் அந்த தெய்வங்கள் தங்களை மன்னிக்காது அரசே!'

சித்தன் கூறியதை ஆமோதித்து வேதவனம் கூறினார்:

'ஆம் அரசே, சித்தன் கூறிய அத்தனையும் உண்மை. கரிகாலப் பெருவளத்தான் வழியில் வந்த தாங்கள் ஆத்திரப்படலாகாது. உணர்ச்சிகளுக்கு இடமளிக்கலாகாது. ஆத்திரம் அறிவை மறைக்கக் கூடாது.'

'வேதவனம், என்னுடைய நிலைமை உங்களில் யாருக்குமே புரியவில்லை.'

'மன்னவா, மன்னுயிரைக் காக்கும் பொருட்டு நீ உன் உயிரைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பது கீதோபதேசம்.'

'இப்பொழுது என்னுயிரைக் காத்துக்கொள்ள என்ன இருக்கிறது?' நான் எதற்காக வாழவேண்டும்?'

'அரசே, தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, தன்னுடைய உணர்வுகளை பலியிட்டுக் கொண்டு தர்மத்துக்காகப் போராட வேண்டும் என்பதுதான் கண்ணன் காட்டிய வழி.'

'வேதவனம், நான் தர்மத்துக்குப் போரிட இனி என்ன இருக்கிறது?'

'ஆம் இருக்கிறது. இன்று சோழ நாட்டிற்கு தங்களுடைய உதவி தேவை.'

'என்னைக் குழப்ப வேண்டாம். விளக்கமாகச் சொல்லுங்கள்.'

'இந்நிலையில் தாங்கள் பதவியைத் துறந்து விட்டீர் களானால் நாட்டில் பதவிப் போட்டிகள் வரும். அதன் விளைவாக உள் நாட்டுக் கலவரம் ஏற்படும். மண்டைகள் உருளும், இரத்த ஆறுகள் ஓடும். சூடுபட்ட ஈழவேந்தன் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு எளிதில் இங்கு வந்து வெற்றிக் கொடி நாட்டிவிடுவான். இந்த இடுக்கண்கள் எல்லாம் நாட்டிற்கு வராமல் தடுப்பது தங்களுடைய கடமை அல்லவா?'

'இந்தப் பொறுப்புகள் எல்லாம் என் தலைமீது விழுந்திருப்பதாக நான் ஏன் கருத வேண்டும்?'

'தங்களை நம்பித்தான் இராசராசரும், திருச்சிற்றம் பலமுடையாரும் இப்பொறுப்பை ஒப்படைத்து இருக்கிறார்கள். ஏற்றுக் கொண்ட பின்னர் பொறுப்பைத் தட்டிக் கழிப்பது நம்பிக்கை துரோகமாகும்.'

மன்னர் இராசாதிராசர் குழம்பிவிட்டார். குழந்தைகள் கொல்லப்பட்ட வேதனை ஒருபுறம், தாம் நினைத்தபடி பதவியை துறக்காமல் தடுக்கிறார்களே என்ற ஆத்திரம் ஒருபுறம். அவ்விருவரும் சொல்லுவதில் பொருள் இல்லாது இல்லை என்ற சிந்தனை ஒருபுறம். இப்படி பல்வேறு குழப்பங்கள் அவர் மண்டையைத் தாக்கின.

அங்கு நீண்ட நேரம் மௌனம் நிலவியது. பின்னர் அரசர் மெதுவாக, ஆனால் தீர்க்கமாக விண்ணைப் பார்த்துக் கொண்டே வார்த்தைகளை விட்டுவிட்டுப் பேசினார்.

'வேதவனம், சித்தா! நீங்கள் இருவரும் சொல்லவதை இந்த நேரத்தில் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் அதற்கான வேறு காரணங்களும் உண்டு. அதனை உரிய காலத்தில் சொல்லுவேன். என்னுடைய் குறிக்கோள்கள் இரண்டாக இருந்தன. இந்த அரசு பதவி நான் கனவிலும் கற்பனை செய்யாதது. என்னுடைய முன்னோர்கள் செய்த தவத்தின் பயனாக இந்தச் சிறியவனுடைய சிரசின்மீது சோழ மணிமகுடம் சூட்டப் பட்டது. இந்த கிடைத்தற்கரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பெரும் செயல் ஒன்றைச் செய்ய விரும்புகிறேன். அதற்காகவே இன்று இப்பதவியைத் துறக்கும் எண்ணத்தை கைவிடுகிறேன்.

'என்னுடைய குறிக்கோள்கள் இரண்டு என இதற்கு முன்பே நிர்ணயித்து இருந்தேன். அவற்றில் முதன்மையானது இராசராசன் புதல்வர்களை சீராகவும், செம்மையாகவும் வளர்த்து, உரியகாலத்தில் அவர்களிடம் அரசு பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்பது. அந்த நோக்கம் தோற்றுவிட்டது. அப்பிள்ளைகளையே எமன் கொண்டு போய்விட்ட பின்னர் அவர்களுக்கு முடி சூட்டுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் மற்றொரு குறிக்கோள் இன்னும் என்னுடைய இதயத்தில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டு இருக்கிறது.

'அந்தக் குறிக்கோளை நிறைவேற்ற அல்லும், பகலும் உழைப்பேன். இந்த அரசு பதவியைப் பயன்படுத்திக் கொண்டு உழைப்பேன். அதில் வெற்றி பெறுவேன் என நம்புகிறேன். அதற்கு விண்ணிலிருந்து இராசராசரும், திருச்சிற்றம்பல முடையாரும் ஆசி கூறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இலட்சியம் வெற்றி பெற்றவுடன் இந்த அற்ப உயிரை இலட்சியத்தின் சன்னதியில் நானே பலியிட்டுக் கொள்ளுவேன். இது ஆதி பராசக்தி சோழர்குல தெய்வம் துர்க்காதேவியின் மீது ஆணை.

16

விட அம்பு

வேகமாகப் பெருக்கெடுத்து ஓடும் பொன்னி நதியைப் போலவே பொன்னி வளநாட்டின் நடவடிக்கைகள் ஓடிக் கொண்டு இருந்தன. ஆனால் மன்னர் இராசாதிராசர், மகா மந்திரியார் வேதவனம் பல்லவராயர் ஆகியோரை மட்டும் கவலைகள் கவ்விக் கொண்டிருந்தன. இதை வெளி உலகிற்கு அவர்கள் காட்டிக் கொள்ள வில்லை.

அண்மைக் காலத்தில் ஈழ நாட்டில் புரிந்த தீரச் செயல்களால் வேதவனம் சோழ நாட்டிற்கு ஏற்ற சேனாபதியே என மக்கள் அங்கீகரித்துவிட்டார்கள். வேதவனம் சோழ நாட்டிற்கு சேனாபதியாகவும், அமைச்சர் தலைவராகவும் நியமிக்கப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால் அந்த இளம் வயது வாலிபன் அப்பெரும் பொறுப்புக்களை வகிக்க தக்கவனா என மக்கள் ஐயுற்றார்கள். ஆனால் அவர் ஈழ நாட்டிற்கு மாறு வேடத்தில் சென்று செய்த செயல்களை அறிந்த மக்கள் வியப்பின் உச்சிக்கே போய்விட்டார்கள். அங்கு அவர் புரிந்த வீரதீரச் செயல்களைப் பற்றிக் கதைகதையாகப் பேசினார்கள். அவற்றை எல்லாம் நேரில் கண்டவர்களைப் போல சிலர் பேசினார்கள். சிலர் அங்கு நடந்த நிகழ்ச்சிகளுக்கு காதும், மூக்கும் வைத்து ஒன்றுக்கு நான்காகப் பெருக்கி கதை அளந்தார்கள். ஒருவருடைய குறைகளைப் பற்றிப் பேசினாலும், நிறைகளைப்பற்றி பேசினாலும் அவற்றை மிகைப்படுத்தி பேசுவது தொன்று தொட்டு வரும் மனித இயல்பு ஆகும். உள்ளதை உள்ளப்படி காய்தல், உவத்தல் அகற்றி பேசுபவர் மிகவும் குறைவே.

அதேபோல சோழ நாட்டில் சீவல்லபனுடைய புகழ் பெருகிவிட்டது. அவன் சோழ நாட்டின் உற்ற நண்பன் என மக்கள் நம்பினார்கள். அவன் தந்திரமாக ஈழப்படைகளை கடத்திக் கொண்டு வந்து சோழர் அணியில் சேர்த்த கதைகளை பேசாதவர்கள் இல்லை. மக்கள் அன்பின் மிகுதியால் சோழ

நாட்டின் பெரும் தலைவர்களில் சீவல்லபனும் ஒருவன் என அங்கீகரித்து விட்டார்கள். அவன் அயல் நாட்டினன் என்று யாரும் கருதுவது இல்லை.

மக்கள் அன்றாடம் கூடிப் பேசும் பேச்சுகளில் எப்படியும் வேதவனத்தின் பெயரும் சீவல்லபனின் பெயரும் அடிபடாமல் போகாது. அந்த அளவிற்கு அவ்விருவரும் குறுகிய காலத்தில் நாட்டில் செல்வாக்குப் பெற்றுவிட்டார்கள்.

ஈழ மன்னனுடைய நிலைமை பரிதாபத்திற்குரியதாகி விட்டது. அவனுடைய படைகளில் பெரும் பகுதி பறி போய் விட்டன. அவன் தலை தூக்கமுடியாத அளவிற்கு அவமானப் பட்டுவிட்டான். இதனால் அவனுக்கு ஏற்கனவே சோழ நாட்டின்பால் இருந்த கோபம் ஆயிரம் மடங்கு அதிகமாயிற்று. கோதை அந்தக் கோபத்தை உரமிட்டு வளர்த்தாள்.

தோல்வியால் பராக்கிரமபாகு தளர்ந்து விடவில்லை. இம்முறை நானே படையெடுத்துச் சென்று சோழ நாட்டை தரைமட்டமாக்குகிறேன் என்று சூளுரைத்தான். அடிக்கடி மீசையை முறுக்கியவாறு கோதையிடம் வீரசபதம் செய்தான். படைகள் திரட்டுவதில் மீண்டும் தீவிரமாக ஈடுபட்டான். வீட்டுக்கு ஒருவர் வீதம் சேனைக்கு அனுப்ப வேண்டும் என்று கட்டாய இராணுவ சேவைத் திட்டம் பிரகடனப்படுத்தினான். அது நாடெங்கும் அமுலாகிவிட்டது.

இச்செய்தி சோழ நாட்டிற்கு எட்டியது. மீண்டும் ஈழம் தலைதூக்குகிறது. எந்த நேரத்திலும் மிருக வெறியோடு தமிழ் நாட்டை அது தாக்கலாம் என்ற செய்தி ஒற்றர்கள் மூலமாக சோழ அரசருக்கு எட்டியது.

இந்த புதிய நிலைமையைப் பற்றி ஆலோசிக்க சோழ மன்னர் அரச அவையைக் கூட்டினார். சபையில் வீற்றிருந்த பல்வேறு பிரிவினர்களையும் பார்த்து அந்நிலையில் சோழ நாடு எவ்வழி கடைபிடித்தல் நலம் என அரசர் ஆலோசனை கேட்டார்.

திருச்சிற்றம்பலமுடையார் காலத்தில் சோழநாடு பாண்டிய நாட்டுடனும், ஈழநாட்டுப் படைகளுடனும் பெரும் போர் நடத்தியது. சோழ நாடு இறுதியில் வெற்றி பெற்றது. ஆயினும் அதனுடைய படைபலம் அப்போரில் கணிசமாகக் குறைந்து விட்டது. இராசாதிராசர் பட்டத்திற்கு வந்தவுடன் நாட்டின் படைபலத்தைப் பெருக்கினார். மேலும் சோழ சேனாபதியும், சீவல்லபனும் துணிந்து கையாண்ட தந்திரத்தின் விளைவாக எவ் விதமான முயற்சியும் இன்றி ஈழத்தின் பெரும்படை

சோழர்களின்பால் வந்து சேர்ந்துவிட்டது, இதனால் சோழ நாட்டின் படைபலம் இரு மடங்காக உயர்ந்தது. இது சபையினர் அனைவரும் அறிந்ததுதான். எனவே அவர்கள் ஈழத்தின் படை எடுப்பைப் பற்றிக் கவலைப்படவில்லை.

என்னதான் உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்து ஆகிவிடாது. ஈழப் படைபலம் பெருகுவதைப் பற்றி நாம் பொருட்படுத்தவே தேவை இல்லை என்றார்கள் சபையில் இருந்த சிலர்.

'இம்முறை ஈழ வேந்தனுடைய தலைமையிலேயே அப்படைகள் தமிழகத்திற்கு வருகிறதாம். தமிழ் மண்ணில் அடி எடுத்து வைக்கட்டும், அவர்களுடைய கால்களை கடற் கரையிலேயே வெட்டித் தள்ளலாம். அத்தனை பேரையும் கடலில் வாழும் சுறாக்களுக்கு விருந்தாகப் படைக்கலாம்.' வீரம் பேசினர் பலர். சபையோர் அக்கருத்தை முழுமனதுடன் ஆமோதித்தார்கள். சோழப் படைகளை தென்பாண்டி நாட்டிற்கு அனுப்பித் தயார் நிலையில் வைப்போம். எதிரிகள் தமிழ்நாட்டுக் கரையில் அடி எடுத்து வைக்கும் நொடியிலேயே அதம் செய்து முடிப்போம் என உற்சாகத்தோடு பேசினார் பலர்.

இறுதியாக அரசர் சேனாபதியினுடைய கருத்தைக் கேட்டார். அப்பொழுது சபையில் பரிபூரண அமைதி நிலவியது. அனைவரும் வைத்த விழி வாங்காமல் சேனாபதியை பார்த்தனர். அவருடைய கருத்தை அறிய ஆவலோடு இருந்தார்கள்.

சேனாபதி எழுந்து நின்றார். முதலில் சபைக்கு வணக்கம் செய்தார். பின்னர் தெளிவாகப் பேசினார்:

'சோழ நாட்டின் கோமகனே, சபையோர்களே! இங்கு வெளியிடப்பட்ட உங்கள் அனைவருடைய கருத்துக்கும் நான் தலைவணங்குகிறேன். ஆனால் என்னுடைய கருத்து நீங்கள் அனைவரும் கூறிய கருத்துக்கு மாறுபட்டது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

'ஈழநாட்டு அரசர் பெரும் சூடுபட்டுவிட்டார். பழிக்குப் பழி வாங்க அல்லும், பகலும் நாடெங்கும் சுற்றிப் படைபலம் பெருக்கிக் கொண்டு இருக்கிறார். இம்முறை முழு பலத்துடன் நம்மைத் தாக்க முடிவு செய்து செயல்பட்டு வருகிறார். அவர் போதிய படைகளைத் திரட்டிக் கொண்டு வந்து நம்முடைய நாட்டைத் தாக்கும்வரை நாம் பொறுத்துக் கொண்டு இருக்கப் போகிறோமா? இதனால் நடக்கப்போவது என்ன? நம்முடைய எதிரியின் நோக்கம் தெரிந்தும், அவருடைய வலிவு பன்மடங்கு

அதிகமாக நாமே வாய்ப்பு அளிக்கப் பேகிறோமா? அவ்வாய்ப்பை நாம் அளிக்கக் கூடாது.'

சேனாபதி தம்முடைய பேச்சை இடையில் சற்று நிறுத்தினார். அப்பொழுது ஒரு சிற்றரசர் குறுக்கிட்டார்.

'சேனாபதியினுடைய கருத்து முழுக்க முழுக்க சரியானதே. ஆனால் அதற்காக அவர் என்ன செய்ய வேண்டுமென்று கூறுகிறார்?'

சேனாபதி அவரை அமருமாறு கரம் அசைத்து சாடை காட்டிவிட்டு தொடர்ந்து பேசினார்:

'நாம் உடனே ஈழத்திற்கு படைகளை அனுப்ப வேண்டும். அந்நாட்டைத் தாக்க வேண்டும். சிங்கத்தின் கூட்டிற்குள்ளேயே சென்று அதனுடைய பிடரியைப் பிடித்து உலுக்க வேண்டும். இச்செயல் ஈழ வேந்தனுக்குப் பேரிடியாக இருக்கும். தற்பொழுது அவனிடம் பெரும்படைபலம் இல்லை. ஆனால் சில நாட்களில் அந் நாட்டின் படைபலம் பெருகிவிடும். மேலும் ஈழநாட்டுப் படைகள் வந்து தமிழகத்தில் இறங்கி போரிட நாம் வாய்ப்பு அளிக்கக் கூடாது. அதனால் மீண்டும் தமிழ் மண்ணில் பெரும் சேதங்கள் ஏற்படும். பல ஆயிரம் அப்பாவி மக்கள் மடிய நேரிடும். நம்முடைய நாட்டு மக்களின் தார்மீக பலத்தை உயர்த்தவும், சோழ அரசின்மீது அவர்கள் வைத்திருக்கும் பற்றைப் பெருக்கவும் நாம் படை எடுத்துச் சென்று ஈழத்துடன் மோத வேண்டும் என்பதுதான் என்னுடைய உறுதியான கருத்து.'

இந்நிலையில் அரசர் தலையிட்டுப் பேசினார்:

'சபையோர்களே, நம்முடைய சேனாபதி கூறிய கருத்தை முழுக்க, முழுக்க நான் ஆதரிக்கிறேன். ஈழத்தின் மீது நாம் படை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்கு இங்கு சொல்லப்பட்ட அத்தனை காரணங்களையும்விட முக்கியமான காரணம் ஒன்று இருக்கிறது. வீராதிவீரர் சீவல்லபரைப் பற்றி நான் சொல்ல வேண்டுவதில்லை. அவருக்கு இம்மண் மிகவும் கடமைப் பட்டிருக்கிறது. அவர் தமக்கு உதவியாக சோழப் படைகளை வேண்டியே இந் நாட்டிற்கு வந்தார். நம்மில் ஒருவராகி விட்டார். இத்தனை காலமாக நமக்கு உதவிக் கொண்டு இருக்கிறார். இனியும் அவருடைய வேண்டுகோளுக்கு நாம் செவி சாய்க்காமல் காலம் கடத்துவது தர்மமல்ல. எனவே சீவல்லபர் தலைமையிலேயே படைகளை அனுப்புவோம். அவர் வேண்டுமளவிற்குப் படைகளைக் கொடுத்து அனுப்புவோம்.'

மன்னர் கூறிய இக்கருத்தை சபையினர் கைகளைத் தட்டி பேரொலி எழுப்பி ஆமோதித்தார்கள்.

சீவல்லபர் ஆசனத்திலிருந்து எழுந்து நின்றார். மிகப் பணிவோடு சபையினரைப் பார்த்து வணக்கம் செய்தார். 'இது என்னுடைய பாக்கியம்!' என்று கூறிவிட்டு மீண்டும் வணங்கினார். உற்சாகமுற்ற சபையினர் விண்ணை முட்ட கோஷித்தார்கள்.

'வெற்றிவேல், வீரவேல்!'

'சோழமன்னர் இராசாதிராசர் வாழ்க!'

'சீவல்லபர் வெல்க!'

'சோழ சேனாபதி அண்ணல் பல்லவராயர் வாழ்க!'

அரசர் கைசாடை செய்யவே மீண்டும் அங்கு அமைதி நிலவியது. வெகுவிரைவில் சீவல்லபன் தலைமையில் படைகளை அனுப்புவது எனத் தீர்மானிக்கப்பட்டது. சபை கலைந்தது.

மீண்டும் போருக்கு வேகமாக படைகள் திரட்டப் பட்டன. கொல்லர் உலைக்கலங்களில் அல்லும், பகலும் போர்க் கருவிகள் செய்யப்பட்டன. அவை மலை மலையாகக் குவிந்தன. குறுகிய காலத்தில் எதிர்பார்த்தை விட அதிகமாகப் படைபலம் பெருகிவிட்டது.

விஜயதசமி நாள் அன்று சீவல்லபனுடைய தலைமையிலே சோழப் படைகள் ஈழத்தை நோக்கிப் புறப்பட்டன. அரசரும், சேனாபதியும் சேதுவரை சென்று படைகளை வழியனுப் பினார்கள். வெற்றியோடு வருமாறு சீவல்லபனுக்கு ஆசி கூறினார்கள்.

சோழப்படைகள் ஈழமண்ணில் அடி எடுத்து வைத்தன. இதனை அந்நிலையில் ஈழ வேந்தன் எதிர் பார்க்கவில்லை. மாதோட்டத்திலேயே போர் மூண்டது.

அன்று வரை ஈழ நாடு காணாத மாபெரும் போர் மூண்டது. வரலாறு காணாத வகையில் ஈழம் பற்றி எரிந்தது. பூமா தேவியின் முதுகெலும்பு முறிந்தது. மாமனைப் பழிவாங்க பல நாட்கள் திட்டமிட்டுக் கொண்டு இருந்த சீவல்லபனுக்கு கிடைத்தது மாபெரும் வாய்ப்பு! அதனை அவன் நன்கு பயன்படுத்திக் கொண்டான். ஈழப் படைகளை அதம் செய்தான். அவற்றைக் கொன்று மலைமலையாகக் குவித்தான். ஈழ மண்ணை சுடுகாடு ஆக்கினான்.

பராக்கிரமபாகு நேரடியாக போர்க்களத்திற்கு வந்து விட்டான். சீவல்லவனுடன் நேருக்கு நேர் நின்று மோதினான்.

ஆனால் அவன் செய்த போர் வெறும் தற்காப்பு போராகத்தான் இருந்தது. அவனால் ஈடுகொடுக்க முடியவில்லை. சீவல்லபன் விரும்பி இருப்பின் ஒரே நாளில் மாமனைப் போரில் மாய்த்து இருக்க முடியும். ஆனால் அவனைக் கொல்லாது விடுத்தான்.

மக்கள் மன்னன் பராக்கிரமபாகுவின்மேல் நம்பிக்கை இழந்து வெகுகாலம் ஆகிவிட்டது. முன்பே ஈழப் படைகள் தமிழகத்தில் கண்ட தோல்விகள், இரு வீராதி வீரர்களான சேனாபதிகளை தமிழ் மண்ணில் பலியிட்டது. சோழ சேனாபதியிடம் ஏமாந்து பெரும் படையை தானமாகக் கொடுத்தது முதலிய செயல்களால் ஈழ மக்கள் பராக்கிரம பாகுவை நஞ்சென வெறுத்தார்கள், அந்த வெறுப்பு சீவல்லபனுக்கு சாதகமாக அமைந்துவிட்டது.

சீவல்லபனும் ஈழ நாட்டினன்தான். அரசுக்கு உரிமை உள்ளவன்தான். மேலும் அவன் வீராதிவீரன். எனவே மக்கள் சீவல்லபன் தங்களுடைய அரசனாவதை விரும்பினார்கள் அவனுடைய வெற்றியை வரவேற்றார்கள்.

பல இளைஞர்கள் தாமாவே முன்வந்து சீவல்லபனுடைய படையில் சேர்ந்தார்கள். சீவல்லபனுடைய படைகளுக்கு ஆங்காங்கு ஈழ மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தார்கள் அவர்களுக்கு வேண்டிய உணவு அளித்தார்கள்.

அவன் வீராதிவீரன் மட்டுமல்ல, மக்களின் தலைவன். மேலும் அரசியல் நுட்பங்களையும், தந்திரங்களையும் அறிந்தவன். எனவே அவன் போர்முனையில் தென்படுவதே அரிதாக இருந்தது. அவன் ஈழ நாட்டை நன்கு அறிந்தவன் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து வைத்திருந்த தலைவன். எனவே அவன் நாட்டின் பல பகுதிகளுக்கும் தானே நேரடியாகச் சென்றான். மக்களுடைய ஆதரவைத் திரட்டினான்.

ஆங்காங்கு மக்களைக் கூட்டினான். பராக்கிரமபாகுவின் கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்டி மக்களுக்கு விடுதலை அளிப்பதுதான் தன்னுடைய நோக்கம் என எடுத்துரைத்தான். ஈழப்படை வீரர்களையும் தனிமையில் சந்தித்துப் பேசினான். அவர்களில் பலர் பராக்கிரமபாகு படையிலிருந்து விலகி சீவல்லப னுடைய படையில் சேர்ந்து கொண்டனர். போர் நடக்கும் போதே நாளுக்கு நாள் சீவல்லபனுடைய படைபலம் பெருகிக் கொண்டு வந்தது. அவன் ஏற்கனவே ஈழத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவன். ஆதலால் இவற்றை எல்லாம் எளிதில் சாதிக்க முடிந்தது.

இச்செயல்கள் மூலமாக போர்முனையில் மடிந்த வீரர்களுக்கு ஈடுகட்ட புதிய வீரர்கள் பலர் தோன்றினார்கள். ஒருவன் இறந்தால் அவனுக்குப் பதிலாக நான்கு புதியவர்கள் வந்து சேர்ந்தார்கள். நாளுக்குநாள் சீவல்லபனுடைய படைபலம் பெருகியது. பராக்கிரமபாகுவினுடைய படைபலம் குறைந்து கொண்டே வந்தது. சீவல்லபன் கையாண்ட தந்திரச் செயல்கள் ஈழ வரலாற்றில் ஈடு இணையற்றவையாகும்.

ஒருநாள் நடுப்பகல், வெய்யில் கொளுத்திக் கொண்டு இருந்தது. அனுராதபுரத்தில் போர்வீரர்களைத் திரட்டுவதற்காக அந்நகரை நோக்கி சீவல்லபன் சென்று கொண்டு இருந்தான். எப்பொழுதும் அவன் மாறு வேடத்தில் தனிமையில்தான் செல்லுவான். அன்று ஒரு புரவியின்மீது அமர்ந்து கொண்டு அனுராதாபுரம் பாதையில் வேகவேகமாக சென்று கொண்டு இருந்தான்.

எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்து விட்டது. ஒரு கூரிய அம்பு பின்னாலிருந்து அவனுடைய முதுகை நோக்கி பாய்ந்து வந்தது. ஏதோ சிந்தித்தவாறு குதிரைமீது சென்று கொண்டு இருந்த அவன் அதனைக் கவனிக்கவில்லை.

இன்னும் ஒரு இமைப் பொழுதில் அந்த அம்பு அவனுடைய முதுகில் பாய்ந்திருக்கும். கீழே விழுந்து உயிர் விட்டிருப்பான். அது நுனியில் விடம் தடவப்பட்ட அம்பு. அது உடலில் பாய்ந்திருப்பின் அவனை யாராலும் காப்பாற்றி இருக்க முடியாது. அந்தக் கொடிய செயல் அப்பொழுது நடந்திருந்தால் ஈழத்தின் வரலாறே திசை மாறி இருக்கும்.

ஆனால் விதி வேறு விதமாக இருந்தது. சீவல்லபன் முதுகை நோக்கிப் பாய வந்த அம்பு தன்னுடைய குறியை நெருங்கும் நேரத்தில் எதிர்பாராத வகையில் மின்னல் வேகத்தில் மற்றொரு அம்பு பக்கவாட்டிலிருந்து பாய்ந்து வந்து முதலில் வந்த அம்புடன் மோதியது. இதனால் சீவல்லபனை தாக்க வந்த அம்பின் வேகம் தடைப்பட்டது. தரையில் விழுந்தது. அதனைத் தாக்கிய இரண்டாவது அம்பு பக்கவாட்டில் பாய்ந்து சென்று அப்பால் போய் கீழே விழுந்தது.

தனக்கு பின்னால் உண்டான ஒலியைக் கேட்ட சீவல்லபன் திடுக்கிட்டான். வேகமாகத் திரும்பிப் பார்த்தான். பக்கவாட்டில் ஓர் அம்பு கீழே விழுந்திருப்பது தெரிந்தது.

குதிரையை விட்டுக் கீழே குதித்தான். அக்கம்பக்கம் பார்த்தான் யாரும் தென்படவில்லை. 'யார் அவன்? பின்னாலிருந்து அம்பு வீசிய கோழை யார்? எதிரில் வருகிறாயா, அல்லது எமனுலகிற்கு போகிறாயா? உன்னுடைய விருப்பம் எது?' சீவல்லபன் கோபத்துடன் குரல் கொடுத்தான்.

சாலை ஓரத்தில் அடர்ந்திருந்த ஒரு மரத்தின் அப்பால் இருந்து ஒரு சிறுவன் முன்னால் வந்தான் அவனைப் பார்த்தவுடன் சீவல்லபனுக்கு பயங்கரமான கோபம் வந்தது. 'புரவியில் சென்று கொண்டு இருந்த நான் உன்னை என்ன செய்தேன்? காரணமற்று என்னைத் தாக்கிய, அதுவும் பின்புறமிருந்து தாக்கிய உன்னை என்ன செய்கிறேன் பார்!' சீவல்லபன் வெஞ்சினம் கொண்டு அவனை வெட்டிச் சாய்க்க உறையில் தொங்கிய வாளை உருவி எடுத்தான்.

அந்த சிறுவன் சீவல்லபனுடைய கோபத்திற்கோ, அல்லது வாளிற்கோ அஞ்சவில்லை. அவன் சிரித்தான். ஏளனச் சிரிப்புடன் சீவல்லபனைப் பார்த்துப் பேசினான்:

'ஐயா, தாங்கள் புரவியில் போகும் மிடுக்கையும், வாளை வீசும் வேகத்தையும் பார்த்தால் வீராதிவீரர் என்றுதான் தெரிகிறது. தாங்கள் வீராதி வீரர் என்பதற்காக சும்மா இருப்பவர்மீது வாளை வீச வேண்டுமா?'

'டேய்! இதோ இங்கு விழுந்து இருக்கும் அம்பு உன்னுடையதுதானே?'

'ஆம்.'

'என் மீது ஏன் அம்பு வீசினாய்? என்னைக் கொல்லுவதால் உனக்கு என்ன பயன்?'

'நான் தங்களைக் கொல்ல அம்பை வீசவில்லை. காப்பாற்றவே வீசினேன்.'

'என்ன சொல்லுகிறாய்?'

'ஐயா, நான் சொல்லுவதை அமைதியோடு கேளுங்கள். நான் தங்களைக் கொல்ல அம்பை வீசவில்லை. பாதையோடு சென்று கொண்டு இருந்த தங்களைக் கொல்ல யாரோ இருவர் குறி வைத்து அம்மை வீசினார்கள். அதோ திரும்பிப் பாருங்கள். அங்கு வீழ்ந்திருக்கிறதே அதுதான் அவர்கள் வீசிய அம்பு. நான் இந்த அம்பை வீசி தங்களை நோக்கிப் பாயவந்த அம்பை வீழ்த்தாதிருப்பின் இந்நேரம் தாங்கள் பிணமாக இருப்பீர்கள்.

'அப்படியா? நீ சொல்லுவது உண்மையா? என்மீது அம்பு வீசியவர்கள் எங்கே?'

'இதோ, இங்கு பிரிந்து காட்டிற்குள் போகிறதே, இந்தக் கொடிப் பாதையில் அந்த இரண்டு பேரும் புரவிகளில் ஓடி விட்டார்கள்.'

இதனைக் கேட்ட சீவல்லபன் ஒரு நொடியும் அங்கு தாமதிக்கவில்லை. அச்சிறுவன் கூறியதில் முழு நம்பிக்கை ஏற்படவில்லை. ஆயினும் வேறு யாராவது புரவிகளில் செல்லுகிறார்களா எனப் பார்க்கலாம், யாரும் தென்படாவிட்டால் பின்னர் வந்து இவனை கவனித்துக் கொள்ளலாம் என நினைத்தான்.

எனவே அவன் தன்னுடைய புரவியின் மீது ஒரே தாவாகத்தாவி ஏறினான். சிறுவன் காட்டிய காட்டுப் பாதையில் புகுந்தான் இது அச்சிறுவனுக்கு உற்சாகம் அளித்தது. 'விடக்கூடாது! அவர்களைப் பிடித்து வரவேண்டும். பயங்கரமான சண்டை போட வேண்டும்.' அவன் உற்சாக மேலிட்டு பலமாக கத்தினான். சீவல்லபன் இதனைப் பொருட்படுத்தாது விரைந்தான்.

சீவல்லபன் வெகுதூரம் அப்பாதையில் சென்றாள். யாருமே தென்படவில்லை. அந்த சிறுவன் தன்மீது அம்பு எறிந்துவிட்டு, பின்னர் தப்பிப்பதற்காக இப்படி பொய் சொல்லிவிட்டான் என்று கருதினான். எனவே அவனுக்கு தக்க தண்டனை கொடுக்க திரும்பினான். அவன் தப்பித்து ஓடாமுன்னர் அவனைப் பிடிக்க வேண்டுமென்ற கருத்தில் வேகமாகக் குதிரையைத் திருப்பினான்.

அச்சமயம் அவனுடைய குதிரை அங்கு புதரில் மறைந்திருந்த ஒரு குதிரையின் மீது மோதிவிட்டது. அடர்த்தியான அந்த முட்புதரில் குதிரைகள் மறைந்திருப்பது தெரியவில்லை. பலமாக மோதப்பட்டுவிட்டதால் ஏற்கனவே அங்கு இருந்த குதிரை கத்தி ஒலியை எழுப்பியது.

திடுக்கிட்ட சீவல்லபன் விவரம் புரிந்து கொண்டான். 'யாரடா அங்கு புதரில் ஒளிந்து கொண்டு இருப்பது? உங்களுடைய உயிர் உடலில் தங்க வேண்டுமானால் வெளியே வாருங்கள்.' அவன் கோபாவேசத்துடன் கத்தினான். உறையிலிருந்த வாளை எடுத்து வலது கையில் ஏந்திக்கொண்டான்.

'வருகிறீர்களா? இல்லையா? குதிரை மேலிருந்தே நீங்கள் எமபுரிக்கு சவாரி செய்ய ஏற்பாடு செய்கிறேன்.' சீவல்லபன் புதரில்

இருந்த குதிரையை நோக்கி உருவிய வாளுடன் வேகமாகச் சென்றான்.

'ஐயா, காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் நாங்கள் வெளியில் வந்துவிடுகிறோம்.' ஒரு சோகமான குரல் கேட்டது.

'உம், விரைவில் வரவேண்டும்.'

புதிரில் மறைந்திருந்த இரு புரவிகள் வெளியே வந்தன. அவற்றின்மீது இருந்த இருவர் கீழே இறங்கினார்கள். சீவல்லபன் புரவியை விட்டு கீழே குதிதான். மறைந்திருந்த இருவரும் சீவல்லபனின் எதிரில் தயங்கித் தயங்கி வந்து நின்றார்கள். தலை தாழ்ந்து கொண்டு நின்றார்கள். அவர்களுடைய உடல்கள் அச்சத்தால் நடுங்கின. சீவல்லபன் அவர்களைப் பார்த்தவுடன் சினம் கொண்ட வேங்கையைப் போல சீறினான்.

'யார் நீங்கள்? நான் உங்களுக்கு என்ன தீமை செய்தேன்? என்மீது நீங்கள் அம்பு எய்த காரணம்?'

'ஐயா நாங்கள் வழிப் போக்கர்கள். எங்களுக்கு எதுவும் தெரியாது.'

'நீங்கள் என்மீது அம்பு வீசவில்லையா?'

'இல்லை.'

'அப்படியானால் என்னைக் கண்டவுடன் நீங்கள் அஞ்சி இந்தப் புதரில் மறையக் காரணம்?'

இதற்கு அவர்களால் மறுமொழி கூற இயலவில்லை. வாய் அடைத்து தரையைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். மற்றவன் ஏதாவது சமாதானம் சொல்லட்டும் என்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தார்கள். அவர்கள்தான் அம்பு எய்து இருக்க வேண்டும் என்ற எண்ணம் சீவல்லபனுக்கு உறுதியாகி விட்டது. எனவே அவன் மேலும் வெகுண்டான். 'உங்களுடன் நான் ஏன் பேச்சுக் கொடுக்க வேண்டும்! இதோ உங்களுடைய செயலுக்கு பரிசு.' சீவல்லபன் ஒருவனுடைய மார்பில் வாளைப் பாய்ச்ச ஓங்கினான்.

அவன் அப்பால் ஒதுங்கிக் கொண்டான்.

'ஐயா, நாங்கள் பிள்ளை குட்டிக்காரர்கள். எங்களை மன்னித்து விடுங்கள்' அவன் சீவல்லபனை நோக்கி இரு கரங்களையும் கூப்பினான். மற்றவனும் அதே பாடத்தை

ஒப்புவித்தான். ஈழ இளவலின் சினம் தணிந்தது. தொடர்ந்து கேட்டான்:

'நீங்கள் உயிர் பிழைக்க வேண்டுமானால் நான் கேட்பதற்கு உண்மையான விடையைச் சொல்ல வேண்டும்.'

'ஐயா, எங்களைக் கொன்று விட வேண்டாம். நாங்கள் உண்மையைச் சொல்லி விடுகிறோம்.'

'சொல்லுங்கள்.'

'நாங்கள் ஈழ நாட்டுப்படை வீரர்கள்.'

'ஈழ நாட்டுப்படை வீரர்கள் என்றால் போர் முனையில் நின்று எதிரிகளோடு போரிட வேண்டும். அதனை விட்டு விட்டு எங்கோ தனித்து போய்க் கொண்டு இருந்த என்மீது அம்பு வீசினீர்கள். அதுவும் பின் புறமிருந்து அம்பு வீசும் கோழைகளான உங்களை போர் வீரர்கள் என்று நம்பச் சொல்லுகிறீர்களா? நம்ப மாட்டேன்.'

'ஆம். ஐயா, நாங்கள் சொல்லுவது உண்மை. நாங்கள் ஈழநாட்டுப் போர்வீரர்கள்தான். போரில் ஈடுபட்டு நேருக்கு நேர் நின்று போரிடவே நாங்கள் விரும்புகிறோம். ஆனால் விருப்பப்படி அரசு ஊழியர்கள் நடக்க இயலுமா? மன்னனின் கட்டளை படித்தானே செயல்பட வேண்டும்!'

'என்ன, ஈழ மன்னர் பின்புறமிருந்து அம்பு வீசி என்னை கொல்லும்படி பணித்தாரா? இது உண்மையா?'

'இது சத்தியம் ஐயா! இல்லாவிட்டால் நாங்கள் ஏன் தங்களைக் கொல்ல முற்பட வேண்டும்? அம்பு வீச வாய்ப்பை எதிர்பார்த்து சென்ற நான்கு நாட்களாக தங்களை ஏன் பின் தொடர்ந்து வர வேண்டும்? தங்கள்மீது எங்களுக்கு என்ன பகை?'

'அப்படியா? நான் யார் என்று எண்ணிக் கொண்டு இச் செயலைப் புரிந்தீர்கள்?'

'தங்களை நாங்கள் அறிவோம், ஐயா.'

'சொல்லுங்கள், நான் யார்?'

'வீராதிவீரர் சிவல்லபர்,

'உங்களுடைய கணிப்பு சரியானதே.'

'ஐயா, உண்மை முழுவதும் சொல்லி விடுகிறோம். எங்களைக் காப்பாற்றுங்கள்.'

'சொல்லுங்கள்.'

'நாங்கள் வீசியது சாதாரண அம்பு அல்ல. நுனியில் விடம் தடவப்பட்ட அம்பு. தாங்கள் அடிக்கடி தனிமையில் பயணம் செய்வதை ஈழ மன்னர் அறிவார். போரில் தங்களை வெல்ல இயலவில்லை. எனவே தங்களை நிழல் போல தொடர்ந்து சென்று கொல்லுமாறு எங்களைப் பணித்தார். அந்த கொலைச் செயல் புரிய அவரே கொடுத்தனுப்பிய அம்புதான் அது.'

ஒருவன் பேசும்போதே மற்றவன் இடைமறித்துப் பேசலானான்:

'மகாப் பிரபு! தங்கள் பக்கம் இறைவன் இருக்கிறான். அவன்தான் மற்றொரு அம்பு உருவில் வந்து நாங்கள் வீசிய அம்பைத் தடுத்து விட்டான். இச் செயலின் மூலமாக நாங்கள் செய்யவிருந்த மகாபாவத்திலிருந்து இறைவன் எங்களைக் காப்பாற்றிவிட்டான். இம்முறை எங்களுக்கு உயிர்ப்பிச்சைக் கொடுங்கள். இனி இத்தகைய பாவம் செய்ய மாட்டோம். அந்த கொடுங்கோலனுடைய படையில் இனி இருக்கமாட்டோம். நாங்கள் இருவரும் எங்காவது ஓடிவிடுகிறோம்.'

'ஆம் ஐயா! எங்களைக் காப்பாற்றுங்கள்' இவ் வார்த்தைகளைக் கூறிய மற்றொருவன் கையெடுத்துக் கும்பிட்டான். அவனுடைய கண்களிலிருந்து நீர் வெள்ளமாகக் கொட்டியது.

சீவல்லபனுடைய சினம் தணிந்தது. அமைதி அடைந்தான். நடந்தவற்றை ஆழ்ந்து சிந்தித்தான். மெதுவாக அவர்களைப் பார்த்துக் கேட்டான்:

'உண்மையிலேயே உங்களுடைய தவறை உணருகிறீர்களா?

'இதில் ஐயம் வேண்டாம், பிரபு!' இவ்வாறு ஒருவன் கூறினான். மற்றவன் அதனை ஆமோதித்தான். சீவல்லபன் மீண்டும் கேட்டான்:

'தனித்து சென்று கொண்டு இருந்த ஒருவன்மீது பின்புறம் இருந்து விடம் தடவிய அம்பை வீசி கொல்லுமாறு உங்களை ஏவியவன் எத்தகைய பாதகன் என்பதை உணருகிறீர்களா?'

'ஆம்.'

'அத்தகைய அரசன் ஈழத்தை ஆளலாமா?'

'கூடாதுதான். ஆனால் வேறு வழி?'

'வீரர்களே, அதற்கு வழி இருக்கிறது. அந்தக் கொடுங்கோலனை ஒழித்துக் கட்டிவிட்டு ஈழத்தில் நல்லதோர் ஆட்சியை நிறுவவே நான் போரிடுகிறேன். இது தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடக்கும் போர். தர்மம் நிலை நாட்ட நடக்கும் புனிதப்போர். உங்களைப் போன்றவர்கள் ஒத்துழைத்தால் தர்மம் வெல்லும். ஈழநாடு தலை தூக்கும். அதற்கு நீங்கள் உதவுவீர்களா?'

'நிச்சயமாக!'

'நான் வற்புறத்தி என்னுடைய படையில் உங்களைச் சேருமாறு செய்வதாக நினைக்க வேண்டாம். நீங்கள் விரும்பினால் இப்பொழுதே போகலாம். உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன்.'

'பிரபு, கொடிய குற்றவாளிகளான எங்களுக்கும் மன்னிப்பு உண்டா? எங்களையும் பொருட்படுத்தி எங்களுடைய உதவியை தாங்கள் கோருவதா? இது நாங்கள் செய்த புண்ணியம். ஆணையிடுங்கள். செய்யக் காத்திருக்கிறோம்.'

'இனி நீங்கள் என்னுடைய உற்ற நண்பர்கள். நீதிக்கு போரிடும் வீரர்கள் குற்றமே செய்யாதவர்களைவிட குற்றம் புரிந்து திருத்தியவன்தான் மேலோன் எனப் பெரியோர்கள் கூறுவார்கள். இனி நீங்கள் நேர் வழியில் நின்று உங்களுடைய ஆற்றலைப் பயன்படுத்த வாய்ப்பு அளிக்கிறேன். இன்று மாலை என்னை அனுராதபுரத்தில் சந்தியுங்கள். நீங்கள் புறப்படலாம்.'

'மகா பிரபு!' அவர்கள் மனம் நெகிழ்ந்து கூறிக்கொண்டே சீவல்லபனுடைய பாதங்களைக் தொட்டு வணங்கினார்கள். அவர்களுக்கு அன்று மறுபிறப்பு. 'வருகிறோம்' என்று வணக்கம் கூறிவிட்டு புரவிகளில் ஏறி அமர்ந்தார்கள். அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்கள்.

அதன் பின்னர் சீவல்லபன் தன்னுடைய புரவியில் ஏறி அமர்ந்தான். வேகமாக அதனைச் செலுத்தியபடியே முன்பு தன்மீது அம்பு பாயவிருந்த இடத்திற்கு மீண்டும் வந்தான்.

அந்த இடத்தில் குதிரையை நிறுத்தினான் கீழே இறங்கினான். யாரும் முதலில் தென்படவில்லை. சாலை ஓரங்களை உற்றுப் பார்த்தான். ஒரு பருத்த மரத்தின் அடியில் அதன் வேரின்மீது முன்பு அவனுடன் பேசிய சிறுவன் அமர்ந்திருந்தான். அவன் சீவல்லபனைக் கவனிக்கவில்லை. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டு இருந்தான். ஈழ இளவல் அவனை நோக்கி நடந்தான்.

17

புதிய நண்பன்

மரத்தடியில் அமர்ந்திருந்த சிறுவன் சீவல்லபன் நெருங்கினான். அருகில் சென்றதும் தம்பி என அழைத்தான். குரல் கேட்ட அவன் திரும்பிப் பார்த்தான். சீவல்லபன் எதிரில் நின்றிருந்தான். அவனை அந்த சிறுவன் பொருட்படுத்தவே இல்லை. முகத்தை வேறு புறம் திரும்பிக் கொண்டான். சீவல்லபன் பேசினான்:

'தம்பி, தோன்றாத் துணைவனாக வந்து எதிர்பாராத வகையில் எனக்கு உதவி செய்தாய். நீ இல்லாவிட்டால் இந்நேரம் பிணமாகி இருப்பேன். எனக்கு உயிர்ப் பிச்சை அளித்தாய். அதற்காக உனக்கு என்னுடைய மனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

'நல்லது,' இந்த ஒரு சொல்லை மட்டுமே அந்த சிறுவன் விடையாக அளித்தான். வந்தவன் நின்றிருப்பதை அவன் பொருட்படுத்தவில்லை. அவன் அமர்ந்து கொண்டே இருந்தான். சீவல்லபன் மேலும் அவனை நெருங்கிச் சென்றான். அவனைப் பார்த்துக் கேட்டான்:

'தம்பி, நீ யார் என நான் அறியலாமா?'

'அறியலாம். ஆனால் அது தங்களுக்குத் தேவையற்றது.'

'ஆகட்டும், நான் யார் என்றாவது நீ அறிவாயா?'

'தெரியாது என்பதற்கு அடையாளமாக அவன் தலையை ஆட்டினான். சீவல்லபன் தொடர்ந்து பேசினான்.

'அப்படியானால் நீ ஏன் என்னைக் காப்பாற்றினாய்?'

'இது என்ன வினா ஐயா? தங்களுடைய முதுகில் அம்பு பாய்ச்சிக் கொல்ல இருவர் முயன்றார்கள். அதனை நான் பார்த்துவிட்டேன். கொடுமை நிகழாமல் தடுப்பது மனிதாபிமானம் உள்ள ஒரு தமிழ் மகனின் கடமை என்று கருதினேன். கடமையைச் செய்தேன். அதே அம்பு தங்களுடைய

மார்பை நோக்கிப் பாய்ந்து வந்திருப்பின் நான் இதில் தலையிட்டே இருக்க மாட்டேன்.'

'அப்படியானால் நீ ஒரு தமிழனா?'

'ஆம்.'

நல்லது, நீ சொல்லவதிலிருந்து எனக்கு ஒன்று புரிகிறது. என்னைக் கொல்ல முயன்றவர்கள் நேருக்கு நேர் நின்று அம்பு எய்து இருந்தால் நீ கவலைப் பட்டிருக்க மாட்டாய்'

'ஆம், தாங்கள் சொல்லுவது சரியானதே.'

'ஏன்?'

'அம்பு எய்தவர்களும் ஈழர்கள். அம்பு தாங்கி மடியப் போகிறவரும் ஈழர். எனவே இந்த சகோதர சண்டையைப் பற்றி எனக்கு என்ன? அதில் எனக்கு அக்கறையோ அல்லது ஆர்வமோ கிடையாது. மேலும் நேருக்கும் நேர் நின்று தங்களைத் தாக்க அவர்கள் முயன்றிருந்தால் நீங்களும் சும்மா இருந்திருக்க மாட்டீர்கள். எதிர்த்துப் போரிட்டிருப்பீர்கள் எனவே அப்பொழுது மற்றவருடைய உதவி தேவையற்றது.'

'இரு தமிழர்கள் என்னுடைய முதுகின்மீது அம்பு எய்திருப்பின் தடுத்திருக்க மாட்டாய் என்று சொல்!'

'ஐயா, அருள்கூர்ந்து அவ்வளவு கீழே போய் என்னை கணக்கிட வேண்டாம். பின்புறமிருந்து யார் அம்பு தொடுத்திருந்தாலும் தடுத்துதான் இருப்பேன். தமிழன் என்ன, ஈழன் என்ன? யார் தவறு செய்தாலும் தவறு தவறுதான்!'

'ஆயினும் ஒன்று எனக்கு நன்றாகப் புரிகிறது.'

'என்ன?'

'ஈழ நாட்டவர்பால் உன்னுடைய உள்ளத்தினுடைய ஆழத்தில் வெறுப்பு மண்டிக் கிடக்கிறது.'

'நிச்சயமாக. அதில் ஐயத்திற்கு இடமே இல்லை.'

'உன்னுடைய உள்ளத்தில் மண்டிக் கிடக்கும் ஈழ எதிர்ப்புக்கான காரணத்தை நான் அறியலாமா? சொல்ல முடிந்தால் சொல்.'

'சொல்லத்தான் வேண்டுமா? சொல்லுகிறேன். இன்று நான் இந்நாட்டில் ஒரு அநாதையாக இருக்கிறேன். இந் நிலைக்கு என்னை ஆளாக்கியவர்கள் ஈழர்கள்.'

'அப்படியா? மிகவும் வருந்துகிறேன். விவரமாகச் சொல்.'

'ஐயா! நானும், என்னுடைய அன்னையும் தமிழகத் திலிருந்து ஈழ நாட்டிற்கு வந்தோம். வந்தவுடன் சிம்மகிரி மலைக்குச் சென்றோம். அம்மலைக் கோட்டையில் உள்ள சிற்பங்களைக் கண்டு களித்தோம். மாலை நேரமாகி விட்டது. வேகமாக இறங்கினோம். ஆயினும் அடிவாரம் வந்து சேருவதற்குள் இருட்டிவிட்டது.

'அடிவாரத்தில் யாரோ சில ஈழ நாட்டவர்கள் இருந்தார்கள். இரவு கழிக்க எங்களுக்கு விடுதியைக் காட்டுவதாகக் கூறினார்கள். அவர்களை நம்பிச் சென்றோம். ஆனால் என்னையும், என்னுடைய அன்னை யாரையும் கட்டி புரவிகளில் கடத்திக் கொண்டு ஓடினார்கள்.

'யாரோ ஒரு புண்ணிய புருடன் எதிரில் புரவியில் வந்தார். அந்தத் தமிழர் என்னை அக்கொடியவர்களிடமிருந்து காப்பாற்றினார். ஆனால் என் அன்னையைக் கண்டுபிடிக்க இயலவில்லை. அந்த ஈழக் கொடும்பாவிகள் என்னுடைய அன்னையை என்ன செய்து விட்டார்களோ? கொன்று விட்டார்களோ, அவர் உயிருடன் இருக்கிறாரோ? இன்றுவரை எனக்குத் தெரியாது.'

அவன் வலது கரத்தால் முகத்தை மூடிக்கொண்டு அழத் தொடங்கினான். அதனைக் கண்ட சீவல்லபன் மிகவும் இளகிவிட்டான். அவனுக்கு அருகில் சென்று அமர்ந்து கொண்டான். முகத்தை மறைத்திருந்த அவன் கரத்தை மெதுவாக எடுத்தான். அவனுடைய கண்ணீரைத் தன்னுடைய ஆள் காட்டி விரலால் துடைத்தான்.

'தம்பி, கொடுமையான நிகழ்ச்சி. உங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்காக நான் மிகவும் வேதனைப் படுகிறேன்.'

'ஐயா, தாங்கள் ஈழ நாட்டவராயினும் நல்லவர் போலத் தென்படுகிறீர்கள். எனவே தங்களிடம் நீதி கேட்கிறேன். அந்தக் கொடியவர்கள் செய்தது தர்மமா?'

'தப்பு, தப்பு! மிகவும் கொடுமை தம்பி. அதற்காக நான் வேதனைப்படுகிறேன். என் நாட்டவர் செய்த தீமைகளுக்கு உளமார மன்னிப்புக் கேட்கிறேன்.'

இப்பொழுது அந்த சிறுவன் சீவல்லபனை உற்றுப் பார்த்தான். தன்னுடைய துன்பத்திற்காக சீவல்லபனுடைய முகம் வாடி இருந்ததைக் கவனித்தான். எனவே அவனுக்கு சீவல்லபன்

மீது ஓரளவிற்கு நல்லெண்ணம் ஏற்பட்டது. எழுந்து நின்றான். சீவல்லபனை நெருங்கி நின்றான். சீவல்லபனும் நின்றுகொண்டு அந்த இளைஞனுடைய தோள்மீது கையைப் போட்டவாறு பேசினான்.

'தம்பி உண்மையிலேயே நீ பெரிய வீரன். இந்த இளம் வயதில் மிகவும் ஆற்றல் படைத்திருக்கிறாய். பாய்ந்து வரும் அம்பை மற்றொரு அம்பால் வீழ்த்துவது என்பது ஆற்றல் மிக்க செயல். அதனைப் பாராட்ட வார்த்தைகளே கிட்டவில்லை. மகாபாரதத்தில் வரும் வீர அபிமன்யுவைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறாயா?'

'ஓ, தெரியும். என்னுடைய அப்பா அந்தக் கதையை எனக்குச் சொல்லி இருக்கிறார்.'

'அந்த வீர அபிமன்யுவிற்கு நிகரான வீரன் நீ.'

'ஐயா, தாங்கள்கூட மகாபாரதம் படித்திருக்கிறீர்களா?' அவன் வியப்போடு கேட்டான். ஒரு ஈழனுக்கு மகாபாரதம் தெரிகிறது என்பது அவனை வியப்பில் ஆழ்த்தியது. சீவல்லபன் மறுமொழி கூறினான்:

'ஆம் தம்பி, நான் ஓரளவிற்கு இந்திய நாட்டு இதிகாசங்களான மகாபாரதத்தையும், இராமாயணத்தையும் படித்திருக்கிறேன். நானும் வெகுகாலமாக தமிழ் நாட்டில் வாழ்ந்தவனே!'

'அப்படியா! மெத்த மகிழ்ச்சி. தாங்கள் யார்?'

'என்னுடைய பெயர் சீவல்லபன்.'

'என்ன சீவல்லபரா! ஈழ வேந்தன் பராக்கிரம பாகுவின் உறவினர் என்று சொல்லுகிறார்களே....

'ஆம். அவருடைய தமக்கையின் புதல்வன்.'

'என்ன சொல்லுகிறீர்கள்? இன்று ஈழ நாட்டையே கிடுகிடுக்க வைக்கும் வீராதிவீரர் சீவல்லபர் தாங்கள் தானா?'

'தம்பி, இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?'

'தெரியும் ஐயா. இன்று இந்நாட்டில் தங்களுடைய பெயரை அறியாதவர்கள் யார் இருக்க முடியும்?'

'தம்பி, நீ நல்ல புத்திசாலி. இந்நாட்டின் அரசியலையும் புரிந்து வைத்திருக்கிறாய்.'

'ஐயா, நான் சிறியவன். தங்களிடம் மரியாதை இல்லாமல் நடந்து கொண்டேன். தாங்கள் என் அருகில் நின்று பேசியபோதும் நான் மமதையுடன் அமர்ந்து கொண்டு பதில் அளித்தேன். என்னுடைய குற்றத்திற்காக மன்னிப்பு வேண்டுகிறேன் ஐயா!'

'தம்பி, நான் புரிந்து கொண்டேன். அது உன்னுடைய குற்றமல்ல. ஈழ கொடும்பாவிகள் செய்த குற்றத்தின் பிரதி பலிப்பு.'

'ஐயா, தங்களைத் தரிசித்தது இந்த ஏழை அநாதை சிறுவன் செய்த பாக்கியம்.'

'தவறு தம்பி. உண்மையிலேயே உன்னை தரிசித்தது நான் செய்த பாக்கியம். இன்று நீ இல்லாது இருந்தால் நீ சொன்ன வீராதி வீரன் இந்நேரம் பிணமாக இருப்பான். ஈழ வேந்தன் வெற்றி விழா கொண்டாடிக் கொண்டு இருப்பான்.'

சீவல்லபன் அந்த சிறுவனை அள்ளி அணைத்துக் கொண்டான். உணர்ச்சி வசப்பட்ட அவனுடைய கண்ணீர் சிறுவனின் உச்சியின்மீது கொட்டியது. அவன்மீது இனம் தெரியாத அன்பு அவனுடைய உள்ளத்தில் பெருக்கெடுத்து ஓடியது. அணைத்தவாறே அவனைக் கேட்டான்:

'தம்பி, உன்னுடைய பெயர்?'

'மகீதரன்.'

'தமிழ் நாட்டில் உன்னுடைய ஊர்?'

'காஞ்சி.'

'இப்பொழுது நீ எங்கு இருக்கிறாய்? உன்னைப் பெற்றெடுத்த புண்ணியவதியை ஈழத்தவர்கள் கவர்ந்து சென்ற பிறகு நீ எங்கு, யாருடன் வாழ்கிறாய்?'

'ஐயா, நான் அனுராதபுரத்தில் சிம்மபாகு என்பவருடைய இல்லத்தில் வாழ்கிறேன். என்னை மட்டும் ஒரு தமிழர் காப்பாற்றினார் என்று கூறினேன் அல்லவா? அவர் என்னை சிம்மபாகுவிடம் ஒப்படைத்துவிட்டுப் போய் விட்டார்.'

'வா, புரவியில் ஏறிக் கொள், போகலாம்.'

'எங்கு?'

'உன்னுடைய வீட்டிற்கு.'

'என்னுடைய வீட்டிற்கா? தாங்கள் வருகிறீர்களா? இது உண்மையா?'

'ஏன்? உன்னுடைய வீட்டிற்கு நான் வரக்கூடாதா?'

'ஐயையோ, நான் அப்படிச் சொல்லவில்லை. இந்த ஏழையின் வீட்டிற்குத் தாங்கள் வரவிரும்புகிறீர்களா என்ற ஐயத்தால் அவ்வாறு கேட்டுவிட்டேன். நீங்கள் வந்தால் என்னுடைய இன்றைய அம்மா மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். போகலாமா? நான் குதிரையை ஓட்டட்டுமா? எனக்கு குதிரை ஓட்ட மிகவும் ஆசையாக இருக்கிறது!'

'உனக்கு புரவியை ஓட்டத் தெரியுமா?'

'ஓ!'

'மெத்த மகிழ்ச்சி. எங்கே புரவியின்மீது ஏறு பார்க்கலாம். நான் உனக்கு பின்னால் ஏறி அமருகிறேன். என்னைக் கீழே தள்ளிவிட மாட்டாயே?'

'உம். என்னுடைய திறமையைப் பாருங்களேன்!'

சிறுவன் உற்சாகம் மேலிட்டு குதிரையின் அருகில் ஓடினான். அனாயாசமாக அதன்மீது பாய்ந்து ஏறி அமர்ந்து கொண்டான். சீவல்லபன் அவனுக்குப் பின்னால் அமர்ந்து கொண்டான். 'புரவி சவாரிக்கு வாய்ப்பு கிடைத்தது. அதுவும் வீராதி வீரர் சீவல்லபனுக்கு நான் புரவி ஓட்டுகிறேன்' என்ற எண்ணம் அவனுக்கு ஈடில்லா மகிழ்ச்சி அளித்தது. அவனுடைய ஆனந்தத்திற்கு அளவே இல்லை. வேகமாக அனுராதபுரத்தை நோக்கி புரவியை துரத்தினான். அது நாலுகால் பாய்ச்சலில் பறந்தது.

ஈழ நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க எழில் நகரம் அனுராதாபுரம். அந்நகரின் கோடியிலே ஒரு ஒதுக்குப் புறமான சந்து. அந்த சந்தில் புகும்போதே முதலில் தென்பட்டது தென்னம் ஓலையால் வேய்ந்த ஒரு சிறு குடில். அந்த குடிலின் முன்னர் மகீதரன் புரவியை நிறுத்தினான் 'இறங்குங்கள். இதுதான் எங்களுடைய இல்லம்' என்றுகூறக்கொண்ட மகீதரன் குதிரையை விட்டு கீழே குதித்தான். சீவல்லபனும் அவனைத் தொடர்ந்து கீழே இறங்கினான்.

அந்தக் குடிசையின் வாயில் திறந்திருந்தது. வாயிலுக்கு நேராக உள்ளே தரைமீது ஒரு மாது அமர்ந்திருந்தாள். அவள் அரிசியிலிருந்த கற்களைப் பொறுக்கிக் கொண்டு இருந்தாள். அவளுக்கு சுமார் ஐம்பது அகவைகள் இருக்கலாம். ஆனால்

காலதேவன் அவளுடைய முகத்தில் தாறுமாறாகக் கோடுகளைக் கிழித்திருந்தான். அந்தக் கோடுகளும், அவளுடைய தலையிலிருந்த வெள்ளை முடியும் சேர்ந்து அவளை வயதிற்கு மீறிய முதுமை அடைந்து விட்டவளாகத் தோன்றச் செய்தன.

குதிரையின் குளம்பொலியைக் கேட்டு அம்மாது திடுக்கிட்டாள். தான் செய்து கொண்டு இருந்த வேலையை விட்டுவிட்டு வெளியே பார்த்தாள். குடிலுக்கு எதிரில் ஒரு புரவி நிற்பது தெரிந்தது. அவள் பதறிக் கொண்டு வாயிற்படி அருகில் வந்து உள்ளே நின்றவாறே வெளியே எட்டிப்பார்த்தாள்.

தெருவில் ஒரு புரவி நிற்கிறது. மகீதரன் குடிலை நோக்கி வருகிறான். அவன் பின்னால் ஒரு வாலிபன் வந்து கொண்டு இருக்கிறான். அந்த வாலிபனைப் பார்த்து அம்மாது நடுங்கிவிட்டாள். அவளுடைய முகம் அச்சத்தால் விகாரம் அடைந்து விட்டது. தன்னை நோக்கி வரும் மகீதரனை நோக்கி அவள் விரைந்து நடந்தாள். அவனை அப்படியே அணைத்துக் கொண்டாள். அவளுடைய கரங்கள் நடுங்கின.

உடன் வந்த வாலிபனை அச்சத்தோடு பார்த்தாள் அவளுடைய கண்களில் நீர் கலங்கியது. இரு கரங்களும் கூப்பி அவனை வணங்கியபடியே மன்றாடினாள்:

'ஐயா, உங்களுடைய பாதங்களில் விழுந்து கெஞ்சி கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு இருப்பது இவன் ஒருவன்தான் அருள்கூர்ந்து இவனை விட்டு விடுங்கள், விட்டு விடுங்கள்.'

'சீவல்லபன் அவளைப் பார்த்து விழித்தான். அவன் முகத்தில் குழப்பம் குடி கொண்டது. அவளை உற்றுப் பார்த்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால் மகீதரன் புரிந்து கொண்டான். அன்னையை நோக்கிய படியே பலமாகச் சிரித்தான். அவளுடைய கரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு கூறினான்:

'அம்மா, பொறுங்கள். இவர் என்னை ஈழப்படையில் சேர்க்க வந்தவர் அல்ல. பயப்பட வேண்டாம்.'

'அப்படியானால் இவர் யார்?'

'சொல்லட்டுமா? சொன்னால் அப்படியே அசந்து போய் விடுவீர்கள். பயந்து நடுங்குவீர்கள். சொல்ல மாட்டேன்.'

'மகீதரா, விளையாடாதே. பெரியவர்களின் முன்னர் இப்படி எல்லாம் துடுக்குத்தனமாக சிரிக்கக் கூடாது. இவர் யார்? சிரிக்காமல் சொல்.'

வீராதிவீரர், சூராதிசூரர் ஈழ நாட்டின் அடுத்த அரசர் சீவல்லப மகாராசா!'

'என்ன, என்னடா உளறுகிறாய்? பெரியவர்களிடம் இப்படி எல்லாம் விளையாடக் கூடாது. அது தவறு என்று எத்தனை முறை சொல்லி இருக்கிறேன்.'

'மைந்தனை அன்னை கடிந்து கொண்டாள். சீவல்லபன் பக்கம் திரும்பிக் கூறினாள்;

'ஐயா, இவன் அறியாத பிள்ளை. இவனுடைய உளறலுக்காக நான் மன்னிப்பு வேண்டுகிறேன்.'

'தாயே, தங்களுடைய புதல்வன் கூறியது பொய் அல்ல. அவன் குறிப்பிட்ட சீவல்லபன் நான்தான்.'

'நம்ப முடியவில்லையே!'

'உண்மை தாயே.'

'என்ன சீவல்லப மகாராசாவா தாங்கள்? மன்னிக்க வேண்டும். கனவிலும் தங்களை தரிசிக்கும் பாக்கியம் இந்த ஏழைக்கு கிட்டும் என நான் எதிர்பார்க்கவில்லை. எனவே நம்ப இயலவில்லை என்று கூறிவிட்டேன். தங்கள் பாதம் இந்த ஏழையின் குடிசையில் பட்டது நாங்கள் செய்த பாக்கியம். உள்ளே வாருங்கள்.' அம்மாது பக்தியோடு சீவல்லபனை உள்ளே அழைத்தாள். அவள் பதைபதைத்து விட்டாள். மெய்மறந்தாள், செய்வதறியாது திணறினாள். சீவல்லபன் அப்பெண்ணைத் தொடர்ந்து குடிசைக்குள்ளே சென்றான். குடிசையின் உள்ளே இருந்த கட்டிலின் மீது அவள் அவசர அவசரமாக ஒரு பாயை விரித்தாள். சீவல்லபன் அதன்மீது அமர்ந்தான். மகீதரனுக்கு ஒரே பெருமை. அவனுடைய உள்ளத்தில் மகிழ்வு பொங்க, பெருமையோடு சீவல்லபனுடைய அருகில் போய் நின்றான். சீவல்லபன் அவனை இழுத்து தனக்கு அருகில் உரிமையோடு அமர்த்திக் கொண்டான். அந்த அன்னை ஒரு ஓரமாக ஒதுங்கி பணிவோடு நின்றாள். அவளைப் பார்த்து சீவல்லபன் கேட்டான்:

'தாயே, நான் ஒன்றை அறியலாமா?'

'ஐயா, என்னிடம் தாங்கள் அறிந்து கொள்ள என்ன இருக்கிறது?'

'என்னைப் பார்த்து தாங்கள் அஞ்சி நடுங்கக் காரணம்?'

'அதுவா? முன்பே மகீதரன் கூறினானே! ஒவ்வொறு வீட்டிலிருந்தும் ஒருவர் கட்டாயமாக ஈழப் படையில் சேர

வேண்டும். இது இந்நாட்டு அரசனின் ஆணை. எனக்கு இருப்பதோ இவன் ஒருவன்தான். அதுவும் இவன் என்னுடைய சொந்த மகன் அல்ல. எங்களிடம் அடைக்கலமாகக் கொடுக்கப்பட்டவன். ஆனால் இவனை நான் பெற்ற பிள்ளைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக நேசிக்கிறேன். இவனை போருக்கு அனுப்பினால் என்னால் உயிர்வாழ இயலாது ஐயா!'

'தாயே மகீதரன் ஏற்கனவே தன்னுடைய வரலாற்றை ஓரளவு கூறினான். கேட்டு மிகவும் வேதனைப்பட்டேன். தங்களுடைய கணவர்?'

'என்னுடைய கணவரா? ஐயோ!' அப்பெண் அழ ஆரம்பித்து விட்டாள். அவளால் நிற்கவும் இயலவில்லை. கால்கள் வலு இழந்து விட்டன. அப்படியே தரையில் அமர்ந்து விட்டாள். கண்ணீர் விட்டு விக்கி, விக்கி அழுதாள். அதனைப் பார்த்து மனம் துடித்த சீவல்லபன் கேட்டான்:

'தாயே, தங்களுடைய வேதனையை நான் கிளறிவிட்டு விட்டேன் போலத் தெரிகிறது. அதற்காக மிகவும் வருந்துகிறேன். விருப்பம் இல்லாவிடின் தங்களுடைய கணவரைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டாம்.'

'ஐயா, இதில் விருப்பு வெறுப்பிற்கு என்ன இருக்கிறது? கொடுங்கோலன் ஈழ மன்னனுடைய படையில் என்னுடைய கணவர் பணிபுரிந்தார். ஒரு வாரத்திற்கு முன்னர் போரில் மாண்டு விட்டார்!'

'அப்படியா? தங்களுடைய கணவர் போரில் உயிர் நீத்து விட்டாரா? அம்மா, தங்களுடைய கணவரைக் கொன்றது என்னுடைய படைகளா? ஐயையோ, யுத்தம் எத்தனைக் கொடுமையானது! இன்று ஈழ வேந்தனுடைய படைகளை எதிர்த்துப் போரிடுவது என்னுடைய படைகளே. எனவே என்னுடைய படைகள் கொன்றால் என்ன, நான் கொன்றால் என்ன? படைவீரர்கள் வெறும் அம்புகள். அம்புகளை எய்த கொலையாளி நான்தான் தாயே! என்ன கொடுமை? என்னுடைய இந்தப் போரால் தங்களைப் போன்ற எத்தனையோ தாய்மார்கள் விதவைகள் ஆகி இருக்கலாம் அல்லவா? கொடுமை, கொடுமை!'

'ஐயா, தங்களைப் பார்த்தால் மிகவும் நல்லவராகத் தெரிகிறது. தங்களுடைய தூய்மையான உள்ளத்திற்கு நான் தலை வணங்குகிறேன். போர் என்று ஒன்று இருக்கும் வரை மரணம் இருக்கவே செய்யும்.'

அம்மாது சலிப்புடன் பெருமூச்சு விட்டாள். அவளுடைய கண்கள் கூரையைப் பார்த்தவாறு நிலைத்து நின்றன.

'தாயே சிரம் அறுத்தல் மன்னர்களுக்கு சிறு விளையாட்டு. ஆனால் சிரம் இழப்பவர்களுக்கு அதைவிடப் பெரிய துன்பம் உலகில் எதுவுமே இல்லை. இது மிகவும் கொடுமையானது.' சீவல்லபன் தரையைப் பார்த்துக் கொண்டே வேதனையோடு உள்ளத்தின் ஆழத்திலிருந்து வந்த சொற்களை வெளியிட்டு முணுமுணுத்தான்.

'அரசே!'

'சொல்லுங்கள் தாயே! என்ன கொடுமை இது? யாரும் இதனைப்பற்றி சிந்திப்பதே இல்லை. மன்னர்களுக்கு போர், வெற்றி, புகழ் இவைகளில்தான் நாட்டம். மற்றவர்களைப் பற்றிக் கவலையே கிடையாது. உலகம் தோன்றிய நாளிலே இருந்து தேவனாம்பிரியனான அசோக சக்ரவர்த்தி ஒருவர் மட்டுமே இதனைச் சிந்தித்தார் கலிங்கத்துடன் போர் செய்தார் அதனுடைய விளைவுகளை நேரில் பார்த்தார். அன்றே போரை வெறுத்து விட்டார். அன்றிலிருந்து அவர் போர் நடத்தியதே இல்லை. அதனால் நாம் அனைவரும் அவரை மகாத்மா எனப் பாராட்டுகிறோம். ஆனால் அவருடைய வழியில் நடக்க மறுக்கிறோம்.'

'ஆம், ஐயா! நன்றாகக் கூறினீர்கள். இதுதான் உலகம். அசோகர் இருக்கட்டும், இந்த உலகம் இதுவரை எந்த மகானைத்தான் பின்பற்றி இருக்கிறது? பெரியவர்களை பூசிக்கிறோம். ஆனால் அவர்களைப் பின்பற்ற மறுக்கிறோம்.'

'ஆம் தாயே! நன்றாகச் சொன்னீர்கள்.' 'பெரிய, பெரிய அரசர்கள் எல்லாம்கூட போரைக் கண்டு உற்சாகமே அடைந்திருக்கிறார்கள்.'

'ஆம், பரத கண்டத்தையே கிடுகிடுக்க வைத்த புண்ணிய சீலர் ஹர்ஷ சக்ரவர்த்தி. கல்வி, தானம், தவம், அத்தனையிலும் சிறந்த சீலர்.' அவர் எழுதிய காதம்பரி என்னும் காவியத்தைத் தாங்கள் படித்திருக்கலாம்.'

'இல்லை தாயே! நான் அதனைப் படித்ததில்லை. என்னுடைய தமிழ் அறிவு மிகவும் குறைவு.'

'அவர் வடமொழியில்தான் எழுதியிருக்கிறார். என்னுடைய கணவர் படையில் இருந்திருந்தாலும் மெத்தப் படித்தவர்.

எனக்குத் தமிழிலும், வடமொழியிலும் சிறிது புலமை உண்டு. காதம்பரியில் உள்ள ஒரு பாடலைப் பற்றி என்னுடைய கணவர் அடிக்கடி கூறுவார்:

'அழுதார், துடித்தார், அறுத்த நாண் வைத்துத்
தொழுதார், எழுதறிய வாகை புவை வேந்தே! உன்
மாற்றார்தனை மணந்த தோகையர்
தம் சோகத்தால்.'

'மன்னரை வீராதிவீரர் என்று சொல்ல வேண்டும். அதனை வலியுறுத்த வந்த ஹர்ஷவர்த்தனர் சொல்லுகிறார்: 'எழுதுவதற்கு இயலாத அளவிற்கு வெற்றிகளைப் பெற்றிருக்கும் அரசே! உன்னுடைய எதிரிகளை மணந்து கொண்ட பெண்கள் அழுதார், துடித்தார். தங்களுடைய கணவன்மார் வைத்திருந்த அறுந்த நாண்களை வைத்துத் தொழுதார் என்று! இதனுடைய பொருள் எதிரியைச் சேர்ந்த பெண்கள் விதவையாகி அழுதார்கள் என்பது. அப்படி என்றால் அரசர் வெற்றி பெற்று விட்டார் என்பது இதன் உட்பொருளாகும். வெற்றியின் மறுபுறம் அழுகைதான். இது அந்த நாளிலே இருந்து இந்த நாள் வரை நடந்துகொண்டே வருகிறது அரசே!'

'தாயே, நான் ஒரு பௌத்தன். எந்த உயிரையும் கொல்லுவதை வெறுக்கிறேன். ஆனால் அதர்மத்தை எதிர்க்க வேண்டாமா? மக்களை வாட்டிப் பிழியும் பராக்கிரமபாகுவை தொடர்ந்து அரசாள அனுமதிக்கலாமா? அதனால் அன்றாடம் ஆயிரக்கணக்கானவர்கள் அல்லல்பட்டு மடிகிறார்கள் அவருடைய ஆட்சிக்கு ஒரு முடிவு கட்டுவதின் மூலமே ஈழத்தில் நிம்மதியும், வளமையும் ஏற்படுத்த முடியும். அது மட்டுமல்ல.....

'வேறு என்ன ஐயா?' ஆர்வத்தோடு இடைமறித்துக் கேட்டான் அருகில் இருந்த மகீதரன். இதுவரை அவர்கள் பேசியது அவனுக்குப் புரிந்ததாகத் தெரியவில்லை. பராக்கிரமபாகுவைப் பற்றிப் பேசும்போதுதான் புரிந்து கொண்டு இடைமறித்துக் கேட்டான். சீவல்லபன் அவனுக்கு விடை கூறினான்:

'மகீதரா, என்னுடைய நோக்கம் பராக்கிராமபாகுவை ஒடுக்குவது மட்டுமல்ல. அதற்கு மேலே தொடர்கிறது. பாருக்குள்ளே நல்லநாடு பாரதநாடு என்பார்கள். அந்நாட்டின் திலகம் போன்றது தமிழ்நாடு. அந்நாட்டினுடைய இன்றைய நிலை என்ன? அந்தச் சிறிய பரப்பில் மூன்று அரசர்கள். அவர்களுக்குள் தீராத பகைமை. என்றுமே போர்கள்! இன்று சேரநாடு

ஒடுங்கிவிட்டது. பாண்டிய நாட்டிற்கும், சோழ நாட்டிற்கும் ஓயாத போர். அவ்விரு நாடுகளும் இன்று ஓரளவிற்கு நெருங்கி நேசமாகவே இருக்கின்றன. ஆனால் இந்த பராக்கிரமபாகு பாண்டிய நாட்டைத் தூண்டி விட்டுக் கொண்டே இருக்கிறான். இன்று தமிழகத்தில் நடக்கும் போர்களுக்கு இவனே மூலகாரணம். எனவே இவனுக்கு முடிவு கட்டுவதின் மூலமாக தமிழகப் போர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறேன்.'

'ஆ, ஐயா! தாங்கள் மிகப் பெரியவர்!' இவ் வார்த்தைகளைக் கூறிக்கொண்டே அம்மாது சீவல்லபனை நோக்கி கையெடுத்துக் கும்பிட்டாள். அப்பொழுது அவளுடைய கண்களிலிருந்து தாரைதாரையாக நீர் கொட்டியது.

சீவல்லபன் அம்மாதைப் பார்த்துக் கூறினான்:

'தாயே, இந்த சிறுவன் மகீதரன்தான் இன்று என்னுடைய உயிரைக் காப்பாற்றினான். எனக்கு மறுவாழ்வு கொடுத்தான்.'

'உண்மையாகவா? இது என்ன புதிய செய்தி? இது எப்படி இயலும்? அப்படி சொல்லும்படி இந்தக் குறும்புக்காரன் தங்களிடம் சொல்லி இருப்பான். நான் நம்ப மாட்டேன்.'

'ஆம் அம்மா,' என்று பேச்சைத் துவக்கிய சீவல்லபன் தன்மீது பாய வந்த அம்பை மகீதரன் தடுத்து வீழ்த்திய விவரங்களைக் கூறினான். அவன் கூறி முடிக்கும்போது மகீரதன் குறுக்கிட்டு கூறினான்:

'ஐயா, தங்களுக்கு நான் உதவியதற்காக வாயால் நன்றி கூறிக்கொண்டே இருந்தால் போதுமா?'

'தம்பி, நீ புத்திசாலி. உனக்கு என்ன வேண்டும் கேள். என்னிடம் இருப்பது எது கேட்டாலும் கொடுக்கிறேன். தயங்காமல் கேள்.'

'எது கேட்டாலும் கொடுப்பீர்களா?'

'நிச்சயமாக.'

'மகீதரா, என்ன இது? உதவிக்குக் கைமாறு கேட்பதா? கூடாது. வாயை மூடிக் கொண்டு வாளாவிரு.' அந்த அன்னை மகீதரனை கோபத்தோடு பார்த்தாள். ஆனால் உற்சாகமடைந்த சீவல்லபன் சிரித்துக் கொண்டே கூறினான்:

'கேட்கட்டும் தாயே, அவன் எனக்கு உயிரையே கொடுத்தான் நான் அவனுடைய ஆவலை நிறைவேற்ற வேண்டாமா? கேள் மகீதரா, தயங்காமல் கேள்.' இச்சொற்களை கூறிய சீவல்லபன் அத்தாயைப் பார்த்துக் கூறினான்:

'அம்மா, மகீதரன் எதனைக் கேட்பான் என்று எனக்குத் தெரியும்!'

'அப்படியா! தங்களுக்குத் தெரியுமா?' இது அன்னையின் வினா.

'என்ன சொல்லுங்கள் பார்க்கலாம்?' மகீதரன் கேட்டான்.

'மகீதரா, நீ வீரன் அல்லவா, என்னுடைய புரவியைக் கேட்பாய் என்பது எனக்குத் தெரியும்.'

'அதுதான் இல்லை.'

'அப்படியா, வேறு என்ன?'

இப்பொழுது மகீதரன் தாயைப் பார்த்தான். தயங்கிய படியே கேட்டான்:

'அம்மா, நீயும்தான் எனக்கு ஒன்று கொடுக்க வேண்டும்.'

'என்னடா, இன்று இந்தப் புதிய விளையாட்டு? யாருடன் விளையாடுகிறாய் என்பதை நினைவில் வைத்துக் கொள் வந்திருப்பது யார் என்று மறந்துவிட்டு என்னிடம் பேசுவது போலவே பேசிக் கொண்டு இருக்காதே.' அன்னை சீறினாள். சீவல்லபன் அன்னையைப் பார்த்து சிரித்துக் கொண்டே கூறினாள்:

'தாயே, குழந்தைதானே! விளையாடட்டும். நீ கேள் மகீதரா.'

'விளையாட்டு அல்ல அம்மா, நான் நேரடியாகவே கேட்கிறேன் ஐயா! தாங்கள் புரிவது தர்மயுத்தம்தானே?'

'ஆம்.'

'தர்மத்திற்குப் போரிடுவது ஒவ்வொருடைய கடமை அல்லவா?'

'ஆம்'

அந்த புனிதப் பணியில் எனக்கும் பங்கு வேண்டும்.'

'என்னடா, பெரிய பீடிகை போடுகிறாய்?' அவனைப் பார்த்து சளிப்போடு தாய் கேட்டாள்.

'என்ன மகீதரா, என்னை சொன்னாய்? நீ சொல்வது உண்மைதானா? என்னுடன் சேர்ந்து போரிட வருகிறாயா?' சீவல்லபன் ஆர்வத்துடன் கூறிக்கொண்டே மகீதரனை தூக்கித் தன்னுடைய மடியின்மீது வைத்து அணைத்துக் கொண்டான்.

'ஆம். என்னுடைய உடலில் ஓடுவது தமிழ் இரத்தம். நானும் தங்களுடைய படையில் சேர்ந்து போராடுவேன். இந்த ஈழ மன்னனை ஒழித்துக்கட்ட போர் செய்வேன் ஏன், அவசியமானால் தங்களுடன் தமிழ் நாட்டிற்கு வந்து சோழர்களோடு சேர்ந்து பராக்கிரமபாகுவின் சொல்லைக் கேட்டு ஆடும் அந்த பாண்டியனுக்கும் பாடம் போதிப்பேன். ஐயா, என்னைத் தங்களுடைய படையில் சேர்த்துக் கொள்ளுவீர்களா?'

'ஐயா, இவனுடைய உடலில் ஓடுவது சோழ நாட்டு இரத்தம். எனவே இவன் இப்படிப் பேசுவது வியப்பில்லை.'

'புரிகிறது தாயே, இளம் வயதிலேயே இத்தகைய துடிப்பும், ஆற்றலும் கொண்டிருக்கும் இந்த வீராதிவீரன் என்னுடன் இருப்பது எனக்கு புது தெம்பு அளிக்கும். ஆனால் தாங்கள் அனுமதிப்பீர்களா? இவனை என்னுடன் என்றும் வைத்திருப்பேன். இமை கண்ணைக் காப்பது போல இவனைக் காப்பேன். அனுமதிப்பீர்களா?'

அந்த அன்னை வாய் திறக்கவில்லை. கேவி, கேவி அழுதாள். பரிதாபமாக முகத்தைக் கரங்களால் மூடிக் கொண்டு அழுதாள். சீவல்லபன் கூறினான்:

'தாயே, தங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் இவன் என்னுடன் வர வேண்டாம்.'

'ஐயா, இவன் யார் என்று தெரியுமா?'

'தமிழ்நாட்டுக்காரன் என்றும், காஞ்சி நகரைச் சேர்ந்தவன் என்றும் கூறினான். மற்ற விவரங்களை நான் அறியலாமா, தாயே?'

'எனக்கும் தெரியாது ஐயா! இவனை ஒரு கொள்ளையரின் கூட்டத்திலிருந்து யாரோ ஒருவர் மீட்டுக் கொண்டு வந்தார். அவர் யார் என்று எனக்குத் தெரியாது. என்னுடைய கணவருக்கு அவரைத் தெரியும். இவனை எங்களிடம் அடைக்கலமாக ஒப்படைத்துவிட்டுச் சென்றார். அவர் யார் என்ற விபரங்களை என்னுடைய கணவர் சொல்லாமலே போய் விட்டார். எனவே இவனைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது.'

'அம்மா, இவனுடைய தாயாரை தேடிப்பிடிக்க என்னால் ஆனதைச் செய்கிறேன். அது என்னுடைய கடமை. இவனை என்னுடன் விடுங்கள். இவனுடைய எதிர் காலம் உன்னதமாக விளங்கும். இவனால் இவன் பிறந்த மண் பெருமை அடையும் என்று என்னுடைய உள்ளத்தில் ஏதோ ஒன்று சொல்லுகிறது.

ஆசீர்வதித்து அனுப்புங்கள் தாயே!' உணர்ச்சி வசப்பட்டு சீவல்லபன் பேசினான். அன்னையினுடைய அழுகை நின்றது. ஆனால் வாய் திறக்க வில்லை. மகீதரன் சீவல்லபனைப் பார்த்துக் கூறினான்:

'ஐயா, மற்றொன்று. நான் தங்களுடன் வந்து விட்டால் என்னுடைய அம்மாவுக்கு யார் துணை? என்னை ஈழப்படையில் சேர்க்கவில்லை. ஆனால் எதிரியுடன் என் அன்னை புதல்வனை அனுப்பி விட்டார் என்ற செய்தி ஈழ வேந்தனுக்கு எட்டினால் என்னவாகும்?'

'அந்தக் கவலை உனக்கு வேண்டாம் மகீதரா! அதனைப் பற்றி நான் மனதில் முடிவு செய்யாமல் இல்லை. இந்த அன்பு தெய்வம் உனக்கு மட்டும் தாய் அல்ல. எனக்கும் கூடத்தான். தற்பொழுது இவரும் நம்முடன் வருவார். பின்னர் இவருக்கு தக்க ஏற்பாடு நான் செய்வேன்.'

அந்த மாதா ஆனந்தக் கண்ணீர்விட்டுக் கொண்டே மெய் மறந்து நின்றாள். சிறுவன் மாபெரும் யுத்த களத்தில் நூற்றக்கணக்கான எதிரிகளை வெட்டி வீழ்த்தி வெற்றிக் கொடி நாட்டுவது போல இன்பக் கனவில் ஈடுபட்டு நின்றாள்.

இவர்களைப் பார்த்து உளம் நெகிழ்ந்து புன்முறுவல் பூத்தான் எதிர்கால ஈழ மன்னன் சீவல்லபன்.

மூன்றாம் பாகம் முற்றும்

18

காமன் கதை

ஈழப்போர் நாட்கள் ஆக, ஆக மேன்மேலும் சூடேறிக் கொண்டு வந்தது. காலப்போக்கில் அது ஈழ மக்களின் புரட்சியாகவே வெடித்து விட்டது. போருக்கு மட்டுமல்ல, மக்கள் புரட்சிக்கும் சீவல்லபன் தலைமை தாங்கினான்.

அவனுடைய வலது கரமாக மகீதரன் செயல் பட்டான். வாய்ப்பு கிடைத்த கொஞ்ச காலத்திலேயே மகீதரன் போரில் ஈடற்ற சிறந்த தளபதியாக விளங்கினான். இப்பொழுது போர் முனையில் சீவல்லபனுடைய பணி மிகவும் குறைந்து விட்டது இளம் வயதினனான மகீதரனே போர் முனையை கவனித்துக் கொண்டு வந்தான். அவன் எதிரிபடையினருடைய தலைகளைப் பந்தாடினான். வெகு விரைவில் சீவல்லபனுக்கு அடுத்த இடத்தை அவன் பெற்று விட்டான். போர் வீரர்களும் அந்த இளைஞரைத் தங்களுடைய தலைவனாக மதித்தார்கள். அவன் இட்ட கட்டளையை ஏற்றுச் செயல்பட்டார்கள். சீவல்லபனைவிட சிறந்த போர்வீரன் மகீதரன் என்ற உண்மை பல சமயங்களில் எண்பிக்கப்பட்டது. அவன் குறைந்த வயதினனாயிருந்தும் கூட நடை, உடை, பாவனை, வேகம், மிடுக்கு முதலியவற்றில் பெரும் போர் தளபதி எனத் திகழ்ந்தான்.

அவனிடம் போர்முனைப் பொறுப்புகளை ஒப்படைத்த சீவல்லபன் ஆங்காங்கு சென்று மக்களைத் திரட்டினான். அவர்களை புரட்சியில் ஈடுபடுத்தினான். இரு முனைகளிலும் தன்னைத் தாக்கிய எதிரியினுடைய அணியை எதிர்த்து நிற்க இயலாமல் பராக்கிரமபாகு தவித்தான்.

சீவல்லபனுடைய படைகள் மகீதரனுடைய தலைமையில் வெகு எளிதில் முன்னேறிக் கொண்டு வந்தன. ஊரத்துரை, வல்லிகாமம், மட்டிவாழ் முதலிய நகரங்களில் பெரும் போர்கள்

நடைபெற்றன. இறுதியில் வெற்றிக் கொடி நாட்டிய சீவல்லபனுடைய படைகள் அந்நகரங்களைக் கைப்பற்றி விட்டன. புலைச்சேரி, மாதோட்டம் அழிந்தன. அங்கெல்லாம் எதிர்த்து நின்ற ஈழப்படைகள் எமனுலகிற்கு அனுப்பட்டன.

பராக்கிரமபாகுவினுடைய அணியைச் சேர்ந்த பல தளபதிகள் யானைப் படைகளுடன் சீவல்லபனின் பாதங்களில் மண்டியிட்டார்கள். சீவல்லபன் வெகு காலமாக தன்னுடைய மாமன்மீது கொண்டிருந்த சினம் முழுவதையும் தீர்த்துக் கொண்டான். பல ஈழத் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். எஞ்சியோர் சிறை பிடிக்கப்பட்டார்கள். ஈழ மண்டலத்தின் கீழ்மேல் இருபது காதங்களுக்கு மேலாகவும் தென்வடல் முப்பது காதங்களுக்கு மேலாகவும் சீவல்லபனால் அழிக்கப்பட்டன.

"ஈழத்தானினவாய் இவ்வூர்களில் நின்ற ஆணைகளும்,
கைக்கொண்டு ஈழமண்டலத்தில் கீழ்மேல்
இருபதன் காதம்
மேற்படவும், தென்வடல் முப்பதின் காதம்
மேற்படவும் அழித்து"

என இதனை திருவாலங்காட்டு கல்வெட்டு விவரிக்கிறது.

எஞ்சிய ஈழமும் வெகுவிரைவில் சீவல்லபனுடைய காலடிக்கு வந்திருக்கும். அவன் வெற்றிக் கொடியை நாட்டி இருப்பான்.

ஆனால் எதிர்பாராதவிதமாக சோழ மன்னரிடமிருந்து ஒரு ஓலை வந்தது. போரை முடித்துக் கொண்டு உடனே புறப்பட்டு வருமாறு அவர் தீட்டி இருந்தார். எனவே சீவல்லபன் அத்துடன் போருக்கு முற்றுப்புள்ளி வைத்தான். மகீதரன் உடன்வர வெற்றி வீரனாக தமிழகத்திற்குத் திரும்பினான். ஏராளமான யானை களையும், காலாட்படைகளையும், பல யுத்த தளவாடங்களையும் உடன் கொண்டு சென்றான். அவைகள் அத்தனையும் சோழ நாட்டுக் கோமகனிடம் சமர்ப்பித்தான். சோழ படைபலம் மேலும் பெருகியது. இந்த வெற்றியை சோழ நாடு வெகு சிறப்பாக கொண்டாடியது. சீவல்லபனுடைய ஆற்றலை நாடே போற்றியது ஈழத்தில் சீவல்லபன் கண்டெடுத்த இளம் வீரன் மகீதரன் புகழ் சோணாடெங்கும் பரவியது. அவனுடைய ஆற்றலை அறிந்த மன்னர் அளவற்ற மகிழ்ச்சியுற்றார். அவனை சிறப்பித்தார். சோழநாட்டு தளபதிகளில் மகீதரனும் ஒருவனாகி விட்டான்.

ஈழ மன்னன் பராக்கிரமபாகுவினுடைய நிலை பரிதாபத்திற்குரியதாகிவிட்டது. தான் பெற்ற படுதோல்விகளை நினைத்து மிகவும் வேதனைப்பட்டான். போரில் கைவிட்ட பகுதிகளை இனி மீட்க முடியும் என்ற நம்பிக்கையை இழந்து விட்டான். ஈழ நாடு முழுவதையும் ஆண்ட அவன் இப்பொழுது ஒரு பகுதிக்கு மட்டுமே அரசனாக இருந்தான். இது அவனுடைய வேதனையைப் பெருக்கியது. நாட்டு மக்களின்பால் நம்பிக்கை இழந்து விட்டான். எனவே ஆட்சியை நடத்துவதே கடினமாக இருந்தது. ஏக்கம் மிகுந்து துன்பப்பட்டான்.

அது மட்டுமல்ல. சீவல்லபனுடைய படைகள் வெற்றி முகத்தில் இருக்கும்போது திடீரென போர் நின்று விட்டது. அவன் படைகளுடன் சோழ நாட்டிற்குத் திரும்பினான். ஏன்? இதற்கு என்ன காரணம் என நினைத்து, நினைத்து ஏங்கினான் பராக்கிரமபாகு. இது அவனுடைய அச்சத்தை மேலும் அதிகமாக்கியது. இதில் ஏதோ சூது இருக்குமோ என ஐயுற்றான். மீண்டும் எந்த நேரத்திலும் பெரும் படையுடன் சீவல்லபன் வருவான் என்று எண்ணி உறக்கமின்றித் தவித்தான்.

ஏராளமான யானைகளும், எண்ணற்ற படை வீரர்களும் போரில் பலியாகி விட்டார்கள். போரில் பலியாகி இருப்பினும் ஓரளவிற்கு ஆறுதல் அடைய் முடியும். ஆனால் அவற்றில் பெரும்பகுதி எதிரிகளான சோழர்களிடம் போய் சேர்ந்து விட்டன. பராக்கிரமபாகு வளர்த்த யானைகள் நாளை அவனுடைய அரண்மனையையே தாக்கப் போகின்றன. ஒரு காலத்தில் அதே ஈழத்திற்கு வேந்தனாக இருந்த இராவணன் ஈரேழு உலகங்களையும் கதிகலங்க ஆட்டி வைத்தான். முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய பெருந்தவமும், முதல்வன் முன்நாள், எக்கோடியாராலும் வெல்லப்படாய் என கொடுத்த வரமும், ஏனைத்திக்கோடு உலகு அனைத்தும், செருக்கடந்த புகவலியும்? பெற்றிருந்த அவனுக்கு இறுதிக் காலம் வந்துவிட்டது. அப்பொழுது மானிடனான இராகவனைக் கண்டு அஞ்சி நடுங்கினான் அதே நிலைதான் இன்று ஈழ வேந்தன் பராக்கிரமபாகுவிற்கு வந்து விட்டது. அவன் சீவல்லபனுடைய பெயரைக் கேட்டாலேயே அஞ்சி நடுங்கினான். தலைசிறந்த தளபதிகளெல்லாம் பிணமாகி விட்டார்கள். தலைநகரையும் காப்பாற்ற வலுவின்றித் தவித்தான்.

சோழ சேனாபதி வேதவனம் பல்லவராயர் தாமாகவே வலியவந்து சிக்கிக் கொண்டார். பொறியில் மாட்டிய எலியை

போல ஈழ மன்னனிடம் மாட்டிக் கொண்டார். அப்பொழுது அவரைக் கொன்று போட்டிருந்தால் இன்று நிலைமை தலை கீழாக இருக்கும். சோழ மன்னன் நாதியற்றுப் போயிருப்பான். சோழ நாட்டில் புகுந்து விளையாடி இருக்கலாம். சோழ நாடே இன்று ஈழ மண்டலத்தின் ஒரு பகுதியாக இருக்கும். அந்தப் பொன்னான வாய்ப்பு போய்விட்டது. கிடைத்தற்கரிய அவ்வாய்ப்பு போய் விட்டது.

அதற்கு யார் காரணம்? ஈழ மன்னன் தன்னுடைய உயிரினும் மேலாக ஓம்பி வளர்த்த அருமைப் புதல்வி சங்கவை! காதலாம், காதல்! சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதியைத் தந்திரமாக வெளியேறச் செய்து விட்டாள். அதனை அறிந்த போது ஈழ வேந்தனுக்கு ஏற்பட்ட கோபத்திற்கு எல்லையே இல்லை. அவள்மீது வெஞ்சினம் கொண்டு துடித்தான். அவள் உணர்வு இழந்து பிணம் போல தரையில் விழும் வரை அடித்து நொறுக்கினான். அந்நிலையிலும் அவன் அவளை வாளா விடவில்லை. அப்பொழுது திருமாறனுடைய ஆண் உடையை தரித்துக்கொண்டு இருந்த அவளை காணக் காண அவன் சினம் வெடித்தது. இனி அடித்தால் உயிர்போய் விடும் என்ற நிலையில் அவளை பாதாளச் சிறையில் அடைத்தான்.

சங்கவை மயக்கம் தெளிந்து பழைய நிலைக்கு வந்து விட்டாள். ஆயினும் அரசன் அவளை பாதாளச் சிறையிலிருந்து விடுதலை செய்யவில்லை. ஏக புதல்வியான அவளை அவன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. தோல்விகள் என்ற வெப்பம் அவன் உள்ளத்திலிருந்த பாச ஊற்றை உறிஞ்சி விட்டது. சிறையிலிருந்த அவளுக்கு உணவுகூட சரியாகக் கொடுக்கவில்லை.

போரில் தோல்வி என்ற செய்தி நாளுக்கு ஒன்றாக ஈழமன்னுடைய செவிகளில் விழுந்து கொண்டு இருந்தது. அச்செய்தியை கேட்கும் போதெல்லாம் அவனுடைய கோபம் உச்சியில் ஏறும். பாதாளச் சிறைக்கு விரைந்து ஓடுவான். அந்த தோல்விகளுக்கு காரணமான புதல்வியை கையில் வலுவிருக்கும் வரை சாட்டையால் அடித்து நொறுக்குவான். அவள் அம்மா, அம்மா எனக் கதறுவாள். மூர்ச்சித்து தரையில் சாய்வாள். பின்னர்தான் அவனுடைய மிருகவெறி அடங்கும். அவ்வப்போது அவனுடைய மிருகவெறியை அடக்க சங்கவை ஒரு கருவியாகி விட்டாள். இது ஒரு அன்றாட நிகழ்ச்சி.

ஒரு நாள் தோல்வி செய்தியைக் கேட்டு வெறி கொண்ட மன்னன் சாட்டையுடன் சிறையை நோக்கி நடந்தான். அவன்

கண்ட தோற்றம்! அவன் அன்பு மகள் துணிகளை கிழித்து எறிந்து விட்டு நிர்வாணமாக நடனமாடிக் கொண்டு இருந்தாள் வேந்தனைக் கண்டவுடன் பலமாக சிரித்துக் கொண்டே அவனை நெருங்கிவந்தாள். 'அன்புள்ள அப்பா வருக, சாட்டை அடி தருக' என இரு கரங்களையும் நீட்டி அவனை வரவேற்றாள். அவன் திடுக்கிட்டான் அவளைப் பார்க்க சகிக்காமல் தலையை திருப்பிக் கொண்டான்.

அந்தோ பரிதாபம்! அந்தக் காதல் தெய்வத்திற்கு சித்தம் கலங்கி விட்டது. பித்துப் பிடித்தவளானாள். அவனுடைய கோபம் பறந்து விட்டது. மகளுடைய நிலைக்காக மனம் துடித்தான். அவளை விடுதலை செய்து விட்டான். பழைய பாசம் மீண்டும் பீறிட்டுக் கொண்டு வந்தது. அரண்மனையில் தக்க காவலுடன் அவளை ஓர் அறையில் அடைத்து வைத்தான். தலை சிறந்த மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சை செய்து பார்த்தான். பயன் ஏதும் அளிக்கவில்லை. அவன் தன்னுடைய அன்புச் செல்வத்தைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் விட்டுக் கதறினான். கண் கெட்டபின்னர் சூரிய நமஸ்காரம் பக்தியோடு செய்தான்.

ஈழ மன்னனுக்கு அரசு வாழ்வு நரகமாகி விட்டது. மன நிம்மதி இழந்து தவித்தான். யுத்த முனையிலும் தோல்விக்கு மேல் தோல்வி. அரண்மனையிலோ புத்தி பேதலித்த புதல்வி. இவைகளை எல்லாம் கண்டு அவன் சித்தம் கலங்கினான். தனக்கும் உண்மையிலேயே பித்துப் பிடித்து விட்டால் எவ்வளவோ நன்றாக இருக்கும் என விரக்தியோடு கற்பனை செய்தான்.

அந்த நிலையில் அவனுக்கு இருந்த ஒரே ஒரு வழிகாட்டி கோதைதான். அந்த விரக்தி நிலையிலும் அவன் அந்த அழகு தெய்வத்தை ஆராதிக்கத் தவறவில்லை. அவள் உண்மையிலேயே தனக்கு உதவ வந்த உத்தமி என மனப்பூர்வமாக நம்பினான். கோதை, கோதை என்று அவளைச் சுற்றி அலைந்தான். துவகத்திலேயே அவள் கூறியதைக் கேட்டிருந்தால் இன்று இக்கதி வந்திருக்காது என்று கலங்கினான். உண்மையில் அவளை உய்விக்க வந்தவளை நம்பாமல், அவனை ஒழிக்க வந்த பாவி திருமாறனை நம்பியது எவ்வளவு பெரிய கொடுமை! அதுதான் அத்தனை தீமைகளுக்கு வழி வகுத்த மாதிரி ஆகிவிட்டது.

கோதை என்றும்போல எதனையும் பொருட்படுத்த வில்லை, அவள் தன்னுடைய ஆற்றலின் விளைவாக அரண் மனையில் ஈடற்ற செல்வாக்கு பெற்றுவிட்டாள். அவள் காலால்

இட்ட வேலையை மன்னன் தலையால் செய்தான். இதனை அறிந்த அரச அலுவலர்கள் அனைவரும் அவளை ஒரு இராணிக்குரிய மரியாதையுடன் நடத்தினார்கள்.

அவள் எப்பொழுதும் தனித்து இருப்பதையே விரும்பினாள். இப்பொழுது வேந்தனுடைய அரண்மனையை விட்டு வெளியேறி விட்டாள். அவனுடைய மாளிகைக்கு அடுத்திருந்த தனி மாளிகையில் அவள் மட்டும் தனியாக வசித்து வந்தாள். அவளுடைய உலகம் தனியானது. அவளைப் பார்க்க அன்றாடம் பலர் வருவார்கள். போவார்கள். அந்த மாளிகையில் பல சதிகள் உருவாயின. பல உருப்படாமல் போயின. அவளை யாருமே எந்த வினாவும் கேட்க இயலாது. அப்படி கேட்க அவள் அனுமதிக்கவில்லை. அவள் தன் போக்கிலேயே செயல் பட்டாள்.

கோதை தேவை இல்லாமல் மன்னனையும் பார்க்க மாட்டாள். ஏன், தேவையற்று மதிக்கவும் மாட்டாள். மோக வெறி கொண்ட ஆண்களை உதறித் தள்ளினால்தான் ஒட்டிக் கொண்டு வருவார்கள் என்பதை அறிந்தவள் அவள். எனவே அளவோடு ஒதுங்கி இருந்தே தன்னுடைய கவர்ச்சியைக் காத்துக் கொண்டாள்.

பெரும்பாலும் மன்னன்தான் அவளுடைய பேட்டிக்கு வருவான். ஒரு நாளைக்கு அவளைப் பார்க்காது போனால் அவனுடைய தலை வெடித்து விடும். கோதை எட்டி நிற்க, நிற்க மன்னனுடைய மோகம் பெருகிக் கொண்டே வந்தது. அது அவனை வெந்தணல் என வாட்டியது. கோடைகாலைத்தில் பூமி என்னதான் வறண்டு இருந்தாலும் பொதுவாக மேகங்கள் ஒரு சொட்டு நீரை பூமியின்மீது உதிர்ப்பதில்லை. அதுபோல மன்னனுடைய மோகவெறியை தணிக்க கோதை நினைத்ததே இல்லை.

ஒருநாள் வழக்கப்படி அவளுடைய மாளிகைக்கு மன்னன் சென்றான். அவள் மாளிகையின் முகப்பு அறையின் மத்தியில் இருந்த ஒரு ஆசனத்தில அமர்ந்தவாறு ஏதோ ஒரு ஓலையைப் படித்துக் கொண்டு இருந்தாள். அவளுடைய முகம் இருண்டு இருந்தது. அரசர் வருவதை அவள் கவனிக்கவில்லை. உண்மையில் அவள் அவரை கவனிக்கவில்லையா, அல்லது கவனிக்காதது போல நடித்தாளா? அரசன் வாயிற் படிக்குள் புகும்போதே கனைத்து தன்னுடைய வருகையை அறிவித்தான்.

கோதை ஓலையின்மீது இருந்த பார்வையை மேலே திருப்பினாள். ஈழ வேந்தன் உள்ளே வந்து கொண்டு இருந்தான். அவள் திடுக்கிட்டவளைப் போல எழுந்து நின்றாள்.

'வரவேண்டும், வரவேண்டும் அரசே!'

முகமன் கூறி அவள் அவனை வரவேற்றாள். துன்பத்தின் சாயல் படர்ந்திருந்த அவளுடைய முகம் அரசனைக் கண்டவுடன் ஆதவனைக் கண்ட தாமரை ஆயிற்று. ஆதவனைக் கண்ட தாமரை மலருவது இயற்கை. ஆனால் கோதையினுடைய முகமலர்ச்சி செயற்கை. மன்னன் கூறினான்:

'கோதை, உன்னுடைய சந்திரவதனத்தைப் பார்க்கும் போதுதான் என்னுடைய கவலைகள் பறக்கின்றன. புதுத் தெம்பு பெறுகிறேன். என்னுடைய உடலெங்கும் புத்துணர்வு பரவுகிறது.' பற்களை இளித்துக்கொண்டே அவளை நெருங்கி வந்தான். அவள் கூறினாள்:

அரசே தாங்கள் எனக்கு அளிக்கும் சிறப்புகளுக்காக மெத்த நன்றி. ஆனால் தாங்கள் குறிப்பிட்ட கவலைகள் என்ற சொல்லை நான் நஞ்சினும் மேலாக வெறுக்கிறேன். ஏது கவலைகள்? கவலைகள் என்றால் என்ன? அவை எங்கு இருக்கின்றன? அவைகள் வரக்காரணம்?"

'பெண்ணே, கவலைகளுக்கு காரணம் கேட்கிறாயா? புதிதாக நான் என்ன சொல்லப்போகிறேன்? போரில் நான் பெற்ற தோல்விகள் என்னை வாட்டி வதைக்கின்றன. உன்னுடைய ஆலோசனையை துவக்கத்திலேயே கேளாது உன்னை சிறையில் அடைத்தேன். அதற்கு தண்டனைகளைப் பெற்றுவிட்டேன்.'

'அரசே, நடந்தது நடந்துவிட்டது. இறந்த காலம் இனி வராது. எதிர்காலத்தைப் பற்றி சிந்தனை செய்யுங்கள். இதை எத்தனை முறை நான் எடுத்துச் சொல்லுவது? தோல்வி என்பது கோழையின் சொத்து. அதுவே வீரனுக்கு வேகமாக செயல்பட உந்தும் சக்தி. மனிதன் உயிர் உள்ளவரை செயல்பட கடமைப் பட்டிருக்கிறான். கடமை ஆற்றும்போது வெற்றியும் வரலாம். தோல்வியும் வரலாம். அவை இரண்டும் மனிதனுடைய நீண்ட பயணத்தில் ஆங்காங்கு தென்படும் தூரத்தைக் காட்டும் கற்கள். அவை முடிந்த நிலை அல்ல. இடை நிலை. அதனையும் தாண்டி அப்பால் நடக்க வேண்டியதே. வெற்றி காணும்போது அதனை நீடித்துக்கொள்ள உழைக்க வேண்டும். தோல்வி காணும்போது

அதனை வெற்றியாகமாற்ற உழைக்க வேண்டும். உழைப்பின்மீது நம்பிக்கை கொண்டு செயல்பட்டு வெற்றி காண்பவனே மனிதன். எனக்கு அப்படிப்பட்ட மனிதர்களைத் தான் பிடிக்கும். தன்னம்பிக்கை அற்று துவண்டு விழும் மனித உருவில் உள்ள கோழைகளைப் பிடிக்காது.'

'பெண்ணே, வெற்றி, தோல்வி ஆகியவைகளைப் பற்றிய விளக்கங்களை விடு. என்னை உனக்குப் பிடிக்கிறதா? அதற்கு மறுமொழி சொல், அது போதும்.'

'பிடிக்கிறது, மனிதராக இருந்தால்!'

'கோதை உன்னுடைய மனநிறைவுக்காகவாவது நான் எப்பொழுதும் மனிதனாக இருக்கவே விரும்புகிறேன். ஆனால் ஒன்று சென்னால் கோபித்துக் கொள்ள மாட்டாயே?'

'சொல்லுங்கள், கோமகனே! என்னிடம் சொல்லக் கூட தயக்கம் தேவையா? நான் என்ன அந்நியப் பெண்ணா?'

'கோதை, என்றுமே நீ எனக்கு அந்நியப் பெண் அல்ல. நீ என்னுடைய இதயராணி. சற்று நான் சொல்லுவதைக் கேள். பொறுமையாகக் கேள்.'

'சொல்லுங்கள்,'

'பெண்ணே, நான் இந்த நாட்டை வெகுகாலம் ஆண்டு அனுபவித்துவிட்டேன். அரசு சுகம் அனைத்தையும் கண்டு விட்டேன். நீயும் ஒரு மன்னனுடைய புதல்வி. அரச சுகம் கண்டுவிட்டாய், அந்தச் சோழனைத் தோற்கடிக்க வேண்டுமென்று நீயும் விரும்பினாய், நானும் விரும்பினேன். அது இயலாமல் போயிற்று. விதி நம்மை சதி செய்துவிட்டது. அதனைப் பற்றியே நினைத்து ஏங்கிக் கொண்டிருப்பதில் என்ன பயன்? இனியாவது நாம் வாழ வேண்டாமா? நமக்காக வாழுவோம். இந்த அரசு, அதன் கட்டுக்காவல்கள், சம்பிரதாயப் பழக்கங்கள் முதலிய அனைத்தையும் நான் வெறுத்து விட்டேன். இவை அனைத்திற்கும் ஒரு முழுக்கு போட்டுவிட்டு ஒரு புதிய உலகிற்குச் செல்வோம். வெகு தூரத்தில் உள்ள மனித வர்க்கமே வாழாத ஒரு தீவிற்குச் செல்வோம். அத்தீவிலே கிறிஸ்தவர்கள் சொல்லும் ஆதாம் ஏவாளைப் போல நாம் இருவரும் முதல் மனிதர்களாக வாழ்வோம். நாம் அங்கு எப்படியும் வாழலாம். எந்தக் கட்டுப்பாடும் இருக்கக் கூடாது. வேண்டுமானால்

உடைகளை உடுக்கலாம். இன்றேல் கழற்றி எறியலாம். எனக்காக நீ, உனக்காக நான். இடையில் யாருமே இருக்கக்கூடாது. என்னுடைய அழகு இராணியான உன்னை என்னுடைய இதயத்தில் கோயில் கட்டிப்பூசிப்பேன். இறைவன் உனக்கு அளித்த அழகு முழுவதையும் நானே அள்ளி அள்ளிப் பருகுவேன். கோதை உன்னை வேறு யாராவது ஒருவன் கண்ணால் காணும் போது என்னுடைய மனது எப்படி துடிக்கிறது தெரியுமா? என்னால் பொறுக்க முடிவதில்லை. அவனை வெட்டிப் போட என் உள்ளம் துடிக்கிறது. என்னை அன்றி உன்னை யாரும் கண்ணால்கூட காணக் கூடாது. மனதாலும் நினைக்கக் கூடாது.

'சிவபெருமான் மன்மதனை எரித்து விட்டார். ஆனால் மன்மதனுடைய மனைவி இரதிதேவி சிவபெருமானிடம் வேண்டி ஒரு வரம் பெற்றாள். மன்மதன் உலகிற்கு தெரியாமல் போனாலும், என் கண்களுக்கு மட்டும் தெரிய வேண்டும் என்பது அவள் பெற்ற வரம் என்று இந்துக்கள் சொல்லக் கேட்டு இருக்கிறேன். எனக்கு எதிரில் இறைவன் தென்பட்டால் அதே வரத்தைத்தான் நானும் கேட்பேன். கோதை மற்றவர்களுடைய கண்களுக்குத் தெரியக் கூடாது. எனக்கு மட்டுமே அவள் தெரியவேண்டும் என்று கேட்பேன்.' மூச்சைப் பிடித்துக் கொண்டே மன்னன் ஒருவாறு பேசி முடித்தான். அவள் முகம் வாடிவிட்டது.

'அரசே, தங்களுடைய நோக்கம் எனக்கு நன்றாகத் தெரிகிறது. நானும் மன்மதனைப் போல எரிக்கப்பட வேண்டும் என்கிறீர்கள் அல்லவா? நான் உயிரோடு இருக்கக் கூடாதா? நான் என்ன பிழை செய்தேன்?' அவள் கண்களிலிருந்து பொல பொலவென்று நீர் கொட்டியது. அதனைப் பார்த்த மன்னன் துடித்து விட்டான். பதறியவாறு மறுமொழி கூறினாள்:

'கோதை, என்னைத் தவறாகப் புரிந்து கொண்டாய். ஒரு உவமைக்காக நான் மன்மதன் கதையைக் கூறினேன். நீ சாக வேண்டுமென்று நான் கனவிலும் கருதுவேனா? நீ இல்லாமல் நான் ஒரு நொடிப்பொழுதுகூட உயிர்வாழ முடியுமா? அந்த இரதிதேவி கொடுமைக்காரி. அவள் அழகானவளாக இருக்கலாம். ஆனால் அவள் உன்னுடைய அழகிற்கு நிகராக முடியாது. மன்மதன் இறந்தபோது அவள் இறக்கவில்லை. ஆனால் நான் அப்படியல்ல. எனக்கு என்று தனியாக என்ன

இருக்கிறது? என்னுடைய உடல், பொருள், ஆவி அனைத்தும் நீயே.'

'அதுதான் தெரிகிறதே.' என்று கூறிய கோதை கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

'உனக்கு என்ன தெரிகிறது கோதை? என்னுடைய அன்பை அறிவாயா? காதல் துடிப்பைக் காண்கிறாயா? என்னுடைய நெஞ்சை தொட்டுப்பார்.' அவன் அவளுடைய வலது கரத்தைப் பிடித்து இழுத்து தன்னுடைய நெஞ்சோடு சேர்த்து வைத்துக் கொண்டான். ஆனால் இது ஒரு நொடிப் பொழுதுதான் அவள் அப்பால் விலகி நின்றாள்.

'அரசே, தங்களுடைய நெஞ்சைத் தொட்டுப் பார்த்ததில் ஒன்றைத் தெரிந்து கொண்டேன்.'

'சொல், அன்பே!'

'சொன்னால் கோபிக்க மாட்டீர்களே?'

'உன்மீது எனக்கு கோபம் வருமா? விண்மதியின்மீது கடல் அலைக்கு கோபம் வருமா?'

'தங்களுடைய இதயத்தில் நானும் சாக்கடையைக் கண்டேன்.'

'என்ன சொன்னாய் கோதை?' அவனுடைய முகம் வியர்த்தது. வாடிய முகத்தினனாய் அவளை உற்றுப் பார்த்தான்.

'புரவலனே, ஈழநாடு பற்றி எரிகிறது. எதிரி பெரும்படையோடு வந்து இன்றோ, நாளையோ மீண்டும் தாக்கலாம். கொழும்பு நகரம் என்று எதிரியின் வயமாகும் என மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். அத்தகைய பாய்ந்து வரும் எதிரியை வீழ்த்தத் திட்டம் வகுக்காமல் காலை நேரத்தில் வந்து காமபரணி பாடும் காவலனுடைய இதயத்தில் என்ன இருக்கும்? அதனைச் சாக்கடை என்று சொல்லாமல் வேறு எப்படி சொல்ல முடியும்? இந்த ஈழ நாட்டை இதுவரை எத்தனையோ அரசர்கள் ஆண்டு இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை மன்னர்களும் பெறாத சிறப்புப் பெயரான 'பெரியான்' என்ற பட்டப் பெயரை தாங்கள் பெற்றிருக்கிறீர்கள். ஈழ வரலாற்றில் யாருமே புரியாத சாதனையைப் புரிந்திருக்கிறீர்கள். தமிழக மன்னர்களுக்கு நிகராக தாங்கள் முதன்முதலாக ஈழத்திற்கு கடற்படை நிறுவினீர்கள்.

அத்தகைய சிறப்புகளுக்கெல்லாம் சொந்தக்காரர் என கேள்வியுற்றதால்தான் தங்களுடைய நட்பை நாடி இங்கு வந்தேன். ஆனால் பெருத்த ஏமாற்றம் அடைந்ததுதான் நான் கண்ட பலன்.' உண்மையிலேயே அவளுடைய வார்த்தைகள் வேதனையோடு வெளி வந்தன. மேலே பேச முடியாமல் திணறினாள்.

'கோதை, இதெல்லாம் பழைய கதை. எனக்கு தெரியாதது அல்ல. எதற்கும் ஓர் எல்லை உண்டு. அரசைப் பற்றி நாம் கவனித்துக் கொண்டே இருந்தால் இப்படியே நாட்கள் ஓட வேண்டியதுதான். உன்னுடைய அழகு வீணாகிக் கொண்டே இருக்கவேண்டியதுதான். இருவரும் கிழவர்களாகி மடிய வேண்டியதுதான்.'

'அரசே, என்னுடைய அழகைப் பற்றி துதிபாடுவதை பின்னர் வைத்துக் கொள்ளலாம். இந்த உடல் அழகு நிலையானது அல்ல. நாளை அல்லது என்றோ ஒரு நாள் இது அழியக்கூடியது. இன்று நான் எழில் இராணி. ஆனால் சில ஆண்டுகளில் பொக்கை வாயுடன் கையில் கோலை ஏந்தி தாள்ளாடி, தள்ளாடி நடக்கும் கிழவி! இது இயற்கையின் நியதி. ஆனால் இலட்சியம் என்றுமே வாழ முடியும். அது என்றுமே இளமையானது. அதற்காகவே நான் வாழ்கிறேன். வேறு எதற்காகவும் அல்ல. அந்தப் புனிதப் பணிக்கு தாங்கள் உதவுவதாயின் தங்களுடன் இருப்பேன். இன்றேல் இப்பொழுதே, என்னுடைய வழியில் புறப்படுகிறேன். நாம் நண்பர்களாகவே பிரிவோம்.' உணர்ச்சி வசப்பட்டு பேசிய கோதை அழுதுவிட்டாள் மன்னனும் கண்ணீர்விட்ட வண்ணம் கூறினான்.

'கோதை, நீ இல்லாது எனக்கு ஒரு வாழ்வா? உன்னைப் பிரிந்தால் அதே நொடியில் நான் பிணமாவேன் என்பதை எத்தனைமுறை உனக்கு எடுத்துரைப்பது?'

'மன்னவா, நான் சபலத்தை வெறுக்கிறேன். நான் முற்றும் துறந்த துறவி அல்ல. நானும் மற்றவர்களைப் போல உணர்ச்சி களால் ஆட்கொள்ளப்பட்ட பெண்தான். எனக்கும் காதல் உணர்வு உண்டு. ஒரு காலத்தில் வீரபாண்டியனை உளமாற விரும்பினேன். ஆனால் அவரிடமும் ஒரு எல்லைக்கப்பால் சென்றதே இல்லை. என்னுடைய சபலங்கள் அனைத்தையும் இலட்சிய வேள்வியில் ஆகுதியாகப் படைத்துவிட்டேன்.'

'பெண்ணே, அப்படியானால் என்றுமே உனக்கு என்பால் கருணை பிறக்காதா? நான் இலவு காத்த கிளிதானா? என்னை மனப்பூர்வமாக நேசிப்பதாகக் கூறியதெல்லாம் வெறும் நடிப்புதானா? உன்னையே நினைத்து, நினைத்து நான் உயிர்விட வேண்டுமா? உன்னுடைய கருணைக் கண்கள் என்னைக் காணாதா?' வேந்தன் கண்ணீர் விட்டான். அவனுடைய உணர்ச்சி வெள்ளம் கண்ணீர் வெள்ளமாக உருக்கொண்டு கண்களின் மூலமாக வெளியேறியது.

'அரசே, வருந்தாதீர்கள் நான் பட்ட மரம் அல்ல. என்னுடைய இதயத்தில் காதல் இல்லாது இல்லை. நானும் வாழத்தான் விரும்புகிறேன். மற்றப் பெண்களைப் போல பிள்ளை களை பெற்றெடுத்து கொஞ்சி குலாவத்தான் விரும்புகிறேன். ஆனால் நாம் எடுத்துக் கொண்ட வேலை முடியும் வரை எனக்கு வாழ்வு இல்லை என சொல்லத்தான் வந்தேன். இலட்சியம் நிறைவேறினால் அதன் பின்னர் மற்றப் பெண்களைப் போல காதலன் ஒருவனைக் கைபிடித்து, அவனுடைய காரியங்கள் யாவினும் கை கொடுத்து வாழுவேன். இலட்சியம் எட்டா விட்டால் அதற்கான போரிலேயே உயிர் விடுவேன்.'

'பெண்ணே, அவ்வளவுதானா?'

'அரசே, தங்களுடைய உள்ளத்தை நான் உணருகிறேன். நான் ஒரு பேதைப் பெண். இன்று தங்களுடைய நிழலில் அண்டி வாழும் பெண். என்னை எப்படியும் ஆள தங்களால் இயலும். விருப்பம் இருப்பின் என்னுடைய கருத்தைக் கேளாமலேயே தங்களுடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள். என்னைக் கற்பழித்து இன்பம் காணுங்கள். இதோ தங்களுக்கு வேண்டிய உடல்.' அவள் அவனை உற்றுப் பார்த்தபடியே நெருங்கினாள். அவனுடைய உடலின்மீது மோத விரைந்து சென்றாள். ஆனால் அவன் அப்பால் விலகிக் கொண்டு கூறினான்.

'கோதை, என்ன சொன்னாய்? நான் காமுகன்தான். பல பெண்களைப் துடிக்க, துடிக்கச் செய்து கற்பழித்தவன்தான். அவர்கள் கதறிக்கதறி ஓடும்போடு துரத்தித் துரத்திப் பிடித்து கற்பழித்த காமுகன்தான். ஆனால் உன்னைப் பொறுத்த வரை அந்த எண்ணம் எனக்கு வந்ததே இல்லை. உன்னுடைய பூரண விருப்பத்துடனேயே உன்னுடன் கூட விரும்புகிறேன்.'

'ஏன்?'

'நான் அழகை ஆராதிக்கத் தெரிந்தவன். இந்த மலரை இதயத்தில் வைத்து பூசிக்க விரும்புகிறேன். கசக்கிப் பிழிய என் மனம் இடம் தரவில்லை.'

'அது நான் செய்த பூர்வ புண்ணியம், அரசே!'

'அன்புக்கரசியே! உன்னுடைய மனம் இளகாதா? அடிக்கடி இலட்சியம், இலட்சியம் என்று பேசுகிறாயே, என்னதான் உன்னுடைய இலட்சியம்?'

'அரசே, அவை தெளிவானவை. முதலாவது சோழ வம்சத்தை கருவறுப்பது, இரண்டாவது இன்று திருமலையில் திருட்டுத்தனமாக வைக்கப்பட்டுள்ள திருமால் மூர்த்தத்தைக் கொண்டு போய் தில்லைக் கோயிலில் பிரதிஷ்டை செய்வது.'

'இது முடியுமா, கோதை?'

'ஏன் முடியாது? முடியாது என்பது கோழையின் வாதம். நான் கோழை அல்ல. கோதை! வீர மறவர் குலத்தில் பிறந்தவள். திருக்கோவிலூர் மலையமான் மகள் இலட்சியத்தை நிறைவேற்றிக் காட்டுவேன். இறைவன் எனக்கு அளித்திருக்கும் அழகை படை பலமாகக் கொண்டு நான் நடத்தும் கொள்கைப் போர் வெற்றி பெற்றே தீரும். என்னுடைய அழகில் இதுவரை மயங்காத ஆடவன் பிறந்ததில்லை. இனியும் பிறக்கப் போவதும் இல்லை. தாங்கள் எனக்கு துணை வர மறுத்தால் வேறு ஒரு இடம் நாடி துணை பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.'

'கோதை, அதனைத்தான் நீ சொல்லவே கூடாது என்று நான் பன்முறை சொல்லிவிட்டேன். போரிலும் நாம் தோற்று வருகிறோம். நம்முடைய திட்டங்கள் எல்லாம் குலைந்துவிட்டன. இந்நிலையில் மீண்டும், மீண்டும் இலட்சியம் என்று பேசிக்கொண்டே இருந்தால் அது எப்படி கைகூடும்? உன்னிடம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறாயா, சொல்.'

'சொல்லட்டுமா, அரசே! என்னைத் தாங்கள் மனப்பூர்வமாக நம்புகிறீர்களா?'

'உன்மீது உள்ள அன்பின் ஆணையாக.'

'அரசே, தாங்கள் என்பால் வைத்திருக்கும் அன்பை நான் அறிவேன். நான் வறண்ட பாலைவனம் அல்ல என்று முன்பே கூறினேன். என்னுடைய இதயத்திலும் அன்பு சுரக்கும். தங்களுடைய அன்பிற்கு பதில் அன்பு ஒரு நாளைக்குப் பொழிவேன். என்னுடைய இலட்சியம் வென்றவுடன் தங்களுடைய விருப்பம் போல நடப்பேன். வாய்ப்பு இருந்தும் என்னை கசக்கி முகர மறுத்த தங்களின் மேலான பண்பாடு என்றும் என்னுடைய இதயத்தை விட்டு அகலாது.'

'பெண்ணே, அதுபோதும். என்னுடைய இதயம் நிரம்பி விட்டது. புது தெம்பு பெற்றுவிட்டேன். நாம் இணைந்து வாழும் அந்த நாள் விரைவில் வரவேண்டும். அதற்கு தடையாக உள்ள உன்னுடைய இலட்சியங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். தற்பொழுது அதற்காக நீ என்ன திட்டம் வைத்திருக்கிறாய். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? எனக்கு ஆணையிடு.'

'அரசே, நான் சொல்லப் போகும் திட்டம் இனிமையானது அல்ல. மிகவும் கசப்பாகத்தான் இருக்கும். நான் அவைகளைக் கூறினால் என்மீது ஐயம் வரக்கூடாது.'

பகலவன் மேற்கில்தான் உதிக்கிறான் கிழக்கில் மறைகிறான் என்று நீ சொன்னாலும் உன்னை நான் சந்தேகிக்க மாட்டேன்.'

'சத்தியம் செய்து கொடுங்கள்'

'இது சத்தியம்.' மன்னன் அவளுடைய வலது கரத்தை தன்னுடைய வலது கரத்தால் தூக்கி இறுக்கிப் பிடித்துக் கொண்டே மகிழ்வோடு நின்றான்.

கோதை கரத்தை விடுவித்துக் கொண்டு, 'அருகில் வாருங்கள்' என அவனை அழைத்தாள். அவன் வெறி கொண்டு அவளை நெருங்கினான். அவனுடைய தலையை தனது இரு கரங்களாலும் அணைத்துப் பிடித்தாள். அவன் இன்பபுரிக்கே சென்று விட்டான்.

அவள் அவனுடைய காதருகில் தன்னுடைய அதரத்தைக் கொண்டு போனாள். அப்பொழுது அவளுடைய இதழ்கள் அவனுடைய செவியைத் தடவின. அவன் ஆனந்தக் கடலில் மூழ்கி திக்கு முக்காடினான்.

கோதையினுடைய இதழ்கள் மெதுவாகத் திறந்தன. மன்னனுடைய செவியில் வார்த்தைகள் விழுந்தன. அந்த வார்த்தைகளைக் கேட்ட அவனுடைய முகம் கறுத்து விட்டது. அதற்கு முன்பு அன்றலர்ந்த தாமரை போல மலர்ந்திருக்க அந்த முகம் திடீரென அனலில் போட்ட மலராக வாடி வதங்கி விட்டது.

ஆயினும் அவனையும் மீறி அவனுடைய வாய், 'அப்படியே, அப்படியே,' என்ற வார்த்தைகளை யந்திரம் போல ஒப்புவித்தது.

19

புதிய உறவு

குலசேகர பாண்டியன் பாண்டி நாட்டை சீறும், சிறப்பாக ஆண்டான். நாட்டில் குழப்பங்கள் இல்லை. குடி மக்கள் நிம்மதியாக வாழ்ந்தார்கள். சோழ நாட்டின் நட்பு பாண்டி நாட்டிற்குப் பேருதவியாக இருந்தது. அந்நாடு பொருளாதார மேம்பாடுகளைப் பெற தேவையான உதவிகள் அனைத்தையும் சோழ மன்னர் செய்தார். குலசேகரனை அரியணையில் அமர்த்தியதற்காக அம் மன்னனிடமிருந்து சோழநாடு எதனையும் எதிர்பார்க்கவில்லை. பாண்டி நாட்டு நிர்வாகத்தில் தலை யிட்டதே இல்லை.

போரில் தப்பி ஓடிய வீரபாண்டியன் வாளாவிருக்க வில்லை. தென் பாண்டி நாட்டில் தன்னுடைய உறைவிடத்தை அமைத்துக் கொண்டான். தலைமறைவாக வாழ்ந்தான் ஆங்காங்கு மாறுவேடத்தில் சென்று மக்களை சந்தித்தான். ஏற்கனவே அவனுக்கு ஆதரவாளர்கள் இருந்தார்கள். அவர்களைப் பயன்படுத்தி தனக்கு சாதகமாக படைகளைத் திரட்டினான்.

ஆயினும், வீரபாண்டியனுடைய செயல்கள் பாண்டி நாட்டு அரசைப் பெரிதாக பாதித்துவிடவில்லை. ஆங்காங்கு அரசுக்கு எதிராக சிறுசிறு புரட்சிகள் வெடித்தன. நாடு காவல் அதிகாரிகளே அப்புரட்சிகளை அடக்கிவிட்டார்கள்.

குலசேகர பாண்டியன் செய்நன்றி மறக்கவில்லை. அவ்வப்பொழுது ஆலோசனைகளுக்காக சோழ மன்னரை நாடினான். அவருடைய அறிவுரையைக் கேட்டு, அதற்கு ஏற்பவே செயல்பட்டான். சோழ, பாண்டிய நாட்டு நட்பு நாள்தோறும் வளர்ந்து கொண்டு வந்தது. தொடர்ந்து பகைமையும், அழுக்காறும் மண்டிக்கிடந்த அவ்விரு நாடுகளின் வரலாற்றில் அது ஒரு பொற் காலமாகத் திகழ்ந்தது.

இந்நிலையில் ஒருநாள் பாண்டி மன்னன் குலசேகரன் அரசு அவையைக் கூட்டி இருந்தான் பல்வேறு நாடு காவல்

அதிகாரிகளும், அமைச்சர்களும், வாரியத் தலைவர்களும், வணிக மண்டலத் தலைவர்களும், சேனைத் தலைவர்களும் சபைக்கு வருகை தந்து இருந்தார்கள்.

குலசேகர பாண்டியன் என்றுமே அழகுப்பிரியன். அன்று தன்னை சிறப்பாக அலங்கரித்துக் கொண்டு இருந்தான். மெல்லிய தங்கக் கம்பி இழைகளால் நெய்யப்பட்ட மார்பு சட்டையை அணிந்திருந்தான். தலையில் நவரத்தினங்கள் பதித்த தங்கக் கிரீடம் ஒளி விட்டது. கிரீடத்தின் முகப்பில் செங்கழுகின் இறகு செருகப்பட்டு இருந்தது.

அமைச்சர் தலைவர் பின்தொடர, காவலர்கள் கட்டியம் கூற மன்னன் சபைக்குள்ளே புகுந்தான். இரு பெண்கள் அவனுக்கு முன்னர் தங்கத் தட்டுகளில் நிரப்பி இருந்த மலர்களை எடுத்து தூவிக்கொண்டே சென்றார்கள். தரித்திருந்த தங்கசரிகை தகடி தரையில் புரள, அவன் மேலே நடந்தான். இடது கையில் வீர கங்கணம் பளபளத்தது. நெற்றியில் தீட்டி இருந்த திலகம் பளபளக்க சபைக்குள் புகுந்தான். சபையோர் எழுந்து நின்று சிரம் தாழ்த்தி வணங்கினார்கள்.

மன்னன் முகத்திலே புன்முறுவல் பூக்க ஆசனத்தின் அருகில் சென்றான். சபையோரைத் திரும்பிப் பார்த்து வணக்கம் செய்தான். அனைவரும் பக்தியோடு அவனை வணங்கினார்கள். அரசன் சிம்மாதனத்தில் அமர்ந்தான். சபையோர்களும் இருக்கைகளில் அமர்ந்தார்கள்.

விருது கூறுவோர் கைகளைக் கூப்பி மன்னனுடைய குலதெய்வத்தைப் பற்றிய பாடலை முணுமுணுத்தார்கள். பிறகு தொடர்ச்சியாக அவனுடைய முன்னோர்கள் புரிந்த வீரச் செயல்களைப் பற்றிப் பாடினார்கள். இறுதியாக குலசேகர பாண்டியனின் விருதுகளைப் பாடினார்கள். பின்னர் வணங்கி விட்டு வெளியேறினார்கள்.

மன்னன் சபையில் பல முக்கியமான அறிவிப்புகளை பிரகடனப்படுத்தினான். அவை முடிவுற்றதும், ஒரு யவனக் காவலன் பயபக்தியுடன் சற்று தொலைவில் வந்து நின்றான். மன்னன் அவனை அருகில் வருமாறு சைகை காட்டிப் பணித்தான். அவன் நெருங்கி வந்து ஏதோ கூறினான். மன்னன் அவனிடம் மறுமொழி கூறவே, காவலன் வெளியேறினான்.

வெளியில் சென்ற அந்த யவனக் காவலன் தன்னுடன் ஒருவனை அழைத்து வந்தான். புதிதாக வந்தவன் பக்தியோடு

அரசருக்கு வணக்கம் செய்தான். பின்னர் அவரை நெருங்கி ஒரு குடலை நீட்டினான். மன்னன் அதனை அலட்சியமாக வாங்கினான் குடலையை மூடியிருந்த பட்டுத்துணியை அகற்றிவிட்டுத் திறந்தான். அதிலிருந்து ஒரு ஓலையை வெளியில் எடுத்தான். சபையோர் அனைவரும் அரசனையே கூர்ந்து பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

மன்னன் ஓலையைப் படித்தான். அதனைப் படிக்கப் படிக்க அவனுடைய முகத்தில் ஒளி வீசியது. உதடுகள் முறுவலித்தன. கண்கள் சிரித்தன. கம்பீரமாக நிமிர்ந்து சிம்மானத்தில் அமர்ந்தான். பெருமையோடு சபையை நோட்டமிட்டான். தனக்குத்தானே சிரித்துக் கொண்டான். மன்னனுடைய திடீர் மாற்றத்திற்கான காரணத்தை அறியாது சபையோர் விழித்தார்கள். அவன் சபையைப் பார்த்து மீசையை முறுக்கியவாறு பெருமையோடு பேசினான்:

'எனது அருமை அமைச்சர் பெருமக்களே, சேனைத் தலைவர்களே, நாடுகாவல் அதிகாரிகளே! உங்கள் அனைவருக்கும் ஒரு நல்ல செய்தியைச் சொல்லப் போகிறேன். இன்று பாண்டி நாட்டு வரலாற்றில் ஒரு நன்னாள். நமக்கெல்லாம் பொன்னாள். கேளுங்கள் செய்தியை!

'வீராதி வீரரான ஈழ வேந்தவர் பராக்கிராமபாகு நம்முடைய நட்பை நாடி தூது அனுப்பி இருக்கிறார் பன்னெடுங்காலமாக பாண்டி நாட்டிற்கும், ஈழ நாட்டிற்கும் நிலவிய நட்பை நினைவுபடுத்தி எழுதி இருக்கிறார். என்னுடைய நட்பு வேண்டி இறைஞ்சி எழுதி இருக்கிறார். அது மட்டுமல்ல, தம்முடைய நட்பிற்கு அறிகுறியாக பரிசுகளையும் அனுப்பி இருக்கிறார்.*

'அவருக்கு நல்ல பாடம் கிடைத்து விட்டதாம். இதுவரை என்னைப் பகைத்துக் கொண்டு இருந்ததற்காக மிகுந்த வருத்தம் தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்.

'ஈழத்தின் நிகரற்ற மாமன்னர் அவர்களே நம்முடைய நட்பை வேண்டி பரிசுகள் அனுப்பி இருக்கிறார் என்றால், நம்முடைய ஆட்சியின் சிறப்பே சிறப்பு! நம்முடைய பெருமையே பெருமை!'

*வட திருவேலங்காட்டு கல்வெட்டு.

குலசேகரபாண்டியன் தனக்குத்தானே நற்சான்றுகளை வாரிவழங்கிக் கொண்டான். தன்னைப் பற்றித் தானே பாராட்டிக் கொண்டான்.

அச்சமயம் இராச கம்பீர அஞ்சுகோட்டை நாடாழ்வான் என்பவன் எழுந்து நின்றான். அவன் அக்காலத்தில் பாண்டி நாட்டில் செல்வாக்கு பெற்றிருந்த படைத்தலைவன். அவன் கைகளைக் கூப்பிக்கொண்டு, 'அரசே!' என்று ஏதோ பேச வாய் எடுத்தான்.

அரசன் அவனைத் திரும்பிப் பார்த்தான். நாடாழ்வான் முகத்தில் அடித்தாற் போலக் கூறினான்.

'நாடாழ்வாரே, நம்முடைய பேச்சுகள் எப்பொழுதும் இருக்கவே இருக்கின்றன. பின்னர் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது சற்று அமருங்கள்.

அரசன் வாயிற் படியில் நின்ற காவலனை நோக்கி உற்சாகத்துடன் உரக்க ஆணையிட்டான்.

'யாரங்கே, ஈழப்பரிசுகள் இந்த சபைக்கே வரட்டும். எல்லோருக்கும் முன்னிலையில் நமக்கு சமர்ப்பிக்கட்டும். அனைவரும் ஏககாலத்தில் கண்டு களிப்போம்!'

மன்னனுடைய மகிழ்ச்சி எல்லை கடந்து விட்டது. பரபரப்பு அடைந்தான். தானாகவே வளைந்தான், நெளிந்தான்.

நான்கு ஈழ நாட்டு காவலர்கள் ஒரு சிவிகையை சுமந்து கொண்டு சபைக்குள் வந்தார்கள். சபையின் நடுவில் நின்றார்கள். மெதுவாக சிவிகையை கீழே இறக்கி வைத்தார்கள். பின்னர் அந்தப் பல்லக்கு தூக்கிகள் அரசனைப் பணிவோடு வணங்கினார்கள். அரசன் தலையை அசைத்து அவர்களின் வணக்கத்தை ஏற்றுக் கொண்டான்.

அவர்களில் ஒருவன் சிவிகைகையத் திறக்கவா என அரசனைப் பயபக்தியுடன் கேட்டான். மன்னன் தலையசைத்து அனுமதி அளித்தான். சிவிகையை மூடி இருந்த திரைகளை ஒருவன் அகற்றி இழுத்துப் பிடிக்க, மற்றவர்கள் உள்ளே கையை விட்டு ஒவ்வொரு பெட்டியாக எடுத்து வெளியே வைத்தார்கள். பெட்டிகள் எடுத்து முடிந்தன.

ஒரு பெட்டியின் மூடியைத் திறந்தார்கள். அதில் அத்தனையும் வைரங்கள். பிறிதொன்றை திறந்தார்கள். அதில் அத்தனையும் தங்கக் கட்டிகள். பிறிதொன்றில் ஈழ நாட்டு

யானைத் தந்தங்கள். ஒவ்வொரு பெட்டியிலும் விலைமதிக்க முடியாத பொருட்கள் இருந்தன. இவைகளைப் பார்க்க, பார்க்க மன்னன் குலசேகரனுக்கு தலை, கால் தெரியவில்லை. இளம் வாலிபனைப் போல குதித்தான். 'அடுத்ததைத் திறவுங்கள், அடுத்ததை திறவுங்கள்,' என்று குதூகலத்தோடு ஆணையிட்டான். ஆவல் மிகுதியாகிவிடவே, தான் அரசன் என்பதையும் மறந்து சிம்மாதனத்தை விட்டு இறங்கி ஓடி வந்தான். சிவிகையின் அருகிலேயே நின்று கொண்டான். சபையினரும் விலைமதிப்பற்ற அத்தனை பரிசுகளையும் பார்த்து சிலைகளாக நின்றுவிட்டார்கள்.

பரிசுகள் நிரம்பி இருந்த பெட்டிகள் அத்தனையும் வெளியே எடுக்கப்பட்டு விட்டன. ஈழ நாட்டு காவலர்கள் பெட்டிகளைத் திறந்து உள்ளே இருந்த பொருட்களைக் காட்டி விட்டார்கள். பின்னர் ஒரு ஒதுக்கமாகச் சென்று நின்று கொண்டார்கள்.

கலீர், கலீர் என்று ஒர ஒரு ஒலி எழுந்தது. அதென்ன ஒலி? சிவிகைக்குள் இருந்து ஒலி வருகிறதே! மன்னரும், மற்றவர்களும் பிரமிப்பு அடைந்து சிவிகையையே உற்றுப் பார்த்தார்கள்.

சிவிகையின் திரைச்சீலை மெதுவாக விலகியது. அதிலிருந்து ஒரு பரிசு வெளியே வந்தது. அது தானாகவே வெளியே வந்த உயிர் உள்ள பரிசு. மெதுவாகச் சிவிகையை விட்டு வெளியே வந்து நின்றது. தன்னுடைய பாதம் பட்டால் எங்கு தரைக்கு வலிக்குமோ என்ற கவலையில் அது மெதுவாக நடந்தது. ஆயினும் அதனுடைய பாதங்கள் அசையும் போது நூபுரங்கள் கலீர், கலீர் என்று இசை பாடின.

அதனுடைய உச்சி முதல் உள்ளங்கால்கள் வரை ஒரு வெண்ணிற மஸ்லின் துணியால் போர்த்தப்பட்டு இருந்தது. ஆயினும், அந்த மஸ்லின் துணி உள்ளே இருந்த உருவத்தைக் காட்டிக் கொடுத்து விட்டது. அது ஒரு பெண் என்று யூகிப்பதில் கடினம் இல்லை.

மன்னனை அப்பரிசு நெருங்கி வந்தது. உயிருள்ள அப்பரிசுப் பொருள் இரு கரங்களையும் முன்னுக்கு நீட்டி, சிரம் தாழ்த்தி கிரேக்க பாணியில் மன்னனுக்கு வணக்கம் செய்தது. அப்பொழுது அதனுடைய தலையை மூடி இருந்த ஆடை சற்று கீழே நழுவியது. அந்த சந்திர வதனத்தை அரசன் கண்டான்!

உருண்ட முகம், மென்மைக் கன்னங்கள். குவிந்த உதடுங்கள் ஆகியவற்றைக் கொண்ட பூலோக இரம்பையைக் கண்டான்! விண்ணுலகிலிருந்து வழிதவறி மண் உலகிற்கு வந்துவிட்ட எழில் இராணி ஊர்வசியைக் கண்டான்.

முக்காடு திறந்தபோது முழுவதும் தெரிந்த அந்த பூரண நிலவை அவன் பார்த்தான். மேகங்கள் விலகிய பின்னர் நிர்மலமாகத் தெரிந்த நீலவானில் தென்பட்ட அந்த முழுமதியின் ஒளியை அவளுடைய புன்சிரிப்பில் பார்த்தான். இப்படியும் ஒரு எழிலா? பிரமித்து திடுக்கிட்டான். இத்தகைய எழிலும், கம்பீரமும் கொண்ட ஒரு மாது இப்பூவுலகில் இருக்க இயலும் என்று அவன் கற்பனை செய்ததே இல்லை.

அந்தப் பால்வழியும் வதனம் தாமரையைப் போல மலர்ந்து இருந்தது. மன்னன் அவளை நோக்கும்போது அம்மானின் விழிகள் மருண்டு சலனமுற்றுத் தவித்தன.

மாம்பழக் கன்னங்களில் சிகப்பு ஏறியது. பால்வழியும் அந்த வதனத்தில் ஏற்பட்ட திட்டுக்களைப் போல அந்தச் சிகப்பு எடுத்துக் காட்டியது.

சபையைக் கண்டவுடன் அவளுக்கு வியர்த்து விட்டது. இதுவரை அவள் சபையைக் கண்டதில்லையா, அல்லது அப்படி நடிக்கிறாளா? அவளுடைய பிறை நுதலில் வியர்வைத் துளிகள் துளிர்த்தன. அந்த வியர்வைத் துளிகள் கூட முத்துக்களைப் போல் அழகு செய்தன.

காற்றில் அலைந்த முடி இழைகளில் ஓரிரண்டு வியர்வை முத்துக்கள் படிந்தன. அது அவளுடைய அழகைக் கூட்டியது.

அவளுடைய நுதலுக்கு மேலே கரிய கூந்தல் நன்றாக எடுத்து பின்னி கட்டப்பட்டு இருந்தது. அது வைரமாலை ஒன்றால் சுருட்டப்பட்டு இருந்தது. அது பிறை சந்திரனை ஒத்த நெற்றியின் மேல் ஒரு மேகக் கூட்டம் போல தோற்றம் அளித்தது.

நுதலுக்குக் கீழே அதனை ஒட்டி இரு விற்புருவங்கள். கருத்திருந்த அந்த புருவங்கள் தாங்கள் என்றுமே குறி தவறாத அம்புகள் என்பதைப் பிரகடனப்படுத்தும் வகையில் ஒருமுறை இறக்கி அசைத்துக் காட்டின.

இத்தனையும் கொண்ட சிரத்தைத் தாங்கிய சங்கு கழுத்தை காண்பவருக்கு போதை அளித்தது. அந்த சங்கு கழுத்துக்கு கீழே

இரு அழகு மலைகள். அவளுடைய கால்கள் அசையும்போது உடலின் ஒவ்வொரு பகுதியிலும் பல அசைவுகள் ஏற்பட்டன. திருப்பங்கள் உண்டாயின. ஆனால் அந்த அழகு மலைகளான மார்பகங்கள் மட்டும் ஆடாது. அசையாது நின்றன. அந்த மலைகளின் இடையே வளைந்து, வளைந்து ஓடும் ஒரு நதியைப் போல ஒளி விட்டது முத்து மாலை ஒன்று.

அந்த தங்கசிறச் சிலை சிகப்பு நிறச்சேலையை அணிந்திருந்தது. ஆடவர்களைக் கவரை மகளிர் சிகப்பு நிறச் சேலைகளை அணிய வேண்டும் என்ற கௌடில்யனின் அர்த்த சாஸ்திரத்தைப் படித்தவள் அவள்.

ஒரு நொடியில் இத்தனையும் கண்டுவிட்ட அரசன் குலசேகரன் நிலை குலைந்துவிட்டான். விவரிக்க வொண்ணா வியப்பில் ஆழ்ந்துவிட்டான். இவள் என்ன தேவலோகத்துப் பெண்ணா? இருக்காது. தேவலோக மாது என்றால் அவளுடைய பாதம் பூமியில் படாதே! மேலும் கந்தர்வப் பெண்களான மேனகை, திலோத்தமை, ஊர்வசி ஆகிய மூவரையும் சேர்த்தாலும் எழிலில் இவளுடைய பாதத் தூசிக்கு நிகராக மாட்டார்கள். இரதிதேவியோ? அவளுக்கு இவ்வளவு எழில் ஏது? இந்தக் கற்பனையில் ஆழ்ந்த அரசன் நெடுமரமென நின்று விட்டான்.

அந்த எழில் பிம்பத்தின் பவள இதழ்கள் சற்று விலகின. புன்முறுவல் பூத்தாள். முத்துப் பற்கள் ஒளி விட்டன. மீண்டும் கரங்களைக் கூப்பி சிரம் தாழ்த்தி வணங்கினாள். அப்பொழுது அவளுடைய மேலாடை சற்றுச் சரிந்தது. வேகமாக அதனைச் சரி செய்து கொண்டாள். அதனைக் கண்ட அரசன் பெருமூச்சு விட்டான். அவளுடைய உதடுகள் அசைந்தன. அமுதம் தெறித்தது.

'பாண்டிய நாட்டு பூபதி அவர்களே, அடியாள் ஈழ மன்னனுடைய அடிமையின் வணக்கம், இந்தப் பரிசுப் பொருட்களை பாதுகாத்துக் கொண்டு போய் பாண்டி நாட்டு பூபதியிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது எனக்கு ஈழவேந்தன் இட்ட கட்டளை அருள்கூர்ந்து இவைகளை ஏற்று அருள்புரியுமாறு பணிவோடு வேண்டுகிறேன். இறையே!'

தேனினும் இனிய தமிழில் அந்த இந்திரலோகத்து கந்தர்வமாது பேசினாள். சொற்கள் ஜலதரங்கத்தின் இசையைப் போல ஒலித்தன. கண்களில் ஒரு வெட்டு ஏற்பட்டு மறைந்தது, கோடைக்கால மின்னலைப் போல! அவளுடைய பார்வையில் குறும்புத்தனம் விளையாடியது.

அச்சொற்களைக் கேட்ட குலசேகரன் தேன்குடித்த நரியானான். அவன் தரையில் நிற்கிறானா, விண்ணிலே பறக்கிறானா? அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

'ஆகட்டும், ஆகட்டும்' என்று அவனுடைய வாய் முனகியது. 'இவைகளை யாம் மகிழ்வோடு ஏற்றுக் கொண்டோம்' என்று ஒப்புவித்தான்.

'பாண்டிய பூபதி, நாங்கள் கொண்டு வந்து கொடுத்த பரிசுகளை பெரிய மனது வைத்து தாங்கள் ஏற்று கொண்டது நாங்கள் செய்த புண்ணியம்; ஈழ நாடு செய்த பாக்கியம். எனக்கு விடை அளியுங்கள், வருகிறேன்' அவள் தலை சாய்த்து மீண்டும் இரு கரங்களையும் கூப்பி வணக்கம் செய்தாள்.

'அழகின் அரசியே! உனக்கு விடை கொடுக்க வேண்டுமா? கடல் கடந்த பயணம் செய்து மதுரை மாநகருக்கு வருகை தந்து இருக்கிறாய். உடனே புறப்பட வேண்டுமென்று விடை கேட்கிறாய். பாண்டி நாடு விருந்தோம்பல் பண்பை இன்னும் துறந்து விடவில்லை அணங்கே! நன்கு ஓய்வு எடுத்துக் கொள். பின்னர் செல்லலாம்.'

அவள் தன்னுடைய வேண்டுகோளை மறுத்து விடுவாளோ என அவன் அஞ்சினான். எனவே அவள் மறுமொழி கூறுவதற்கு முன்னர் ஏவலர்களைப் பார்த்து ஆணையிட்டான்:

'யாரங்கே, நம்முடைய ஈழ நாட்டு விருந்தினரை விருந்தினர் விடுதிக்கு அழைத்துச் செல்லுங்கள் அவருக்கு இங்கு ஒரு குறையும் நேரக்கூடாது. அரச மரியாதையுடன் இவ்விருந்தினரை நடத்த வேண்டும்.'

இச்சொற்களைக் கேட்டு அப்பெண் மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். மன்னரைப் பார்த்துக் கூறினாள்:

'மெத்த நன்றி அரசே! இந்த அடிமைக்கு அரச மரியாதை அளிக்குமாறு தாங்கள் பணித்தது நான் செய்த பாக்கியம். இது என்னுடைய தகுதிக்கு அளிக்கப்பட்ட மரியாதை என்று நான் கருதி ஏமாற மாட்டேன். இதிலிருந்து தங்களுடைய பரந்த உள்ளத்தை இந்தச் சிறியவள் காண ஒரு வாய்ப்பு ஏற்பட்டது என்றே கருதுவேன்.' அவள் வினயமாகக் கூறி வணங்கினாள். பணியாட்கள் இருவர் பயபக்தியோடு நடக்க, அவர்களை அவள் பின்தொடர்ந்தாள். அவள் கண்ணுக்கு மறையும் வரை மன்னன் பார்த்துக் கொண்டு இருந்தான். அவள் சென்றவுடன் கம்பீரமாகச் சபையை ஒருமுறை பார்த்தான். பெருமையோடு பேசினான்:

'சபையோர்களே, இன்று இந்நாட்டின் வரலாற்றில் சிறப்புமிக்க நன்னாள்! பாண்டி நாட்டு அரசனான என்னுடைய புகழ் இதுவரை எனக்கே நன்கு தெரியாமல் இருந்தது. என்னுடைய புகழ் அலைகடலுக்கும் அப்பால் பரவி இருக்கிறது என்பதை இன்றுதான் தெரிந்து கொண்டேன். ஈழ சக்ரவர்த்தி பராக்கிரமபாகு அவர்களே நம்முடைய நட்பை வேண்டிப் பரிசுகளை அனுப்பி இருப்பதைப் பார்த்தீர்களா? அத்தனையும் விலைமதிக்க வொண்ணாத இரத்தினங்கள், கோமேதகங்கள், வைரங்கள், தங்கம்! இது எனக்கு மட்டுமல்ல, இந்த நாட்டிற்கே பெருமை அளிப்பதாகும். ஏன், உங்களுக்கெல்லாம் கௌரவமளிப்பது!'

பூரிப்போடு குலசேகரபாண்டியன் படபடவெனப் பேசினான். தன்னுடைய மார்பைத் தட்டிக் கொண்டான். மீசையை விரல்களால் முறுக்கியபடி சபையை பார்த்துக் கொண்டே ஆசனத்தில் அமர்ந்திருந்தான்.

அப்பொழுது 'அரசே' என்று ஒரு குரல் கேட்டது. அவன் உற்றுப் பார்த்தான். நாடாழ்வான் எழுந்து நின்று, 'இதனுடைய பொருள்?' என்று தயங்கித் தயங்கிக் கேட்டான்.

'நாடாழ்வாரே, நீர் குழப்பிக் கொள்ளுகிறீர்கள். பொருள் புரியாத அளவிற்கு இதில் என்ன சிக்கலைக் கண்டுவிட்டீர்கள்? வெளிப்படையாகச் சொன்னால் ஈழ வேந்தன் இந்தபாண்டி பூபதியைக் கண்டு அஞ்சுகிறான் என்று பொருள். எனவே நம்மைச் சரிகட்டி சமாதானம் செய்து கொள்ள விரும்புகிறான்.' இது மன்னனின் மறுமொழி. நாடாழ்வான் இருக்கையில் அமர்ந்தான்.

அப்பொழுது மற்றொரு படைத்தலைவனான இராசராச நற்குடி மாறாயன் என்பவன் நின்றான். அரசனுக்கு வணக்கம் செய்தான். அவனைப் பார்த்து அரசன் கேட்டான்:

'என்ன மாறாயரே, உங்களுக்கும் பொருள் விளங்க வில்லையா?' அரசன் பலமாகச் சிரித்தான். மாறாயன் கூறினான்.

'மன்னரே, இதில் ஏதோ சூது இருக்கிறது. இந்த ஈழ நட்பால் ஏற்படப்போகும் விளைவுகளை அருள்கூர்ந்து சிந்தனை செய்யுமாறு பணிவோடு வேண்டுகிறேன்.'

'மாறாயரே, அனைவரும் ஆனந்தக் களிப்பில் மூழ்க வேண்டிய இத்தருணத்தில் தங்களுக்கும், நாடாழ்வருக்கும் இந்த ஐயங்கள் எப்படி ஏற்பட்டன? நட்பு என்பது என்றும் சிறந்ததே!

அதிலும் ஈழ மன்னர் நம்முடைய நட்பை வேண்டி விரும்பி பரிசுகளை அனுப்பி இருகிறார் என்பது மாபெரும் நிகழ்ச்சிக்கான முன் அறிவிப்பு என்று நான் கருதுவதுடன். பாண்டி நாடு ஒரு மாபெரும் சாம்ராஜ்ஜியமாக அடிக்கல் போடப்பட்டு விட்டது. இதுதான் உண்மை. இதில் உட்பொருள் என்ன கண்டுவிட்டீர் மாறாயரே?'

'இதில் உட்பொருள் இருக்கிறது அரசே! இதனைச் சோழ மன்னரும், அவரைச் சேர்ந்தவர்களும் அறிந்தால்?'

'அறிந்தால் என்ன? அஞ்சி நடுங்காமல் மறுமொழி சொல்லும்.'

'சோழநாட்டிற்கும், ஈழநாட்டிற்கும் நெடுங்காலமாக பகை இருந்து வருகிறது.'

'ஆம் இருக்கட்டுமே. இது ஒன்றும் புதிய செய்தி அல்லவே! அவர்களுடைய பகைமைக்கும், இதற்கும் என்ன தொடர்பு?'

'அரசே, வீரபாண்டியனை வீழ்த்திவிட்டு தங்களுக்கு வெற்றி தேடிக் கொடுத்தவர்கள் சோழர்கள். தங்களை இந்த அரியணையில் அமர்த்தியவர்கள் அவர்கள். அத்தகைய சோழர்களுடைய எதிரியுடன் நாம் நட்புக் கொள்ளலாமா? இச்செயல் நாமே வலிந்து போய் சோழர்களுடைய பகையை வரவேற்பதாகும் என்பது என்னுடைய கருத்து.'

'மாறாயரே, தவறு, தவறு! தங்களுடைய யூகம் முற்றிலும் தவறு. ஈழ வேந்தரை நாம் அணுகவில்லை. அவர் தாமாகவே நம்முடைய நட்பை நாடுகிறார். மனம் மகிழ்ந்து பரிசுகளை அனுப்பி இருக்கிறார். அவற்றை ஏற்றுக் கொண்டோம். இதில் என்ன தவறு இருக்கிறது? மேலும் ஈழ வேந்தன் பரிசுகளுக்கு ஈடாக நம்மிடம் ஏதாவது கேட்டாரா? ஒன்றுமில்லை. நாமும் ஏதாவது ஈடாகக் கொடுக்கப் போகிறோமா? இல்லை. இதனாலேயே சோழர்களுக்கு நாம் எதிரிகளாகி விடமாட்டோம்.'

அப்பொழுது நாடாழ்வான் மீண்டும் எழுந்து நின்று வணங்கினான். அரசன் அவனைப் பார்த்துக் கேட்டான்:

'நாடாழ்வாரே, தங்களுக்கும் அச்சம் வந்துவிட்டதா?'

'ஆம் அரசே! மாறாயர் கூறியதுதான் என்னுடைய கருத்தும் ஆகும்.' நாடாழ்வான் துணிந்தே கூறினான்.

மன்னனுடைய மனம் அச்சபையில் இல்லை. ஏதோ பேசினான். ஆனால் அவனுடைய எண்ணம் ஈழத்தில் இருந்து

வந்த உயிருள்ள பரிசைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டு இருந்தது. எனவே உடனே சபையை கலைக்க விரும்பினான். அதற்காக முற்றுப்புள்ளி வைத்தவனைப் போல வெட்டிப் பேசினான்:

'சபையோர்களே, மாறாயரும், நாடாழ்வாரும் கூறியவை பொருளற்ற வாதங்கள். சொல்லப் போனால் அவை அச்சத்தின் அலறல்கள். ஈழவேந்தன் வலிய பரிசுகளை அனுப்பினார். நாம் ஏற்றோம். இது பண்பு. என்றும் போல இன்றும் நாம் சோழ நாட்டின் தோழர்களே. இதில் யாருக்கும் ஐயம் வேண்டாம். சபை இத்துடன் கலைகிறது.'

அரசன் எழுந்தான். அனைவரும் சிரம் தாழ்த்தி வணக்கம் செய்தார்கள். மன்னன் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டான். சபை கலைந்தது.

20

மற்றுமொரு மன்மதன்

ஈழத்திலிருந்து அன்பளிப்புகளைக் கொண்டு வந்த எழில் இராணியை குலசேகரபாண்டியன் கண்டான். அவளைக் கண்ட அந்த நொடியிலிருந்து அவன் தன்னையே மறந்தான். அரசை மறந்தான். இவ்வுலகையே மறந்துவிட்டான். இப்பூவுலகில் இப்படியும் ஒரு பெண் அவதரித்து இருக்கிறாளே! இப்படியும் ஒரு எழில் பிம்பத்தை படைக்கும் ஆற்றல் பிரம்ம தேவனுக்கு இருக்கிறதே! இத்தகைய கற்பனையில் அவன் மிதந்தான்.

சபையில் மன்னனை அம்மாது வணங்கினாள் அப்பொழுது அவளுடைய உடலை மறைத்திருந்த ஆடை சற்று விலகியது. அவள் அதனை உடனே சரி செய்து கொண்டாள். ஆனால் அப்பொழுது கண நேரத்தில் தென்பட்ட தோற்றம் அவனுடைய மனதில் அப்படியே பதிந்துவிட்டது. அவள் சபையை விட்டு வெளியேறிய பின்னர் அவனுடைய மனது சபையில் இல்லை, அது அவளைத் தொடர்ந்துபோய் விட்டது. அவன் பித்தனானான். சபையை உடனே கலைத்துவிட்டான்.

மீண்டும் ஒரே ஒருமுறை அவளை தரிசிக்க வேண்டும். கண்குளிர கண்டுவிட வேண்டும் என்று அவன் மனம் துடித்தது. அப்பெண் தங்கி இருந்த விருந்தினர் விடுதிக்குப் போக காலை எடுத்து வைத்தான். ஆனால் பாண்டி நாட்டு அரசன் ஒரு பணிப்பெண்ணைத் தேடிக் கொண்டு போவதா? இந்த எண்ணம் வரவே அவன் அப்படியே நின்றுவிட்டான். அவளைப் போய் பார்ப்பதில் என்ன தவறு? அவள் ஈழத்தில் எப்படி எல்லாமோ இருந்திருக்கலாம். இன்று அவள் இந்நாட்டின் விருந்தாளி. அவளுடைய நலன்களை விசாரிப்பதில் என்ன பிழை? விருந்தினரைத் தக்க முறையில் உபசரிப்பது ஒரு அரசனுடைய கடமை. இதில் பாகுபாடு காண்பது பேதமை, அவன் தனக்குத் தானே சமாதானமும் தேடிக் கொண்டான். பதவிச் செருக்கை மோகவெறி எளிதில் தோற்கடித்துவிட்டது. அவள் வதியும் மாளிகையை நோக்கி விரைந்து நடைபோட்டான்.

பாண்டி நாட்டு விருந்தினர் விடுதியில் ஒரு விசாலமான முற்றம். அதன் மத்தியில் நான்கைந்து ஆசனங்கள் போடப்பட்டு இருந்தன. அவற்றில் ஒன்றின் மீது கம்பீரமாக அமர்ந்திருந்தாள் அப்பெண். ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து இருந்தாள். அப்பொழுது தொலைவில் மன்னன் வருவதைப் பார்த்துவிட்டாள். ஆனால் அவனைப் பார்க்காதவள் போல சிந்தனையில் ஆழ்ந்தவளாகத் தென்பட்டாள்.

அருகில் வந்த மன்னன் அவளைப் பார்த்து மெதுவாகக் கனைத்தான். அவள் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள். எதிரில் அந்நாட்டு மன்னவன் இருக்கிறான். அவன் அங்கு வந்தபோது. தான் ஆசனத்தில் அமர்ந்திருந்ததின் மூலம் செய்யத் தகாதது செய்து விட்டதுபோல அவள் பதைபதைத்தாள். எழுந்து நின்றாள். மன்னன் முன் நிற்கவே அஞ்சியவளைப்போல மருண்ட மான் என ஓடினாள். அண்மையில் இருந்த ஒரு தூணின் மறைவில் நின்று கொண்டாள். ஆயினும், அவள் பேசினாள்:

'பாண்டி மன்னரே, வரவேண்டும், வரவேண்டும்! இம் மண்ணின் மாமன்னன் இந்த பேதைப் பெண்ணைத் தேடி வந்தது இந்த அடிமை செய்த பாக்கியமாகும்.' இந்த வார்த்தைகள் குயிலின் நாதம் போல ஒலித்தன. மன்னன் கேட்டான்:

'பெண்ணே, என்ன சொன்னாய்? என் நெஞ்சு பொறுக்கவில்லை, யார் அடிமை?'

'அரசே! அடியாள்தான் அடிமை.'

'நீ அடிமை இல்லை. அப்படி நீ சொல்லக் கூடாது. அத்தகைய கொடிய வார்த்தைகளைக் கேட்டால் என் நெஞ்சு தாங்காது. அது சுக்கல், சுக்கலாக உடைந்துவிடும். நீ மட்டும் விரும்பினால் இந்த பரந்த நாட்டின் சிம்மாதனத்தை அலங்கரிக்கும் அரசியாகத் தக்கவள் நீ!'

'அரசே, போதும். இத்தகைய வசனங்களை எல்லாம் நான் பலமுறை கேட்டுவிட்டேன். இவைகளைக் கேட்டு சலித்து விட்டவள் நான்.'

'புரியவில்லையே, நீ என்ன சொல்லுகிறாய்?'

'அரசே, நான் எதுவும் சொல்லவில்லை. என்னை ஊருக்கு அனுப்பி வையுங்கள். அது போதும்.'

'பெண்ணே, நான் முன்னரே சொல்லிவிட்டேன். நீ என்னுடைய மரியாதைக்குரிய விருந்தாளி. தூணின் மறைவில்

போய் ஏன் நிற்க வேண்டும்? என் எதிரில் வந்து தாராளமாக அமரலாம். எனக்கு சரி சமமாக வீற்றிருக்கலாம். இப்படி வா. நீ நிற்கும்போது என்னால் அமர முடியாது. இருவரும் உட்கார்ந்து பேசலாம். வா. இங்கே.'

மன்னன் சொற்களைக்கேட்ட அவள் தூணின் மறைவை விட்டு எதிரில் வந்தாள். வெட்கித் தலை சாய்த்தபடி நின்றாள். 'உம்' என்று கனைத்துவிட்டு அவன் ஒரு ஆசனத்தில் அமர்ந்தான். அருகில் இருந்த ஆசனத்தை அவளுக்குச் சுட்டிக் காட்டினான். அவள் உடல் குறுக, தலைசாய அச்சத்துடன் அரசன் காட்டிய ஆசனத்தில் அமர்ந்தாள். ஆசனத்தின் விளிம்பில் அமர்ந்தவாறு தரையைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அரசன் அவளை கம்பீரமாகப் பார்த்தான். கனிவுடன் பேசினான்:

'பெண்ணே, நீ அழகானத் தமிழ் பேசுகிறாய்!'

'அரசே, ஒரு தமிழ் நாட்டுப் பெண் தாய் மொழியைப் பேசுவதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது?'

'அப்படியா? இரட்டை மகிழ்ச்சி!'

'வேந்தே, இதில் இரட்டை மகிழ்ச்சிக்கு என்ன இருக்கிறது? மன்னர் எதனைக் குறிப்பிடுகிறார் என்பதைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இப்பேதைப் பெண்ணுக்கு இல்லை. சொன்னால் புரிந்து கொள்ள இயலும்.'

'சொல்லுகிறேன் பெண்ணே! நீ இந்திரலோகத்து இந்திராணியோ என ஐயுற்றேன். அழகில் அவள் உன்னுடைய பாத தூசுக்கு நிகராக மாட்டாள் என்பதை நான் அறிவேன். ஆயினும் எனக்கு அப்படியொறு ஐயம் இருந்தது. தேவதையாக இருப்பின் திடீர் என மறைந்து விடுவாள் என்ற அச்சத்தோடு உன்னிடம் வந்தேன். இப்பொழுது நீ மானிடப் பெண் என்று தெரிவித்து விட்டாய். நீ உருமாறி மறைந்துவிடமாட்டாய் என்பதை அறிந்ததில் ஒரு ஆனந்தம்!'

'அப்படியா? அந்த அளவிற்கு இந்நாட்டு மன்னர் என்னைப் பாராட்டிப் பேசுவது நான் செய்த பாக்கியம். இரட்டை மகிழ்ச்சி எனக் குறிப்பிட்டீர்கள் மற்றொரு மகிழ்ச்சியை அடியாள் அறியலாமா?'

'இரண்டாவது மகிழ்ச்சி ஒரு தமிழ்ப் பெண் என்று அறிந்ததால்!'

அங்கு சிறிதுநேரம் மௌனம் நிலவியது. அப்பெண் தலை தாழ்ந்து அமர்ந்திருந்தாள். அச்சமும், நாணமும் அவளுடைய முகத்தில் விளையாடின. கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள அரசன் தவறவில்லை. அவளுடைய எழிலை அங்கம், அங்கமாக தன்னுடைய வெறி கொண்ட கண்களால் உளமாறப் பருகினான். பின்னர் பேச்சு தொடர்ந்தான்.

'தமிழ் நாட்டில் உன்னுடைய ஊர் எது பெண்ணே?'

'திருக்கோயிலூர்.'

'என்ன, என்ன? சோழநாட்டு திருக்கோயிலூரா?'

'ஆம்.'

'எழிலரசி, உன்னுடைய பெயரை அறியலாமா?'

'அரசே, என்னுடைய பெயர் எழிலரசி அல்ல. கோதை என்பார்கள்.'

'கோதை! தித்திக்கும் பெயர். உன்னுடைய தகப்பனார் பெயர்?'

'நரசிங்க மிலாடுடையார்.'

'என்ன, நீ திருக்கோயிலூர் மன்னன் மகளா?'

'ஆம், அரசே.'

'பெண்ணே, இதனை நம்ப முடியவில்லையே! மன்னன் மகளாகிய நீ ஈழ நாட்டு வேந்தனிடம் பணிப் பெண்ணாக இருக்கக் காரணம்?'

'தங்களைப் போன்ற ஆண் பிறவிகள்தான் என்னுடைய நிலைமைக்குக் காரணம்.'

இதனைச் சொல்லும்போது அவளுடைய கண்களில் இருந்து கண்ணீர் தரையில் விழுந்தது. அவள் விம்மினாள். அவளுடைய மார்பகங்கள் உயர்ந்தும், தாழ்ந்தும் அவளுடைய விம்மலைப் பிரகடனப்படுத்தின. அவள் கண்ணீர் சிந்துவதைக் கண்டு வேந்தன் பதறிவிட்டான். துடிதுடித்துக் கொண்டே கேட்டான்:

'சொல், கோதை சொல், சொல்ல வந்ததை விரைவில் சொல்லிவிடு. உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுகிறது.'

'வேந்தே, இத்தகைய வசனங்கள் எல்லாம் நான் கேட்டுக் கேட்டு சலிப்புத் தட்டிவிட்டது. மிகப் பழைய வசனங்கள் இவை. மற்றவர்களும் இவற்றைத்தான் என்னிடம் ஒப்புவித்தார்கள். அச்சொற்களே என்னை இக்கதிக்கு கொண்டு போய் விட்டன. மன்னன் மகளாகப் பிறந்த என்னை மாற்று நாட்டு அரசனிடம் பணிப் பெண்ணாக மாற்றியது இத்தகைய சொற்களே!'

அவள் விக்கி, விக்கி அழத்தொடங்கினாள். கண்களிலிருந்து நீர் வெள்ளமாகக் கொட்டியது. மன்னனின் கண்களிலிருந்தும் நீர் சிந்தியது.

'அழாதே, அழாதே!' எனக் கூறிக்கொண்டே அவளை நெருங்கினான் அவன். தன்னுடைய மேலங்கியைக் கரத்தில் ஏந்தியவாறு அவளுடைய கண்ணீரைத் துடைக்கப் போனான்.

'அரசே,' என்று அவள் கூச்சலிட்டுவிட்டாள். வேகமாக எழுந்து தூரமாகச் சென்று ஒதுங்கி நின்றாள். அம்பு ஏந்தி நெருங்கி வந்த வேடனைக் கண்ட மானைப் போல அவள் துள்ளி அப்பால் ஓடிவிட்டாள். வேந்தன் மறுபடியும் வந்து தன்னுடைய இருக்கையில் அமர்ந்தான். அவளைப் பார்த்துக் கூறினான்:

'கோதை! உன்னுடைய உள்ளம் மிகவும் புண்பட்டு உள்ளது என்பதை உணருகிறேன். அதற்குத் தக்க காரணம் இருக்க வேண்டும். அத்துயருக்கான காரணத்தைச் சொல்ல மாட்டாயா? முடிந்தால் உன்னுடைய துயரைத் துடைக்கும் வாய்ப்பை எனக்கு அளிக்கமாட்டாயா?'

'அரசே, தாங்கள் மிகவும் பெரியவர். தங்களுடைய நல்ல உள்ளம் இந்த அடிமைக்கு தெளிவாகத் தெரிகிறது. ஆனால் நான் துர்ப்பாக்கியசாலி. என்னுடைய துயரைத் துடைக்க தங்களால் இயலாது. என்னுடைய சோகக் கதையைக் கூறி தங்களுடைய நல்ல மனதை நோகச் செய்ய நான் விரும்பவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள் பூபதி!'

'உம், நீ சொல்லித்தான் ஆக வேண்டும். உனக்கு யார் என்ன கொடுமை செய்தார்கள். சொல் கோதை? என்னால் பொறுக்க இயலவில்லை.'

'அரசே, தங்களுடைய அன்பு ஆணைக்கு கட்டுப் பட்டு என்னுடைய சோகக் கதையை சுருக்கமாகச் சொல்லுகிறேன். திருக்கோயிலூர் அரச தம்பதிகளுக்கு ஏக புதல்வியாகப் பிறந்தேன் நான். என்னுடைய பெற்றோர்கள் என்னை உயிருக்கும் மேலாக

ஓம்பி வளர்த்தார்கள். திருமண வயது அடைந்தேன். என்னை அரச அரண்மனையில் விட்டுவைத்தால் எனக்கு பல நல்ல பழக்க வழக்கங்கள் ஏற்பட ஏதுவாகும் என என்னுடைய பெற்றோர்கள் கருதினார்கள். எனவே அவர்களுடைய விருப்பப்படி நான் மகிழ்வுடன் பழையாறைக்குச் சென்றேன். அங்கு இன்றைய சோழநாட்டு மன்னர் என்னை விரும்பினார். ஆனால் அவரை எனக்குப் பிடிக்க வில்லை. எனவே அவருடைய இச்சைக்கு உடன்பட மறுத்து விட்டேன். வன்முறையின் மூலமாக என்னை அடைய முயன்றார். அங்கிருப்பின் என்னுடைய கற்புக்கு களங்கம் ஏற்படும் எனக் கருதி பழையாறை அரண்மனையை விட்டு தப்பி ஓடினேன்.

'திருக்கோயிலூருக்குச் செல்ல முடியாது. அங்கு சென்றால் சோழ மன்னர் என்னை விடமாட்டார் என்பது எனக்குத் தெரியும். அவருடைய எல்லைக்கு உட்பட்ட ஒரு குறுநில மன்னனின் புதல்வியை அவர் அடைய எல்லா வழிகளிலும் முயற்சிப்பார். என்னுடைய பெற்றோர்கள் மறுத்தால் பெரும் போர் மூளும். சோழ மன்னர் எளிதில் எங்களை அடக்கிவிடுவார். என்னைப் பெற்ற பாவத்திற்காக என்னுடைய பெற்றோர்களுக்கு துன்பம் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. என்னால் நாட்டில் போர் மூளுவதையும் நான் விரும்பவில்லை.

'எனவே சோழ நாட்டைவிட்டே தப்பி ஓடி பாண்டி நாட்டிற்கு வந்தேன் அன்றைய இந்நாட்டு மன்னரான வீரபாண்டியரிடம் சரணடைந்தேன். இங்கும் அதே பழைய கதைதான். வீரபாண்டியர் அண்டி வந்தவளை பெண்டாள நினைத்தார். ஆபத்து என வந்த பேதைப் பெண்ணை கசக்கி முகர விரும்பினார். அவருடைய கருத்தை வெகு விரைவிலேயே புரிந்து கொண்டேன். என்னை பாண்டிய நாட்டு அரசி ஆக்குவதாக ஆசை காட்டினார். அவர் கூறியது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் என்னுடைய மனது அவரை ஏற்க வேண்டுமே! அங்கு இருந்தால் எந்த நொடியிலும் என்னுடைய கற்புக்கு பங்கம் ஏற்படலாம் என அஞ்சினேன். எனவே அந்த அரண்மனையிலும் நான் தங்க விரும்பவில்லை. அங்கிருந்து தப்பி வெளியேறினேன்.

'தமிழகமே எனக்கு வெறுத்து விட்டது. ஒரு பேதைப் பெண் படக்கூடாத துன்பங்களை எல்லாம் பட்டு விட்டேன்

எத்தனையோ இன்னல்களைத் தாங்கிக் கொண்டு கடைசியாகத் தமிழகத்தை விட்டே வெளியேறினேன். கடல்கடந்து ஈழ நாட்டிற்கு ஓடினேன். அந்நாட்டு மன்னர் எனக்கு தஞ்சம் அளித்தார்.

'ஈழ வேந்தர் என்னை அன்புடன் நடத்தினார். அரசியல் சம்பந்தமாக என்னை கலந்து ஆலோசித்தே செயல்பட்டார். சொல்லப்போனால் ஒரு தலைமை அமைச்சருக்கு அளிப்பதைவிட மேலான இடத்தை எனக்கு அளித்தார். எனக்கு அங்கு ஒரு குறையும் இல்லை.

'ஆனால் ஈழ வேந்தரும் மனிதர்தானே! சில சமயங்களில் சபலத்திற்கு அடிமையாகி விடுகிறார். அவருடைய போக்கு அதனை வெளிப்படுத்தி விட்டது. உள்ளத்தின் கள்ளம் முகத்தில் தென்பட்டது. எனவே அங்கிருக்கவும் எனக்கு விருப்பம் இல்லை. அங்கிருந்தும் வெளியேறவே விரும்புகிறேன். வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். ஆண் இனத்தின்மீதே எனக்கு வெறுப்புத் தட்டி விட்டது. இறைவன் இத்தனை அழகுடன் என்னை படைத்ததின் மூலமாக தண்டிக்கிறான். அழகாக இருப்பது என்னுடைய தவறா? காண்பவர்களெல்லாம் காமவெறி கொண்டே என்னைக் காண்கிறார்கள்.'

'கோதை, உன்னைப் பெயர் வைத்து கூப்பிடலாம் அல்லவா? இனிமையான பெயர்! அதனை உச்சரிக்க எனக்கு உரிமை உண்டா? விருப்பம் இல்லாவிடின் சொல்லிவிடு. உன் விருப்பத்திற்கு மாறாக நான் எப்பொழுதும் நடக்கமாட்டேன். நீ வெளிப்படையாக பேசுவது அறிய எனக்கு மகிழ்ச்சி.'

'அரசே பெயர் வைக்கும் நோக்கமே மற்றவர்கள் அடையாளம் தெரிந்து அழைக்கத்தானே! தாராளமாக என்னைப் பெயர் வைத்தே தாங்கள் அழைக்கலாம். மேலும் தாங்கள் பெரியவர்.'

'பெரியவர் என்றால் என்னை வயதானவன் என்று குறிப்பிடுகிறாயா?'

'இல்லை, இல்லை. தாங்கள் உள்ளத்தால் பெரியவர் என்று குறிப்பிட்டேன்.'

'மகிழ்ச்சி, கோதை!'

'எதற்கு மகிழ்ச்சி, அரசே? நான் பட்ட துன்பங்களை அறிந்ததற்காகவா?'

'இல்லை; இல்லவே இல்லை. என்னைத் தவறாகப் புரிந்து கொண்டாய். உன்னுடைய இனிய பெயரை நான் வாயார உச்சரிக்க அனுமதி அளித்தாய். அதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தேன். அது இருக்கட்டும். நீ பட்ட துன்பங்களை அறிய என்னுடைய உள்ளம் வெடித்து விடும் போல இருக்கிறது. ஒரு பெண்ணுக்கு இத்தனை துன்பங்கள் வரக்கூடாது.'

'வந்துவிட்டதே, வேந்தே!'

'ஆமாம் கோதை! சோழன், பாண்டியன், ஈழன் இத்தனை மன்னர்களில் உனக்கு யாரையுமே பிடிக்க வில்லையா? ஆண் இனத்தையே வெறுக்கிறாயா? திருமணமே வேண்டாமென முடிவு செய்துவிட்டாயா?'

'அரசே, நான் நிச்சயமாக சன்னியாசினி இல்லை. ஆசாபாசங்களுக்கு உட்பட்ட எளிய மானிடப் பெண். நானும் மற்றவர்களைப் போலத் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்வு நடத்தவே விரும்புகிறேன். ஆனால் கைப்பிடிக்கும் கணவருக்கு அரச பதவி இருந்தால் மட்டும் போதுமா? அவர் என்னுடைய மனத்திற்குப் பிடித்த மன்மதனாகவும் இருக்க வேண்டும்.'

'ஆமாம், நீ சொன்னதில் தவறு எதுவுமே இல்லை. ஆனால் அத்தகைய மன்மதன் இப்பூமியில் பிறந்திருக்க வேண்டுமே!'

'நிச்சயமாக பிறந்திருப்பார். அவர் எனக்கு தென்படாமல் போகமாட்டார்.'

'உன்னுடைய கண் எதிரிலேயேகூட உன்னை மாலையிடப்போகும் மன்மதன் இருக்கலாம் அல்லவா?'

'இருக்கலாம்.'

'ஆம். நீ சொல்லுவது உண்மையானது.'

மன்னன் மகிழ்வுடன் கூறி பல்லை இளித்தான் அப்பொழுது ஒரு பணியாள் வேகமாக வந்தான். அரசனை வணங்கிவிட்டு அடக்கத்துடன் நின்றான். மன்னன் அவனை அருகில் அழைத்தான். அவன் நெருங்கி வந்து மன்னன் காதருகில் ஏதோ புகன்றான்.

அரசன் பணியாளைத் தொடர்ந்து வேகமாக வெளியேறினான்.

21

தலைகளுக்கு ஆபத்து

மறுநாள் காலை முன்நேரத்திலேயே மன்னன் குலசேகரன் கோதை தங்கி இருந்த விருந்தினர் விடுதிக்கு வந்து சேர்ந்தான். என்றையும்விட அன்று அவன் தன்னை அலங்கரித்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்தி இருந்தான். தொலைவில் வரும்போதே அவன் தடவி இருந்த வாசனைத் திரவியங்களின் நெடி அவளுடைய நாசியை துளைத்தது.

அவள் அந்நேரத்திலும் எப்பொழுதும்போல ஆசனத்தில் அமர்ந்தவாறே சிந்தனையில் ஈடுபட்டு இருந்தாள். மன்னனைக் கண்டவுடன் எழுந்து நின்றாள். 'அரசே, வரவேண்டும், வரவேண்டும்!' என்று முகமன் கூறி வணங்கி வரவேற்றாள்.

ஆனால் அவளுடைய முகத்தோற்றம் இயற்கையாக இல்லை. அதில் ஏதோ வாட்டம் தென்பட்டது. அதனை அரசன் கண்டு கொண்டான். அதனால் அவனுடைய முகமும் வாடி வதங்கிவிட்டது. மலர்ச்சியோடு வந்த அவனுடைய முகம் கும்பிவிட்டது. கரகரத்த குரலில் அவளைப் பார்த்துக் கேட்டான்:

'கோதை இன்று உன்னுடைய வதனத்தில் ஏதோ வாட்டம் தென்படுகிறது. நேற்று நிலவிய அந்த நிலவுப் புன்னகை இன்று தென்படவில்லை. மேகங்களால் மூடப்பட்டு ஒளிமங்கித் தோன்றும் மதியைப் போல உன்முகம் தென்படக் காரணம் என்ன? உனக்கு இந்த அரண்மனையில் என்ன குறை? காவலர்கள் நன்கு கவனிக்கவில்லையா? எவனாவது உன்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டானா? குற்றம் செய்தவன் யார்? அவனுடைய தலையை ஒரே வீச்சில் சீவிவிடுகிறேன். சொல் கோதை.'

'அரசே, எனக்கு இங்கு ஒரு குறையும் இல்லை.'

'அப்படியானால் இரவு உறங்கவில்லையா? அதற்குக் காரணம்?'

'அரசே, மீண்டும் சொல்கிறேன். எனக்கு இங்கு எந்த குறையும் இல்லை.'

'இப்பொழுது புரிகிறது. உன்னுடைய வாட்டத்திற்கு காரணம் நான் சொல்லட்டுமா?'

'சொல்லுங்கள்.'

'உன்னுடைய கடந்த காலத் துன்பங்கள். அவைகளை நினைத்தால் யாருக்கும் வேதனை வரத்தான் செய்யும். கோதை, நான் உனக்கு புத்தி சொல்வதாக நினைக்காதே. பழையவற்றை மறந்து புதியவற்றை நாட வேண்டும். அது தான் வாழ்வு.'

'அரசே, என்னை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். என்றுமே நடந்ததை எண்ணி ஏங்கும் பேதையல்ல நான். தாங்கள் என்னை வற்புறுத்திக் கேட்டீர்கள். தங்களுடைய மனம் நோகக் கூடாது என்பதற்காக என்னுடைய கடந்த காலக் கதையைக் கூறினேன். அந்த நேரத்தில் உணர்ச்சி வசப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால் அதனை அப்பொழுதே மறந்துவிட்டேன்.'

'கோதை, உனக்கு மதுரை மாநகரை சுற்றிக் காட்டுமாறு ஏவலர்களை அனுப்பினேன். அவர்களோடு சென்றாயா? இந்நகரைக் கண்டாயா? எல்லா பகுதிகளையும் சுற்றிப் பார்த்தாயா? முன்பே நீ இங்கு வந்ததாக கூறி இருக்கிறாய். அப்பொழுதும் இந்நகரை நன்கு பார்த்திருப்பாய் என நினைக்கிறேன்.'

'ஆம் பார்த்திருக்கிறேன். அன்று நான் கண்டது மதுரை மாநகரை!'

'அப்படியானால் இன்று பார்த்தது?'

'கசாப்புக் கடையை!'

'கோதை, என்ன சொன்னாய்? மதுரை மாநகரை உனக்கு சுற்றிக் காட்டும்படி ஏவலர்களுக்கு பணித்தேன். ஆனால் அவர்கள் உனக்குக் கசாப்புக் கடையைக் காட்டினார்களா? இதனால்தான் கோபமா? அந்தப் பணியாட்களின் சிரங்களைச் சீவித் தள்ளுகிறேன் பார்!'

'அரசே, ஏவலாட்கள்மீது தவறு இல்லை. அவர்களுக்கு இடப்பட்ட பணியை செம்மையாகச் செய்தார்கள். நகரை நன்கே சுற்றிக் காட்டினார்கள். ஆனால் நகரைக் கண்டதுதான் என் மனதிற்கு நரகமாகப் போய்விட்டது. நான் தவறு செய்துவிட்டேன். நான் இங்கு வந்த அன்றே திரும்பி இருந்தால் மனதிற்கு எவ்வளவோ நிம்மதியாக இருந்திருக்கும். மகிழ்வுடன் சென்றிருப்பேன்.'

'ஏன், இந்த நகர் உனக்குப் பிடிக்கவில்லையா?'

'அரசே, ஈடற்ற களி மதுரை என காவியங்கள் போற்றும் மதுரை மாநகரை பிடிக்காதவர்கள் யார் இருக்க முடியும்?'

'அப்படியானால் இந்நகரைக் கண்டதும் இது உனக்கு நரகமாகத் தென்படக் காரணம்?'

'அருள் கூர்ந்து மன்னியுங்கள். அந்தக் காரணம் எல்லாம் தங்களுக்குத் தேவையற்றது.'

'சொல் கோதை! உனக்கு மதுரையைப் பிடிக்கிறது. ஆனால் இங்கிருப்பது நரகமாகத் தோன்றுகிறது. அப்படியானால் அதனுடைய மன்னனாகிய என்னைப் பிடிக்கவில்லையா? என்னுடைய நெஞ்சு வெடிக்கும் முன்னர் சொல்லிவிடு.'

'அரசே, சொல்வித்தான் ஆகவேண்டுமா? ஆகட்டும் சொல்லுகிறேன். நேற்று மாலைவரை தங்களை எனக்குப் பிடித்திருந்தது. மனம் திறந்து சொல்லி விடுகிறேன். அதனைச் சொல்ல பிறிதொரு வாய்ப்பு கிடைக்குமா என்பது ஐயமே! அரசே.... அரசே!'

'சொல் கோதை. தயங்காமல் சொல்'

'அரசே, நான் வெளிப்படையாகப் பேசுவதற்காக முதலில் மன்னிப்பு வேண்டுகிறேன். என்னை நேற்றுவரை மூன்று மன்னர்கள் நேசித்தார்கள். அவர்கள் தங்களைவிட மேலான அதிகாரங்களும், இளமையும் பெற்ற மன்னர்கள். அவர்கள் என்னை உளமாற விரும்பினார்கள். அவர்களுடைய நாடுகளின் பட்டத்து அரசி ஆக்குவதாக உறுதி அளித்தார்கள். அவர்களை எல்லாம் அற்பமாகக் கருதி உதறித்தள்ளியவள் நான்....'

'கோதை, நீ சொல்லுவது எனக்குப் புரிகிறது. அத்தகையவர்களுக்கு முன்னர் நீ என்ன அற்பம் என்று கேட்கிறாயா? என்னுடைய நெஞ்சு வெடிக்கிறது. சொல் கோதை, இதுதானா உன்னுடைய முடிவு?'

'பொறுங்கள் அரசே! என்னுடைய வார்த்தைகளை நான் முடிக்கும்வரை அருள்கூர்ந்து பொறுங்கள். ஆனால் அந்த மூன்றும் வேந்தர்களிடமும் இல்லாத ஏதோ ஒரு சிறப்பை, அழகை, அன்பை, பண்பை தங்களிடம் கண்டேன். முதல் பார்வையிலேயே தாங்கள் என்னுடைய உள்ளத்தில் சித்திரமாகப் பதிந்து விட்டீர்கள். பரிசுகளை ஒப்படைத்த உடனேயே

ஈழநாட்டிற்குத் திரும்பும் எண்ணத்தோடுதான் நான் வந்தேன். ஆனால் தங்களை விட்டுப் பிரிவது எனக்கு கடினமாக இருந்தது. எனவே இங்கு தங்குமாறு தாங்கள் பணித்ததற்கு இசைந்தேன்.'

'கோதை, என்னுடைய பிறவிப் பயனை பெற்றுவிட்டேன். நீ என்னை ஏற்றுக் கொண்டது நான் செய்த புண்ணியம். என்னுடைய இதய தெய்வமே, எழில் இராணியே!' மன்னன் உணர்ச்சி வசப்பட்டான். இமயத்தின் உச்சிக்கே போய் விட்டான். அவனுடைய உச்சி குளிர்ந்தது. ஆனந்தப் பெருக்கால் திக்குமுக்காடினான். அவளை அப்படியே கட்டி அணைத்துக் கொள்ளத் துள்ளி ஓடினான். அவள் அப்பால் ஒதுங்கிக் கொண்டாள். பாய்ந்து வந்த அவனை தன்னுடைய கரங்களால் தடுத்து நிறுத்தினாள். வார்த்தைகளில் சூடுதெறிக்கப் பேசினாள்.

'அரசே, அப்படியே நில்லுங்கள். சற்றுப் பொறுமையாக இருங்கள். நான் சொல்ல வந்ததை முடிக்கும்வரை அங்கேயே நில்லுங்கள். இன்றேல் நான் பெண்ணாக இருக்கமாட்டேன். பேயாக மாறிவிடுவேன்.'

'தப்பு, தப்பு, கோதை!'

'நான் தங்களைப் பற்றி கூறியதெல்லாம் நேற்று மாலை வரைதான்.'

'கோதை, என்ன சொல்கிறாய்? நேற்று மாலைவரை என்றால் இப்பொழுது என்னைப் பிடிக்கவில்லையா? அன்பே, என்னை இமயத்தின் உச்சியில் ஏற்றிவிட்டு அடுத்த நொடியில் படுபாதாளத்தில் தள்ளுவது தர்மமா? ஏன், நான் என்ன தவறு செய்தேன் கோதை?'

'அரசே, வீண் பேச்சை ஏன் வளர்த்த வேண்டும்? நான் வந்த வேலை முடிந்துவிட்டது. தங்களுடைய ஆணைப்படி இங்கு இரு நாட்கள் தங்கி ஓய்வும் எடுத்துக் கொண்டேன். மதுரை மாநகரைக் கண்ணாரக் கண்டுவிட்டேன். அதனைக் கண்டதால் ஏற்பட்ட வேதனையையும் அனுபவித்துவிட்டேன். விடை கொடுங்கள் வேந்தே.'

'கோதை உண்மையிலேயே புறப்படுகிறாயா? பகலவனை விட்டு வெப்பம் பிரியமுடியுமா?' பனிக் கட்டியை விட்டு குளிர்ச்சி பிரிய முடியுமா?'

'அரசே, உவமைகளைப் பேசுவதால் உண்மை மறைந்து விடாது. நாம் பிரிய வேண்டியதே.'

'கோதை, நேரடியாக பதில் சொல். ஒரே நாளில் ஏன் இந்த திடீர் மாற்றம்?'

'அரசே! இந்த அரண்மனையில் இருப்பதை நான் நஞ்சு என வெறுக்கிறேன். இந்த மதுரையை நான் சுற்றிப் பார்க்காதிருப்பின் எவ்வளவோ நிம்மதியாக இருந்திருப்பேன்.'

'கோதை, என்னைக் குழப்பாதே. எனக்கு உன் சொல் புரியவில்லை. இந்நகரைப் பார்த்ததால் உனக்கு என்ன வந்துவிட்டது? "தென் தமிழ் நன் நாட்டுத் தீது தீர் மதுரை*" உனக்கு பிடிக்கவில்லையா? வியப்புதான்!'

'மன்னவா, மீண்டும் சொல்லுகிறேன், மதுரையை விரும்பாத மனித இனமும் உண்டா?'

'பின் ஏன் இந்தக் கசப்பு? நான் மீண்டும் கேட்கிறேன். நகரைப் பார்க்க சென்றபோது உன்னுடைய அழகில் மயங்கி யாராவது உன்னிடம் தவறாக நடந்து கொண்டார்களா? சொல். அவர்கள் ஓராயிரம் பேர்களாக இருப்பினும், அத்தனைப் பேர்களின் சிரங்களையும் வெட்டிச் சாய்க்கிறேன்!'

'அரசே, அதற்கு ஒன்றும் குறைவு இல்லை. ஏற்கனவே இந்த அரண்மனை ஒரு சிறு கசாப்புக் கடையாக இருக்கிறது. எனக்காக மீண்டும் ஆயிரம் பேரைக் கொன்று இவ்விடத்தை பெரிய கசாப்புக் கடையாக்க வேண்டாம்.'

'பெண்ணே, என்ன இது? மீண்டும் கசாப்புக் கடையைப் பற்றியே பேசுகிறாய்! எனக்கு ஒன்றும் விளங்க வில்லை. தொன்றுதொட்டு பாண்டியப் பேரரசர்கள் வசிக்கும் இந்த புகழ்மிக்க புகழாபரணம் அரண்மனை கசாப்புக் கடையா? பெண்ணே, இவ்வார்த்தையை சொன்னது நீயாக இருப்பதால் பொறுத்துக் கொண்டேன்.' இந்த வார்த்தைகள் மன்னனுடைய வாயிலிருந்து வந்தபோது சூடு தெறித்தது. அவனுடைய முகம் இறுக்கத்தை அடைந்தது.

---

* சிலப்பதிகாரம்.

'அரசே, மன்னியுங்கள். என்னுடைய மனதில் பட்டதைச் சொல்லிவிட்டேன். வெட்டப்பட்ட தலைகள் வைக்கப்பட்டுள்ள இடத்தை கசாப்புக்கடை என்றுதான் நாங்கள் சொல்லுவோம். நீங்கள் அதனை எந்த பெயரில் சொல்லுவீர்களோ?'

'ஆம், நாங்களும் வெட்டப்பட்ட தலைகள் இருக்கும் இடத்தை கசாப்புக்கடை என்றுதான் சொல்லுவோம்.'

'மகிழ்ச்சி, ஆனால் ஒரு ஐயம். இந்த அரண்மனையின் முன்னர் பிரதான வாயிலின் இருபுறங்களிலும் இரு மனித தலைகள் கழிகளில் பொருத்தி வைக்கப்பட்டு உள்ளன. அல்லவா?'

'ஆம்.'

'இந்த அரண்மனையைக் கசாப்புக்கடை என்று நான் சொல்லுவதில் என்ன தவறு? இதனைக் கசாப்புக்கடை என்று அழைக்காமல் வேறு எப்படி அழைப்பது?'

ஓ, அன்பே, அதனைச் சொல்லுகிறாயா? நானும் என்னவோ, ஏதோ என்று பயந்துவிட்டேன். அந்தத் தலைகள் கசாப்புக்கடை பொருள்கள் அல்ல. அவை மதுரையின் சிறப்பைக் கூட்டுவது. நன்றாகத் தெரிந்து கொள்.'

'கசாப்புக்கடை நடத்துவது சிறப்பைக் கூட்டுமா?'

'பெண்ணே, அவை சாதாரண தலைகள் அல்ல. அவை யாருடைய தலைகள் தெரியுமா? ஒரு காலத்தில் ஈழ நாட்டின் வீராதிவீரர்களாகத் திகழ்ந்த தண்டநாயகர்களான இலங்காபுரி, சகத்விசயன் ஆகியோரின் தலைகள் அவை. அந்த வல்லமை மிக்க சூரர்களை நாங்கள் போரில் வீழ்த்திவிட்டோம். அவர்களைக் கொன்று சாய்த்து விட்டோம். நாங்கள் பெற்ற வெற்றியின் சின்னம் அத்தலைகள். அவ்வெற்றியை என்றென்றும் உலகிற்கு எடுத்து இயம்ப வேண்டும். தமிழ் நாட்டின் மீது மோதவரும் எதிரிகளுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். அதற்காக அவ்வீரர்களுடைய தலைகளை அரண்மனையின் முன்னர் பொருத்த வேண்டும். இவ்வாறு அன்றைய சோழ சேனாபதி திருச்சிற்றம்பலமுடையார் கருதினார். அவருடைய கருத்திற்கு ஏற்ப தொங்க விடப்பட்டவை அத்தலைகள். கோதை, தெரிந்து கொள். அவை புகழாபரண அரண்மனையின் பெருமையைக் குலைப்பதல்ல. அதன் புகழுக்குப் பெருமையை கூட்டுவதாகும்!' மன்னன் மீசையை முறுக்கிக் கொண்டே அவளை கம்பீரத்துடன் பார்த்தான்.

'அரசே, தாங்கள் கூறியது உற்றதாகவே இருக்கலாம், எனக்கு அரசியல் புரியாது. நான் தெரிந்து கொண்டதெல்லாம் இதுதான். என்னைப் பொறுத்தவரை துண்டிக்கப்பட்ட தலைகள் வைக்கப்பட்டிருக்கும் இந்த அரண்மனை ஒரு கசாப்புக்கடை. கசாப்புக் கடைகளில் வசிப்பவர் வேந்தராக இருக்க முடியாது. அவர் கசாப்புக் கடையின் உரிமையாளர். எனவே என்னால் கசாப்புக் கடையில் தங்க இயலாது. கசாப்புக்கடையின் சொந்தக்காரைக் காதலிக்கவும் இயலாது. யார், எத்தனை தலைகளைத் தொங்கவிட்டால் எனக்கு என்ன? நான் வந்த வேலை முடிந்து விட்டது. விடை கொடுங்கள்.'

கோதை இரு கரங்களையும் கூப்பி மன்னனிடம் விடை கேட்டாள். மன்னன் ஆழ்ந்து சிந்தனை செய்தான். அங்கும், இங்குமாக நடைபோட்டான். அவனுடைய அனுமதியை எதிர்பார்த்து நிற்கும் எழில் பிம்பத்தைப் பார்த்து பெருமூச்சு விட்டான். ஏதோ பேச வாய் எடுத்தான். அவள் தன்னுடைய வாயின்மீது ஆள்காட்டி விரலை வைத்து உஸ் என்று ஒலி எழுப்பினாள். மன்னன் வாய் அடைத்துவிட்டது. வெகுநேரம் சிந்தித்தான். பின்னர் தீனமான குரலில் பேசினான்:

'கோதை, உனக்கு அத்தலைகள் அங்கு இருப்பது பிடிக்கவில்லை.'

'ஆம்.'

'உனக்காக அவைகளை அப்புறப்படுத்த நான் தயார், ஆனால் சோழர்கள் விரும்ப மாட்டார்கள்.'

'அரசே, சோழர்களுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்று நான் ஏன் கவலைப்பட வேண்டும்? தங்களுக்கு அரச போகத்தில் ஆசை இருக்கலாம். அந்நியருடைய தயவினால் பிழைக்க வேண்டிய பரதாபகரமான நிலைமை இருக்கலாம். சொல்லப் போனால் தங்களுக்கு மேலான காதலைவிட பிறருடைய தயவு பெரிதாக இருக்கலாம். இவைகள் எல்லாம் தவறு என்று நான் சொல்லவில்லையே!'

'கோதை பிறருடைய தயவில் பதவியில் ஒட்டிக் கொண்டு இருக்கும் பேடி என்று என்னை நினைத்துக் கொண்டாயா?'

'தவறு, தவறு! நான் அப்படி சொல்லவில்லையே! பரிதாபப்படுகிறேன்.'

'பரிதாபமா? என் மீதா? எதற்கு?'

'அலைகடலுக்கு அப்பாலும் புகழ் பரவிக்கிடக்கும் வீராதி வீரர் தாங்கள். எதிர்த்து நின்ற மன்னர்கள் எல்லோரையும் எமனுக்கு விருந்தாக்கி இமயத்தின்மீது கயல்கொடி பொறித்த ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனுடைய வழி வந்தவர் தாங்கள் தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், கடல்நீர் தன்னுடைய பாதங்களை அலம்ப நெடிது உயர்ந்து நின்ற பாண்டியன் நிறைமுடியோன் ஆகியோருடைய வாரிசு தாங்கள். அத்தகைய புகழ் மிக்க மரபில் வந்த குலசேகரபாண்டியர் யாரோ ஒரு அயல்நாட்டு சேனாபதி விரும்பினார் என்பதற்காக அரண்மனையின் முன்னர் இரு தலைகளை வைத்து காவல் காத்துக் கொண்டு கசாப்புக் கடை நடத்துகிறார். அதைவிட பரிதாபம்! அந்தத் தலைகளை நிறுவிய சேனாபதியும் செத்துவிட்டான். அதன் பின்னரும் பாண்டிய நாட்டு மன்னருக்கு பயம் தெளியவில்லை. யாரோ கோபிப்பார்கள் என்பதற்காக அவைகளை அப்புறப்படுத்த தயங்குகிறார், பரிதாபம்!'

'கோதை' மன்னுடைய குரலில் அனல் தெறித்தது.

'அரசே, கோபிக்காதீர்கள். தாங்கள் வரலாறு படைத்து விட்டீர்கள். அதற்கு பாரட்டத்தான் வேண்டும்.'

'என்ன சொல்லகிறாய்?'

'காதலுக்காக பேரரசுகளையே துறந்த மன்னர்களைப் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறேன். அந்த பத்தில் ஒன்றாகச் சேர்ந்து பதினொன்றாக இருந்தால் என்ன பெருமை? ஆனால் தாங்களோ அரச போகத்திற்காகக் காதலையே துறந்து விட்டீர்கள்! இது, இதுவரை யாருமே செய்யாத தியாகம். இதற்காக என்னுடைய பாராட்டுகள்!'

"கோதை, என்னை என்னவென்று நினைத்துக் கொண்டாய்? என்னை யாருக்கோ அஞ்சி வாழ்பவனாகக் கருதுகிறாயா? அல்லது என்னுடைய காதலைத்தான் அற்பம் என்கிறாயா?'

'நான் அப்படி சொல்லவில்லையே அரசே, அதற்கு தேவையும் இல்லை. அரண்மனையின் எதிரில் தொங்குகிறதே அந்தத் தலைகள்தான் தங்களுடைய உள்ளத்தை பளிங்குபோல காட்டுகின்றனவே!'

'கோதை, போதும், போதும், அந்தத் தலைகள் அங்கு தொங்குவது உனக்குப் பிடிக்கவில்லை, அவ்வளவுதானே.'

'ஆம்.'

'அவற்றை அப்புறப்படுத்திவிட்டால் இங்கு தங்குவாயா? என்னுடைய இதயத்தின் இராணியாக, பட்டத்து அரசியாக என்றென்றும் என்னுடன் இருப்பாயா?'

'அரசே, அந்த பாக்கியம் இந்த பேதைப் பெண்ணக்கு உண்டா!'

கோதை தலைகுனிந்து கொண்டாள் அவளுடைய எழில்வதனம் ஒளி விட்டு மின்னியது. உதட்டில் பளிச்சென ஒரு மின்னல் வெட்டியது. அவைகளைக் கண்ட மன்னன் நிலை தடுமாறிவிட்டான். போதை உச்சிக்கு ஏறிவிட்டது. தேன்குடித்த நரியானான், பேசினான்:

'அன்பே, நான் சொல்லுவதை கவனமாகக் கேள். இனி உன்னுடைய சொல்தான் பாண்டி நாட்டு சட்டம். இந்த பரந்த பூமியை ஆளும் மன்னன் உன்னுடைய அடிமை. இதோ, இப்பொழுதே அத்தலைகளை அப்பால் அகற்ற ஆணை பிறப்பிக்கிறேன். போதுமா? மகிழ்ச்சிதானே?'

'அரசே, இந்த ஏழை கொடுத்து வைத்தவள்!'

'கோதை உன்னை ஏழை என்று சொல்லாதே. நீ பாண்டிமாதேவி; பட்டத்து அரசி!'

மன்னன் அவளை நெருங்கினான். அவளது வலது கரத்தை இழுத்து தன்னுடைய நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டான் அவள் அதனை விரைவில் விடுவித்துக் கொண்டாள்.

22

நவீன கைகேயி

ஆயிரமாயிரம் தமிழ் வீரர்களைக் கொன்று குவித்த கொடிய அரக்கர்கள் ஈழ சேனாபதிகளான இலங்காபுரியும், சகத்விசயனும். அவர்களைச் சோழர்கள் போரில் கொன்றார்கள். அத்தகைய கொடியவர்களுக்கு ஒரு பாடமாக அமையத் துண்டிக்கப்பட்ட அவர்களுடைய தலைகளை மதுரை புகழாபரணம் அரண்மனைக்கு முன்னர் பொருத்தி வைக்குமாறு அன்றைய சோழ சேனாபதி பணித்தார் அவருடைய ஆணையின்படி தலைகள் அரண்மனையின் வாயில் இருபுறங்களிலும் பொருத்தப்பட்டன. அதே போரில் ஈழத்தின் கைப் பாவையாகச் செயல்பட்ட வீரபாண்டியனையும் சோழர்கள் தோற்கடித்தார்கள் பாண்டிய அரசை குலசேகரனுக்கு அளித்தார்கள். எனவே இன்றைக்கு குலசேகரன் ஆளும் அரசு சோழர்கள் அளித்த பிச்சை. இதனைப் பாண்டி நாட்டில் உள்ள சிறு குழந்தையும் அறியும்.

ஆனால் பாண்டி மன்னன் குலசேகரனுடைய மதி விபரீதமான பாதையில் சென்றுவிட்டது. ஒரு பெண்ணின் மனதை மகிழ்விக்க வேண்டி பழைய வரலாற்றை மறந்தான். அவள்மீது கொண்ட மோகத்திற்குப் பலியாகி விட்டான். மன்னன் ஈழ சேனாபதிகளின் தலைகளை அப்புறப்படுத்தப் போகிறான். சோழர்களின் பகைமைக்கு ஆளாகப் போகிறான். இச் செய்தி நாடெங்கும் அடிபட்டது. பாண்டிய நாட்டு மக்கள் திடுக்கிட்டார்கள் நாட்டில் கொஞ்சகாலமாக குழப்பம் இல்லாமல் இருந்தது. அவர்கள் நிம்மதியாக வாழ்ந்தார்கள். ஆனால் இச்செயல் பெரும் தீமையில் கொண்டுபோய் விடும் என்று அஞ்சி நடுங்கினார்கள். கவலையில் துடித்தார்கள் ஆங்காங்கு வேதனையோடு பேசிக் கொண்டார்கள்.

காமவெறி தலைக்கேறிய பாண்டி நாட்டு மன்னன் தலை கால் தெரியாது ஆடினான். அவனுடைய செயல் தவறானது

என்பதை அமைச்சர்கள் அறியாது இல்லை. ஆனால் அரசனை இடித்துரைக்க யாருக்குமே துணிவு ஏற்படவில்லை. அப்பொழுது அத்தகைய துணிவுடன் இருந்தவர்கள் இருபடைத் தலைவர்கள் தான். இராசராச கற்குடி மாறாயன். இராசகம்பீர அஞ்சுகோட்டை நாடாழ்வான் என்று பெயர் கொண்டவர்கள் அவர்கள். அக்காலத்தில் மிகவும் செல்வாக்கு பெற்றிருந்த பெரியவர்கள். பக்தசீலர்கள். தூய்மைக்கும், ஒழுக்கத்திற்கும் பெயர் பெற்றவர்கள். திருச்சிற்றம்பலமுடையாருக்கும் சம வயதினர்கள். அவருக்கு நெருங்கிய நண்பர்கள். உண்மையைச் சொல்லப் போனால் பாண்டி நாடு சோழர்களிடம் பல சலுகைகளைப் பெற இவ்விருவர்களே காரணமாவார்கள். இவர்களுடைய பேச்சுக்கு சோழ அரசரிடம்கூட பதில் பேச்சு இல்லை.

இவ்விருவரும் ஈழப் பரிசுகளை பாண்டியன் ஏற்கும்போதே வெறுத்தார்கள். அது வரப்போகும் தீமையின் முன்னறிவிப்பு எனக் கருதினார்கள். அவற்றை ஏற்க வேண்டாமென மன்னனைத் தடுத்துப் பார்த்தார்கள். ஆனால் அவன் இவர்களுடைய வேண்டுகோளை ஏற்க மறுத்து விட்டான்.

இப்பொழுது இரண்டு நாட்களுக்குமுன் வந்த ஒரு பெண்ணின் பேச்சைக் கேட்டு மன்னன் ஈழ சேனாபதிகளின் தலைகளை அப்புறப்படுத்த ஆணையிட்டு விட்டான். இதனை அறிந்த அவ்விரு படைத் தலைவர்களும் வருந்தினார்கள். கெட்ட காலத்திற்கு அறிகுறியாக மன்னனுக்கு விபரீத புத்தி வந்துவிட்டது என வேதனைப் பட்டார்கள். அத்தலைகளை அப்புறப்படுத்தாது தடுப்பது தங்களுடைய கடமை எனக் கருதினார்கள். மன்னனிடம் பதைபதைத்து ஓடினார்கள். வணங்கி நின்றார்கள். முதலில் நாடாழ்வான் பேசினான்:

'அரசே, நாங்கள் கேள்விப்பட்ட செய்தி உண்மைதானா?'

'படைத்தலைவர்களே, பொறுமையாகப் பேசுங்கள். ஏன் இந்தப் பதட்டம்? முதலில் நீங்கள் கேள்விப்பட்ட செய்தி என்ன என்று சொன்னால்தானே, நான் அது உண்மை அல்லது பொய் என்று சொல்ல முடியும்?' அரசன் சிரித்தபடியே நாடாழ்வாரைப் பார்த்தான்.

'அரசே, அரண்மனையின் வாயிலில் பொருத்தப்பட்டுள்ள ஈழ சேனாபதிகளின் தலைகளை அப்புறப்படுத்துமாறு தாங்கள் ஆணையிட்டு இருப்பதாகக் கேள்விப் பட்டோம்.'

'ஆம், அது உண்மையே!

'அரசே, இந்த திடீர் ஆணைக்கான காரணத்தை நாங்கள் அறியலாமா?' இது மாறாயரின் வினா.

'இதில் புரியாத புதிர் என்ன இருக்கிறது படைத்தலைவர்களே! புகழ் மிக்க புகழாபரண அரண்மனையை கசாப்புக் கடையாக்க நான் விரும்பவில்லை.'

'தாங்கள் இம்மண்ணில் மன்னர் ஆகி எத்தனையோ திங்கள் ஓடிவிட்டன. இதுவரை இத்தலைகள் இருப்பது தங்களுக்கு கசாப்புக்கடையாகப்படவில்லை.'

'நேற்றுவரை தவறு செய்ததால் இன்று திருத்திக் கொள்ளக் கூடாது என்று நினைப்பவன் அல்ல நான்.'

'வேந்தே, இச்செயலின் விளைவுகளைத் தாங்கள் சிந்தித்தீர்களா?'

'சிந்தித்தேன். இச்செயலால் அரச அரண்மனை தூய்மை அடையும்.'

'இல்லை, சோழர்களுடைய சினம் சீறும்.'

'சோழர்கள் சினம் கொள்ளட்டுமே! ஒருவருடைய விருப்பு வெறுப்புக்காக நாம் வாழ முடியுமா? நம்முடைய நாட்டிற்கு எது நல்லதோ அதனைத்தான் நாம் செய்ய இயலும்.'

'அரசே, இந்த அரசு சோழர்கள் அளித்த பரிசு!'

'படைத் தலைவர்களே, நீங்கள் அதிகம் பேசுகிறீர்கள்! வரம்பு மீறுகிறீர்கள். சோழர்கள் போரில் எனக்கு உதவி இருக்கலாம். அதனை நான் மறுக்கவில்லை. ஆனால் அவர்களுடைய உதவிக்கு உள்நோக்கம் இல்லாது இல்லை. சோழ நாட்டுக்கு ஈழப்படை வரக்கூடாது என்பது அவர்களுடைய நோக்கம். அதனால் பாண்டி நாட்டை போர்க்களம் ஆக்கினார்கள். இந்நாட்டு மக்கள்தான் சோழர்களுக்கும்

ஈழத்துக்கும் நடந்த போரில் பலியானார்கள். இதெல்லாம் பழைய கதை. அன்று அவர்கள் உதவியதற்காக நாம் என்றென்றும் சோழர் களுக்கு அடிமையாக இருக்க முடியாது. சோழர்களோடு நாம் நட்போடு இருக்கத் தயார். மேலும் இது உள்நாட்டு பிரச்சினை. இதில் தலையிட அவர்களுக்கு உரிமை இல்லை.

'போர் என்று வந்தால் வெற்றியும், தோல்வியும் இயல்பே. இன்று சோழர்கள் ஆட்சி கொடிகட்டிப் பறக்கிறது. நான் மறுக்கவில்லை. இது என்றுமே நீடிக்குமா? இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு அதே பழையாறையை ஒட்டிய குடமூக்கில் ஒரு மாபெரும் போர் நடைபெற்றது. பாண்டி மன்னன் சீமாறன் சீவல்லப பரசக்கர கோலாகலன் சோழர்களைத் தோற்கடித்தான். அவர்களுக்குத் துணையாக வந்த பல்லவர்களையும் மண்ணைக் கவ்வச் செய்தான். அதற்காக சோழர்கள் பாண்டியரிடம் அஞ்சிக் கப்பம் கட்டிக்கொண்டே பெட்டிப் பாம்பாக இருந்திருந்தால் அவர்கள் இன்று இந்த உன்னத நிலையில் இருக்க முடியுமா? போர் என்றால் வெற்றியும், தோல்வியும் இயல்பே, தரை என்றால் மேடும் பள்ளமும் இருப்பது போல! எனவே இச்சிறு பிரச்சினையைப் பற்றி பேசி காலத்தை வீணாக்க வேண்டாம். நீங்கள் போகலாம்.'

இனி மன்னனைத் திருத்துவது என்பது இயலாத காரியம் என்று கருதிய அப் படைத் தலைவர்கள் அப்பால் சென்றார்கள்.

மன்னனுடைய ஆணையின்படி ஈழ சேனாபதிகளின் தலைகள் அரண்மனையின் வாயிலிலிருந்து அகற்றப்பட்டன.* அவைகளை எடுத்து இரு பெட்டிகளில் வைக்கப்பட்டன. முதலில் பெட்டிகளில் வாசனை மலர்களைக் கொட்டி அவற்றின்மீது தலைகள் வைக்கப்பட்டன. பின்னர் அவற்றின் மீது வாசனைத் திரவியங்கள் கொட்டப்பட்டு பெட்டிகள் அடைக்கப்பட்டன. அப்பெட்டிகள் அரச மரியாதையுடன் ஈழத்திற்கு அனுப்பப்பட்டன.

கோதை மன்னனுடன் அரண்மனை வாயிலுக்குச் சொன்றாள். இந்த நிகழ்ச்சியை மகிழ்வுடன் கண்டு களித்தாள். மன்னன் செய்த துணிகரமான செயலுக்காக அவனைப் பலமுறை ஏற்றிப் போற்றிப் பாராட்டினாள். அவனை வீராதிவீரன் என்று

*ஆதாரம்: திருவேலங்காட்டு கல்வெட்டு

வர்ணித்தாள் பாண்டிய நாட்டின் தவப்புதல்வன் என்று புகழ்ந்தாள் அவளிடமிருந்து நற்சான்றுகளைப் பெற்ற அரசனுடைய ஆனந்தம் எல்லையைக் கடந்துவிட்டது.

தலைகளை அப்புறப்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றதற்கு இரண்டாம் நாள் காலை மதுரை மன்னன் கோதையின் இருப்பிடத்திற்குச் சென்றான். அவனுக்கு இளமை திரும்பி விட்டது. கோதை ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு தன்னை வரவேற்பாள் என்ற மகிழ்வுடன் அவளிடம் சென்றான். அந்த காலை நேரத்திலேயே தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டு சென்றான்.

இராமாயணத்தில் இராமனுக்கு முடிசூட்ட தயரதன் முடிவு செய்துவிட்டான். அந்த இனிய செய்தியைச் சொல்ல அவன் கைகேயியுடைய மாளிகைக்கு மகிழ்வுடன் சென்றான். கைகேயியுடைய மாளிகையில் தயரதன் எதனைக் கண்டானோ, அதனையே அப்பொழுது குலசேகரபாண்டியனும் கண்டான்.

ஆனால், இங்கு கோதை கைகேயியைப் போல அலங்கோலமாக தரையில் விழுந்து கிடக்கவில்லை. காண்பவர் களைச் சுண்டி இழுக்கும் வகையில் தன்னை அலங்கரித்துக் கொண்டு இருந்தாள். மஞ்சத்தில் அமர்ந்திருந்தாள். அவளுடைய முகத்தில் கடுகடுப்பும், சோகமும் தவழ்ந்தன.

மன்னன் அவள் அருகில் சென்றான். அவனைக் கண்டவுடன் அவள் எழுந்திருக்கவும் இல்லை. வணக்கம் செலுத்தவும் இல்லை. முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டாள் அவளுடைய சந்திரவதனம் கும்பி வாடி இருந்தது. அதனைக் கண்ட அரசன் அலறிவிட்டான்.

'கோதை, என்ன இது? உன்னுடைய முகத்தில் மீண்டும் சோகம் தென்படுகிறதே! நீ காலால் இட்ட பணியை நான் தலையால் செய்து முடித்துவிட்டேன். இன்னுமா என்மீது கோபம்? ஓ, ஊடலா? அது காதலுக்குத் தேவைதான்!'

'அரசே, போதும் நிறுத்துங்கள், எனக்கு காதலும் வேண்டாம், ஊடலும் வேண்டாம்.' கோதை விக்கி அழ ஆரம்பித்துவிட்டாள். அவன் பதறிக் கொண்டு கேட்டான்:

'கோதை உண்மையிலேயே அழுகிறாயா? என்னுடைய நிழலில் இருக்கும் நீ அழலாமா? உன் கண்களில் நீர் வரலாமா? இப்பொழுது அப்படி என்ன வந்துவிட்டது?'

'அரசே, அருள்கூர்ந்து என்னை எதுவும் கேட்க வேண்டாம். சொல்ல முடியாது என்றால் என்னை விட்டு விடுங்கள். விரும்பத்தகாதவைகளை எல்லாம் சொல்லி தங்களுடைய நாட்டில் குழப்பம் ஏற்படுத்த நான் விரும்பவில்லை'.

'சொல், கோதை, என்ன நடந்தது? ஏதோ நடக்கக் கூடாதது நடந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படி விரக்தியோடு பேசமாட்டாய்.'

'ஆம், அரசே, நடக்கக் கூடாததுதான் நடந்துவிட்டது. அத்தகைய செயல்கள் இங்கு இயல்பாக இருக்கலாம். ஆனால் என்னால் தாங்க இயலாது. அவமானம் என்னுடனேயே இருக்கட்டும். இந்தக் கேவலத்தை வெளியில் சொல்லுவது எனக்கு மட்டுமல்ல, ஒரு பெரிய அரசுக்கே கேவலம். நாட்டை பரிபாலிக்கும் பாண்டிய பூபதிக்கு மிகவும் கேவலம். அருள் கூர்ந்து என்னை வற்புறுத்தி கேட்க வேண்டாம். நான் ஈழத்திற்கு பயணமாகத் தயாராகி விட்டேன். விடை கொடுங்கள். போவதற்கு முன்பு ஒன்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் குறுகிய காலத்திலேயே தாங்கள் என்னுடைய இதயத்திற்கும் மன்னராகி விட்டீர்கள் சொல்லப் போனால் இந்தப் பேதையினுடைய உடல், பொருள், ஆவி அனைத்தும் தாங்கள் தான். இப்பிறவியில் நாம் ஒன்றுபட்டு வாழ இந்தப் பாழும் உலகம் அனுமதிக்க வில்லை. அடுத்த பிறவியிலாவது நாம் யாருடைய தொல்லையும் இல்லாமல் ஒன்று சேர்ந்து உளமொத்து வாழப் பிரார்த்திப்போமாக!'

'ஐயையோ! உனக்கு என்மீது எவ்வளவு ஆழமான ஆசை! நீ என்னை விட்டுப் போகிறாயா? உன்னைப் பிரிந்து நான் உயிர் வாழ்வேன் என்று நினைக்கிறாயா? அப்படிப் போவதானால் உன் கையாலேயே எனக்கு விடம் கொடுத்து கொன்றுவிட்டுப் போ!'

'அரசே, நிறுத்துங்கள். அவ்வாறெல்லாம் பேச வேண்டாம். என் நெஞ்சு வெடித்துவிடும்.' அவள் மன்னனுடைய அருகில் பரபரப்புடன் சென்று அவனுடைய வாயைத் தன்னுடைய வலது

கரத்தால் பொத்திக் கொண்டாள். பின்னர் கையை எடுத்துக் கொண்டு சற்று விலகி நின்றாள். தேம்பி தேம்பி அழுதாள். வேந்தனுக்கு போதை வேகமாக உச்சிக்கு ஏறிவிட்டது.

'கோதை! தயவு செய்து அழுகையை நிறுத்து. உன்னுடைய கண்ணீரால் என்னைக் கொல்லாதே.' அவன் இச்சொற்களைக் கூறியவாறே நெருங்கிப்போய் அவளுடைய கரத்தைப் பற்றினான். மீண்டும் கெஞ்சிக் கேட்டான்:

'பெண்ணே, அருள்கூர்ந்து சொல்லிவிடு. நாம் ஒன்று சேர்ந்து வாழாமல் தடுக்கும் வலிமை படைத்தவனும் இந்த உலகில் இருக்கிறானா? யார் அவன்?'

'அன்பே, என்னை விடுங்கள். எனக்கு விடை கொடுங்கள். இதுவரை என் காலடியில் மண்டியிட்ட மன்னர்களையெல்லாம் உதறித் தள்ளினேன். ஆண் இனத்தையே விடமாக வெறுத்தேன். ஆனால் அத்தகைய எனக்கு முதன் முதலாக தங்கள்மீது ஒரு சபலம் ஏற்பட்டது. ஆனால் இப்பாண்டி அரண்மனையில் என்னை நேசிக்க பலபேர் இருப்பதாகத் தெரிகிறது. நான் பாஞ்சாலியைப்போல, பலருக்கு பத்தினியாக இருக்க விரும்பவில்லை. பாண்டி மன்னருக்கு மட்டுமே பத்தினியாக இருக்க விரும்பினேன். இது இயலும் போலத் தெரியவில்லை. போதும், அரச போகமும், அரண்மனைக் காதலும்!'

'கோதை, உன்னுடைய கால்களில் மண்டியிட்டுக் கேட்டுக் கொள்ளுகிறேன். விரைவில் சொல். என்னுடைய இரத்தம் கொதிக்கிறது. நெஞ்சு நடுங்குகிறது. அது சுக்கல், சுக்கலாக வெடித்து நான் பிணமாவதற்குள் சொல்லி விடு. என்னைத் தவிர, இங்கு வேறு யார் உன்னை நேசிக்க இருக்கிறார்கள்? என்னுடைய காதல் தேவதையின் மீது கண் வைத்த கயவன் யார்? அதுவும் இதே அரண்மனையில் அப்படி ஒருவன் இருக்கிறானா?'

'அரசே, ஒரு அழகான பெண்ணைப் பார்த்தால், ஆணாகப் பிறந்தவர்கள் மனதில் சலனங்களும், சபலங்களும் ஏற்படுவது இயல்புதான். அவளை மனதில் விரும்புவதும் இயல்பே! ஆனால் பட்டப் பகலில் ஒரு பெண்ணை பலாத்காரம் செய்வது என்பது சாதாரண நிகழ்ச்சியா? அதுவும் இந்நாட்டு மன்னரின் காதலியை, அவருடைய அரண்மனையிலேயே!'

'கோதை, இனி என்னால் பொறுக்க இயலாது. என்னுடைய பட்டத்து இராணியிடம் தவறாக நடந்து கொண்ட அந்தக் கயவனுடைய பெயரைச் சொல். உடனே சொல். அவனை என்ன செய்கிறேன் பார்! அவனைத் துண்டு, துண்டாக வெட்டித் தள்ளுகிறேன்.' வெறி பிடித்து பலமான குரலில் கூறிய மன்னன் இடுப்பில் தொங்கிய வாளை உறையிலிருந்து வேகமாக எடுத்தான். அதனை பலமுறை சுழற்றினான். அவனுடைய முகம் கொல்லன் பட்டறைஅனல் என கொதித்தது. பற்களை நறநறவெனக் கடித்தான். அவனுடைய பார்வையின் அனல் எதற்கும் அஞ்சாத கோதையையே தாக்கி, அஞ்சி நடுங்க வைத்தது.

'அரசே, அதனைக் கேட்கவேண்டாமென எத்தனையோ முறை சொல்லிவிட்டேன். விடமாட்டேன் என்கிறீர்கள். நான் உண்மையைச் சொன்னால் விபரீதங்கள் விளையும். அரசை தாங்கிப் பிடித்துக் கொண்டு இருக்கும் பெரிய மனிதர்களின் பெயர்களை இழுக்கவேண்டி வரும். தங்களுக்கு என் மீது உள்ள அன்பால் அவர்களுக்குக் கடும் தண்டனை கொடுப்பீர்கள்!'

'சொல் கோதை, குற்றவாளியைத் தண்டிப்பதுதான் கொற்றவனுடைய கடமை. அதனைச் செய்யாமல் பூப்பறித்துக் கொண்டு இருக்கச் சொல்கிறாயா? அது என்னால் இயலாது. நீ சொல்லாவிட்டால் நான் வெறியனாகி விடுவேன். இந்த வாளால் என்னையே குத்திக் கொண்டு சாவேன்.'

'ஐயையோ! அப்படி எல்லாம் சொல்லவேண்டாம். தாங்கள் இறந்த பின்னர் இந்தப் பேதையின் உயிர் மட்டும் உடலில் நிலைக்குமா? இங்கு இரு பிணங்கள் விழும். இனி சொல்லா விட்டால் வழி இல்லை. சொல்லுகிறேன். நேற்று இங்கு ஒரு படைத்தலைவர் வந்தார். இந்நாட்டு படைத்தலைவர் ஆயிற்றே என்பதால் அவரைத் தக்க மரியாதையுடன் வரவேற்றேன். தாங்கள் சற்றுமுன் அமர்ந்திருந்த இதே ஆசனத்தில் அமருமாறு வேண்டினேன். அவர் அமர்ந்தார். என்னுடைய நலன்களைப் பற்றிக் கனிவோடு விசாரித்தார். அரண்மனையில் என்னுடைய தேவைகள் அனைத்தும் தடையின்றி கிடைக்கின்றனவா என்று மீண்டும் மீண்டும்

கேட்டார். பாண்டி நாட்டு நிழலில் எனக்கு ஒரு குறையும் இல்லை என்று விடை அளித்தேன்.

'பின்னர், தாகமாக இருக்கிறது என்றார். அப்பொழுது பணிப்பெண் ஏதோ வேலையாக வெளியில் சென்றிருந்தாள். நானே உள்ளே ஓடி ஒரு கோப்பையில் மோர் கொண்டு வந்தேன். வெளியில் இருந்த ஏவலாளிகளையும் நான் அழைக்கவில்லை. பணியாட்கள் மூலம் படைத்தலைவரை உபசரிப்பது பண்பு அல்ல. நான் கொண்டு வந்த கோப்பையை அவரிடம் கொடுக்கக் கரத்தை நீட்டினேன். அப்பொழுது எதிர்பாரத செயல் நடந்துவிட்டது. அந்தக் கோப்பையை அவர் வாங்க வில்லை. கோப்பையைக் கொடுக்க நீட்டிய கரத்தை அப்படியே இழுத்துப் பிடித்துக் கொண்டார். அந்தக் கயவன் 'அன்பே, இப்படி வா,' எனக் கூறி என்னுடைய கரத்தை பலமாக இழுத்தார். நான் பதறிவிட்டேன். அந்த இரும்புப் பிடியிலிருந்து என்னுடைய கரத்தை விடுவிக்க இயலவில்லை. 'என்னுடைய கரத்தை விடு. போ வெளியே!' என்று பலமாகக் கத்தினேன். என்னுடைய குரலைக் கேட்டு வெளியில் இருந்த பணியாட்கள் ஓடிவந்தார்கள். அவர்கள் தொலைவில் வரும்போதே படைத்தலைவர் சாளரத்தின் வழியாக அவர்களைப்பார்த்து விட்டார். அவருடைய இரும்புப் பிடி தளர்ந்தது. என்னுடைய கரத்தை விடுவித்துக் கொண்டேன். அப்படைத் தலைவருக்கு ஏற்பட்ட ஏமாற்றம் கோபமாக மாறிவிடவே அவர் கத்தினார்:

'பெண்ணே, என்னை யார் என்று நினைத்தாய்? உன்னைத் தக்க வழியில் கவனிக்கிறேன். அரண்மனையில் இருப்பதால்தானே ஓலமிட்டு பணியாட்களை அழைத்து விட்டாய். நாளை இரவே உன்னை இங்கிருந்து கடத்திச் செல்ல ஏற்பாடு செய்கிறேன் பார். அப்பொழுது யார் வந்து உன்னைக் காப்பாற்றுகிறார்கள் என்பதையும் பார்க்கிறேன். உன்னைக் கட்டி அணைத்து கசக்கி முகராவிட்டால் என்னுடைய பெயர் இராசராச கற்குடி மாறாயன் அல்ல.

'சவால்விட்ட அம்மனிதர் இவ்விடத்தைவிட்டு மிடுக்குடன் வெளியேறினார். இன்று இரவு அவர் என்னைக் கடத்திக் கொண்டுபோய் கற்பழிப்பதற்கு முன்னர் இவ்விடத்தை விட்டு நான் தப்ப வேண்டும். என்னைத் தடுக்க வேண்டாம்.'

'என்ன சொன்னாய், கோதை? கேவலம் அந்த மாறாயன் உன்னைப் பெண்டாள முற்பட்டானா? என்னுடைய பட்டத்து இராணியை அவன் தொட்டு இழுத்தானா? என்னால் பொறுக்க இயலவில்லை. அவனை துண்டு துண்டாக வெட்டிப் போடுகிறேன் பார்.' மன்னன் வாயிற்படியை நோக்கி உரத்த குரலில் கத்தினான்:

'யாரடா அது? விரைவில் ஓடு. அந்த அயோக்கியன் மாறாயனை இழுத்துக் கொண்டு வா.'

மன்னன் தன்னுடைய கரத்தில் இருந்த வாளை கோபத்தால் அப்படியும் இப்படியுமாக வீசினான். இடது கையால் மீசையைத் தடவினான். வெஞ்சினத்தால் ஆட்கொள்ளப்பட்ட அவன் ஒரு பூதமாகத் திகழ்ந்தான். ஓரிடத்தில் ஆடாது நிற்க அவனால் இயலவில்லை. வெறி கொண்டு அங்கு இங்குமாக அந்த இடத்தில் அலைந்தான். அப்பொழுது கோதை கூறினாள்:

'பிரபு, பொறுமையாகச் சிந்தனை செய்யுங்கள். வந்தவரைப் பார்த்தால் பெரிய மனிதராகத் தெரிகிறது. அவர் இந்த அரசைத் தாங்கும் பெரிய தூண் என்று காவல் ஆட்கள் கூறினார்கள். அத்தகையவருடைய உயிரைப் பறிக்க நான் காரணமாக இருக்க விரும்பவில்லை.'

அப்பொழுது அங்கு மாறாயன் வந்து சேர்ந்தான். காவல் ஆட்கள் விரைந்து போய் அவனை அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்கள். அவன் வந்தவுடன் மன்னரை வணங்கினான். மரியாதையுடன் நின்றான். அவனுக்கு அங்கு நடைபெற்றது ஒன்றுமே தெரியாது. அவனைப் பார்த்து மன்னன் சினத்துடன் கேட்டான்:

'மாறாயா, எனக்கு முன்னால் வந்து நிற்க உனக்கு என்ன தைரியம்?'

'அரசே, தாங்கள் அழைத்ததால்தான் இங்கு வந்தேன்.'

'கேடுகெட்ட கிழவா! உன்னை உயிருடன் விட்டு வைப்பது பெரும்பாவம். இதோ உன் செயலுக்கு தக்க பரிசு.'

மன்னன் மாறாயனுடைய கழுத்தைப் பார்த்து வாளை வீசினான். கோதை விரைந்து சென்று அதனைத் தடுத்தாள். ஓங்கி வந்த வாளை இழுத்துப் பிடித்துக் கொண்டாள். 'அரசே பொறுங்கள்' என்று கூறினாள் மன்னனுடைய சினம் தணியவில்லை. மாறாயனைப் பார்த்து பேசினான்:

'மாறாயா, இந்த பெண்ணின் தயவால் இந்த நொடியில் உயிர் தப்பினாய். ஆனாலும் உன்னை நான் விடப்போவதில்லை.'

'அரசே, என்ன சொல்கிறீர்கள்? நான் என்ன பிழை செய்தேன்? நான் செய்த பிழையைச் சொல்லிவிட்டு, பின்னர் கொல்லுங்கள்.' இச்சொற்களைக் கூறிய மாறாயன் ஒன்றுமே விளங்காமல் துடித்தான். அவனுடைய முகம் வாடி விட்டது. வேதனையோடு பார்த்தான். மன்னன் இரைந்தான்:

'போதும், நிறுத்தடா உன் நாடகத்தை, மீண்டும் பேசி என்னுடைய கோபத்தைக் கிளறாதே! ஒன்றும் தெரியாதவனைப் போல நடிக்காதே. எனக்கு எல்லாம் தெரியும். உன்னிடம் எந்த விளக்கத்தையும் கேட்க நான் தயாராக இல்லை.' அவன் கோதையின் பக்கம் திரும்பிக்கேட்டான்:

'கோதை, நீயே தீர்ப்புச் சொல். இவனுக்கு ஏற்ற தண்டனையைக் கொடு. நீ கொடுக்கும் தண்டனையை நான் நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறேன்.'

'பிரபு தங்களுடைய ஆணை! இந்தக் குற்றவாளி செய்தது மிகப் பெரும் குற்றம். என்னைப் பெண்டாள நினைத்தான். அவனுடைய இச்சைக்கு இணங்குமாறு பலாத்காரம் செய்ய முற்பட்டான். அதுமட்டுமல்ல, மேலும் ஒரு பெரிய குற்றம் செய்கிறான். இவன் உண்பது பாண்டிய நாட்டு உணவு. ஆனால் செய்வதோ சோழர்களுக்கு உளவுப்பணி. இது எனக்கு ஆதாரங்களோடு தெரியும். எனவே இந்த கயவனுக்கு ஏற்றது மரண தண்டனையே.'

'அன்பே, உன்னுடைய விருப்பம் எதுவோ, அதுதான் இந்த நாட்டின் சட்டம். இந்த குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்க ஆணையிடுகிறேன்.' அவன் பேசும் போது கோதை இடை மறித்துக் கூறினாள்:

'அரசே, சற்றுப் பொறுங்கள், என்னுடைய பேச்சை இன்னும் முடிக்கவில்லை. இவனுக்கு ஏற்றது மரண தண்டனைதான். ஆனால் இந்த கொடியனை எளிதில் சாகவிட

கூடாது. இவனை உயிரோடு விடவேண்டும். அப்பொழுதுதான் அந்த சோழன் இவன் மூலமாக நம்முடைய ஆற்றலை உணர ஏதுவாகும். சோழர்கள் அப்பொழுதுதான் நமக்குப் புதிதாக ஏற்பட்டுள்ள ஈழ நாட்டு உறவுகளையும் அதனால் தாங்கள் பெற்றுள்ள புதிய சக்தியையும் உணருவார்கள். நம்முடைய வலிமையை சோழன் உணர்ந்தால்தான் பழையபடி துள்ள மாட்டான். அஞ்சி வாலை மடக்கிக் கொண்டு சும்மா கிடப்பான். அதற்காக இவனை உயிரோடு விடுவதுதான் நல்லது. இவனை நாமே சோழ நாட்டிற்கு அனுப்பி வைப்போம்.'

'நீ என்ன சொல்லுகிறாய்! நாமே இவனைச் சோழ நாட்டிற்கு அனுப்புவதா? அது தண்டனையாகுமா?'

'அரசே, இதனை வேறு வழியில் சொல்லட்டுமா? இக் கொடியவனை நாம் நாடு கடத்துவோம்.'

'கோதை, நீ எது சொன்னாலும் அது நல்லதாகத் தான் இருக்கும். இனி இந்தக் கயவன் பாண்டி நாட்டு மண்ணில் வசிக்கத் தகுதியற்றவன்.' அவன் வாயிற்படியைப் பார்த்தபடி உரத்த குரலில் கூறினான்:

'யாரங்கே, உடனே சேனாபதியை அழைத்துக் கொண்டு வா. இவனைக் கொண்டு போய் வெள்ளாற்றின் வடக்கே சோழ நாட்டு எல்லையில் விட்டுவிட்டு வரவேண்டும்.'

மன்னன் ஆணையிட்டு விட்டான். மாறாயன் ஒருவாறு நிலைமையைப் புரிந்து கொண்டான். பாண்டி நாட்டிற்கு அப்பெண் மூலமாக கெட்ட காலம் வந்துவிட்டது என வேதனைப்பட்டான். அரசனைப் பார்த்துக் கேட்டான்:

'அரசே, விசாரணை, தீர்ப்பு எல்லாம் தாங்களாகவே முடிவு செய்து விட்டீர்கள் ஒருகணம் பேச எனக்கு அனுமதி அளியுங்கள். என்னை நாடு கடத்துவது இருக்கட்டும். இவளைப் பற்றி ஒன்றே ஒன்று சொல்லிவிட்டுப் போவது என்னுடைய கடமை. இவள் எனக்குப் புதியவள் அல்ல. ஏற்கனவே இவளை அறிவேன் அதனால்தான் என்னை ஒழித்துக் கட்டத் திட்டமிட்டு விட்டாள். இவள் பெண் அல்ல, பேய். இந்த நாட்டை அழிக்க திட்டமிட்டே இங்கு வந்திருக்கிறாள். இவள் சொல்லும் குற்றச்சாட்டுக்கள் எல்லாம் பொய்யானவை. நல் உறவோடு இருக்கும் நம்மையும், சோழர்களையும் பிரிக்கவே

இவள் வந்திருக்கிறாள். இவளுடைய வலையில் விழவேண்டாம். அருள்கூர்ந்து என்னை நம்புங்கள். என்னுடைய சொல்லைக் கேளுங்கள். நான் இம்மண்ணின் மைந்தன். தங்களுடைய உப்பைத் தின்றவன். தங்களின் நலம் நாடும் ஊழியன். இந்த மாயா சூர்ப்பனகையினால் சோழ நாட்டிற்கும், பாண்டி நாட்டிற்கும் பகைமை வரும். இம்மண்ணில் மீண்டும் ஓர் கொடிய போர் நடக்க வழி கோலாதீர்கள். பல ஆயிரம் பேரைப் பலியிட வழி செய்ய வேண்டாம். போரின் இறுதியில் தங்களுடைய சிம்மாதனம் பறிபோய்விடும். இது என்னுடைய வாக்கு அல்ல. என்னுடைய இதயத்தில் இலங்கும் சத்திய முரசொலி.'

இந்த சொற்களைக் கேட்டு மன்னன் சினந்து எழுந்தான். சீறிக் கொண்டு பேசினான்:

'யாராட அங்கே? இந்த குற்றவாளியை இழுத்துச் செல்லுங்கள். என்னுடைய அரசுக்கு அழிவு வந்துவிடும் என்று சபிக்க இவனுக்கு என்ன துணிவு!'

'அதுவும் தங்களுக்கு முன்னால்!' கோதை அரசனை சீண்டிவிட்டாள். அரசன் கூறினான்:

'இதற்குள் இவனுடைய தலையைச் சீவி இருக்க வேண்டும். ஆனால் என் எழிலரசி, உன்னுடைய அன்பு கட்டளைக்கு அஞ்சி சும்மா இருக்கிறேன். மாறாயா, அப்பால் போ. என்னுடைய கண்ணுக்கு எதிரில் இப்பெண்ணைத் தூற்றினாய். ஆயினும் இவள் உன்னை உயிரோடு விடும்படி வாதாடுகிறாள். இவளுடைய உயர்ந்த பண்பை உணர உனக்கு அறிவு ஏது? தெரிந்து கொள். உன்னுடைய உயிர் இவள் கொடுத்த பிச்சை.'

மன்னன் காவலர்களை உற்றுப் பார்த்தான்.

மாறாயன் சிங்கமென நிமிர்ந்து கம்பீரமாக வெளியே நடந்தான். அவனுக்கு இருபுறங்களிலும் உருவிய வாட்களுடன் காவலர்கள் நடந்தார்கள்.

23

மற்றுமொரு பலி

இராசராச கற்குடி மாறாயனும், இராசகம்பீர அஞ்சு கோட்டை நாடாழ்வானும் உற்ற நண்பர்கள். அவ்விருவரும் செயலாலும், சிந்தனை ஓட்டத்தாலும் ஒன்று பட்டே திகழ்ந்தார்கள். அவ்விரு பெரியார்களும் தமிழ் மண்ணின்மீது அளவிடற்கரிய பக்தி கொண்ட தேச பக்தர்கள். அந்நாளில் ஈழத்தின் தலையீட்டை வன்மையாக எதிர்த்து செயல்பட்டவர்கள் இவ்விருவர்களும்.

கோதையைப் பற்றி அவர்கள் முன்பே ஓரளவிற்கு அறிவார்கள். அவளுடைய வருகை வரப்போகும் கெட்ட காலத்திற்கான முன்அறிவிப்பு என்று கருதினார்கள் அவர்களுடைய நம்பிக்கை வீண்போகவில்லை. அவள் பாண்டி நாட்டிற்கு வருகை தந்த இரண்டு நாட்களிலேயே ஈழசேனா பதிகளின் தலைகள் அகற்றப்பட்டன. மாறாயன்மீது கேவலமான பழியைச் சுமத்தினாள். அவனை நாட்டை விட்டே துரத்த வழி செய்துவிட்டாள்.

அடுத்து என்ன நடக்குமோ என அஞ்சுகோட்டை நாடாழ்வான் அஞ்சினான். நாசத்தின் எல்லையை நோக்கி வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் அரசனுக்காகப் பரிதாபப் பட்டான். அரசன் கேட்டாலும், கேட்காவிட்டாலும் அவனுக்கு தக்க ஆலோசனைக் கூறுவது தன்னுடைய கடமை என அவன் கருதினான். எனவே, அவனுடைய மாளிகைக்குச் சென்றான். மனநிம்மதியற்று சோர்ந்து அம் மாளிகையை அணுகினான்.

மன்னன் மாளிகையில் தனிமையில் அமர்ந்திருந்தான். நாடாழ்வான் அங்கு சென்றான். 'மன்னர் வாழ்க, பாண்டி நாடு வெல்க!' என்று விருது கூறித் தலை வணங்கினான். அதனை ஏற்கும் வகையில் புரவலன் தலையை அசைத்தான்.

'வரவேண்டும், வரவேண்டும் நாடாழ்வாரே! ஏதோ முக்கியமான செய்தி இருக்கவேண்டும். இல்லாவிட்டால் நான்

அழைக்காமல் அரண்மனைக்கு வர மாட்டீர்களே.' அரசனே முதலில் பேச்சைத் துவக்கினான்.

நாடாழ்வான் தலைதாழ்ந்து பேசாமல் இருந்தான். பேச முயன்றான். ஆனால் பேச்சை எப்படி துவக்குவது, எந்த முறையில் பேசுவது என்று தயங்கிக் கொண்டு நின்றான்.

மன்னன் ஒரு 'உம்' கொட்டி நாடாழ்வானை அவசரப் படுத்தினான். நாடாழ்வான் தயங்கிக் கொண்டே பேச்சைத் துவக்கினான்.

'அரசே, மாறாயர்.....'

'மாறாயனா, அவனுக்கு என்ன? அவன் இப்பொழுது சோழ நாட்டில் சுகமாக இருப்பான். அவனுடைய பதவியை பறித்துக் கொண்டு நாட்டைவிட்டே துரத்தி விட்டேன்.'

'அரசே, அருள்கூர்ந்து நான் கேட்பதற்காக கோபிக்க வேண்டாம். தங்களின் செயல் ஏற்றதுதானா? அதனுடைய விளைவுகளைப் பற்றிச் சிந்தித்தீர்களா?'

'நிச்சயமாக.'

'இதனுடைய விளைவுகளைப் பற்றி சிந்தித்தீர்களா என மீண்டும் கேட்கிறேன்.'

'ஓ சிந்தித்தேன். எத்தனைமுறை கேட்டாலும் விடை ஒன்றுதான். மாறாயனை நாட்டைவிட்டு துறத்தியது தீமை என்கிறீரா? உண்மையில் அதனால் நல்ல விளைவுகள் ஏற்படும். நாட்டில் ஒரு துரோகி குறைந்துவிட்டான். துரோகி ஒழிவது என்பது எந்த நாட்டிற்கும் நன்மையைத் தான் பயக்கும் நாடாழ்வாரே!'

'அரசே! நாட்டுப் பணியன்றி வேறு ஒன்றுமே அறியாத அந்தப் பெரியவர் நாட்டுத் துரோகியா?'

'அரசை அண்டி வந்த ஒரு அயல் நாட்டுப் பெண்ணை கற்பழிக்க முயற்சிப்பது துரோகம் அல்ல, பாராட்டி பரிசு கொடுக்க வேண்டிய செயல் என்கிறீரா நாடாழ்வாரே!'

'மன்னர் பெருமானே, இதனை என்னால் நம்ப முடிய வில்லை. இது வீண் பழி. இதில் ஏதோ சூது இருக்க வேண்டும்.'

நாடாழ்வான் உணர்ச்சி வசப்பட்டு பேசினான். அந்த நேரத்தில் அங்கு கோதை வந்து சேர்ந்தாள். அவளுடைய வருகையை மன்னன் எதிர்பார்க்கவில்லை. தான் மன்னருடன் உரையாடும்போது அவ்வளவு உரிமையுடன் அங்கு கோதை

வருவாள் என நாடாழ்வான் எண்ணவே இல்லை. நாடாழ்வான் பேச்சைக் கேட்டுக்கொண்டு உள்ளே வந்த கோதை தானாகவே நாடாழ்வானைப் பார்த்துக் கேட்டாள்:

'எது வீண்பழி படைத்தலைவரே?, அவளுடைய குரலில் குயில் பாடியது. அவள் தனக்கு அளிக்கப்பட்ட மாளிகையை விட்டு அரசனுடைய மாளிகைக்கு வந்தது அதுவே முதல் தடவையாகும். எனவே அரசன் மெய் மறந்தான். ஆனந்த களிப்பால் மது உண்ட குரங்கு போல தலைகால் தெரியாமல் ஆடினான்.

'வா கோதை, உள்ளே வா. நான் மிகவும் கொடுத்து வைத்தவன். நீயே என்னை நாடி என்னுடைய மாளிகைக்கு வருகை தந்திருக்கிறாய்! உன்னுடைய பட்டுப் பாதங்கள் நோக நடந்தே வந்திருக்கிறாய். மெத்த மகிழ்ச்சி. உட்கார் அன்பே. இதோ இந்த மஞ்சத்தின்மீது உடகார்.'

அவள் மன்னனுக்கு நன்றி கூறிவிட்டு புன்முறுவலுடன் மஞ்சத்தின்மீது அமர்ந்தாள். 'என்னுடைய செல்வாக்கைப் பார்' என்பதை பறை சாட்டுவதைப் போல அங்கு நின்றிருந்த நாடாழ்வானை ஏளனத்துடன் பார்த்தான். அரசன் அதே மஞ்சத்தின் மீது கோதையின் அருகில் அமர்ந்து அவள்பால் தனக்கு உள்ள உரிமையை நாடாழ்வானுக்குக் காட்டினான். நாடாழ்வான் நின்றவாறே அவர்களைப் பார்த்துக் கொண்டு இருந்தான். ஏளனம் எழில் வதனத்தில் விளையாட கோதை கொஞ்சும் குயிலின் குரலில் பேசினாள்:

'படைத்தலைவரே, நான் தொடுத்த வினாவிற்கு மறு மொழியே வரவில்லையே!'

'நான் இங்கு வந்தது அரசருடன் மட்டும் பேசத்தான்.' அவளுடைய முகத்தில் அறைந்தது போல நாடாழ்வான் பேசினான். அவனுடைய வார்த்தையில் நெருப்பு தெறித்தது. தன் முகத்தை மன்னர் பக்கம் திருப்பிக் கொண்டான். கோதை அதனைப் பொருட்படுத்தாது தொடர்ந்தாள்:

'ஓ, அப்படியா! இந்நாட்டின் படைத்தலைவர் என்னுடன் பேசமாட்டாரா? இருக்கட்டும். இங்கு நான் எவ்வளவோ தெரிந்து கொள்ள வேண்டியது இருக்கிறது. நல்ல நாடு இது! இங்கு நடப்பது எல்லாம் தலைகீழாக இருக்கிறது. இந்நாட்டிற்கு என சாணக்கியன் தனியாக அரசியல் சாத்திரம் எழுதியிருப்பான். அரசனுக்கு ஆலோசனை சொல்லுவது அமைச்சனுடைய

தொழில். படைகளை நடத்திச் செல்லுவது படைத் தலைவனுடைய தொழில். இதுதான் இதுவரை நான் தெரிந்து கொண்டு இருக்கிறேன். இங்கு என்னடா வென்றால் ஒரு படைத் தலைவன் திறந்த வீட்டில் ஏதோ நுழைவதைப்போல நேராக அரசமாளிகைக்கு வருகிறான். அரசருக்கு ஆலோசனை சொல்கிறான். அரசன் சொல்வதை நம்ப முடியாது என்று தட்டிப் பேசுகிறான். அதனையும் அரசர் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார். நல்லநாடு இது, நல்ல அரசர் தாங்கள்! அரசே, உண்மையிலேயே நான் மிகவும் பரிதாபப்படுகிறேன். இந்த பாண்டி நாட்டு அரசுக்காக!'

'கோதை, அப்படி எல்லாம் பேசாதே. நான் நினைத்தால்.....' என்று கூறிய மன்னன் தன்னுடைய கரத்தை வேகமாக உயர்த்திக் காட்டினான்.

'அப்படி என்றால் தாங்கள் நான் நினைத்ததை ஏற்கவில்லை..... அது தங்களுக்கு ஏற்றதாகப்படவில்லை. நான் பேசியது தவறு. அப்படித்தானே?' கோதையின் கண்களில் நீர் கொட்டியது. அது அவளுடைய கன்னங்களின்மீது பாய்ந்து போய் மார்பை நனைத்தது. அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கூறினாள். 'அரசே தங்களுடைய பஞ்சு உள்ளத்தை இப்பேதை புண்படுத்தி விட்டேன்.' அவளுடைய அழுகை நிற்க வில்லை. மன்னன் கலங்கிவிட்டான்.

'அழவேண்டாம் கோதை. மீண்டும் சொல்லுகிறேன். உன் கண்ணில் நீர் வழிந்தால் என் உடலில் உயிர் நிற்காது.' மன்னன் நாடாழ்வானை முறைத்துப் பார்த்தான். தொடர்ந்து பேசினான்:

'நாடாழ்வானே, நன்கு பார். அனிச்ச மலர் போன்ற இந்த எழில் இராணியைப் பார். இத்தகையவளை வன்முறையில் பெண்டாள முயன்றான், அந்த மாறாயன். அவனை பாராட்டச் சொல்கிறாயா!'

'அரசே, அந்த சொக்கநாதனே என் எதிரில் தோன்றி மாறாயர் ஒரு பெண்ணைக் கற்பழிக்க முயன்றார் என்று கூறினாலும்கூட நான் நம்பமாட்டேன்.'

'நீ நம்ப வேண்டாம். அதைப் பற்றி எனக்கு என்ன கவலை? நான் நம்புகிறேன். நான் உன்னை மதித்து அழைத்து அச் செயலைப்பற்றி உன்னுடைய கருத்தைக் கேட்டால் அப்பொழுது சொல். இப்பொழுது உன்னுடைய கருத்தை நான் கேட்க வில்லையே!' அரசனுடைய குரலில் ஏளனம் வெளிப்பட்டது.

'நல்ல அரசு இது! மன்னனை நம்பாத படைத் தலைவன்! அதுவும் அரசரின் எதிரிலேயே நின்றுகொண்டு நீங்கள் சொல்வதை நான் நம்ப மாட்டேன் என்று எதிர்த்துப் பேசும் படைத்தலைவன். அவமானம்! தங்களை ஒரு நாட்டின் அரசர் என்று நினைத்த எனக்கு வேண்டும் இந்த அவமானம்! கோதை மன்னனைச் சீண்டிவிட்டாள். அவள் தொடுத்த அம்பு நன்றாக வேலை செய்தது. பாய வேண்டிய இடத்தில் நன்றாகப் பாய்ந்துவிட்டது.

இதயத்தில் அம்பு தாக்கப்பட்ட மன்னன் கொதித்து எழுந்தான். அவனுடைய வலதுகரம் வாளைத் தடவியது. அவனுடைய கோபத்தைக் கண்ட நாடாழ்வான் சற்று அப்பால் நகர்ந்து நின்றான். அரசன் அனல் தெறிக்கப் பேசினான்:

'படைத்தலைவனே, அப்பதவியை காப்பாற்றிக் கொள்ள உண்மையில் உனக்கு விருப்பமா? விருப்பம் இருந்தால் உன்னுடைய பேச்சுக்கு மன்னிப்புக் கேள்.'

'மன்னிப்பு கேட்க வேண்டுமா? நான் எதற்காக மன்னிப்பு கேட்க வேண்டும்? நான் என்ன தவறு செய்தேன் அரசே? அதுவும் இந்தப் பேயின் முன்னால் நான் மன்னிப்பு கேட்க வேண்டுமா?'

'என்ன சொன்னாய்? நான் பேயா? போதும், போதும். பாண்டி நாட்டிற்கு வந்ததும் போதும். நான் பெற்ற பட்டங்களும் போதும்! இத்தகைய படைத் தலைவனுடைய ஆட்சி கொடி கட்டிப் பறக்கும் இந்த இடத்தில் இனி ஒரு நொடியும் நிற்கமாட்டேன்.' இந்த அம்பைவீசிவிட்டு அவள் மிடுக்குடன் வேகமாக வெளிவாயிற்படியை நோக்கி நடந்தாள். அவளுடைய வார்த்தைகளில் தெறித்தது போலவே, பார்வையிலும் நெருப்புத் துண்டங்கள் தெறித்தன. அரசன் அவளுக்கு எதிரில் போய் நின்றான். இரு கரங்களையும் பக்கவாட்டில் நீட்டியவாறு அவள் போகாமல் தடுத்து நிறுத்தினான் அவளைப் பார்த்துக் கெஞ்சினான்:

'கோதை, எனக்காக நில். தயவு செய்து நில். என்னை விட்டுப் போய்விடாதே.'

'நான் இனி யாருக்காகவும் இங்கு தங்க மாட்டேன். விந்தையான நாடு. இந்நாட்டிற்கு ஒரு அரசர். அவருக்கு இத்தகைய மதி கெட்ட மூடர்கள் எல்லாம் படைத் தலைவர்கள். மகாபாரத்தில் துரியோதனனுக்கு கிடைத்த விதுரனும், பீஷ்மனும், துரோணனும் போன்ற கூட்டங்கள் இவர்கள். இவர்களுக்கு வயிறு

மட்டும் பாண்டிய நாட்டில். ஆனால் உள்ளம் சோழ நாட்டில். இத்தகைய துரோகிகள் சூழ்ந்திருக்கும் நாட்டில் என்னால் இருக்க முடியாது. வருகிறேன் அரசே! மன்னியுங்கள்.'

'கோதை, இத்தகைய துரோகிகள் நடமாடும் நாட்டில் நீ இருக்கக் கூடாதுதான்.' பாண்டியநாட்டு புரவலன் வாயிலிருந்து விரக்தியுடன் சொற்கள் வெளிவந்தன அவைகளைச் சொல்லிவிட்டு கோதையை நோக்கினான்:

'அரசே, அப்படியானால் நான் போகவா?' கோதை திடுக்கிட்டு கேட்டாள், உண்மையிலேயே அரசர்தான் போக அனுமதி கொடுத்து விட்டாரோ என்ற கவலையில்.

'இல்லை கோதை' நீ ஏன் போக வேண்டும்? நீ போகக் கூடாது. உன்னைத் தூற்றிப் பேசிய இந்த நாடாழ்வான் பாண்டி நாட்டை விட்டே போவான் ஆம், இவனுடைய உற்ற தோழனான மாறாயனுக்கு துணை வேண்டாமா?'

'அரசே, அப்படியானால் இந்த நாடாழ்வானுக்கு நாட்டைவிட்டு துறத்தப்படுவான் என்று சொல்லுங்கள்.' கோதை ஆர்வத்தோடு கேட்டாள் அதன்மூலமாக அரசன் விதிக்கவேண்டிய தண்டனையை மறைமுகமாக எடுத்துக் கூறினாள். அதே நேரத்தில் தன்னுடைய மகிழ்ச்சியைக் காட்ட மன்னன்மீது பார்வையின் மூலமாக ஒரு மோகன அம்பை அனாயாசமாக வீசினாள்.

அடுத்ததாக, அரசனுடைய வாயிலிருந்து என்ன வார்த்தைகள் வரப்போகின்றன என்பது நாடாழ்வானுக்கு தெளிவாகிவிட்டது. அதற்குள் தன்னுடைய கருத்தை சொல்லி விடவேண்டும் என்ற எண்ணத்தில் வேகமாகப் பேசினாள்:

'பாண்டி நாட்டுப் புரவலரே! உரிய காலத்தில் உற்ற ஆலோசனை கூறுவது என்னுடைய கடமை. இந்நிலையில் தங்களுடைய செவியில் என்னுடைய கருத்து ஏறாது என்பதை அறிவேன் ஆயினும் என்னுடைய கடமையை ஆற்றும் நோக்கத்தில் மனதில் பட்டதைச் சொல்லுகிறேன். கடலின் அலையை எதிர்த்து நீந்தலாம். ஆனால் ஆற்றில் தோன்றும் சுழல்! அது பயங்கரமானது. அண்டியவரை அப்படியே இழுத்துக் கொன்றுவிடும். இந்த மாய சூர்பனகை ஒரு நச்சுப் பாம்பு. இவள் பார்வைக்கு அழகாக இருக்கலாம். ஆனால் பாண்டி நாட்டை அழிக்க வந்த பேய் இவள். அண்டியவரை அப்படியே இழுத்துக்

கொல்லும் சுழல். இந்த சிலந்தி விரித்த வலையில் விழும் பூச்சி ஆகவேண்டாம். இவளுடைய சொல்லைக் கேட்டு ஈழத்திற்கு ஆதரவு அளிக்காதீர்கள். இவள் திட்டமிட்டே நம்மை அழிக்க இங்கு வந்து இருக்கிறாள். தங்களுடைய செயல்களால் சோழர்கள் சீறி எழுவார்கள். சோழர்களுடைய போர் அணிகள் இங்கு பரணி பாடிக் கொண்டு வரும். பாண்டி நாட்டு மண்ணில் மீண்டும் போர் முரசம் ஒலிக்கும். விளைவு நமக்கு வேதனையாக அமையும். தங்களுடைய ஆட்சி பறிபோய் விடும். அந்த நாள் வெகுதூரத்தில் இல்லை. மீண்டும் பாண்டி நாட்டு வரலாறு மாறப் போகிறது, சரித்திரச் சக்கரம் சுழலப் போகிறது.'

'என்ன நாடாழ்வானே, எனக்கு சாபம் கொடுக்கிறாயா?' மன்னன் சினம் மேலிட்டு உறையிலிருந்த வாளை வேகமாக உருவினான். நாடாழ்வான் அஞ்ச வில்லை. சிங்கமாக சீறியவாறு பேசினான்:

'அரசே, நான் சாபம் இடவில்லை. என்னுடைய எதிர் கால நேத்திரங்கள் தெளிவாகத் தெரிகின்றன, உண்மையை உள்ளபடி கூறுகிறேன்.'

'கலுக்' கென ஒரு சிரிப்பு. இருவரும் சிரித்த கோதையை உற்றுப் பார்த்தார்கள். அவள் ஓயிலாக சிரித்துக் கொண்டே பேசினாள்:

'அரசே, ஞானிகள் மலிந்த நாடு இது. முன்பு ஒரு ஞானி எதிர்காலத்தைப் பற்றி கணித்துக் கூறினார். இப்பொழுது ஒரு புதிய ஞானி தோன்றிவிட்டார். எல்லோரும் எதிர் காலத்தைப் பற்றி அறிந்த மகாமேதைகள்.

அரசே, நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்த சத்தியவான் மனதில் உள்ளதை உள்ளபடி சொல்லட்டும். இவன் சொல்லுவது போல நாளைக்கு பாண்டி நாட்டிற்கும், சோழ நாட்டிற்கும் போர் வருவதாக வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது இந்த ஞானி பாண்டி நாட்டுப் பக்கம் இருந்து போரிடுவாரா என்பதைக் கேளுங்கள்.'

இந்த வினாவிற்கு கோதை விடையை எதிர்ப்பார்த்தாள். அரசனும் நாடாழ்வானை உற்றுப் பார்த்தான். விடை கிடைக்கவில்லை. எனவே ஏளனத்துடன் கேட்டான்.

'என்ன திரிகாலமும் உணர்ந்த மகா ஞானியே, ஏன் தலையைச் சாய்த்துக் கொண்டாய்? கோதை தக்கதோர்

வினாவைத் தொடுத்து உன்னை வீழ்த்தி விட்டாள். அவளுடைய கேள்விக்கு என்ன பதில்? வாய் அடைத்து விட்டதா?'

'அரசே, என் வாய் அடைக்கவில்லை. என்னை கேள்வி கேட்க இந்தப் பெண் யார்?'

'ஓ, அப்படியா! அவள் யார் என்று தெரியாதா? சொல்லுகிறேன், தெரிந்து கொள் இவள் இந்நாட்டு அரசனுடைய பட்டத்து இராணி. உன்னை என்ன வேண்டுமானாலும் செய்யக்கூடிய ஆற்றலும், அதிகாரம் பெறப்போகிறவள்!'

'அரசே, இவள் பட்டத்து இராணி ஆகும்வரை இந்த அரசு தங்களிடம் இருக்கட்டும். அதன்பின்னர் இந்த அரசியின் வினாவிற்கு அடியேன் விடை சொல்லுகிறேன்.'

'என்ன சொன்னாய்? நீயே எதிரியிடம் போய் அவன் காலில் மண்டியிட்டு பாண்டி நாட்டுடன் போரிட அழைப்பாய் போல் தென்படுகிறதே!'

'அரசே, தாங்கள் சொன்னது உண்மையான வார்த்தை. அவசியமானால் நானே போய் சோழரை அழைப்பேன்.

'துரோகி'

'நான் துரோகி அல்ல. தேசபக்தன். தமிழ் மண்ணில் மூன்று அரசுகள் வழிவழியாக இருந்து வந்திருக்கின்றன. சகோதரர் களான அவர்கள் சில நேரங்களில் போரிட்டார்கள். சில நேரங்களில் கூடிக் குலவினார்கள். இது வரலாறு. இப்பொழுது சேரநாடு இருக்கும் இடம் தெரியாமல் இருக்கிறது. எஞ்சியுள்ள பாண்டிநாடும், சோழநாடும் ஒன்றுபட்டு இருக்க திருச்சிற்றம் பலமுடையார் போன்ற மகான்கள் வழிவகுத்தார்கள். இனி தமிழகம் நிம்மதியாக வாழும் என என்னைப் போன்றவர்கள் மகிழ்வுடன் இருந்தோம்.

'விதி வலிமையானது. மீண்டும் சோதனை வந்து விட்டது. விதி இந்த பேயின் மூலமாக தங்களுடைய மதியைக் கெடுத்து விட்டது. இனி தாங்கள் ஈழத்துடன் சேருவதை யாராலும் தடுக்க இயலாது. அதனால் ஏற்படப்போகும் போரையும் தடுப்பது கடினம். அப்படி ஒரு போர் நிகழ்ந்தால் தாங்கள் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுவீர்கள். ஈழம் தங்களை ஒரு கருவியாக பயன்படுத்திக் கொண்டு தமிழ் மண்ணில் அடி எடுத்து வைக்கும். சோழர்களுடன் போர் புரியும். பாண்டி நாடு ஒரு

போர்க்களமாகும். ஈழம் வெற்றி கண்டால் தமிழ் நாடு அந்நியருக்கு அடிமையாகும். சோழர்வென்றால் தமிழகத்தில் சுதந்திரசூரியன் ஒளி வீசும். எனவே வரப்போகும் போர் சோழருக்கும், ஈழத்திற்கும் நடக்கும் போராகவே இருக்கும். அந்நிலை ஏற்பட்டால் தமிழ் மண்ணின் சுதந்திரத்தைக் காப்பாற்ற நான் சோழர் பக்கமே நின்று போரிடுவேன்.'

'சோழர்களின் உளவாளியே, உன் உள்ளத்தில் உள்ளதைக் கக்கிவிட்டாய்! தேசத் துரோகியான உன்னை உயிருடன் விட்டு வைப்பது மிகவும் பாவம். இதோ உன்னைக் கொன்று போடுகிறேன். பார்!' மன்னன் நாடாழ்வான் கழுத்துக்கு நேராக வாளை வீசப்போனான். கோதை விரைந்து சென்று வாளைத் தடுத்துப் பிடித்துக் கொண்டு பேசினாள்:

'அரசே, ஆத்திரப்படுவது அரசருக்கு அழகல்ல. இவன் இங்கு பிணமானால் யாருக்கு என்ன பயன்?'

'அப்படியானால் இந்த துரோகியையும் உயிரோடு விடச் சொல்கிறாயா?'

'இல்லை. இவனைக் கொல்ல வேண்டியதே. அதுதான் நியாயம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த துரோகி எவ்விதமான விளம்பரமும் இன்றி அரண்மனையில் சாகக்கூடாது. பெரிய படைத்தலைவன் மட்டுமின்றி, ஞானியாயிற்றே இவன்! எனவே இவனை ஆடம்பரமாக அரச மரியாதையுடன் கொல்ல வேண்டும். இவனை வெள்ளாற்றின் தென்கரைக்குக் கொண்டுபோய் அங்கு இவன் தலையை துண்டிக்குமாறு ஆணையிட வேண்டுகிறேன். அந்த ஆற்றின் வடகரையில் உள்ள சோழ நாட்டு எல்லைக் காவலர்கள் இவனை வெட்டி வீழ்த்துவதைக் காண வேண்டும். பாண்டி நாட்டுப் படைத் தலைவன் எல்லையில் பலியிடப்படுவதை அவர்கள் நன்கு காண வேண்டும். அவ்வீரர்கள் அச்செய்தியை தங்கள் அரசனுக்கு எட்டச் செய்வார்கள். இதனால் சோழனுக்கு நமது அரசின்பால் ஒரு அச்சம் ஏற்படும், நம்மை பகைப்பவர்கள் யாராக இருப்பினும் அவர்களுடைய கதி இதுதான் என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள். எனவே வாலை மடக்கிக் கொண்டு வாளாவிருப் பார்கள். இன்றைய நிலையில் இது தேவையானது, அரசே!'

'அப்படியே செய்வோம். கோதை! நீ சொல்லுவதில் மாபெரும் இராசதந்திரம் பொதிந்து இருக்கிறது. நீ என்னுடைய

எழில் இராணி மட்டுமல்ல, வரும் பொருள் உரைக்கும், எடுத்துரைக்கும் மதியூக அமைச்சரும்கூட!'

மன்னன் அன்புடன் கூறியபடியே குதூகலத்துடன் அவளுடைய முதுகின் மீது தட்டிக் கொடுத்தான். அவள் அவனுடைய கரத்தை எடுத்து தன்னுடைய கரத்தோடு சேர்த்து பிடித்துக் கொண்டாள்.

அரசன் அழைக்கவே நான்கு யவன வீரர்கள் உள்ளே வந்து வணங்கினார்கள்.

'இந்தத் துரோகியை வெள்ளாற்றின் தென்கரைக்கு அழைத்துச் செல்லுங்கள். இவன் ஏதாவது சூது செய்வான். இருபது புரவி வீரர்கள் இவனைக் கண்காணித்துக் கொண்டு உடன் செல்ல வேண்டும். அங்கு போய் இவனைக் கொன்று வீழ்த்தி விட்டு இவனுடைய தலையை மட்டும் கொண்டுவந்து எனக்குக் காட்டவேண்டும்.'

மன்னன் பணித்தான். வீரர்கள் சூழ நாடாழ்வான் வேதனையோடு வெளியேறினான் மரணத்தை நோக்கி!

24

புதிய பானம்

கோதை தொடுத்த மூன்றாவது அம்பும் இலக்கு தவறாது பாய்ந்துவிட்டது. சோழர்கள் தொங்கவிட்டு இருந்த ஈழ சேனாபதிகளின் தலைகள் அப்புறப்படுத்தியாகிவிட்டன. சோழநாடும், பாண்டிநாடும் நெருங்கி நேசமுடன் வாழ பாலம் போல இருந்த மாறாயன் நாடுகடத்தப்பட்டு விட்டான். நாடாழ்வானுடைய தலையைச் சீவ ஏற்பாடாகிவிட்டது.

கோதை இத்துடன் உளநிறைவு பெற்றாளா? இல்லை. அப்படி அவள் உளநிறைவு பெற்றிருப்பின் கோதையாக இருக்கமாட்டாளே! அது எப்படி இயலும்? இவை எல்லாம் அவளுடைய குறிக்கோள்கள் அல்ல. குறிக்கோளை அடைய அவள் கையாண்ட வழிகள். இன்னும் சொல்லப்போனால் இலட்சியப் பாதையில் நடப்பதாக நினைத்துக் கொண்டு நடைபோட்ட அவளுடைய பாதையில் தென்பட்ட முட்கள்தான் இவர்கள் எல்லாம். முட்களை எடுத்து அப்பால் போட்டு விட்டு அவள் நடந்தாள். மேலே நடந்தாள்.

அன்று கோதை தானாகவே குலசேகர பாண்டியனுடைய மாளிகைக்குச் சென்றாள். மன்னன் வழக்கப்படி அவளை மகிழ்வுடன் வரவேற்றான். இப்பொழுது அவள் அடிக்கடி மன்னன் மாளிகைக்குச் செல்வது இயல்பாகிவிட்டது.

கோதை என்றுமே புத்திசாலி. இராசாதிராசன், வீர பாண்டியன், பராக்கிரமபாகு ஆகிய மூவேந்தர்களும் அவளை தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினார்கள். அவள் அவர்களைத் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற கருவிகளாகப் பயன்படுத்திக் கொண்டாள் அதற்கு அப்பால் அவள் செல்லவில்லை. இப்பொழுதும் குலசேகரபாண்டியனையும் அதேபோல பயன்படுத்திக் கொண்டாள். அவனை மனப் பூர்வமாகக் காதலிப்பது போல நடித்தாள். இந்த நடிப்பு சமயத்திற்கும், தேவைக்கும் ஏற்ப, கூடும் அல்லது குறையும். ஆனால் அவள் அவனை நெருங்க விடவில்லை. அப்பொழுது

தானே அவளுடைய கவர்ச்சி காப்பாற்றப்படும்! எதிரில் நிற்பவன் அவள் போட்ட தாளத்திற்கு ஏற்ப ஆடுவான். இதனை எல்லாம் நன்கு உணர்ந்தவள் அந்த வைணவப் பெண்.

இதுவரை கோதையினுடைய மனதை உண்மையில் யாராவது கவர்ந்தார்கள் என்றால், அது அவளுடைய உயிரைத் தென்பெண்ணை ஆற்றிலிருந்து காப்பாற்றிய வீர பாண்டியன் ஒருவன்தான். ஆனால் அவன்மீது கொண்ட காதலும் இதயத்தின் ஆழத்தில் எங்கோ மறைந்துவிட்டது. இப்பொழுது அவளுடைய இதயத்தில் வியாபித்து இருப்பதெல்லாம் சூழ்ச்சிகளும் அவைகளை செயல்படுத்தும் திட்டங்களும்தான்.

அவளுடைய மென்மையான இதயம் ஒரு வறண்ட பாலையாகிவிட்டது. சில சமயங்களில் அனல் தகிக்கும் அப் பாலைவனத்தில். பாலைவனச் சோலைகளைப் போல சில காட்சிகள் தென்படும். அவளுடைய வளர்ப்புப் பிள்ளைகளான நல்லமன், மகீதரன் ஆகியோரின் நினைவுகள் வரும். அவர்களை அவள் மறந்துவிடவில்லை. அவர்கள் அவளால் தவறுதலாக கடத்தப்பட்டவர்கள். அவர்களை அரச குமாரர்கள் என்று கொல்ல முடிவு செய்தாள். ஆனால் இறுதி நேரத்தில் உண்மை தெரிந்தது. அப்பிள்ளைகளின் மீது அன்பு பிறந்தது. ஒரு பாவமும் அறியாத அவர்களைக் கொல்ல முற்பட்டதற்காக மனதில் பரிவு தோன்றியது. அது அன்பாக பரிணமித்துவிட்டது. அவர்களைப் பெற்ற தாயினும் மேலாக வளர்த்தாள். அவளுடைய வறண்ட உள்ளத்தில் தோன்றிய குளிர்ந்த ஊற்றுகளைப் போல அவர்கள் இருந்தார்கள்.

இறைவன் அந்த மகிழ்ச்சியையும் அவளுக்கு அதிக நாட்கள் அளிக்கவில்லை. சிறிது காலத்திலேயே அப்பிள்ளைகளைப் பறித்துக் கொண்டான். பெரியவனான நல்லமனை சோழ அரச அவைப்புலவர் ஆனந்த வரத கூத்தன் கொண்டு போய்விட்டார். இளையவனான மகீதரனை ஈழத்தில் பறிகொடுத்து விட்டாள். ஈழம் சென்ற பின்னர் அவள் நல்லமனைத் தேட எந்த முயற்சியையும் எடுக்க இயலவில்லை. அவள் தமிழகத்திற்கு வர வாய்ப்பு ஏற்படவில்லை. தற்பொழுதுதான் ஈழத்தின் பரிசுப் பொருட்களைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தாள். இனிதான் அவனைத் தேடிப் பிடிக்க வேண்டும் அநேகமா நல்லமன் ஆனந்த வரதக் கூத்தருடைய பொறுப்பில் நல்லபடியே இருக்கலாம். அவனை அந்தப் புலவன் அன்புடனேயே வளர்க்கலாம். சோழ நாட்டிற்கு சென்று முயன்றால் அவனை எப்படியும் கொண்டு வந்துவிடலாம் என்று அவள் நம்பினாள். எனவே அவனைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை.

ஆனால் மகீதரன்! சிம்மகிரி மலை அடிவாரத்தில் இரவு நேரத்தில் அவளையும், மகீதரனையும் ஈழவேந்தனுடைய அடியாட்கள் சிறை பிடித்து விட்டார்கள் அத்துடன் இருந்திருப்பின் அவள் அவனைப் பிரிந்து இருக்கமாட்டாள். ஆனால் வேறு யாரோ ஒருவன் திடீரெனத் தோன்றி மன்னனுடைய ஆட்களிடமிருந்த மகீதரனைக் கவர்ந்து கொண்டு போய் விட்டான்!

அவன் மகீதரனை என்ன செய்திருப்பானோ? பிள்ளை உயிரோடு இருக்கிறானா? கோதை அவனை ஈழத்தில் தேட எத்தனையோ முயற்சிகள் மேற் கொண்டாள். அவள் சொற்படி ஈழவேந்தன் தன்னுடைய ஒற்றர்களையும், காவலர்களையும் ஏவி அப்பிள்ளையை மீட்டுக்கொண்டு வர எவ்வளவோ முயற்சி செய்தான். ஆனால் அவை எல்லாம் யாதொரு பயனும் அளிக்க வில்லை. அவன் உயிரோடு இருக்கிறானா, இல்லை இவ்வுலகை விட்டே போய்விட்டானா? இந்த எண்ணங்கள் வந்தபோது அவள் மனம் துடித்தது. அடிக்கடி அவனை நினைத்து அழுவாள்.

இரு பிள்ளைகளும் இரு வழிகளில் அவளைவிட்டுப் பிரிந்து விட்டார்கள். இனி வாழ்வில் அவர்களைக் காண இயலுமா? பிள்ளைகளின் பாசம் அவளுடைய உள்ளத்தை பற்றிக்கொண்டு பல நேரத்தில் உலுக்கும். அப்பொழுது அவள் அழுது கொண்டே செயலற்று அமர்ந்துவிடுவாள். இதனை எல்லாம் ஈழ மன்னனிடம் சொல்லி இருக்கிறாள் குலசேகரனிடம் சொன்னதில்லை. பிள்ளைக் கவலை பிடிக்கும்போது அவள் தனிமையை நாடுவாள். தன்னைக் காண யாரையும் அனுமதிக்கமாட்டாள்.

அன்று நாளெல்லாம் பிள்ளைகளைப் பற்றிய கவலையால் அழுது கொண்டு இருந்தாள். அவளைத் தேடி வந்த மன்னனையும் பார்க்க மறுத்துவிட்டாள். எனவே அன்று மாலை மன்னனைக் காண அவளே நேரில் சென்றாள். மன்னனுக்கு வணக்கம் செலுத்தினாள்.

'அரசே, இன்று காலை என்னுடைய மனநிலை நன்கு இல்லை. எனவே தங்களைக்கூட காண மறுத்துவிட்டேன். அதற்கு மன்னிப்பீர்களா?' பேசியவாறு அவள் அரசன் அமர்ந்திருந்த மஞ்சத்தின் மீது ஒரு ஓரத்தில் அமர்ந்தாள். அரசன் கூறினான்:

'வா, கோதை வா! உன்னைத்தான் நினைத்தேன். அதற்குள் நீயே வந்து விட்டாய். எனக்குத் தெரியாமல் உன் மனதில் என்ன கவலைகள் இருக்கின்றன? அவை எப்படி இருக்க முடியும்?'

'அரசே, என்னுடைய கவலைகள் இருக்கட்டும், எனக்கு இப்பொழுது ஒரு ஐயம். இப்பொழுதுதான் என்னை நினைத்தாக கூறினீர்கள், அல்லவா?'

'ஆம்.'

'அப்படியானால் இதற்கு முன்பு என்னை மறந்து இருந்தீர்கள் அல்லவா?' அவளுடைய கண்கள் பனித்தன. கெட்டிக்காரியான கோதைகூட அவசரத்தில் தெரியாமல் மனம் நிம்மதியற்று இருந்ததாகக் கூறிவிட்டாள். அதற்கான காரணத்தை அரசன் கேட்டான். அவனிடம் சொல்ல அவள் விரும்பவில்லை. எனவே பேச்சை வேறு பக்கம் திசை திருப்ப முயற்சி செய்தாள். அதனைப் புரிந்துகொள்ளும் ஆற்றலற்ற மன்னன் அலறியடித்துக் கொண்டு பேசினான்:

'ஐயையோ, கோதை! என்னைக் கொல்லாதே! உன்னைத் தவிர நான் வேறு யாரை நினைக்க முடியும்? சில சமயங்களில் அரசியல் பிரச்சினைகளை நினைத்துக் கொண்டு இருப்பேன். அதனைத்தான் சொன்னேன். எனக்கு ஆணையிடு. இனி உன்னைத்தவிர வேறு எதையும் நினைக்க மாட்டேன்.'

'அரசே, தாங்கள் எனக்கு மாலையிடவில்லைதான். ஆனால் என்னுடைய மனது அல்லும் பகலும் தங்களைத் தவிர வேறு எதையும் நினைக்க மறுக்கிறதே, ஏன்?'

'ஆ!ஆ! அப்படியா? அன்பே, உன்னுடைய வார்த்தைகள் என்னுடைய செவிகளில் தேனாகப் பாய்கின்றன. இனி இப்பிறவியில் உன்னையன்றி வேறு யாரையும் சிந்தையாலும் தொடமாட்டேன்.'

'அரசே, தங்களுடைய கள்ளம் எனக்குப் புரிகிறது. இந்தப் பிறவியில் யாரையும் சிந்தையிலும் தொட மாட்டேன் என்றால் அடுத்த பிறவியில் மற்றவரைத் தொடுவேன் என்றுதானே பொருள்.'

'ஐயோ, இதிலும் பிழை கண்டுவிட்டாயா? அன்பே நான் ஒரு முட்டாள். எனக்கு அறிவே இல்லை. உன்னுடைய மாசற்ற அன்பிற்கு நான் என்ன கைமாறு செய்வேன்? நான் அளிக்கப் போகும் இந்நாட்டு இராணிப் பதவி உன்னுடைய பாததூசிக்கு நிகரல்ல.'

'அரசே, அது இருக்கட்டும். ஏதோ பேச வந்தேன். தங்களைப் பார்த்து விட்டால் மனம் அப்படியே சொக்கி விடுகிறது. வந்த வேலை மறந்தே போய்விடுகிறது.'

'அதனால் என்ன, கோதை? வந்த வேலை மறந்து போகட்டுமே! உனக்கு நான், எனக்கு நீ. நாம் ஒருவரை ஒருவர் மறக்காமல் இருந்தால் அதுபோதும். வேறு எதுவுமே நம்முடைய நினைவில் நிற்கவேண்டாம்.'

'மகாபிரபு!'

'சொல், கோதை. என்ன வேண்டும் சொல்? ஈரேழு உலகங்களையும் கொண்டுவந்து உன்னுடைய காலடியில் வைக்கவேண்டுமா?'

'அரசே, தாங்கள் வீராதிவீரர். தங்களால் எதுவும் செய்ய இயலும். ஒரே ஒரு குறை. வீர அனுமனைப் போல, தங்களுடைய வலிவு தங்களுக்கே தெரியவில்லை என்பதுதான் அந்தக் குறை.'

'அப்படியா? நான் வீர அனுமனை ஒத்த மாபெரும் வீரன் என்கிறாயா?

'ஆம், இம்மண்ணில் பிறந்த சிறு குழந்தையும் அந்த உண்மையைச் சொல்லும். அதனைச் சொல்ல நான் தேவை இல்லை. ஆனால் ஒன்று. தன்னுடைய வலிமை வீர அனுமனுக்கே தெரியாமல்தானே இருந்தது. மற்றவர்கள்தான் அவனுக்கு உற்சாகம் ஊட்டி செயலில் இறக்கினார்கள்.'

'கோதை, நன்றாகச் சொன்னாய். என்னை அடிக்கடி செயல்படச் செய்ய நீ என் அருகில் எப்பொழுதும் இருக்க வேண்டும்.'

'அரசே, தாங்கள் கூறிய உண்மை, நான் அருகில் இருக்கும்போது தங்களுடைய ஆற்றல் ஆயிரம் மடங்கு அதிகமாகப் பெருகுகிறது என்பதை நான் அறிவேன். ஆனால்....'

'ஆனால் என்ன, சொல்?'

'இப்பொழுது தாங்கள் எனக்கு அனுமதி அளிக்க வேண்டும்.'

'எதற்கு? என்னைக் கட்டிப்பிடித்து முத்தமிடவா?'

'இல்லை. தங்களைவிட்டு சில நாட்கள் பிரிவதற்கு.'

'என்ன சொன்னாய்? என்னைக் கொல்லாதே கோதை! மீண்டும், மீண்டும் என்னுடைய மார்பை உன்னுடைய

வார்த்தைகளான அம்புகளால் குத்துவதில் உனக்கு ஒரு இன்பமா? என்னால் தாங்க இயலாது. என்னுடைய நெஞ்சு வெடித்துவிடும். விளையாடாதே.'

'பிரபு! நான் விளையாடவில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன். ஈழநாட்டிற்குச் சென்று சில நாட்களில் மீண்டும் திரும்பிவிடுகிறேன். அதற்குத் தாங்கள் அனுமதி அளிக்கவேண்டும்.'

'மீண்டும் விளையாட்டா? தண்ணீர் இன்றி மீன் வாழுமா? சூரியனின்றி ஒளியிருக்குமா?'

'ஒரு சில நாட்கள்தான் பூபதி.'

'சில நாட்களோ, அல்லது பல நாட்களோ! அதனைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் நான் நீ வரும் வரை உயிரோடு இருக்கவேண்டுமே! அப்படி என்ன அங்கு தலைபோகும் வேலை? என்னுடன் இருப்பதைவிட உயர்ந்த வேலை ஈழத்தில் இருக்கிறதா?'

'ஆம். தங்களுக்காகத்தான் நான் ஈழத்திற்கு போகிறேன்.'

'என்ன சொல்லுகிறாய்?'

ஈழ மன்னர் என்னிடம் ஒரு தூதுவனை அனுப்பி இருக்கிறார் அவர் மிகவும் வருத்தமாக இருக்கிறாராம். தங்களுடைய நட்பை நாடி விலைமதிக்கவொண்ணா பரிசுகளை அனுப்பி வைத்தார். அதற்காகத் தாங்கள் நன்றி தெரிவித்து ஒரு பதில் ஓலை கூட அனுப்பவில்லை என அவர் வருத்தப் பட்டிருக்கிறார். இது தங்கள் தவறு அல்ல. அதற்காக நான் வருந்தவும் இல்லை. பரிதாபப்படுகிறேன். நன்றி தெரிவித்து பதில் ஓலை அனுப்பினால் எங்கு சோழர்கள் கோபித்துக் கொள்வார்களோ என்று தங்களுக்கு அச்சம். அது எனக்குப் புரிகிறது. ஈழ வேந்தனுக்கு எப்படிப் புரியும்? எனவே நானே நேராக ஈழம் சென்று அந்நாட்டு மன்னனுக்கு தங்கள் சார்பில் நன்றி கூறிவிட்டு திரும்பி வந்துவிடுகிறேன்.'

'அச்சமா? எனக்கா? நான் யாருக்கு அஞ்சவேண்டும்?'

'வேந்தே? என்னைக் கேட்டால் நான் என்ன சொல்ல முடியும்? தாங்கள் உண்மையில் சோழர்களுக்கு அஞ்சவில்லையா? ஈழ வேந்தர் எவ்வளவு அன்புடன் விலை மதிக்க வொண்ணா பரிசுப் பொருட்களை தங்களுக்கு அனுப்பி வைத்தார்! அதற்கு

நன்றி தெரிவித்து ஒரு ஓலை அனுப்ப தங்களால் இயலவில்லை. அவருடைய உள்ளம் கவர்ந்த பெண்ணை இங்கேயே நிறுத்திக் கொண்டீர்கள். அப்பெண் என்னுடைய பொறுப்பில் நலமாகத் தான் இருக்கிறாள் என்ற சிறு செய்தியைக் கூட தங்களால் அனுப்ப முடியவில்லை. ஏன், ஈழத்துடன் தொடர்பு கொள்ளுவது சோழருக்குத் தெரிந்துவிட்டால் அரச பதவிக்கு ஆபத்து வந்துவிடும் என்ற அச்சம், அல்லவா அரசே?'

'கோதை, ஈழவேந்தருக்கு நன்றி தெரிவித்து எழுதாதது தவறுதான். நீ சொல்லுவதில் உண்மை இருக்கிறது. ஆனால் நீ சொல்லும் காரணம் ஏற்றது அல்ல. நீ வந்தது முதல் அல்லும் பகலும் உன்னைப் பற்றிய நினைப்பிலேயே இலயித்துவிட்டேன். எனவே, ஈழ வேந்தனுக்கு ஒரு ஓலை வரையவும் மறந்துவிட்டேன். இன்றே அம்மன்னனுக்கு நன்றி கூறி ஓலையை அனுப்புகிறேன். மகிழ்ச்சிதானே! இனி ஈழத்திற்கு போக வேண்டுமென்று என்னிடம் சொல்ல மாட்டாயே? என் அனுமதி கேட்க மாட்டாயே?'

'அப்படியானால் இனி தங்களுடைய அனுமதியைக் கேட்காமலேயே போகட்டுமா?'

'ஐயோ, மீண்டும் பிரிவென்ற பேச்சா? வேண்டவே வேண்டாம். இதோ இப்பொழுதே ஈழத்திற்கு எழுதுகிறேன். என்னுடைய உயிரினும் சிறந்த பரிசான உன்னை எனக்கு அளித்த ஈழமன்னனுக்கு ஓராயிரம் நன்றிகள் கூறினாலும் தகும்!'

'அரசே, அத்துடன் இன்னொரு கருத்து.'

'சொல் கோதை, ஒன்றல்ல, ஓராயிரம் கருத்துக்களைச் சொல். நீ எது சொன்னாலும் நல்லதைத்தான் சொல்லுவாய்.'

'அரசே, ஈழவேந்தன் அனுப்பிய பரிசுகளுக்கு நன்றி சொல்லி எழுத வேண்டும். பரிசு என்றால் என்னை உட்படத்தான்.' அவள் அவன்மீது ஒரு மோகனப் பார்வையை வீசினாள். அரசனுடைய உச்சி குளிர்ந்து விட்டது. அவள் மீண்டும் தொடர்ந்தாள்.

'அரசே, மேலும் ஈழவேந்தரை நம்முடைய விருந்தினராக வந்து சிலநாட்கள் தங்குமாறு அழைக்க வேண்டுகிறேன். அவர் இங்கு வருவாரோ, மாட்டாரோ என்பது எனக்குத் தெரியாது. ஆனால் பரிசுகளை அனுப்பியவரை விருந்தினராக அழைப்பதுதான் பண்பு. ஆனால் ஒன்று. அவர் இங்கு வருவதின் மூலமாக சோழர்களுடைய நட்பு குலையுமோ என்ற அச்சம்

தங்களுக்கு இருந்தால் எழுத வேண்டாம். நான் வற்புறுத்த மாட்டேன்.'

கோதை, மீண்டும் சொல்லுகிறேன். எனக்கு என்ன அச்சம்? நான் ஒரு நாட்டின் மன்னன். நான் யாருக்கு அஞ்ச வேண்டும்? தெரிந்து கொள். உன்னுடைய விருப்பம் என்னவோ அதுவே என்னுடைய செயல்திட்டம். நீ விரும்பியபடியே ஈழ வேந்தனை அரச விருந்தினராக அழைக்கிறேன். மகிழ்ச்சிதானே! ஆனால்...'

'சொல்லுங்கள்.'

'ஈழ வேந்தன் உன்னைத் தன்னுடன் அனுப்புமாறு கேட்கமாட்டானே?'

'அரசே, என்னை யாரும் வற்புறுத்தி அடைய முடியாது என்பதை இதற்குள் தாங்கள் தெரிந்து கொண்டு இருக்க வேண்டும்.'

'ஆம், ஆம். தெரிந்து கொண்டேன்.'

'நான் இங்கு இருப்பின் தங்களுக்கு வேலை ஓடாது. நான் வரட்டுமா?' அவள் எழுந்து நின்றாள்.

கோதை ஒரு மோகனப் பார்வையை பாண்டி பூபதியின் மீது வீசினாள் அவன் சொக்கிவிட்டான். அவளுடைய பார்வையின் உக்கிரத்தைத் தாங்க இயலாது துடித்தான். 'அன்பே, என்னுடைய ஆருயிரே, மாறனின் மலர் அம்புகள் என்னுடைய இதயத்தை துளைக்கின்றனவே!' பரிதாபமாக அவன் உளறினான்.

'அரசே, அந்த மாறனைத்தான் சிவபெருமான் எரித்து விட்டாரே!' இப்போது மாறன் ஏது? மலர் அம்பு ஏது?'

'சிவபெருமான் செய்தது பயனற்ற வேலை கோதை! அவன் செயலால் என்ன பயன்? மாறனும் இருக்கிறான். அவனுடைய மலர் அம்புகளும் இருக்கின்றன.'

'மாறன் உயிரோடு இருப்பது இரதிதேவிக்கு மட்டும்தான்.'

'இல்லை. எல்லா காதலர்களுக்குமே!'

'இதென்ன புதிய கதை பூபதி?'

'கதை அல்ல, உண்மை. உன்னுடைய புருவங்களை வளைத்து என்மீது கடைக்கண் பார்வையை வீசுகிறாய். அப்பொழுது உன்னுடைய புருவங்கள் வில்லாகின்றன. கண்களின் பார்வை அம்பாகி என்னை வாட்டுகிறது. எப்படியோ

மாறனுடைய வேலை நடந்து விடுகிறது. அவனைக்கொன்று என்ன பயன் கண்டார் சிவபெருமான்?'

'அழகு. அரசே அழகான கற்பனை! கம்பநாடனும், காளிதாசனும் தங்களிடம் பிச்சை வாங்க வேண்டும்!'

அவள் கலகலவெனச் சிரித்துக்கொண்டே அவ்விடத்தை விட்டு வெளியேறினாள். மன்னனுடைய போதை உச்சிக்கு ஏறியது. அவன் விண்ணில் பறப்பது போன்ற உணர்வில் இருந்தான். ஏவலாளியை அழைத்தான். விரைந்து சென்று அமைச்சர் தலைவரை அழைத்து வருமாறு பணித்தான், ஈழத்திற்கு ஓலை அனுப்ப!

25

பிரிந்தவர் கூடினர்

பாண்டி நாட்டு அரசன் குலசேகரபாண்டியன் இராச கம்பீர நாடாழ்வானை வெள்ளாற்றங்கரைக்கு கொண்டுபோய் சிரச்சேதம் செய்யும்படி காவலர்களுக்குப் பணித்தான்.

காவலர்கள் நாடாழ்வானை ஒரு புரவியின்மீது அமர்த்தினார்கள். பின்னர் அவனுடைய கைகளை ஒன்று சேர்த்து விலங்கிட்டார்கள். உடலில் ஒரு சங்கிலியை இறுக்கிக் கட்டி அதன் நுனிகளைத் தொங்கவிட்டார்கள். நாடாழ்வானுக்குப் பின்புறம் அதே புரவியின்மீது ஒருவன் அமர்ந்தான் அப்புரவியை ஓட்டவேண்டியது அவனுடைய பணி. அவன் நாடாழ்வானுடைய நடுவில் செல்ல இருபுறமும் இருகாவலர்கள் புரவிகளின்மீது அமர்ந்தவாறு சென்றார்கள். அவர்கள் அவனை சுற்றிக் கட்டிய சங்கிலியின் இரு நுனிகளையும் ஆளுக்கு ஒன்றாகப் பிடித்துக் கொண்டார்கள். அவனைத் தாங்கிக் கொண்டு சென்ற புரவிக்கு முன்னும் பின்னுமாக வேறு சில வீரர்கள் புரவிகளில் சென்றார்கள். அவர்களுடைய இடுப்புகளில் வாட்கள் தொங்கின. மதுரையை விட்டு பாண்டி நாட்டின் எல்லையான வெள்ளாற்றை நோக்கி புரவிகள் சென்று கொண்டு இருந்தன.

வெள்ளாற்றை ஒட்டி அடர்ந்தகாடு. இந்தக் காட்டில் தான் முன்னர் கோதை அரச குழந்தைகளை பலியிட்டாள். அந்தக் காட்டில் இருந்த குறுகிய பாதையில் அப்புரவிகள் செல்வது மிகவும் கடினமாக இருந்தது. எனவே வீரர்கள் புரவிகளை மெதுவாக நடத்திக் கொண்டு போனார்கள்.

இருபுறங்களிலும் ஓங்கிவளர்ந்த முட்புதர்கள். பாதை குறுகியதாக இருந்ததால் புதர்கள் அடிக்கடி அவர்களைத் தாக்கின. முட்களால் குத்தப்பட்ட காவலர்கள் மிகவும் அல்லல்பட்டார்கள். அவை அவர்களுடைய முகங்களின் மீது சடார், சடார் என மோதின. துணிகளைக் கிழித்தன. ஒரு காவலருடைய கண்ணில் கூரிய முள் பாய்ந்து விட்டது. அவன்

கண்ணில் இரத்தம் வடிந்தது. அழுது துடித்துக்கொண்டே அவன் சென்றான்.

பலவித இன்னல்களைச் சமாளித்தவாறு அவர்கள் வெள்ளாற்றை நெருங்கி விட்டார்கள். அதன் கரையில்தான் நாடாழ்வானைப் பலியிட வேண்டுமென்பது அரச ஆணை. அப்பொழுதுதான் எதிர்க்கரையில் இருக்கும் சோழ நாட்டுக் காவலர்கள் அதனைக் காண்பார்கள். அவர்கள் தங்கள் மன்னனிடம் போய்ச் சொல்லுவர்கள். இது தான் பாண்டிய மன்னனுடைய ஆசை. கோதை காட்டிய வழி!

மாலை நேரம் ஏற, விண்ணில் மூட்டம் கட்டியது. வானம் மப்பும், மந்தாரமுமாக இருந்தது. ஆதவன் கண்களுக்குத் தெரியவில்லை. அடர்ந்த மேகங்கள் அவனை விழுங்கி விட்டன. பெரிய போர் யானைகளைப் போல விண்ணில் கரு மேகங்கள் வலம்வந்தன. கொஞ்ச நேரம் ஈரக்காற்று சில்லென வீசியது. கடும் வெய்யிலில் பயணம் செய்த அப்பிராயாணிகளுக்கு மாலை நேரத்து ஈரக்காற்று இதமாக இருந்தது.

ஆனால் அந்நிலை நீடிக்கவில்லை. எதிர்பாராதவாறு வேகமாக ஒரு பேய்க்காற்று வந்தது. அது காட்டு தூசியையும், உலர்ந்த இலைகளையும் சுமந்து கொண்டு வந்து அவர்களைச் சுற்றி, சுற்றித் தாக்கியது. பகலில் நான்காவது யாமத்திலேயே அவ்விடத்தை இருள் கப்பி விட்டது. பேய்க் காற்று பயங்கரமான ஓலம் செய்தது. இயற்கையின் இந்த திடீர் சீற்றத்தால் விண்ணில் பறந்த பறவைகள் அலறின. பலவிதமான ஒலிகளை எழுப்பிக் கொண்டு அங்கும், இங்குமாக ஓடின. அவை மரக்கிளைகளை அண்ட விடாது அடித்தது புயல்காற்று. மரங்களில் இருந்த பறவையின் கூடுகள் காற்றில் பிய்த்துக் கொண்டு பறந்தன. அவற்றிலிருந்த சின்னஞ்சிறு குஞ்சுகள் தரையில் விழுந்து மடிந்தன. அவைகளைச் சுற்றி வந்து தாய்ப்பறவைகள் பரிதாபமாக ஓலமிட்டுக் கதறின. சில கூடுகளில் இருந்த முட்டைகள் தரையில் வீழ்ந்து உடைந்து சுக்கலாயின. எங்கிருந்தோ காட்டுப் பாம்புகள் வந்து உடைந்த முட்டைகளை நக்கிக் கொண்டு இருந்தன.

புழுதியும், சருகுகளும், இலைகளும் அவ்வழியில் சென்ற காவலர்களையும், நாடாழ்வானையும் தாக்கின. அவர்களுடைய கண்களில் புழுதி நிரம்பிவிட்டது. கண்களைத் திறக்க இயலாது துடித்தனர். தப்பித்தவறி கண்களைத் திறந்தபோது அக்கண்களை பகலிலேயே விண்ணில் ஓடிய மின்னல்கள் பறித்தன.

இடிமுழக்கங்கள் நெஞ்சை நடுங்க வைத்தன. அம் முழக்கங்கள் பறவைகளின் அலறலை அதிகமாக்கின. காவலர்களின் செவிகளை செவிடுபடும்படி செய்தன. அவர்கள் மிகவும் அல்லல்பட்டார்கள். பகல்நேரமே பயங்கர இரவு ஆகிவிட்டது. எங்கு மழை வந்து விடுமோ என ஏங்கினார்கள்.

அவர்களுடைய ஏக்கம் பொய்யாகவில்லை. பயங்கரமான மழை சடசடவென அடிக்க ஆரம்பித்து விட்டது. அதிலும் அது ஆலங்கட்டி மழை. கட்டிகள் அவர்களின் உடல்களைத் தாக்கின. இனி மேலே செல்ல இயலாது என்ற நிலைமை.

எங்காவது ஒண்ட இடம் கிடைக்குமா எனப் பார்த்துக் கொண்டே மெதுவாக நகர்ந்தார்கள். அவர்களுடைய கண்ணுக்கு ஒரு பெரிய அடர்ந்த, பரந்த மரம் தென்பட்டது. அதன் அடியில் போய் நிற்க மெதுவாக குதிரைகளைச் செலுத்திக்கொண்டு சென்றார்கள்.

அப்பொழுது வந்தது ஒரு பயங்கரமான காற்று. அதற்கு ஈடுகொடுக்க இயலாமல் அந்த வயது முதிர்ந்த பெரிய மரம் வேருடன் சாய்ந்துவிட்டது. அப்பொழுது எதிர்பாராத ஒன்று நடந்துவிட்டது. மரம் சாய்ந்ததால் நாடாழ்வானை இணைத்துக் கட்டப்பட்டிருந்த சங்கிலியைப் பிடித்துக்கொண்டு இடதுபுறம் சென்ற காவலனும் புரவியும் அப்படியே அம்மரத்தின் கிளை ஒன்றால் நசுக்கப்பட்டனர். புரவியினுடைய உயிர் ஊசலாடுகிறது. அதன்மீது இருந்த காவலன் உருத் தெரியாமல் நசுங்கிவிட்டான். மழைநீருடன் அவனுடைய குருதியும், குதிரையின் குருதியும் கலந்து சிகப்பு வண்ணமாக ஓடியது.

மாண்ட வீரன் மரத்தால் தாக்கப்பட்டு வேகமாகக் கீழே விழுந்ததால் அவன் கையில் பிடித்திருந்த சங்கிலியால் இழுக்கப்பட்ட நாடாழ்வானும் கீழே தள்ளப்பட்டு தரையில் விழுந்தான். அவர்கள் ஏறிக்கொண்டு வந்த புரவி மருண்டு ஓட்டம் பிடித்தது.

அப்பொழுது உடன்வந்த காவல்வீரர்கள் செய்வதறியாது கதி கலங்கிவிட்டார்கள். அவர்களுடைய வாழ்நாளில் காணாத பயங்கரமான மழை, பேய்க்காற்று! உடன் வந்த வீரன் இறந்து விட்டான். தலைமேல் மரம் சாய்ந்து வருகிறது.

அவர்களுக்கு எதுவுமே ஓடவில்லை. ஓரிருவர் பிணத்தின் அருகில் சென்றார்கள். உயிர் இருக்கிறதா என மூக்கிற்கு அருகில் விரலை வைத்துப் பார்த்தார்கள் மரம் விழுந்துபோது நாடாழ்வானுக்கு பின்புறம் வந்த இருவர்மீதும் ஒரு கிளை அடித்து விட்டது. அவர்களும் நன்கு அடிபட்டு கீழே விழுந்தார்கள். ஒருவனுடைய கால் முறிந்துவிட்டது.

மற்றவனுடைய மண்டை பிளந்தது. அவர்கள் தப்பிப் பிழைக்க அங்கும் இங்கும் ஓடினார்கள். கூக்குரலிட்டுப் புலம்பினார்கள். ஒவ்வொருவனும் தான் பிழைத்தால் போதும் என்று தவித்தான்.

இயற்கை அளித்த இந்த வாய்ப்பை இராச கம்பீர நாடாழ்வான் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டான். அவனை இழுத்துப் பிடித்துக் கொண்டு வந்தவர்களில் ஒருவன் இறந்து விட்டான். மற்றவன் இருக்குமிடம் காணோம். அவனைக் கட்டி இருந்த சங்கிலிகள்தான் தொங்கிக் கொண்டு தரையில் விழுந்து கிடந்தன.

பகலின் நான்காவது யாமம் முடியும் நேரம். இருட்டிக் கொண்டு வந்தது. காவலர்கள் தவிப்பதை நாடாழ்வான் கவனித்தான். தான் தப்ப அதுதான் தக்க தருணம் என்று அருகில் இருந்த புதரை நோக்கி தலைதெறிக்க ஓடினான். அச்சமயத்தில் ஒவ்வொரு காவலாளியும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதே பெரும்பாடாய் இருந்தது. கைதியை மறந்துவிட்டார்கள். பின்னர் நினைவு வந்து அவர்கள் கவனித்தபோது கைதியைக் காணோம்!

இராசகம்பீர நாடாழ்வான் ஓடினான். இருகைகளிலும் விலங்குகள், உடலைச் சுற்றிக் கட்டப்பட்டு உள்ள சங்கிலி தரையில் புரண்டு வருகிறது. அந்நிலையிலும் அவன் ஓடினான். இருள் வேறு. சங்கிலிகள் ஆங்காங்கும் புதர்களில் மாட்டிக் கொண்டன. அவைகளை விடுவித்துக் கொண்டு அவன் முன்னேற மேலும், மேலும் முயன்றான். இந்நிலையில் அடர்ந்த ஆரண்யத்தில், கொட்டும் மழையில், சூறைக் காற்றில் இலக்கு இன்றி அவன் ஓடினான். ஆங்காங்கு முட்களும், மரக் கொம்புகளும் உடலில் குத்தின. கால்களில் பெரும் முட்கள் ஏறின. உடலிலும் கால்களிலும் இரத்தம் சொட்டச் சொட்ட அவன் ஓடினான். இயற்கையாக கிடைத்த வாய்ப்பைத் தவறவிடக் கூடாது என்ற உணர்வால் உந்தப்பட்டு உயிர் பிழைக்க ஓடினான்.

மரங்களில் போய் மோதிக் கொண்டான். மண்டையில் அடிபட்டது. தலையில் பெருக்கெடுத்த குருதி முகத்தின் வழியாக வழிந்தது அதற்குள் நன்கு இருண்டு விட்டது. ஆயினும் எங்கு காவலர்கள் துரத்திக் கொண்டு வந்து விடுவார்களோ என்று அஞ்சியபடியே ஓடினான்.

அப்பொழுது இருளில் ஏதோ ஒரு பொருளின்மீது மீண்டும் மோதிக் கொண்டான். அப்பொருள் மரம் அல்ல. 'தலைக்கு மெத்தென இருந்தது. ஏதோ ஒரு மிருகத்தின்மீதுதான்

மோதிக் கொண்டோமோ? இந்த எண்ணம் வரவே அவன் திடுக்கிட்டான். உச்சி முதல் உள்ளங்கால்வரை சில்லிட்டது. 'ஐயோ' என அலறினான். அப்பொழுது ஏற்பட்ட அச்சத்தில் அந்த வீராதிவீரன் தரைமீது சாய்ந்து விட்டான். நடப்பது நடக்கட்டுமென கண்களை இறுக்கி மூடிக் கொண்டான்.

'யார் அது?' ஒரு பயங்கரமான குரல் இடியென அவனுடைய செவிகளில் ஒலித்தது. ஆம், அச்சமயம் அங்கு மரத்தின் அடியில் ஒண்டிக் கொண்டு இருந்தது மிருகம் அல்ல, ஒரு மனிதன். நாடாழ்வான் போய் அம்மனிதன் மீது மோதிக் கொண்டான். அந்தப் புதிய மனிதனுக்கு நல்ல அடி. அதனால் தாக்கப்பட்ட அவனுக்கு வலி பொறுக்க முடியாமல் இருந்தது. இருளில் எதிர்பாராத வகையில் ஏதோ ஒன்று வந்து தாக்கியதால் அப்புதிய மனிதனும் பயந்துவிட்டான். அப்பொழுதுதான் அவன், 'யார் அது'? என இரைந்து கேட்டான். அவன் இடுப்பில் தொங்கிய உடை வாளை வேகமாகக் கையில் எடுத்தான். தன்மீது மோதிய பொருள்மீது வாளைப் பாய்ச்ச ஓங்கவும் செய்தான்.

அப்பொழுது விண்ணில் ஒரு பயங்கரமான மின்னல் வெட்டியது. அதன் ஒளியிலே எதிரில் ஒரு மனிதன் விழுந்திருப்பதை அவன் கண்டான். அது விலங்கல்ல என்பதும் தெரிந்துவிட்டது. மேலும் வந்த மனிதன் தன்னைத் தாக்க வந்தவன் அல்ல எனத் தெரிகிறது. அவன் தாக்க வந்திருந்தால் ஏன் கீழே விழுந்து கிடக்கிறான்? ஓங்கிய வாளை அப்படியே நிறுத்திக் கொண்டான். அவனுக்கு ஏற்பட்டிருந்த கோபமும், அச்சமும்கூட மறைந்தன.

அவன் கீழே அமர்ந்து தன்னுடைய காலடியில் விழுந்திருந்த மனிதனைத் தடவினான். அவனுடைய கையில் விலங்குகள் மாட்டப்பட்டிருப்பது தெரிந்தது. அவனுடைய உடலைச் சுற்றி சங்கிலி கட்டப்பட்டு இருப்பதுவும் தெரிந்தது. அவன் பரிதாபத்திற்கு உரியவன். தன்னைத தாக்க வந்தவன் அல்ல. எதிர்பாராது வந்து இருட்டில் மோதிக் கொண்டவன். எனவே அவனைப் பற்றிய பதட்டமும், பயமும் போய் விட்டது.

அவனை மெதுவாகத் தூக்கி உட்கார வைத்தான் புதிய மனிதன். நாடாழ்வான் உடல் வெடவெட என நடுங்கியது. மரத்தின் அடியில் ஒண்டி இருந்தவன் அவனைப் பார்த்துக் கேட்டான்:

'ஐயா, அஞ்சவேண்டாம். நானும் உன்னைப் போன்ற மனிதன்தான். நீ யார்? தப்பி வந்த கைதியா?'

இதற்கு மறுமொழி இல்லை. உண்மையில் நாடாழ்வான் பேசும் திறனையே இழந்திருந்தான். அச்சத்தில் அறிவு மயங்கிவிட்டது. கீழே விழுந்திருந்த தன்னைத் தூக்கி உட்கார வைத்தவனுடைய கரத்தில் ஒரு வாள் இருப்பதை மின்னல் ஒளியில் நாடாழ்வான் கவனித்துவிட்டான். அவன் பாண்டி நாட்டு வீரனாகத்தான் இருக்கவேண்டும். தன்னைத் துரத்தி வந்து பிடித்துவிட்டான் என அவன் கருதினான். தான் பட்ட துன்பமெல்லாம் பயனற்று விட்டது. மீண்டும் காவலனிடம் சிக்கிக்கொண்டோமே என்ற வேதனையில் துடித்தான் கேட்கப்பட்ட வினாவிற்கு வேண்டுமென்றே மறுமொழி அளிக்கவில்லை.

மரத்தடியில் நின்றிருந்தவன் மீண்டும் 'யார் நீ?' எனக் கேட்டான். மறுமொழி இல்லை. அவனுக்குக் கோபம் வந்து விட்டது. வந்தவனை அச்சுறுத்தித்தான் மறுமொழி வாங்க முடியும் என முடிவு செய்து விட்டான். எனவே வேண்டுமென்றே வாளை ஓங்கிப் பிடித்துக் கொண்டு 'என்னுடைய வினாவிற்கு விடை சொல்கிறாயா, இல்லையா?' என்று அச்சுறுத்தினான்.

நாடாழ்வான் பயந்துவிட்டான். இனி வாய்திறக்கா விட்டால் உயிர் போய்விடும். எனவே மறுமொழி கூறுவது தவிர வேறு வழி இல்லை. எனவே பரிதாபத்தோடு பதில் கூறினான்:

'ஐயா, சொல்லுகிறேன். என்னைக் கொன்றுவிட வேண்டாம். நான் உயிருக்கு அஞ்சியவன் அல்ல. ஆனால் யாதொரு குற்றமும் செய்யாமலேயே தண்டிக்கப்பட்ட பாவி நான்.'

'என்ன சொல்லுகிறாய்? விவரமாகச் சொல்.'

'நீ என்னைக் கொல்லுவதற்காக அழைத்துச் செல்லும் காவலன்தானே? உனக்கு நான் யார் என்று தெரியாதா? ஏன் மீண்டும், மீண்டும் கேட்டு என்னைத் துன்புறுத்துகிறாய்.'

'ஐயா, என்ன சொல்லுகிறாய்? நான் யாருடைய காவலனும் அல்ல. ஏதோ தவறாக நினைத்துக் கொண்டு இருக்கிறாய்.'

'அப்படியானால் என்னை வெள்ளாற்றங்கரையில் கொல்ல அழைத்துக் கொண்டு போகும் காவலர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவன் இல்லையா நீ?'

'இல்லை. நான் மழைக்காக இம்மரத்தடியில் ஒண்டி இருப்பவன். பாண்டி நாட்டுக் காவலன் அல்ல. என்னைப் பற்றி நீ அஞ்ச வேண்டியதில்லை. நீ நல்லவனாக இருந்தால் உனக்கு என்னுடைய உதவி உண்டு. எனவே அஞ்சாமல் நீ யார் என்பதை விவரமாகச் சொல்.'

'ஐயா, மகிழ்ச்சி. நான் தங்களை நம்புகிறேன். இறைவன்தான் என்னைக் காப்பாற்றத் தங்கள் உருவில் வந்திருக்கிறாரா?'

'செய்தியைச் சொல்.'

'ஐயா, நான் பாண்டி நாட்டுப் படைவீரன். அரசுக்கு எதிராக எந்தத் தவறும் நான் செய்யவில்லை. ஆயினும் என்னைச் சிரச்சேதம் செய்யும்படி அரசர் பணித்தார். காவலர்கள் என்னை நாட்டின் எல்லைக்குக் கொண்டு போய் அங்கு கொல்ல அழைத்துக் கொண்டு போனார்கள். எதிர்பாராது வந்த மழையும், காற்றும் எனக்குக் கை கொடுத்தன. படைவீரர்களிடமிருந்து தப்பினேன். ஆனால் மீண்டும் தங்களைப் பார்த்தவுடன் அவர்களிடம் சிக்கிக் கொண்டேனோ என அஞ்சினேன்.'

'உன்னைப் படைவீரன் என்று சொல்லுகிறாய்! ஆனால் வாளை வைத்திருக்கும் ஒருவனைக் கண்டு அஞ்சுகிறாய்! எப்படி உன்னை வீரன் என்று சொல்ல முடியும்?

'இந்த வினாவிற்கு விடை வேண்டுமா?'

'ஆம், வேண்டும்.'

'என்னுடைய கைகளில் கட்டப்பட்டு இருக்கும் விலங்கு களை அப்புறப்படுத்தினால் தங்கள் வினாவிற்குத் தக்க பதில் சொல்லுவேன்.'

'அப்படியா, ஒரு வீரனைப் போலத்தான் பேசுகிறாய்! நீ ஏதோ பெரிய இராசத்துரோகக் குற்றம் செய்திருப்பாய். இல்லாவிட்டால் அரசர் உனக்கு மரணதண்டனை விதிப்பாரா?'

'ஐயா, என்னை நம்புங்கள் நான் ஒரு குற்றமும் செய்யவில்லை.'

'நீ உண்மையைப் பேசினால் என்னால் இயன்ற உதவியைச் செய்கிறேன். சொல். உன்னுடைய பெயர் என்ன?'

'இராசகம்பீர நாடாழ்வான்.'

'என்ன சொன்னாய்? இராசகம்பீர நாடாழ்வானா! பாண்டி நாட்டுப் படைத்தலைவனா!'

'ஆம், ஐயா, என்னைப் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறீர்களே! தாங்கள் யார் என நான் அறியலாமா?'

'என்னை யார் என்று சொல்லவா, நாடாழ்வாரே! விதி நம்மை எந்த நிலையில் ஒன்று சேர்க்கிறது பாருங்கள்! நான் யார் என்று இன்னும் புரியவில்லையா? தங்களுக்கு முன்பே பாண்டி நாட்டு மன்னனால் நாடு கடத்தப்பட்ட மாறாயன் நான்.'

மாறாயன் இராசகம்பீரனை உணர்ச்சி வசப்பட்டு இறுக்கி அணைத்துக் கொண்டான்.

'அப்படியா! அதிசயமான சந்திப்பு! எல்லாம் சொக்க நாதனுடைய திருவிளையாடல்!'

இவ்வார்த்தைகளைக் கூறிக்கொண்டே நாடாழ்வானும் மாறாயனை இறுக்க அணைத்துக் கொண்டான். விதி பிரித்திருந்த அந்த நண்பர்களைத் துன்பம் ஒன்று சேர்த்துவிட்டது. பிரிந்தவர் கூடினால் பேச இயலுமோ! அவர்கள் வெகுநேரம் பேசவில்லை.

26

உண்மைக்கு விலையா?

பாண்டி நாட்டு மன்னனால் நாடுகடத்தப்பட்ட முன்னாள் படைத்தலைவர்களான மாறாயனும் இயற்கையின் சீற்றத்தால் உயிர்தப்பிப் பிழைத்த இராசகம்பீர நாடாழ்வானும் ஏற்கனவே உற்ற நண்பர்கள் என்பதை அறிவோம். அவ்விருவரும் தமிழகம் மாற்றானிடம் அடிமை ஆகக்கூடாது என்பதில் ஆர்வம் மிக்கவர்கள்.

அன்று நாடாழ்வான் உயிர் தப்பியது அதிசயத்திலும் அதிசயம். அதனை நினைத்து, நினைத்து அவ்விருவரும் மனம் பூரித்தார்கள். ஏதோ ஒரு நல்ல காரியத்தை நாடாழ்வான் மூலமாக செய்யத்தான் இறைவன் பயங்கரமான மழையையும், காற்றையும் அனுப்பி வைத்தான் என அவர்கள் நம்பினார்கள். மாறாயனிடம் ஒரு புரவி இருந்தது. அவ்விருவரும் அதன்மீது அமர்ந்து கொண்டு வெகு தூரத்திற்கு சென்றுவிட்டார்கள்.

வெள்ளாற்றின் கரையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு ஒரு பாதை செல்கிறது. அது காடுகளின் மூலம் செல்லும் குறுகிய பாதை, பொதுவாக அப்பாதையில் யாரும் அதிகம் செல்வதில்லை. அதில் மக்கள் நடமாட்டம் தென்படுவதே அரிது. அவ்விருவரும் அந்த அடர்ந்த காட்டில் அப்பாதையில் வெகுதூரம் சென்றார்கள். ஓரிடத்தில் பாதையின் ஓரத்தில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அதன் அடியில் ஒரு அகலமான பாறை வியாபித்திருந்தது. இருவரும் புரவியை விட்டுக் கீழே இறங்கினார்கள். மாறாயன் புரவியினுடைய காதருகில் ஏதோ கூறினான். புரவி அப்பால் சென்று புதரில் மறைந்தது.

இருவரும் இருளில் பாறையின்மீது அமர்ந்தார்கள். அது விடியும் நேரமாயினும் இருள் சூழ்ந்தே இருந்தது. காடு இருளைப் பெருக்கிக் காட்டியது. அவ்விருவரும் மகிழ்வுடன் பேசிக் கொண்டார்கள். இனி தங்களை பாண்டி நாட்டுப் படைவீரர்கள் தொடருவார்கள் என்று அவர்கள் கருதவில்லை. அப்படியும் மீறி அவர்கள் வந்துவிட்டாலும் அவர்களைச்

சமாளிக்க மாறாய னிடம் வாள் இருந்தது. நண்பர்கள் பேச்சைத் தொடர்ந்தார்கள்.

'நாடாழ்வாரே, எல்லாம் இறைவனின் செயல். அனைத்தும் அவனுடைய விளையாட்டு. இப்படி ஒரு வாய்ப்பு ஏற்பட்டு தாங்கள் பிழைப்பீர்கள் என்று இதற்கு முந்திய நொடியில் நினைத்திருப்பீர்களா?'

'நினைப்பதா? கனவிலும் கருதாத அதிசயம் இது! மேலும், தங்களை நான் சந்திப்பேன் என்று கற்பனையும் செய்ததில்லை.'

'ஆம், நானும்தான்.'

'மாறாயரே, இதெல்லாம் இறைவனுடைய செயல் அல்ல, கோதையினுடைய செயல் என்றுதான் நாம் சொல்ல வேண்டும்?' இராசகம்பீரன் சிரித்தார்.

'இது யார் செயலாகவோ இருக்கட்டும். இந்தக் குளிர்ந்த நேரத்தில் அந்தக் கொடியவளை ஏன் நினைவுபடுத்துகிறீர்கள்? நடக்க வேண்டியதைக் கவனிப்போம். இன்று தமிழகத்திற்கு மீண்டும் ஒரு பெரிய சோதனை வந்துவிட்டது. அடிமை இருள் கவ்விக் கொண்டு வருகிறது. நாட்டை நாம் எப்படி காப்பாற்றப் போகிறோம்? முன்பு நம் அனைவருக்கும் நிழல் தரும் ஆலமரமாக திருச்சிற்றம்பலமுடையார் இருந்தார். அவரும் போய்விட்டார். நமக்கு யார் வழிகாட்டப் போகிறார்கள்?' அங்கலாய்த்தார் மாறாயன்.

'மாறாயரே, நம்மால் ஆவது ஒன்றுமில்லை. அந்த சுந்தரேஸ்வரன்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும்.'

அதிருக்கட்டும். எனக்கு ஒரு ஐயம். முன்பே தங்களைக் கேட்க நினைத்தேன். மறந்துவிட்டது. பாண்டி மன்னனால் நாடு கடத்தப்பட்டவர் தாங்கள். அப்படி இருக்க, தாங்கள் திடீரென மழையில் மரத்தடியில் எப்படி தோன்றினீர்கள்? அதனை நினைத்தால் என்னுடைய வியப்பிற்கு எல்லையே இல்லை!'

'எனக்கும்தான் எல்லாம் வியப்பாக உள்ளது. கோதை நடத்தும் நாடகத்தில் நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பகடைகளாக செயல்பட வேண்டி உள்ளது!

'புரியவில்லையே!'

'நாடாழ்வாரே, நான் நாடு கடத்தப்பட்டது உண்மைதான். சோழ நாட்டிற்கு துரத்தப்பட்டேன். சோழநாடு எனக்கு பழக்க மானதே. அங்கு வசிப்பது எனக்குக் கடினம் அல்ல. இன்னும் சொல்லப்போனால் இங்குவிட எனக்கு சோழநாட்டில்தான்

ஆதரவு அதிகம். ஆனால், மன்னர் என்னை நாடு கடத்திவிட்டார் என்பதற்காக என்னால் வாளாவிருக்க இயலவில்லை. தமிழகத்திற்கு இன்று பேராபத்து சூழ்ந்திருக்கிறது. அதனைத் தடுக்க என்னால் இயன்றதை செய்வதுதான் பிறந்த மண்ணிற்கு நான் ஆற்றும் நன்றிக்கடன் என்ற முடிவிற்கு வந்தேன். எனவே மாறுவேடத்தில் மீண்டும் பாண்டிநாட்டிற்கு வந்து விட்டேன். தலைமறைவாக இக்காட்டில் தங்கிக்கொண்டு நாட்டு நடப்புகளைக் கவனித்து வருகிறேன். இங்கு காட்டில் உள்ள கிராமங்களில் எனக்கு வேண்டியவர்கள் பலர் உண்டு. அவர்கள் மூலமாக நாட்டு நடப்புகளை உணர முடிகிறது. நேற்று ஒரு செய்தி வந்தது. கோதையின் தூண்டுதலால் மதுரைமன்னன் ஈழவேந்தனுக்கு ஓலை அனுப்புகிறாராம். ஈழத்தின் நட்பை வேண்டி ஓலை அனுப்புகிறாராம். அது மட்டுமல்ல, அந் நாட்டு மன்னனையே விருந்தாளியாக இந்நாட்டிற்கு வருமாறு அழைப்பு விடுகிறாராம்.'

'ஆம். நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். அதனால் நமக்கு என்ன? நாசத்தை நோக்கி ஓடும் மதுரை மன்னனுடைய செயல்களில் இதுவும் ஒன்று. இதற்காக நான் கவலைப்பட்டு என்ன பயன்?'

'நாடாழ்வாரே, நாம் இதனைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க இயலுமா? அந்த ஓலை ஈழத்திற்குச் செல்லாமல் தடுக்க வேண்டும். அதனை எப்படியும் கைப்பற்ற வேண்டும். அதற்காகத்தான் நான் இந்தக் காட்டில் அலைந்து கொண்டு இருக்கிறேன்.'

'அந்த ஓலையைக் கைப்பற்றி விட்டால் அதனால் ஏற்படப் போகும் பயன்?'

'நிறைய உண்டு நாடாழ்வாரே! அதனைப் பின்னர் சொல்லுகிறேன். எனக்குக் கிடைத்த தகவல் உண்மையானதாக இருப்பின் இன்று இந்த வழியில்தான் குலசேகரபாண்டியனுடைய தூதுவன் ஈழத்திற்குச் செல்ல வேண்டும். அவனை எதிர்பார்க்கிறேன். அவனை மடக்கி ஓலையைப் பறிக்க வேண்டும். அதற்கு ஆயத்தமாக இருங்கள். அதுமட்டும் நமக்கு கிடைக்கட்டும். அதன் பின்னர் அதனால் எவ்வளவு பெரிய பயன் ஏற்படப் போகிறது என்பதைப் பாருங்கள்!'

'ஆமாம், ஈழநாட்டிற்குச் செல்லும் தூதுவன் இந்த இடத்திற்கு ஏன் வருகிறான்?'

'அதுதான் குலசேகரபாண்டியனுடைய திறமை. கோதையினுடைய அறிவாற்றல். குலசேகரபாண்டியனுக்கு நாட்டில் எதிர்ப்புகள் வேகமாக வளருகின்றன. நம் இருவரையும் மன்னன் தண்டித்து விட்டதால் மக்களிடையே ஒரே கொந்தளிப்பாக உள்ளது. மேலும், பாண்டி நாட்டு மன்னன் ஈழநாட்டு மன்னனுக்கு ஓலை அனுப்பப் போகிறான் என்ற செய்தி நாடெங்கும் பரவிவிட்டது. எனவே இந்நிலையில் தூதுவன் நேரடியாக ஈழம் சென்றால் அவன் தடுக்கப்படலாம் என அரசர் அஞ்சுகிறார். தூதுவன் சோழநாட்டிற்குச் செல்லும் பாதையில் வெள்ளாற்றங்கரைக்குச் செல்ல வேண்டும். அங்கிருந்து இராமேஸ்வரம் செல்ல வேண்டும். அங்கு ஒரு படகைப் பிடித்துக் கொண்டு கடல் கடந்து ஈழம் அடைய வேண்டும். இது கோதை தயாரித்த திட்டம். இத்திட்டப்படி இன்று தூதுவன் இவ்வழியில் வருவான் என்பது என்னுடைய கணிப்பு!'

அவர்கள் பேசும்போதே ஏதோ ஒரு புதிய அரவம் கேட்டது. இருவரும் உற்றுக் கவனித்தார்கள். குதிரை குளம்பொலி மெதுவாகக் கேட்டது. வர, வர அதிகமாகிக் கொண்டு வந்தது. காதுகளைத் தீட்டிக் கொண்டு கேட்டார்கள். காற்றும் வேகமாக அடித்துக் கொண்டு இருந்தது. மரங்களிலிருந்த இலைகள் சலசலத்தன மரக்கிளைகள் மோதிக் கொண்டன. இந்த ஓலங்களையும் மீறிக் கொண்டு குதிரையின் குளம்பொலி தெளிவாகக் கேட்டது. குதிரைதான் வருகிறது என்பது தெளிவாகி விட்டது. அதில் செல்பவன் ஈழத்திற்கு ஓலைகொண்டு செல்பவனாகத்தான் இருக்க வேண்டும்.

இருவரும் வேகமாகப் பாறையை விட்டு கீழே இறங்கினார்கள். அந்தக் கொடி வழியின் இரு ஓரங்களில் நின்று கொண்டார்கள். அதில் வருபவனுக்கு தெரியாதிருக்க மரங்களில் மறைந்து நின்றார்கள். மாறாயனுடைய கரத்தில் வாள் பளபளத்தது.

அவ்விருவரும் எதிர்பார்த்தது வீணாகவில்லை. விரைவிலேயே ஒரு உயர்சாதிப் புரவி வந்தது. அது வேக வேகமாக பறந்து கொண்டு வந்தது. அதன் மீது ஒரு மனிதன் அமர்ந்திருப்பது இருளிலும் தெரிந்தது. குதிரை அவர்களை நெருங்கிவிட்டது.

பாதையின் ஓரங்களில் மறைந்திருந்த அவ்விருவரும் திடீரென வெளியே வந்தார்கள். பாதையை மறைத்துக் கொண்டு

மிடுக்குடன் நின்றார்கள்.மாறாயன் வாளை உயர தூக்கிப் பிடித்து நின்றான். நாடாழ்வான் கரத்தில் ஒரு நீண்ட மூங்கில் கழி இருந்தது.

குதிரையில் இருந்தவன் இவர்களைப் பார்த்து விட்டான். அவர்களின் கரங்களிலிருந்த வாளையும், கழியையும் பார்த்தான். மெதுவாகக் குதிரையை இழுத்துப் பிடித்து நிறுத்தினான்.

'யாரடா அவன்? குதிரையை விட்டுக் கீழே இறங்கு' மாறாயன் கம்பீரமான குரலில் வந்தவனை விரட்டினான்.

'உம், விரைவில் இறங்கு,' மாறாயனுடைய கூற்றை ஆமோதித்தான் இராசகம்பீரன்.

வந்தவன் வாளையும் தடியையும் பார்த்தான். அச்சத்துடன் கூறினான்:

'ஐயையோ நீங்கள் கள்வர்களா? என்னிடம் எந்தப் பொருளும் இல்லை என்னைக் கொன்றுவிட வேண்டாம். நான் பிள்ளை குட்டிக்காரன். என்னை விட்டு விடுங்கள் ஐயா!' பரிதாபமாக ஓலமிட்டான் குதிரையின் மீது இருந்தவன்.

'இறங்கடா கீழே! உன்னுடைய உயிர் உடலில் ஒட்டிக் கொண்டு இருக்க வேண்டுமென்றால் உடனே இறங்கு. இல்லாவிட்டால் ஒரே வீச்சில் உன்னுடைய தலையும், உடலும் தனித்தனியாக தரையில் விழும்.' அதிகார தொனியில் கூறினான் மாறாயன்.

குதிரைவீரன் நடுங்கிவிட்டான் அவர்களை உற்றுப் பார்த்தான். வேறு வழியில்லை. தயக்கத்துடன் பயந்து பயந்து கீழே இறங்கினான். அச்சத்தோடு அவர்கள் எதிரில் போய் நின்றான். நாடாழ்வான் கேட்டான்:

'டேய், நீ எந்த ஊர்?'

'மதுரை, ஐயா!'

'உனக்கு பிள்ளைகுட்டிகள் இருக்கிறார்களா?'

'ஆம், இருக்கிறார்கள்.'

'நீ உயிரோடு சென்று அவர்களைப் பார்க்க விரும்பினால் நாங்கள் கேட்பதற்கு உண்மையைச் சொல். இன்றேல்.... வாளை ஓங்கினான் மாறாயன்.

'ஐயா, வாள் இருப்பதால் அதனை ஓங்கிக் கொண்டே பேசவேண்டுமா? என்னிடமும் இதோ வாள் இருக்கிறது. தங்களைப் போலவா அதனைத் திருப்பித் திருப்பி ஆட்டுகிறேன்?' வந்தவன் படக் எனக் கேட்டு விட்டான்.

முன்னாள் படைத்தலைவர்கள் திடுக்கிட்டார்கள். அவன் தங்களை அவமானப்படுத்தும் வினா தொடுத்து விட்டான். அந்த பயந்தாங்கொள்ளி வேண்டுமென்றே அவர்களை ஏளனம் செய்யும் நோக்கத்தோடு அப்படி கேட்டிருக்க முடியாது என ஆறதல் அடைந்தார்கள். அவனைப் பார்த்து இராசகம்பீரன் கேட்டான்:

'உண்மையைச் சொல், நீ எங்கு போய்க்கொண்டு இருக்கிறாய்?'

'ஐயா, மீண்டும் மீண்டும் உண்மையைச் சொல்லும்படி கேட்கிறீர்கள். எனக்கு ஒரு ஐயம். உண்மையையோ அல்லது பொய்யையோ நான் ஏன் உங்களிடம் சொல்ல வேண்டும்? பாண்டிய நாடு சுதந்திர நாடு. நான் அதனுடைய குடிமகன். இந்த நாட்டில் எங்கு வேண்டுமானாலும் போகும் உரிமை எனக்கு உண்டு. நான் உங்களுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. என்னுடைய வழியில் நான் போய்க் கொண்டு இருக்கிறேன். நீங்கள் என்னடா என்றால் என்னுடைய வழியை மறித்தீர்கள். இப்பொழுது சரமாரியாக வினாக்களைத் தொடுக்கிறீர்கள். இவ்வினாக்களை எல்லாம் தொடுக்க நீங்கள் யார்? இந்நாட்டு அரசரா? அல்லது படைத் தலைவர்களா?'

இந்த வினா அவ்விருவரையும் திடுக்கிட வைத்தது, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவன் கெட்டிக்காரனாக இருக்க வேண்டும். இவர்கள் நினைத்த அளவிற்கு அவன் முட்டாள் அல்ல என்பதை உணர்ந்து விட்டார்கள். மேலும், வந்தவன் நீங்கள் யார் எனக் கேட்கவே அவர்களுக்கு தங்களைப் பற்றிய நினைவு வந்தது. அவர்கள் பல்போன சிங்கங்கள். பதவி பறிபோன படைத் தலைவர்கள் என்பதும் நினைவிற்கு வந்தது. அதனை நினைத்து அவர்களே வெட்கப்பட்டார்கள்.

வந்தவன் நீங்கள் யார் எனக் கேட்டுவிட்டான். அவன் தெரிந்துதான் கேட்டானா? உண்மையில் இவர்கள் யார் என தெரிந்தால் என்ன ஆகும்? இருவரும் சட்டத்திற்கு மாறாக அந்த

பூமியில் உலவும் குற்றவாளிகள். ஒருவன் நாடு கடத்தப்பட்டு தலைமறைவாகத் திரிபவன். மற்றவன் மரண தண்டனை விதிக்கப் பட்டுத் தப்பிய கைதி. இதனை நினைத்து அவ்விருவரும் சிறிதுநேரம் அப்படியே மௌனமாக நின்றார்கள்.

அவர்களுடைய மௌனம் புதிதாக வந்தவனுக்கு அதிக தைரியம் கொடுத்து விட்டது போலும்! எனவே அவன் மீண்டும் கேட்டான்;

'என்னுடைய வினாவிற்கு மறுமொழி இல்லையே? ஏன் நீங்கள் என்ன குற்றவாளிகளா? ஏதேனும் தண்டனைப் பெற்று தப்பித்து ஓடிவந்து காட்டில் மறைந்து வாழுகிறீர்களா? நீங்கள் யாராக இருந்தால் எனக்கு என்ன? உங்களைப்போல தேவையற்ற வேலையில் நான் தலையிட மாட்டேன். நான் வருகிறேன்.' அவன் குதிரையின்மீது ஏற அடிஎடுத்து வைத்தான்.

வந்தவன் திறமையானவனாக இருக்க வேண்டும். அவன் ஒருவன். அவர்களோ இருவர். அவர்களுடைய வாளையும், தடியையும் பார்த்து அவன் அஞ்சிவிட்டான் என அவர்கள் கணக்குப் போட்டார்கள். அது தவறாகிவிட்டது. அவர்கள் அதட்டலை அவன் அற்பமாகக் கருதி விட்டான். முதலில் அவன் அஞ்சியதாக தோன்றியது எல்லாம் வெறும் நடிப்புதானா? அவன் ஒரு இளைஞன். உலகம் அறியாதவன். இளங்கன்று பயமறியாது என்பது அவனைப் பொறுத்தவரை நன்கு தெரிகிறது. இந்த நினைப்பில் அவ்விருவரும் ஆறுதல் அடைந்தார்கள்.

நாடாழ்வானும், மாறாயனும் சாதாரண படைத் தலைவர்கள் அல்ல. அவர்கள் வீராதிவீரர்கள். பல போர்களைக் கண்டவர்கள். எண்ணற்ற எதிரிகளைக் கொன்று குவித்தவர்கள். அந்நாளில் பெயர்பெற்ற போர் வல்லுனர்கள். அத்தகைய சூரர்களை அந்த இளைஞன் மடக்கிவிட்டான். அவர்கள் ஏன் அந்த இளைஞனுக்கு அஞ்ச வேண்டும்? அச்சமென்றால் என்ன என்றே அவர்களுக்குத் தெரியாது. அந்த இளைஞனுடைய அலட்சியம் அவர்களுடைய கோபத்தைப் பெருக்கியது.

'டேய் என்ன கேட்டாய்? நாங்கள் யார் என்று உனக்குத் தெரிய வேண்டுமா? எங்களைப் பார்த்து இப்படி ஒரு வினா தொடுக்க உனக்கு எவ்வளவு துணிவு இருக்க வேண்டும்! நீ எங்கு போகிறாய்? சொல்லுகிறாயா? இல்லையா?' கனமான குரலில் பேசிக் கொண்டே மாறாயன் புரவியை நெருங்கினான். அதன் பக்கத்தில் நின்றபடி தன்னுடைய வாளை குறுக்கே நீட்டிப்

பிடித்துக் கொண்டான். குதிரை வீரன் புரவியை நெருங்க விடவில்லை. அவன் சலித்துக்கொண்டே கூறினான்.

'என்னடா இது! இவர்களால் பெரும் தொல்லையாகப் போய்விட்டது! இன்று காலை யார் முகத்தில் விழித்தேனோ? தப்பு, தப்பு தூங்கி இருந்தால்தானே விழிப்பதற்கு? ஐயா, நமக்குள் வீண் சண்டை எதற்கு? நீங்கள் யாரோ, நான் யாரோ! என்னை தயவு செய்து விடுங்கள். உங்களுக்கு புண்ணியமாகப் போகட்டும்.'

'அப்படி வா வழிக்கு. இப்பொழுது நீ நல்ல பிள்ளை.' மாறாயனே அவனுடன் பேசினான்.

'ஐயா, உங்களுடைய பாராட்டுக்கு என்னுடைய நன்றி! நீங்கள் என்னை என்ன கேட்கிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்? முடிந்தால் சொல்லித் தொலைக்கிறேன். என்னை விரைவில் போகவிடுங்கள்.' கொட்டாவி விட்டான் வந்தவன்.

'என்ன அவசரமோ?'

'ஆம்.'

'நாங்கள் தொடுக்கும் வினாவிற்கு நீ பொய் பேசக் கூடாது? உண்மையையே பதிலாகச் சொல்ல வேண்டும்.'

'என்ன ஐயா இது? அடிக்கடி உண்மையைச் சொல், உண்மையைச் சொல் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள்? எனக்கு ஒரு ஐயம். அப்படியானால் நீங்கள் உண்மையைச் சொல்லுவதே இல்லையா?

'வாய்த்துடுக்கு உனக்கு நல்லதல்ல. அதிகம் பேசினால் விளைவு உனக்கு நல்லதாக இருக்காது. கேட்பதற்கு மட்டும் பதில் சொல். நீ எங்கு போகிறாய்?'

'ஈழத்திற்கு.'

'அப்படியா, நீ யார்?'

'ஐயா, நீங்கள் அறிந்திருக்க வேண்டிய அளவிற்கு நான் ஒன்றும் பெரிய புள்ளி அல்ல. மிகமிக எளியவன். நீங்கள் கேட்பதால் சொல்கிறேன். நான் பாண்டி நாட்டு படைவீரன்.'

'நீ ஈழத்திற்கு செல்லக் காரணம்?'

'பாண்டி நாட்டு அரசருடைய ஆணை.'

'ஈழத்திற்கு எதற்காக செல்லுகிறாய்?'

'அரசு அலுவல்.'

'அரசு அலுவல் என்றால்? உண்மையைச் சொல். ஈழ அரசனுக்கு ஒரு ஓலையைக் கொண்டு போகிறாய் அல்லவா?'

'ஐயா, மீண்டும் அதே உண்மையைச் சொல் என்ற பல்லவிதானா! தெரிந்து கொள்ளுங்கள். நான் ஒரு எளிய போர்வீரன்தான். ஆனால் எப்பொழுதும் உண்மையைத் தான் பேசுவேன். பொய் சொல்லவே மாட்டேன்.'

'சத்தியகீர்த்தி, மகிழ்ச்சி! நீ அரிச்சந்திரனுடைய மறு அவதாரமாகவே இரு. அதுதான் நல்லது. நீ ஈழத்திற்கு ஒரு ஓலையைக் கொண்டு போகிறாய், இல்லையா?'

'ஆம்.'

'மிகவும் மகிழ்ச்சி. நீ உண்மையிலேயே அரிச்சந்திரன்தான்.'

அப்பொழுது நாடாழ்வான் பேசினான்: 'அப்பா உண்மையிலேயே நீ நல்ல தூதுவன்தான்! அரசர் உன்னை நன்றாகத் தேர்ந்தெடுத்து இருக்கிறார். கேட்டால் உள்ளதை உள்ளபடியே சொல்லிவிடுகிறாய். பாவம்!'

'என்ன ஐயா இது? உண்மையைச் சொல்லுமாறு கேட்டீர்கள். சொன்னேன். அது பாவம் என்கிறீர்கள், எனக்காக பரிதாபமும் படுகிறீர்கள்!'

உண்மைதானே ஒரு மனிதனின் இயற்கையான இயல்பு அதனை ஒரு செயற்கை பொருளாக்கி அதற்கு விலை கொடுக்குமாறு கேட்கிறீர்கள், 'இது நியாயமா?'

அப்பொழுது மாறாயன் குறுக்கிட்டு வந்தவனிடம் தொடர்ந்து பேசினான்:

'அப்பா, நீ சத்தியகீர்த்தியாகவே இரு. எங்கே அந்த ஓலையை சற்றுக் கொடு.'

'என்ன ஐயா இது? இந்த ஓலை தங்களுக்கு வேண்டுமா? தாங்கள் ஈழ நாட்டு மன்னரா?'

'இந்த ஓலையை ஈழவேந்தனிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்பதுதான் எனக்கு இடப்பட்ட ஆணை.'

பாவம், உங்களுடைய அரசன் நல்ல முட்டாள். நல்ல தூதனைத்தான் அனுப்பி இருக்கிறார்!'

'ஐயா, எங்களுடைய அரசனை இழிவாகப் பேசுகிறீர்கள். இது நல்லதல்ல. மேலும், எனக்கு என்ன குறை? என்னை ஏன் ஏளனமாகப் பேச வேண்டும்? உண்மையைச் சொல்லுமாறு கேட்டீர்கள். சொன்னேன் அது ஒரு தவறா?'

'அப்பா, உண்மையை அப்படியே கக்கிவிட்டாய். நீ நல்ல வீரன். வாளைக் கண்டால் அத்தனை பயமா?

'ஐயா, தாங்கள் சொல்வதைப் பார்த்தால் ஒரு போர் வீரன் உண்மையைப் பேசக்கூடாதா? உண்மை என்பது ஞானிக்கு மட்டும்தான் வேண்டுமா? எனக்கு தெரிந்தவரை போரிட பின்வாங்காததுதான் வீரனுடைய குணம். உண்மையைச் சொல்ல பின்வாங்குவது அல்ல. உண்மையை மறைப்பவன் கோழை.'

'நன்றாகத்தான் பேசுகிறாய், ஆனால் உன்னுடைய தத்துவத்தை கேட்க எங்களுக்கு நேரமும் இல்லை, பொறுமையும் இல்லை. ஓலையை எடு.'

'ஐயா, முன்பே சொல்லிவிட்டேன். இது ஈழவேந்தனிடம் கொடுக்கவேண்டிய ஓலை.'

'எங்களிடம் கொடுக்க மாட்டாயா?'

'கொடுக்கக்கூடாது என்பது இல்லை. ஆனால் உங்களில் யாராவது ஒருவர் ஈழவேந்தன் என்று நிரூபிக்க வேண்டும்.'

'என்னடா விளையாடுகிறாய்?'

'ஐயா, நான் விளையாடவில்லை. நீங்கள் பெரியவர்கள். நான் சிறுவன் உங்களுடன் விளையாடலாமா? என்னை விடுங்கள். நான் போக வேண்டும்.'

'அப்படி என்னப்பா அவசரம்? உனக்கு ஓலையைக் கொண்டு போவதைத் தவிர வேறு வேலையும் இருக்கிறதா?'

''ஆம் ஐயா, இருக்கிறது. எங்கள் நாட்டிலிருந்து தண்டனை அளிக்கப்பட்ட இரு கைதிகள் தப்பிவிட்டார்கள். ஒரு கைதிக்கு மரணதண்டனை கொடுக்கப்பட்டது. அம் மனிதன் காவலர்களை ஏமாற்றிவிட்டு தப்பிவிட்டான். மற்றவனை நாடு கடத்தினோம். ஆனால் அவன் மீண்டும் இந்நாட்டிற்கு வந்து தலைமறைவாக சுற்றிக்கொண்டு இருக்கிறான். அவ்விருவரும்

இந்தப் பகுதியில்தான் இருப்பதாக மன்னருக்கு தகவல் வந்துள்ளது. அவர்களை பிடித்து கைது செய்யும்படி என்னை பணித்துள்ளார். அவ்விருவரையும் பிடித்து கைது செய்து மதுரைக்கு அனுப்பிவிட்டு நான் உடனே ஈழ நாட்டிற்கு போயாக வேண்டும்.'

'என்ன சொன்னாய்? அந்த படைத் தலைவர்களை கைது செய்யும் அளவிற்கு உனக்குத் துணிவும், ஆற்றலும் இருக்கிறதா?' வாளை ஓங்கினான் மாறாயன்.

வந்தவன் பலமாக சிரித்தான். 'ஐயா, அவர்கள் இப்பொழுது படைத்தலைவர்கள் அல்ல. சாதாரண மனிதர்கள். முன்னாள் படைத்தலைவர்கள் என்று சொல்லுங்கள்?'

இவ்வார்த்தைகள் மாறாயனுடைய கோபத்தை மேலும் பெருக்கின.

'என்னடா சொன்னாய்?' என்று கூறியபடி மீண்டும் வாளை ஓங்கினான்.

'ஐயா, அடிக்கடி ஏன் கோபிக்கிறீர்கள்? எனக்கு வீரம் இருக்கிறதோ, இல்லையோ! நான் ஒரு படைவீரன். அரசருடைய ஆணையை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டியது என்னுடைய கடமை. ஆனால் ஒன்று சொல்லாது இருக்க முடியவில்லை. நீங்கள் இருவரும் சூரர்கள். தனித்து இருக்கும் ஒருவனைக் கொல்ல இருவரும் ஏக காலத்தில் எவ்வளவு வேகம் காட்டுகிறீர்கள்! எனக்கு ஒரு ஐயம். நான் தேடும் குற்றவாளிகள் நீங்கள்தானா? உங்களுடைய கோபத்தை பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது!'

'இவன் பார்ப்பதற்குத்தான் அப்பாவி போலத் தென்படுகிறான். நம்மிடம் அப்படி நடிக்கிறான். உண்மையில் இவன் பெரிய ஆள். இவனை விடக்கூடாது' இவ்வார்த்தைகளைக் கூறிய மாறாயன் வந்தவன் மீது வாளை ஓங்கி வீசினான்.

இதனை வந்தவன் எதிர்பாராது இல்லை. எனவே அவன் நின்ற இடத்தில் நின்றபடியே தலையை இலகுவாக சாய்த்துத் தப்பினான்.

'யாரையா நீ? பார்த்தால் வீரனைப் போலத் தென்படுகிறது. ஆனால் பேசிக்கொண்டு இருக்கும்போதே வாளை வீசுகிறாய்! அது வீரனுக்கு அழகல்லவே!' பரிதாபம்!'

'எங்கள்மீது பரிதாபப்படுகிறாயா? நாங்கள் யார் தெரியுமா?'

'தெரியாது.'

'தெரிந்து கொள். நாங்கள்தான் இராசகம்பீர அஞ்சு கோட்டை நாடாழ்வாரும், இராசராச கற்குடி மாறாயனும்!'

'அப்படியா! இராசத் துரோகிகள் நீங்கள்தானா? உங்களைத் தேடும் வேலை எனக்கு நீங்கள் வைக்கவில்லை. நீங்களாகவே வந்துவிட்டீர்கள், நன்றி.! உண்மையை சொன்னதிற்கு மிகவும் மகிழ்ச்சி!'

'என்னடா சொன்னாய், யார் துரோகி? இவ் வார்த்தைகளைக் கூறிக்கொண்டே மாறாயன் மீண்டும் வாளை வீசினான். வந்தவனுக்கும் கோபம் வந்துவிட்டது. இமைப்பொழுதில் தன்னுடைய இடுப்பில் தொங்கிய உறையிலிருந்து வாளை உருவி எடுத்தான். தன்னைத் தாக்க வந்த வாளை தன்னுடைய வாளால் தடுத்து நிறுத்தினான். பின்னர் அப்பால் போய் ஒதுங்கி நின்றான்.

'என்னடா, அதற்குள் அப்பால் போய் ஒதுங்கி நின்று கொண்டாய்? இதற்குள்ளேயே பயந்துவிட்டாயா?' இது மாறாயன் வினா.

'இல்லை. நான் பயப்படவில்லை. எப்படியும் சண்டை பிடிப்பது என்று நீங்கள் முடிவு செய்துவிட்டீர்கள். நேரம் வீணாகிறது. நீங்கள் இருவரும் சேர்ந்தே வந்தால் விரைவில் போரை முடித்துவிடலாம் அல்லவா? தனித்தனியாக போரிட்டால் அதிக நேரம் ஆகும். ஒருவரிடம் வாளைக் காணோம். மூங்கில் கொம்புதான் இருக்கிறது பாவம். அதனைக் கொண்டு எப்படி வாளை எதிர்த்துப் போரிட முடியும்? நான் எப்பொழுதும் இரண்டு வாட்களை வைத்திருப்பது வழக்கம். போரில் ஒன்று உடைந்து விட்டால் மற்றது பயன்படும். ஐயா, இந்தா அந்தக் கழியை கீழே போட்டுவிட்டு இந்த வாளை வாங்கிக் கொள். விரைவில் கதையை முடிப்போம்.'

நாடாழ்வான் வந்தவனை உற்றுப் பார்த்தான். அம்மாபெரும் வீரனுக்கு ஒரு சாதாரண போர்வீரன் முன்னால் தாழ்வு உணர்ச்சி வந்துவிட்டது. அவனிடமிருந்து வாளை வாங்கவே கூசினான். ஆயினும் வழியில்லாது கையை நீட்டி வாங்கிக் கொண்டான். ஆனால் கோபம் அனலாக தெறிக்க அவன் பேசினான்:

'டேய், ஒரு சாதாரணப் படைவீரனுக்கு அவ்வளவு துணிவா? சாகப் போகிறவனுக்கு சமுத்திரம் முழங்கால் ஆழம் என்று தெரியாமலா பெரியவர்கள் சொல்லி வைத்திருக் கிறார்கள்!'

'ஐயா, தேசத் துரோகிகளை எதிர்க்க அதிக துணிவு தேவையில்லை. எங்கே இருவரும் சேர்ந்தே வாருங்கள். வாளை வீசுங்கள். சற்று விளையாடிப் பார்க்கலாம்.'

அவ்விருவரின் மீசைகளும் துடித்தன. அவர்கள் கிணறு வெட்டப்போய் பூதம் கிளம்பியது. அவன் வார்த்தைகளாலேயே அவர்களைக் கொன்றுவிட்டான். அவன் சாதாரணப் போர்வீரன் அல்ல என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

அவர்கள் அவனை நெருங்கியது அவனிடமிருந்து ஓலையைப் பறிக்க. ஆனால் அவன் வந்ததோ அவர்களைக் கைது செய்ய! அவனை உடனே கொல்ல வேண்டும், வேறு வழியில்லை. இந்த முடிவுடன் அவர்கள் தீவிரமாக அவனுடன் போரிட்டார்கள். அவனுடைய மார்பையும், கழுத்தையும் இலக்காக வைத்து போரிட்டார்கள். அவர்களின் கத்திகள் சுழன்று, சுழன்று அவனைத் தாக்கின. ஆனால் வந்தவனோ, போரிடவே இல்லை. விளையாடினான். சிரித்துக் கொண்டே தன் மீது பாய வந்த வாட்களைத் தடுத்தான். அங்கும் இங்குமாக தத்தி, தத்தி ஓடி அவர்களுக்கு விளையாட்டுக் காட்டினான். அவனை நோக்கி பாய்ந்த அவர்களுடைய வாட்கள் எதிர்ப்பின்றி, அடிக்கடி கீழே தொங்கின. அவ்வீரர்கள் அவமானப்பட்டார்கள். அவர்களுடைய உள்ளங்களில் சூடேறியது. மேலும் வேக, வேகமாக அவனைத் தாக்கினார்கள். ஆனால் அவன் சிரித்துக் கொண்டே அங்கும், இங்குமாகப் பறந்தான். சில நேரங்களில் வளைந்து கொடுத்துத் தப்பினான். அவ்விருவரும் ஒருவரை ஒருவர் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

அந்த தூதுவன் சாதாரண படைவீரனாக இருக்க முடியாது. அவன் பெரிய வீராதி வீரனாக இருக்க வேண்டும். சிறுபிள்ளைகளுக்கு விளையாட்டு காட்டுவது போலவே போரிட்டான். இரு வாட்களையும் ஒரே நேரத்தில் சந்திப்பது அவனுக்கு விளையாட்டு. எவ்வளவு நேரம் விளையாட முடியும்? அதற்கு ஒரு முடிவு கொண்டு வர விரும்பினான். இரண்டு வாட்களும் தன்னை தாக்க சேர்ந்து வந்தபோது கீழே இருந்து

தன்னுடைய வாளால் அவற்றை ஒரு தட்டு தட்டினான். அவ்விரண்டு வாட்களும் விண்ணில் பஞ்சாகப் பறந்தன. படைத்தலைவர்கள் வலுவிழந்து, மதி மயங்கி, அவமானத்துடன் அவனையே பார்த்தபடி மரமாக நின்றுவிட்டார்கள்

'பாவம், நல்ல படைத் தலைவர்கள் நீங்கள்! ஓய்ந்து விட்டீர்கள். இத்துடன் நம்முடைய விளையாட்டை முடித்துக் கொள்ளலாமா? வேண்டாம் என்றால் இனி நான் வாளை வீசுகிறேன். நீங்கள் தடுத்து நிறுத்துங்கள் பார்க்கலாம்.'

'தடுத்தால்?'

'உங்களுடைய தலைகள் பூமியில் உருளும்.'

தடுக்கவில்லையானால்?'

'குற்றவாளிகளான நீங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டீர்கள் என்று பொருள். கைதிகளைப் பத்திரமாக பாண்டி மன்னரிடம் அழைத்துச் செல்லுவேன்.'

மாறாயனும், இராசகம்பீரனும் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். அவர்களுடைய தலைகள் கவிழ்ந்துவிட்டன. தாங்கள் நன்கு பொறியில் மாட்டிக் கொண்டு இருப்பதை உணர்ந்துவிட்டார்கள் அவனிடம் இருக்கும் ஓலையை கைப்பற்றப் போய் வலிய சென்று தங்களுடைய உயிர்களை அவனிடம் அடகு வைத்துவிட்டார்கள். இதனை எண்ணி அவர்கள் வேதனைப்பட்டார்கள். எப்படியாவது அவனிட மிருந்து தப்பினால் போதும் என்று கருதினார்கள்.

அவனிடம் சமாதானமாக பேசி சமாளித்துப் பார்த்தால் என்ன என்ற எண்ணம் நாடாழ்வானுக்கு ஏற்பட்டது. அவனிடம் பணிவாகப் பேசுவதைப் போல வாய் கொடுத்தான்.

'ஐயா, நீ உண்மையிலேயே பெரிய வீரன். நாங்கள் ஒப்புக் கொள்ளுகிறோம்.'

'நற்சான்றுக்கு நன்றி.'

'ஆனால் ஒரு வருத்தம். உன்னுடைய தலைசிறந்த ஆற்றல் எதற்கு பயன்படுகிறது என்று சிந்தித்தாயா?'

'இதில் என்ன ஐயம்? அரச சேவைக்குத்தான்.'

'ஐயா, நான் கேட்கிறேன் என்று தவறாக நினைக்கக் கூடாது. முடிந்தால் மறுமொழி சொல். அரசன் பெரிதா, நாடு பெரிதா?'

'நாடுதான் பெரியது. நாட்டிற்காகத்தான் அரசன். அரசனுக்காக நாடு அல்ல. இதுகூட எனக்குத் தெரியாதா?'

'நல்லது. நாட்டு மன்னன் நாட்டிற்கே மாறாக நடக்கிறான் என்று வைத்துக் கொள். அப்பொழுது நீ நாட்டை நேசிப்பாயா? மன்னனை நேசிப்பாயா?'

'நாட்டைத்தான்.'

'ஐயா. நெஞ்சின்மீது கையை வைத்துச் சொல். இன்று உன்னுடைய அரசர் செல்லும் பாதை நல்ல பாதை என்று கருதுகிறாயா?'

'பாண்டி மன்னனுடைய போக்கில் என்ன குறை?'

'பாண்டி நாடு ஒரு சுதந்திர நாடு. அதனை ஈழத்திற்கு அடிமையாக்க குலசேகரபாண்டியர் முயற்சிகள் செய்கிறார். நீ கொண்டு செல்லும் ஓலை கூட இந்த நாட்டை அடிமை ஆக்கும் பணியில் ஒரு படி என்றே நாங்கள் நம்புகிறோம். அச்செயலை எதிர்க்கவே ஓலையைப் பறிக்க முயன்றோம். எங்களை குற்றவாளிகள் என்று நீ கூறினாய். நாங்கள் செய்த தவறு என்ன? நாட்டைக் காக்க முயன்றதின் விளைவுதான் எங்களுக்கு இன்று தண்டனை. நாங்கள் பாண்டி மன்னரின் படைத் தலைவர்களாக சீரும், சிறப்புமாக இருந்தோம். ஆனால் மன்னருக்குத் துதிபாடிக் கொண்டு இருக்க எங்களுடைய மனம் ஒப்பவில்லை. அரசருடைய தவறான போக்கை இடித்துரைத்தோம், அது அவருக்கு துரோகமாகப்பட்டது. எங்களை தண்டித்து விட்டார். அதனை நீ நியாயம் என்று கருதுகிறாயா? நம்முடைய தாய்திருநாட்டை அடிமையாக்கும் அரசருடைய செயலை நியாயமானது என்று நம்புகிறாயா?'

'நம்முடைய நாட்டை பிறரிடம் அடிமைப் படுத்துவது நியாயம் இல்லைதான்.'

'மெத்த மகிழ்ச்சி. உண்மையிலேயே நீ சத்தியசீலன். எங்களுடைய நியாயத்தை உணர்கிறாய். அப்படியானால் எங்களைச் செயல்பட விட்டுவிடுவாயா? அந்த ஓலையை எங்களிடம் கொடுப்பாயா?'

'ஐயா, எனக்கு இதெல்லாம் புரியாது. நாட்டின் பெயரில் நீங்கள் ஓலையைக் கேட்கிறீர்கள். ஆனால் எனக்கு ஒரு ஐயம். அந்த வீரபாண்டியன் கூட குலசேகரப் பாண்டியனை எதிர்த்து

போரிடப் படைகளை திரட்டிக் கொண்டு இருப்பதாகக் கேள்விப்பட்டேன். உண்மையில் உங்களுக்கு தேசபக்தி இருந்தால் அவருடன் சேர்ந்து போராட வேண்டியதுதானே? அப்படி செய்யாமல் இந்த காட்டில் சுற்றிக் கொண்டு இருந்தால் குலசேகரனை வென்றுவிட முடியுமா?'

'ஐயா, நீ தக்கதொரு வினாவைத்தான் தொடுத்தாய்! உன்னுடைய வினா எங்களுடைய மகிழ்ச்சியையும், நம்பிக் கையையும் பெருக்குகிறது. எல்லோரும் ஒன்றுபட்டால் தான் வெற்றி காண முடியும். நாங்களும் வீர பாண்டியருடன் சேர்ந்து மதுரை மன்னனை எதிர்த்துப் போரிடவே விரும்புகிறோம். அவரைத் தேடிக் கொண்டு தென்பாண்டி சீமைக்கு போகத்தான் திட்டமிட்டு இருக்கிறோம். ஆனால் இன்று இரவு ஈழத்திற்கு பாண்டி மன்னனுடைய ஓலை செல்வதாக அறிந்தோம். அதனை கைப்பற்றிக்கொண்டு போய் வீரபாண்டியரிடம் சேர்ப்பிப்பதே எங்களுடைய திட்டம். நீ நல்லவனாகவே தென்படுகிறாய். பெரும் வீரனாகமட்டும் அல்ல, தேசபக்தனாகவும் தென்படுகிறாய். இத்தகைய நல்லவனாகவும், வல்லவனாகவும் இருக்கும் நீ எங்களுடன் சேருவாயா?'

'அப்படியே ஆகட்டும், ஐயா!'

'அப்படியா? நீ உயர்ந்தவன்! ஏககாலத்தில் இருவரும் அத்தூதுவனைத் தழுவிக் கொண்டார்கள். அவர்களுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பின்னர் ஒதுங்கி நின்றார்கள். மாறாயன் பேசினான்:

'ஐயா, இனி நாம் மூவம் இனைபிரியாத தோழர்கள். எங்கே அந்த ஓலையைக் கொடு பார்க்கலாம்.'

'எதற்கு, ஐயா?'

'முன்பே கூறினேனே, வீரபாண்டியனிடம் சேர்ப்பிக்கத் தான்.'

'அந்த ஓலை வீரபாண்டியனிடம் சேர்ந்துவிட்டது.'

'அப்படியானால் உன்னிடம் இல்லையா?'

'இருக்கிறது.'

'என்ன, மீண்டும் விளையாட்டா?'

'விளையாட்டு அல்ல படைத் தலைவர்களே, உண்மை.'

'ஓலை வீரபாண்டியரிடம் சேர்ந்துவிட்டது என்கிறாய். அதே மூச்சில் உன்னிடம் இருக்கிறது என்றும் சொல்லுகிறாய். இது விளையாட்டு அல்லாமல் வேறென்ன?'

'ஏன் இரண்டுமே உண்மையாக இருக்கக் கூடாதா?'

'அது எப்படி?'

'இருவரும் ஒருவராகவே இருந்தால்?'

'ஐயா!'

'நீங்கள் தேடிப் போகும் வீரபாண்டியன் நான்தான்!'

'என்ன? மகாபிரபு, தாங்களா? நாங்கள் தோற்றது தங்களிடமா? தங்களையா நாங்கள் எதிர்த்துப் போரிட்டோம்? வீராதி வீரரான தங்களை எவ்வளவு இழிவாகப் பேசிவிட்டோம். மன்னிக்க வேண்டும், மகாபிரபு'!'

இருவரும் வீரபாண்டியனுக்கு எதிரில் மண்டியிட்டு வணங்கினார்கள்.

'படைத்தலைவர்களே, எழுந்திருங்கள். நீங்கள் ஒரு தவறும் செய்யவில்லை. உங்களைப் போன்ற பெரியவர்களிடம் சிறியவனான நான் விளையாடியது உண்மையில் என்னுடைய தவறு. நீங்கள்தான் மன்னிக்க வேண்டும். இத்தகைய மகாவீரர்களை பெற்றெடுத்த பாண்டியநாடு எவரிடமும் என்றும் அடிமை ஆகாது. ஆயிரம் ஆயிரம் குலசேகரர்களும், கோதைகளும் ஒன்றுபட்டாலும் இந் நாட்டின் சுதந்திரக் கொடியை இறக்க இயலாது.'

'அரசே, இந்த ஓலை தங்களிடம்?'

'குலசேகரன் ஒரு முட்டாள் அவனை எதிரிகள் சூழ்ந்திருப்பதை அவன் அறியமாட்டான். அவனால் ஈழத்திற்கு தூதுவனாக அனுப்பப்பட்டவன் என்னுடைய ஆள்.'

'அப்படியா? மதுரைப் படையிலும் தங்களுக்கு ஆள் இருக்கிறானா?'

'ஆம், ஒருவர் அல்ல, பலர் உண்டு. இல்லாவிட்டால் நாடோடியாக சுற்றித் திரியும் இந்த அனாதை ஒரு வலிமை மிக்க அரசை எதிர்த்து நிற்க இயலுமா?'

படைத் தலைவர்கள் பிரமித்து நின்றுவிட்டார்கள். வீர பாண்டியனுடன் பேசவே தயங்கினார்கள். மாறாயன் மெதுவாகப் பேசினான்.

'அரசே, தங்களிடம் நிறையப் பேச வேண்டி இருக்கிறது. இந்த எளியவனுடைய மனதில் ஒரு திட்டம் உருவாகி இருக்கிறது. அதனை எடுத்துரைக்க அனுமதி அளிப்பீர்களா? அதனை ஏற்பதும், ஏற்காததும் தங்கள் விருப்பம். ஆனால் அதனைச் சொல்ல ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும்.'

'மாறாயரே, நாடாழ்வாரே! உங்கள் இருவரையும் நான் இன்றா அறிவேன்? நீங்கள் இருவரும் எனக்கு தந்தை!, மற்றும் சிறிய தந்தையைப் போல. இன்று என் வாழ்வில் பொன் நாள். பாண்டி நாட்டின் சிறப்புமிக்க படைத் தலைவர்களும், அறிஞர்களுமான நீங்கள் என்னுடைய அணியில் சேர்ந்திருப்பது நான் பெற்ற பெரும் பேறு. இப்பொழுது நான் ஆயிரம் யானைகளின் வலிமையைப் பெற்றுவிட்டேன். உங்களை என்னிடம் சேர்ப்பிக்க வழிவகுத்த அப்பெண் கோதையை வணங்குகிறேன். அருள்கூர்ந்து நீங்கள் இனி என்னைவிட்டு பிரியக் கூடாது. சிறயவனான என்னை வழிநடத்திச் செல்லுமாறு வேண்டுகிறேன்.'

'அரசே, இன்று முதல் நாங்கள் தங்களின் ஊழியர்கள்!'

'சொல்லுங்கள் மாறாயரே, தங்களுடைய திட்டம் என்ன?'

அம்மூவரும் மீண்டும் அங்கிருந்த பாறையின்மீது ஏறி அமர்ந்தார்கள். அப்பொழுது கீழ்த்திசையில் சூரியன் எட்டிப் பார்த்துக் கொண்டு இருந்தான். மாறாயன் ஒரு திட்டத்தை எடுத்துக் கூறினான், நாடாழ்வான் அதனை ஆமோதித்து பேசினான்.

அப்பொழுது அவர்கள் கூறிய திட்டம் பிற்காலத்தில் தமிழக வரலாற்றையே திசை திருப்பிவிட்டது.

27

கெட்ட கனவு

பழையாறை சோழ மாளிகையான ஆயிரம் தளி அரண்மனையை நாம் கண்டு நாட்கள் பல ஓடிவிட்டன. இப்பொழுது அது பழைய கம்பீரமான நிலையைப் பெற்று விட்டது. சோகத்தின் நிழல் மறைந்துவிட்டது. இராசாதிராசன் பதவி ஏற்ற நாளிலிருந்து மாதம் மும்மாரி பொழிந்தது. வளமை கொழித்தது. மதில்களிலே மேகம் தவழ்ந்தது. மலர் பொழில்களிலே மணம் தவழ்ந்தது. நீர்த் துறைகளிலே யானைகள் ஆடின. மலர் பொழில்களிலே மயில்கள் ஆடின. ஒலிக்கும் மணிகள் அரங்குகளில் ஆடின. வண்டுகள் அரிவையர் கூந்தலில் ஆடின. தெருக்களில் ஒளி ஆடியது. வானம் அளாவிய கொடிகளிலே புலிகள் ஆடின. எங்கும் வளமையும் அமைதியும் பொங்கி வழிந்தன. சோழ அரசில் அமைதியும் மனநிறைவும் தவழ்ந்த காலம் இது என வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகிறார்கள்.

சோழவேந்தர் இளம் வயதினர்தான். ஆனால் நிகரற்ற அரசியல் நிபுணராக விளங்கினார். அவருக்கு வலது, இடது கரங்களாக அமைச்சர் தலைவர் வேதனமும், ஈழம் தந்த ஈடற்ற சிங்கம் சீவல்லபனும் செயல்பட்டார்கள். அவ்விருவரும் சோழநாட்டின் வளமையையும், வலிவையும் பெருக்குவதிலேயே கண்ணும், கருத்துமாக ஈடுபட்டு இருந்தார்கள்.

சீவல்லபனுடைய கோரிக்கை நிறைவேறும் காலம் இன்னும் வரவில்லை. அவன் ஈழவேந்தனைப் போர் முனையில் நேருக்கு நேர் நின்று தோற்கடிக்கும் வாய்ப்பு உண்டாகவில்லை. அந்த நன்நாளை எதிர்பார்த்து அவன் காத்திருந்தான். ஆனால் அதற்காக அவன் வாளாவிருக்கவில்லை.

அரசியல் உறவுகள் எப்படி இருப்பினும், சீவல்லபன் தனக்கு சமவயதினரான சோழ மன்னருக்கும், சேனாபதிக்கும் இனை பிரியாத உற்ற தோழனாகிவிட்டான். அன்பால் பிணைக்கப்பட்ட அந்தத் தூய உள்ளங்களின் இடையே நாடு, இனம், பதவி முதலிய பாகுபாடுகள் இல்லாது மறைந்தன. மூவரும் எப்பொழுதும்

சேர்ந்தே பழகினார்கள்; சேர்ந்தே திட்டமிட்டார்கள்; சேர்ந்தே செயல்பட்டார்கள்.

சோழநாடு பெற்றிருக்கும் மகோன்னத நிலைக்கு சீவல்லபனுடைய பங்கும் கணிசமானது. சோழ நாட்டின் படைபலம் பெருக அவன் உழைத்தான். அதே நேரத்தில் பல்வேறு வேடங்கள் தரித்து அடிக்கடி ஈழநாட்டிற்குச் சென்றான். மக்களைச் சந்தித்தான். அவர்களை ஈழ மன்னனுக்கு எதிராக தட்டி எழுப்பினான். ஆங்காங்கு கிராமங்களில் தனக்கென தனிப் படைகளை நிறுவினான் ஆயுதங்களை சேகரித்தான் யானைப்படை, புரவிப்படை, காலாட்படை முதலிய படைகளையும் சேகரித்தான். ஆனால் அவற்றை எல்லாம் திட்டமிட்டே ஈழ கிராமங்களில் பரவலாக விட்டு வைத்தான். அப்பொழுதுதான் அரசுக்கு தெரிய வாய்ப்பு இராது. சீவல்லபனுக்கு ஈழ மக்களிடம் நல்ல செல்வாக்கு இருந்ததால் இவற்றை எல்லாம் அவனால் எளிதில் சாதிக்க முடிந்தது.

சோழ அரசு ஆதரவு, ஈழ மக்களின் அன்பு, ஆகியவற்றைத் தவிர சீவல்லபனுக்கு மேலும் ஒரு புதிய பலம் கிடைத்தது. அவன் எதிர்பாராத விதத்தில் கிடைத்த பலம் அது. அந்த பலம்தான் அவனுடைய உயிரைக் காத்த இளம் நண்பன் மகீதரன். சுறுசுறுப்புக்கும், இனிய சுபாவத்திற்கும் இலக்கணமான அந்த இளம் வீரன் சீவல்லபனுடைய நிழலாகி விட்டான். ஒருகணம் கூட ஒருவரையொருவர் பிரியமாட்டார்கள். சீவல்லபன் ஈழத்திற்குச் சென்றாலும், தமிழ் நாட்டில் இருந்தாலும் எப்பொழுதும் உடன் இருந்தான் அந்த இளம் நண்பன்.

சீவல்லபன் மகீதரனுடன் அடிக்கடி ஈழத்திற்குச் செல்வதும், வருவதுமாக இருந்தான். இப்பொழுதுகூட அவர்கள் பழையாறையில் இல்லை.

சோழ நாட்டுக்குள் சுற்றுப் பயணம் சென்றிருந்த சேனாபதி அன்று காலைதான் தலைநகரக்குத் திரும்பினார். வந்தவுடன் நேராக அரச அரண்மனைக்குச் சென்றார். அரசரை சந்தித்தார். இருவரும் நெடுநேரம் நாட்டின் நடப்பைப் பற்றி பேசிக்கொண்டு இருந்தார்கள். அப்பொழுது மன்னருடைய மனம் எங்கோ இருந்தது. அது நிராசை என்னும் கானால்நீர் கூட காணப்படாத இடத்திலே, நிழல் இன்றிக் காயும் வெய்யிலிலே மீண்டும், மீண்டும் எங்கு சூன்யம் நிலவுகிறதோ, அங்கு ஈடுபட்டு இருந்தது! வேதவனம் பேசுவதை பெயரளவில் கேட்டுக் கொண்டே 'உம்'

கொட்டிக்கொண்டு இருந்தார் மன்னர். ஆனால் அவருடைய மனம் அங்கு இல்லை.

இதனை சேனாபதி அறியாது இல்லை.

அப்பொழுது அரண்மனைச் சேவகன் ஒருவன் அங்கு வந்தான். மன்னருக்கும் சேனாபதிக்கும் வணக்கம் செய்து விட்டு தொலைவில் நின்றான். அவன் நின்ற குறிப்பை உணர்ந்த அரசர் அருகில் வருமாறு அவனைப் பணித்தார். அவன் மன்னரிடம் நெருங்கி வந்து ஏதோ மெதுவாகக் கூறினான். மன்னர் 'வரச் சொல்' எனப் பணித்தார்.

சிறிது நேரத்தில் பாண்டிய நாட்டின் முன்னாள் படைத் தலைவர்களான இராசராச கற்குடி மாறாயனும், இராச கம்பீர அஞ்சுகோட்டை நாடாழ்வானும் உள்ளே வந்தார்கள் மன்னரையும், மகாமந்திரியாரையும் பக்தியோடு வணங்கினார்கள். 'மன்னர் இராசராசர் வாழ்க! அவர் கொற்றம் உயர்க!' என்று வாழ்த்துக் கூறினார்கள். பின்னர் அடக்கத்தோடு சற்றுத் தள்ளி தலை சாய்த்தவாறு நின்றார்கள். அவர்களைப் பார்த்து அரசர் கேட்டார்.

'மாறாயரே, நாடாழ்வாரே! வரவேண்டும். நலம்தானே? மதுரையில் அனைவரும் நலம்தானே? எப்பொழுது வந்தீர்கள்? ஆசனங்களில் அமருங்கள்.' குசலம் விசாரித்தார், மன்னர்பிரான்.

அவ்விருவரும் அனைத்தும் நலமே என்பதை அறிவிக்கும் அறிகுறியாக சிரங்களை அசைத்தார்கள். பின்னர் அரசர் காட்டிய ஆசனங்களில் அமர்ந்தார்கள் ஆசனங்களின் ஓரத்தில் அமர்ந்துகொண்டு அரசர் முகத்தையே பக்தியோடு பார்த்தார்கள். சேனாபதி கேட்டார்:

'படைத் தலைவர்களே, உங்களுடைய சிரங்களின் அசைவுகள் அனைத்தும் நலமே எனச் சொல்லுகின்றன. ஆனால் முகங்களில் மலர்ச்சி இல்லை. அவற்றில் வாட்டம் தென்படுகிறது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று ஆன்றோர்கள் சொல்லுவார்கள். என்ன செய்தி? சொல்லுங்கள். நீங்கள் இருவரும் இங்கு சேர்ந்து வரும்போதே ஏதோ நடக்கக் கூடாதது நடந்து இருக்கிறது என்று யூகித்தேன்.'

'ஆம், சேனாபதியாரே! தங்களுடைய யூகம் உண்மையே. மதுரையில் எது நடக்கக் கூடாதோ அதுதான் வேகமாக நடந்து வருகிறது. இது மாறாயரின் மறுமொழி..

'சொல்லுங்கள். மதுரை மன்னருக்கு ஏதாவது? அவர் நலம்தானே?' பதட்டத்தோடு கேட்டார் சோழ நாட்டின் கொற்றவன்.

'பாண்டி மன்னருக்கு ஒரு குறையும் இல்லை அரசே! அவர் மெத்தவும் நலமாக இருக்கிறார். ஆனால் பாண்டிய நாடுதான் நலமாக இல்லை.' இது நாடாழ்வாரின் மறு மொழி.

'ஏன், நாடாழ்வாரே?'

'அரசே, நாங்கள் வெளிப்படையாகவே செய்தியைச் சொல்லி விடுகிறோம். இன்று நாங்கள் பாண்டி நாட்டு படைத் தலைவர்கள் அல்ல. சொல்லப் போனால் மாறாயர் நாடு கடத்தப்பட்ட குற்றவாளி. எல்லையில் கொண்டுபோய் சிரச்சேதம் செய்யும்படி தண்டிக்கப்பட்ட குற்றவாளி நான்.'

'அப்படியானால்.....?'

'காவல்காரர்களிடமிருந்து தப்பிய கைதிகள் நாங்கள்!'

'அப்படியா செய்தி! நீங்கள் செய்த குற்றம்?' பதட்டத்துடன் கேட்டார் மன்னர். ஆசனத்தில் நிமர்ந்து அமர்ந்தார். அவருடைய முகத்தில் சிந்தனை இரேகைகள் படர்ந்தன.

'இராசத் துரோகமாம்.'

'இராசத் துரோகமா? நீங்கள் இராசத்துரோகம் செய்தீர்களா? அப்படி என்ன துரோகம் செய்தீர்கள்? வியப்பாக இருக்கிறதே! விளக்கமாகச் சொல்லுங்கள்.'

'அரசே. நாங்கள் யாருக்கும் எந்த துரோகமும் செய்யவில்லை. ஆனால் அரசர் தண்டித்து விட்டார்.'

'நம்ப முடியவில்லையே!'

'அரசே. நாங்கள் சொல்லுவது முக்காலும் உண்மை.'

'விவரமாகச் சொல்லுங்கள்.'

'அரசே, முன்பு மதுரையில் நடைபெற்ற போரில் கொல்லப்பட்ட இரு ஈழ சேனாபதிகளின் தலைகள் புகழாபரண அரண்மனையின் பிரதான வாயிலின் இருபுறங்களிலும் தொங்கவிடப்பட்டன என்பது தங்களுக்கு நினைவிருக்கும் என நம்புகிறோம்.'

'ஆம். அதனை எப்படி மறக்க முடியும்?'

'திருச்சிற்றம்பலமுடையாரின் ஆணையின்படி தொங்க விடப்பட்ட அந்தத் தலைகள் தற்பொழுது அகற்றப்பட்டு விட்டன. அவை இப்பொழுது அங்கு இல்லை.'

'என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் சொல்லுவதை நம்பலாமா? திருச்சிற்றம்பலமுடையார் தொங்கவிட்ட அந்த ஈழப் பேய்களின் தலைகளை யார் அப்புறப்படுத்தினார்கள்? இதனைப் பாண்டிய மன்னர் அறிவாரா?, சோழ மன்னர் கோபமாக இவ்வினாக்களைத் தொடுத்தார். அவருடைய முகம் வியர்த்தது.

'படைத் தலைவர்களே, நீங்கள் சொல்லுவது உண்மைதானா?' இடைமறித்துக் கேட்டார் சேனாபதி வேதவனம். அவருடைய வதனத்தில் சினம் கொதித்தது. அமர்ந்த நிலையிலேயே ஆசனத்தில் விளிம்பை கரத்தால் ஓங்கி அடித்தார்.

'அரசே, இச்செயல் மன்னருக்குத் தெரியாமல் யாரோ செய்தது அல்ல. மன்னருடைய ஆணைப்படிதான் தலைகள் அப்புறப்படுத்தப்பட்டன.'

'ஆ, அப்படியா?' ஏககாலத்தில் கேட்டார்கள் மன்னருக்கு சேனாபதியும்.

'அரசே, இத்துடன் முடியவில்லை. சொல்ல வேண்டியவை இன்னும் இருக்கின்றன.'

'விரைவில் சொல்லுங்கள். குலசேகர பாண்டியன் இன்னும் என்ன செய்தான்?'

'ஈழவேந்தன் பாண்டிய நாட்டின் நட்பை நாடி விலை மதிப்பற்ற ஏராளமான பரிசுகளை பாண்டி மன்னனுக்கு அனுப்பிவைத்தான்.'

'பரிசுகளை பாண்டி மன்னன் ஏற்க மறுத்து விட்டானா?'

'இல்லை. மனமகிழ்வோடு ஏற்றுக்கொண்டார்.'

'அப்புறம்?'

'ஈழவேந்தன் தன்னை மதித்து பரிசுகளை அனுப்பினான் என்பதற்காக பாண்டி மன்னனுடைய தலை கனத்துவிட்டது. பூரித்து விட்டார். ஈழமன்னனுடைய நட்பினை நாடி அவருக்கு ஓலையும் அனுப்பி இருக்கிறார்.' இது மாறாயன் கூற்று.

'அதோடு நிற்கவில்லை அரசே. ஈழ மன்னனை தம்முடைய விருந்தினராக மதுரைக்கு வந்தருளுமாறு பாண்டி மன்னர்

அழைத்து இருக்கிறார்.' மாறாயனுடைய கூற்றை முடித்து வைத்தார் இராச கம்பீரன்.

'இவைகள். எல்லாம் மிகவும் பயங்கரமான செய்திகள். நீங்கள் சொல்லுவதெல்லாம் உண்மைதானா என நம்புவதே கடினமாக இருக்கிறது.' குழம்பிக் கொண்டு குறுக்கே கேட்டார் வேதவனம்.

'அமைச்சர் தலைவரே, பாண்டி மன்னனுடைய போக்கு எங்களுக்குப் பிடிக்கவில்லை. துவக்கத்திலிருந்தே ஈழத்தோடு தொடர்பு கொள்ளுவது நல்லதில்லை என்று நாங்கள் வாதிட்டோம். இச்செயல்கள் எல்லாம் பாண்டி நாட்டு சுதந்திரத்திற்கு ஊறு பயக்கும் என எடுத்து ஓதினோம். அரசருடைய செயல்களை எதிர்த்த குற்றத்திற்காக நாங்கள் தண்டிக்கப்பட்டோம்.'

'நாடாழ்வாரே, மாறாயரே! நீங்கள் சொல்லுவதெல்லாம் உண்மையாகவே இருக்கலாம். உங்களை நான் நன்கு அறிவேன். நான் கேட்கிறேனே என தவறாக நினைக்க வேண்டாம். உங்களுடைய கூற்றுக்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா?' இது வேதவனத்தின் வினா.

'ஆதாரம் இருக்கிறது, அமைச்சர் தலைவரே!' இராச கம்பீரன் தன்னுடைய கச்சையிலிருந்து ஓலைக் குழலை எடுத்தார். அந்த ஓலைக் குழல் தாழை ஓலையால் நெய்து மூடியிருந்தது.*

ஓலைக் குழலை அமைச்சர் தலைவர் வாங்கி அரசனிடம் நீட்டினார். அரசன் அதனைப் படித்தார். அவ் ஓலையை படிக்கப்படிக்க அவருடைய பால்வடியும் முகம் சிவந்து பயங்கரமாக மாறியது. கண்களில் வெறி கொட்டியது.

அவர் ஓலையை அப்படியே வீசி எறிந்தார். ஆசனத்தை விட்டு வேகமாக எழுந்தார். தன்னுடைய இடுப்பில் தொங்கிய வாளைத் தடவினார். அப்பொழுது தென்பட்ட அரசருடைய தோற்றம் மதுரைப் படைத் தலைவர்களுக்கு மட்டுமல்ல, வேதவனத்திற்கும் அச்சம் அளித்தது.

வேதவனம் தரையில் விழுந்திருந்த ஓலையை எடுத்துப் படித்தார். அவரும் மெய்மறந்து நின்றார். அவருடைய முகத்தில் கடுகடுப்பு நிலவியது. அங்கு சிறிது நேரம் மௌனம் குடிகொண்டது. பின்னர் சேனாபதி மெதுவாக மதுரைப் படைத் தலைவர்களைப் பார்த்துக் கேட்டார்.

---

* ஆதாரம் திருவாலங்காடு கல்வெட்டு.

'படைத் தலைவர்களே, இன்று அந்தக் கோழை குலசேகரன் ஆளும் அரசு நாங்கள் கொடுத்த பிச்சை. அந்த துரோகி நன்றி மறந்துவிட்டான். அவனுக்கு எங்கள் நட்பு வேண்டாமாம். எதிரியினுடைய நட்புதான் வேண்டுமாம். விளைவுகளை உணராது சோழநாட்டுடன் விளையாடுகிறான் அந்தப் அற்பப் பயல். உங்களை ஒன்று கேட்கிறேன். அவன் ஈழநாட்டிடம் மண்டியிட உண்மையான காரணம் என்ன? உங்களுக்குத் தெரியுமா?'

'ஒரு பெண்.'

'பெண்ணா?' வினாவை வேகமாகத் தொடுத்தார் அரசர்.

'ஆம் அரசே! ஒரு பெண்தான் பாண்டிய மன்னனை இவ்வாறு ஆட்டுவித்துக் கொண்டு இருக்கிறாள் அவள் ஆட்டுவிக்கும் பம்பரமாக ஆடுகிறார் மன்னர்.'

'அத்தகைய ஆற்றல்மிக்க பெண் யார்?'

'ஈழநாட்டு மன்னன் பாண்டி நாட்டு மன்னனுக்கு அனுப்பிய வெகுமதி அவள். ஈழவேந்தன் அனுப்பிய பரிசுகளை மதுரைக்குக் கொண்டு வந்தவள்.'

'ஓ, இது ஈழவேந்தனின் வேலையா? அப்பெண் அவனுக்கு உறவினளா?'

'இல்லை அரசே, அப்பெண் ஈழ நாட்டைச் சேர்ந்தவள் அல்ல. அவள் ஒரு தமிழ்ப் பெண்.'

'என்ன, தமிழ்ப் பெண்ணா? ஒரு தமிழ்நாட்டுப் பெண் ஈழத்திலிருந்து பரிசாகத் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறாளா? தன்னை பெற்றெடுத்த தாய்த் திரு நாட்டிற்கு துரோகம் செய்ய இப்படியும் ஒரு பெண் முளைத்திருக்கிறாளா? நம்புவது கடினமாக இருக்கிறது.'

'உண்மை அரசே.'

'அப்பெண்ணுடைய ஊர் எது? அவளுடைய பெயர் தெரியுமா?'

'தெரியும் அரசே! அவளுடைய ஊர் திருக்கோவிலூர். பெயர் கோதை!'

'என்ன, அப்பெண்ணின் பெயர் கோதையா? இப்பொழுது நம்புகிறேன். நீங்கள் கூறியவை அனைத்தையும் உண்மையே என்று

நம்புகிறேன்' மன்னர் ஆசனத்தின் மீது அமர்ந்தார். அவருடைய உடல் அப்படியே சாய்ந்து விட்டது. அது கிடுகிடு என நடுங்கியது. கண்கள் மூடிக் கொண்டன. முகத்தில் சவக்களை கப்பியது. அதிலிருந்து வியர்வை கொட்டியது. மூச்சு மட்டும் புஸ், புஸ் என்ற ஒலியுடன் வந்துகொண்டு இருந்தது.

மன்னருக்கு என்ன வந்துவிட்டது என படைத் தலைவர்கள் பதைத்தார்கள். அவருடைய மனநிலையை உணர்ந்து விட்டார் வேதவனம். அவர் மன்னருக்கு அருகே போய் சிலை என நின்றார்.

நேரம் ஓட, ஓட மன்னருடைய முகத்தில் தென்பட்ட கோபம் குறைந்தது. வெறி தணிந்தது. வலிப்பு கண்டு ஓயந்தவனைப் போல சவமெனச் சாய்ந்திருந்தார். சிறிது நேரத்தில் மெதுவாகக் கண்களைத் திறந்தார். அப்பொழுதும் அவருடைய இமைகள் நடுங்கியபடியே இருந்தன. கண்கள் சிவந்திருந்தன. முகம் பேய் அறைந்தவனுடைய முகம் போலத் தென்பட்டது. அவர் சுயநிலையில் இருக்கிறாரா என்ற அச்சம் சேனாபதிக்கு ஏற்பட்டது. அரசர் கண்களைக் கசக்கிக் கொண்டே ஈனமான குரலில் சேனாபதியிடம் பேசினார்.

'வேதவனமுடையாரே, வந்தது வினை! அந்தப் பேய் மீண்டும் தலைதூக்கிவிட்டது. தமிழ்நாட்டிற்கு வந்து விட்டது. அது பாண்டியநாட்டை மட்டுமல்ல. என்னையும் பலிகொண்ட பின்னரே சாந்தி அடையும். என்னுடைய இரத்தத்தை குடிக்கும்வரை அதனுடைய தாகம் தணியாது. நம்முடைய முயற்சிகள் எல்லாம் பயனற்றுப் போய் விட்டன. நம்முடைய செயல்கள் எல்லாம் பொருளற்றதாகி விட்டன. முன்பு வீர பாண்டியன் மூலமாக அந்தப் பேய் செயல்பட்டது. திருச்சிற்றம்பலமுடையார் தம்முடைய அறிவாலும், ஆற்றலாலும் அதனை ஒடுக்கினார். அந்த பிசாசுவின் கைப்பாவையாகச் செயல்பட்ட வீர பாண்டியனை சிம்மாதனத்தை விட்டு அப்புறப்படுத்தினார். நாதியற்று அனாதையாகத் திரிந்த இந்த குலசேகரனை பாண்டிநாட்டு சிம்மாதனத்தில் அமர்த்தினார். அவை எல்லாம் இன்று பழைய கதைகளாகிவிட்டன. இன்று வரலாற்று சக்கரம் மீண்டும் பின் நோக்கி சுழலத் துவங்கிவிட்டது. அப் பெண் பேய் திட்டமிட்டே மீண்டும் பாண்டி நாட்டிற்கு வந்திருக்கிறாள். அவளுடைய செயலின் மூலமாக பாண்டி நாடு ஈழத்திற்கு அடிமை ஆகும். ஈழத்தின் கை மீண்டும் தமிழகத்தை நோக்கி நீளும். அதனால் சோழநாடு மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் பாதிக்கும். இறைவா, தமிழகத்திற்கு மீண்டும் ஒரு

சோதனையா?' மன்னர் வெறுப்பும், சலிப்பும் கலந்து விரக்தியுடன் பேசினார். அவருடைய கண்கள் மீண்டும் மூடிக்கொண்டன. ஆனால் மூடிய கண்களில் இருந்து கண்ணீர் வெளிப்பட்டு தாரை, தாரையாக முகத்தின் வழியாக ஓடியது.

'ஆம். அரசே! இவை எல்லாம் அந்தப் பெண் பேயின் சாகசங்கள். அந்த நல்ல பாம்பின் அழகு கண்டவரை மயக்கும் ஆற்றல் வாய்ந்தது. அதனை முதலீடாக வைத்துக் கொண்டு அவள் செயல்படுகிறாள்' இது மாறாயரின் சொல்.

'ஆம், நீங்கள் சொல்வது உண்மை. காற்றின் சலனத்தையும், கல்லின் கடினத்தையும், விடத்தின் கொல்லும் தன்மையையும் ஒன்றாக சேர்த்து இறைவன் பெண்ணைப் படைத்தான் என்பார்கள் ஆன்றோர்கள். இந்த கருத்து நமக்கு ஏற்புடையது அல்ல. இதற்கு எத்தனையோ விதிவிலக்குகள் உண்டு. ஆனால் ஆன்றோர்கள் குறிப்பிட்ட அத்தகைய பெண்ணுக்கு நல்லதோர் இலக்கணமாக அந்தப் பெண் கோதையைத் தவிர யாருமே இருக்க முடியாது' இது வேதவனத்தின் வாக்கு.

'சென்ற போரின்போது அவளை மட்டும் தேடிப்பிடித்து கொன்றிருந்தால்?....விட்டு விட்டோமே! அப்பேய் இன்னும் எத்தனை உயிர்களைப் பலிவாங்கப் போகிறதோ, அவளுக்கு இறையாகப்போகும் பலிகளில் நானும் ஒருவனாக இருப்பேனோ என்ற இனம் தெரியாத அச்சம் ஏனோ என்னுடைய உள்ளத்தில் அடிக்கடி எழுகிறது. அவளுடைய சூழ்ச்சியின் விளைவாக முன்பே நான் பாண்டி நாட்டில் பலியாகி இருக்கவேண்டியவன். சேனாபதி, தங்களுடைய ஆற்றலால் அன்று என்னைக் காப்பாற்றிவிட்டீர்கள். ஆனால் அது தற்காலிகமானதே. தாங்கள் என்னுடைய மரணத்தை ஒத்திப்போட்டு விட்டீர்கள். விதியை மாற்ற முடியவில்லை என்றே கருதுகிறேன்.'

'அரசே, அப்படி எல்லாம் பேசாதீர்கள்.'

'வேறு எப்படி பேசுவது? என்னைக் களபலியாக்கிக் கொண்டுதான் அந்தப் பேய் மனநிறைவு பெறும் அமைச்சர் தலைவரே!'

'மன்னரே! நாமார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம் என்ற நாவுக்கரசரை நன்கு கற்றவர் தாங்கள். இந்த அண்டத்தையே ஆளும் தாங்கள் ஒரு அற்பப் பெண்ணை நினைத்து அஞ்சுவதா?

தங்களுக்கு ஆற்றல் இல்லையா? இந்த பாண்டி நாடு என்ன, ஈழம் என்ன, இன்னும் எட்டு நாடுகள் ஒன்றுபட்டு எதிர்த்தாலும் அவை அனைத்தையும் முறியடிக்கும் படைபலம் தங்களிடம் இல்லையா? தாங்கள் யாரைக் கண்டு அஞ்சவேண்டும்? ஏன் அஞ்சவேண்டும்? மனம் தளர இது நேரமல்ல, சிந்தித்துச் செயல்பட வேண்டிய காலம் வந்துவிட்டது அரசே!'

'சேனாபதியாரே, எனக்கு அறிவுரை கூறுவது தங்களுடைய கடமைதான். தாங்கள் இந்நாட்டின் சேனாபதி மட்டுமல்ல. அமைச்சர் தலைவர் மட்டுமல்ல, அனைத்திற்கும் மேலாக என்னுடைய ஆருயிர்த் தோழர். அப்படி இருந்தும் என்னைத் தாங்கள் புரிந்துகொள்ளவில்லை. நான் பகைவனுடைய படைகளுக்கும், வாளுக்கும் அஞ்சுவேனா? ஆனால் அந்த பேயிடம் அஞ்சுகிறேன். அவளிடம் ஏதோ ஒரு கெட்ட சக்தி இருக்கிறது. அதற்காகவே அஞ்சுகிறேன்.'

'அதனையும் பார்த்து விடுவோம்.'

'சேனாபதியாரே! நேற்று இரவு ஒரு கனவு கண்டேன். அந்தப் பெண் பேய் என்னுடைய கனவிலே வந்தது. அதனுடைய முகத்தோற்றம் மட்டும் பெண் உருவிலே இருந்தது. நீண்ட கோரைப் பற்கள். கழுத்தில் கபால மாலை. கையில் சூலாயுதம். கந்தல் துணி உடை, பரட்டைத் தலை. நம்முடைய கம்பநாடர் இராம காதையில் காட்டும் தாடகையை ஒத்து அவள் இருந்தாள்.

'மகான் விசுவாமித்திர முனிவர் இராமச்சந்திரனுடைய கரத்தைப் பிடித்து அழைத்துச் சென்றதைப் போல திருச்சிற்றம் பலமுடையார் என்னுடைய கரத்தைப் பிடித்துக் கொண்டு அப்பேய் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அவளைக் காட்டிக் கொல்லுமாறு என்னைப் பணித்தார் இதோ கொல்கிறேன் என்று உற்சாகத்தோடு கூறியபடியே அவளை நெருங்கினேன். கையில் இருந்த வாளை அவளுடைய கழுத்திற்கு நேராக வீசினேன். அப்பொழுது திடீரென அவளுடைய அரக்க உருவம் மறைந்து அழகிய மோகினியாக மாறினாள். பழைய கோதையாக, மோகன முறுவல் பூத்து நின்றாள். ஓங்கிய என்னுடைய வாள் தளர்ந்துவிட்டது. என்னுடைய வாள் தளர்ந்ததைப் பார்த்த சிற்றம்பலமுடையார் கோபத்தோடு என்னைப் பார்த்துவிட்டு மறைந்துவிட்டார்.

'நான் அந்த அழகியை வைத்து விழி வாங்காது பார்த்துக் கொண்டு நின்றுவிட்டேன். அவள் என்னை நெருங்கி வந்தாள்.

அன்போடு இருகரங்களாலும் என்னைத் தொட்டாள். மகிழ்ந்து நின்றேன். அப்பொழுது அவள் அரக்க உரு பெற்று திடீரென என்னைத் தூக்கி விழுங்கி விட்டாள். அமைச்சர் தலைவரே! அந்த கனவை நினைத்தாலேயே என் மனதில் இனம் தெரியாத அச்சம் தோன்றுகிறது. உடல் நடுங்குகிறது. நேற்று இரவு நான் கண்ட அந்த பயங்கரமான கனவிற்கும், இன்று வந்திருக்கும் செய்திக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ? அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது.'

'அரசே, இதெல்லாம் வீண் கற்பனை..... தங்களுடைய எண்ணங்களின் விளைவுதான் அந்தக் கனவு..... மனதை சாந்தப் படுத்திக் கொள்ளுங்கள். நடக்கவேண்டியதை ஆலோசிப்போம். 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்ற மருதன் இளநாகனாரின் புறநானூற்றுப் பாடலை தாங்கள் அறியாதது அல்ல. நம்முடைய அரசில் அறம் உள்ளவரை நாம் யாருக்கு அஞ்சவேண்டும்? அறமிலார் அழிவது உறுதி. அறநெறியை அடிப் படையாகக் கொண்ட நம்முடைய வெற்றியும் உறுதி. இந்நிலையில் வீண் குழப்பத்தைத் தவிர்த்துவிட்டு செயல் திட்டத்தைப் பற்றி சிந்திப்போம்.'

'அமைச்சர் தலைவரே! என்னுடைய மனம் இப்பொழுது சரியான நிலையில் இல்லை. தற்பொழுது எனக்குத் தனிமை வேண்டும். நாம் மீண்டும் மாலை சந்தித்துப் பேசுவோம். இன்று மாலை அமைச்சர் அவையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டுங்கள். அதில் பேசி முடிவு எடுக்க வேண்டிய முக்கியமான பிரச்சினை இது.'

'ஆம், அரசே! அதுதான் ஏற்றது. நாங்கள் விடை பெறுகிறோம்.'

தலைமை அமைச்சர் வேதவனமும், மற்ற இரு படைத் தலைவர்களும் எழுந்து நின்றார்கள். மன்னருக்கு வணக்கம் செய்தார்கள். அவரைத் தனிமையில் விட்டு விட்டு மூவரும் வெளியேறினார்கள்.

28

வெற்றிவேல், வீரவேல்

அன்று மாலை நேரமும் நெருங்கிவிட்டது. ஆயினும் சோழ மன்னர் அன்று மதியம் வீற்றிருந்த அந்த ஆசனத்தை விட்டு நகரவில்லை. அப்படியே சாய்ந்த வண்ணம் இருந்தார். அவர் உணவை மறந்தார். உடல் நலத்தை மறந்தார். எதற்காகவும் ஆசனத்தைவிட்டு எழவில்லை; யாருடனும் பேசவில்லை. அவருடைய மனம் முந்திய இரவு கண்ட கனவைப் பற்றியும், அன்று மதியம் வந்த செய்தியைப் பற்றியும் நினைத்தவாறே இருந்தது.

வழக்கத்திற்கு மாறாக அவர் வேலையாட்களிடம் சீறி விழுந்தார். அவருடைய தேவைகளைப் பற்றி விசாரித்து அறிய நெருங்கியவரிடம் கோபித்தார், மன்னரின் இந்த மாறான இயல்பு பணியாட்களுக்கு வேதனை அளித்தது. அவருக்கு என்னவோ, ஏதோ என்று அவர்கள் கலங்கினார்கள். அவருடைய கண்கள் மூடிய நிலையிலேயே இருந்தன.

அரண்மனைக்குள் இருள் கவ்விக்கொண்டு வந்தது. இரவு நேர வேலையாட்கள் வந்து பகல் நேர வேலையாட்களிடமிருந்து பொறுப்பு ஏற்றனர். அரண்மனை விளக்கு ஏற்றுவோர் ஏணியும் பந்தமும் கொண்டுவந்தார்கள். ஆங்காங்கு ஏணிகளை வைத்து, அவற்றின் மீது ஏறி தீபங்களுக்கு எண்ணெய் ஊற்றினார்கள். திரிகளை நன்கு செம்மை செய்தார்கள். பின்னர் விளக்குகளைக் கொளுத்தினார்கள். பளிச்சிட்டதால் அந்த விசாலமான முற்றம் முழுதும் ஒளிமயமாக மின்னியது. அப்பொழுது அந்த அரண்மனை தேவலோகத்து இந்திரனுடைய அரண்மனையைப் போல காட்சியளித்தது. இவை வழக்கமாக தினமும் நடைபெறுவதுதான்.

மன்னர் இந்த எழில் தோற்றத்தைக் கவனியாது கண்களை மூடிக்கொண்டு இருந்தார். அவருடைய உடல் ஒளியில்தான் இருந்தது. ஆனால் உள்ளம் பயங்கரமான இருளில் இருந்தது.

அந்த உள்ளம் இருளில் வெளவாலைப் போல பலவித நினைவுகளின்மீது தாவிக்கொண்டு இருந்தது.

தலைமை அமைச்சர் வேதவனம் அங்கு வந்தார். அவரைத் தொடர்ந்து மற்ற அமைச்சர்கள் வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் பாண்டிநாட்டு முன்னாள் தளபதிகளான மாறாயனும், நாடாழ்வாரும் வந்தார்கள். காலடி ஓசை கேட்டகவே மன்னர் கண் திறந்து பார்த்தார். 'மன்னர் வாழ்க! சோணாடு வெல்க' என்று கூறி வாழ்த்திக் கொண்டே அமைச்சர்கள் அரசரை நெருங்கினார்கள். அவர் ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்தார். அனைவரையும் அமருமாறு கை அசைவின் மூலம் பணித்தார். தங்களுடைய தகுதிகளுக்கு ஏற்ப மன்னருக்கு எதிரில் வரிசையாக அமைச்சர்கள் அமர்ந்தார்கள். அவரை அடுத்து அருகில் தலைமை அமைச்சர் வேதவனம் அமர்ந்தார். அமைச்சர்களுக்குப் பின்னால் பாண்டி நாட்டு தளபதிகள் அமர்ந்தார்கள்.

இரு நாழிகை அவகாசத்தில் கூட்டப்பட்ட அமைச்சரவைக் கூட்டம் அது. அவ்வளவு அவசரத்தில் அமைச்சர் அவை கூடுவது என்பது அரிது. அதனால் என்னவே ஏதோ என்று அமைச்சர்கள் ஐயுற்றார்கள். முக்கியமான செய்தி இருக்கவேண்டுமென்று கருதினார்கள் மன்னருடைய தோற்றத்தைக் கண்டதும் அவர்களுடைய அச்சம் அதிகமாயிற்று. அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

அமைச்சர் தலைவர் வேதவனம் நிலைமையை நன்கு அறிவார். அவர் சிறிது நேரம் பேசாது மௌனமாக இருந்தார். அரசருடைய முகத்தைப் பார்த்தார். அவரும் என்ன பேசுவது, எப்படி பேசுவது என்று தயங்கிக் கொண்டு இருந்தார்.

அரசர் பாண்டியனுடைய செயலுக்காக வருத்தப் படவில்லை. அவனுடைய ஈழநாட்டுக் கூட்டாளிக்காக அஞ்ச வில்லை. அவர் அஞ்சுவது எல்லாம் கோதை என்ற பெண்ணுக்குத் தான் என்பதை சேனாபதி நன்கு அறிவார். அந்த அச்சத்திற்கான காரணம் இல்லாது இல்லை.

மன்னர் மனதில் எண்ணப்பறவை படபடவென சிறகுகளை அடித்தவாறு அங்கு இங்குமாகப் பறந்து கொண்டு இருந்தது. அதே ஆயிரம்தளி அரண்மனையில் முதன் முதலாக கோதையை சந்திக்கிறார். ஈரேழு உலகத்திலும் ஈடற்ற அந்த எழில் அரசியைக் கண்டு சொக்கிவிடுகிறார். அவளும் அவரைக் காதலிக்கிறாள். மன்னருடைய பாத கமலங்களில் விழுந்து தன்னுடைய இதயத்தைத் திறந்து காட்டுகிறாள். ஒரு நாள் அவள் காணாமல் போய்விட்டாள். மன்னர் மனம் துடிக்கிறது. திருமாலிருஞ்

சோலை சிறையில் அவளைச் சந்திக்கிறார். எதிர்பாராத பேரிடி ஒன்று அவர் தலைமீது இறங்குகிறது. அவள் தம்முடைய கொடிய வைரி, காதலி அல்ல எனத் தெரிகிறது. அரசரை சிறையில் தள்ளிவிட்டாள். வீரபாண்டியனுடைய தோள்மீது கரங்களைப் போட்டவாறு நின்று கொண்டு ஏளனமாக அரசரைத் தூற்றுகிறாள். அவரை பலியிடவும் ஏற்பாடு செய்து விட்டாள். அதுதான் அவர் கடைசியாகக் கண்ட கோதை. இந்த எண்ணங்கள் அனைத்தும் அவருடைய உள்ளத்தில் தொடர்ந்து வந்தன, கோடை காலத்தில் எங்கிருந்தோ வரும் தேள்களைப் போல! இவைகளை நினைக்கும் போது அவருடைய உடல் நடுங்கியது. எதிரில் பயங்கரமான பேய் தென்படுவதுபோல பதறித் துடித்தார். பாவம், இவற்றை எல்லாம் அவருடைய உற்ற தோழரும், அமைச்சர் தலைவருமான வேதவனம் நன்கு அறிவார். ஆனால் அவரால் என்ன செய்ய முடியும்? அவர் எல்லாம் தெரிந்திருந்தும், ஒன்றும் தெரியாதவர் போலப் பேசினார்:

'மன்னர்பிரானே, தங்களுடைய ஆணைப்படி அமைச்சர் அவையைக் கூட்டி இருக்கிறேன். அமைச்சர் பெருமக்களை இங்கேயே அழைத்துக் கொண்டு வந்துவிட்டேன். சபையை துவக்கலாமா?'

'நல்லது, அமைச்சர் தலைவரே! அவையைத் துவக்குங்கள்.' அரசர் ஆசனத்தில் நிமிர்ந்து அமர்ந்து கொண்டார். அமைச்சர் தலைவர் தீர்க்கமான குரலில் பேசினார்:

'அமைச்சர் பெருமக்களே, அரசருடைய ஆணையின்படி உங்களுக்கு நான் ஒரு விரும்பத்தகாத செய்தியைச் சொல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறேன். பாண்டி நாட்டை நாம் பால் ஊட்டி வளர்த்தோம். அந்த நாட்டிற்குத் தேவையான அத்தனையும் செய்து கொடுத்தோம். ஆனால் அது மீண்டும் பழைய பாணியிலேயே செல்கிறது. ஈழத்திற்கு அந்நாட்டை அடிமையாக்கும் செயல்கள் அங்கு மீண்டும் துவங்கிவிட்டன.

'என்ன அமைச்சர் தலைவரே' அருள்கூர்ந்து விளக்கமாகச் சொல்ல வேண்டுகிறோம். குலசேகர பாண்டியரும் வீரபாண்டியர் வழியில் செல்லகிறாரா?' இது ஒரு குரல்.

'ஆம், குலசேகர பாண்டியன் முன்பு வீரபாண்டியன் சென்ற அதே வழியில்தான் வேகமாக ஓடிக்கொண்டு இருக்கிறார்.'

'அப்படியா! அந்த நன்றி கெட்ட குலசேகரன் இன்று ஆளும் அரசு சோழநாடு அளித்த பிச்சை அல்லவா?' ஒரு அமைச்சர் மிகவும் சூட்டுடன் பேசினார்.

'ஆம் எல்லாம் உண்மையே! ஆனால் அவற்றை சொல்லிக்கொண்டே இருப்பதால் பயன் என்ன? இப்பொழுது நெருக்கடியான நேரம். உணர்ச்சி வசப்படாது. செய்ய வேண்டியதைப்பற்றி சிந்தித்து ஆலோசனை கூற வேண்டுகிறேன்.'

'ஒழியட்டும் அந்த குலசேகரன்' இது மற்றொரு அமைச்சருடைய சாபம்'.

'அமைச்சர் பெருமக்களே, உங்களுடைய உணர்வுகளை நான் உணருகிறேன். குலசேகரன் என்ற ஒரு மனிதன் ஒழிவது அல்லது வாழ்வது என்பது அல்ல இன்றைய பிரச்சினை என்பதை நீங்கள் உணரவேண்டும். குலசேகரனுடைய செயல்களின் மூலமாக மீண்டும் ஈழப் படைகள் தமிழகத்திற்குள் புகப்போகின்றன. பாண்டிநாடு ஈழத்திற்கு அடிமையாகப் போகிறது. தமிழக மக்கள் படமுடியாத இன்னல்களைப் படப்போகிறார்கள், தமிழ் மண்ணில் இரத்த ஆறு ஓடும், ஈழத்தின் வருகை சோழ மண்டலத்திற்கு ஒரு சாவல், அதுமட்டுமல்ல, ஈழப் படைகள் பாண்டி நாட்டை சொந்தமாக்கிக் கொண்ட பின்னர் சும்மா இராது. புதுத் தெம்பும், பொலிவும் பெற்று நம்முடைய நாட்டைத் தாக்கும். இந்நிலையில் நாம் என்ன செய்யப்போகிறோம்? இதுவே நாம் சிந்தித்து முடிவு செய்ய வேண்டிய பிரச்சினை. ஈழப்படைகள் இங்கு வரும் போது பார்த்துக் கொள்ளலாம் என்று வாளாவிருக்கப் போகிறோமா? அல்லது இப்பொழுதே முன் எச்சரிக்கையுடன் செயலில் இறங்கப் போகிறோமா? இது சம்பந்தமாக அமைச்சர் பெருமக்களின் கருத்தை அரசர் அறிய விரும்புகிறார்'.

'தமிழகத்தில் ஈழப்படைகள் அடி எடுத்து வைப்பதை நாம் அனுமதிக்கக் கூடாது. பாண்டி நாடும் சேர்ந்ததுதான் தமிழகம். எனவே நாம் சேதுக் கரையிலேயே ஈழத்திற்கு அடி கொடுக்க வேண்டும்.'

'இதற்கெல்லாம் காரணமான குலசேகரனுக்கு முதலில் தக்க பாடம் கற்பிக்க வேண்டும். இதே குலசேகரன் என்ற பெயரைக் கொண்ட பாண்டியன்தான் ஆதிகாலத்தில் பாண்டிய அரச குலத்தை நிறுவினார். அந்தப் பெரியாரின் பெயர்கொண்ட இந்த

அற்பன் குல சேகரனால் பாண்டிய வம்சம் முடிவு பெற வேண்டும். உடனே நாம் மதுரைக்கு படை எடுத்துச் சென்று அந்த விட்டில் பூச்சியை நசுக்கிக் கொல்ல வேண்டும்.'

'பாண்டிய வம்சத்தின் துவக்கமும் குலசேகரன், முடிவும் குலசேகரன் அழகான கருத்து.'

'குலசேகரனுக்கு மட்டும் பாடம் போதித்தால் போதாது. குலசேகரனைப் பிடித்து ஆட்டும் பராக்கிரமபாகுவுக்கும் மீண்டும் இறுதியான பாடம் போதிக்க வேண்டும்.'

'ஆம், இம்முறை நாம் ஈழப்படைகள் தமிழகத்தில் அடி எடுத்து வைக்கும் வரை காத்திருக்கலாகாது. முதலில் நாம் ஈழத்தைத் தாக்க வேண்டும். முதல் அடி நம்முடைய அடியாக இருக்க வேண்டும்.'

'முன்பு ஒரு சமயம் ஈழநாட்டை ஆண்ட மகிந்தன் என்ற மன்னன் பெரும்படையுடன் தமிழகத்திற்கு வந்தான். அவன் அன்று வீரபாண்டியனுக்கு* உதவியாக வந்து சுந்தர சோழ சக்ரவர்த்தியை எதிர்த்துப் போரிட்டான். சுந்தரசோழர் ஏககாலத்தில் ஈழப்படைகளையும், பாண்டிப் படைகளையும் நிர்மூலமாக்கி வாகை சூடினார். ஆயினும், போர் நிற்கவில்லை. வெகுகாலம் நீடித்தது. நடைபெற்ற போரில் சுந்தர சோழருடைய வீரப் புதல்வர் ஆதித்த சோழர் வீர பாண்டியானைக் கொன்றார். அதனால், 'வீரபாண்டியன் தலை கொண்ட கோபரகேசரி' என்ற பட்டப் பெயர் பெற்றார். முதல் ஆதித்த சோழன் ஈழத்தோடு மீண்டும் போர் புரிந்து வாகைசூடி திருத்தொண்டர் திருவந்தாதியில் இடம் பெற்றார். அத்தகைய வீர மறவர்களைப் பெற்றெடுத்தது சோழவம்சம். அவர்களுடைய வழியில் வந்தவர்கள் நாம். அப்பெரியார்கள் காட்டிய வழியில் செயல்படுவோம். இரு எதிரிகளையும் ஏககாலத்தில் அழிப்போம்.'

அமைச்சர்கள் பல்வேறு கருத்துக்களை உணர்ச்சிப் பொங்க வெளியிட்டார்கள். அனைவருடைய எண்ணங்களும் ஏறக்குறைய ஒரே மாதிரியே இருந்தது. எதிரிகளுடன் உடனடியாகப் போர் துவங்க வேண்டும் என்பதில் ஏகமனதான கருத்து நிலவியது. அனைவரும் தங்களுடைய கருத்துக்களைக் கூறி அடங்கியவுடன் அரசர் பேசினார்:

---

*நமது புதினத்தில் வரும் வீரபாண்டியன் அல்ல.

'அமைச்சர் பெருமக்களே, உங்களுடைய கருத்துக்கள் நேர்மையானவை; பரிசீலனைக்குரியவை. இன்று அம்மையப்பனான அண்ணன் வேதவனம் தலைமையில் நம்முடைய படைகள் என்றும் இல்லாத அளவு வலிமையைப் பெற்று இருக்கின்றன. ஈழத்து சிங்கம் சீவல்லபனுடைய தீரச் செயல்களின் விளைவாக ஈழப்படைகளில் கணிசமான அளவு நம்முடன் சேர்ந்து இருக்கின்றன. ஆயினும், சோழநாடு போரை விரும்பவில்லை. போர் என்றால் துன்பமானது. வென்றாலும், தோற்றாலும் போரினால் பலருக்கு இன்னல்கள் ஏற்படுவது தவிர்க்க இயலாதது. ஆனால், துர்ப்பாக்கிய வசமாக நம்முடைய எண்ணத்திற்கு மாறாக, இன்றைக்கு நாம் போரில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் சிக்கிக் கொண்டு இருக்கிறோம் என்பதில் ஐயமில்லை.'

இச்சமயம் அமைச்சர்கள் கரங்களைத் தட்டி ஒலி எழுப்பினார்கள். 'வெற்றிவேல்' வீரவேல் என உற்சாகத்தோடு முழங்கினார்கள். அனைவரும் அமைதியாக இருக்குமாறு அரசர் கரம் அசைத்துவிட்டு மேலும் தொடர்ந்தார்:

'அமைச்சர்களே, போரிடுவது முக்கியமல்ல. ஆனால் இங்கு நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியது ஒன்று உண்டு. நாம் இந்நிலையில் யாருடன் போரிடுவது என்பதையும் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். தலைமை அமைச்சரே, இது சம்பந்தமாகத் தங்களுடைய கருத்து?'

'அரசே, நாம் உடனே செயலில் இறங்க வேண்டும் என்பது நம்முடைய அனைவருடைய ஏகோபித்த கருத்தாகும். அடுத்து எப்படிச் செயல்படுவது என்பதற்கு வருவோம். நாம் முதலில் ஈழத்தைத் தாக்க வேண்டும் என்ற கருத்து எனக்கு உற்றதாகப் படவில்லை. முதலில் பாண்டி நாட்டைத் தாக்க வேண்டும் என்பதே என்னுடைய எண்ணம். ஏனெனில், கடல் கடந்து ஈழத்திற்குச் செல்வதில் பல பிரச்சினைகள் உள்ளன. அம்முயற்சியில் நாம் முதலில் இறங்குவதில் பல பாதக சூழ்நிலைகள் இருக்கின்றன. தற்பொழுது ஈழ அரசினுடைய படைபலமும் கணிசமாகப் பெருகி உள்ளதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நாம் ஈழத்தோடு மோதுவதானால் முதலில் கடலைக் கடக்க வேண்டும். அநேகமாக போர் ஈழநாட்டுக் கடற்கரையில் துவங்கும். அப்பொழுது நமக்குப் பின்புறம் வந்து பாண்டி நாட்டுப் படைகள் வளைத்துக் கொள்ளும். நாம் இரு எதிரிகளின்

நடுவில் சிக்கிக்கொள்ள வேண்டிய நிலை வரலாம். என்னதான் நமக்கு வலிவு இருப்பினும் அச்செயல் நாமே வலியப்போய் ஆபத்தை வரவழைத்துக் கொள்ளுவதாகும். எனவே, முதலில் நன்றிகெட்ட குலசேகரனோடு போரிடுவோம். அவனை ஒழித்துக் கட்டி விட்டு, அந்நாட்டைக் கைப்பற்றுவோம்.

'அதன்பின்னர் பாண்டி நாட்டு படைகளையும் நம்முடன் சேர்த்துக் கொண்டு நம்முடைய வலிவை பெருக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுது நமக்கு இருக்கப் போகும் ஒரே எதிரி ஈழம்தான். அந்நிலையில் ஈழத்துடன் மோதுவது கடினமல்ல. பின்னால் வந்தும் நம்மை தாக்கும் எதிரி யாரும் இருக்கமாட்டார்கள். நேருக்கு நேர் நின்று போரிடுவது எளிது இக்கருத்துதான் எனக்கு உற்றதாகப்படுகிறது.' இச்சொற்களைக் கூறி நிறுத்தினார் அமைச்சர் தலைவர்.

'தங்களுடைய இக்கருத்துதான் ஏற்புடைத்து என்று வைத்துக்கொண்டால் சிந்திக்க வேண்டியவை நிறைய இருக்கின்றன. எந்தப் போரும் மக்கள் ஆதரவு இல்லாது வெல்ல இயலாது. பாண்டி நாட்டு மக்களின் மனநிலை எப்படி இருக்கிறது? அவர்கள் குலசேகர பாண்டியனுடைய செயல் களை எல்லாம் விரும்புகிறார்களா அல்லது வெறுக்கிறார்களா? மேலும், அந்நாட்டுப் படைகளின் உணர்வு எப்படி இருக்கிறது? படைவீரர்கள் நாட்டின் விடுதலையை விரும்புகிறார்களா, அல்லது அடிமைத்தனத்தை ஆதரிக்கிறார் நடுவில் சிக்கிக்களா?' மன்னர் வினாக் கணைகளை அள்ளி வீசினார். மெதுவாக, ஆழ்ந்த யோசனையுடன் பேசினார். அவருடைய எழில் வதனத்தில் சிந்தனை இரேகைகள் ஓடின.

'அரசே, அருள்கூர்ந்து என்னுடைய கருத்தைக் கூற அனுமதி அருள வேண்டுகிறேன். விடுதலையை விரும்புவதும், அடிமைத்தனத்தை வெறுப்பதும் எல்லா உயிர்களுடைய பொதுவான இயல்பு அல்லவா? அவ்வாறு இருக்க இயற்கையிலேயே சுதந்திர உணர்வு கொண்ட பாண்டிநாட்டு மக்களின் உணர்வு எப்படி இதற்கு விதிவிலக்காக இருக்க இயலும்? பாண்டி நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் மன்னனுடைய போக்கை வன்மையாகக் கண்டிக்கிறான். ஆங்காங்கு மக்கள் கூடி அவனை எதிர்த்துப் பேசுகிறார்கள். நாள் ஆக,, ஆக மன்னரை எதிர்த்து ஆங்காங்கு எதிர்ப்பு அணிகள் சேர்ந்து விட்டன. இன்னும் சொல்லப்போனால் சில இடங்களில்

புரட்சிகளும் வெடிக்கின்றன. பல பகுதிகளில் உள்நாட்டுக் கலவரங்கள் துவங்கிவிட்டன. இவை எல்லாம் நாம் போரில் எளிதில் வெல்லுவதற்கான நல்ல வாய்ப்புகள். நமக்கு இன்று வாய்த்திருப்பது மிகவும் நல்ல சூழ்நிலை.' இது, அச்சபைக்கு சிறப்பு அழைப்பாளராக அழைக்கப் படிருந்த அஞ்சுகோட்டை நாடாழ்வாரின் சொல்.

'அது இருக்கட்டும். பாண்டி நாட்டுப் படைகளின் நிலைமை?' இது அரசர் தொடுத்த அடுத்த வினா,

'அரசே! பாண்டி நாட்டு படைகளின் நிலைமையை அறிய தக்க சான்று மாறாயரும், நானுமே! பாண்டி நாட்டுப் படையைச் சேர்ந்தவர்களின் பெரும்பாலோர் எங்களுடைய உணர்வைத்தான் கொண்டுள்ளார்கள். ஆனால் அவர்கள் மனதில் உள்ளதை வெளியில் சொல்ல அஞ்சுகிறார்கள் எங்களைப் போன்றவர்களுக்கு அரசு முக்கியமல்ல, தமிழகத்தின் விடுதலைதான் முக்கியம்.' இது நாடாழ்வார்.

'இவை எல்லாம் நமக்குச் சாதகமான சூழ்நிலைகளே என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் என்னுடைய அடுத்த வினாவிற்கு மறுமொழி சொல்லுங்கள் பார்க்கலாம். பாண்டி நாட்டை எளிதில் வென்று விடுவோம் என்றே வைத்துக் கொள்ளுவோம். வென்ற பின்னர் அந்நாட்டை நாம் எப்படி நிர்வகிக்கப் போகிறோம்?' இது மன்னரின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுந்த வினா.

'பாண்டி நாட்டை இனி தனி நாடு என்று விட்டு வைக்க வேண்டியதில்லை. இனி அப்படி ஒரு நாடு தமிழகத்தின் வரைபடத்தில் இருக்கக்கூடாது. அப்பகுதி சோழ நாட்டின் ஒரு பாகமாகவே இருக்க வேண்டும்.' ஏக காலத்தில் பலர் ஒரே குரலில் கூறினார்கள். ஒருவர் மட்டும் மௌனமாக இருந்தார். அவர் தலைமை அமைச்சர் வேதவனம்.

'உங்களுடைய கருத்தை நான் ஏற்க இயலாத நிலையில் இருக்கிறேன். நாம் போரில் இறங்குவதின் நோக்கம் என்ன? தமிழ்நாட்டின் ஒரு பகுதியான பாண்டி நாடு ஈழத்திடம் அடிமை ஆகாமல் தடுப்பதுதான் அல்லவா? அவ்வாறு சொல்லி போர் புரிந்துவிட்டு, அதன் பின்னர் அந்த நாட்டை நாமே ஆளுவோம் என்பது என்ன நியாயம்? அது அந்நாட்டை நாம் அடிமையாக்கும் செயல் அல்லவா? நாம் பாண்டி நாட்டிற்கு உதவுவதாக அறிவித்துவிட்டு, அதில் நம்முடைய சுயநலத்தை கலப்பது

நியாயமும் அல்ல. அரச தருமமும் அல்ல. அந்நாட்டின் சுதந்திரம் என்றும் காப்பாற்றப்படவேண்டும்' வலியுறுத்திக் கூறினார் வேதவனம்.

'இது சம்பந்தமாக மன்னர் பெருமானுடைய கருத்தை நாங்கள் அறியலாமா?' இது ஒரு அமைச்சர் குரல்.

'இது சிந்திக்க வேண்டிய பிரச்சினைதான். போரின் பின்னர் நாம் பாண்டி நாட்டின் பொறுப்பை ஏற்பது நியாயம் இல்லைதான். அப்படியாயின் அதனை யாரிடம் ஒப்படைப்பது? அங்கு அரச வம்சத்தில் பிறந்த யாரும் இருப்பதாகத் தெரியவில்லையே! அப்படி யாராவது இருந்தால் அவரிடம் அரசை ஒப்படைத்து விடலாம். அதுவே நேர்மையான வழி'. இது அரசருடைய கருத்து.

'அரசே, வீரபாண்டியர் இருக்கிறாரே!' இது வேதவனம்.

தலைமை அமைச்சரே, என்ன சொன்னீர்கள்? யாரை குறிப்பிட்டீர்கள்? தங்களுடைய அறிவு குழம்பி விட்டதா? நல்ல நிலையில்தான் இருக்கிறீர்களா? அந்தக் கயவன் வீரபாண்டியனை அரசனாக்குவதா? அவனுடைய பேச்சை இங்கு யாருமே எடுக்க வேண்டாம். அவனுடைய பெயரை செவிகளால் கேட்பதே பாவம். இத்தனை இன்னல்களுக்கும் காரணம் அந்தக் கயவன்தான். என்னையே வஞ்சம் செய்து சிறையில் அடைத்து கொல்ல ஏற்பாடு செய்த எத்தன் அல்லவா அவன்?' அரசர் இடி என முழங்கினார் அவருடைய கண்கள் ஈட்டிகளின் முனைகளைப்போல ஒளிவிட்டன. பேச்சிலே நெருப்பு கொட்டியது.

'அரசே, தங்களுடைய கருத்து உற்றதே, கோபமும் நியாயமானதே! ஆனால் ஒவ்வொரு நாணயத்திற்கும் இரு பக்கங்கள் உண்டு. அதனுடைய மறுபக்கத்தையும் பார்க்க வேண்டுகிறேன்.' இது வேதவனம்.

'என்ன மறுபக்கம்?'

'அரசே, தங்களுக்கு மாறாகப் பேசுவதற்காகப் பொறுத்து அருள வேண்டுகிறேன். அரசியலில் நிலையான எதிரியும் இல்லை, நிலையான நண்பனும் இல்லை என்று ஆன்றோர்கள் சொல்லுவார்கள். இன்றைய வீரபாண்டி யனை நான் அறிவேன். பழைய வீரபாண்டியன் இறந்து ஒழிந்துவிட்டார். இன்று மனம் திருந்திய வீர பாண்டியனாக அவர் மாறி விட்டார். தன்னுடைய

கடந்த காலத் தவறுகளை உணர்ந்து மனப்பூர்வமான வேதனைப் படுகிறார். சென்ற போரில் தப்பி ஓடிய அவர் தென்பாண்டி நாட்டில் தஞ்சம் புகுந்தார். அங்கு வசிக்கும் மக்களுடைய அன்பும், ஆதரவும் பெற்றுவிட்டார். தற்பொழுது அங்கு தமக்குச் சாதகமான பெரும் படையைத் திரட்டிவிட்டார். இன்று அவருக்குப் பின்னால் பல ஆயிரம் மக்கள் நிற்கிறார்கள். அவரை நம்முடைய அணியில் சேர்த்துக்கெண்டால், வெகு எளிதில் வெற்றி வெற்றுவிடலாம். மேலும்..... பேசிக்கொண்டே போன வேதவனத்தை அரசர் இடைமறித்தார்.

'மேலும்? சொல்லுங்கள்.'

'சுதந்திர உணர்வு கொண்ட பாண்டி நாட்டு மக்கள் சோழ ஆதிக்கத்தை ஒருநாளும் விரும்பமாட்டார்கள். தங்களுடைய நாட்டைச் சேர்ந்த அரச குடும்பத்தினர் ஒருவர் ஆளுவதைத்தான் விரும்புவார்கள் வீர பாண்டியனை விட்டால் இன்று அந்நாட்டை ஆள வேறு யாரும் இருப்பதாக எனக்குப் படவில்லை.'

'அமைச்சர் தலைவரே, தாங்கள் தெளிந்த சித்தத்துடன் தான் பேசுகிறீர்களா? வீரபாண்டியன் மாறி விட்டான் என்று தாங்கள் நம்புவதற்கான ஆதாரம் என்ன? தற்பொழுது அவன் எங்கே இருக்கிறான்?'

நாடாழ்வாரும், மாறாயரும் வாய் திறக்கவில்லை. தலைமை அமைச்சருடைய முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தார்கள். தலைமை அமைச்சர் ஏதோ சைகை செய்யவே மாறாயரும், நாடாழ்வாரும் வெளியே சென்றார்கள்.

அடுத்த நொடியில் மீண்டும் மாறாயரும், நாடாழ்வாரும் உள்ளே வந்தார்கள். அவர்களுக்கிடையில் தயங்கித் தயங்கி வீரபாண்டியன் தலை சாய்ந்தவாறு நடந்து வந்தான்.

'சோழ மண்டலாதிபதியே, தங்களுடைய தாள் வணங்கி வேண்டுகிறேன். இச்சிறியவன் செய்த பிழைகளை எல்லாம் பொறுத்தருள வேண்டும். என்னை மன்னிக்குமாறு பிரார்த்திக்கிறேன்.' இரு கைகளையும் கூப்பி வணங்கி நின்றான் வீரபாண்டியன். அவனுடைய கண்களில் இருந்து கொட்டிய நீர் தரையை நனைத்தது. பின்னர் மன்னருடைய பாதங்களைத் தொட்டு வணங்கினான்.

அவ்விடத்திற்குத் திடீரென வீரபாண்டியன் வருவான் என யாருமே எதிர்பார்க்கவில்லை. அனைவரும் அவனைப் பார்த்து

திடுக்கிட்டுச் செயலற்றுச் சிலைகள் ஆனார்கள். அவனைப் பார்த்தபடியே கண் இமையாது இருந்தார்கள். அவனை அழைத்து வந்த பாண்டி நாட்டுப் படைத்தலைவர்களின் கண்கள் மன்னனிடம் கருணையை வேண்டிக் கெஞ்சின.

சோழ மன்னர் அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டு சிலையாக வீற்றிருந்தார் அவருடைய கண்கள் இமைக்கும் பணியை மறந்தன. அவருடைய உள்ளத்தில் ஒரு குருசேத்திரப் போர் நடைபெற்றது. அவருடைய மனம் இரண்டாகப் பிளவுபட்டது. இரு மனங்களுக்கும் போர் நடந்தன. அவைகள் காரசாரமாகச் சொற்போர் புரிந்தன.

'இந்த வீரபாண்டியனுக்கு மன்னிப்பா?'

'ஆம், அவன் மன்னிக்கப்பட வேண்டியவனே!'

'முடியாது, அவன் கெட்டவன்.'

'அவன் கெட்டவன் என்றால் நீயும் கெட்டவனே!'

'அவன் அந்தப்பெண்பேய் கோதையினுடைய மையலில் மயங்கிவிட்டான். அதன் விளைவாகப் பல தீமைகளைச் செய்தான்.'

'நீயும் அந்தப் பெண் கோதையின் மையலில் சிக்க வில்லையா? அதனால் தீமைகள் செய்யவில்லையா?'

'அந்தப் பெண்ணின் பேச்சைக் கேட்டு வீரபாண்டியன் உன்னையே பலியிட இருந்தான்.'

'அதே பெண்ணின் பேச்சைக் கேட்டு நீயாகவே ஓடிப் போய் பலி பீடத்தின் மீது ஏறி நின்றாய்! உன்னுடைய கழுத்தைக் காட்டினாய். அவன் உன்னைக் கொல்ல வாளை ஓங்கினான். வீரபாண்டியன் வாளை உன் கழுத்தின் மீது வீசுமாறு ஏவியவள் கோதை என்றால், உன்னை வாளுக்கு முன் ஓடிச் சென்று சிரத்தை காட்டச் செய்தவளும் அவளே!'

'எப்படி இருந்தாலும் வீரபாண்டியன் கெட்டவன்!'

'அவன் கெட்டவன் என்றால் நீயும் கெட்டவனே!'

'அவன் ஒரு குற்றவாளி!'

'அவன் குற்றவாளி என்றால் நீயும் குற்றவாளி. அவன் எந்தத் தவறைச் செய்தானோ, அதனையே நீயும் செய்தாய். எனவே இருவரும் ஒன்றே. இதில் பாகுபாடே கிடையாது.'

இச்சமயத்தில் தலைமை அமைச்சர் வேதவனத்தினுடைய குரல் மன்னருடைய சிந்தனையைக் கலைத்தது. 'கருணை காட்டுங்கள் அரசே, தமிழகத்தின் வளமான எதிர் காலத்திற்கு வழி தென்பட அருள்புரியுங்கள்.'

வெகுநேரம் அங்கு அமைதி நிலவியது. யாருக்கும் பேசத் துணிவு வரவில்லை. அனைவரும் மன்னரையே பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அவர் முகத்தில் தென்பட்ட கடுகடுப்பு சிறிது சிறிதாகக் குறைந்து வந்தது. அதில் ஒரு அமைதி தென்பட்டது. வீரபாண்டியன் நம்பிக்கையுடன் அவரைப் பார்த்தான். அவனுடைய கூப்பிய கரங்கள் அப்படியே இருந்தன. மன்னர் மெதுவாகப் பேசினார்:

'வீரபாண்டியரே, வருந்தற்க! சென்றது சென்றதாகவே இருக்கட்டும். இனி நடப்பது நல்லதாக அமையட்டும். இன்று முதல் நாம் ஒன்று. நடக்க வேண்டியதை கவனிப்போம்.'

'அரசே, நான் கொடுத்து வைத்தவன். தங்களுடைய மன்னிப்பு பெற்றுவிட்டேன்.'

'வீரபாண்டியரே, இதோ இந்த ஆசனத்தில் அமருங்கள்.'

வீரபாண்டியன் அமர்ந்தான். மன்னர் அவனைப் பார்த்துச் சாந்தமான குரலில் பேசினார்!

'வீரபாண்டியரே, பாண்டிநாட்டு அரசியலில் தலையிட நான் விரும்பியதே இல்லை. ஆனால் எங்களை நிர்பந்தமாக நீங்கள் இழுத்து விடுகிறீர்கள் இது துர்பாக்கியமானது. இன்று குலசேகரன் நாட்டை மறந்து விட்டான். தனக்கு அரசாளக் கிடைத்த வாய்ப்பை தவறுதலாகப் பயன்படுத்தத் தொடங்கி விட்டதாக அறிந்தேன். இவை அனைத்தும் உண்மையா?'

'ஆம், அரசே.'

'அந்த நன்றிகெட்ட குலசேகரனுக்கு நல்லதோர் பாடம் போதிக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் சோழநாடு இருக்கிறது. என்ன செய்வது? தமிழகத்தின் தலையெழுத்து. பாண்டியர்களைக் கைப்பாவையாக்கிக் கொண்டு தமிழக அரசியலை ஆட்டிப் படைப்பதே ஈழ மன்னன் பராக்கிரம பாகுவின் தொழில் ஆகிவிட்டது. இம்முறை அவனைப் பழிக்குப் பழி வாங்குவோம். அவனுடைய வாலை செம்மையாக வெட்டுவோம். வீரபாண்டியரே, 'தஞ்சம்' என்று வந்தவரை 'அஞ்சேல்' என்று ஆதரிப்பது சோழ மன்னர்களின் இரத்தத்தில்

வழி வழியாக வந்த சீரிய பண்பாடு. அந்தப் பண்பாட்டிற்கு என்னால் இழுக்கு நேராது. அதற்கு ஏற்ப நானும் செயல்படுவேன். கேளுங்கள். நாங்கள் போரை விரும்பவில்லை. மீண்டும் அது எங்களுடைய தலைமீது நிர்ப்பந்தமாகத் திணிக்கப்பட்டு விட்டது. சவாலை ஏற்பேன்; போரில் குதிப்பேன். பாண்டிநாட்டை ஈழத்தின் பிடியிலிருந்து மீட்பேன். துரோகி குலசேகரனை ஓட ஓட விரட்டி அடிப்பேன். 'வரலாறு' சிறப்புமிக்க பாண்டிநாட்டு மணி மகுடத்தை தங்களுடைய முடியில் சூட்டுவேன். என்றென்றும் பாண்டியநாடு சுதந்திரமாகத் திகழும். இது என்னுடைய சத்தியவாக்கு!' இதனைக் கூறும்போது, மன்னருடைய முகத்தில் ஒளி மின்னியது. கண்களிலிருந்து மின்னல் பளிச்சிட்டது. பார்வையில் நீண்ட தொலைநோக்கு தென்பட்டது.

'ஜய விஜயீபவ, ஜயவிஜயீ பவ!' உணர்ச்சி வசப்பட்ட அமைச்சர்கள் வாழ்த்து ஒலிகள் எழுப்பினார்கள்.

'சோழ சக்ரவர்த்தி இராசாதி ராசர் வாழ்க! உணர்ச்சி வசப்பட்ட தலைமை அமைச்சர் உற்சாகம் மேலிட்டுக் கூவினார், அனைவரும் அதனையே மீண்டும், மீண்டும் கோஷித்தார்கள்.

'தலைமை அமைச்சரே, இனி பேச்சு அல்ல, செயல். ஆம் செயல். இப்பொழுதே நம்முடைய படைகளைத் தயார் படுத்துங்கள். நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள படைகள் உடனே தலைநகருக்குத் திரண்டு வரட்டும். ஈழம் சென்றுள்ள சீவல்லபனை உடனே திரும்பி வருமாறு ஓலை அனுப்புங்கள். முடிந்தால் சீவல்லபன் ஈழத்திலிருந்து உதவிப் படைகளுடன் வரும்படி எழுதுங்கள். போர், போர், போர்! போர் முரசம் கொட்டட்டும். வெற்றி பேரிகைகள் முழங்கட்டும். புலிக்கொடிகள் விண்முட்ட உயர்ந்து பறக்கட்டும்!

மன்னர் உற்சாகத்துடன் ஆணையிட்டார். மற்றவர்கள், 'வெற்றிவேல், வீரவேல்' என்று மீண்டும் மீண்டும் வாழ்த் தொலிகளை எழுப்பினார்கள்.

'இத்துடன் சபை கலைகிறது' இது அரசருடைய ஆணை. அரசர் எழுந்து நின்றார். அனைவரும் எழுந்து நின்று அவரை வணங்கினார்கள் அரசர் அவ்விடத்தைவிட்டு வேகமாக வெளியேறினார்.

பாண்டிநாட்டுப் படைத் தலைவர்களும், வீரபாண்டியனும் பின்தொடர தலைமை அமைச்சர் வெளியே புறப்பட்டார்.

29

படை புறப்பட்டது

கி.பி. 1175-ம் ஆண்டு.*

ஒரு நாள் அதிகாலை. இரவின் கடைசியாமம் நடக்கிறது. சோழப் படைகள் ஆயிரம்தளி அரண்மனையின் எதிரில் வியர்பித்திருந்த பரந்த மைதானத்தில் அணி, அணியாக நிறுத்தப்பட்டன. 'படை பெருத்ததோ, பார் சிறுத்ததோ' என்று இலக்கியம் பாடிய செயங் கொண்டாரின் பரணிக்கு இலக்கணமாக சோழப் படைகள் அணிவகுத்து நின்றன. ஆம், அது அளவிட இயலாத அளவுக்குப் பெரும் படைகள். சோழ நாட்டின் மக்கள் அனைவருமே ஒருவர்கூட விதிவிலக்கு இல்லாமல் பாண்டி நாட்டுடன் போரிடச் செல்ல அங்கு கூடி விட்டார்களா? அரண்மனையின் எதிரில் வியாபித்து இருந்த மிகப் பெரிய மைதானமெங்கும் மக்கள் தலைகள்!

மைதானத்தின் மத்தியிலே புலிக்கொடி விண்ணை முட்ட பட்டொளி வீசிப் பறக்கிறது. காற்றில் மோதப்பட்ட அக்கொடி அலை அலையாகப் பறந்துகொண்டு இருந்தது. அத்தோற்றம் கொடியில் இருக்கும் புலி பகைவனை அழிக்க தாவித் தாவி குதிப்பது போலத் தென்பட்டது. 'பகை முடிக்க நான் மட்டுமே போதும்; என்னை விடுங்கள், விடுங்கள்' என அது துடித்தது.

கொடி மரத்தை மையமாகக் கொண்டு தேர்ப்படையும், புரவிப்படையும், யானைப் படையும், காலாட்படையும் நீண்டு நிற்கின்றன. ஒவ்வொர படையின் நுனியும் கொடிக் கம்பத்தின் அருகிலிருந்து துவங்கியது. மற்றொரு நுனி? அது எவ்வளவு தூரம் நீண்டு இருக்கிறது. அது எங்கே போய் முடிகிறது? இதனை யார் அறிவார்!

சோழ நாட்டின் அமைச்சர் தலைவரும், சேனாபதியுமான வேதவனமுடையான் அம்மையப்பனான அண்ணன்

---

*இது கி.பி. 1178 என்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

பல்லவராயன் தம்முடைய இல்லத்தில் அதிகாலையில் பூசனைகளை முடித்துக் கொண்டார். பின்னர், பயபக்தியுடன் தன்னுடைய அறையில் ஈர மஞ்சள் ஆடையை அணிந்து கொண்டார். மார்பில் போர்க் கவசத்தை தரித்துக் கொண்டார். அவருடைய இல்லத்தரசியான திலகவதி அவரை பயபக்தியுடன் போர் வாளை வணங்கி விட்டு, பின்னர் எடுத்து அவரிடம் நீட்டினாள்.

அப்பொழுது வேதவனம் கண்களில் வீரஒளி பளிச்சிட்டது. பெருமிதமும், பூரிப்பும் பொங்க இல்லாளுடைய கண்களைச் சந்தித்தார், ஆனால் அங்கு ஏமாற்றமே காத்திருந்தது. அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக திலகவதியின் கண் பார்வையிலே ஒளி மயங்கி இருந்தது. அவளுடைய மேனி வெளுத்து இருந்தது. இலைகளை உலரச் செய்யும் வெப்ப வாயு தீண்டிய மல்லிகைக் கொடியைப் போல அவள் தோற்றமளித்தாள். வேதவனம் திடுக்கிட்டார். அவர் மனதில் நிலவிய மகிழ்ச்சி வரண்டு விட்டது. இல்லாளைப் பார்த்துக் கேட்டார்:

'திலகம், என்ன இது? நான் காண்பது கனவு அல்லவே? உண்மையிலேயே நீ கண் கலங்குகிறாயா? ஏன்? நான் போர் முனையிலிருந்து திரும்புவேனோ, மாட்டேனோ என்ற ஐயம் வந்துவிட்டதா?'

'இல்லை, இல்லை. கெட்ட சகுனம் போலப் பேசாதீர்கள் சுவாமி!'

'திலகம், போர் என்றால் வெற்றியும், வீர மரணமும் இயல்பே! கணவன்மார்களை போருக்கு அனுப்பும்போது மனைவியர் கலங்குவதை என்னால் புரிந்துகொள்ளமுடிகிறது. ஆனால் வீராதி வீரர் திருச்சிற்றம்பலமுடையாருடைய புதல்வி கணவனைப் போருக்கு அனுப்பும் போது கண் கலங்கலாமா? விந்தை! நீயும் ஒரு சாதாரண சராசரிப் பெண்தானா?'

'ஐயோ, தாங்கள் இவ்வளவு கால வாழ்வுக்குப் பின்னர் கூட என்னை நன்றாகப் புரிந்து கொள்ளவில்லையே! போரினைக் கண்டு அஞ்சுபவள் அல்ல நான். அதனுடைய விளைவுகளைப் பற்றிக் கற்பனை செய்து கொண்டு கலங்குபவள் நான் அல்ல. ஈடும், இணையும் அற்ற சனக மகாராசனை யொத்த பிதாவையும், இராமச்சந்திரமூர்த்திக்கு இணையான வீரநாயகனையும் பெற்ற புண்ணியவதி நான். அவர்கள் என்னைக் கோழையாக வளர்க்கவில்லை. மறுமுறை அருள்கூர்ந்து என்னை அவ்வாறு சொல்ல வேண்டாம்.' அவளுடைய பேச்சிலே சூடு தெறித்தது.

'அப்படியானால் உன்னுடைய கண்கள் கலங்கக் காரணம்?'

"அதற்குக் காரணம் வேறு.'

'அப்படி என்ன புதுக் கவலை? புரிகிறது திலகம். வாரிசு ஏற்படுத்திக் கொடுக்காமல் போகிறேன் என்பதால்தானே?'

'இன்று ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? என்னுடைய கவலை நீங்கள் போருக்குச் செல்கிறீர்கள் என்பது அல்ல. என்னையும் போருக்கு உடன் அழைத்துச் செல்லாமல் நீங்கள் மட்டும் போகிறீர்களே என்பதுதான். நேருக்கு நேர் நின்று எதிரியுடன் போரிடும் வாய்ப்பு எனக்கு இல்லையே என்ற ஏக்கம் தான்.'

'ஓ, அப்படியா செய்தி? நன்றாக இருக்கிறது! மந்தாரை மலரை ஒத்த உன்னுடைய பஞ்சுக் கரங்கள் வாளை ஏந்தலாமா தேவி?'

'ஏன்? என்னால் வாளை ஏந்த முடியாதா? பெண்கள் என்றாலேயே தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் பரம்பரை, பரம்பரையாக ஆண்களின் உள்ளத்தில் ஊறி வந்திருக்கிறது. அதன்படி என்னைத் தாழ்த்திப் பேசி விட்டீர்கள். நீங்களும் ஒரு ஆண்மகன்தானே? உங்களிடம் வேறு என்ன எதிர் பார்க்க முடியும்!'

'நான் கூறியது தவறு என்கிறாயா? அப்படியானால் ஒன்று செய்யலாமா?'

'என்ன?'

'உன்னால் வாளை ஏந்த முடிகிறதா, முடியாதா என்பதை இங்கு இப்பொழுதே முடிவு கட்டுவோம். எடு ஒரு வாளை, பிடி கரத்திலே! துவக்குவோம் வாட்போர்! நடைபெறப்போகும் போருக்கு இது ஒத்திகையாக அமையட்டும். நீ வென்று விட்டால் நான் வீட்டிலேயே இருக்கிறேன். இந்த வாளை உன்னிடம் கொடுக்கிறேன். நீ போருக்குப் போய் வா, சென்று வா, வென்று வா! வெற்றித் திலகமிட்டு வாயிற்படியில் உன்னை வரவேற்கிறேன். தமிழக வரலாறு திசை திரும்பட்டும். புதியதோர் பாதையை நாம் படைத்துக் காட்டுவோம்!'

'ஐயா, இந்த விளையாட்டு எதற்கு? தங்களுடைய கரங்களின் வலிமையை நான் அறியமாட்டேனா? தங்களுடைய கரங்கள் யானையின் துதிக்கையைப் போல நீண்டவை.

இந்திரனுடைய வஜ்ஜிராயுதத்தைப் போல வலிமை மிக்கவை. அத்தகைய ஆற்றல்மிக்க கரங்களுடன் சிறியவளாகிய நான் போட்டிபோட இயலுமா? ஆயிரம், ஆயிரம் சிரங்களைச் செண்டாடும் ஆற்றல்மிக்க கரங்கள் தங்களுடையவை. இந்தப் பேதையின் கரங்கள் அவைகளுக்கு ஈடு கொடுக்குமா?' திலகம் கல, கலவெனச் சிரித்தாள். ஆயினும் அந்தச் சிரிப்பில் எங்கோ ஓர் இடத்தில் வேதனை இருக்கவே செய்தது.

'அப்படியானால் நீ ஏன் போருக்கு வர ஆசைப்பட வேண்டும்? ஓ, இப்பொழுது தெரிகிறது. நன்றாகத் தெரிகிறது.

'என்ன தெரிகிறது.'

'எனக்கு உதவியாக இருப்பதற்காக போருக்கு வரவிரும்புகிறாய். போரில் எனக்கு ஏதாவது இடையூறு வந்தால் உடனிருந்து உதவி செய்ய விரும்புகிறாய். அப்படித்தானே? தன்னுடைய கணவனான தயரதனுடைய இரதத்தின் அச்சு முறிந்துவிட்டபோது கைகேயி தன்னுடைய கரத்தையே அச்சாணியாகக் கொடுத்து உதவியதைப் போல!'

'ஐயையோ, அப்படி எல்லாம் இல்லை. நான் அச்சாணியாகக் கைகொடுத்து உதவவும் மாட்டேன். அதற்கு பிரதிபலனாக வரங்களைக் கேட்டு மீண்டும் ஒரு இராமாயணம் நடக்கக் காரணமாக இருக்கவும் மாட்டேன். ஏதோ, சேது அணை கட்ட இராமபிரானுக்கு அணில் உதவியதுபோல...!'

'திலகம், இராமாயணம் இல்லாவிட்டால் அணில் ஏது, சேதுபந்தனம் ஏது?'

'ஐயா, உங்களுடன் வாட்போரில் மட்டுமல்ல, சொற் போரிலும் என்னால் ஈடுகொடுக்க இயலாது.'

'அப்படியானால் ஏன் இந்த வாட்டம்?'

'ஐயா, தங்களுடைய வாள் செய்த பேறுகூட அடியாள் செய்யவில்லை.'

'என்ன திலகம், என்னுடைய வாள் மீது அவ்வளவு பொறாமையா?'

திலகம் வெறிக்க, வெறிக்க அவருடைய முகத்தையும், வாளையும், மாறி மாறிப் பார்த்தாள் அவள் பதில்

அளிக்கவில்லை. வேதவனமே அவளுடைய வாயைக் கிளறினார். 'அப்பப்பா, பெண்கள் என்றாலேயே...

'பெண்கள் என்றாலேயே?'

'திலகம், கதையைக் கேள். தர்ம அசோக சக்கரவர்த்தி ஒரு மகாபோதி மரம் நட்டார். அதன் வளர்ச்சியைத் தினமும் கண்டு களித்தார். அம்மரத்தை அதிகாலையில் பக்தியோடு வணங்கி வந்தார். அரசருடைய இராணி தீசரட்சை இதனை அடிக்கடி பார்த்தாள். பெருமூச்சு விட்டாள். மன்னன் தன்னை விட்டு ஒரு போதி மரத்தை வணங்குகிறாரே என்று அசூயை கொண்டாள். ஒருநாள் ஒரு மந்து முள்ளினால் போதிமரத்தைக் குத்தி அது பட்டுப் போகும்படிச் செய்து விட்டாளாம்.'

திலகம் கண்களில் பொல, பொலவென கண்ணீர் கொட்டி விட்டது. தேம்பித் தேம்பி அழுதாள். வேதவனம் அவளை அணைக்க நெருங்கினார். அவள் அப்பால் நகர்ந்து கொண்டு அழுது கொண்டே கேட்டாள்:

'இந்தக் கதையை இப்பொழுது ஏன் சொல்ல வேண்டும்?

'விடிய வெகுநேரம் இருக்கிறது. பொழுது போகவில்லை என்பதால் கதையைச் சொன்னேன்.'

'இல்லை. நான் அந்த தீசரட்சையைப் போல கொடியவள், பொறாமைக்காரி என்று மறைமுகமாக எடுத்துச் சொல்லுகிறீர்கள்.'

'தப்பு, தப்பு! நான் அப்படிக் கூறவில்லை. என்னைத் தவறாகப் புரிந்து கொண்டாய். தீசரட்சையைப் போல அவ்வளவு முரட்டு அன்பு உன்னுடைய அன்பு, என்பதை உணர்த்தவே இக்கதையைக் கூறினேன்.'

திலகம் சற்று மன அமைதி பெற்றாள் அவருடைய வார்த்தைகளில் இருந்த உண்மையை உணர்ந்து கொண்டாள். அமைதியோடு முகத்தைத் துடைத்துக் கொண்டு பேசினாள்:

'அன்பரே, தீசரட்சை செய்தது மாபெரும் தவறு. ஆனால் அதனுடைய பின்னணி, கணவன் மீது வைத்திருந்த அன்பு அல்லவா? பக்தி முற்றினால் அப்படித்தான். ஒரு பக்தன் தன்னுடைய கண்களையே பறித்து இறைவனுக்குக் கொடுத்தான். மற்றொரு பக்தன் தன்னுடைய குழந்தையைக் கொன்று அடியாருக்கு அமுது படைத்தான். ஒரு பக்தன் திருட்டுத் தொழில்

செய்து அடியாருக்கு உணவு அளித்தான். அவர்கள் எல்லாம் கொடியவர்களா? அன்பின் மேல் நிலை அது.'

'திலகம் இந்த விளையாட்டுப் போதும், விடிந்து விட்டது. மகிழ்வோடு என்னை வழியனுப்பு.'

'சுவாமி. அதோ துந்துபிகள் முழங்குகின்றன. முரசங்கள் ஒலிக்கின்றன. வெற்றியுடன் சென்று வாருங்கள்.'

திலகவதி தட்டில் இருந்த அத்தி மாலையை எடுத்து கணவருடைய கழுத்தில் சூட்டினாள். அப்பொழுது ஒரு பணிப் பெண் மஞ்சள் நீரும், தீபமும் தாங்கிய ஒரு தட்டை ஏந்தி வந்து அவளிடம் நின்றாள். அவள் அத்தட்டை வாங்கி மணாளனுக்கு முன்னர் மூன்று முறை சுற்றினாள். மோதிர விரலை மஞ்சள் நீரில் ஒற்றி எடுத்து அவருடைய நெற்றியில் திலகமிட்டாள். வேதவனம் அவளை அப்படியே அள்ளி அணைத்துக் கொண்டார் அவளுடைய கன்னத்தில் ஒரு முத்திரையைப் பதிய வைத்து விட்டு வெளியேறினார்.

விடியும் நேரம் நெருங்க, நெருங்க படைகளின் இடையே பரபரப்பு அதிகமாகியது. சங்கு, கொம்பு, தாரை, தப்பட்டை முதலிய வாத்தியங்கள் முழங்கின. பெரிய பெரிய பேரிகைகளைச் சுமந்த எருதுகள் ஆங்காங்கே நின்றன. அவைகளின் கழுத்துகளில் மாலைகள் தொங்கின. ஒரு குன்றைப் போன்ற நன்கு அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானை கொண்டுவரப்பட்டு கொடிக்கம்பத்தின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டது.

சேனாபதி வேதவனம் ஒரு உயர்சாதி வெண் புரவியின் மீது அமர்ந்தவாறு அங்கு கம்பீரமாக வந்து சேர்ந்தார். புரவியின் மீது இருந்தபடியே அணி வகுத்து நின்ற படைகளின் இடையே இருந்த இடைவெளியில் மெதுவாகச் சென்றார். படைகளையும், அணிவகுப்பையும் பார்வையிட்டார். அவருடைய முகத்தில் தென்பட்ட மகிழ்ச்சி அவருடைய மனநிறைவை எடுத்துக் காட்டியது.

அனைத்தையும் பார்த்த பின்னர் அவர் கொடிக் கம்பத்தின் அருகில் வந்தார். அப்பொழுது அங்கு ஒரு எதிர்பாராத குழப்பம் ஏற்பட்டது. அணிகள் சிதறும் நிலை உண்டாயிற்று. இதென்ன? அந்த மைதானத்தின் திரண்டு இருக்கும் படையை நோக்கி ஒரு பெரும்படை வருகிறதே? ஆயிரம், ஆயிரம் யானைகள் அணிவகுத்து வருகின்றனவே? திட்டமிட்டதற்கு மாறாகப்

பாண்டியனே சோழநாட்டைத் தாக்க முந்திக்கொண்டு வந்துவிட்டானா? படைகளை வழியனுப்ப உற்சாகத்துடன் அங்கு கூடியிருந்த ஆயிரம் ஆயிரம் மக்களின் உள்ளங்களில் இந்த வினா பூதாகரமாக எழுந்தது.

ஆனால் இந்தக் குழப்பம் அதிக நேரம் நீடிக்க வில்லை. மக்கள் மனதில் ஏற்பட்ட அச்சம் அகன்றது. அது மகிழ்ச்சியாகப் பரிணமித்தது.

'ஈழ நாட்டின் பட்டத்து அரசன் சீவல்லபன் வாழ்க, சீவல்லபன் வாழ்க!' என்று மக்கள் ஒலி எழுப்பத் துவங்கி விட்டார்கள். ஆம் அப்பொழுது அங்கு வந்தது சீவல்லபன்தான். அவன்தான் ஈழ்நாட்டுப் படைகளுடன் அங்கு வந்து சேர்ந்தான். அதனைக் கண்ட மக்கள் பெற்ற மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. படைகளை வெகு தூரத்தில் விட்டு விட்டு சீவல்லபன் மட்டும் ஒரு உயர்சாதி புரவியில் அமர்ந்தவாறு கொடிக்கம்பத்தை நோக்கி வந்தான். கொடிக் கம்பத்தை நோக்கி வரிசை வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்ட படைப் பிரிவுகளின் இடைவெளியில் அவன் பறந்து வந்தான். அவன் மட்டும் வரவில்லை. அவன் ஈழத்தில் கண்டெடுத்த மகீதரனும் மற்றொரு புரவியில் அவனை நிழலைப் போலத் தொடர்ந்து வந்தான். தற்பொழுது அவ்விருவரும் இணைபிரியாத இரட்டையர்கள். எனவே சீவல்லபனுடன் மகீதரன் வந்தது யாருக்கும் வியப்பு அளிக்கவில்லை.

சோழநாடு பாண்டி நாட்டின்மீது படையெடுத்து செல்லப் போகிறது என ஈழத்திலிருந்த சீவல்லபனுக்கு சோழ மன்னர் ஓலை அனுப்பி தெரிவித்திருந்தார். அச்செய்தியைத் தாங்கிய ஓலையை சீவல்லபன் ஈழத்தில் கண்டான். அக்கணமே பெரும் படையுடன் புறப்பட்டு வந்து சேர்ந்தான். கொடிக் கம்பத்தின் அருகில் வந்த சீவல்லபனும், மகீதரனும் மிடுக்குடன் கீழே இறங்கினார்கள். அங்கு போர்க்கோலம் பூண்டு நின்றிருந்த சேனாபதியை பணிவோடு வணங்கினார்கள்.

மகிழ்ச்சி மேலிட்ட சேனாபதி சீவல்லபனை அப்படியே மார்போடு சேர்த்துத் தழுவிக்கொண்டார். பின்னர், 'வா, மகீதரா!' என்று கூறியவாறு அந்த இளைஞனையும் கட்டித் தழுவினார். சிறியவனான தன்னுடைய பெயரை சோழமண்டல சேனாபதி நினைவில் வைத்திருக்கிறார்; அதுமட்டுமல்ல, தன்னை அவர் கட்டித் தழுவிக் கொண்டார்! இதனால் மகீதரன் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தான் பண்பட்ட அந்த இளம் வீரன்

அடக்கத்தோடு ஒருபுறமாக நின்றான். அடக்கம்தானே வீரம் என்ற நாணயத்தின் மறுபக்கம்!

சீவல்லபன் மகீதரனை தன் அருகே அழைத்தான். படைகளை ஒழுங்குபடுத்தி நிற்க வைக்க வேண்டிய முறைகளை அவனிடம் விளக்கிக் கூறினான். அதனைக் கேட்ட மகீதரன் செயல்பட அவ்விடத்தை விட்டு அப்பால் சென்றான்.

சொல்லி வைத்தாற்போல உடனே அங்கு சோழ நாட்டு ஆஸ்தானக் கவிராயர் ஆனந்தவரதக்கூத்தர் வந்து சேர்ந்தார். அவர் வரவு எதிர்பாராதது. அங்கு அவர் வந்ததே அதிசயம் தான்.

கோதை சோழ அரண்மனையிலிருந்து இரு பிள்ளை களைக் கடத்தினாள். அவர்கள் அரச குமாரர்கள் அல்ல எனத் தெரிந்துவிட்டன. எனவே அவர்களைக் கொல்லும் எண்ணத்தை விட்டு விட்டாள். அவர்களை வளர்க்கும் பொறுப்பை காஞ்சி நாதமுனி பட்டரிடம் ஒப்படைத்தாள். பட்டர் அப்பிள்ளைகளில் பெரியவனான நல்லமனை ஆனந்தவரதக்கூத்தருடன் யாத்திரை செல்ல அனுப்பி விட்டார். இதனை அறிந்த கோதை பட்டரைக் கடுமையாகக் கோபித்தாள். பிள்ளையை மீண்டும் என்னிடம் சேர்க்க வேண்டும் என ஆணையிட்டதன்றி அதற்கு ஒரு கெடுவும் நிர்ணயித்தாள். இளையவனான மகீதரனை தன்னுடன் ஈழத்திற்கு அழைத்துச் சென்றாள் இவை எல்லாம் முன்பே நாம் அறிந்தவையே!

கோதை கெடு நிர்ணயித்துச் சென்ற பின்னர் நாதமுனி பட்டர் நடுநடுங்கி விட்டார். 'கோதை என்னிடம் பிள்ளைகளை அடைக்கலமாக ஒப்புவித்தார். அடைக்கலப் பொருளை பிறரிடம் கொடுக்க நான் யார்? அடைக்கலப் பொருளைக் காப்பதே அறம். அதற்கு மாறாக, யாரோ ஒருவர் விரும்பிக் கேட்டார் என்பதற்காக பிள்ளையை அவருடன் அனுப்பியது பெரும் தவறு.' இதனை நினைத்து பட்டர் வேதனைப் பட்டார்; கண்ணீர்விட்டு அழுதார்.

மேலும், அப்பெண் கோதையைப் பற்றி பட்டர் நன்கு அறிவார். அவள் எதையும் செய்யத் தயங்காதவள். அவள் நிர்ணயித்த கெடு காலம் நெருங்கி வருகிறது. ஆனந்தவரதக் கூத்தரைப் பற்றியும், நல்லமனைப் பற்றியும் தகவலே இல்லை. கோதை கெடு முடிந்த பின்னர் வந்து பிள்ளையைக் கேட்டால் என்ன மறுமொழி சொல்லுவது? பிள்ளை இல்லை என்றால் அவள் சும்மா இருக்க மாட்டாள். அவள் அவரைக் கொலை செய்தாலும் வியப்பில்லை.

மேலும் நல்லமனும், மகீதரனும் பட்டருடைய வளர்ப்புப் பிள்ளைகள்தான். அவர்கள் யார் பெற்ற செல்வங்கள் என்று அவர் அறியார். எனினும், பட்டருக்கு அப்பிள்ளைகளின்மீது பெரும் பாசம் ஏற்பட்டுவிட்டது. தாம் பெற்றெடுத்த பிள்ளைகளைப் போலவே அவர்களைக் கருதினார். அவர் இளம் வயதிலேயே மனைவியைத் துறந்தவர். அவருக்குப் பிள்ளைப்பேறு கிடையாது, பட்டமரம் அவர். மனைவி இறந்த பின்னர் உலக பந்த பாசங்களைத் துறந்துவிட்டு, கோவிந்தராசப் பெருமாளுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு சேவை செய்து வந்தார். அத்தகையவருடைய உள்ளத்திலே புது பாச ஊற்றுப் பெருக்கெடுத்து விட்டது. தம்முடைய வாழ்வின் பிடிப்புக்குக் காரணமே அப்பிள்ளைகள்தான் என அவர் நம்பினார். காலத்தின் கொடுமை! அப்பிள்ளைகள் இருவருமே அவரை விட்டுப் பிரிந்து விட்டார்கள். பிள்ளைகளின் பாசம், கோதையின்பால் ஏற்பட்ட பயம் இரண்டும் சேர்ந்து அவரைப் படுக்கையில் தள்ளிவிட்டன.

பட்டர் ஊணும், உறக்கமும் இன்றி படுக்கையில் அல்லல்பட்டார். நல்லமா, மகீதரா என்று பிள்ளைகளுடைய பெயர்களைச் சொல்லிச்சொல்லி அழுதார். அவர்களையே நினைத்து ஏங்கினார். 'நாராயணா, இது என்ன சோதனை' என்று இறைவனைப் பலமுறைக் கேட்டார் இனி அத்தகைய வினாக்களைத் தொடுக்க வழியின்றி, ஒருநாள் காலை அந்த நல்லவர் நாற்றத்துழாய்முடி நாராயணன் திருவடிகளைப் போய்ச் சேர்ந்துவிட்டார்.

இதில் வேதனை அளிப்பது என்னவெனில், பட்டர் உயிர் நீத்ததற்கு ஒருநாழிகைப் பொழுதில் யாத்திரை சென்ற ஆனந்தவரதக்கூத்தர் அங்கு வந்து சேர்ந்தார் பிள்ளை நல்லமனுடன் நலமாக வந்து சேர்ந்தார் அடைக் கலப் பொருளான நல்லமனை உரியவரிடம் ஒப்படைக்கக் கூத்தர் வந்தார். நாதமுனி பட்டரைக் காண கூத்தரும், நல்லமனும் ஆவலோடு வந்தார்கள். ஆனால் அவர்கள் கண்டது நாதமுனி பட்டரை அல்ல, அவருடைய பிணத்தை! இதுதான் வாழ்வு!

'அப்பா, அப்பா', என்று பிணத்தின்மீது விழுந்து நல்லமன் கதறித் துடித்தான். கவிஞர் கண்களில் நீர் வழிய அந்த சோகக் காட்சியைப் பார்த்தவாறு மரமென நின்று விட்டார்.

காலம் யாருக்காவும் காத்திருப்பதில்லை. வைணவ நியதியின்படி நாதமுனி பட்டர் அடக்கம் செய்யப்பட்டார்.

கூத்தருக்கு அடுத்துத் தாம் செய்யவேண்டுவது என்ன என்று தெளிவு இல்லை. நல்லமனுடைய இளவல் மகீதரன் எங்கே, அவன் என்ன ஆனான் என்று அண்டை வீட்டுக்காரர்களைப் புலவர் விசாரித்தார். யாருமே உற்ற மறுமொழி சொல்லவில்லை. தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டார்கள். ஒருக்கால் பட்டர் அவனுக்கு வேறு ஏதாவது ஏற்பாடு செய்து இருக்கிறாரோ அல்லது அவன் உயிரோடு இல்லையோ, அவனுடைய பிரிவைத் தாங்க இயலாதுதான் பட்டர் இறந்து விட்டாரோ? இவ்வாறெல்லாம் புலவர் ஐயப்பட்டார்.

'எங்கே என்னுடைய தம்பி? என் அன்பு மகீதரன் எங்கே?' அழுதுக் கொண்டே புலவரைப் பலமுறை கேட்டு விட்டான் நல்லமன். பாவம், அவர் என்ன மறுமொழி சொல்ல இயலும்? அவருடைய துன்பம் தோய்ந்த முகம்தான் நல்லமனுடைய கண்ணீருக்கு விடையாக அமைந்தது.

ஆனந்தவரதக் கூத்தருடைய உள்ளத்தில் மற்றொரு பிரச்சினையும் வேகமாக வேலை செய்தது. அது நல்லமனுடைய பிரச்சினைதான். தம்முடைய பொறுப்பில் இருக்கும் நல்லமனை இனி என்ன செய்வது? அவனுடைய உற்றார், உறவினர்கள் இருக்கிறார்களா? யாரிடம் அவனை ஒப்படைப்பது என்று கவிஞர் சிந்தனையில் இறங்கினார்.

நல்லமன் கவிஞருடைய எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டு இருக்க வேண்டும். 'புலவர் பெருமானே! என்னுடைய பிதா போய்விட்டார். அன்னையைக் காணவில்லை. எனக்கு இனி அனைத்தும் அந்த நாராயண மூர்த்திதான். இனி இப்புவியில் எனக்குத் தாயும், தந்தையும் தாங்கள்தான்! உற்றாரும், பெற்றோரும் தாங்களே! ஊரும் உலகமும் தங்களுடைய திருவடிகளே! நான் ஒரு அனாதை. என்னைத் தங்களுடைய சீடனாக ஏற்றுக்கொண்டு காப்பாற்றுங்கள் சுவாமி.' இவ்வாறு கூறி அழுது கொண்டே புலவரின் பாதத்தில் விழுந்தான் நல்லமன்.

புலவர் கதறியவாறு நல்லமனைத் தூக்கி நிறுத்தி அணைத்துக்கொண்டார். 'நல்லமா, எல்லாம் அவன்விட்ட வழியே நடக்கும். எதற்கும் அஞ்சற்க! பிறிதொருமுறை உன்னை அனாதை என்று சொல்லாதே. அதனைக் கேட்டால் என்னுடைய நெஞ்சு வெடித்துவிடும். நம் அனைவரையும் காக்க நிலமளாவிய நிர்மலிவேணியன் இருக்கிறான். நாம் யாருமே

அனாதை இல்லை. அவனுடைய கருவியாக உனக்கு உதவ நான் இருக்கிறேன், அந்த இறைவன் கருணை கூர்ந்து என்னிடம் அளித்த பேசும் பொற்சித்திரமான உன்னை என்னுடைய உயிரினும் மேலாகக் காப்பாற்றுவேன். கவலையை விடு மகனே. கண்ணீரைத் துடைத்துக் கொள்,' ஆறுதல் கூறிய புலவரின் கண்களில் மட்டும் நீர் வற்றவில்லை. அன்று அவர் கூறிய உறுதிமொழியை இறுதிவரை காப்பாற்றினார்.

நாதமுனி பட்டருடைய அந்திமச் சடங்குகள் முறைப்படி செய்ய கூத்தர் ஆவன செய்தார். பட்டரைத்தான் நல்லமன் தன்னுடைய பிதா என நினைத்து இருந்தான். எனவே மைந்தனுக்குரிய பக்தியுடன் பிதாவின் இறுதிச் சடங்குகளை அவன் செய்தான்.

அனைத்தும் முடிந்தும் புலவர் பிள்ளையுடன் ஒருவார காலம் அந்த இல்லத்தில் தங்கினார். தினமும் வரதராசப் பெருமான் சன்னதிக்கும் ஏகாம்பரீசுவரன் கோயிலுக்கும் சென்று பட்டருடைய ஆத்மாவுக்கு சாந்தி அருளுமாறு பிரார்த்தித்தார்.

காலம் ஓடியது. ஒரு பிதா தன்னுடைய சொந்தப் பிள்ளையை நேசிப்பதைவிட மேலாக அவர் நல்லமனை நேசித்தார். இயற்கையிலேயே நல்லமனுக்கு இருந்த ஆழ்ந்த அறிவும், பரந்த ஞானமும் புலவரை பிரமிக்கச்செய்தன. அவனைக் காணும்போதெல்லாம் பிள்ளைப் பிராயத்தில் அன்னையின் ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தனின் நினைவுதான் கவிராயருக்கு வந்தது.

ஆனந்தவரதக் கூத்தர் நல்லமனுக்குப் பலவிதமான நீதி சாஸ்திரங்களையும், ஞான நூல்களையும் போதித்தார். அவன் இளம் வயதிலேயே ஞானபண்டிதன் ஆனான் தமிழைக் கரைகண்டதன்றி சமஸ்கிருதத்திலும் வல்லவனானான். வேத நூல்களைப் படித்து உணர்ந்து அதன்படி ஒழுகினான். மனு தர்ம சாஸ்திரத்தைப் பிழையறக் கற்றுணர்ந்தான்.

உபநிடங்களை நன்கு கற்றுத் தேர்ந்தான். அவற்றின் தீர்ந்த கருத்துக்களான ஆன்மநலன், புறவாழ்வில் பற்றற்ற நிலை, நிலைத்த நல உணர்வு, அகந்தை அகற்றுதல், எளிய வாழ்க்கை, ஆசாரியரின் அருள், பேரின்ப வாழ்வு, மனச் சாந்தி, நல்லொழுக்கம் இறைப் பற்று ஆகிய பத்து நலன்களையும் இளவயதிலேயே பெற்று விட்டான். இந்து மதத்தின் ஆதாரங்களான பதினெண் புராணங்கள், பாகவதம், இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை,

தேவாரத் திருவாசகங்கள், நாலாயிர திவ்விய பிரபந்தங்கள், ஆகமங்கள், தர்ம சாத்திரங்கள் முதலியன கசடறக் கற்று அறிந்தான்.

ஆதிசங்கரரைப் போல இளம் ஞானியாக விளங்கினான் அவன். கூத்தரும் நல்லமனும் ஒருநாள் தில்லைக்குச் சென்றார்கள். நடராசப் பெருமான் சன்னதியில் ஒரு அந்தணப் பண்டிதர் கூத்தரை சொற்போருக்கு அழைத்தார். கூத்தர் தமக்குப் பதிலாக வாதிட நல்லமனை அனுப்பினார். ஆனால் அந்தச் சிறுவனுடன் வாதிடுவது தம்முடைய கல்விக்கு இழுக்கு என அந்தணர் மறுத்துவிட்டார்,

நல்லமன் அந்தணருடைய அகந்தைக்குத் தக்கதோர் அடி கொடுக்கக் கருதினான். அவரைப் பார்த்துக் கேட்டான்:

'பெரியீர், எம்பெருமான் வடிவம் அற்றவர். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்ச பூதங்களுக்கும் அப்பாற்பட்டவர். உறக்கமும், ஆயாசமும் அற்றவர். சீதம், வெப்பத்திற்கு அப்பாற்பட்டவர். இருப்பிடம் அற்றவர். இவ்வாறு பகவான் ஆதிசங்கரர் அருளி இருக்கிறார். ஆனால் அதே சொல்லில் இத்தகைய தன்மைகளைக் கொண்ட மூர்த்திகளை வணங்குகிறேன் என்கிறார். அந்த மும்மூர்த்திகளின் வடிவம் என்ன?' இந்த வினா அந்தணரைத் திடுக்கிட வைத்தது. மறுமொழி சொல்ல இயலாது திணறினார். தலை சாய்ந்தார். அன்றிலிருந்து தில்லைவாழ் அந்தணரிடம் நல்லமனுடைய சிறப்பு ஓங்கி வளர்ந்தது.

ஒருநாள் அதிகாலை நான்காவது யாமத்தில் கூத்தர் தீர்த்த யாத்திரையை முடித்துக் கொண்டு நல்லமனுடன் தம்முடைய தாயகத்தின் தலைநகரான பழையாறைக்கு வந்தார். திரும்பிய உடன் அவர் செவிக்குப் போர்ச் செய்தி எட்டியது. பாண்டி நாட்டோடு போரிட சோழர் படை புறப்படப் போகிறது என அறிந்தார். நல்லமனை இல்லத்தில் விட்டுவிட்டார். தாம் மட்டும் படைகள் அணிவகுத்து நின்ற இடத்துக்கு விரைந்து வந்து சேர்ந்தார்.

மன்னர் இராசாதிராசர் ஒரு அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது வந்து அங்கு இறங்கினார். அவரைத் தொடர்ந்து ஒரு புரவியின் மீது பாண்டி நாட்டின் முன்னாள் மன்னன் வீரபாண்டியன் வந்து இறங்கினான்.

மன்னரைப் பார்த்தவுடன் அங்கு கூடியிருந்த படை வீரர்கள் மற்றும் மக்கள் முதலியோர்களின் உற்சாகம் கரை கடந்து விட்டது.

'திரிபுவன சக்கரவர்த்தி இராசாதிராசர் வாழ்க! ஜெய விஜயீபவ!' என்ற வாழ்த்தொலிகள் விண்ணைப் பிளந்தன. தொடர்ந்து ஒலித்த மணி ஓசை மங்கள நாதமாகக் கேட்டது. பெரிய இரணபேரிகை ஒன்று இடி என முழங்கியது. குதிரைகள் கனைக்கும் ஒலி, யானைகளின் பிளிறல்கள், போர்வீரர்களின் வாழ்த்தொலிகள், கூடியிருந்த மக்கள் எழுப்பிய ஒலி, வேல்களும் வாள்களும் உராயும்போது உண்டான ஓசை அத்தனையும் அங்கு கூடியிருந்தோரைச் செவிடாக்கின. அங்கு நிலவிய காட்சி, மாமன்னரின் தோற்றம், பல்வேறு ஓசைகள் அத்தனையும் ஆனந்தவரதத்கூத்தருடைய உள்ளத்தில் பதிந்தன. அவர் தன்னை மறந்தார். மன்னரின் முன்னின்று வாழ்த்துப் பாடினார்:

"மழை தப்பாது பொழிக,
கானம் தழைக்க,
மாவும், புல்லும், வண்டினமும், பிறவும் இனம் பெருகப்
புல்லும், இரையும், தேனும் இனிதுண்டு இன்புறுக,
இவ்வாறு நற்பல ஊழிகள் செல்ல
கோல் செம்மையாலும், நாட்டவர் நாடோறும் தொழுதேத்தலாலும்
உயர்ந்தோர் பரவுவதாலும், அரசு முறை பிழையாது செருவிற்
சிறந்து கற்புடைக் காதலியுடன் நோயின்றிப் பல்லாண்டு
வேந்தன் வாழ்க!"

பெருங்குன்றூர் கிழார் இளஞ்சேரல் இரும்பொலையை வாழ்த்திய அதே வாசகத்தைச் சொல்லி ஆனந்தவரதக் கூத்தர், இராசாதிராசனை வாழ்த்தினார்.

மன்னர் பக்தியுடன் தலைவணங்கியவாறு பாடலைக் கேட்டுக் கொண்டு இருந்தார். ஆனால், கூத்தர் கற்புடையக் காதலி என்று குறிப்பிட்டபொழுது மன்னர் முகத்தில் ஒரு ஏளனச் சிரிப்புத் தவழ்ந்தது. புன்முறுவலுடன் வேதவனத்தை நோக்கினார். வேதவனம் இதனைக் கவனித்தார். ஆயினும் கவனிக்காதவரைப் போல வேறு எங்கோ பார்த்துக் கொண்டு இருந்தார்.

கொடிக் கம்பத்தை ஒட்டி பிரம்மாண்டமான மேடை அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அம்மைதானத்தின் எந்த மூலையில் இருந்து பார்த்தாலும் அதன்மீது இருப்பவர் நன்கு தெரியும் முறையில் அந்த மேடை அமைக்கப்பட்டு இருந்தது.

அரசர் மேடையின் மீது ஏறி நின்றார். அவரைப் பின்பற்றி சேனாபதி வேதவனமும், சீவல்லபனும் ஏறினார்கள். மன்னரின் இருபுறங்களிலும் பல்லவராயரும், சீவல்லபனும் வசிட்டரையும், வாமதேவரையும் போல நின்றிருந்தார்கள். மன்னர் கரம் நீட்டி அழைக்கவே கீழே நின்றிருந்த வீரபாண்டியனும் மேடைமேல் வந்தான். மன்னர் அனைவரையும் அமைதியாக இருக்குமாறு கைகளை அசைத்துக் காட்டினார். அமைதி நிலவியது. அவர் கூப்பிய கரங்களுடன் நாலா புறமும் திரும்பி அனைவருக்கும் வணக்கம் செய்துவிட்டுப் பேசினார்:

'சோழநாட்டுப் பெருங்குடி மக்களே, போர் என்றால் கொடுமையும், கொலையும், இன்னலும் மிகுந்தது. எனவே நாம் போரை விரும்பியதே இல்லை. ஆனால் போரின் விளைவுகளை விடக் கொடுமையானது, ஒரு நாட்டின் அடிமைத்தனம். இன்று குலசேகர பாண்டியன் போகும் போக்கினைப் பார்த்தால் ஓரிரு தினங்களில் பாண்டிநாடு ஈழநாட்டிற்கு அடிமை ஆகிவிடும் என்ற நிலைமை தென் படுகிறது.

'நம்மைப் பொறுத்து பாண்டிநாடு என்பது பரந்த தமிழகத்தில் ஒரு பகுதிதான். எனவே பாண்டிநாடு அடிமையானால் அது நம்முடைய தாய்த் தமிழகம் அடிமை ஆனது போலத்தான். எனவே சுதந்திர மக்களாகிய தமிழர்கள் அடிமைத்தனத்தை ஏற்க இயலாது.

'மேலும், பாண்டி நாட்டை விழுங்கும் ஈழவேந்தன் அத்துடன் நிற்கமாட்டான். அடுத்த நொடியில் அவனுடைய கரங்கள் சோழநாட்டின் மீது நீளும், அந்தப் பேராபத்தைத் தடுக்க வேண்டும். அதற்காகவேணும் நாம் போரிட்டே ஆக வேண்டும். போரின் முதல் அடி நமதாக இருக்க வேண்டும். எனவே இந்நிலையில் பாண்டி நாட்டுடன் போரிடுவது நம்முடைய முழுமுதற் கடமையாகிவிட்டது.

'நமக்கு யாரையும் அடிமைப்படுத்தும் எண்ணம் இல்லை. பிறநாட்டை ஆக்கிரமித்து ஆளவேண்டும் என்ற ஆசையும் இல்லை. எனவே பாண்டி நாட்டை வென்று பின்னர் அதனை ஆளும் பொறுப்பை அந்நாட்டவரிடமே ஒப்படைப்போம். அந்நாட்டின் அரசு வாரிசு, ஏன், முன்னாள் மன்னர் இதோ வீரபாண்டியர் இருக்கிறார். அவர் சென்ற காலத் தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்து நம்முடைய ஆதரவை நாடி நிற்கிறார், ஆதரவு என்று வந்தவரை அணைத்துக் கொள்வது சோழநாட்டு

மரபு. அதற்கு ஏற்ப பாண்டி நாட்டை வீரபாண்டியரிடம் நாம் ஒப்படைத்து விட்டுத் திரும்புவோம்.

'போர் என்றாலேயே பல இன்னல்கள் தவிர்க்க இயலாதவை. பலரை நாம் இழக்க வேண்டிவரும், உடமைகள் துறக்கவேண்டி வரும். நம்மில் சிலர் உயிர்விட வேண்டி வரலாம். அத்தனையும் தாங்கி நாம் உறுதியுடன் போரிட்டு வெற்றிக் கொடி நாட்ட வேண்டும்.

'குறிப்பாக இந்த நேரத்திலே சோழநாட்டுக் குடி மக்களை நான் பணிவோடு வேண்டுவது இதுதான். உள் நாட்டில் நீங்கள் காட்டும் உறுதியும், உற்சாகமுமே, தொலைவில் அந்நிய மண்ணில் போரிடும் படைவீரர்களுக்கு ஊக்கமும், மனநிறைவும் கொடுக்கும். எனவே, நீங்கள் என்றையும்விட மிகுதியாக நாட்டில் கட்டுப்பாடாக இருப்பதன்றி, உங்களுடைய தேவைகளைச் சுருக்கிக் கொண்டு போர்வீரர்களுக்குப் போதிய உணவுப் பொருட்கள் முதலியன அனுப்பி உதவுமாறு வேண்டுகிறேன். என்னுடைய வேண்டுகோளை ஏற்கும் முகத்தான் படைவீரர்களுக்கு உற்சாகத்துடன் விடை கொடுத்து அனுப்புமாறு வேண்டுகிறேன்.'

'வெற்றிவேல்! வீரவேல்!
ஜெயவிஜயீபவ!
சோழ மண்டலாதிபதி இராசாதிராச சோழர் வாழ்க!
ஈழத்து வேந்தர் சீவல்லபர் வாழ்க!
பாண்டி நாட்டு மன்னர் வீரபாண்டியர் வாழ்க!
சேனாபதி வேதவனம் பல்லவராயர் வெல்க!

இத்தகைய வாழ்த்தொலிகள் விண்ணைப் பிளந்து கொண்டு பேரிடிபோல் ஒலித்தன. ஒரு மாபெரும் வெடி வெடிக்கவே படைகள் நகர்ந்தன. பட்டத்து யானை அடி எடுத்து வைத்து ஒரு குன்று நகர்வது போல நடை போட்டது அரசர் யானையின் மீது கம்பீரமாக வீற்றிருந்தார் அவரைத் தொடர்ந்து ஒரு வெண்புரவியின் மீது சேனாபதி அம்மையப்பனான அண்ணன் பல்லவராயன் வேதவனமுடையார் சென்றார் அடுத்து சீவல்லபனும், மகீதரனும் தனித்தனிப் புரவிகளின்மீது சென்றார்கள் அவர்களுக்குப் பின்னால் வீர பாண்டியன் சென்றான். முழுப்படைகளும் அவ்விடத்தை விட்டு நகருவதற்குள் அன்று பகல் மூன்றாம் யாமம் முடிந்து விட்டது.

மக்களின் உற்சாகம் கரை கடந்திருந்தது. அவர்கள் தெருக்களை விதவிதமாக அலங்கரித்து இருந்தார்கள். ஆங்காங்கு

தெரு ஓரங்களில் பந்தல்கள் போட்டு அவற்றை பச்சை தென்னை மட்டைகளால் வேய்ந்திருந்தார்கள். பந்தல்களின் கால்களில் குலை ஈன்ற வாழை மரங்கள் கட்டப்பட்டு இருந்தன. கமுகு, பாக்கு, குலைகளும் பந்தல்களில் அடர்த்தியாகக் கட்டப்பட்டு இருந்தன. அப்பந்தல்களுக்கு அடியில் குடம், குடமாக நீர் மோரையும், வெல்லபானத்தையும் வைத்துக்கொண்டு வினியோகித்துக் கொண்டு இருந்தார்கள்.

வீடுகள் தோறும் தென்னங்குருத்துகளாலும், மா இலைகளாலும் கட்டப்பட்ட தோரணங்கள் தொங்கிக் கொண்டு இருந்தன. வீடுகளின் வெளித்திண்ணைப் புறங்களில் சிவப்புக் காவியும், சுண்ணாம்பும் மாறிமாறிப் பட்டைகளாக அடித்திருந்தார்கள்.

தெரு வாசல்கள் நன்கு சுத்தம் செய்யப்பட்டு இருந்தன. தெருவில் தண்ணீர் தெளிக்கப்பட்டு இருந்தது. எனவே தெருக்களெல்லாம் ஈரமாகவும், குளிர்ச்சியாகவும் இருந்தன. அணங்குகள் போட்டியிட்டுக்கொண்டு தங்களுடைய வீடுகளுக்கு எதிராகத் தெருக்களில் வண்ணக் கோலங்கள் இட்டு இருந்தார்கள். அவர்கள் வீட்டு வாயில்களில் அழகான பெரிய குத்துவிளக்குகள் ஏற்றி வைத்து இருந்தார்கள். அந்த விளக்குகள் மல்லிகைச் சரங்களால் சுற்றப்பட்டு இருந்தன.

மேலும் ஏராளமான பெண்கள் தங்களை மிகவும் நன்றாக அலங்கரித்துக் கொண்டு வாசல் திண்ணைகளை அடைத்துக் கொண்டு நின்றார்கள். வீடுகளில் மேல்மாட சாளரங்களை ஒட்டியும் நின்று கொண்டு இருந்தார்கள். படைகள் எப்பொழுது வரும் என வைத்த விழி வாங்காது பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

படைகள் வந்தன. அழகுமிகு அரம்பையர் சாளரங்களில் இருந்து கூடை, கூடையாகப் படைகளின் மீது மலர்களைக் கொட்டினார்கள் மன்னர்மீது தொடர்ந்து மலர்மாரி பொழிந்ததால் அவர் மூச்சுவிட இயலாது திக்கு முக்காடினார்,

ஒருவாறு படைகள் பழையாறையைக் கடந்தன.

30

திருவரங்கத்து அமுதனார்

சோழ சக்ரவர்த்தி இராதிராசர் மன நிம்மதியைப் பறிகொடுத்து வெகுகாலம் ஆகிவிட்டது. அவருடைய எழில் வதனத்தை எப்பொழுதும் இருள் கப்பியே இருந்தது. அதில் தவழ்ந்து விளையாடிய மோகன முறுவல் இடம் தெரியாது மறைந்துவிட்டது. மன்னர் செய்ய வேண்டிய சடங்கு என்ற முறையில் சில சமயங்களில் அவர் புன்னகை புரிந்தார். ஆனால் அது வெறும் நடிப்பாகவே இருந்தது. அகத்தின் விகாரம் முகத்தில் நன்றாகவே தெரிந்தது. எப்பொழுதும் சிந்தனை, எப்பொழுதும் கவலை; எப்பொழுதும் கனவு உலகிலேயே வாழ்ந்த வண்ணம் இருந்தார்.

அவர் உலக நியதிக்குக் கட்டுப்பட்டவராய் அரசுக் கடமைகளைச் செவ்வனே செய்து வந்தார் என்று தான் சொல்ல வேண்டும். அவருக்கு நல்ல தோழர்களாக நம்பிக்கைமிகு அமைச்சர்களாக வேதவனமும், சீவல்லபனும் செயல்பட்டு வந்தார்கள்.

ஆனால், மன்னருடைய நாட்டமெல்லாம் எங்கோ இருந்தது. அவருடைய பார்வையில் இனம் தெரியாத மருட்சி தென்பட்டது. அடிக்கடி வானத்தைப் பார்ப்பார். அதனைப் பார்த்தபடியே நெடுநேரம் அமர்ந்திருப்பார். அப்பொழுது அவருடைய கண்கள் கலங்கும். கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டும்.

என்று பேரரசர் இராசராச சோழர் பெற்றெடுத்த பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி கிடைத்ததோ, அன்றே இராசாதி ராசர் ஒரு நடைப் பிணமானார். 'சோழ அரசுக்கும், எனக்கும் என்ன தொடர்பு சோழ இளவல்கள் தக்க வயது அடைந்து அரசுப் பொறுப்பு ஏற்கும்வரை ஒரு இடைக்காலப் பாதுகாவலனாகப் பணிபுரியும்படி இராசராசர் என்னை நியமித்தார். நான் யாருக்காகப் பாதுகாவலனாகச் செயல்பட்டேனோ, அந்தப் பிள்ளைகள் இப்பொழுது உயிரோடு

இல்லை. அவர்கள் பின்னர் அவர்களுடைய பாதுகாவலன் என்று சொல்லிக் கொண்டு நான் அரசு பதவி வகிப்பது என்ன நியாயம்? இது எந்த தர்மத்தின் பாற்பட்டது?' அவர் ஒரு நாளைக்கு ஓராயிரம் முறை சிந்தித்தார். வேதவனம் கூறிய சமாதானங்களை அவருடைய உள்ளம் ஏற்கவில்லை.

அடுத்ததாக, கோதையைப் பற்றிய நினைப்பு. அமைதியாக இருந்த தமிழகத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள போருக்கு அப்பெண்ணே காரணம் என்று அவர் கருதினார். அவளுடைய நினைப்பு வந்தாலேயே அவருக்குத் திகீர் என்றது. அவருடைய உடல் நடுங்கியது. இனி அவளைச் சிறைப்படுத்த முடியும், தண்டிக்க இயலும் என்று அவருடைய உள்ளம் நம்பவில்லை. அந்தப் பேயைப் பிடித்துக் கட்ட இயலாது என்று அவர் கருதினார் ஒரு மன்னருடைய கட்டுக்காவலுக்கும், படைகளுக்கும் பேய் பணியுமா? அதனைப் பிடித்து வைக்கத்தான் முடியுமா? அந்தப் பேய் நர மாமிசத்தின் ருசிகண்டது. ஏற்கனவே இரு பிள்ளைகளை உண்டுவிட்டது. மனித இரத்தத்தின் சுவை அறிந்த அந்தப்பேயின் வெறி தம்மையும் உண்ட பின்னரே அடங்கும் என்று அவர் நம்பினார். அந்தப் பேயின் அடுத்த பலி தாம்தான் எனக் கருதினார். மேலும் தனக்கும் சாந்தி அளிக்க வல்லது மரணம் மட்டுமே என்ற முடிவுக்கு அவர் வந்துவிட்டார். ஆனால் மரண தேவதை அவ்வளவு எளிதில் விரும்பும்போது யாரையும் ஓடிவந்து அணைத்துக் கொள்வதில்லையே!

இத்தனைக்குமிடையே பாண்டி நாட்டுடன் போரிடுவதில் அரசர் அளவு கடந்த ஆர்வம் காட்டினார். அவரே முன் நின்று படைகளை தென்வெள்ளாறு வரை நடத்திச் சென்றார். இச்செயல் படைவீரர்களுடைய மனோதிடத்தைப் பன்மடங்கு பெருக்கியது. தம்முடைய மனநிலை எப்படி இருப்பினும் நாட்டவரின் மனோதிடத்தைப் பெருக்குவது மன்னருடைய கடமை அல்லவா! அப்பணியை அன்றுவரை அவர் செவ்வனே செய்து முடித்தார்.

குலசேகர பாண்டியனோடு போரிட்டு வாகைசூடி வரத்தான் படைகளுடன் சோழ மன்னர் தாமே புறப்பட்டார். இச்செயல் உடன் சென்ற அனைவருக்கும் ஊக்கமும், உத்வேகமும் அளித்ததில் வியப்பில்லை. மன்னருடைய முன்னிலையில் தன்னுடைய ஆற்றலைக் காட்டுவதற்கான அரியதோர் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது, அதனை நன்கு பயன்படுத்திக் கொண்டு செயல்பட வேண்டும். மன்னருடைய

பாராட்டும், பதவி உயர்வும் பெற வேண்டும் என்று ஒவ்வொரு படைத் தலைவனும் துடித்துக் கொண்டு இருந்தான்.

பழையாறையிலிருந்து மன்னருடைய தலைமையில் புறப்பட்ட சோழப் படைகள் எங்குமே முகாம் இடவில்லை. தொடர்ந்து பயணம் செய்து சோழ நாட்டின் எல்லையான தென்வெள்ளாற்றங்கரையை சென்று அடைந்தது. அங்குதான் படைகள் கூடாரம் அடித்து முகாம் இட்டன.

மறுநாள் அதிகாலையில் ஆற்றைக் கடந்து பாண்டிய நாட்டிற்குள் புகவேண்டும். அக்கரையில் பாண்டிநாட்டு எல்லைப் படைகள் இருக்கும். அவை சும்மா இராது. சோழப் படைகளுடன் மோதும். அந்த நொடியிலேயே போர் துவங்கிவிடும். அதிகாலையில்-இரவின் கடைசி யாமத்தில்-கன்னிப் போர் துவங்கிவிடும்.

வெள்ளாற்றங்கரையில் வரிசை, வரிசையாகக் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. அரசர், சேனாபதி, தளபதிகள், படைத் தலைவர்கள் ஆகியோர் தகுதிக்கேற்ப கூடாரங்கள் அமைக்கப் பட்டன. அரசருக்கும், சேனாபதிக்கும், சீவல்லபனுக்கும், வீரபாண்டியனுக்கும் தனித்தனியாக வெவ்வேறு திக்குகளில் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. இந்த நான்கு கூடாரங்களும் படைகளுக்கு அரணாக அமைந்திருந்தன. படைவீரர்கள் ஆங்காங்கு கூட்டம் கூட்டமாகத் தரையில் படுத்திருந்தார்கள். ஆங்காங்கு பந்தங்கள் நடப்பட்டு இருந்தன. அவற்றின் சுடர் காற்றால் மோதப்பட்டுத் துடித்தன.

அதிகாலையில் போரில் குதிக்க வேண்டும் என்ற உணர்வால் பெரும்பாலானவர்களுக்கு உறக்கமே வரவில்லை. எதையும் பொருட்படுத்தாத சிலர் தரையின் மீது விழுந்து மரக்கட்டைகளைப் போல உறங்கிக் கொண்டு இருந்தார்கள்.

பல படைவீரர்கள் ஆங்காங்கு தனித்தனியாகத் தீ மூட்டி மரத்துண்டுகளைப் போட்டு குளிர்காய்ந்து கொண்டு இருந்தார்கள். சிலர் குளிர் காய்ந்துக் கொண்டே உற்சாகம் மேலிட்டு போர்ப் பரணி பாடினார்கள். அவர்களைக் சூழ்ந்து அமர்ந்திருந்தவர்கள் ஏககாலத்தில் கைகளால் தாளம் போட்டார்கள் அவர்கள் பலத்த ஒலிகளை எழுப்பி பாடியவருக்கு உற்சாகமூட்டினார்கள். சில படைவீரர்களுக்கு தங்களுடைய காதலிகளின் நினைவு வந்துவிட்டது. அவர்களுடைய காதலிகள் போருக்கு அனுப்பும்போது முகத்தை உம் என்று வைத்துக் கொண்டு இருந்தார்கள் மூக்கை

உறிஞ்சினார்கள். அவற்றை எல்லாம் நினைத்து தனிமையில் அமர்ந்து பெருமூச்சு விட்டுக்கொண்டும் இருந்தார்கள் சில படை வீரர்கள். மீண்டும் காதலிகளைக் காண்போமா, அவர்களைக் கட்டிப் பிடித்து கன்னத்தில் முத்திரை பதிப்போமா என அவர்கள் ஏங்கத் துவங்கி விட்டார்கள்.

போர் வீரர்களிடையே இவை எல்லாம் இயல்புதான். இத் தோற்றங்களை எல்லாம் கண்டு கொண்டே சேனாபதி வேதவனமும், சீவல்லபனும் மன்னருடைய கூடாரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னால் ஒரு போர்வீரன் கையில் தீப்பந்தம் தாங்கியபடி நடந்து கொண்டு இருந்தான். தங்களைக் கடந்து சேனாபதி சென்றதை உற்சாகத்தில் ஆழ்ந்திருந்த பலர் கவனிக்கவில்லை. சிலர் கண்டு விட்டார்கள். பயபக்தியுடன் எழுந்து நின்று வணக்கம் செய்தார்கள் சேனாபதியும் சீவல்லபனும் வாய்திறவாது தலை அசைத்தவாறு மேலே நடந்தார்கள்.

அவர்கள் அரசருடைய கூடாரத்திற்குள் புகுந்தார்கள். அக்கூடாரத்தின் ஒரு மூலையில் ஒரு பந்தம் ஒளி வீசி எரிந்து கொண்டு இருந்தது. அரசர் பந்தத்திற்கு எதிரில் அமர்ந்திருந்தார். சோகமே உருவாக ஒரு பதுமையைப் போல அவர் தோன்றினார். அக்கூடாரத்தின் பலகணி வழியாக இருண்ட வானத்தையும், அதில் தென்பட்ட விண்மீன்களையும் பார்த்துக் கொண்டு இருந்தார். காலடி ஓசை கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். வந்த நண்பர்களைப் பார்க்கவே அவருடைய முகத்தில் ஒரு பீதி படர்ந்தது. ஏன்? அது அவருக்கே தெரியாது. வந்தவர்கள் அரசருக்கு வணக்கம் செய்தார்கள். அருகில் போய் நின்றார்கள். அரசர் ஒருவாறு தம்மை சமாளித்துக் கொண்டார்.

'வாருங்கள், இப்படி அமருங்கள்.' அவர்களைப் பார்த்துக் கூறினார் அவ்விருவரும் அருகில் இருந்த ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

'அரசே, தங்களுடைய உடல் நலத்திற்கு ஒன்றுமில்லையே? ஏன் எப்படியோ இருக்கிறீர்கள்?' வேதவனம் பேச்சைத் துவக்கினார், அரசருடைய துன்பத்தை அவர் அறியாது இல்லை. ஆயினும், ஒரு சம்பிரதாயத்திற்காகக் கேட்டு வைத்தார்.

'அமைச்சர் தலைவரே, 'எனக்கு ஒரு கேடும் இல்லை. அவ்வளவு எளிதில் போய்விடக்கூடிய புண்ணிய ஆத்மாவா நான்?'

'எங்கள் இருவரையும் தாங்கள் அழைத்ததாக ஒரு போர் வீரன் வந்து கூறினான்.' இது சீவல்லபன்.

'ஆம், உங்கள் இருவருடனும் ஒரு செய்தியைக் கூறவே அழைத்தேன். ஏற்கனவே திட்டமிட்டபடி இரவு கடைசியாமத்தில் நம்முடைய படைகள் பாண்டி நாட்டு மண்ணில் அடி எடுத்து வைக்க வேண்டும். ஆனால், ஒரு மாற்றம்.'

'அரசே!'

'சேனாபதி, என்னுடைய மனநிலை நன்கு இல்லை. காரணம் கேட்டுக் கொண்டு காலத்தைக் கடத்த வேண்டாம். நான் இப்பொழுதே அவசரமாக வெளியில் செல்ல வேண்டும். திட்டப்படி போர் நடக்கட்டும். தேவையானால், நான் இடையில் வந்து கலந்து கொள்கிறேன்.'

'அரசே, தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? எனக்கு விளங்கவில்லையே!' திடுக்கிட்டு தீனமான குரலில் கேட்டார் சேனாபதி.

'சேனாபதி. நான் சொல்லுவது தங்களுக்கு விளங்காதுதான். அதில் வியப்பில்லை. ஏனென்றால், நான் சொல்லுவது எனக்குக் கூடத்தான் விளங்கவில்லை.'

'அரசே, இந்நிலையில் தாங்கள் வெளியேறுவதா?' இது சீவல்லபன்.

'ஆம், சீவல்லபரே, நான் வெளியேறித்தான் ஆகவேண்டும். நம்முடைய படைகள் பழையாறையை விட்டுப் புறப்படுவதற்கு முன்பே தில்லைக்குச் சென்று வரவேண்டுமென்று என்னுடைய மனதில்பட்டது. அம்பலவாணன் ஆசியைப் பெற்று படை எடுப்பைத் துவக்க எண்ணினேன். அவசரக் கோலத்தில் அது இயலாது போயிற்று. எம்பெருமானுடைய அருளைப் பெறாது படை எடுப்பைத் துவக்கியதின் மூலம் ஏதோ பெரும் பிழை செய்துவிட்டதாக என்னுடைய உள்மனம் கூறுகிறது. விரைந்து போய் ஐயனைத் தரிசிக்க உள்ளம் துடிக்கிறது. மேலும், என்னுடைய மனப் போராட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்குமாறும், அது இயலாது என்றால், என்னை அழைத்துக் கொள்ளுமாறும் தில்லை அம்பல நடராசனிடம் முறையிட மனம் துடிக்கிறது. எனக்குத் தடை சொல்ல வேண்டாம். உங்களுடைய ஆற்றலையும், போர்த் திறனையும் நான் அறிவேன். எனவே, நான் இல்லாவிட்டால் எந்த நட்டமும் இல்லை. நீங்கள் வெகு எளிதில்

எதிரியை முறியடித்து விடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் போக விடை கொடுங்கள்.'

'அரசே, அருள்கூர்ந்து தங்களை எதிர்த்துப் பேசுவதாக நினைக்க வேண்டாம். போரிடுவதற்காக நாட்டின் எல்லை வரை வந்துவிட்டு அரசர் பிரிந்து சென்றால், விளைவு எப்படி இருக்கும் என்று சிந்திக்க வேண்டுகிறேன்.'

'எப்படி இருக்கும்?'

'தாங்கள் படைகளுடன் வருவதால், வீரர்களின் மத்தியில் தனி உற்சாகம் நிலவுகிறது. இந்நிலையில் தாங்கள் பிரிந்துவிட்டால் அவர்களுடைய மனோதிடம் குறையும். எதிரிகளும், மன்னர் போருக்குப் பயந்து ஓடிவிட்டதாகச் சொல்லுவார்கள். இது தங்களுடைய வீரத்திற்கும் களங்கம் கற்பிக்கும். போரில் வெற்றி கண்ட பின்னர், நாம் அனைவரும் சேர்ந்தே தில்லைக்குச் செல்லுவோம்.'

'சேனாபதி, போரில் வெற்றியடைய அவனை உடனே தரிசித்து அவன் அருள் பெறவேண்டுமென்று என்னுடைய உள்மனம் கூறுகிறது.'

'அப்படியானால்?' இது சீவல்லபன்.

'சீவல்லபரே, தற்பொழுது அதிகம் பேச நேரமில்லை. அதற்குத் தேவையும் இல்லை. என்னுடைய முடிவை மாற்ற இனி யாராலும் இயலாது. அனைத்தும் திட்டப்படி நடக்கட்டும். தேவையானால், நான் விரைவில் மீண்டும் வந்து போர்முனையில் சேர்ந்து கொள்கிறேன். வெற்றி நமதே! விரைவில் சந்திப்போம். நான் வரட்டுமா?'

'அரசே, தாங்கள் மட்டும் இந்நிலையில் தனியாகச் செல்வதா?' இது வேதவனத்தின் வினா.

'ஆம், தனியாகத்தான் செல்கிறேன். இந்தப் பாவம் செய்த கட்டைக்கு அவ்வளவு எளிதில் கேடு வந்துவிடாது. நான் வருகிறேன்.'

அரசர் கூடாரத்தை விட்டு வெளியே வந்தார். மற்ற இருவரும் அவரைத் தொடர்ந்து வெளியே வந்தார்கள். அரசர் வாயிலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வெண்புரவியின் மீது பாய்ந்து ஏறினார். புரவி இருளைப் பிய்த்துக் கொண்டு பறந்தது.

சேனாபதியும் சீவல்லபனும் மரங்களாக நின்றார்கள் செய்வதறியாது துடித்தார்கள் குதிரையின் குளம்பொலி அடங்கும் வரை அந்தப் பயங்கரமான இருளில் மன்னர் சென்ற திக்கையே உற்றுப் பார்த்தபடியே நின்றார்கள். அவர்கள் விட்ட பெருமூச்சு அக்காட்டு நாகப்பாம்பினுடைய அரவம் என ஒலித்தது.

☆ ☆ ☆

இரண்டாம் நாள் இரவு கடைசி யாமம். விரைவில் பகலவன் உதிக்கப் போகிறான். அவனை வரவேற்க பூமாதேவி தன்னை அலங்கரித்துக் கொண்டாள் கீழ் வானத்திற்கு வெட்கம் வந்துவிட்டது. ஆதவன் வருகிறான் என்ற எண்ணம் அவளுடைய கன்னங்களைச் சிவக்க வைத்து விட்டது.

தில்லையம்பதிக்கு பல பாதைகள் உண்டு. ஒருவனே ஆன இறைவனை வழிபட்டுப் பயன் பெற பல பாதைகள் இருப்பதைப் போல! குமராட்சி என்ற சிற்றூர் வழியாக தில்லைக்குச் செல்லும் பாதை அவற்றில் ஒன்றாகும்.

அந்நேரத்திலே சோழ மண்டலாதிபதி இராசாதிராசர் அப்பாதையில் தில்லையை நோக்கிப் புரவியில் சென்று கொண்டு இருந்தார். புரவி மெதுவாகத்தான் சென்று கொண்டு இருந்தது. அதனை வேகமாகச் செலுத்தும் உணர்வு மன்னருக்கு இல்லை. புரவி வேகமாக ஓடினால் அந்த ஆட்டத்தை சமாளிக்கும் உடல் வலிமையும் அவருக்கு அப்பொழுது இல்லை.

காட்டு மல்லிகைப் புதர்கள் பாதையில் இரு புறங்களிலும் வியாபித்து ஓங்கி வளர்ந்திருந்தன. அவைகளில் மலர்கள் கொத்துக் கொத்தாகப் பூத்துக் குலுங்கின. அவை ஆங்காங்கு பஞ்சுமலைகளைப் போல ஒளிர்விட்டுக் கொண்டு இருந்தன. மலர்களை வண்டுகள் மொய்த்துக் கொண்டு இசை பாடின. மலர்களின் மனம் மன்னருடைய நாசியைத் துளைத்தது.

மன்னர் இன்னும் மேலே சென்றார். பாதை குறுகிவிட்டது. ஒரு பெரிய வாய்க்கால் தென்பட்டது. அந்த வாய்க்காலின் கரையே வெகுதூரத்திற்கு வெகுதூரம் தில்லைக்குச் செல்லும் பாதையாக அமைந்து இருந்தது.

வாய்க்காலின் கரையில் தாழம் புதர்கள் அடர்ந்து உயர்ந்து வளர்ந்திருந்தன. மடல் விரிந்து மலர்ந்து தாழம் மலர்களின் மீது வண்டுகள் வந்து உட்கார்ந்தன. அவை உடலெல்லாம் மகரந்தப் பொடியைப் பூசிக் கொண்டன. அத்தகைய வண்டுகளின்

தோற்றத்தை மந்திரமான நீறு அணிந்த தொண்டர்களுக்கு ஒப்பிடுகிறார், எங்கும் சிவமாகவே கண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவ்வண்டுகளைக் கண்ட மன்னருக்கு சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உவமை நினைவுக்கு வந்தது. அப்பொழுது அவருடைய உதடுகளில் ஒரு புன்முறுவல் பூத்தது, இருண்ட வானில் வெட்டும் மின்னலைப் போல!

பூமாதேவி பொல்லாதவள்! பகல் முழுவதும் அவளை பகலவனான அன்புக் காதலன் அணைத்துக் கொண்டு இருந்தான். அந்த அணைப்பில் உள்ளம் பூரித்தாள். பகலவன் தன்னுடைய கதிர்களான நீண்ட கரங்களை நீட்டி அன்புக் காதலியை ஆலிங்கனம் செய்து கொண்டு இருந்தான். அதிக காலம் அல்ல, இரவு நான்கே நான்கு யாமங்கள்தான் பூமாதேவியை விட்டுப் பிரிந்தான். அந்த குறுகிய காலப் பிரிவையும் அப்பெண்ணால் தாங்க இயலவில்லை. இரவு முழுவதும் பனியாகக் கண்ணீரை தாரை, தாரையாகச் சொரிந்து கொண்டு அழுதாள். அவளுடைய அன்புக் காதலனுக்கு அவள் படும் வேதனை தெரிந்தது. அவன் உள்ளம் துடித்து விட்டது. வேகமாக கீழ்திசையில் வெளிப்பட்டு, அவளுடைய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இருந்தான்.

ஆதவனின் உதய நேரத்துக் கதிர்பட்ட சோழ மன்னன் முகத்தில் சற்று தெளிவு தென்பட்டது. தம்முடைய கவலைகளை எல்லாம் ஒரு நொடியில் மறந்தார். விரிந்த உலகை உற்றுப் பார்த்தார்.

அது ஒரு கலகலப்பான பாதை. அந்நாளிலே தில்லை மாநகர் சோழப் பேரரசில் சீரும், சிறப்பும் பெற்று விளங்கியது. அந்நகருக்குச் செல்லும் அப்பாதையில் நாள்தோறும் பல அரசு அலுவலர்களும், வர்த்தகர்களும் புரவிகளில் செல்வது இயல்பாக இருந்தது. பொதுமக்களும் பல்வேறு வேலைகளுக்காக அப்பாதையில் நடந்தவாறு இருப்பார்கள். பக்தர்கள் 'அரிஹர நமசிவயா' என்று நா ஓத, கூட்டம் கூட்டமாக அப்பாதையில் தில்லையம்பதியை நோக்கிக் கால்நடையாகச் செல்வது அன்றாட நிகழ்ச்சியாக இருந்தது. எனவே ஒரு எளிய வியாபாரியைப் போல மாறுவேடம் தரித்து புரவியின் மீது அப்பாதையின் சென்ற அந்நாட்டு மன்னரை யாரும் பொருட்படுத்த வில்லை. அவரைக் கவனித்தவர்கள் அந்த சாலையில் செல்லும் எண்ணிறந்த மனிதர்களைப் போல அவரும் ஒருவரே என்று கருதினார்கள். அரசரும் அதனைத்தான் விரும்பினார்.

அப்பொழுது நதியை ஒத்த அந்த அகண்ட கால்வாயில் புதுவெள்ளம் ஓடிக்கொண்டு இருந்தது. அதன்மீது காலைக் கதிரவனின் கிரணங்கள் படவே அது தங்கத் தகட்டைப் போல தக, தகவென ஒளிர்விட்டது. உடை கலைந்த அழகிய அணங்கின் நாபியைப் போன்று இருந்தது என கவி காளிதாசன் ஆற்றுச் சுழல்களை வர்ணிக்கிறார், அத்தகைய சுழல் நாபிகள் பல அந்தக் கால்வாயில் எழில்மிகு தோற்றத்தை அளித்தன. நீரில் ஆங்காங்கு தோன்றிய சிறு அலைகள் கண்ணாடியைப் போன்று பளபளத்தன.

வாய்க்காலின் இரு கரைகளிலும் நீர் மட்டத்தை ஒட்டி, அல்லியும் ஆம்பலும் நீலோற்பலமும் பூத்துக் குலுங்கின. மீன் கொத்திகள் வாய்க்காலில் ஓடிய மீன்களின் மீது கண் வைத்து காத்து தவமிருந்தன, போலி சாமியார்களைப் போல! அவை வாய்ப்பு வந்தபோது மீன்களைக் கொத்திக் கொண்டு பறந்தன. ஆங்காங்கு வயல்களில் பெண்கள் இனிய கானங்களை எழுப்பியவாறு நெல்நாற்றை நட்டுக் கொண்டு இருந்தார்கள்.

ஒரு நதியைப் போன்ற அந்த வாய்க்காலில் ஆங்காங்கு அணங்குகள் குளித்துக் கொண்டு இருந்தார்கள். ஈரத்தால் உடலோடு ஒட்டிய துணியால் மறைக்க இயலாது அவர்களுடைய மார்பகங்கள் தாமரை மொட்டுகளைப் போலத் தென்பட்டன. அவற்றின் நுனியிலிருந்து முலைக் காம்புகளும் தெளிவாக தெரிந்தன. மீண்டும் மன்னருக்கு காளிதாசன் நினைவிற்கு வந்தார். அந்த உலக மகாகவி வர்ணிக்கிறார். மங்கையரின் மார்பகத்தின் மீதிருந்த முலைக் காம்புகளின் தோற்றம் தாமரை மொட்டுகளின் மீது அமர்ந்திருந்த வண்டுகளைப் போல இருந்தனவாம்! ஈடற்ற இந்த உவமையை நினைத்து உள்ளம் பூரித்தார் அரசர். சில அணங்குகள் ஈரத்துணியுடன் இடுப்பில் நீர் நிறைந்த குடங்களை ஏந்தியபடியே பாதையில் நடந்துகொண்டு இருந்தார்கள்.

உழவர்கள் தங்களுடைய தோள்களின் மீது கலப்பைகளைச் சுமந்தவாறு நடந்துகொண்டு இருந்தார்கள். உழவனுடைய இடதுகரம் தோள்மீது இருந்த கலப்பையைப் பிடித்திருந்தது. அவன் தன்னுடைய வலது கரத்தால் தன் முன்னே நடைபோடும் காளையின் கயிறுகளைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு இருந்தான். காளைகளின் கழுத்தில் கட்டப்பட்டு இருந்த வெண்கல மணிகள் இன்னொலி எழுப்பின. சில சமயங்களில் காளைகள் தங்களுடைய நீண்ட கொம்புகளால் ஒன்றையொன்று முட்டிச் சண்டை பிடித்தன. முட்டியதால் பின்னிக் கொண்ட

கொம்புகளைப் பிரித்து எடுக்க இயலாது அவை மீண்டும் போரிட்டன. உழவர்கள் பலமாக அதட்டி அவற்றை விலக்கி விட்டுக்கொண்டே மேலே நடந்துகொண்டு இருந்தார்கள்.

இவை எல்லாம் சோனாட்டில் கிராமப்புறங்களிலும் நதிப்புறங்களிலும் அன்றாடம் நிகழும் நிகழ்ச்சிகள்தான். இவற்றைக் கண்டவாறு மன்னர் இராசாதிராசர் மேலே சென்று கொண்டு இருந்தார்.

ஆனால் அன்று புதிதாக ஒரு கூட்டமும் அப்பாதையில் அரசர் செல்லும் திக்கில் சென்று கொண்டு இருந்தது. அக்கூட்டம்தான் அவருடைய கவனத்தை ஈர்த்தது. அவர்களைப் பற்றிச் சிந்திக்கச் செய்தது.

வாய்க்காலின் பல இடங்களில் ஏராளமானவர்கள் கூட்டங் கூட்டமாகக் குளித்துக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் வழக்கமாக அங்கு குளிப்பவர்களாகத் தென்பட வில்லை. அந்தப் பகுதிக்குப் புதிதாக வந்த யாத்திரீகர்களைப் போல தென்பட்டார்கள். அவர்களுடைய நாக்குகள் நாராயணா என்ற நாமத்தை முனகிக் கொண்டு இருந்தன. சிலர் நீரை நோக்கியும், சிலர் சூரியனை நோக்கியும் கரங்களைக் கூப்பியபடியே திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களைப் பாடிக்கொண்டு இருந்தார்கள்.

பலர் குளித்துவிட்டு கூட்டங் கூட்டமாக மன்னர் சென்ற திக்கில் நடந்து கொண்டு இருந்தார்கள். ஈரத் துணியை இடுப்பில் பஞ்சகச்சமாக அவர்கள் தரித்திருந்தார்கள். துணியால் மறைக்கப்படாத அவர்களுடைய மார்புகளில் பூணூல்கள் பளபளத்தன. நெற்றியிலும், கரங்களின் மேல் பகுதிகளிலும் நாமங்கள் சாற்றிக்கொண்டு இருந்தார்கள். கைத்தளங்களில் நீர் நிரம்பிய வெண்கலச் செம்புகள் இருந்தன. நா நாராயணமூர்த்தியின் சிறப்புகளை ஓதிக்கொண்டு இருந்தது. சிலர் தமிழ் பாசுரங்களைப் பாடினார்கள். சிலர் வடமொழி சுலோகங்களை ஓதியவாறு நடந்தார்கள்.

இத்தகைய கோலம் தாங்கிய வைணவப் பெரியார்கள் இப்படிக் கூட்டம் கூட்டமாக எங்கு செல்கிறார்கள்? என்ன செய்தி? இந்த வினாக்கள் மன்னருடைய உள்ளத்தில் எழுந்தன. அங்கு செல்லுபவர்களை விசாரித்து அறிய வேண்டும் என்ற அவாவும் அவருக்கு ஏற்பட்டது.

குமராட்சி கிராமம் நெருங்கிவிட்டது. கூட்டம், கூட்டமாக வைணவர்கள் சென்று கொண்டு இருந்தார்கள். ஒரு கூட்டத்தை

நெருங்கியவுடன் அதன் பின்புறம் மன்னர் தம்முடைய புரவியை நிறுத்தினார். கீழே இறங்கினார். புரவி உடன் நடந்து வர தாமும் கூட்டத்தோடு கூட்டமாக ஒரு ஓரத்தில் நடந்தார். அருகில் நடந்து கொண்டு இருந்த ஒரு வைணவப் பெரியாரைப் பார்த்துக் கேட்டார்:

'ஐயா, பல வைணவப் பெரியார்கள் கூட்டம், கூட்டமாகச் சென்று கொண்டு இருக்கிறீர்கள். எங்கு சென்று கொண்டு இருக்கிறீர்கள் என்பதை அடியேன் அறியலாமா?'

'யாரப்பா நீ? இந்த ஊர் உனக்குப் புதிதா?'

'ஆம் ஐயா, நான் பழையாறை.'

'எங்கு செல்லுகிறாய்?'

'தில்லைக்கு ஐயா.'

'தில்லை, நல்ல தில்லை! தொல்லை தரும் தில்லை.' அப்பெரியவர் சலித்துக் கொண்டே பேசினார். மன்னரை ஒரு மாதிரியாகப் பார்த்தார். பின்னர் பேச்சை அவராகவே தொடர்ந்தார்:

'நீ அரசாங்கப் படையில் பணி புரிகிறாயா?'

'இல்லை ஐயா, நான் ஒரு வர்த்தகன்.'

'வர்த்தகனான உனக்கு இந்த ஊர் வம்பெல்லாம் எதற்கு? விரைவில் போய் வியாபாரத்தைக் கவனி. நாலு காசு சேரும்.'

இந்த மறுமொழியைக் கேட்டு மன்னர் திடுக்கிட்டார். அப்பெரியாருக்கு ஏன் இந்த வெறுப்பு ஏற்பட வேண்டும்? தில்லை என்று சொன்ன உடனேயே அவர் முகம் ஏன் மாற வேண்டும்? இந்த சிந்தனையுடன் அரசர் அங்கேயே நின்றார்.

மற்றொரு கூட்டம் வந்தது. அதில் ஒரு பெரியவரைப் பார்த்து மீண்டும் விசாரித்தார். அப்பெரியவர் கூறினார்:

'ஐயா, வைணவ உலகத்தின் வழிகாட்டியான திருவரங்கத்து அமுதனார் இன்று குமராட்சிக்கு எழுந்தருளி இருக்கிறார். இன்று வைணவ மகாசபை கூட இருக்கிறது. அப்பெரியாரை தரிசித்து, செய்த பாவங்களைப் போக்கிக் கொள்ளவும், மகாசபையில் கலந்து கொள்ளவும் நாங்கள் சென்று கொண்டு இருக்கிறோம். நீ ஒரு வைணவன் என்றால் வரலாம். சைவன் என்றால் உன்னுடைய வழியிலேயே போய்க் கொண்டு இருக்கலாம்.'

சைவன் என்று கூறியபோது அப் பெரியவரின் வார்த்தைகளில் சூடு தெரித்தாலும், பொறுமையாகவே பேசினார். திருவரங்கத்து அமுதனாரைப் பற்றி சோழ மன்னர் இராசாதிராசர் முன்பே கேள்விப்பட்டிருந்தார். அவர் வைணவ உலகின் பெரிய மகான் என்பதை அவர் அறிவார். அவரை தரிசிக்கும் வாய்ப்பு மன்னருக்கு ஏற்பட்டதே இல்லை. ஏற்பட்டிருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்பெரியவரை தரிசித்து விட்டுச் சென்றால் என்ன?

இராசாதிராசர் ஒரு சைவர்தான். ஆனால் பரந்த உள்ளம் கொண்ட அவர் என்றுமே பிற வழிபாடுகளை வெறுத்ததில்லை. இறைவன் உருவங்கள் பல, நாமங்கள் பல. ஆனால் முழுமுதற் கடவுள் ஒருவனே என்ற கோட்பாட்டைக் கொண்டவர் அவர். அவர் சைவரானாலும் வைணவப் பெரியவர்களை மதித்துப் போற்றி இருக்கிறார். பல வைணவ தலங்களுக்கு மான்யங்கள் அளித்திருக்கிறார். அத்தகைய சத்தியசீலருக்கு திருவரங்கத்து அமுதனாரை தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டதில் வியப்பு இல்லை.

ஆனால் மன்னர் என்றால் மக்களைப் போல சுதந்திரமாக இருக்க முடிகிறதா? நினைத்த உடனேயே செயல்பட இயலுமா? அமுதனாரை தரிசித்தாலும் அவரிடம் பொய் பேச முடியாது! தாம் யார் என்ற சொல்ல வேண்டிவரும். தாம் தான் இந்நாட்டு மன்னர் என்ற வெளிப்பட்டால் வீண் விளம்பரமும், தேவையற்ற பரபரப்பும் ஏற்படும். இதெல்லாம் கூடாது என்பதற்காகவே அவர் மாறுவேடத்தில் தனியாகச் செல்லுகிறார். அந்நிலையில் அவராகவே வலியப் போய் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளுவது பொருளற்ற செயல் என்று அவருக்குப் பட்டது. மனதில் எழுந்த ஆவலை அடக்கிக் கொண்டு புரவி மீது அமர்ந்து மேலே சென்றார்.

31

மீண்டும் பேய் முலையாள்!

குமராட்சி கிராமம் வந்துவிட்டது. கிராமம் முழுதும் கோலாகலமாகக் காட்சி அளித்தது. தேர்த் திருவிழா போலக் கலகலப்பாக இருந்தது. அந்த ஊர் வரலாறே காணாத வகையில் அங்கு ஏராளமான வைணவர்கள் கூடி இருந்தார்கள்.

அக்கிராமத்தில் தில்லை செல்லும் பாதையை யொட்டி சற்று தள்ளி ஒரு வைணவத் தலம் இருக்கிறது. அதில் நாராயணமூர்த்தி பள்ளிக்கொண்டு இருக்கிறார். அதன் எதிரில் ஒரு பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப்பட்டு இருந்தது. பச்சைத் தென்னங்கீற்று மட்டைகளால் வேயப்பட்ட அப்பந்தல் பல்வேறு இலைகளாலும் கொடிகளாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டு இருந்தது. ஆங்காங்கு வாழைமரங்கள் கட்டப்பட்டு இருந்தன. பந்தலின் அடியில் கோயிலை ஒட்டி ஒரு பிரம்மாண்டமான மேடை. அம்மேடை தோரணங்களாலும், மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. மேடையின் மீது பெரிய மெத்தைகள் விரிக்கப்பட்டு இருந்தன. அவைகள் தூய வெண்மையான பட்டுத் துணியால் போர்த்தப்பட்டு இருந்தன. மேடையின் எதிரில் இருபுறங்களிலும் ஒரு ஆள் உயரம் கொண்ட வெண்கலப் பாவை விளக்குகள் ஒளிர்விட்டுக் கொண்டு இருந்தன.

மேடையின் எதிரில் சாணத்தால் மெழுகப்பட்ட தரையின்மீது பல வைணவப் பெரியார்கள் அமர்ந்துகொண்டு இருந்தார்கள். சிலர் தாறுமாறாக அமர்ந்து கொண்டு இருந்தார்கள். சிலர் பாதி படுத்த வண்ணமும், பாதி அமர்ந்தவண்ணமும் கால்களை நீட்டியவாறு பேசிக் கொண்டும் இருந்தார்கள். பலர் ஆங்காங்கு பந்தலுக்கு அடியில் கூட்டம் கூட்டமாக நின்றவாறு விவாதித்துக் கொண்டு இருந்தார்கள். தர்க்கங்கள் பலமாக இருந்தன. பலர் சாய்ந்து படுத்தவாறு நாமங்கள் சாற்றிய தங்கள் மேனிகளை விசிறிகளால் விசிறிக் கொண்டு இருந்தார்கள்.

அவ்வழியாகச் சென்ற மன்னருடைய புரவி மெதுவாக நடைபோட்டது. இக்கூட்டத்தைப் பார்த்தவுடன் மன்னர் புரவியை இழுத்துப் பிடித்து நிறுத்தினார் தொலைவில் இருந்தாவது திருவரங்கத்து அமுதனாரை தரிசித்துவிட்டால் என்ன என்ற எண்ணம் வந்தது. மேலும், அம்மகாசபையில் என்ன பேசுகிறார்கள் என்பதை அறியவும் அவர் ஆவல் கொண்டார். மாறு வேடத்தில் சென்றால்தானே நாட்டின் நடப்புப புரிந்து கொள்ள முடியும்? அரச ஆடம்பரத்துடன் சென்றால் அவரை நெருங்கவே அஞ்சி மக்கள் ஓட்டம் பிடிப்பார்கள். மன்னர் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டார்.

அவ்வழியிலேயே கொஞ்ச தூரம் சென்றார். அங்கு கூட்டம் அதிகமாக இல்லை. புரவியை விட்டு இறங்கினார். கால்வாய் ஓரம் ஒருபெரிய மாமரம் இருந்தது. அதற்குஅடியில் புரவியை விட்டுவிட்டார். அதனுடைய செவி அருகில் அவர் ஏதோ சொல்லவே புரவி அங்கேயே நின்று கொண்டது. அவர் மட்டும் தனியாக வந்து பந்தலில் கூடியிருந்த மக்களோடு கலந்துவிட்டார்.

வாத்திய இசை எழுந்தது. முரசும் கொட்டியது. கோயில் மணிகள் தொடர்ந்து ஒலித்தன. தாரை தப்பட்டைகள் ஒலி அங்கு இருந்தோர் செவிகள் செவிடுபடும் அளவிற்கு ஒலித்தன. சங்கங்கள் முழங்கின.

உடலெங்கும் நாமம் சாற்றிய சீடர்கள் கைகட்டி, வாய் புதைத்தவாறு கோயிலுக்குள் இருந்து மேடையை நோக்கி வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் திருவரங்கத்து அமுதனார் கம்பீரமாக வந்தார். திருவரங்கத்து அமுதனாரைப் பற்றி நாம் ஏற்கனவே அறிவோம். மிலாடுடை நாட்டு மன்னர் நரசிங்க மிலாடுடையார் அமுதனாரை திருக்கோயிலூருக்கு அழைத்ததும், அவருடைய பேருரையைக் கேட்ட கோதைக்கு தில்லை கோவிந்தராசனை மீட்கும் எண்ணம் ஏற்பட்டதும் நாம் அறிவோம். அறுபது பிராயத்தைத் தாண்டிய அவர் பூஜ்யர் இராமானுசரின் சீடர். இராமானுசர் திருநாடு சென்றபோது அவருக்கு அருகில் இருக்கும் பேறு பெற்ற வைணவப் பெரியார் அவர். வைணவ உலகின் அன்றையப் பெரும் ஞானி அவரே!

அப்பெரியார் பந்தலுக்கு அடியில் வந்தவுடன் அங்கு பூர்ண அமைதி நிலவியது. அங்கு கூடியிருந்தோர் எழுந்து நின்று

அவருக்கு அஞ்சலி செய்தார்கள். அமுதனார் புன்முறுவல் பூத்தபடியே மேடையின் மீது ஏறினார். அனைவரையும் பார்த்து ஆசிர்வதித்தார். பின்னர் விரிக்ககப்பட்டிருந்த மெத்தையின் மீது அமர்ந்தார். கூடியிருந்தவர்கள் ஆங்காங்கு அமர்ந்துவிட்டார்கள். சீடர்கள் மட்டும் அமுதனாருக்குப் பின்னால் பயபக்தியுடன் நின்று கொண்டு இருந்தார்கள். இருவர் வெண்சாமரத்தால் அவருக்கு விசிறினார்கள்.

அமுதனார் ஒரு சீடனை உற்றுப் பார்த்தார். அவன் பயபக்தியுடன் மேடைக்கு முன்னால் வந்து இராகத்துடன் பாடினான்:

'பள்ளி ஆவது பாற்கடல் அரங்கம்
இரங்கவன் பேய் முலை
பிள்ளையாய் உயிர் உண்ட எந்தை
பிரானவன் பெருகும் இடம்;
வெள்ளியான் கரியான் மணிநிற
வண்ணன் என்று எண்ணி நாள்தோறும்
தெள்ளியார் வணங்கும் மலைத்திரு
வேங்கடம் அடை நெஞ்சமே!'

அந்தச் சீடன் பக்தி பரவசத்துடன் பாடிய பெரிய திருவாய் மொழியைக் கேட்ட பக்தர்கள் உள்ளம் உருகிவிட்டார்கள், பலருடைய விழிகளில் இருந்து நீர் தாரை, தாரையாகக் கொட்டியது. பாடல் முடிந்த பின்னர் சீடனை அமருமாறு அமுதனார் கரம் அசைத்தார். அவன் அவருக்குப் பின்னால் போய் நின்று கொண்டான்.

பின்னர் அமுதனார் அங்கு குழுமி இருந்த கூட்டத்தை நோக்கிச் சொற்பொழிவு ஆற்றினார். 'அற்றது பற்று எனின் உற்றது வீடு' என்ற நம்வார்வார் திருவாய் மொழியை எடுத்துக் கொண்டு விளக்கம் அருளினார்.

'பற்று என்பது அகப்பற்று, புறப்பற்று ஆகிய இரண்டையும் குறிக்கும். அகப்பற்று என்பது நான், என்னுடையது என்பதாகும். புறப்பற்று என்பது நம்மைச் சூழ்ந்து, ஆனால் நம்மில் பிரிந்துள்ள பொருள்களின் மீது ஏற்படும் ஆசையாகும். வெளியில் உள்ள பொருள்களின் மீது நமக்கு ஏற்படும் ஆசையை விட்டுவிட்டால்

அகப்பற்று தானே அழிந்து ஒழியும். ஓர் எடுத்துக்காட்டு சொல்லுகிறேன். ஒரு மரத்தை எடுத்துக் கொள்வோம். மரத்தில் ஆணிவேர் என்பது அகப்பற்று, பக்க வேர்கள் புறப்பற்றாகும் மரத்தை சாய்க்க வேண்டுமானால் முதலில் பக்க வேர்களை வெட்ட வேண்டும். ஆணிவேரை வெட்ட வேண்டியதே இல்லை. பக்க வேர்கள் அற்ற மரம் ஆணிவேருடன் தனித்து நிற்க இயலாது. அது தானாகவே கீழே சாய்ந்துவிடும். அது போலத்தான் மனிதனுடைய பற்றும். நான் என்பது ஒழிய வேண்டுமானால் முதலில் புறப்பற்றை விட வேண்டும்.' நம்மாழ்வார் திருவாய் மொழியைப் பற்றி தொடர்ந்து அவர் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அவருடைய பேருரை முடியும் நேரத்திலே ஒரு பக்தர் எழுந்து நின்றார் அவர் மேடைக்கு அருகிலேயே எதிரில் அமர்ந்து இருந்தார். எழுந்து நின்ற அவரை அமுதனார் உற்றுப் பார்த்தார். பக்தர் வலது கரத்தால் வாயை புதைத்த படியே பணிவோடு கேட்டார்:

'ஆச்சாரிய சுவாமிகளே, அடியேனுடைய விண்ணப்பம் ஒன்று.'

'சொல்லுங்கள், ஐயா! மனதில் இருப்பதை மறைக்காது கேளுங்கள்.'

'பெரியவர் என்னைத் தவறாக நினைக்கக் கூடாது. இங்கு கூடியிருப்பவர்களுடைய கருத்தைத்தான் நான் சொல்லுகிறேன். நாம் ஆண்டுதோறும் கூடுகிறோம், பாடுகிறோம், பேசுகிறோம், கலைகிறோம். ஆனால்....

'சொல்லுங்கள். தயக்கம் வேண்டாம்.'

'இன்றைக்கு தில்லை கோவிந்தரசப் பெருமானின் சன்னதி வெறும் கோயிலாக இருக்கிறது. மூவுலகையும் ஓரடியால் அளந்த ஐயனைத் தூக்கிக் கடலில் எறிந்த கொடிய சோழர்களுக்கு ஒரு கேடும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மரணயாகம் செய்தோம். கிருமிகண்ட சோழன் ஒழிந்தான். ஆனால் அவனுடைய வாரிசுகள் இன்னும் சோழநாட்டை ஆண்டு கொண்டுதானே இருக்கிறார்கள்? அவர்களைப் பூண்டோடு ஒழிக்க வேண்டாமா? அதற்குப் பெரியவர் ஒரு வழி காட்டவேண்டும்.'

'பேசியவர் வார்த்தைகளை முடிக்கும் முன்பே மற்றொருவர் எழுந்து நின்றார். அவருடைய முகத்தில் படபடப்புத் தென்பட்டது. அவர் பேசினார்:

'ஆச்சார்ய சுவாமிகளே, என்னுடைய நெஞ்சு பொறுக்க வில்லை. உணர்வுகளை கட்டுப்படுத்த முடியவில்லை. இடை மறித்துப் பேசுவதற்கு மன்னிக்கவும். கிருமிகண்ட சோழன் கோவிந்தராசனை கடலில் எறிந்தான் என்பதெல்லாம் பழைய கதை. இப்பொழுது புதிய அத்தியாம் துவங்கி இருக்கிறது. வைணவனாகப் பிறந்த ஒவ்வொருவனும் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேண்டிய கேவலமான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. தற்பொழுது எம்பெருமான் இருக்கும் இடம் இன்றைய இந்நாட்டு மன்னனான இராசாதிராசனுக்குத் தெரிந்து விட்டதாம். அவன் மீண்டும் கோவிந்தராசனைத் தூக்கிக் கொண்டுபோய் ஆழ்கடலில் எறியத் திட்டமிட்டு விட்டானாம். முன்பு ஐயனைக் கடலின் ஓரத்தில் எறிந்ததால் நாம் மீண்டும் இரகசியமாகக் கொண்டுவந்து விட்டோம். எனவே, இம்முறை இந்தச் சோழன் கோவிந்தராசனை மரக்கலத்தில் ஏற்றிக் கொண்டுபோய் நடுக்கடலில் எறிய முடிவு செய்துவிட்டானாம். இதனை நாம் எப்படித் தடுக்கப் போகிறோம்? அதனை இங்கேயே முடிவு செய்ய வேண்டும்.' இடையே மற்றொருவர் எழுந்து உரத்தக் குரலில் பேசினார்:

இராசாதிராசன் மதுரைப் போரில் தோற்று ஒழிந்தால் நல்லது. அவன் வெற்றி பெற்றால், நேராகப் படைகளுடன் திருமலைக்குச் செல்லுகிறானாம், அங்கிருந்து திருமாலைக் கடத்திக் கொண்டு வந்து கடலில் எறிந்துவிட்டுத்தான் தலை நகருக்குத் திரும்புவேன் என்பது அவனுடைய திட்டம்.

'அப்படியா? அந்த கொடிய சோழன் போரில் படுதோல்வி காண வேண்டும். அவன் அங்கேயே வெட்டப்பட்டு மடிய வேண்டும். அவருடைய பிணத்தை நாய், நரிகள் உண்ண வேண்டும். அதற்கு ஒரு யாகத்தை துவக்கப் பெரியவர் ஒரு வழி சொல்ல வேண்டும்.' இது ஒரு அடியாரின் எரிச்சல் மிக்க பேச்சு.

'என்னை யாரும் தவறாக நினைக்கக் கூடாது. யாகம், மந்திரம் என்பவற்றில் எல்லாம் எனக்கு நம்பிக்கை போய் விட்டது. கோவிந்தராசனை குலோத்துங்கன் கடலில் எரிந்து சுமார் அரை

நூற்றாண்டு ஆகிறது. அந்த வம்சம் அழிய நாம் யாகங்கள் செய்தோம். நாராயணனை நாடெல்லாம் கூடி வேண்டினோம். பயன் என்ன? இது கலிகாலம். இறைவன்கூட அரக்கர்களைத் தட்டிக் கேட்க அஞ்சுகிறான். ஆதலால் அந்தச் சோழனை நாம் குத்திக் கொல்ல வேண்டும். இது வன்முறைதான். 'கூடுமேல் தலையை ஆங்கே அறுப்பது கருமம் கண்டாய் அரங்கமா நகருளானே' என்ற தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் பாடல் நீங்கள் அறிவீர்கள். நம்முடைய நோக்கம் உன்னதமானது. அதற்கான வழிமுறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் இப்பொழுதே செயலில் இறங்க வேண்டும்.' ஒரு மெலிந்த, கரங்களைத் தூக்கி வேகமாக ஆட்டி பேசக்கூட சத்தியற்ற ஒரு முதிய தீவிரவாதியின் வீர வசனம் இது

இராசாதிராச சோழர் திருமலையில் இருக்கும் திருமாலை மீண்டும் கடலில் எறியப் போகிறார் என்ற செய்தி அங்கிருந்தவர்களுக்குப் புதியது. அந்த வதந்தியைக் கேட்ட கூட்டம் கொதித்து எழுந்தது. அவர்களுடைய கோபம் எல்லையைக் கடந்துவிட்டது. வெறி கொண்டு தாறுமாறாகக் கூக்குரல் இட்டார்கள். சோழ மன்னனை ஒழித்து கட்டுவோம் என்று சிலர் வெறி கொண்டு எழுந்தார்கள்! இப்படியே பழையாறைக்குச் செல்வோம். அரச அரண்மனையை தீயிட்டுப் பொசுக்குவோம் என்று சிலர் கத்தினார்கள். வைணவனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இரத்தத்தைச் சிந்தி வரதராசனைக் காப்போம்', என சூளுரைத்தவர்களும் உண்டு. தற்போது மன்னன் போரிடச் சென்றுள்ள பாண்டி நாட்டு மண்ணிலேயே அவனை நான் கொல்லுகிறேன் என்று வெறி பிடித்துப் பேசியவர்களும் உண்டு.

'இங்கிருக்கும் அனைவரும் நேராக திருமலைக்குச் செல்லுவோம். ஏழுமலையானுடைய திருக்கோயிலைச் சூழ்ந்து நிற்போம். அங்கிருக்கும் திருமாலை எடுக்க மன்னன் படைகளுடன் வரப்போகிறான். அவனை எதிர்த்துப் போரிட்டுக் கொல்லுவோம். கற்களை தூக்கி வீசி அவன் மண்டையை உடைப்போம். இயலாவிட்டால் நாம் அனைவரும் இலட்சியப் போரில் உயிர்விடுவோம்' இது சிலருடைய கருத்து.

திருவரங்கத்து அமுதனார் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்றார். இயலவில்லை. வெறிகொண்ட அக்கூட்டத்தின்

குருபக்தியும், தன்னடக்கமும் எங்கோ போய்விட்டன. பித்து தலைக்கேறிக் கூச்சலிட்டார்கள் அவர்களை அடக்க அப்பெரியவரால் இயலவில்லை. அவர். வேதனையோடு எழுந்து பந்தலை விட்டு இறங்கினார். கோயிலுக்கு உள்ளே சென்று விட்டார்.

பந்தலில் பலரும் ஏக காலத்தில் வெறியோடு பேசிக் கொண்டு இருந்ததால் யாருக்கும் எதுவும் புரியவில்லை. அங்கு பெருத்த கூச்சல்தான் கேட்டது, மதியம் கழிந்தது. மாலை வந்தது. கூட்டம் குறையவில்லை. ஆனால் வர, வர பேச்சின் வேகம் குறைந்து கொண்டே வந்தது. இருள் கவ்வவே பலர் பந்தலுக்கு உள்ளே வந்தார்கள். சிலர் வெளியே போனார்கள்.

ஆங்காங்கு பந்தங்கள் ஏற்றி வைக்கப்பட்டன. வீரமாகப் பேசிய பலர் பந்தலின் கீழ் படுத்தவாறு குறட்டைவிடத் துவங்கி விட்டார்கள்.

இராசாதிராசர் எதிர்பாராத வகையில் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். அங்கு தன்னைப் பற்றிய பேச்சு வரும் என்று அவர் கனவிலும் கருதவில்லை. தூய்மையே உருவான அந்த சத்திய சீலருடைய உள்ளம் அப்பொழுது எப்படி இருக்கும்? அந்த இடத்தில் தம்முடைய தலை மீது இடி இறங்கும் என அவர் கனவிலும் கருதியது இல்லை. அங்கு பேசப்பட்ட வார்த்தைகளைக் கேட்டு அவர் நிலை குலைந்து விட்டார். நடு நடுங்கிவிட்டார். அவருடைய தலைமீது ஏக காலத்தில் ஆயிரம் பேரிடிகள் இறங்கிவிட்டன போல இருந்தது.

இரண்டாம் குலோத்துங்க மன்னன் தில்லைக் கோயிலில் இருந்த கோவிந்தராசப் பெருமானைக் கடலில் எறிய ஏற்பாடு செய்ததை இராசாதி ராசர் அறிந்தே இருந்தார். அதனால் வைணவர்கள் கோபம் கொண்டார்கள். குலோத்துங்க மன்னனை 'கிருமிகண்ட சோழன்' எனப் பழித்தார்கள். அவனுடைய மரணத்திற்காக யாகம் செய்தார்கள். இதனை எல்லாம் இராசாதி ராசர் உணராததில்லை. ஆனால் அவை எல்லாம் வரலாற்றின் ஆழத்தில் புதைந்துவிட்ட நிகழ்ச்சிகள் என்று அவர் நினைத்துக் கொண்டு இருந்தார்.

ஆனால் அச்செயல் வைணவர்களுடைய உள்ளத்தில் எத்தகைய ஆழமான காயங்கள் ஏற்படுத்தி இருக்கின்றன என்பதை

அன்றுதான் அவர் கண்டார். அரை நூற்றாண்டிற்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் அந்த செயல் பழைய தலை முறையினரிடம் மட்டும் அல்ல, அதன் பின்னர் பிறந்த வைணவர்கள் உள்ளத்திலும் பசுமரத்து ஆணிபோலப் பதிந்திருக்கிறது! மதவெறி கொண்ட அவர்கள் எதனையும் செய்வார்கள். அவர்கள் சொல்லுவது போல சோழ மன்னனைக் கொன்றாலும் வியப்பில்லை! அவர்கள் எதற்கும் துணிந்தவர்கள். அவர்களுடைய பக்தி அத்தனை முரட்டுத்தனமானது.

'அவர்கள் என்னைக் கொல்லுவது ஒருபுறம் இருக்கட்டும். நான் இந்த உலக வாழ்வை வெறுத்து திங்கள் பல ஓடி விட்டன. அமுதனார் புற்றைப் பற்றி பேசினார். இன்று என்னுடைய பற்று ஒன்றே ஒன்றுதான். அது நான் அணைக்க ஏங்கும் மரணம். அதனை எனக்கு வைணவர்கள் அளித்தால் என்ன, மற்றும் போர் மூலம் வந்தால் என்ன? மரணதேவனை மனப்பூர்வமாக வரவேற்கிறேன்'

'ஆனால்.... ஆனால்...! எவ்வளவு பெரிய அபவாதம்? கோவிந்தராசன் மூர்த்தம் திருமலையில் மறைத்து வைத்திருப்பதுகூட எனக்குத் தெரியாது. கடலில் எறியப்பட்ட அந்தக் கரியவனை வைணவர்கள் கொண்டு போய் திருமலையில் வைத்திருக்கிறார்கள் என்ற செய்தியைக்கூட இன்றுதான் தெரிந்து கொண்டேன். உண்மை அப்படி இருக்க, அந்த மூர்த்தத்தை நான் கடலில் எறியத் திட்டமிட்டு இருப்பதாகக் கூறுகிறார்களே! மதுரைப் போர் முடிந்தவுடன் படைகளுடன் நான் திருமலைக்குச் சென்று அம்மூர்த்தத்தைக் கொண்டுபோய் ஆழ்கடலில் எறியப் போவதாகச் சொல்லுகிறார்களே, என்ன கொடுமை! நெஞ்சம் வெடிக்கும் கொடுமை! அத்தகைய கொடியவனா நான்? ஆம். இவ்வளவு பெரிய பழியைக் கேட்டும் உயிர் தாங்கிக் கொண்டு இருக்கும் நான் கொடியவன்தான்!

'இந்த வைணவர்களைப் கோபிப்பதில் பொருள் இல்லை. நடைபெற்றது மிகப் பெரிய தவறான செயல்தான். சோழ குலத்திற்கு ஏற்பட்ட துடைக்க இயலாத மாசு அது. பாதிக்கப்பட்ட பக்தர்கள் கோபப்படுவது நியாயமானதே. மீண்டும் பழைய தீமையை நான் செய்யப் போகிறேன் என்று யாரோ வதந்தியைக் கிளப்பி விட்டு இருக்கிறார்கள், அதனைக்

கேட்ட வைணவர்கள் கொதித்து எழுவதில் தவறு என்ன? எனக்கு அந்த எண்ணம் இல்லை என்று இப்பொழுது கூறி விட்டால் என்ன? கூடாது. முதலில் நான் யார் என்று கூறவேண்டிவரும். அடுத்த சொல் என்னுடைய வாயிலிருந்து வருவதற்குள் என்னைக் கொன்று சின்னாபின்னமாக்கி விடுவார்கள், பின்னர் நான் நிரபராதி என்று எண்பிக்க வழியே இல்லாது போய்விடும்.'

இத்தகைய எண்ணங்கள் இதயத்தைத் துளைக்கவே அரசர் கூட்டத்தின் இடையே அப்படியே சாய்த்து விட்டார் அப்பந்தலில் ஆங்காங்கு தாறுமாறாகப் பலர் படுத்திருந்ததால் மன்னரை யாரும் பொருட் படுத்தவில்லை. அவரை அடுத்தே இருபுறங்களிலும் பலர் உறங்கிக் கொண்டு இருந்தார்கள். அரசர் ஊணை மறந்தார். உலகை மறந்தார். சூழ்நிலையை மறந்தார். பழுக்கக் காய்ச்சிய சம்மட்டியால் புதிதாக தலை மீது கொடுக்கப்பட்ட அடியால் அவர் துடித்துக் கொண்டு இருந்தார்.

இரவு இரண்டாம் யாமம் கழிந்து மூன்றாம் யாமம் துவங்கியது. அம்பு பட்ட புறாவைப் போல கண்களில் நீர் கொட்ட அவர் மண்மீது விழுந்து இருந்தார். யாமப் பூசை மணியோசை கேட்டது. அப்பொழுது அவருடைய மனதில் திடீரென ஒரு புனித ஒளி புகுந்தது போல் இருந்தது. அவருக்கு ஏதோ ஒருவிதமான தெளிவு பிறந்தது. தன்னுடைய பிறவிக்கு ஏதோ பொருள் இருப்பதாக அவருக்கு அப்பொழுதுதான் முதன் முதலாகப் பட்டது. தாமும் ஆற்றவேண்டிய ஒரு வரலாற்றுப் பணி இருப்பதாக உணர்ந்தார் 'எங்கோ கங்கை கொண்ட சோழபுரத்தில் சுற்றிக் கொண்டு இருந்தேன். என்னை அழைத்து அரசராக்கினார் இராசராசர். அவர் இட்ட பணியைச் செய்யத் தவறிவிட்டேன். ' அவர் பெற்றெடுத்த இளவல்களைக் காப்பாற்றாது சாக விட்டுவிட்டேன். இளவல்கள் இறந்தார்கள் என்ற செய்தியைக் கேட்டவுடன் என்னுடைய உயிர் பிரிந்திருக்க வேண்டும். குறைந்தது நான் அரச பதவியையாவது துறந்திருக்க வேண்டும். அவற்றை எல்லாம் செய்யாது உயிர் தரித்தேன். அரசுப்பொறுப்பும் வகித்தேன். அதுபெரிய தவறு என்றே இன்றுவரை நினைத்தேன். ஆனால் இனறவன் அதற்கு ஒரு நியாயத்தை வைத்தே இருந்திருக்கிறான் என்பதை இப்பொழுது உணருகிறேன். எனக்குக் கிடைத்த இந்த அரசுப் பதவியைச்

செம்மையாகப் பயன்படுத்துவேன். எங்கோ இருந்த என்னை இழுத்து வந்து அரசனாக்கிய சோழ குலத்துக்கு நன்றிக் கடன் செய்து காட்டுகிறேன். கோவிந்தராசனை கடலில் எறிந்ததால் வரலாற்றில் தீராத பழி பெற்ற சோழகுலத்திற்கு ஏற்பட்ட மாசைத் துடைக்கிறேன். திருமலையில் இருக்கும் திருமாலை தில்லையம்பதியில் பழைய இடத்திலேயே பிரதிஷ்டை செய்வேன், இறைவ, அதுவரை என்னைக் காப்பாற்று. என்னுடைய உயிரைப் பறிக்காதே, என்னுடைய அரசைப் பறிக்காதே. ஏற்கனவே தில்லை திருமால் கடலில் எறியப்பட்ட செய்தி, அதனால் வைணவர்களிடையே ஏற்பட்ட கொந்தளிப்பு முதலியன அரசர் அறிந்திருந்தார். இயன்றால் கோவிந்தராசனை கடலில் இருந்து கொண்டுவந்து தில்லை திருப்பதியில் முன்பு இருந்த இடத்திலேயே வைக்கவேண்டும் என்று மேலோட்டமாக நினைத்து இருந்தார் இப்போதுதான் அந்த மூர்த்தம் திருமலையில் இருப்பது தெரிந்தது. அந்த மூர்த்தத்தை எப்படியும் கொண்டு வந்து பழைய இடத்தில் வைத்து சோழ வம்சத்துக்கு ஏற்பட்ட களங்கத்தை போக்கியே தீருவேன், இது உறுதி முக்காலும் உறுதி என்று மன்னர் மனதில் சபதம் ஏற்றார்.

இவ்வாறு எண்ணிய மன்னருடைய மனதில் புதியதோர் சாந்தி தோன்றியது. கோதையை மறந்தார், மடிந்த குழந்தைகளை மறந்தார். மதுரைப் போரை மறந்தார். மனநிறைவுடன் அந்தந் கட்டாந்தரையில் கண் அயர்ந்துவிட்டார்.

சோழ வேந்தர் எத்தனை நொடிகள் உறங்கினார், அல்லது எத்தனை யாமங்கள் உறங்கினார்? தெரியாது ஏதோ ஒரு அரவம் கேட்டது. திடுக்கிட்டுக் கண் விழித்தார். பந்தலில் ஒரே இருட்டாக இருந்தது. பந்தங்கள் எல்லாம் அணைந்துவிட்டன. அருகில் பலர் ஆழ்ந்த துயிலில் குறட்டை ஒலி எழுப்புவது கேட்டது. கண்களைத் திறந்து பார்த்தார்.

ஒரு மனிதன் கரத்தில் பந்தம் தாங்கியபடி அவரை நெருங்கி வந்தான்.

அவனுக்குப் பின்னால் ஒரு உருவம் மெதுவாக நடந்து வந்தது. அந்த உருவத்தினுடைய உடல் முழுவதும் துணியால் போர்த்தி இருந்தது. பந்தம் தாங்கி வந்தவன் உறங்கும் ஒவ்வொருடைய முகத்திற்கு நேராகவும் பந்தத்தை கொண்டுபோய் காட்டினான். பின்னர் அவனைத் தாண்டிக்

கொண்டு மேலே சென்றான். இருவரும் உறங்குபவர்களை மிதிக்காது அவர்களை மெதுவாகத் தாண்டிக் கொண்டு மேலே சென்றார்கள்.

இருவரும் தம்மைத் தேடிக் கொண்டுதான் வருகிறார்கள் என்ற ஐயம் அரசருக்கு ஏற்பட்டது. கண்களை இறுக்கி மூடிக்கொண்டு உறங்குபவரைப் போல நடித்தார். தம்முடைய முகத்திற்கு நேராக பந்தம் நீட்டப் பட்டதை அவர் உணர்வால் உணர்ந்து கொண்டார் பந்தத்தின் வெப்பம் சுளீர் என அவருடைய முகத்தின்மீது பட்டது.

அப்பொழுது வந்த இருவரும் மெதுவாக குசு குசு எனப் பேசினார்கள். அவர்களுடைய பேச்சு அவருடைய செவிகளில் தெளிவாகவே கேட்டது.

'தாயே! இவன்தான்.'

'ஆம் ஆம்! நம்முடைய பலி இவனே தான்!'

இரண்டாவது குரலைக் கேட்ட மன்னர் திடுக்கிட்டார். ஆகாயமே அவர் மீது இறங்கிவிட்டது போல அலறிக் கொண்டு கண் இமைகளைத் திறந்தார்.

எதிரே கோதை நிற்கிறாள்!

32

தில்லை பொது நடம் போற்றி, போற்றி!

குமராட்சி கிராமத்தை ஒட்டி சற்று தள்ளி ஒரு இடு காடு இருக்கிறது. அது வாய்க்காலுக்கும், பாதைக்கும் இடையே ஒரு நீண்ட பரப்பில் இருக்கிறது. அதில் ஒரு ஓரத்தில் வயதான ஆலமரம் உயிரைக் கையில் பிடித்தவாறு நின்று கொண்டு இருக்கிறது. அந்த ஆலமரத்தை சூழ்ந்து அடர்த்தியான முட்புதர். அதனால் அந்த இடம் ஊரை ஒட்டி இருந்தாலும் ஒரு அடர்ந்த காடு போலவே தோற்றம் அளித்தது.

அந்தப் புதருக்குள் ஒரு சிறிய நடைபாதை போகிறது. நடைபாதையையும் தள்ளி அப்பால் ஒரு பாறை இருக்கிறது. அப்பாதை அதிக உயரம் இல்லையாயினும், பூமியில் பரந்த அகண்டு இருக்கிறது. பாறையின் சுற்றுப்புறமும் ஏராளமான சிறு, சிறு கற்கள் சிதறிக் கிடந்தன.

பாறையை ஒட்டி இருவர் பந்தங்களைத் தாங்கிக் கொண்டு இருந்தார்கள். அவர்களின் இடையே பாறையின்மீது உடல் எல்லாம் போர்த்தப்பட்ட ஒரு உருவம் அமர்ந்திருந்தது. அதன் எதிரில் சுமார் இருபது பேர் நின்று கொண்டு இருந்தார்கள். அவர்களுடைய கரங்களில் வாட்கள் பளபளத்தன.

காற்றால் மோதப்பட்ட பந்தங்களின் சுடர் தாறுமாறாக அலைந்தது. ஆனால் அங்கு நின்றிருந்தவர்களுடைய நிழல்கள் அங்கும், இங்குமாக ஆடின. சுடுகாட்டுப் பேய்கள் ஒட்டு மொத்தமாக வந்து தாறுமாறாக நடனம் ஆடுவது போல இருந்தது அத்தோற்றம்.

பாறையின் மீது அமர்ந்திருந்த உருவம் எதிரில் நிற்பவர்வர்களைப் பார்த்துப் பேசியது:

‘நாம் கனவிலும் எதிர்பாக்காத பொன்னான வாய்ப்பு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. எல்லாம் அந்த நாராயண

மூர்த்தியின் அருள். இன்றைக்கும் மட்டும் இந்த பொன்னான வாய்ப்பை நாம் தவற விட்டு விட்டோமானால், இனி என்றுமே இத்தகைய வாய்ப்பு கிட்டுமா என்பது ஐயம்தான். எலி தானாகவே வந்து நம்முடைய பொறியில் சிக்கிக்கொண்டது, நாம் உடனே அதை நசுக்கிக் கொல்ல வேண்டும்.'

'தாயே, அவன்தான் நம்முடைய எதிரி என்பது உறுதியாகத் தெரிகிறதா? இதில் ஏதாவது தவறு நேர்ந்து விட்டால் விபரீதம் ஆகிவிடுமே! அவன் எப்படி இங்கு வந்து குதிக்க முடியும்? மதுரையில் போர் புரிந்து கொண்டிருக்கும் சோழன் இந்த மாநாட்டுப் பந்தலில் படுத்துக் கொண்டு உறங்கிக் கொண்டு இருக்கிறான் என்று சொல்லுகிறீர்கள். எங்களால் நம்ப இயலவில்லை.'

'எனக்கு நன்றாகத் தெரியும், இவன் அவனேதான். நான் கூறுவதை நம்புங்கள். இராசாதிராசனுடைய ஒவ்வொரு அசைவையும் நான் அறிவேன். என்னுடைய இதயத்திற்குள் புகுந்துகொண்டு அல்லும் பகலுமாக என்னை வாட்டி வதைக்கும் அந்தக் கொடியவனை நான் எப்படி மறக்க முடியும்! மேலும், அவனை நிழல்போல் தொடர உளவாளிகளை நியமித்து இருக்கிறேன். அவனை வெள்ளாற்றிலிருந்தே என்னுடைய உளவாளி ஒருவன் தொடர்ந்து வந்தான். அவனால்தான் இங்கு இராசாதிராசன் இருப்பதை நானே அறிய முடிந்தது.'

அப்பொழுது அவ்விடத்திற்கு ஒருவன் வந்தான். கோதையை வணங்கினான். அவனை அருகில் வருமாறு கோதை பணித்தாள், அவன் வந்தான். கோதையினுடைய முகத்தில் இருந்த கேள்விக்குறியைப் பார்த்துக் கொண்டே கூறினான்:

'தாயே, தாங்கள் சொல்லிபடியே தேடினேன். இதோ இங்கிருந்த கிழக்குப்புறம் சற்று தொலைவில் வாய்க்காலின் ஓரத்தில் உள்ள மாமரத்தின் அடியில் ஒரு வெள்ளைப் புரவி படுத்துக் கொண்டு இருக்கிறது.'

வந்தவன் இச்செய்தியைக் கூறவே கோதையின் உதடுகள் ஒரு வெற்றிப் புன்னகையை உதிர்த்தன. பெருமிதத்தோடு எதிரில் நின்றவர்களைப் பார்த்தாள்.

வாய்க்கால் கரையில் வெண்புரவி இருக்கவே, வந்தவன் மன்னன்தான் என்று அனைவருக்கும் முழு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. கோதை அவர்களைப் பார்த்துக் கொண்டே கூறினாள்:

'நான் சொல்லுவதை கவனமாகக் கேளுங்கள். தற்பொழுது பேசிக்கொண்டு இருக்க நமக்கு நேரம் இல்லை. அவன் தப்பிப் போய்விடக்கூடாது. அவனுடைய கதையை இன்று இரவே முடித்துவிட வேண்டும்.'

'தாயே, என்னுடன் பந்தம் ஏந்தி வந்தவன் மட்டும் வரட்டும். அவன் அடையாளம் காட்டட்டும். உறங்கும் அவன் அப்படியே மீளா உறக்கம் கொள்ள ஏற்பாடுசெய்து விடுகிறேன்.

இதனைக் கேட்டு கோதை வழக்கமான அந்த பேய்ச் சிரிப்புச் சிரித்தாள். சிரித்துக் கொண்டே கூறினாள்:

'முட்டாளே, ஆத்திரப்படாதே.'

'ஏன்? அவனைக் கொல்லக்கூடாது என்கிறீர்களா?'

'நான் அப்படிச் சொல்லவில்லையே! அறிவோடு வேலையைச் செய்யவேண்டும் என்கிறேன்.'

'உறங்குபவனைக் கொல்லுவது பாவம் என்று தயங்குகிறீர்கள்'

'இல்லை, நான் சொல்லுவதைச் சற்று பொறுமையாகக் கேள். கரியபெருமாள் சன்னதியின் எதிரில் அமைக்கப்பட்டுள்ள பந்தலின்கீழ் நம்முடைய எதிரி மட்டும் படுத்திருக்கவில்லை. இன்னும் ஏராளமானவர்கள் படுத்திருக்கிறார்கள். இந்நிலையில் அங்கு அவனைக் கொல்ல முயன்றால் பெருத்த பரபரப்பு ஏற்படும். அவன் தப்பித்துக்கொண்டு கூட்டமோடு, கூட்டமாக ஓடிவிடவும் வாய்ப்பு ஏற்படும். மேலும், நம்மையும் மற்றவர்கள் பிடித்துக்கொள்ள ஏதுவாகும். அத்துடன் திருவரங்கத்து அமுதனார் கோயியில் வீற்றிருக்கிறார். அவருடைடைய நிழலில் இந்தக் கொலை நடப்பது வைணவர்களுக்குத் தீராத பழி ஏற்படுத்திவிடும்.'

'அப்படியானால்?'

'வழி சொல்லுகிறேன். மதுரையிலிருந்து என்னுடன் வந்திருக்கும் இருபது போர்வீரர்களும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து விடவேண்டும். ஒரு பிரிவினர் பந்தலுக்கு வெளியே நின்று கொண்டு இருக்க வேண்டும். அவன் உறக்கம் கலைந்து பின்னர் வெளியே வருவான். அப்பொழுது வேலையை முடித்து விட்டு ஓடிவிட வேண்டும். ஒருக்கால் ஆள்மாறாட்டம் ஏற்பட வாய்ப்பு

உண்டு. கூட்டத்தில் அவனைக் கண்டுபிடிப்பதும் கடினமாகி விடலாம். அதனால் அவன் தப்பிவிடலாம். அப்படி அவன் பந்தலுக்கு அருகில் இருந்து தப்பித்து விட்டாலும் நேராக புரவியை நாடி வந்தே தீருவான். எனவே ஒரு பிரிவினர் புரவி இருக்கும் இடத்தில் பதுங்கிக் கொண்டு இருக்க வேண்டும். புரவியின் அருகில் அவன் வரும்போதே திடீரென அவனைச் சூழ்ந்து வேலையை முடித்துவிட வேண்டும். அவன் புரவியின்மீது ஏறும்வரை விட்டுவிடக்கூடாது.'

'தாயே! மிகவும் சிறந்த கருத்து இது. ஒரே நேரத்தில் ஒரே வேலைக்கு இரு திட்டங்கள். அவன் ஒன்றில் தப்பினாலும் மற்றதில் தப்ப முடியாது. அவனுடைய தலை எழுத்து இன்றோடு முடிந்துவிட்டது. வெற்றி, வெற்றி!'

'இதற்குள் வெற்றி கொண்டாடிவிட வேண்டாம். வேலையை முடித்து விட்டு வாருங்கள். உடனே புறப்படுங்கள். நான் இரத்த தாகத்தால் தவிக்கிறேன். என்னால் தாங்க இயலவில்லை.'

பந்தலில் படுத்திருந்த சோழ மன்னன் இராசாதிராசர் கோதை ஒரு பேய்தான் என்ற முடிவுக்கு வந்து வெகு காலம் ஆகிவிட்டது. அல்லும், பகலும் தம்மை வதைக்கும் கொடிய பேய் கோதை என்று அவர் நம்பினார். எனவே பந்தலில் அந்நேரத்தில் அவளைப் பார்த்ததால் அவர் வியப்படையவில்லை. பேய் எந்நேரத்திலும், எந்த இடத்திலும் தோன்றும், மறையும்! அந்நேரத்தில் அந்த இருளில் பந்தத்துடன் வந்து அவரைக் கண்டுபிடித்து விட்டாள். அவளைப் பார்த்த மன்னருடைய முகம் வழக்கம்போல பேய் அறைந்ததுபோல ஆயிற்று. உடல் நடுங்கியது.

இவற்றை எல்லாம் கோதை கவனிக்கவில்லை. பந்தத்தின் ஒளியில் இராசாதிராசனை அடையாளம் கண்டு கொண்ட பின்னர் அவள் வேகமாக நடந்தாள். மன்னரை அடையாளம் காட்டியவன் அவளுக்கும் முன்னால் பந்தம் ஏந்தி நடந்தான். ஆற்றங்கரையை நோக்கி அவர்கள் நடந்தார்கள்.

இராசாதிராசர் தம்மை எப்படியோ சமாளித்துக் கொண்டார். வழக்கமான நடுக்கதையும், சோர்வையும் விட்டு விட்டு அவளுடைய நடவடிக்கைகளை கவனிக்க வேண்டும் என்ற முடிவு செய்து விட்டார். அவளுடைய திட்டம் என்னதான் என்பதை அறியும் ஆவல் அவருக்கு ஏற்பட்டு விட்டது. எனவே

அவர்களை அவர் இருளில் தொடர்ந்தார். புதரில் மறைந்தபடியே இடுகாட்டுக் கூட்டத்தைக் கவனித்தார்.

இடுகாட்டில் கோதை தன்னுடைய அடியாட்களுக்கு இட்ட ஆணை இராசாதிராசர்செவிகளில் தெளிவாகக் கேட்டது. எதற்கும் அஞ்சாத மன்னரையே அவளுடைய திட்டம் அஞ்சச் செய்து விட்டது. கோதை தன்னைக் கொல்லுமாறு ஆணையிட்டதில் அவருக்கு வியப்பு ஏற்பட வில்லை. அதுதான் அவளுடைய நீண்ட கால திட்டம் என்பதை அவர் அறிவார்.

ஆனால் அவரைக் கொலை செய்யக் கோதை ஏன் அத்தனை முயற்சிகள் செய்கிறாள்? அவர் அவளுக்கு என்ன தீங்கு செய்தார்? இந்த வினாக்களுக்கு அந்த இடு காட்டில் விடை கிடைக்குமா என ஆவலோடு அவர்கள் பேசுவதை ஒட்டுக் கேட்டார். விடை கிடைக்கவில்லை. புத்திசாலியான கோதை அவரைக் கொல்லத்தான் திட்டம் கொடுத்தாளேயன்றி, காரண காரியங்களைப் பேசிக் கொண்டு காலத்தை வீணாக்கவில்லை.

இதில் வியப்பு என்னவென்றால், தன்னைக் கொல்ல வைணவர்கள் ஒரு பக்கம் முயலுகிறார்கள். கோதை ஒரு பக்கம் செயல்படுகிறாள் என்று அரசர் கருதினார். வைணவர்களின் வஞ்சினத்துக்குக் காரணம் உண்டு. ஆனால், அவளுடைய பகைமைக்குக் காரணம்? இத்தான் அரசருக்கு விளங்கவே இல்லை.

இதில் விந்தை இதுதான். கோதை வைணவ மகாசபையில் கலந்து கொள்ளவே குமராட்சிக்கு வந்தாள். திருவரங்கத்து அமுதனாரின் ஆசியைப் பெறவே வந்தாள். அங்கு இராசாதிராசர் வருவார். அவர் தாமாகவே தன்னுடைய வலையில் சிக்குவார் என்று அவள் கனவிலும் கருதவில்லை.

இராசாதிராச மன்னரை நிழல் போலத் தொடர அவள் ஒற்றர்களை நியமித்து இருந்தாள். வெள்ளாற்றிலிருந்தே ஒரு ஒற்றன் அவரைத் தொடர்ந்து வந்தான். கோதையை மகா சபையில் கண்ட அந்த ஒற்றன் அங்கு மன்னர் வந்திருக்கும் செய்தியை அவளுக்குக் கூறினான்.

மற்றவர்களைப் போல கோதையும் முதலில் இந்தச் செய்தியை நம்பவில்லை. அரசர் மாறுவேடத்தில் வந்திருக்கிறார் என்று ஒற்றன் உறுதியாகக் கூறினான். அதன் பின்னரே அவள் இருளில் ஒற்றனுடன் போய்ப் பார்த்தாள். உறங்கும் மன்னனை அடையாளம் கண்டு விட்டாள்.

அங்கு உறங்குவது சோழ நாட்டு மன்னனே என்பதைக் கண்ட கோதை மட்டிலா மகிழ்வு அடைந்தாள். எதிர்பாராத வாய்ப்பை எண்ணிப் பூரித்தாள். செயலில் இறங்கினாள். மதுரையில் இருந்து புறப்படும்போதே அவள் தனக்குப் பாதுகாப்பாக இருபது பாண்டி நாட்டுப் போர்வீரர்களை அழைத்துக் கொண்டு வந்தாள். வந்த இடத்தில் அவர்களை நன்கு பயன்படுத்திக் கொண்டாள்.

மன்னர் கொஞ்ச காலமாக உலகையே வெறுத்து விட்டார். மரணம்தான் தமக்கு சாந்தி அளிக்கவல்லது என்று நம்பினார். மரணத்தை மனப்பூர்வமாக வரவேற்றார். அன்றைக்கு முன்தினம் மட்டும் கோதையினுடைய இத்தகைய சொற்களைக் கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டிருந்தால் அவரே அவளுக்கு எதிரில் வலியப் போய் நின்றிருப்பார். 'கோதை, இதோ நான் உன் முன்னால் வந்து நிராயுதபாணியாக நிற்கிறேன். உன்னுடைய விருப்பப்படி என்னைக் கொன்றுவிடு, ஆனால் ஒரு சிறு வேண்டுகோள். என்னைக் கொல்வதற்கான காரணத்தை மட்டும் முடிந்தால் சொல்லிவிடு,' இவ்வாறு அவளைக் கேட்டிருப்பார். அவள் அதற்கான காரணம் கூறி இருப்பின் நல்லது. கூறாதிருந்தாலும் மகிழ்ச்சியோடு உயிர் விட்டிருப்பார்.

ஆனால் அன்று அவர் இறக்க விரும்பவில்லை. உயிர் வாழத் துடித்தார். அவருக்குத் திடீரென உயிரின் மீது ஆசை வந்துவிட்டது. ஏன், முன்னர் கூறியதுபோல சோழர் குலம் வைணவர்களுக்குப் பெரும் தீங்கு செய்து விட்டதாக அவர் கருதினார். கோவிந்தராசன் கடலில் எறியப்பட்டதால் வெகுண்ட வைணவர்கள் இட்ட சாபம் தான் இன்றைய நிலைக்குக் காரணம் என்ற எண்ணம் அவருடைய மனதில் பட்டுவிட்டது. சோழ நாட்டை வாட்டும் தொல்லைகளுக்கெல்லாம் அந்தப் பழியே காரணமாகும்.

'நான் உயிர் பிழைக்க வேண்டும் சோழ குலத்திற்கு சேர்ந்துள்ள மாசைத் துடைக்க வேண்டும். திருமலையில் இருக்கும் திருமாலைக் கொண்டு வந்து தில்லையம்பதியில் நிறுவ வேண்டும். மதுரைப் போரின் முடிவு கூட இதனைப் பொருத்தே இருக்கலாம்.

'எனவே அந்த மகத்தான சாதனை புரியும்வரை நான் சாக விரும்பவில்லை, உயிர் பிழைக்க வேண்டும். எப்படியும் உயிர் வாழ வேண்டும். 'வாய்த்தது நமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்'

என்கிறார் நாவுக்கரசர். ஆம் அவருடைய சொற்படி நடப்பேன். எனக்கு வாய்த்த இப்பிறவியை மதித்து அதனை நன்றாகப் பயன்படுத்துவேன். ஒரு நல்ல செயல் செய்ய என்னுடைய ஈனப் பிறவி பயன்படட்டும். அதுவரை நான் சாகக் கூடாது. இறைவா என்னைக் காப்பாற்று!'

இந்த முடிவுக்கு வந்த அவருடைய மனதில் புதிய தெம்பு பிறந்தது. வாழ்க்கையில் ஒரு பிடிப்பு வந்தது. எனவே அங்கிருந்து எப்படியும் தப்ப வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார். அந்த இடத்தில் சதிகாரர்களை எதிர்த்துப் போரிடுவது ஏற்றதாக அவருக்குப் படவில்லை. மேலும் கையில் வாளும் இல்லை. தன்னை அரசர் என்று வெளிப்படுத்திக் கொள்ளவும் அவர் விரும்பவில்லை. எனவே எப்படியும் சதிகாரர்களிடம் சிக்காமல் தப்பி ஓடுவது ஒன்றுதான் சிறந்த வழி என்ற முடிவிற்கு வந்தார்.

ஆனால் எப்படித் தப்புவது? பந்தலை நோக்கிச் செல்லலாம் என்றால் அங்கு கொலை செய்யப் பத்துப்பேர் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்படியே புரவி இருக்கும் இடத்திற்கு ஓடி அதன் மீது அமர்ந்து ஓட்டம் பிடிக்கலாம் என்றால் புரவியைச் சுற்றியும் பத்து எமதூதர்கள் காத்து இருக்கிறார்கள். போரிடுவதற்கான வாள் இல்லை என்பது மட்டுமல்ல. உள்ளத்தில் தெம்பும் இல்லை, உடலில் உரம் இல்லை. ஆனால் எப்படியும் தப்ப வேண்டும்.'

இந்த முடிவிற்கு வந்த மன்னர் சதிக்கூட்டத்திற்குத் தெரியாமல் அவ்விடத்திலிருந்து நேராகப் பாதைக்கு வந்தார். யாராவது தன்னைக் கவனிக்கிறார்களா என்ற பார்த்தபடியே பதுங்கிப் பதுங்கிப் பாதைக்கு வந்தார். கும் இருட்டில் கண்ணுக்கு எதுவுமே புலப்படவில்லை. அச்சமயம் பாதையில் ஒரு பெரும் மாட்டு மந்தை சென்று கொண்டு இருந்தது. மந்தையின் மத்தியில் ஆங்காங்கு சிலர் நடந்தவாறு அதனை ஓட்டிக்கொண்டு சென்றார்கள். சிலர் மாடுகளை அதட்டிக் கொண்டும், அடித்துக் கொண்டும் சென்று கொண்டிருந்தார்கள். மந்தை தில்லையை நோக்கிச் செல்லும் திக்கில் சென்று கொண்டு இருந்தது.

அரசர் மந்தையுடன் சேர்ந்து நடந்தார். மந்தையை ஓட்டிச் சென்றவர்கள் மாடுகளின் மத்தியில் ஆங்காங்கு சென்றதால், மன்னர் அவர்களோடு ஒருவராக வருவதை யாரும் கவனிக்க வில்லை. அப்பொழுது குளிர் அதிகமாக இருந்ததால் அவர்கள்

உடலெல்லாம் போர்த்தி முக்காடு இட்டுக்கொண்டு இருந்தார்கள். மன்னரும் அவர்களைப் போலவே முக்காடிட்டுக் கொண்டு நடந்தார். அவரை யாரும் புதிய மனிதர் என்று கருதவில்லை. தங்களின் ஒருவன் என்றே நினைத்தார்கள் அவர்களுடைய கவனமெல்லாம் மாடுகளின் மீது இருந்தது. அரசரைக் கவனிக்க நேரம் எது? வெளிச்சம்தான் எது?

மாடுகளின் இடையே நடந்த மன்னர் ஒரு நொடியில் தன்னைப் பற்றி நினைத்தார். அவருக்குச் சிரிப்பு வந்து விட்டது. வெகுகாலத்திற்குப் பிறகு வாய்விட்டுச் சிரித்தார். மாடுகள் எல்லாம் உழைத்து ஓய்ந்தவை. இனி அவைகளால் மனிதனுக்குப் பயன் இல்லை. அவைகள் இனி மனிதனுக்குச் செய்யப்போகும் ஒரே உதவி தங்களுடைய ஊணை அவனுக்கு அளிப்பதுதான். தங்களுக்காக உழைத்த, பால் கொடுத்த மாடுகளின் ஊனையும் விடமாட்டோம். அதனையும் விற்றுப் பணமாக்குவோம் என்ற வெறியோடு அவர்கள் மாடுகளைப் பலியிட நடத்திச் சென்று கொண்டு இருந்தார்கள். 'நானும் இப்பொழுது ஒரு பலிமாடுதான். என்னைப் பலியிட எத்தனை பேர் சுற்றி அலைகிறார்கள். இந்த மாடுகளுடைய நிலையும், என்னுடைய நிலையும் ஒன்றே! எனவே பலிகள் ஒன்று சேர்ந்து நடக்கின்றன. நல்ல பொருத்தம் இது!' இத்தகைய சிந்தனை வரவே அவர் மீண்டும் வாய்விட்டுச் சிரித்தார்.

விதி வினோதமான முறையில் விளையாடியது. மன்னரைத் கொல்ல இப்பொழுது இருசாரார் துடிதுடிக்கிறார்கள் முதலாவது கோதை. தில்லை கோவிந்தராசனை இரண்டாவது குலோத்துங்கன் கடலில் எறிந்தார் அதற்கு இராசாதிராசர் என்ன செய்வார்? ஆனால் சோழ சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார் என்ற காரணத்திற்காக அவரைக் கொல்ல அவள் வெறி கொண்டு அலைகிறாள். இது வைணவர்களுக்கே தெரியாது.

வைணவர்களும் இதே காரணத்திற்காக இராசாதி ராசரைக் கொல்லத் துடிக்கிறார்கள். சோழ பூபதி இராசாதிராசர் திருமலையில் உள்ள கோவிந்தராசரைக் கொண்டுபோய் மீண்டும் கடலில் எறியப்போகிறார் என்ற வதந்தி வைணவர்கள் மத்தியில் பரவி விட்டது. அதன் விளைவே இது. மன்னர்மீது இப்பொழுது முன்னும் பின்னும் வேல்கள் குறிவைக்கப்பட்டு உள்ளன.

இதுவரை மரணத்தை எதிர்பார்த்து ஏங்கிய மன்னர் இப்பொழுது வாழத் துடிக்கிறார். ஏன்? கோவிந்தராசனைத்

தில்லையில் கொண்டுபோய் சேர்க்கும் சாதனையைப் புரிந்து காட்ட!

மன்னரைக் கொலை செய்ய மற்றவர்கள் முயற்சி செய்யக் காரணம் கோவிந்தராசன் மீது அவர்கள் கொண்ட பற்று. மன்னர் உயிர் வாழ விரும்பக் காரணம் அதே பற்றுதான். கீதையில் கண்ணன் சொல்லுவார், 'கொலை செய்பவனும் நானே! கொலை செய்யப் படுபவனும் நானே' என்று! இந்தவார்த்தை அப்பொழுது மன்னருடைய நினைவில் வந்தது.

பொழுது விடியும் நேரம் மாடுகள் தில்லையின் எல்லையை வந்து சேர்ந்தன. இராசாதிராசர் மாட்டு மந்தையை விட்டுப் பிரிந்துவிட்டார். தாம் மட்டும் தனியாக தில்லையின் எல்லைக்குள் அடி எடுத்து வைத்தார். உலகத்தில் உள்ள எல்லா அழகையும் ஒருங்கே கொழித்து வைக்கப்பட்டு இருக்கும் நகரம் தில்லைமா நகரம் என்கிறார் சேக்கிழார் பெருமான். அத்தகைய எழில்மிகு நகரின் எல்லைக்குள் அதிகாலையில் கால் எடுத்து வைத்தார் அந்நாட்டின் மண்டலாதிபதி.

எல்லையில் மறைகளாலும், இயம்பரு மாநகரின் தெருவிலே மன்னர் பக்திபரவசத்தோடு நடந்தார். அப்பொழுது தில்லைத் தெருக்களிலே மறை ஒலி கேட்டது. நடன அரங்குகளிலே நங்கையர்கள் நடனமாடும் சிலம்பொலி கேட்டது; அத்தெருவில் பக்திபரவசத்தோடு நடந்துக்கொண்டு இருந்த எழில் மங்கையரின் கூந்தலில் சூடியிருந்த மணமிக்க நறுமலர்களிலே வண்டுகளின் பண் கேட்டது. ததும்பும் அன்பிலே நீர்வாறுங் கண்களை உடைய அடியார்கள் கூத்தப் பெருமானை வாழ்த்திக் கொண்டே நடந்தார்கள். அவர்களுடன் மன்னரும் நடந்தார்.

உலகெல்லாம் உணர்ந்து ஓதுதற்கரியவனான கூத்தப் பெருமான் கோயிலில் கோபுரங்களைப் பார்த்து காதலாகி கசிந்த கண்ணீர் மல்கிய வண்ணம் மாமன்னர் நடந்தார்.

அந்நேரத்திலே அவர் தம்முடைய பதவியை மறந்தார். மனதை வாட்டிய கவலைகளை மறந்தார். என்றுமே காணாத இன்பத்தைக் கண்டார். தெளிந்த உள்ளத்துடன், நிறைந்த பக்தியுடன் அனைத்து பற்றுகளையும் விட்டு பற்றற்றான் பற்றினை மட்டுமே பற்றிய பக்தனைப்போல ஆகிவிட்டார்.

தில்லையில் கோயில் கொண்ட அலகில் சோதியனுடைய திருவாயிலுக்குள் அவர் நுழைந்து விட்டார். ஊணும், உயிரும்

அன்பிலே கரைந்து உருக, உச்சியின்மீது குவித்த கரங்களோடு திருக்கோவிலுக்குள்ளே புகுந்தார். பேரன்பிலே மெய் சிலிர்த்தது. இன்பக் கண்ணீர் வடிய விழுந்து வணங்கினார். எழுந்தார்; மீண்டும் மீண்டும் விழுந்து வணங்கினார்.

வளங்கொண்டு திருமறையின் முதலிலும், நடுவிலும், முடிவிலும் அன்பருடைய அகண்ட உள்ளத்தே விரிந்த பேரொளியாகிய திருச்சிற்றம்பலத்தின் திருவாயிலில் நுழைந்தார். அஞ்சலியாகக் கூப்பிய கைகள், பொன்னம்பலக் காட்சியிலே ஒன்றுபட்ட கண்கள், பாகாக உருகி பூஜ்யமான உள்ளம் ஆகியவை செயல்பட மறந்தன.

ஐம்பொறி செயல்களையும் கண்களே கொண்டன. நான்கு கரணங்களும் சிந்தையே ஆகின. முக்குணங்களும் சாத்வீகமே யாயின.

'இந்து வாழ் சடையன் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.'

இது தில்லைக் கூத்தனின் தரிசனம் கண்ட ஆளுடை நம்பியின் நிலைமை..... அதே நிலையை அப்பொழுது இராசாதிராசர் அடைந்தார்.

யாருக்கும் பற்றை அருளும் பரமனை, திருமகளுக்கு அருளிய தெய்வத்தை மண்மேல் விழுந்து வணங்கி யாக்கை எடுத்த பயனை அடைந்தார். தமிழ்த் திருமறை பாடித் தொழுதார். கூப்பிய கரத்தினராய், மூடிய கண்களில் நீர் தாரை, தாரையாக வடிய, வாய் பெரிய புராணத்தைப் பாடியது,

'ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாயுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய், ஆணுமாகிப்
போதியா நிற்கும்தில்லை பொதுநடம் போற்றி! போற்றி!

ஒரு காலத்தில் தாருகா வனத்தில் பல ரிஷிகள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தவசீலர்கள். ஆனால் அவர்களுக்கு திடீரென அகம்பாவம் தலைக்கு ஏறிவிட்டது. தங்களுக்கு சிவபெருமானும் நிகர் இல்லை என்று கருதினார்கள். அவர்களின் செருக்கை அடக்கித் தடுத்து ஆட்கொள்ளச் சிவபெருமான் கருதினார். அவ்வனத்திற்குச் சென்றார்.

ரிஷிகள் தங்களுடையயாக வலிமையால் இறைவன் மீது ஒரு புலியை ஏவினார்கள். பெருமான் தம்மீது பாய்ந்த புலியைக் கொன்று அதன் தோலை உறித்தார். அந்தத் தோலை தம்முடைய மேனியின் மீது போர்த்திக் கொண்டார். அடுத்து ரிஷிகள் பாம்பை ஏவினார்கள். பெருமான் அதனைப் பிடித்து கழுத்தில் மாலையாக அணிந்து கொண்டார். அதன் பின்னர் ரிஷிகளின் ஆணவம் அடங்க நர்த்தனம் ஆடினார்.

பதஞ்சலி முனிவர் அதே நர்த்தனத்தை மீண்டும் ஆடிக் காட்ட வேண்டுமென்று இறைவனை இறைஞ்சினார். அன்பருக்கு அருளும் எம்பெருமான் பதஞ்சலி முனிவர் வேண்டுகோளின்படி தில்லைக்கு வந்தார் தில்லை திருக்கோயிலில் அற்புதத் திருத்தாண்டவம் ஆடினார். அன்று என்ன, இன்றும் அதே நிலையில் ஆடிக்கொண்டே இருக்கிறார். அடியவர்களை மகிழ்வித்துக்கொண்டே இருக்கிறார். அத்தாண்டவத்தைக் காண நயனங்கள் ஆயிரம் வேண்டும் அத்தகைய கண்களைப் பெற்றிருந்த அப்பர் பெருமான், 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே' என்று பரவசப்பட்டுப் பாடுகிறார்.

அந்நேரத்திலே அம்மேலான நிலையை அடைந்த சோழமன்னர், தில்லை சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்து அதனைப் பொன்னம்பலமாக்கிய தம்முடைய மூதாதையான பராந்தக சோழரையும் நினைத்து வணங்கினார்.

அடுத்து அவ்விடத்தை விட்டு அகன்றார். அப்படியே கூப்பிய கரத்தினராய், நடராசப் பெருமான் கோயிலில் ஒரு பகுதியாக இருக்கும் கோவிந்தராசன் சன்னதிக்குச் சென்றார். பள்ளி கொண்டு பக்தருக்கு அருளிய பரந்தாமனான நாராயணமூர்த்தி அங்கு இல்லை. அவர்தான் அன்று குலோத்துங்கனால் கடலில் எறியப்பட்டு, இன்று திருமலையில் பள்ளிக் கொண்டு இருக்கிறார்.

வெறும் கோயிலைக் கண்ட மன்னர் திடுக்கிட்டார். அவருடைய உள்ளம் பதறியது. ஐயன் பள்ளி கொண்டு இருந்த பாற்கடலைப் போன்ற அப்புனித பூமியைக் கரங்களால் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டார். 'தில்லைமாலே, மணிவண்ணா, கோவிந்தா, கோபால கிருஷ்ணா..' என்று அவனுடைய ஆயிரம் நாமங்களை ஓதியவண்ணம் மரம்போல விழுந்தார். திருமால் பாதம் பட்டிருந்த இடத்தில் தலையைப் புதைத்துக் கொண்டு கதறி அழுதார்.

'தில்லைத் திருமாலே, சோழகுலப் மாபெரும் பாவம் செய்துவிட்டது. அந்தப் பாவத்திற்குப் பரிகாரமாக என்னையே பலியிட்டுக் கொள்கிறேன். ஆனால் சோழகுலத்தைக் காப்பாற்று ஐயனே! சோனாட்டைக் கைவிடாதே மெய்யனே!' இவ்வார்த்தைகளைச் சொல்லிச் சொல்லி அழுதார்.

வெகுநேரத்திற்குப் பின்னர் எழுந்து நின்றார். ஒருவாறு மனத்தின் பாரம் இறங்கிவிட்டதைப் போல தென்பட்டது. சற்று தெளிவு பிறந்தது. கோயிலை விட்டு வெளியே வந்தார். தில்லையம்பதியில் ஒரு புரவியைப் பெற்றுக் கொண்டு அதன் மீது அமர்ந்து தட்டி விட்டார்.

33

வெற்றி தந்த வேதனை

சோழமண்டலாதிபதி இராசாதிராசன் புரவியில் அமர்ந்தவாறு தேனார் பூஞ்சோலை திருவேங்கடத்தை நோக்கிப் பறந்தார். அவருடைய மனத்தில் இருந்த கனம் குறைந்து விட்டது. மனம் தெளிவு பெற்று இலேசாக இருந்தது உண்மைதான். ஆனால் பலவீனப்பட்ட உடலில் நிலை உள்ளத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்க இயலவில்லை. புரவியின் மீது அமர்ந்து தொடர்ந்து பயணம் செய்ய அவரால் இயலவில்லை. பெருமூச்சு வாக்கியவாறு பயணம் செய்தார். ஆங்காங்கு புரவியை விட்டுக் கீழே இறங்கி ஓய்வு பெற வேண்டி வந்தது.

எனவே, அவர் தில்லையம்பதியை விட்டு திருவேங்கடம் போய்ச் சேர ஐந்து நாட்கள் ஆகிவிட்டன. புரவியை சப்தகிரியின் அடிவாரத்திலேயே விட்டுவிட்டார் கால்நடையாகவே வேங்கடகிரியின்மீது ஏறினார். அடிக்கடி நெஞ்சு வலித்தது. மூச்சு வாங்கியது. ஆயினும் உடல் உபாதையைப் பொருட்படுத்தாது மேலே நடந்தார். ஒரே நாளில் மலை ஏற இயலவில்லை. வழியில் இரவு தங்கினார். அடுத்த நாள் அதிகாலை திருமலைவாசன் திருக்கோயிலைச் சென்றடைந்தார்.

'கோவிந்தா, சீனிவாசா, நமோ நாராயணா என அவருடைய நாமங்களை உச்சரித்தபடியே உலகளந்த பெருமானான வெங்கடாசலபதியை வணங்கினார். அண்டசராசரங்களை ஆட்டுவிக்கும் திருமலைவாசன் முன்னர் சோழநாட்டை ஆளுபவர் கூப்பிய கரத்தினராய், கண்ணீர் சிந்தும் கண்ணினராய் நின்றார். பெரிய திருமுடியின் பாசுரம் ஒன்று உள்ளம் உருகப் பாடினார்.

'பார்த்ததற் காயன்று பாரதம் கைசெய்
திட்டு வென்ற பரஞ்சுடர்,
கோத்தங்கு ஆயர்தம் பாடியில் குர
வைபிணைத்த எம் கோவலன்,

ஏத்துவார்தம் மனத்துள்ளான்; இட
வெந்தை மேவிய எம்பிரான்;
தீர்த்த நீர்த்தடஞ் சோலை சூழ்திரு
வேங்கடம் அடை நெஞ்சமே!

பின்னர் கர்பக்கிருகத்திற்கு உள்ளே சென்றார். அந் நேரத்தில் அங்கு ஒரே அர்ச்சகர்தான் இருந்தார். அவரும் அப்பொழுது வெளியே சென்றுவிட்டார். மன்னர் கர்பக் கிருகத்திற்குள் புகுந்ததை யாரும் கவனிக்கவில்லை. அவர் மேலும் உள்ளே நடந்தார். பகல் நேரம் ஆயினும் உள்ளே இருள் மண்டிக் கிடந்தது. அந்த இருண்ட மண்டபத்தில் ஒரு மூலையில் ஒரு செப்புப் பாவை விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. மினுக் மினுக் என ஒளி வீசிக் கொண்டிருந்த அவ்விளக்கை அவர் நெருங்கினார். அங்கு ஒளிவடிவாய் கரியபெருமாள் கோவிந்தராசன் பள்ளி கொண்டு இருப்பதைக் கண்டார்.

பெருமாளைப் பார்த்த மன்னருடைய நெஞ்சு திடுக் கிட்டது. அவருடைய குடல் அப்படியே நெஞ்சுக்கு வந்து விட்டது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. உடல் நடுங்கியது. உள்ளம் துடித்தது. 'கோவிந்தராசப் பெருமானே' என்று கதறிய வண்ணம் அடி வெட்டப்பட்ட மரம்போல தரையில் சாய்ந்தார். தரையில் விழுந்த நிலையிலேயே கரங்களை நீட்டி ஐயனுடைய பாதங்களைப் பற்றிக் கொண்டு அழுதார். உணர்வைக் கட்டுப்படுத்த முடியாமல் தேம்பித் தேம்பி அழுதார்.

'தில்லைத் திருமாலே, கோவிந்தராசா! சோழகுலம் செய்த பாவத்திற்காகப் பொறுத்தருள் ஐயனே! என்னை உனக்கு ஆகுதியாக அர்ப்பணிக்கிறேன். சோழ குலத்தை தண்டிக்காதே! என்னுடைய முன்னோன் செய்த பாவத்தை நான் துடைக்கிறேன். நான் இன்று போகிறேன். மீண்டும் வைணவப் பெரியார்கள் உடன்வர, பழையாறையிலிருந்து திருப்பதிக்கு வருவேன். ஊர் அறிய, உலகு அறிய உம்மை இரதத்தில் ஏற்றுவேன். இரதக் கயிற்றை சிறியவனாகிய நான் பற்றிக் கொண்டு அதனை இழுத்துச் செல்வேன். உலா தில்லையைச் சென்று அடையும் வரை எத்தனை நாட்கள் இதற்குப் பிடித்தாலும் பிடிக்கட்டும். தில்லைக்குச் சென்றடைந்த பின்னர் உம்மை, மீண்டும் அதே இடத்தில் பிரதிஷ்டை செய்வேன். ஆம், இது சத்தியம்!

'இறைவா இந்த ஏழை உம்மிடம் யாசகமாக வேண்டுவது ஒன்றே ஒன்றுதான். இப் புண்ணிய காரியம் செய்யும்வரை என்னுடைய உயிரைக் காப்பாற்று. என்னை யாரும் கொல்லாமல் காத்தருள், வைகுந்தவாசா!'

மன்னர் கதறிக் கொண்டே மனதில் இருந்ததைக் கூறினார். தனிமையில் பித்தனைப்போல் அங்கலாய்த்தார். அவருடைய சூடான கண்ணீர் ஆண்டவனின் பாத கமலங்களை கழுவியது.

தில்லை திருமாலைத் தரிசித்தவுடன் மன்னருடைய உள்ளத்தின் கனம் மேலும் குறைந்தது. பாடிப் பறந்து திரியும் வானம்பாடியைப் போல நிறைந்த மனத்துடனும், தெளிந்த அறிவுடனும், புதுத் தெம்பு பெற்று அடிவாரத்தை நோக்கி இறங்கினார்.

அடிவாரத்திலிருந்து புரவியின் மீது உற்சாகத்துடன் தாவி ஏறினார். புரவி நாலுகால் பாய்ச்சலில் பறந்தது.

மன்னர் நேராக சோழநாட்டின் மகோன்னத வைணவ ஸ்தலமான சாரசேத்திரத்தை சென்றடைந்தார். புஷ்கரணியில் குளித்தார். உள்ளமும், உடலும் குளிர்ந்தது, சோர்வு தொலைந்து தெம்பு பிறந்தது, சேத்திரத்திற்குச் சென்று நாராயணமூர்த்தியை வணங்கினார்.

மீண்டும் 'வளர்புலிச் சோழர் காவிரி' என சேக்கிழார் பெருமானால் பாடப்பட்ட சோழருக்கே சொந்தமான காவிரியில் குளித்தார். காவிரி நாட்டுடை தலைவருடைய சோர்ந்த உள்ளம் புதுத் தெம்பு பெற்றது. குவிந்திருந்த அவருடைய உதடுகள் விரிந்தன. ஒரு புன்னகை மலர்ந்தது, 'சோழர்தம் தெய்வக் காவிரி' என்று இளங்கோவடிகளாலும், 'சோழர்தம் குலக்கொடி' என்று சீத்தலை சாத்தனாராலும் போற்றப்பட்ட அன்னை காவிரியின் ஆலிங்கனம் மைந்தன் இராசாதிராச சோழனுக்கு மகிழ்வளித்ததில் வியப்பில்லை அல்லவா!

'அப்பப்பா, பதவி ஆசை என்றது மனிதருக்கு மட்டுமல்ல, தேவர்களுக்கும் உண்டு' என்று மன்னர் மனத்தில் நினைத்தார். ஆம், அந்த சேத்திரத்தில் காவிரி பதவி பெற்ற வரலாறு விநோதமானதுதான்! அதனை நினைத்தே அவர் புன்முறுவல் பூத்தார்.

ஒரு நாள் விந்திய மலையின் அடிவாரத்தில் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவிரி ஆகிய

ஏழு நதிக் கன்னிகைகளும் விளையாடிக்கொண்டு இருந்தார்கள். அப்பொழுது வான மார்க்கத்தில் விஸ்ரவசு என்ற கந்தர்வன் சென்று கொண்டு இருந்தான்.

அந்த கந்தர்வன் நதி தேவியர்களைக் கண்டான். அவன் பணிவோடு கன்னியரை வணங்கிவிட்டு அவன் வழியில் சென்றுவிட்டான். அந்த கந்தர்வன் இக் கன்னியரில் யாரைக் கண்டு வணங்கினான்? இவ்வாறு ஒரு விவாதம் அம்மங்கை யருக்குள் எழுந்தது. விவாதம் காரசாரமாக உருவெடுத்துச் சண்டையாக மாறிவிட்டது. இதற்கு ஒரு முடிவு காண அனைவரும் ஒன்று சேர்ந்து பிரம்மனை வணங்கினார்கள். பிரம்மதேவன், 'ஏழு கன்னியர்களிலும் புனிதமானவள் கங்கையே' என்று தீர்ப்புக் கூறிவிட்டார் அதில் அறுவர் பிரம்ம தேவனுடைய தீர்ப்பை ஏற்றுக் கொண்டு மனநிறைவு பெற்று விட்டார்கள்.

ஆனால் காவிரி அத்தீர்ப்பை ஏற்கவில்லை. மனநிறைவு பெற்றாள் இல்லை. இதற்கு ஒரு முடிவு காணாமல் விட்டேனா பார் என்று மனம் கருவினாள். தவமிருந்து காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடிவு செய்துவிட்டாள்.

இதே சார சேத்திரத்தில் புஷ்கரணியின் கரையில் உள்ள அரச மரத்தடியில் அமர்ந்து தவம் செய்யலானாள். பல ஆண்டுகள் தவமியற்றினாள். ஆதி நாராயணமூர்த்தி அவளுடைய தவத்தைக் கண்டு மனம் இறங்கி விட்டார் அவர் ஒரு மதலையாய் அவதரித்து வந்து காவரித்தாயின் மடியில் தவழ்ந்தார். அந்தக் குழந்தையைக் கண்டு மகிழ்வுற்ற காவிரித்தாய் அதற்கு நாராயணன் என்று பெயரிட்டாள். காவிரியின் விருப்பப்படி இறைவன் கருடவாகனத்தின் மீது அமர்ந்து ஸ்ரீதேவி சமேதராய்க் காட்சி அளித்தார். அந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு காவிரி நாராயணனிடம் மூன்று வரங்களைக் கேட்டுப் பெற்றாள்.

முதலாவது வரம் இறைவன் அந்த சார சேத்திரத்திலேயே நித்திய வாசம் செய்ய வேண்டும் என்பது. இரண்டாவது வரம் அங்கு வாழும் சகல உயிர்களுக்கும் வீடுபேறு அளிக்கவேண்டும் என்பது. மூன்றாவது வரம் தனக்கு கங்கையிலும் மேலான பதவி அளிக்க வேண்டும் என்பது. அன்பர்களுக்கு அருளும் இறைவன் அவள் கேட்ட வரங்களை அளித்துவிட்டார்.

காவிரித்தாய் பெற்ற வரங்களை நிலைநாட்டத் தானோ என்னவோ, 'கங்கையிற் புனிதமான காவிரி' என்று தொண்டர் அடிப்பொடி ஆழ்வார் பாடி அருளினார்!

இராசாதிராச சோழர் சார சேத்திரத்திலிருந்து நேராகப் பழையாறைக்குப் புறப்பட்டார். பழையாறை நகரை வந்து அடைவதற்குள் அவருடைய உடலும், உள்ளமும் மீண்டும் சோர்ந்து விட்டன. பழையாறைக்கு வந்தவுடனேயே பழைய குழப்பங்கள் மனத்தைக் கவ்விக் கொண்டன. ஆண்டவனுடைய சன்னதியில் இருந்தபோது உள்ளம் தெளிவாக இருந்தது. ஆனால் பழையாறைக்கு வந்தவுடன் மனக்குரங்கு பழைய கிளையின்மீது மீண்டும் தாவிவிட்டது. மறைந்திருந்த கோதை மீண்டும் அவருடைய இதயத்திற்குள் புகுந்து கொண்டாள். அவருடைய நெஞ்சத்தைப் பிடித்து அழுத்தினாள். குரல்வளையைப் பிடித்து நெறித்தாள்.

இதற்கிடையே பாண்டி நாட்டில் நடைபெறும் போர் எந்த நிலையில் இருக்கிறதோ என்ற ஏக்கம் வேறு அவருடைய மனத்தில் புகுந்து கொண்டது. போருக்கு எனப் புறப்பட்டுப் பாதி தூரத்தில் திரும்பி வந்து விட்டதற்காக அவர் தம்மையே கடிந்து கொண்டார். அவமான உணர்வு அவரை உலுக்கியது. மீண்டும் போர் முனைக்குப் போகலாமா என்று சிந்தித்தார். அதற்கும் உடல் நலமில்லை. மனதும் ஒத்துழைக்கவில்லை.

பழையாறையில் இருக்கவே அவருக்குப் பிடிக்கவில்லை. உற்ற நண்பர்களான வேதவனமும், சீவல்லபனும் உடன் இல்லை. அவர்களில் யாராவது ஒருவர் உடன் இருந்தாலும் போதும், அவருடைய உள்ளம் சற்று சாந்தி பெறும். ஆனால் இருவருமே இல்லை. தனிமை அவரைக் கொன்றது. சோழநாடு, ஆயிரம் தளி அரண்மனை, அதில் உள்ள பொருட்கள் அத்தனைக்கும் உரிமையானவர்தான் அவர். ஆனால் அவர் அவ்விடத்திற்கு ஏதோ அந்நியரைப் போல தன்னைப் பாவித்துக் கொண்டார்.

பழையாறை நகரிலிருந்து ஏராளமானவர்கள் போருக்குப் போய்விட்டதால் அந்நகரமே உயிர் அற்றுக் கிடந்தது. அங்கு மனிதர்களைக் காண்பதே அரிதாக இருந்தது.

நாள் ஆக ஆக, மன்னர் படுத்த படுக்கையாகி விட்டார். யாரையும் பார்ப்பதில்லை. முக்கியமான அரசியல் காரியம் பற்றிப்

பேச வேண்டிய தேவைகள் இருப்பின் மட்டுமே அமைச்சர் களையும் மற்றவர்களையும் சந்தித்தார்.

வேளாவேளையில் உணவு உண்ணக்கூட மறந்து விட்டார். மன்னருக்கு உடல்நலம் இல்லை என்ற செய்தி அரண்மனை முழுதும் பரவிவிட்டது. அரச மருத்துவர்கள் அவருக்கு சிகிட்சை செய்ய முனைந்தார்கள். ஆனால், அவர் தமக்கு ஒரு கேடும் இல்லை எனக் கூறிவிட்டார். சிகிட்சை செய்து கொள்ள மறுத்து விட்டார். வற்புறுத்திய போதிலும் உணவு உண்ண மறுத்து விட்டார். வழக்கத்திற்கு மாறாக மற்றவர்கள்மீது எறிந்து விழுந்தார்.

ஒருநாள் இரவு முதல் யாமம் நடக்கிறது. அந்த யாமம் முடியும் வரை அவர் அரண்மனையின் மேல் முற்றத்தில் மஞ்சத்தில் சாய்ந்தவாறு படுத்திருந்தார். பல நாட்கள் விழித்திருந்த அவருடைய கண்கள் உறக்கத்தை யாசித்தன. ஆனால், மனது கண்களுக்கு உதவி செய்ய மறத்துவிட்டது.

அந்த எழில்மிகு சயன அறையிலே ஒரே ஒரு வெண்கலப் பாவை விளக்கு மட்டுமே எரிந்து கொண்டு இருந்தது. அதன் இரண்டு பக்கங்களிலும் இரு செப்பு யானைச் சிலைகள் நின்று கொண்டு இருந்தன. அவைகளுடைய துதிக்கைகள் தூக்கியபடி இருந்தன. துதிக்கைகளின் நுனியில் யானை தூக்கிப் பிடிப்பது போன்று தங்கக் கலசங்கள் பொருத்தப்பட்டு இருந்தன. அந்தக் கலசங்களில் இருந்து நறுமணப் புகை வெளிப்பட்டுக் கொண்டு இருந்தது. அறை முழுதும் கம கம என மணம் வீசியது. மன்னர் மனது இவற்றில் எல்லாம் ஈடுபடவில்லை.

அவருக்கு திடீரென ஏதோ ஒரு நினைவு வந்தது. இருவர் பெயர்களைக் கூறி அழைத்து வருமாறு காவலனை ஏவினார். ஒரு நாழிகை நேரத்தில் அரசர் எதிர் பார்த்தவர்கள் வந்தார்கள். அவர் மஞ்சத்தில் சாய்ந்தபடியே தலையைத் தூக்கியவாறு வந்தவர்களிடம் பேசினார். மெலிந்திருந்த அவர் பலவீனத்தால் மெதுவாகப் பேசினார். மூச்சு வாங்கிக் கொண்டே நீண்ட நேரம் பேசினார்.

அவர்களுடைய பேச்சில், 'தில்லை கோவிந்தராசன்.' 'திருமலை' என்று வார்த்தைகள் அடிபட்டன பின்னர் அவ்விருவரும் புறப்பட எழுந்தார்கள். மன்னரை வணங்கி விடை பெற்று வாயிற்படியைத் தாண்டினார்கள்.

அவர்கள் எதிரில் வருவதையும் கவனியாது பரபரப்போடு வந்த ஒரு படைத்தலைவன் அவர்கள் மீது மோதிக் கொண்டான். அவனுடைய முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. அவன் வேகமாக அரசர் இருக்கும் இடத்திற்கு ஓடிவந்தான். அவருடைய அனுமதியை எதிர்பாராது தானே உற்சாகத்தோடு பேசத் தொடங்கினான். அவன் அளவுகடந்த மகிழ்ச்சியோடு இருந்ததால் வார்த்தைகள் நாவிலிருந்து எளிதில் வெளிவரவில்லை. அரசருடைய மனநிலையையும் உடல் நிலையையும் மறந்து அவன் உரக்கப் பேசினான்.

'வாழ்க! சோனாடு வாழ்க! சோனாட்டு மன்னர் வாழ்க! அரசே, மகிழ்வான செய்தி; மகத்தான வெற்றி.' அவன் பலமாகக் கத்தினான். ஆனந்தப் பெருக்கால் அவனால் பேச இயலவில்லை. மன்னர் அவனை உற்றுப் பார்த்தார். அவருடைய முகத்தில் கேள்விக்குறி படர்ந்திருந்தது. படைத் தலைவன் மேலும் கூறினான்:

'அரசே, பாண்டி நாட்டுப் போரில் நாம் மகத்தான வெற்றி வெற்றுவிட்டோம்.'

மன்னருடைய முகத்தில் தென்பட்ட சோர்வு தொலைந்தது. படுக்கையில் சாய்ந்திருந்த அவர் நிமிர்ந்து அமர்ந்தார். மனத்தில் மகிழ்ச்சி பெருக்கெடுக்கப் பேசினார்:

'அப்படியா! மெத்த மகிழ்ச்சி. இவ்வளவு குறுகிய காலத்தில் நம்முடைய படைகள் பாண்டி நாட்டில் வெற்றிக் கொடி நாட்டி விட்டனவா! எதிர்பாராதது. எனக்கே வியப்பாக இருக்கிறது.'

'ஆம், அரசே! வெற்றிவேல்! வீரவேல்!'

'எல்லாம் அந்த வெற்றி தேவதை சோழகுல தெய்வம் துர்க்கா பரமேஸ்வரியின் அருள்!'

'அரசே, அந்தக்கொடியவன் குலசேகரனுடைய படைகள் மட்டுமல்ல, அவனுக்குத் துணையாக கடல் என ஆர்ப்பரித்துக் கொண்டு வந்த ஈழப்படைகளும் நம்மிடம் மண்ணைக் கவ்வி விட்டன.'

'இது மேலும் தித்திக்கும் செய்தி. அந்த துரோகி குலசேகர பாண்டியன்?'

'அவன் போரில் தோற்றம் ஓட்டம் பிடித்து விட்டான். வீரபாண்டியரை மதுரை மன்னராக நமது சேனாபதியார் முடிசூட்டி விட்டார்.'

'என்னுடைய ஆனந்தத்திற்கு அளவே இல்லை. சோர்ந்த என்னுடைய உள்ளத்திற்கு இச்செய்தி புதுத்தெம்பை அளிக்கிறது. தனஞ்சேயா, நீ நல்ல செய்தியைக் கொண்டு வந்தாய். என்னுடைய வயிற்றில் பாலை வார்த்தாய். இந்தத் தித்திக்கும் செய்தியைக் கொண்டு வந்த உன்னைப் பாராட்டுகிறேன். அதற்கு அறிகுறியாக இதோ இந்தப் பரிசைக் கொடுக்கிறேன். அருகில் வா. இந்த முத்து மாலையைப் பெற்றுக் கொள்.'

மன்னர் தம்முடைய கழுத்தில் தொங்கிய முத்து மாலையைக் கழற்றினார். வெற்றிச் செய்தியைக் கொண்டு வந்த படைத் தலைவனிடம் நீட்டினார். அவன் பணிவோடு அதனை வாங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

தனஞ்சேயன் உணர்ச்சி வசப்பட்டு வெற்றி முழக்கங்களை முழங்கிக் கொண்டே அவ்விடத்தைவிட்டு வெளியே ஓடினான். அவனுக்கு ஒரே பரபரப்பு. ஓரிடத்தில் நிலை கொள்ள அவனால் முடியவில்லை. உற்சாகத்தினால் மன்னர் அனுமதியைக் கூடப் பெறாமல் அவ்விடத்தை விட்டு ஓடினான் மற்றவருக்கு அச்செய்தியைச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் அவனை வெளியே துரத்தியது.

மன்னர் தம்முடைய கவலைகளை எல்லாம் மறந்து நிறைந்த மனத்துடன் இருந்தார். வெற்றிப் படைகள் எப்பொழுது வந்துசேரும் என்று பரபரப்பு அடைந்தார். சீவல்லபனையும், வேதவனத்தையும் அப்படியே கட்டித் தழுவிக் கொண்டு அவர்கள் புரிந்த மகத்தான சாதனைகளுக்காகப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும் எனத் துடித்தார். அவருடைய மனது நிலைகொள்ள வில்லை. சோழப் பேரரசின் மகோன்னத நிலை அவருடைய கண்களுக்கு எதிரில் பளிச்சிட்டது, விஜயாலய சோழரும், இராசராச சோழரும், இராஜேந்திர சோழரும், ஆகாய மார்க்கத்திலிருந்து தம்மை ஆசீர்வதிப்பது போல உணர்வுபெற்று மகிழ்வடைந்தார்.

அப்பொழுது மீண்டும் ஒரு படைத் தலைவன் அங்கு பரபரப்புடன் வந்தான். அவன் அரசரை நெருங்கி வந்து கூறினான்.

'அரசே, நம்முடைய வெற்றிப் படைகள் காவிரி நதியின் புதுவெள்ளம் போல பெருத்த முழக்கம் செய்தவாறு வந்து கொண்டு இருக்கின்றன. தலைநகருக்கு இருகாத தூரத்தில் வருகின்றன. நாவலோ நாவல்! வெற்றி வேல்! வீரவேல்!'

அரசர் படுக்கையை விட்டு எழுந்து நின்றார். நகர எல்லைக்கே ஓடி வெற்றிப் படைகளை வரவேற்கத் துடித்தார். ஆனால் உடல்நிலை உணர்ச்சிகளுடன் ஒத்துழைக்க வில்லை. எனவே மீண்டும் அதே மஞ்சத்தின் மீது அமர்ந்து விட்டார்.

வெற்றிப்படைகள் தலைநகருக்குள் நுழைந்து விட்டன. ஆரியப் படைவீடு, பம்பைப் படைவீடு, புதுப் படைவீடு, மணப் படைவீடு ஆகிய வீரர்கள் வாழும் பகுதிகளை வெற்றி ஊர்வலம் கடந்து கொண்டு இருந்தது. அப்பொழுது ஆங்காங்கு படை வீரர்களின் காதலிகள் தங்கள் நாயகன்மார்கள் வருகிறார்களா என்று ஆர்வத்தோடு படைகளை உற்றுப் பார்த்தார்கள். அவர்களுடைய வதனங்களைக் கவலைகள் கவ்விக் கொண்டு இருந்தன. சிலர் தங்களுடைய காதலர்களை அடையாளம் கண்டு கொண்டார்கள். ஆனந்தம் மேலிட்டு கூடையில் நிரப்பி வைத்திருந்த மலர்களை அப்படியே சாளரத்தின் மீதிருந்து அவர்கள்மீது கொட்டினார்கள். சிலர் கொட்டிய மலர்கள் காதலர்களின்மீது பொழிந்தன. அவர்கள் மேலே பார்த்தார்கள். கண்களைக் கண்கள் கவ்வின. அவற்றின் உரிமையாளர்கள் களிப்படைந்தார்கள். ஆனால் சிலர் கொட்டிய மலர்கள் குறிதவறி மற்றவர்களின் மீது போய் பொழிந்தன. அவர்களுடைய காதலர்கள் மீது படவில்லை. இதனால் ஏமாற்றம் அடைந்த காதலிகள் பெருமூச்சு விட்டார்கள்.

இரவு காலமாதலால் படைகளின் ஊர்வலத்தில் பல ஆயிரம் பந்தங்கள் ஒளியைக் கக்கின. ஆனாலும் பல இடங்களில் இருள் கட்டியது. எனவே பல அணங்குகள் தங்களுடைய இணைகளைக் காண இயலவில்லை. ஆதலால் தங்களுடைய நாயகன்மார்களுக்குப் போரில் ஏதாவது ஆகிவிட்டதோ என்று துடித்தார்கள். மனக் கவலையோடு தெருவிற்கு ஓடிவந்து அணிவகுத்துச் செல்லும் படையை நெருங்கினார்கள். தெருவில் ஆங்காங்கு ஓரங்களில் நின்றுகொண்டு இருந்த காவலர்கள் அந்த காதலிகள் படையை நெருங்காமல் துரத்தினார்கள். ஏமாற்றம் அடைந்த அவர்கள் கண்ணீர் விட்டுக் கொண்டே வைத்த விழி

வாங்காது பெருக்கொடுத்து ஓடும் ஊர்வலத்தில் காதலர்களைத் தேடினார்கள்.

இரதப் படையும், யானைப் படையும், குதிரைப் படையும், காலாட் படையும் மெதுவாக பழையாறை நகரத் தெருக்களில் ஊர்ந்தன. இருபுறமும் மக்கள் கடலெனத் திரண்டு நின்றார்கள். எல்லோருடைய உள்ளங்களும் மகிழ்ச்சியால் பூத்து குலுங்கின. தங்களை மறந்து வாழ்த்தொலிகளை எழுப்பியவாறு இருந்தார்கள். மலர்களைப் படை வீரர்கள் மீது தூவினார்கள். ஆங்காங்கு ஓரங்களில் உயரமான மேடைகள் அமைக்கப்பட்டு இருந்தன. அவைகளின் மீது அப்பகுதிப் பிரமுகர்கள் நின்று கொண்டு ஊர்வலத்தைக் கண்டு களித்தார்கள். கூடைகளில் மலர்களை வாரி வாரிப் படைகளின் மீது கொட்டி மகிழ்ந்தார்கள்.

அணிவகுப்பின் முன்வரிசையில் சேனாபதி வேதவன முடையாரும், ஈழநாட்டு எதிர்கால மன்னன் சீவல்லபனும் இரு யானைகளின் மீது கம்பீரமாக அமர்ந்து வந்தார்கள் சீவல்லபனுடைய யானையின் மீது அவனுக்குப் பின்புறம் இளம் தோழன் மகீதரனும் அமர்ந்து வந்தான். அந்த இளம் வயதுப் பிள்ளை பாண்டி நாட்டுப் போரில் காட்டிய வீரதீரச் செயல்கள் உள்ளதே, அவற்றிற்கு உவமை சொல்ல வேண்டுமானால் அபிமன்யுவின் வீரச் செயல்களுக்கு ஒப்பிடலாம். இந்திரசித்தன் ஆற்றலுக்கும் மேலானவை அவை. இவ்வாறு பலமுறை அவனை சேனாபதி புகழ்ந்து பாராட்டி விட்டார். வீராதி வீரர்களான அபிமன்யுவும், இந்திரசித்தும் என்னதான் வீர சாகசங்களைப் போரில் புரிந்திருந்தாலும் இறுதியிலும் வீரமரணம் அடைந்தார்கள். ஆனால் நம்முடைய மகீதரன் போரில் எதிரிகளைக் கொன்று குவித்துவிட்டு வெற்றி வீரனாக வலம் வந்துகொண்டு இருக்கிறான்!

சீவல்லபன் ஈழத்தில் மகீதரன் என்ற முத்தைக் கண்டு எடுத்தான். அது சோழநாடு செய்த தவத்தின் பயனே என்று சேனாபதி நம்பினார். உண்மையில் அந்த இளைஞன் மட்டும் இல்லாதிருப்பின் பாண்டி நாட்டுப் போர் அவ்வளவு எளிதில் முடிந்திருக்காது. போரிலே அவன் பகைவர்களுடைய வியூகத்தைப் பிளந்துக் கொண்டு தன்னந் தனியாகப் பிரவேசித்தான். பல நூறு

பேர்களைக்கொன்று குவித்தான். அவன் வாள் வீசிய இடத்தி லெல்லாம் இரத்த ஆறுகள் ஓடின. அவன் கண்பட்ட இடத்தில் எல்லாம் வெற்றி மாதா புன்னகை பூத்து நின்றாள். உண்மையில் பாண்டிநாட்டுப் போரின் வெற்றி மகீதரனுடைய வெற்றியே!

எவ்வளவுதான் வீராதிவீரனாக இருந்தாலும் மகீதரன் இன்னும் ஒரு குழந்தையைப் போலத்தான் நடந்து கொண்டான். அவன் வெகு உற்சாகத்தோடு சீவல்லபனுடைய யானையின் மீதே தொற்றிக்கொண்டு சென்றான். மக்களுடைய மகிழ்ச்சியையும் ஆட்டத்தையும் பாட்டையும் வேடிக்கை பார்த்துக்கொண்டே சென்றான். சாளரங்களில் இருந்து கொட்டப்பட்ட மலர்கள் அவன் மீது விழுந்துபோது அவனுடைய உற்சாகம் உச்சியை எட்டி விட்டது. அவனும் உற்சாகம் மேலிட்டு வாழ்த்தொலிகள் எழுப்பினான். என்ன இருந்தாலும் அவன் விளையாட்டுப் பிள்ளைதானே! சீவல்லபனைப் போலவும், வேதவனத்தைப் போலவும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள அவனால் இயலவில்லை.

ஆங்காங்கு அரம்பையர் தங்களுடைய வீட்டு வாயிற்படிகளில் நின்றவாறே படைகளுக்கு ஆரத்தி எடுத்தார்கள். சூரைத் தேங்காய்களை வீசி அடித்தார்கள். அவற்றை யானைகள் உற்சாகத்தோடு துதிக்கையால் எடுத்து வாய்களில் துருத்திக் கொண்டன.

மக்கள் வேடிக்கை பார்ப்பதோடு நின்றுவிடவில்லை. படைகளைத் தொடர்ந்து நடை போட்டார்கள். அவர்கள் போட்ட வெற்றி முழக்க ஒலிகள் கடல் இரைச்சலைப் போல ஆயிரம்தளி அரண்மனையின் மேல் மாடியில் இருந்த மன்னருடைய செவிகளில் ஒலித்தன. நகருக்குள் கடல் புகுந்துவிட்டதோ என்று எண்ணும்படி பெரும் கூட்டம் நடை போட்டது. முன்னேறியது.

சோழ மாளிகையை நெருங்க, நெருங்க அனைவரின் உற்சாகமும் எல்லையைக் கடந்துவிட்டது. மாளிகையின் உள்ளே மன்னர் இருக்கிறார் என்ற செய்தியை அறியவே, படைகளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. படைகளுக்கு மட்டுமென்ன, என்றுமே உணர்ச்சி வசப்படாத சேனாபதி வேதவனமுடையாருக்குத் திடீரென உற்சாகம் பிறந்துவிட்டது. தம்மை மறந்துவிட்டார். தம்முடைய பதவியை மறந்துவிட்டார். யானை மீது இருந்த வண்ணம் ஒரு போர்வீரனைப் போல கரங்களை உயர்த்தி ஒலி எழுப்பினார்:

'மதுரையும், ஈழமும் கொண்ட திரிபுவன சக்ரவர்த்தி!'

'வாழ்க!'

'கோ இராசகேசரிவர்மன்!'

'வாழ்க.'

சேனாபதியின் உற்சாகம் சீவல்லபனையும் தொற்றிக் கொண்டது. அவனும் உணர்ச்சி வசப்பட்டுவிட்டான் சேனாபதியின் குரலையும் தோற்கடிக்கும் வகையில் இடி முழக்கம் செய்தான்.

'கரிகால சோழன் இராசாதிராசன்!'

'வாழ்க.'

அன்று சேனாபதி வேதமுடையான் விளித்த மதுரையும், ஈழமும் கொண்ட திரிபுவன சக்ரவர்த்தி என்ற பெயரும், கோஇராசகேசரி வர்மன் என்ற பெயரும் வரலாற்றில் இராசாதிராச சோழருடைய பட்டப் பெயர்களாக இடம் பெற்று விட்டன. சீவல்லபன் விளித்த கரிகால சோழன் என்ற பெயர் இராசாதிராச சோழருடைய வரலாற்றில் சிறப்புப் பெயராக நிலைத்து விட்டது. அந் நேரத்தில் அந்த வாழ்த்தொலிகளை எழுப்பியதின் மூலம் அவ்விரு அடலேறுகளும் வரலாற்றைப் படைத்து விட்டார்கள்.

வெற்றி ஊர்வலம் சோழ மாளிகையை நெருங்கி விட்டது. அரண்மனைக் காவலர்கள் அனைவரும் அங்கு மன்னர் இருக்கிறார் என்பதையே மறந்து விட்டார்கள். தங்களுடைய கடமைகளை மறந்து விட்டார்கள். உற்சாகம் மேலிட்டதால் ஊர்வலத்தைப் பார்க்க தெருவிற்கே ஓடிவிட்டார்கள்.

சோழ மாளிகையின் மேல் முற்றத்தில் படுத்திருந்த சோழ மண்டலாதிபதியை கவனிக்கும் காவலர்களையும் உற்சாகம் என்ற தொற்றுநோய் பிடித்துக் கொண்டது. அவர்கள் மாளிகையின் மேல் முற்றத்து ஓரங்களில் இருந்த பலகணிகளை அடைத்துக் கொண்டு ஊர்வலத்தைப் பார்த்தார்கள். உற்சாகம் மேலிட்டு அங்கிருந்தே வாழ்த்தொலிகளை எழுப்பத் துவங்கினார்கள். மற்றவர்கள் ஒலி எழுப்பும்போது அவர்களால் வாளாவிருக்க இயலவில்லை. 'நாவலோ நாவல்' என்று கத்தினார்கள்.

சோழ மண்டலாதிபதி மட்டும் இதற்கு விதி விலக்காக இருக்கமுடியுமா? அவரும் எழுந்தார். ஊர்வலத்தைக் காண மனம்

துடித்தது. மெதுவாக நடந்து அண்மையில் இருந்த பலகணியின் அருகே சென்றார். காவிரியின் புதுவெள்ளம் போல பெருக்கெடுத்து ஓடும் ஊர்வலத்தைக் காவிரிநாடன் கண்டார்.

இன்பத்தின் மறுபக்கம் துன்பம் என்பார்கள் ஆன்றோர்கள். அந்த முதுமொழி சோழமன்னரைப் பொறுத்து உண்மையாயிற்று. விதி கோரமாக விளையாடி விட்டது. நடக்கக் கூடாத கொடுமை நடந்துவிட்டது.

அந்தோ, அந்நேரத்தில் ஒரு குறுவாள் அரசரை நோக்கிப் பாய்ந்து வந்தது. அவருடைய பின்புறம் இருந்து பாய்ந்து வந்த அந்த வாள் சோழநாடு தவம் இருந்து பெற்றெடுத்த சத்தியசீலன், ஈ எறும்பிற்கும் தீமை நினையாத அந்தப் பேராளன் முதுகில் வேகமாக வந்து பாய்ந்துவிட்டது. தர்மத்தின் தனிமை தீர்ப்பான் தரையில் சாய்ந்துவிட்டார்!

அண்டி வந்தவர்களுக்கெல்லாம் நிழல் அளித்த அந்த ஆலமரம் வேரோடு பெயர்ந்து சடசடவென தரைமீது சாய்ந்து விட்டது.

34

ஆ, கோதை நீயா?

மண் உயிர் எல்லாம் தன் உயிரைப்போல ஓம்பிக் காத்த சோழ மண்டலாதிபதி இராசாதிராசன் அம்புபட்ட மானைப் போல தீனமான ஒலி எழுப்பியவாறு தரையின் மீது சாய்ந்து விட்டார். அவர் எழுப்பிய அந்த சோகக் குரல் மாளிகையின் மேல் முற்றம் எங்கும் எதிரொலித்தது. பலகணியின் வழியாக வெற்றிவிழா ஊர்வலம் பார்த்துக் கொண்டு இருந்த ஏவலாளர்களின் செவிகளில் விழுந்தது. பணிப் பெண்கள் பதறிக்கொண்டு திரும்பினார்கள். திடுக்கிட்டுப் பின்னால் பார்த்தார்கள். அப்பொழுது அவர்கள் கண்ட தோற்றம்! நிலைகுலைந்து பதுமைகள் என நின்று விட்டார்கள்.

சோழ மன்னர் தரையின் மீது குப்புற விழுந்து கிடக்கிறார். ஒரு குறுவாள் அவருடைய முதுகில் குத்திக் கொண்டு நிற்கிறது. வாள் பாய்ந்து இடத்திலிருந்து குருதி குபு, குபு என்று கொட்டுகிறது. அக்குருதி அவருடைய உடலை நனைத்துக் கொண்டு கீழே வந்து தரையில் ஓடுகிறது. இத்தோற்றத்தைக் கண்டவர்கள் அனைவரும் ஒரு நொடி நேரம் உணர்வு இழந்து மரமாக நின்று விட்டார்கள்.

சற்று நேரத்தில் உணர்வு பெற்ற பணிப் பெண்களும், காவலர்களும் 'ஐயோ, அரசே' என அலறினார்கள். அவரை நோக்கி விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள். பின்னர் அவரை மெதுவாகத் தூக்கினார்கள். சற்று முன்னர் வீற்றிருந்த சயன மஞ்சத்திற்குக் கொண்டு போய்ப் படுக்க வைத்தார்கள். இச்செய்தி அடுத்த நொடியிலேயே காட்டுத் தீ போல அரண்மணை எங்கும் பரவி விட்டது.

அரண்மனையிலிருந்த அத்தனை பேரும் அங்கு ஓடி வந்தார்கள். 'ஐயோ எங்களுடைய மன்னா, மன்னா' என்று பணிப் பெண்கள் அழுது புலம்பத் தொடங்கி விட்டார்கள். படுக்கையில் குப்புறப் படுக்க வைக்கப் பட்டிருந்த அவருடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு அலறினார்கள். காவலர்கள் அப்பெண்களை

அப்பால் இழுத்துவிட்டார்கள். அழுகைக் குரல் கேட்டு மேலும் பலர் உள்ளே விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

மன்னர் குத்தப்பட்ட செய்தி அரண்மனை மருத்துவர் களுக்குச் சொல்லி அனுப்பப்பட்டது. மருத்துவர்களுடைய இல்லங்கள் அரண்மனையை ஒட்டி அருகிலேயே இருந்தன. அன்று மாலைதான் மருத்துவக் குழுவினர் மன்னர் உடல் நிலையைப் பரிசோதித்தார்கள். அவர் பலவீனமாக இருக்கிறார் என்பதைத் தவிர, அவருக்கு எந்தவிதமான வியாதியும் இல்லை என்று கூறிவிட்டுச் சென்றிருந்தார்கள். அவருடைய உடல்நலக் குறைவிற்குக் காரணம் மனோவியாதி என்பதுதான் மருத்துவர்களின் ஏகோபித்த கருத்தாகும். அவர்கள் சென்ற சிறிது நேரத்தில் மன்னர் குத்தப்பட்டார் என்ற செய்தி அவர்களுக்கு எட்டியது. இதனைக் கேட்டு அவர்கள் அலறினார்கள். ஓடோடி வந்தார்கள். மன்னரைக் கண்ட மருத்துவர்களும் உணர்ச்சி வசப்பட்டார்கள் ஆயினும், அவர்கள் இறைவனை வேண்டியபடியே தங்களுடைய கடமையைச் செய்ய முனைந்தார்கள்.

தலைமை மருத்துவர் அவருடைய முதுகில் ஆழமாகப் பாய்ந்திருந்த குறுவாளை மெதுவாக இழுத்து எடுத்தார். அப்பொழுது அவருடைய வாய் 'ஐயோ' என்று அலறியது. அவர் வலியால் துடித்ததை அவருடைய முகம் எடுத்துக் காட்டியது. அப்பொழுது முதுகுக் காயத்திலிருந்து இரத்தம் மேலும் வேகமாகப் பொங்கியது. தலைமை மருத்துவர் ஏற்கனவே கொண்டு வந்து இருந்த பச்சிலையை இரு கரங்களும் சேர்த்து நன்றாகக் கசக்கினார். அதன் சாற்றை காயத்தின் மீது பிழிந்தார். பின்னர், அதன் மீது ஏதோ மருந்தை வைத்தார். ஒரு துணியை வைத்துக் கட்டினார் வேறு ஒரு பச்சிலையைக் கசக்கி மன்னருடைய நாசியருகில் நீட்டி அதனை அவர் முகரச் செய்தார்.

இதற்குள் இச்செய்தி ஊர்வலத்திற்கு எட்டிவிட்டது. பெருமிதத்துடன் வெற்றிப் படைகளை நடத்திக் கொண்டு வந்த சேனாபதி வேதவனத்திற்குச் செய்தி சொல்லி அனுப்பப்பட்டது. துர்ப்பாக்கியசாலிகளான வேதவனமும், சீவல்லபனும் மன்னருடைய காலடியில் மகத்தான வெற்றியைச் சமர்ப்பிக்க மகிழ்வோடு வந்து கொண்டு இருந்தார்கள். ஆனால், அவர்களுடைய செவிகளிலே அவருடைய உயிர் ஊசலாடுகிறது என்ற கொடிய செய்தி தீப்பிழம்பைப் போலப் பாய்ந்தது.

அவ்விருவரும் தங்களுடைய தலைகளின் மீது எரிமலைகள் இறங்கி விட்டதைப் போல ஆனார்கள். தாங்கள் வீற்றிருந்த கரிகளின் மீதிருந்து அப்படியே கீழே குதித்தார்கள், 'அரசே' என்று ஏககாலத்தில் அலறினார்கள். 'ஐயோ, வேந்தே, வேந்தே' என்று கதறிக் கொண்டே அரண்மனையை நோக்கி ஓடினார்கள்.

அரண்மனையின் எதிரிலே பீடு நடைபோட்டுச் சென்று கொண்டு இருந்த வெற்றி ஊர்வலத்தில் குழப்பம் ஏற்பட்டு விட்டது. சேனாபதியும், ஈழத்து சீவல்லரும் அலறி அடித்துக் கொண்டு ஓடியதை படைவீரர்கள் பார்த்தார்கள். ஓரங்களில் நடந்து வந்து கொண்டு இருந்த மக்கள் கூட்டமும் கண்டது. ஏதோ கெட்ட காரியம் நடந்துவிட்டது என அவர்கள் திடுக்கிட்டார்கள். ஊர்வலத்தின் இருபுறங்களிலும் படை வீரர்களை உற்சாகப்படுத்திக் கொண்டு சென்று மக்களிடையேயும் பீதி ஏற்பட்டுவிட்டது. 'யாருக்கு என்ன?' என்ற கேள்விக்குறி ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் பூதாகாரமாக எழுந்தது.

எங்கும் பீதியும், அச்சமும் நிலவியது. பலர் பலவாறாக யூகித்துக் கொண்டு பேசினார்கள் இந்நிலையில் மன்னர் குறுவாளால் குத்தப்பட்டார்; அவருடைய உயிர் ஊசலாடிக் கொண்டு இருக்கிறது என்ற செய்தி பழையாறை நகரெங்கும் எட்டிவிட்டது. செய்தியைக் கேட்ட மக்கள், 'ஐயோ, எங்கள் ஆருயிர் அரசே!' என்று அலறித் துடித்தார்கள். பல பெண்கள் தரையின் மீது விழுந்து புரண்டு மார்பையும் தலையையும் அடித்துக் கொண்டு கதறினார்கள்.

ஊர்வலம் கலைந்து விட்டது. பரிகளும் கரிகளும் தாறு மாறாக ஓடின, எங்கு கரிகளுக்கு மதம் பிடித்து விடுமோ என்று அஞ்சிய படைவீரர்கள் அவைகளை அப்பால் இழுத்துக் கொண்டு சென்றார்கள். வழி நெடுக மாதர்கள் ஆரத்தி எடுக்க ஆவலோடு மஞ்சள் நீர் கொண்ட தட்டுகளோடு நின்றிருந்தார்கள். சிலர் ஏந்தியிருந்த தட்டுகளில் கற்பூரக் கட்டிகள் எரிந்து கொண்டு இருந்தன. அவை காற்றால் அணைந்து விட்டன. மாதரின் கண்கள் கண்ணீர் கக்கின. கரங்கள் நடு நடுங்க அவற்றில் இருந்த தமஞ்சனநீர் தட்டுகள் மண்மேல் விழுந்தன. மஞ்சள் நீர் செந்நீராக ஓடியது.

படை வீரர்கள் என்னதான் முயன்றாலும் ஒழுங்காக வந்த ஊர்வலம் திடீரென திட்டமின்றிக் கலைந்ததால் பரிகளையும், கரிகளையும் கட்டுப்படுத்த இயலவில்லை. அவற்றில் சில தாறுமாறாக ஓடின. அவற்றின் இடையே காலாட் படையினர்

சிக்கிக் கொண்டார்கள். அவர்களில் பலர் மிதிபட்டார்கள். பந்தங்களைத் தாங்கிக் சென்றவர்கள் பயத்தில் அவற்றை கீழே எரிந்து விட்டு ஓடினார்கள் தரையின் மீது வீழ்ந்திருந்த பந்தங்களின் மீது நெருக்கித் தள்ளப்பட்ட கூட்டம் போய் விழவே பலர் ஆடைகளில் தீப்பற்றிக் கொண்டது. அவர்கள் ஆடை எரிய, எரிய ஐயோ என அலறிக் கொண்டே ஓடினார்கள். பலர் எரியும் பந்தங்களின் மீது தள்ளப்பட்டு மதிபடவே அங்கேயே உயிர்விட்டார்கள்.

ஓரங்களில் நடந்து வந்துகொண்டிருந்த பொது மக்களின் மீதும் சில யானைகள் பாய்ந்தன. நெருப்புப் பந்தங்களையும் நெருப்புப் பிடித்து எரியும் ஆடைகளோடு ஓடிய மக்களையும் காணவே சில யானைகளுக்கு மதம் பிடித்துவிட்டன. அவற்றை அடக்க யானைப் பாகர்கள் மிகவும் முயன்றார்கள்.

ஊர்வலம் சென்ற தெரு மிகவும் விசாலமானதுதான். ஆயினும் அதில் பல்லாயிரக்கணக்கான மக்களும், ஆயிரமாயிரம் பரிகளும், கரிகளும் தாறுமாறாக நிலை குலைந்து ஓடினால் என்ன செய்ய முடியும்? எவ்வளவுதான் விசாலமான தெருவானாலும் எப்படித் தாங்கும்? உயிருக்குப் பயந்து அங்கும், இங்குமாக மக்கள் ஓடினார்கள். தாங்களாகவே போய் யானைகளின் மீது மோதிக் கொண்டவர்கள் பலர். யானைகளால் நசுக்கப்பட்டவர் சிலர். புரவிகளின் மீதிருந்து கீழே தள்ளப்பட்டு மிதிக்கப்பட்டவர் சிலர். சிலர் சிரங்கள் யானைகளின் பாதங்களினால் நசுக்கப்பட்டதால் தலை இல்லாது விழுந்திருந்த பிணங்களின் தோற்றம் பயங்கரமாகத் தென்பட்டது.

சோழ மாளிகைக்கு முன்னர் கற்பனைக்கும் எட்டாத கொடுமை நடந்துவிட்டது. பலர் பரிதாபமாகப் பலியாகி விட்டார்கள். சிலர் உயிருக்குப் போராடியவாறு தெருக்களில் வீழ்ந்து கிடந்தார்கள். வெற்றி மதப்பில் வந்த வீரர்களில் சிலர் விண்ணுலகு அடைந்துவிட்டார்கள். அந்நிய நாட்டிலே வெற்றிக் கொடியை நாட்டிய வீரர்கள் சொந்த பூமியிலே சுருண்டு விழுந்து செத்தார்கள். இன்னும் சிறிது நேரத்தில் அன்புக் காதலியைக் காண்போம். அவளைக் கட்டிப்பிடித்து முத்தமிடுவோம் என்று ஆயிரம் கற்பனைகளில் மிதந்து கொண்டிருந்த வீராதிவீரர்கள் யமதூதர்களை கட்டிப்பிடித்து முத்தமிட்டார்கள். யாருமே எதிர்பாரத கொடுமை இது.

சிறிது நேரத்திற்கு முன்னர் ஒளிமயமாக அந்தக் தெரு திகழ்ந்தது. அங்கே ஆயிரமாயிரம் மக்களுடைய வாழ்த்து ஒலிகள்

விண்ணை முட்டி ஒலித்துக் கொண்டு இருந்தன. அதே தெரு இப்பொழுது இருண்ட சூன்யமாகி விட்டது! ஏன் பரந்த சுடு காடாகி விட்டது. சோழ நாட்டு மக்களின் இதயங்களைப் போலவே!

உயிர் தப்பிய மக்கள் தாங்கள் பிழைத்து விட்டோம் என்ற மனநிறைவுடன் இல்லங்களுக்கு ஏகவில்லை. மன்னருக்கு என்ன ஆயிற்றோ என்று ஏங்கினார்கள். எல்லா மக்களும் அரண்மனையின் பிரதான வாயிலுக்குள் விழுந்து அடித்துக் கொண்டு புகுந்தார்கள். அந்த நெரிசலில் மிதிபட்டவர் பலர். அவர்களைக் கட்டுப்படுத்த காவலர்களால் இயலவில்லை. 'மன்னா, மன்னா!' என்று கதறும் தாய்மார்கள் ஏராளம், ஏராளம்! 'இறைவா, எங்கள் அரசரைக் காப்பாற்று' என்று இறைவனைத் தொழும் பெரியவர்கள் எண்ணிறந்தவர்கள். எங்கும் கண்ணீரும் அழுகையும்தான்!

மன்னருடைய உடல் நிலையைக் கருதி யாரும் அரண்மனையில் உள்வாயிலுக்குள் புக அனுமதிக்கப்பட வில்லை. காவலர்கள் ஆங்காங்கு உருவிய வாட்களுடன் நின்றார்கள். மக்கள் அரண்மனைக்குள்ளே செல்லாமல் தடுத்து நிறுத்தினார்கள்.

வேதவனமும், சீவல்லபனும் அடைந்த வேதனையை சொல்லவே இயலாது. அவர்கள் அனலில் விழுந்து புழுக்கள் எனத் துடித்தார்கள். அவ்விருவரும் இராசாதி ராசனை மன்னர் என்று மட்டும் பார்த்தவர்கள் அல்ல. அவரை உற்ற தோழராகக் கருதினார்கள். தங்களுடைய உயிரின் உயிராக எண்ணினார்கள். இரத்தத்தின் இரத்தமாகப் பாவித்தார்கள்.

'அரசே, இந்தக் கதியை அடையத்தானா அன்று வெள்ளாற்றங் கரையிலிருந்து ஓடிவந்தீர்கள்? யமனை அணைத்துக் கொள்ளத்தானா எங்களுடைய சொல்லை மீறி ஓடினீர்கள்? தங்களைப் பிரிந்து நாங்கள் வாழ இயலாது. எங்களையும் அழைத்துக் கொள்ளுங்கள் அரசே!' இவ்வாறு சொல்லிச் சொல்லிப் புலம்பிய வேதவனம் சிறுகுழந்தையைப் போல அழுதார். தன்னுடைய இரு கரங்களாலும், மார்பின் மீதும் தலையின் மீதும் அடித்துக் கொண்டார். சீவல்லபன் தரையில் விழுந்து புரண்டு, புரண்டு அழுது துடித்தான். 'மன்னவா, நாங்கள் தங்களைப் பிரிந்து வாழமாட்டோம். நாங்களும் உடன் வருவோம்' கதறிய வண்ணம் அரசனுடைய இரு பாதங்களையும் பிடித்துக் கொண்டு அவ்விருவரும் புலம்பினார்கள்.

தம்முடைய இதயத்தில் நிறைந்த இரு தோழர்களுடைய புலம்பல் உயிர் ஊசலாடும் மன்னருடைய உணர்வினைத் தொட்டு இருக்க வேண்டும். எனவே அவருடைய நேத்திரங்கள் மெதுவாகத் திறந்தன.

அவராகவே தம்முடைய இருகரங்களையும் மெதுவாக நீட்டினார். தம்முடைய இரு தோழர்களுடைய கரங்களையும் இறுக்கிப் பிடித்துக் கொண்டார். 'என்னுடைய அன்புத் தோழர்களே, உங்களை விட்டு நான் போகமாட்டேன்.' என்று அவர்களுக்கு உறுதி அளிப்பது போல இருந்தது. உணர்வற்ற நிலையிலும் மன்னர் அவர்களுடைய கரங்களை இறுக்கி பிடித்த செயல். இது அந்த இரு தோழர்களின் அழுகையை மேலும் அதிகமாக்கி விட்டது. இந்த சோகக் காட்சியை அரண்மனை மருத்துவர்கள் கண்டார்கள். அருகில் இருந்த அத்தனை பேரும் கண்ணுற்றார்கள். அனைவரும் கதறிவிட்டார்கள். மருத்துவர்கள் கூட தங்களுடைய கடமையைச் செய்ய மறந்துவிட்டார்கள். அழுதுகொண்டே நின்றார்கள்.

'அரசே, கண்களைத் திறவுங்கள், எங்களைப் பாருங்கள். எங்களைப் பாருங்கள் மன்னா!' சீவல்லபன் கதறித் துடித்தான். புலம்பித் தவித்தான்.

கருணை வாழ்வின் அருணனான இராசாதிராச சோழருடைய கண் இமைகள் மெதுவாக அசைந்தன. அனைவரும் ஆவலோடு அவருடைய விழிகளையே பார்த்தார்கள். அவை திறந்தன. ஆனால் மஞ்சத்தின் மீது சாய்த்து படுக்க வைக்கப்பட்டிருந்த அரசனுடைய முதல் பார்வை தம்முடைய வலதுபுறம் ஒட்டிக்கொண்டு நின்ற வேதவனத்தைக் காணவில்லை. இடதுபுறம் நின்றிருந்த சீவல்லபனைக் காணவில்லை. அவருடைய கண்கள் அப்படியே நிலைகுத்தி நின்றுவிட்டன. இமைகள் செயல்பட மறந்தன.

'ஆ! கோதை நீயா!' என்று அவருடைய வாய் தெளிவாக முணகியது. மன்னரையே பார்த்துக் கொண்டு இருந்தவர்கள் பின்புறம் திரும்பி அவருடைய பார்வை சென்ற திக்கைப் பார்த்தார்கள். கோதை நிற்கிறாள்!

35

கொல்லாமை மோசமான கொள்கை!

'ஆம், இராசாதிராச பூபதி, நானேதான்! வேறு யாரும் இல்லை. உம்முடைய முன்னாள் காதலி கோதையேதான்!'

எவ்விதமான தங்கு தடையின்றி சரளமாக மறுமொழி கூறினாள் கோதை. அவளுடைய முகத்தில் மந்தகாசம் தவழ்ந்தது. தாமரை போன்ற மலர்ந்திருந்த அவளுடைய வதனத்தில் புன்முறுவல் விளையாடியது. அவள் ஒன்றுமே நடக்காதைப் போல, காதலை நோக்கி நெருங்கி வரும் காதலியைப் போல, சோழ மன்னனை நோக்கி மகிழ்வு பொங்க நடந்து வந்தாள்.

கோதைக்கு முன்னால் நடந்து வந்த சித்தன் ஒரு ஓரத்தில் ஒதுங்கிப் பணிவாக நின்றான் சித்தனைத் தொடர்ந்து அம்முற்றத்திற்குள் கோதையின் பின்னாள் பத்துக் காவலர்கள் உருவிய வாட்களுடன் வந்தார்கள். அவர்களும் வாயிற்படியைக் கடந்து முற்றத்திற்கு வந்தவுடன் கோதையின் பின்னால் நின்று விட்டார்கள்.

கோதையும், காவலர்களும் பின்தொடர வந்த சித்தன், அப்பொழுதுதான் மன்னரைக் கண்டான். மன்னரின் நிலையையும், அங்கு கூடியிருந்த கூட்டத்தையும் பார்த்துத் திடுக்கிட்டான். மன்னர் நிலை அந்த அளவிற்கு ஆபத்தாக இருக்கும் என அவன் கற்பனைக்கூடச் செய்யவில்லை, சோழ மண்டலாதிபதி இருந்த பரிதாபகரமான நிலையைப் பார்த்துத் திடுக்கிட்டான். மன்னர் நிலை அந்த அளவிற்கு ஆபத்தாக இருக்கும் என அவன் கற்பனைக்கூடச் செய்யவில்லை. சோழ மண்டலாதிபதி இருந்த பரிதாபகரமான நிலையைப் பார்த்து அவன் கதிகலங்கி விட்டான். மனம் பதறி விட்டான். துடி துடித்துக் கொண்டே அழுதான். 'ஐயோ, மன்னவா, மண்ணுயிரை தன்னுயிர் போலக் கருதிய தங்களுக்கு இந்தக் கதியா?' என்று கூறி, தேம்பித் தேம்பி அழுதான். மன்னருக்கு அருகில் ஒரு ஓரத்தில் நின்ற அவன், வாயின் மீது துணியை அடைத்தவாறு அழுது கொண்டு இருந்தான்.

நம்முடைய அன்புச் சித்தனை நாம் சந்தித்து வெகு காலம் ஆகிவிட்டது. இதுவரை அவன் எங்கு போய் இருந்தான், எப்படி அங்கு திடீரென வந்து தோன்றினான் என்பதை அறியும் ஆவல் எழுவது இயல்பே.

சித்தனை நாம் சந்தித்து வெகுகாலம் ஆகிவிட்டதுதான். ஆனால், அவன் என்றும் போலவே தன்னுடைய செயலில் கண்ணும் கருத்துமாகவே இருந்தான். அந்த கர்ம யோகி என்றுமே தன்னுடைய கடமையை மறந்தவன் அல்ல. இன்னும் சொல்லப் போனால், திருச்சிற்றம்பலம் உடையார் மரணத்திற்குப் பின்னர் அவனுக்கு அரசியல், மதம் முதலியவற்றில் இருந்த நாட்டம் குறைந்துவிட்டது. ஒரே ஒரு காரியத்தில் மட்டும் தன்னுடைய முழு நேரத்தையும், மனத்தையும் செலுத்தினான். கோதையைத் தொடருவது ஒன்றே அவனுடைய இதய இலட்சியமாக அமைந்து விட்டது. அப்பெண்ணை தொடருவதின் மூலமே பல சிக்கல்களுக்கு விடைகாண முடியும் என்ற எண்ணம் அவனுடைய மனத்தில் ஆழமாகப் பட்டு விட்டது. மேலும் அவளைக் கண்காணிப்பது மூலமாக பல தீமைகள் நடக்காமல் தடுக்க முடியும் என்று அவன் நம்பினான். எனவே அவளைத் தொடருவதை மட்டுமே தன்னுடைய கடமையாக வைத்துக் கொண்டு அவளுடைய நிழல் போலத் தொடர்ந்தான்.

ஆனால் ஆற்றலும், அறிவும் மிக்க கோதையின் முன்னல் ஆயிரம் சித்தன்கள் சேர்ந்தாலும் ஈடு கொடுக்க முடியாது. அவனை அவன் எளிதில் ஏமாற்றிவிட்டாள். அவன் தன்னைத் தொடருவதை அவள் நன்கு உணர்ந்து கொண்டாள். வெகு எளிதில் அவனை ஏமாற்றிவிட்டு ஆண் உடை தரித்துக் கொண்டு ஈழ நாட்டிற்குச் சென்று விட்டாள்.

ஈழ நாட்டிற்குச் சென்ற கோதை அந்நாட்டு மன்னனுடைய சீதனத்தைக் கொண்டு வந்தவள் என்ற பெயரில் மீண்டும் மதுரைக்கு வந்து சேர்ந்தாள். இதனை அறிந்த சித்தன் மதுரையில் தன்னுடைய இருப்பிடத்தை வைத்துக் கொண்டு மீண்டும் பழையபடி அவளைக் கண் காணிக்கத் தொடங்கினான். இதனைக் கோதையும் அறியாதில்லை. அவள் அவனுடன் விளையாடினாள்! அதாவது பலமுறை அவனை எளிதில் ஏமாற்றி திக்கு முக்காடச் செய்தாள். அவளுடைய ஆற்றலை அறிந்த சித்தன் அதற்காக வருத்தப்படாது தன்னுடைய கடமையைச் செய்தான்.

முன்பு போர் மூண்ட உடனேயே கோதை புகழாபரணம் அரண்மனையை விட்டு தப்பி வெளியேறி விட்டாள். இதனை

சித்தன் அறிவான். எனவே இம்முறையும் போர் மூண்டவுடன் அரச அரண்மனையை விட்டுத் தப்பி ஓடலாம் என அவன் யூகித்தான். அங்கிருந்து வெளியேறி தன்னுடைய ஆட்களுடன் கலந்து அடுத்த சதித் திட்டம் வகுப்பாள் என அவன் எதிர்ப் பார்த்தான். அவன் எதிர்பார்த்தது வீணாக வில்லை. அவனுடைய எண்ணப்படியே செயல் நடைபெற்றது.

பொங்கி வந்த சோழப் படைகள் மதுரையை நெருங்கி விட்டன. அவற்றை எதிர்த்து ஈடுகொடுக்க இயலாது பாண்டி நாட்டுப் படைகள் பின்வாங்கின. அதிலிருந்து போரின் முடிவு எப்படி இருக்கும் என கோதை யூகித்து அறிந்தாள். அன்றைய இரவே ஆண்வேடம் தாங்கிப் புரவியின் மீது அமர்ந்து புகழாபரணம் அரண்மனையை விட்டு வெளியேறினாள்.

குமராட்சியில் வைணவ மகாசபை கூடுவதைக் கோதை அறிவாள். அதில் கலந்து கொள்ள அவள் விரும்பிச் சென்றாள். அங்கு அவள் சென்றதின் நோக்கம் அச்சபையில் கலந்து கொள்வதும் திருவரங்கத்து அமுதனாரை தரிசிப்பதும் மட்டும்தான் அவ்விடத்தில் தன்னுடைய இலக்கை நிறைவேற்றிக்கொள்ள பலி கிடைக்குமென்று அவன் கற்பனை செய்ததுகூட இல்லை.

கோதையை கண்காணித்து வந்த சித்தன் மிகவும் திறமையாக அவளைத் தொடர்ந்தான். இம்முறை அவன் தவறவில்லை. கோதைதான் அவனை கவனிக்கத் தவறி விட்டாள்.

கோதை என்னதான் நல்லெண்ணத்தோடு குமராட்சிக்குச் சென்றும்கூட சதியையே தொழிலாகக் கொண்ட அப்பெண்ணை சதி தானாகவே தேடி வந்தது. உண்மையில் கோதையினுடைய ஒற்றன் ஒருவன் இராசாதிராசனைத் தொடர்ந்து அங்கு வந்திருப்பது அவளுக்கே தெரியாது. கோதையை அங்கு சந்தித்த ஒற்றன் சோழமன்னர் அந்த வைணவச் சபையில் இருக்கும் செய்தியை அவளுக்குக் கூறினான். அதனை அவள் நம்பவே இல்லை, ஆனால் அந்த ஒற்றன் மீண்டும், மீண்டும் தன்னுடைய கருத்தை வலியுறுத்தவே அவள் இருளில் அரைமனதுடன் அவனைத் தொடந்தாள். அவன் காட்டிய உறங்கும் மனிதனைப் பந்தத்தின் ஒளியில் கண்டாள், அது இராசாதிராசனே!

அப்பொழுது கோதை அடைந்த மகிழ்வுக்கு அளவே இல்லை. வாய்த்ததோர் நல்ல தருணமென்று மட்டிலா மகிழ்வு கொண்டாள்! தன்னுடைய குறிக்கோளை நிறைவேற்ற

நாராயணனே அந்த பலியை அங்கு அனுப்பி இருக்கிறான் என்று பூரித்து விட்டாள். தன்னுடைய பிறவியின் நோக்கம் அன்று பூர்த்தி அடையப் போகிறது என்று மகிழ்ந்தாள். சோழ மன்னனைக் கொன்று விடுமாறு தன்னுடன் அழைத்து வந்த ஏவலாளிகளைப் பணித்தாள்.

கோதையைத் தொடர்ந்து சித்தன் குமராட்சி சுடு காட்டில் புதரில் மறைந்து கொண்டு சதிக்கும்பலைக் கண் காணித்தான். அவர்கள் பேசியதைத் தெளிவாகக் கேட்டான். விந்தை! அதே சுடுகாட்டை ஒட்டி இருந்த மற்றொரு புதரில் மன்னர் மறைந்து கொண்டு அங்கு நடப்பதை கவனித்தார். அதனை சித்தனும் அறிய மாட்டான்.

ஆனால் கோதையும் மற்றவர்களும் அப்பொழுது பேசியதிலிருந்து, மன்னர் அப்பகுதியில் இருக்கிறார் என்பதை அவன் அறிந்துக்கொண்டான். மன்னரை சற்று நேரத்தில் வெகு எளிதில் அந்த சதிக்கும்பல் கொலை செய்யப் போகிறது என்பதையும் அவன் அறிந்து கொண்டான்.

சித்தனுடைய மனம் பதறியது. திடுக்கிட்ட அவன் குழம்பிவிட்டான். செய்வதறியாது சிலையாக நின்றான். சிறிது நேரத்தில் மீண்டும் உணர்வு பெற்றான். அந்நிலையில் விசுவாசமான அரச ஊழியனான தன்னுடைய கடமை என்ன எனச் சிந்தித்தான், தன்னுடைய கடமை கோதையைத் தொடருவதா. அல்லது மன்னரைக் காப்பாற்றுவதா? கோதை எக்கேடு கெட்டாவது போகட்டும். மன்னரைக் காப்பாற்றுவதுதான் தன்னுடைய முழுமுதற் கடமை என்ற முடிவுக்கு அவன் வந்தான்.

ஆனால் முன்பே நாம் கூறியபடி மன்னருக்கு இந்தச் சதி தெரிந்துவிட்டதால் அவர் பந்தலை நெருங்கவில்லை. புரவி இருக்கும் இடத்திற்கும் செல்லவில்லை. மாட்டு மந்தையோடு நடந்தபடியே அவ்விடத்தைவிட்டு ஏகி விட்டார். பொழுது விடிந்தது. வைணவப் பெரியார்களும் கூட்டம் கூட்டமாக அவ்விடத்தைவிட்டு வெளியேறினார்கள். அங்கு விரும்பத்தகாதது எதுவுமே நடக்கவில்லை. ஒருக் கால் மன்னர் எப்படியோ தப்பி இருக்கலாம் என்று சித்தன் நினைத்தான். அதனால் மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைந்தான். எனவே அவரைப் பற்றிய கவலையை விட்டு விட்டு அந்த வைணவ சபையில் கோதையைத் தேடினான். அவள் காணவில்லை. அவள் எங்கோ மறைந்து விட்டாள். எங்கு மறைந்தாள், எப்படி மறைந்தாள்?

அடுத்துச் செய்யவேண்டியது என்ன? மீண்டும் சித்தன் மனதில் இந்த வினா எழுந்தது. அன்று இரவு சுடு காட்டில் பேசப்பட்டதிலிருந்து மன்னரைக் கொல்லுவதுதான் கோதை தன்னுடைய முழுமுதற் திட்டமாக வைத்திருக்கிறாள் என்பது அவனுக்கு தெளிவாகத் தெரிந்து விட்டது. அவரை எப்படியும் காப்பாற்ற வேண்டும். மன்னர் தற்போது பழையாறையில்தான் இருக்க வேண்டும். அவர் அங்குதான் சென்றிருக்க வேண்டும். அவருக்குப் பழையாறையில் ஏதாவது தீங்கு நேர்ந்தாலும் நேரலாம். ஏன், கோதையேகூட பழையாறைக்குச் சென்றிருக்கலாம். பழையாறையே திரண்டு போருக்குப் போய்விட்டதால் தற்பொழுது அங்கு அரசருக்கு அதிக காவல் இருக்காது. அதனைப் பயன்படுத்திக் கொண்டு சதிகாரர்கள் தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி செய்யலாம். எனவே, அவன் இந்நிலையில் அரசரின் அருகில் இருப்பதுதான் நல்லது. இந்த முடிவிற்கு அவன் வந்துவிட்டான். பழையாறைக்குச் சென்றவுடன் கோதை அங்கு எங்காவது மறைந்து இருக்கிறாளா என்பதையும் கண்காணிக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டான். அவன் வேக, வேகமாகப் பழையாறைக்குப் புறப்பட்டான்.

சித்தன் பழையாறைக்கு வந்து சேர்ந்தான். அங்கு வந்ததும் மன்னர் நல்லபடியாக அரண்மனையில் இருப்பதறிந்து ஓரளவு மனநிறைவு பெற்றான். ஏதோ ஒரு விபரீதம் நடக்கப் போகிறது என அவனுடைய உள் உணர்வு கூறியது. கோதை அப்பொழுது பழையாறையில்தான் இருப்பாள் என்று அவன் நம்பினான். எப்படியும் அவளைத் தேடிப் பிடித்துவிட்டால் பல தீமைகளைத் தடுக்கலாம் என்று அவன் நம்பினான். எனவே அந்நகரில் அவளை எங்கெங்கோ தேடி அலைந்தான். ஆனால் கண்டுபிடிக்க இயலவே இல்லை.

பழையாறை நகரே அதிரும்படி வெற்றி விழா ஊர்வலம் வந்துகொண்டு இருக்கிறது. படைகள் நகரில் பிரவேசித்து, பீடுநடை போட்டுக் கொண்டு இருக்கின்றன. நகரே கோலாகலத்தில் மூழ்கி இருக்கிறது. இந்நேரத்தில் நகரில் கட்டுக்காவல் பலமாக இருக்காது. இந்த வாய்ப்பை சதிக்கும்பல் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அவன் அஞ்சினான். எனவே, அவன் நாட்டமெல்லாம் கோதையின் மீதே இருந்தது. வெற்றி ஊர்வலத்தை அவன் பொருட்படுத்தவே இல்லை.

இரவு நேரம் அல்லவா, கோதை அரண்மனை நந்தவனத்தில் எங்காவது பதுங்கி இருந்தாலும் இருக்கலாம்.

அவளைக் கண்டு பிடிப்பது எளிதல்ல. அவள் சோழ அரண்மனையிலேயே சிறிதுகாலம் தங்கி இருந்ததால், அங்கிருக்கும் ஒவ்வொரு இடத்தையும் நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும். எனவே, பத்திரமான இடத்தில் பதுங்கி இருக்கலாம். இந்த எண்ணம் மனதில் உதித்ததால் சித்தன் அரண்மனை நந்தவனத்தில் பலமுறை அங்குமிங்குமாக அலைந்தான். அரண்மனையையும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டு இருந்தான். ஏதாவது அரவம் அந்த இருளில் கேட்டாலும் கூர்ந்து கவனிப்பான். பின்னர் உண்மையை உணர்ந்து ஏமாற்றத்துடன் திரும்புவான்.

அரண்மனை சுரங்கப்பாதையை அவன் நன்கு அறிவான் அவன் திருச்சிற்றம்பலமுடையார் காலத்தில் ஒருமுறை அவரோடு அதில் சென்றிருக்கிறான்.

அவன் அரண்மனையை உற்றுக் கவனித்தாலும் சுரங்கப்பாதையின் மீது ஒரு கண் வைத்தே இருந்தான். அந்நகரமே அன்று இரவு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி இருந்தது. ஆனால் பரிதாபத்திற்குரிய அவன் மட்டும் அன்று இரவு என்ன நடக்குமோ என்ற ஏக்கத்தில் நந்தவனத்தில் பேயாக அலைந்தான். அது எங்கு துக்ககரமான இரவாக அமைந்து விடுமோ என அவன் அஞ்சியது பொய்யாகவில்லை.

அரண்மனை நந்தவனமெங்கும் பயங்கரமான அமைதி குடிக்கொண்டு இருந்தது. ஆனால், சிறிது நேரத்தில் பேய்க்காற்று வீசத்தொடங்கியது. காற்றின் சோ என்ற ஒலி அடிப்பட்ட காலதேவனின் அபயக் குரலைப் போல ஒலித்தது. மரங்களின் இலைகள் சல சலத்தன. தரையின் மீது அவை கொட்டின. ஆங்காங்கு மரங்களிலிருந்து ஓரிரு கிளைகள் முறிந்து கீழே விழுந்தன. விண்ணில் தேய்ந்து தொங்கிக் கொண்டு இருந்த கிருஷ்ணபட்சத்து வெண்மதி, வெள்ளை லத்திப்பூவைப் போல வெளிரிட்டு இருந்தது. அதனுடைய ஒளி மிகவும் மங்கி இருந்தது. பல இடங்களில் மரங்கள் அடர்ந்து இருந்தன. அவற்றால் ஏற்பட்ட இருளை பிறைமதியால் அசைக்க இயலவில்லை. அப்பகுதிகளில் பயங்கரமான மண்டிக் கிடந்த இருளில் ஒருகால் சதிக்கூட்டம் பதுங்கி இருக்குமோ என்ற பீதியில் அவன் இருளில் நோட்டம் விட்டான். அவனுக்கு ஒன்றுமே புலப்பட வில்லை. நேரம் ஆக, ஆக அவனுடைய இதயத்தின் கவலைகள் அதிகமாகிக் கொண்டு வந்தன.

சித்தன் அரண்மனை நந்தவனத்தில் அலைகிறான் நந்தவனத்திற்கும், அரண்மனை மதிலுக்கும் இடையே உள்ளது அகழி. நந்தவனத்தில் நின்றிருந்த அவன் அகழியின் அப்பால் இருந்த சுரங்கப்பாதையை அடிக்கடி கவனிக்கத் தவறவில்லை. அகழியில் இருந்த முதலைகள் ஒன்றை ஒன்று அடித்துக் கொண்டு சண்டை பிடித்துக் கொண்டு இருந்தன. அவை ஏற்படுத்திய அரவத்தைக் கேட்ட போதெல்லாம் அவன் திடுக்கிட்டான்.

தூய்மையான கள்ளம் கபடமில்லாத அந்த சமணனின் உள்உணர்வு கூறியது பொய்யாகப் போகவில்லை. அகழியின் அப்பால் இருந்து இருளில் அரண்மனையின் பின்புறத்தை ஒட்டி இருந்த ஆலமரத்தடியில் ஏதோ ஒரு அசைவு தென்பட்டதைப் போல ஒரு தோற்றம் தென்பட்டது. அங்குதான் சுரங்கப் பாதை முடிகிறது. அவ்விடத்தில் ஒரு தீப்பந்தம் நகருவதைப் போல தோன்றியது. அவன் அதனை உற்றுப் பார்த்தான். அது அசைந்தது. அவனுடைய மனம் திகீர் என்றது. யாரோ ஒரு கொடிய அரக்கன் அவனுடைய கழுத்தைப் பிடித்து நெருக்குவது போலத் திணறி விட்டான். அச்ச மென்பதையே அறியாத அந்தச் சமணன் அந்த நேரத்தில் அலறிவிட்டான். அவனுடைய உடல் வியர்த்துவிட்டது. ஆயினும் மயங்கி விழாது மூச்சைப் பிடித்துக் கொண்டு அவ்விடத்தை உற்றுப் பார்த்தான்.

ஆம், ஒரு தீப்பந்தம் நகர்ந்து வந்தது, அதன் அசைவு மட்டுமே தெரிந்தது. அதனை ஏந்தி வந்த உருவம் தென்பட வில்லை. அது என்ன கொள்ளிவாய் பிசாசா? தீ தானாகவே விண்வெளியில் பறப்பது போலத் தோன்றுகிறதே!

மதிலை ஒட்டிய சுரங்கப்பாதையில் இருந்து நகர்ந்து வந்த தீப்பந்தம் அகழியை நோக்கி வந்தது. அகழியின் விளிம்பிற்கு வந்து அங்கு தயார் நிலையில் இருந்த ஒரு படகில் ஏறிக்கொண்டது. படகு எதிர்த் திக்கை நோக்கி நகர்ந்தது. படகு நகரத் துவங்கவே அத்தீப்பந்தம் அணைந்து விட்டது.

முதலைகள் ஓங்கி ஓங்கி நீரை வாலால் மோதி அடித்தன. பழுத்த, கொழுத்த மீன்கள் ஒன்றை ஒன்று மோதிக் கொண்டன. அவை மேலே எழும்பிவந்து, வாலால் நீரின் மீது அடித்து இரைச்சல் செய்தன. இந்த இரைச்சல் சித்தனுடைய அச்சத்தை மேலும் அதிகமாக்கியது. அவன் படகையே உற்றுப் பார்த்தான். அப்பொழுது அது நகர்ந்து வருவது அந்த மங்கிய நிலா ஒளியில் நிழலைப் போலத் தெரிந்தது.

ஆம், நகர்ந்து வருவது படகாகத்தான் இருக்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்டான். படகில் யாராவது மனிதர்கள் இருக்க வேண்டும். அதில் வருபவன் படகில் ஏறியவுடன் திட்டமிட்டே பந்தத்தை அணைத்து விட்டு இருக்க வேண்டும். அப்படியானால்? அவன் எங்கிருந்து வருகிறான்? வருபவன் சுரங்கப் பாதையில் இருந்துதான் வெளியேறி வந்திருக்க வேண்டும். அது யார்? யாராக இருந்தாலும் அந்நேரத்தில் சுரங்கப் பாதையின் மூலமாக இருளில் அரண்மனையை விட்டு வெளியேறியவன் நல்ல நோக்கத்துடன் வந்தவனாக இருக்க இயலாது. ஏதோ சதி நடந்திருக்க வேண்டும். அந்த சதிகாரனைப் பிடித்தே ஆக வேண்டும்.

மேலும், இரவு நேரத்தில் சுரங்க வழி மூலம் வெளி யேறியவன் யாராக இருந்தாலும் அவன் ஆற்றல் மிக்கவனாகவும் இருக்க வேண்டும். அத்தகையவன் ஆயுத பலம் படைத்த வனாகவும் இருக்க வேண்டும். வெறும் கையுடன் வரமாட்டான். நிச்சயமாக கையில் ஆயுதம் வைத்திருப்பான். எனவே, அவனை தன்னால் மட்டும் பிடித்துவிட இயலாது என அவன் முடிவு செய்தான்.

படகு நந்தவனத்தை நோக்கி நகர்ந்து கொண்டு இருந்தது. அது அவன் இருக்கும் திசையை நோக்கியே வந்தது. விரைவில் அவன் இருக்கும் பகுதிக்கு அது வந்து அடையலாம். ஆயுதமற்றிருந்த அந்த ஒற்றன் என்ன செய்ய இயலும்?

அப்பொழுது அவனுடைய மூளை வேகமாக வேலை செய்தது. அரண்மனையின் பிரதான வாயிலுக்கு ஓடினான். அங்கு காவல் காத்த சிலரை தன்னுடன் வருமாறு அழைத்தான், காவலர்களுக்குச் சித்தனைத் தெரியும். அரண்மனையில் அவனுக்கு இருக்கும் செல்வாக்கையும் அவர்கள் அறிவார்கள். எனவே அவர்கள் மறுமொழி கூறாது அவனுடன் வந்தார்கள். சித்தனும் காவலர்களும் மரங்களின் மறைவில் ஒண்டிக் கொண்டு நின்றார்கள்.

அவன் எதிர்பார்த்த படகு அவன் இருந்த திக்கிற்கு வந்தது. நந்தவனத்தை யொட்டி அது நிறுத்தப்பட்டது. அப் படகிலிருந்து ஒரு உருவம் வெளிப்பட்டு இறங்கியது. அதனுடைய உடல் முழுவதும் காரிய போர்வையால் போர்த்தப்பட்டு இருந்தது.

சித்தனும், காவலாட்களும் பதுங்கி இருந்த இடத்திலிருந்து வெளிப்பட்டு தரையில் இறங்கி நின்ற அவ்வுருத்தைச் சூழ்ந்து

கொண்டார்கள். காவலர்கள் உருவிய வாட்களுடன் நின்றார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி அவ்வுருவத்திடம் ஆயுதம் எதுவும் இல்லை.

இவர்களைப் பார்த்தும் அவ்வுருவம் திடுக்கிட்டது. தப்பி ஓட முடியுமா எனச் சுற்றிலும் நோட்ட மிட்டது. ஆனால், எல்லாப் பக்கங்களிலும் அதனைச் சூழ்ந்து காவலர்கள் ஒரு வளையம் போல நின்றிருந்தார்கள்

சித்தன் தன்னிடம் வைத்து இருந்த தீவட்டிக்கு தீமுட்டிப் பற்ற வைத்துக் கொண்டான். அதனை கையில் ஏந்தியவாறு அவ்வுருவத்தை நெருங்கினான். உடல் முழுவதும் போர்த்தப்பட்டு இருந்த அவ்வுருவம் ஒரே கருப்பாகத் தென்பட்டது. வேகமாக அதனை நெருங்கிய அவன் அதனுடைய முகத்தின் மீது போர்த்தப்பட்டு இருந்தத் துணியை கையால் விலக்கினான்.

'என்னைத் தொட உனக்கு எவ்வளவு துணிவு இருக்க வேண்டும். சமணப் பேயே!' என சினத்துடன் கூறியவாறு அவ்வுருவம் சித்தனுடைய கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தது. அந்த அடியை எதிர்பாரத சித்தன், நிலை குலைந்து வெலவெலத்து விட்டான். அச்செயலால் கோபம் கொண்ட ஒரு காவலன் அவ்வுருவத்தின் மீது பாய்ந்து அது போர்த்தி இருந்த துணியைப் பறித்து அப்பால் எறிந்தான். அங்கு கோதை நின்றாள்!

இது சித்தன் எதிர்பாராதது அல்ல. அவ்வுருவம் கோதையாகத்தான் இருக்க வேண்டும் என்று அவன் யூகித்திருந்தான். அந்நேரத்தில் சோழ அரண்மனையிலிருந்து சுரங்கப்பாதை வழியாக இருளில் வரும் ஆற்றல் அவளுக்குத் தான் இருக்கும் என அவன் கணக்குப் போட்டான். அவன் போட்ட கணக்கில் பிழை இல்லை தான். ஆனால் அதற்காக அவன் மகிழ்ச்சி அடையவில்லை. கணக்கில் பிழை இல்லை. ஆனால் அரண்மனையில் என்ன பிழை நேர்ந்துவிட்டதோ? அப்பேய் அரண்மனையில் யாரை என்ன செய்து விட்டாளோ? இந்த சிந்தனை வரவே சித்தன் திடுக்கிட்டான். அவளைப் பார்த்து வினவினான். அந்த வினாவிலே சூடு தெரிந்தது.

'பெண் பேயே, இந்த நேரத்தில் நீ எங்கு போய் வருகிறாய்? யாரை என்ன செய்து விட்டு வருகிறாய்? சொல். இல்லா விட்டால்.....

'சமணனே, கத்தாதே. உன்னுடைய கொடூரமான குரலைக் கேட்டால் மரங்களில் உள்ள பறவைகள்கூட பயந்து ஓடும்,

என்னிடம் உன்னுடைய உருட்டல், மிரட்டல் பலிக்காது என்று உனக்கே தெரியும், மெதுவாகப் பேசு..... இருந்தாலும் உன்னுடைய சமண மதம் மிகவும் மட்டமானது.'

'பிசாசே, என்னுடைய மதத்தைப் பற்றி உன்னுடைய கருத்தை இப்பொழுது நான் கேட்கவில்லை. உளறாதே.'

'ஒற்றனே, அதற்காகச் சொல்லவில்லை. கொல்லாமை என்பது எவ்வளவு மோசமான கொள்கை என்பதைப் பார்த்தாயா?'

'என்ன உளறுகிறாய்?'

'நான் உளறவில்லை. உண்மையைத்தான் சொல்லுகிறேன். சற்று யோசித்துப் பார் சமணா! அன்று ஒரு நாள் ஆரண்யத்தில் சோழ அரசகுமாரர்களைக் கொலை செய்தேன். அப்பொழுது நீ வேவு பார்க்க வந்தாய். உன்னை என்னுடை ஆட்கள் மரத்துடன் சேர்த்துக் கட்டி விட்டார்கள். அப்பொழுதே அப்பிள்ளை களுக்குத் துணையாக உன்னையும் எமபுரிக்கு அனுப்ப வேண்டும் என்று என்னுடைய ஆட்கள் வற்புறுத்தினார்கள். நான் தான் அப்பொழுது உன்னைக் கொல்லாமல் தடுத்தேன். உன்னை கொல்லாமல் விட்டதற்கு எனக்கு ஒரு நோக்கம் இருந்தது. உன்னை உயிரோடு விட்டால் நீ பழையாறைக்குச் சென்று சோழ குமாரர்கள் கொல்லப் பட்ட செய்தியை விளம்பரப்படுத்துவாய் என நம்பினேன். ஆனால் உண்மையிலேயே நீ புத்திசாலி. அச்செய்தியை ஊரில் பரப்பவில்லை. அதுமட்டுமல்ல, இன்று என்னை துரத்திப் பிடித்துவிட்டாய். அன்றே உன்னை அந்த வெள்ளாற்றின் காட்டில் கொன்று போட்டிருந்தால் இன்று உன்னிடம் நான் கிடைத்திருப்பேனா? உன்னை உயிரோடு விட்டது எவ்வளவு பெரிய தவறு பார்த்தாயா! அதனால்தான் சொன்னேன். கொல்லாமையை போதிக்கும் உன்னுடைய சமண மதம் எவ்வளவு கெட்டது பார்த்தாயா என்று!'

'பெண்ணே, உன்னுடைய கொலை வெறியை நீயே வைத்துக் கொள். உன்னிடம் தத்துவ உபதேசம் கேட்க நான் வரும்போது இதனை எல்லாம் சொல். அரண்மனைக்குள் ஏன் போனாய்? அதனை முதலில் சொல்.'

'ஓ, அதுவா? சோழ அரண்மனைக்குள் நான் எதற்காகப் போவேன்? பூப்பறிக்கவா? சோழ மன்னனோடு காதல்

விளையாட்டு ஆடவா? அல்லது பழைய காதலை புதுப்பிக்கவா? காதலிக்க வேண்டுமானால் என்னுடைய காலடியில் பல கட்டழகர்கள் தவம் கிடக்கிறார்கள். அவர்களின் ஒருவனைக் காதலிப்பேன். அதற்காக சோழ அரண்மனைக்குள் போக வேண்டிய தேவை இல்லை. பூப்பறிக்க வேண்டுமானால் இந்த நந்தவனத்திலேயே பூக்களை பறித்துக் கொண்டு இருப்பேன்.'

'கேட்டதற்கு மறுமொழி சொல்கிறாயா, இல்லையா?'

'சமணனே, மீண்டும் சொல்லகிறேன். பொறுமையாகக் கேள். உனக்கு என்ன வேண்டும்?'

'சொல், அரண்மனைக்குள் எந்த நோக்கத்துடன் சென்றாய்?'

'நான் சென்றதின் நோக்கமா? வேறு எதற்குப் போவேன்? சோழவம்சத்தின் கடைசி அத்தியாயம் எழுதி முடிக்கத்தான்.' கோதை சிரித்தபடியே இந்த வார்த்தையை உதிர்த்தாள். சித்தன் நாக்குழறக் கேட்டான்:

'என்ன சொன்னாய்? சோழ வம்சத்தின் கடைசி அத்தியாயம் எழுதிவிட்டாயா?'

'ஆம், எழுதி முடித்துவிட்டேன். இந்நேரம் உங்களுடைய அருமை அரசன் சிவலோகத்தின் கதவுகளைத் தட்டிக் கொண்டு இருப்பான்.'

கோதையின் இச்சொல் சித்தனை கதிகலங்க வைத்தது. அவள் மனநோய் கண்டவளாகத் தென்படவில்லை. மிகவும் தெளிவாகவே பேசினாள். அவளுடைய பேச்சிலே ஏளனம் கலந்திருந்தது. பெருமிதம் ஒலித்தது. மகிழ்ச்சி பொங்கியது. அசட்டையோடு அவள் இழுத்துக் கூறி அந்த வார்த்தை சித்தனுடைய நெஞ்சின் மீது பழுக்கக் காய்ச்சிய ஈட்டியாகப் பாய்ந்தது.

கோதை சொல்லுவது பொய்யாக இருக்கக்கூடாதா என அவன் ஏங்கினான். ஆனால் அவள் சொல்லுவது உண்மையாகத் தான் இருக்கும். அவள் அழகான உருவம் கொண்ட நாகப்பாம்பு பழி, பாவத்திற்கு அஞ்சாதவள். உலகமே அறியாத இரு பச்சிளம் பாலகர்களை அவள் கொன்றதை அவனே நேரில் பார்த்திருக் கிறான். ஏற்கனவே மனித இரத்தத்தின் சுவையை சுவைத்த அந்த இரத்த வெறி பிடித்த காட்டேறி யாரையும் கொல்லத் தயங்கமாட்டாள். அப்படியானால் சோழ மண்டலாதிபதியின்

கதி? 'இறைவா, எங்களுடைய மன்னரைக் காப்பாற்று!' பிரார்த்தித்தவாறு ஏங்கினான் அவன். காவலர்களைப் பார்த்து துடிப்போடு கூறினான்:

'காவலர்களே, இங்கு இவளுடன் பேசி நேரத்தை வீணாக்குவது உற்றதல்ல. புறப்படுவோம். இவள் பெண் என்று அலட்சியமாக இருக்க வேண்டாம். பெண் உருக்கொண்டுள்ள பேய் இவள். மாய சூர்ப்பணகை இவள். எனவே மிகுந்த கவனத்துடன் இவளை அழைத்துக் கொண்டு என் பின்னால் வாருங்கள். நாம் உடனே அரண்மனைக்குச் செல்ல வேண்டும். அங்கு நிலைமை எப்படி இருக்கிறதோ!'

சித்தன் முன்னால் நடக்க அடி எடுத்து வைத்தான். கோதை பேசிக் கொண்டே மன நிறைவுடன் ஏதோ ஒரு கல்யாண ஊர்வலத்தில் நடப்பதுபோல சிந்தனைத் தொடர்ந்தாள்.

'ஆம், வாருங்கள், புறப்படலாம். இனி உங்களிடம் இருந்து நான் தப்புவது கடினம்தான் என நினைக்கிறேன். அதற்காக எனக்கு வருத்தமில்லை. இன்னும் சொல்லப் போனால் நான் உங்களுடன் வருவதையே விரும்புகிறேன். இராசாதிராசன் என்னுடைய முன்னாள் காதலன். அவனுடைய ஈமச் சடங்குகளில் கலந்து கொள்ளுவதுதான் காதலி செய்ய வேண்டி மரியாதை.'

இந்த அவலச் சொற்களை கேட்டவாறு சித்தன் நடந்தான். அவனுக்குப் பின்னாள் கோதை நடந்தாள். காவலர்கள் உருவிய வாட்களுடன் தொடர்ந்தார்கள்.

சித்தன் தலைதாழ்ந்தவாறு இதயத்தில் பயங்கரமான பாரத்தைச் சுமந்தபடி அந்நேரத்தில் அரண்மனையின் பிரதான வாயில் வழியாக உள்ளே புகுந்தான். அவனை மற்றவர்கள் தொடர்ந்தார்கள்.

36

மன்னர் அழுதார்

சோழநாடு தவமிருந்து பெற்றெடுத்த தவப்புதல்வன் இராசாதிராசனுடைய உயிர் ஊசலாடிக் கொண்டு இருந்தது. அவருடைய இரு கரங்களுக்கு ஒப்பான சேனாபதி வேதவனமும், ஈழத்துச் செல்வன் சீவல்லபனும் பசுவை இழந்த கன்றுகளைப் போல கதறித் துடித்தார்கள். தம்முடைய உள்ளத்தோடு கலந்து விட்ட அந்த அன்பு உள்ளங்களின் கதறல் அரசருடைய செவிகளில் பட்டு இருக்க வேண்டும். எனவே, அவர் உணர்வு பெற்று மெதுவாகக் கண்களைத் திறந்தார்.

ஆனால், அரசருடைய பார்வையில் முதலில் அவர்கள் படவில்லை. எவள் அவருடைய கனவிலும், நனவிலும் அல்லும் பகலுமாகத் தோன்றி அவரை வதைத்தாளோ, அவள் தான் முதன் முதலாக அவருடைய பார்வையில் பட்டாள்.

சதா சர்வகாலமும் தம்முடைய இதயத்தை ஆட்டிப் படைத்த கோதையை மன்னர் நேரிலேயே கண்டுவிட்டார். அவருடைய வாய் பேசும் சக்தியைப் பெற்றுவிட்டது. மனம் சிந்திக்கும் திறனைப் பெற்றுவிட்டது. எனவே, வாய் தாமாகவே 'ஆ, கோதை நீயா?' என்று தெளிவாக உச்சரித்தது.

மன்னருடைய குரலைக் கேட்டு அங்கிருந்தவர்கள் திடுக்கிட்டார்கள். பின்னால் திரும்பி அவர் பார்வை சென்ற திக்கைப் பார்த்தார்கள் கோதை சிரித்த முகத்தோடு அப்பொழுதுதான் வாயிற்படியைத் தாண்டி உள்ளே வந்து கொண்டிருந்தாள். அவளுக்கு முன்னும், பின்னும் சித்தனும் காவலர்களும் வந்து கொண்டு இருந்தார்கள். மன்னர் 'கோதை' என அழைத்தது அவளுடைய செவிகளில் தெளிவாக விழுந்தது.

'ஆம், இராசாதிராச பூபதி! நானேதான். உம்முடைய முன்னாள் காதலி கோதையேதான்!' அவள் அந்த நிலையிலும் முத்துப் பல்வரிசை தெரிய மோகன முறுவலுடன் கூறினாள். மன்னரை நெருங்கி வந்தாள்.

'நில்லடி அங்கேயே. பொன்னி வள நாட்டை கரைபடுத்தப் பிறந்த பேயே! இங்கு ஏன் வந்தாய்? எதற்காக வந்தாய்?' வேதவனம் இரைந்து கத்தினார்.

'சேனாபதி, என்ன மரியாதை மீறுகிறது? இப்பொழுது நானாக இங்கு வரவில்லை. முதலில் இதனைத் தெரிந்து கொண்டு பொறுமையாகப் பேசு. அமைச்சருக்கு அடக்கம் தான் அழகு. உங்களுடைய அடியாள் சித்தன்தான் இங்கு என்னை அழைத்துக் கொண்டு வந்தான். நானாக வரவில்லை!'

'மகா மந்திரியாரே, அரண்மனை சுரங்க வழியிலிருந்து இவள் வெளியேற முயன்றாள். அதனை நான் கண்டுவிட்டேன். கைது செய்துகொண்டு வந்து இருக்கிறேன்.' இது சித்தனுடைய குரல்,

அப்படியா!' திடுக்கிட்டுக் கூறினான் சீவல்லபன்.

'பெண் பேயே, ஏதோ சத்தியகீர்த்தியைப் போல நானாக இங்கு வரவில்லை என்று இப்பொழுதுதான் கூறினாயே?' இது வேதவனம்.

'ஆம், இப்பொழுது வரவில்லை என்றால், இதற்கு முன்பு வரவில்லை என்று பொருளா?'

'இதற்கு முன்பு எதற்காக வந்தாய்? சொல்லிவிடு.'

'இதென்ன வினா? கைப்புண்ணுக்குக் கண்ணாடியைத் தேடும் முதலமைச்சரே, நான் எதற்காக இங்கு வருவேன்? சோழ முடியைக் கேட்க வருவேனா? அல்லது உங்களுடைய சுந்தர புருஷனான இராசாதி ராசனைக் கட்டி அணைத்து முத்தமிட வருவேனா? அவரை முடிக்கவே தான் வந்தேன்.'

'என்ன சொன்னாய்? மன்னருடைய முதுகில் வாளைப் பாய்ச்சியது நீதானா?'

'ஆம், உங்களுடைய மன்னருடைய முதுகில் வாளைப் பாய்ச்சியது நானேதான். இன்னும் நன்றாகத் தெரிந்து கொள். இராசாதிராசனுடைய முதுகில் பாய்ச்சப்பட்டது சாதாரண வாள் அல்ல. விஷம் தடவிய குறுவாள்!'

'பெண் பேயே, இது உன்னுடைய செயல்தானா? உன்னைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்டால்தான் சோழ நாடு செய்த பாவம் தொலையும்.' சீவல்லபன் இவ்வார்த்தைகளைக் கூறியபடியே கச்சையில் தொங்கிய வாளை உருவி எடுத்தான். அவளை ஒரே வெட்டில் வெட்டிப் போட வாளை ஓங்கினான்.

'நிறுத்து சீவல்லபா.' இது அரசருடைய குரல். அனைவரும் அவரையே உற்றுப் பார்த்தார்கள். அரசர், 'அவளை யாரும் எதுவும் செய்யக் கூடாது' என்று கை குறிப்பால் காட்டினார். சீவல்லபனின் வாள் தளர்ந்தது. அப்பால் போய் ஒதுங்கி நின்று கொண்டான்.

'என்ன சீவல்லபனே, பதறாதே. அதிகமாக உடலை அலட்டிக்கொள்ளாதே. உங்களுடைய வாளுக்கும், வேலுக்கும் என்றுமே பயந்தவள் அல்ல இந்தக் கோதை. இதனை நான் சொல்ல வேண்டியதில்லை. உங்களுக்கே தெரியும். ஏதோ மதுரையில் நடைபெற்ற சிறு பிள்ளைகள் விளையாட்டைப் போன்ற போரில் நீங்கள் வெற்றி பெற்ற விட்டீர்கள். அந்த மமதையில் இறுமாந்து இருக்கிறீர்கள். அந்தத் தெம்புதான் என் மீது வாளை ஓங்கும் எண்ணத்தை உனக்கு ஏற்படுத்தி இருக்கிறது. முட்டாளே, தெளிவாகத் தெரிந்து கொள். வென்றது நீங்கள் அல்ல, நான்!'

'என்ன! பெண்ணே, என்ன சொன்னாய்? வென்றது நீயா?' மன்னர் மெதுவாகக் கேட்டார்.

'ஆம், இராசாதிராசனே, இறுதி வெற்றி எனக்கே! உனக்கு அல்ல. உயிர் விடும்போதாவது உண்மையைத் தெரிந்து கொள். எனக்கு இரு குறிக்கோள்கள் இருந்தன. அவை என்னுடைய இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்துவிட்டவை. முதல் இலட்சியம் சோழ வம்சத்திற்கு முடிவு கட்டுவது.

விஜயாலயன் நிறுவிய பிற்கால சோழ அரசுக்கு உன்னோடு முற்றுப்புள்ளி வைப்பது. அந்த இலட்சியம் நிறைவேற நான் தீட்டிய திட்டங்கள் இரண்டு. முதல் திட்டம், இராசராசனுடைய பிள்ளைகளைக் கொல்வது. இரண்டாவது திட்டம். உன்னைக் கொன்று சோழ வம்சத்தின் கடைசி அத்தியாயத்தை முடிப்பது.'

'அதில் நீ வென்று விட்டாயா' இது சேனாபதியின் வினா.

'அதில் என்ன ஐயம், அசட்டு சேனாபதி? தேவையற்ற ஒரு வினாவைத் தொடுத்து விட்டாய். அதற்கும் மறுமொழி சொல்லி விடுகிறேன். இராசராசன் பிள்ளைகளை வெள்ளாற்றங் கரையில் தேவதைக்குப் பலியிட்டு விட்டேன். அதற்குச் சாட்சி இங்கு தூண்போல் நிற்கிறானே இந்தத் தடியன், உங்களுடைய ஒற்றன் சித்தன். என்னுடைய இரண்டாவது திட்டம், இராசாதிராசனைக் கொல்லுவது. இன்னும் சில நொடிகளில் உங்களுடைய

அரசன் நிரந்தரமான அமைதியை அடையப் போகிறான். இப்பொழுது அவனைச் சூழ்ந்து கொண்டு நிற்கும் நீங்கள் அத்தனை பேரும் அதற்கு சாட்சிகளே! ஏன், இந்த ஊரும் சாட்சியே, உலகமும் சாட்சியே!'

'இவைகள் எல்லாம் வெற்றியல்லாமல் வேறு என்ன? வெற்றி! வெற்றி! ஆம் வெற்றி! எனக்கே மகத்தான வெற்றி!'

கோதை பேய்ச் சிரிப்புச் சிரித்தாள். மீண்டும் மீண்டும் சிரித்தாள், அந்த அரண்மனையே அதிரும்படி சிரித்தாள். அவளுடைய சிரிப்பு அரண்மனை எங்கும் எதிரொலித்தது: நாராசமாகப் பாய்ந்தது. அந்தச் சிரிப்பு அங்கிருந்தோருக்கு அச்சத்தை அளித்தது. அவர்கள் கிலி பிடித்துப் பேதலித்து விட்டார்கள். ஒரு பேய் சுடுகாட்டில் கொக்கரிப்பது போல அவள் சிரித்தாள். அவளுடைய முகம் விகாரம் அடைந்தது. அவளுடைய உருவம் மாறியது. ஆனாலும் தொடர்ந்து சிரித்தாள். பின்னர் சிரித்துக் கொண்டே கூறினாள்:

'முட்டாள்களே, எனக்குப் பித்து பிடித்துவிட்டது என்று நினைக்க வேண்டாம். எத்தனை நாட்கள் நான் அழுது, அழுது துடித்து இருப்பேன்? அல்லும் பகலுமாக அழுது கதறி இருப்பேன்! அவற்றிற்கு எல்லாம் ஈடுசெய்ய இப்படி ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டேன். வேறு ஒன்றும் இல்லை. என்றைக்கும்விட இன்று என்னுடைய அறிவு தெளிவாக இருக்கிறது.'

'பெண்ணே, நல்ல குலத்தில் பிறந்து ஏன் இப்படிப் பேய் ஆனாய்? உனக்கு இந்த வஞ்சக எண்ணம் எப்படி வந்தது? யாருக்கும் மனதாலும் தீங்கு நினையாத சக்தி சீலரான இராசாதி ராசரையும், உலகையே அறியாத இளம் பிள்ளைகளையும் ஏன் கொலை செய்ய முனைந்தாய்? அவர்கள் உனக்கு என்ன தீமை செய்தார்கள்?' கண்ணீர் விட்டுக் கொண்டே கேட்டார் வேதவனம்.

'சேனாபதி, உன்னுடைய வினா சரியானதே. இப்படிப் பொறுமையோடு கேள். மறுமொழி சொல்லுகிறேன். எனக்கும் மனதில் இருப்பதை வெளியிட்டால்தான் வெறி அடங்கும்போல் இருக்கிறது. இந்த அரசனோ அல்லது காலம் சென்ற அரசனின் பிள்ளைகளோ எனக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை என்பது உண்மைதான் ஆனால் இவர்களுடைய முன்னோர்கள் சம்பாதித்த அரசில் இவர்களுக்கு பரம்பரை உரிமை இருக்கிறது அல்லவா? அதே முன்னோர்கள் செய்த பாபத்திலும்

இவர்களுக்கு உரிமை உண்டு அல்லவா சேனாபதி!' அவள் சிரித்துக் கொண்டே கூறினாள்.

'சோழ வம்சம் அப்படி என்ன பெரும் பாதகம் செய்து விட்டது?'

'சொல்லுகிறேன். அதனையும் சொன்னால்தான் எனக்கும் நிம்மதி ஏற்படும். மேலும் உங்களுடைய மன்னனும் உயிர் போகும் முன் தான் ஏன் இக்கதிக்கு ஆளானேன் என்பதை அறிந்து கொள்வது நல்லதே. அப்பொழுதுதான் அவருடைய ஆத்மாவும் சாந்தி அடையும். என்ன இருந்தாலும் இராசாதிராசன் என்னுடைய முன்னாள் காதலன். இந்தச் சிறு உதவியாவது கடைசி நேரத்தில் செய்து விடுகிறேன்.'

'கோதை, உன்னுடைய தாள் பணிந்து வேண்டுகிறேன், நான் நிலையான அமைதியைக் காணும் முன்பு நான் சாவதற்கான காரணத்தைச் சொல்லிவிடு.' இது அரசர் வேண்டுகோள்.

'இராசாதிராசா, சொல்லுகிறேன். உன்னை மன்னனாக் கினானே, அந்த இராசராசனை பெற்றெடுத்த கொடியவன் குலோத்துங்கன். அவன் வைணவ மதத்தினரை எவ்வளவு இழிவாக நடத்தினான்! வைணவப் பெரியார்களின் கண்களைப் பறித்தான். இராமானுச ஆச்சாரியரை நாடு கடத்தினான். எல்லாவற்றையும் விட மேலாக தில்லையம்பதியில் வீற்றிருந்த திருமாலைத் தூக்கிக் கொண்டு போய் கடலில் எறிந்தான். இதனைக் கேட்டு என்னுடைய உள்ளம் துடிதுடித்தது. நான் ஒரு வைணவப் பெண். என்னால் இந்தக் கொடுமையைத் தாங்க இயலாது தவித்தேன். இந்தக் கொடுமையைச் செய்த கொடியவர்களைப் பழிவாங்க வைணவ மதத்தில் எந்த ஆண் மகனும் பிறக்கவில்லை. அதனால் அப்பொறுப்பை நானே ஏற்றுக்கொண்டேன். என்னை நானே வேள்வியில் ஆகுதியாகப் படைத்துக் கொண்டேன். மனித உணர்வுகளை விட்டு ஒழித்தேன். பழிக்குப் பழி, பழிக்குப்பழி என என்னுடைய உள்ளம் சதாசர்வ காலமும் சொல்லிக் கொண்டே இருந்தது. பழிக்குப் பழி வாங்குவதையே இலட்சியமாகக் கொண்ட நான் பசி, தாகம், நித்திரை, மோகம் முதலிய மனித உணர்வுகள் அத்தனையும் விட்டு ஒழித்தேன் இலட்சியம் நிறைவேற அல்லும், பகலும் அலைந்தேன். சோழ நாடெங்கும் அலைந்தேன். பாண்டி நாட்டில் பரிதவித்தேன். ஈழநாட்டுக் காடுகளில் பேயாகச் சுற்றினேன். பல சூழ்ச்சிகளைச் செய்தேன் அதற்காகப் பலரைப் பயன்

படுத்தினேன். பலரை என்னுடைய மோக வலையில் சிக்க வைத்தேன். மன்னாதி மன்னர்களை எல்லாம் பம்பரமாக ஆட்டிப் படைத்தேன். இறுதியில் இன்றுதான் வெற்றி பெற்றேன். வெற்றி! வெற்றி! என் வாழ்வின் குறிக்கோளில் பாதி வெற்றி கிட்டி விட்டது. இனி என்னுடைய உயிரைப் பற்றி எனக்குக் கவலையே இல்லை.'

மன்னர் அவள் கூறியதை உற்றுக் கேட்டார். அவருடைய கண்கள் அவளைப் பார்த்தபடியே நிலைத்து நின்றன. அவருடைய மூச்சு ஒடுங்கிக் கொண்டே வந்தது. மருத்துவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு இருந்தார்கள். நேரம் செல்லச் செல்ல அங்கு சோழநாட்டுப் பிரமுகர்களுடைய கூட்டம் அதிகமாகிக் கொண்டு வந்தது. அப்பொழுது செய்தியைக் கேட்டு கதறிக் கொண்டு ஓடி வந்தவர்களில் ஆஸ்தானக் கவிஞரான ஆனந்தவரதக் கூத்தரும் ஒருவர். அவர் மன்னர் அருகில் வந்து நின்று அவருடைய தாளைத் தொட்டு வணங்கினார். பின்னர் ஒரு ஓரத்தில் கண்ணீர் சிந்திக் கொண்டு நின்றார்.

செய்தி காட்டுத் தீயைப் போல நகர் எங்கும் பரவவே, மேலும், மேலும் பிரமுகர்கள் வந்து குவிந்தார்கள். முக்கியமான பிரமுகர்கள் மட்டும் உள்ளே அனுப்பப்பட்டார்கள் பல சிற்றரசர்களும், படைத்தலைவர்களும், அமைச்சர் பெருமக்களும் அப்பொழுதுதான் செய்தியைக் கேட்டு ஓடி வந்தார்கள்.

ஏற்கெனவே இராசாதிராசன் குத்தப்பட்டதால் உளம் பதறிக் கொண்டு இருந்த அவர்களுடைய சிரங்களின் மீது மேலும் ஒரு இடி இறங்கியது. இராசராசன் இளவல்கள் எங்கோ பத்திரமாக வளருகிறார்கள என்றுதான் அன்று வரை அவர்கள் நினைத்துக் கொண்டு இருந்தார்கள். ஆனால், அப்பிள்ளைகள் கொல்லப் பட்டார்கள் என்ற செய்தி அப்பொழுதுதான் அவர்கள் கோதை மூலமாக அறிந்தார்கள். அனைவருடைய சோகமும் இரட்டிப்பாகி விட்டது. எங்கும் கதறல், 'ஐயோ, ஐயோ' என்ற பரிதாப ஒலிகள், வந்தவர்கள் மன்னரின் மீது காற்றும் படாது தடுத்துக் கொண்டு நின்றார்கள். அவர்களை அப்பால் விலகி நிற்கும்படி செய்ய சீவல்லபன் பெரும்பாடுபட்டான்.

மன்னர் ஏதோ பேச விரும்பினார். அவருடைய உதடுகளின் துடிப்பு அதனை நன்றாகக் காட்டியது, அவர் அனைவரையும் அப்பால் விலகி நிற்குமாறு கைசாடைக் காட்டினார். எல்லோரும்

ஒதுங்கி நின்று கொண்டார்கள். கோதை மட்டும் அவருக்கு எதிரில் கற்று தள்ளி நின்றிருந்தாள். அவளுக்குப் பின்னால் அவளைக் கைது செய்து அழைத்து வந்த காவலர்கள் நின்றிருந்தார்கள். அப்பொழுது அங்கு பரிபூரண அமைதி நிலவியது. அனைவரும் அரசரையே கண் இமைக்காது பார்த்தார்கள். அவர் கோதையைப் பார்த்து மெதுவான குரலில் பேசினார்:

'பெண்ணே, அல்லும் பகலும், கனவிலும், நனவிலும் வந்து என்னை அணு அணுவாகக் கொன்று கொண்டு இருந்தாய். நான் சாகவும் முடியாமல், வாழவும் முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டு இருந்தேன். சித்திரவதை செய்தாய். ஒவ்வொரு நொடியிலும் என்னுடைய இதயத்தில் வாளைப் பாய்ச்சினாய். என்னுடைய ஒவ்வொரு அங்கத்தையும் துண்டு துண்டாக வெட்டினாய். ஒரு நாளைக்கு எட்டு யாமங்களிலும் நரகத்தில் துடித்தேன். ஒரே மூச்சில் உயிர் விட்டு நிம்மதியைப் பெற ஏங்கினேன். அந்த நிம்மதியை இப்பொழுது எனக்கு ஏற்படுத்திக் கொடுத்து விட்டாய். அதற்காக உன்னை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

'ஆனால், ஒரே ஒரு வேலையை விட்டுச் செல்லுகிறேன். அதனைச் செய்யாமல் போவதற்காக மிகவும் வேதனைப் படுகிறேன். அந்தக் கடமையும் அண்மையில்தான் என் மீது சுமத்தப்பட்டது. அதனைக் செய்து முடித்த பின்னர் நானாகவே மரணத்தைத் தழுவிக் கொள்ளவே முடிவு செய்து இருந்தேன். அந்த ஒரு கடமையைச் செய்யவே உயிர் வாழ்ந்தேன். அதற்குள்.....

மன்னரால் தொடர்ந்து பேச இயலவில்லை. கண்களில் நீர் கொட்டியது. மேல்மூச்சு வாங்கியது.

'பேசாதீர்கள் அரசே,' என மருத்துவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். அவர்களை அரசர் அலட்சியத்தோடு பார்த்தார். வேண்டுகோளை மதியாது மேலும் பேச்சைத் தொடர்ந்தார்.

'மருத்துவர்களே, என்னைத் தடுக்க வேண்டாம். நான் இப்பொழுது பேசாவிட்டால் வேறு எப்பொழுது இனிப் பேசப் போகிறேன்? பெண்ணே, நான் செய்யாமல் விட்ட பணி இதுதான். நீ குறிப்பிட்டாயே அந்த திருமால் மூர்த்தத்தை மீண்டும் தில்லையம்பதிக்குக் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்வதுதான். அந்தப் புனிதச் செயலைக் செய்யவே உயிர்

வாழ்ந்தேன். அச்செயலைச் செய்வதின் மூலமாக என்னுடைய மூதாதையர் செய்த பாவத்திற்குப் பரிகாரம் தேட விழைந்தேன். அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்து முடித்துவிட்டேன். பாண்டி நாட்டிற்குச் சென்ற படைகளை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். படைகள் வந்ததும் அவற்றுடன் நானும் நடந்தே திருமலைக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தேன். அங்கு வைணவர்கள் மறைத்து வைத்திருக்கும் கோவிந்தராசன் மூர்த்தத்தைக் கொண்டுவந்து மீண்டும் தில்லையில் பிரதிஷ்டை செய்யத் திட்டமிட்டு இருந்தேன். ஆனால் அதற்குள் எனக்கு உன் மூலமாக இறைவனுடைய அழைப்பு வந்துவிட்டது. அதுதான் என்னுடைய வேதனை.' மன்னருடைய கண்களில் இருந்து நீர் கொட்டியது.

மன்னர் கூறியவற்றை கோதை கூர்ந்துக் கேட்டாள் அவளுடைய தலையின் மீது பேரிடி இறங்கிவிட்டது. அண்டசராசரம் அதிர்ந்து. பூமி வெடித்தது. மலைகள் பிளந்தன. காற்று நின்றது. கடலும், அலைகளும் செயல் இழந்தன. விண்ணில் பறந்த பறவைகள் அப்படியே நிலைத்து நின்றன. இடியும், மின்னலும் அவளுடைய இதயத்தைத் தாக்கின. வெடித்த பூமி அவளை வேகமாக விழுங்கிக் கொண்டு இருப்பதைப் போன்ற உணர்வைப் பெற்றாள். அவள் எழில் எங்கோ மறைந்தது. விகாரமான பேயாக மாறிவிட்டாள். வெறி பிடித்தவளைப் போலக் கத்தினாள்.

'ஐயையோ, நான் மாபெரும் பிழை செய்துவிட்டேன். இதுவரை யாருமே உலகில் செய்திராத அளவிற்குப் பெரும் பிழை செய்துவிட்டேன். எனக்கு ஏழேழு பிறவிகளிலும் பாழ் நரகம் தான் கிடைக்கும், சோழ மன்னா! தாங்கள் வைணவ மதத்தின் வைரி என இந்தப் பேதை நினைந்துவிட்டேன். தங்களைக் கொலை செய்வதின் மூலமாக வைணவத்திற்குப் பெரும் சேவை செய்கிறேன் என்ற எண்ணத்தில் சற்று முன்பு இங்கு வந்தேன். சுரங்கப் பாதையின் மூலமாக இந்த மேல் மாடத்திற்கு வந்தேன். இதோ, இந்தத் தூணிற்கு அப்பால் மறைத்துக் கொண்டு தங்களை கவனித்தேன். தாங்கள் உடல் மெலிந்து, பலவீனமாக இருந்தீர்கள். மேல் மூச்சு வாங்கிக் கொண்டு இருவருடன் பேசிக் கொண்டு இருந்தீர்கள். தங்களுடைய பலவீனமான நிலைமை என்னுடைய இதயத்தைக் குத்தியது. என்னுடைய மனதிலும் பலவீனம் புகுந்துவிட்டது. தங்களின் மீது ஒருவிதப்பரிவு ஏற்பட்டுவிட்டது. உறுதி தளர்ந்தது. எனவே, அந்த நோக்கத்தைக் கைவிட்டு விட்டு திரும்பிப் போக ஓர் அடி எடுத்து வைத்தேன்.

அப்பொழுது திருமலையில் இருக்கும் 'கோவிந்தராசன்' என்ற வார்த்தை என்னுடைய செவிகளில் பட்டது. அந்த மூர்த்தத்தைப் பற்றி இருவருடன் பேசினீர்கள். பேச்சு முழுதும் எனக்குத் தெளிவாகக் கேட்கவில்லை. ஆனால், திருமலையில் உள்ள கோவிந்தராசனைப் பற்றித் தாங்கள் குறிப்பிட்டதால், மீண்டும் அந்த மூர்த்தத்தைக் கடலில் எறியத் தாங்கள் ஏற்பாடு செய்கிறீர்கள் என நான் கருதி விட்டேன். மறைந்திருந்த என்னுடைய மிருக வெறி மீண்டும் கோர உருவம் எடுத்து விட்டது. மனிதத் தன்மையை மறந்தேன். மிருகமானேன் ஆத்திரத்தால் அறிவிழந்தேன். என்னுடைய இடுப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த விஷம் தடவிய குறுவாளை என்னுடைய கரம் எடுத்தது. காவலர்கள் ஊர்வலத்தைக் காண எழுந்து சென்றபொழுது தங்களுடைய முதுகின் மீது அதனை வீசினேன்.

'ஐயையோ, நான் மன்னருக்கு மாபெரும் தீமை செய்து விட்டேன். பெற்றெடுத்த நாட்டிற்கும், பிறந்த மண்ணிற்கும் மாபெரும் துரோகம் செய்து விட்டேன். புனிதமான வைணவ மதத்திற்கே கறை ஆகிவிட்டேன். பெரும் அறிஞர்களும், தவ சீலர்களும், தத்துவ ஞானிகளும் வைணவ மதத்தில் அவதரித்து இருக்கிறார்கள். அத்தகைய பெரியவர்கள் எல்லாம் எங்கோ அடக்கமாக இருக்க, நான்தான் அப்புனித மதத்தைக் காப்பாற்றப் பிறந்தவள் என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன். உலகிற்கு எல்லாம் படி அளக்கும் ஓங்கி உலகளந்த உத்தமனை இந்தப் பேதைதான் காப்பாற்றப் பிறந்திருக்கிறேன் என்று மமதை கொண்டு அலைந்தேன். மாபெரும் பாதகம் செய்து விட்டேன். இனி எனக்கு வாழ்வா? நாராயணா, வைகுந்தவாசா! ஒன்றே ஒன்றை இந்த நேரத்தில் யாசிக்கிறேன். என்னுடைய செயல் கொடுமையானதுதான். ஆனால், இந்த இழி பிறவியின் நோக்கம் நேர்மையானது. அந்த சிறந்த நோக்கத்திற்காக வாழ்நாளெல்லாம் சுற்றி அலைந்த நான், தங்களை ஒரே ஒரு வரம் வேண்டுகிறேன். நான் செய்த பாவத்திற்காக என்னை நரகத்தில் தள்ளட்டும். அங்கு கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் தூக்கிப் போடட்டும். நாகங்களும், தேள்களும் என்னைக் கடித்துச் சித்திரவதை செய்யட்டும், அனைத்தையும் ஏற்கிறேன்.

'ஆனால், ஒரே ஒரு வரம் மட்டும் இந்தப் பாவி யாசிக்கிறேன். வரதராசா, கோவிந்தா! இந்தப் பேதையின் உயிரை

எடுத்துக் கொண்டு அதற்குப் பதிலாக இந்நாட்டு மன்னனைக் காப்பாற்று, காப்பாற்று!'

கோதை மூச்சுவிடவும் முடியாமல் கத்தினாள். அனைவரும் அவளையும், மன்னரையும் மாறி, மாறிப் பார்த்தார்கள். அச்சமயம் யாருமே எதிர்பாரத வகையில் கோதை ஒரு காரியம் செய்து விட்டாள். தனக்குப் பின்னால் நின்றிருந்த காவலனை நெருங்கினாள். அவனுடைய இடையில் தொங்கிய வாளை வெடுக்கெனப் பறித்தாள். தன்னுடைய கரத்தில் ஏந்தினாள். அடுத்த நொடியில் அதனை ஓங்கி தன்னுடைய மார்பில் பாய்ச்சிக் கொண்டாள். தரையில் தடார் என விழுந்து விட்டாள்.

இச்சம்பவம் கண் இமைக்கும் நேரத்தில் நடந்து விட்டது. அனைவருடைய உணர்வுகளும் மரத்துவிட்டன. அங்கு இருந்தோர் அனைவரும் நிலைகுலைந்து உணர்வு அற்று மரமாக நின்றுவிட்டார்கள். நடப்பதைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். ஆனால், செயல்பட சக்தியற்று நின்றிருந்தார்கள். கொடுமை, குத்துப்பட்ட சோழ மன்னர் மஞ்சத்தில், குத்தியவள் மண்ணில்! இருவரும் எதிர் எதிரில்; ஆனால் ஒரே நிலையில்!

அச்சமயம் அங்கு முதன் முதலாக உணர்வு பெற்றவன் சித்தன்தான். அவன் ஒருபக்கம் ஒதுங்கி நின்று கொண்டு இருந்தான். உணர்வு வரவே அவன் பரபரப்புடன் மன்னரின் எதிரில் வந்து நின்றான். அவனுடைய முகம் இருண்டு இருந்தது. செயலில் வேகமும், துடிப்பும் இருந்தது. அவன் உணர்ச்சி வயப்பட்டு பலமான குரலில் பேசினான்:

'அரசே அருள் கூர்ந்து இந்தச் சிறியவனைச் சற்று பேச அனுமதிக்க வேண்டும். என்னுடைய ஆசான் சிற்றம் பலமுடையார் எனக்கு இட்ட கட்டளைக்கு மாறாக தற்பொழுது ஒரு செய்தியைச் சொல்லப் போகிறேன். இப்பொழுதே அதனைச் சொல்லி ஆகவேண்டும். அதை நான் வெளியில் சொல்லா விட்டால், என்னுடைய மண்டை வெடித்துவிடும் போல இருக்கிறது. இன்று சொல்லத் தவறினால் பின்பு அதனை என்றுமே வெளியிட வேண்டிய வாய்ப்பே இல்லாமல் போய்விடும்.'

மன்னர் சித்தனை உற்றுப் பார்த்தார். அந்நிலையில் அங்கு குறுக்கே வந்து ஏதோ பேச விரும்பும் அவனை அனைவரும் ஆவலோடு பார்த்தார்கள். எல்லோருடைய பார்வையும் அவன்மீதே நிலைத்து நின்றது.

'மன்னவா, இது என்னுடைய குருநாதர் திருச்சிற்றம் பலமுடையார் எனக்கு மட்டுமே சொன்ன பரமஇரகசியம். இன்றுவரை அது எனக்குத் தவிர யாருக்குமே தெரியாது.'

'சொல் சித்தா.'

'வெள்ளாற்றங்கரையில் கோதை இரு பிள்ளைகளைப் பலியிட்டாளே, அவர்கள் இராசராச சோழருடைய பிள்ளைகள் அல்ல!'

'என்ன சொன்னாய்? மீண்டும் சொல் சித்தா! தெளிவான சித்தத்துடன் பேசுகிறாயா? உண்மையாகத்தான் பேசுகிறாயா?'

மரணத்துடன் போராடிக் கொண்டு இருந்த மன்னர் வாயிலிருந்து இவ்வார்த்தைகள் ஒலித்தன. மூச்சு ஒடுங்கி வந்த அரசர் புத்துணர்வு பெற்று இவ்வினாக்களை தெளிவாகத் தொடுத்தார். அவருடைய முகத்திலே திடீரென உயிர்கலை கப்பியது. அவர் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தார்.

அனைவரும் பரபரப்புடன் சித்தனையும், அரசரையும் மாறி, மாறிப் பார்த்தார்கள். அத்தனை பேருடைய விழிகளும், சித்தன் மீதே நிலைத்து நின்றன. மன்னர் இமைகள் இமைக்க மறந்தன. சித்தன் மீதே நோட்டம் நிலைத்து நின்றது.

குருதி வெள்ளத்தில் மிதந்து கொண்டு இருந்த கோதையும் அதற்கு விலக்கு அல்ல. அவளும் ஆவலுடன் அவனையே பார்த்தாள். அவள் கண் இமைகள் செயல் இழந்துவிட்டன.

சித்தன் தொடர்ந்தாள்:

'ஆம், நான் தெளிவான சித்தத்தோடுதான் பேசுகிறேன். நான் சொல்லுவது அத்தனையும் உண்மை. என்னை ஆளாக்கிய குருநாதர் திருச்சிற்றம்பலமுடையார் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். கோதையால் கொல்லப்பட்டது மன்னர் மக்கள் அல்ல.'

'அப்படியானால் கொல்லப்பட்ட குழந்தைகள் யார்? மன்னர் மக்கள் எங்கே? அவர்கள் இறக்கவில்லையா? சொல் சித்தா, விரைவில் சொல்' இவை வேதவனம் அடுக்கிய வினாக்கள்.

'மன்னர் மக்கள் கொல்லப்படத்தான் இருந்தார்கள். ஆனால் மாமேதையான திருச்சிற்றம்பலமுடையார் தம்முடைய அறிவின் ஆற்றலாலும், தியாகத்தாலும் அவர்களைக் காப்பாற்றிவிட்டார் சோழநாட்டுச் சிற்றரசர்கள் கலவரம்

செய்யவே மன்னர் மக்களை திருச்சிற்றம்பலமுடையார் குளத்தூருக்குக் கடத்திச் சென்று மறைத்து வைத்தார். இதனை அனைவரும் அறிந்ததே. அவர்களை ஒருநாள் கோதையினால் ஏவப்பட்ட சதிகாரர்கள் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள். இதனை அறிந்த என்னுடைய குருநாதர் எப்படியும் கடத்தப்பட்ட குழந்தைகளைக் காப்பாற்ற விரும்பினார். சதிகாரர்களுடைய திசையைத் திருப்பத் திட்டமிட்டார். அந்த மகா இராசதந்திரி உள்ளத்திலே ஒரு யுக்தி உதித்தது.

'குளத்தூரிலிருந்து தம்முடைய சகோதரருடைய பிள்ளைகளை மன்னர் மக்கள் என்று சொல்லி அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்தார். அரசி புவனமுழுதுடையார் தம்முடைய மக்களைக் காண ஆவலுடன் எதிர்பார்த்துத் துடித்துக் கொண்டு இருந்தார். குழந்தைகள் அரண்மனைக்கு வந்தார்கள். ஆனால் அழைத்து வரப்பட்டவர்கள் தம்முடைய அன்புச் செல்வங்கள் அல்ல என்ற உண்மை அத்தாய் உள்ளத்திற்குத் தெரிந்துவிட்டது. இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என அவர் நினைத்து விட்டார். தாய் உள்ளம் தாங்கவில்லை. அதே நொடியில் தரை மீது சுருண்டு விழுந்து உயிர் விட்டார். ஆனால் அதற்கு முன்பே அவர்கள்தான் மன்னர் மக்கள் என்று கோதை நம்பும் அளவிற்குச் சூழ்ச்சி செய்தார் மாமேதை திருச்சிற்றம்பலமுடையார். தம்முடைய பேச்சை கோதை ஒட்டுக் கேட்கிறாள் என்பதை அறிந்த அவர் மகாராணியாரிடமும் என்னிடமும் இரகசியம் பேசுவது போல நடித்தார். தம்முடைய பேச்சிலே அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்ட தம்முடைய சகோதரருடைய மக்களை மன்னன் மக்கள் என்று வேண்டுமென்றே குறிப்பிட்டார். கோதை அப்படியே நம்பிவிட்டாள்.

அரண்மனையில் வளர்ந்த அப்பிள்ளைகள் இருவரும் அரசருடைய பிள்ளைகள் என்றே கோதை கருதிவிட்டாள். ஒரு நாள் இரவு அவர்களைக் கடத்தி விட்டாள். இதனைத்தான் திருச்சிற்றம்பலமுடையார் விரும்பினார். தெரிந்தே அவள் பிள்ளைகளைக் கடத்திக் கொண்டு போக விட்டு வைத்தார். இதன் மூலமாக தம்முடைய சகோதரர் பிள்ளைகளை மன்னர் மக்கள் எனச் சதிகாரர்கள் நம்பிவிடுவார்கள், அதனால் உண்மையான மன்னர் மக்களுக்குத் தீங்குநேராமல் தடுக்க இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என அந்த உத்தமர் நினைத்தார்.

இறைவன் அருளால் அந்த தூய்மையின் சிகரம் நினைத்த படியே செயல் நடந்தது. சதிகாரர்கள் என்னுடைய எதிரிலேயே திருச்சிற்றம்பலமுடையாருடைய சகோதரருடைய பிள்ளை களைக் கொன்றார்கள். அதனை நான் நேரில் பார்த்தேன். அப்பொழுது அவர்கள் மன்னர் மக்களே என்றுதான் நானும் நம்பினேன். கொல்லப்பட்டவர்களைக் காப்பாற்ற இந்தப் பாவியினால் இயலாது போயிற்று.'

சித்தன் வாய்விட்டு அழ ஆரம்பித்தான். கண்களில் இருந்து நீர் வெள்ளமெனக் கொட்டியது, ஆனால் வாயிலிருந்து வார்த்தை வெளிப்பட வில்லை.

'என்ன சொன்னாய்? சொல் சித்தா! அந்த தெய்வச் சிற்றம்பலம் தம்முடைய சகோதரருடைய பிள்ளைகளைப் பலியிட்டு மன்னர் மக்களைக் காப்பாற்றினாரா?' இந்த வார்த்தைகள் இறைவனுக்கு முன்னர் நிற்கும் பக்தனுடைய குரலைப்போல மன்னருடைய வாயிலிருந்து வந்தன. அவர் அந்நிலையிலும் தம்முடைய இரு கரங்களையும் ஒன்று சேர்த்துக் கூப்பி மறைந்த அந்த மாமேருவான திருச்சிற்றம்பலத்திற்கு வணக்கம் செலுத்தினார். கூப்பிய கரத்தினராய் தம்மை மறந்து அதே நிலையில் இருந்தார். சித்தன் தொடர்ந்தான். அனைவரும் மௌனமாக சிலை களைப் போல செயல் அற்று நின்றார்கள்.

'எனக்கே முதலில் இவை எல்லாம் தெரியாது. இறந்தவர்கள் மன்னர் மக்கள் அல்ல, தம்முடைய சகோதரருடைய மக்கள் என்ற உண்மையை இறப்பதற்குச் சற்று நேரத்திற்கு முன்னர்தான் பல்லவராயர் என்னிடம் தனிமையில் கூறினார். மன்னர் உட்பட யாருக்குமே இந்த இரகசியம் தெரியக்கூடாது என்று ஆணையிட்டார். உண்மை வெளியில் தெரிந்துவிட்டால் உண்மையான அரசகுமாரர்கள் உயிருக்கு ஆபத்து என்று அவர் கருதினார். கோதையால் அரசு குமாரர்கள் கொல்லப்படவில்லை என்பது தெளிவாகிவிட்டது. ஆனால் அவர்கள் எங்கு இருக்கிறார்கள், கோதை அவர்களை என்ன செய்தாள் என்பது மட்டும் எனக்குத் தெரியவில்லை. எனவே உண்மையான அரசகுமாரர்களைத் தேடிப் பிடிப்பதே என்னுடைய ஒரே பணியாக இருக்க வேண்டும் என்று எனக்கு ஆணையிட்டுவிட்டு அத்தெய்வம் கண்களை மூடிக்கொண்டது.

'அந்தப் பணியைத்தான் இன்றுவரை செய்தேன். இத்தனை நாட்கள் அல்லும், பகலாக அதே பணியைச் செய்தேன். ஆனால்

அரசகுமாரர்களைப் பற்றி எதுவுமே அறிய இயலவில்லை. இந்தப் பெண்ணின் பின்னால் அலைந்தேன். என்னுடைய முயற்சிகள் அனைத்தும் தோற்று விட்டன. என்னால் அரசகுமாரர்களைக் கண்டுபிடிக்க இயலவில்லை. நான் தோல்விகண்டு தலை சாய்ந்து நிற்கிறேன்.'

இவ்வாறு கூறிய சித்தன் மேலும் பலமாக அழத் தொடங்கிவிட்டான். அவனுடைய அழுகையை அடக்கிக் கொண்டு மன்னருடைய குரல் ஒலித்தது.

'சித்தா, நான் வீர குடும்பத்தில் பிறந்தவன். என்னுடைய உடலில் வீரக்குருதி ஓடுகிறது. நான் மரணத்திற்கு அஞ்சும் கோழை அல்ல. இந்த நொடிவரை சதாசர்வ காலமும் மரணத்தை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டு இருந்தேன். ஆனால்..... ஆனால் இப்பொழுது தான் நான் குத்தப்பட்டதற்காக மனப்பூர்வமாக வருந்துகிறேன். உயிர் பிழைக்க வேண்டும் என்று உள்ளம் துடிக்கிறது. நான் மட்டும் உயிரோடு இருந்திருப்பின் மன்னர் மக்கள் இத்தமிழ் மண்ணில் மட்டும் அல்ல, பரத கண்டத்தில், ஏன் இப்பூவுலகில் எப்பகுதியில் இருந்தாலும் தேடிப் பிடித்து அவர்களைச் சோழ சிம்மாசனத்தில் அமர்த்தி இருப்பேன். அதற்கு ஒரு வாய்ப்பு இல்லாமல் இப்பேதைப் பெண் செய்து விட்டாளே, எமதர்மன் எனக்கு எதிரில் பாசக் கயிற்றுடன் நிற்கிறானே, நான் என்ன செய்வேன், சித்தா!'

மன்னர் வாய்விட்டு அழத்தொடங்கினார். அவருக்கு உயிரின் மீது ஆசை வந்துவிட்டது. கண்ணீர் விட்டுக் கொண்டேவிக்கி, விக்கி அழுதார். மருத்துவர்களால் அவரைத் தடுத்த இயலவில்லை. அவருடைய போக்கிலேயே விட்டு விட்டார்கள் அவரைப் பார்த்து மற்றவர்களும் அழத் துவங்கிவிட்டார்கள். இதற்கு மருத்துவர்களும் விலக்கு அல்ல. அந்தக் சோகக் காட்சிக்கு உவமையே கூறுவது அரிது.

இலங்கை அரக்கியர்கள் சீதையை விமானத்தில் ஏற்றிக் கொண்டு போய் போர்களத்தைக் காட்டினார்கள். அதனைக் கண்ட மங்கை சீதை அழுதாள். அவளுடைய சோகத்தைக் கண்டு வான் நாட்டுக் பெண்கள் அழுதார்கள். விடையோன் பங்கின் உறையும் குயில் அழுதாள். நாமடந்தை அழுதாள். கமலத்தடங் கண்ணன் தங்கை அழுதாள். இரங்காத அரக்கிமாரும் இரங்கி அழுதார்கள். இவ்வாறு வர்ணிக்கிறார் சீதையின் துயிரை கம்ப நாடாழ்வார். அந்த நிகழ்ச்சிதான் இங்கு நினைவுக்கு வருகிறது.

37

திருமால் தில்லைக்கு வந்தார்

அங்கு இருந்த அனைவரும் அழுதவாறு மன்னர் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது அழுகைக் குரல்களைப் பிளந்துக்கொண்டு 'அரசே, அரசே!' என்று ஒரு முனகல் ஒலி கேட்டது. அனைவரும் அக்குரல் வந்த திக்கையே திரும்பிப் பார்த்தார்கள். மன்னரும் தமக்கு முன்னால் தரையில் விழுந்துகிடந்து கோதையை நோக்கினார்.

அக்குரல் தரையில் குருதியின் இடையே விழுந்து கிடந்த கோதையின் ஓலம்தான். அனைவரும் அப் பெண்ணையே உற்றுப் பார்த்தார்கள். சித்தன் கூறிய புதிய செய்தி, மன்னரின் அழுகை ஆகியவை அங்கிருந்தோர் கோதையை மறக்கச் செய்துவிட்டது. அவளைப் பற்றி நினைக்க அவர்களுக்கு நேரமில்லை. ஆனால் மருத்துவர்கள் தங்களுடைய கடமையைச் செய்யத் தவறவில்லை. அவளுடைய மார்பில் பாய்ந்திருந்த வாளைப் பறித்தெடுக்க முயன்றார்கள். ஆனால் அது பயனற்ற முயற்சியாகப்பட்டது, அந்த வாளை எடுத்தால் மேலும் அதிகமாக குருதி பெருக்கெடுத்து வரலாம். அதனால் சற்று நேரம் கழித்துப் போகக்கூடிய உயிர் உடனே உடலை விட்டுப் பிரியலாம் என்ற நிலைமை. இனி எப்படியும் அவளைக் காப்பாற்ற முடியாது. எனவே அவர்கள் அவளைக் குத்தியிருந்த வாளை எடுக்கும் முயற்சியைக் கைவிட்டுவிட்டு வாளா நின்றார்கள்.

அப்பொழுது மமதையால் அழிந்த அப்பெண்ணின் மீது யாருக்கும் குரோதம் இல்லை. ஒருவித விரக்தியுடன் அவளை நோக்கினார்கள். எல்லாம் விதி என்று விதியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு அவளைப் பார்த்தார்கள்.

கோதையின் கண்கள் மன்னரின்மீது நிலைத்து நின்றன. ஒரு காலத்தில் உலகையே ஆட்டிவைத்த அக்கண்கள் ஒளி இழந்து, குழி விழுந்து பரிதாபமாக இருந்தன, அவள் மெதுவாக, மூச்சு இரைக்க, இரைக்க ஒவ்வொரு வார்த்தையாகப் பேசினாள்.

'மன்னா, மரணத்தின் வாயிலில் நிற்கும் இந்தப் பேதை சொல்லுவதைச் சற்றுகேளுங்கள். இந்தப் பாவியை நம்புங்கள். நான் ஈனப்பிறவி. எத்தனையோ பாவங்களைச் செய்து விட்டேன். அவற்றின் இடையே ஒரு நல்ல செயலும் செய்திருக்கிறேன் என்பது இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது.

'நான் அரண்மனையில் இருந்து கடத்திக் கொண்டு போனவர்கள் மன்னர் மக்களே என்று இதுவரை கருதினேன். அவர்களைக் கொன்று விட்டேன் குளத்தூரில் நான் கடத்தியவர்கள் திருச்சிற்றம்பலமுடையரின் சகோதரருடைய பிள்ளைகள் என்று நம்பினேன். எக்காரணத்தாலோ அப்பிள்ளைகளின் மீது எனக்கு ஒருவிதப் பாசம் பிறந்துவிட்டது. என்னுடைய வரண்ட உள்ளத்தில் முளைத்த பசுமை அவர்கள். எனவே அவர்களை என்னுடைய உயிருக்கு உயிராக நேசித்தேன். பெற்ற தாயினும் மேலாக அவர்களிடம் பாசத்தைக் கொட்டினேன்.

'ஆனால் இந்தப்பாவி செய்த பாவத்தின் விளைவாக அவ்விருவரும் என்னை விட்டுப் பிரிந்துவிட்டார்கள். சதியையே சதாசர்வகாலமும் தொழிலாகக் கொண்டிருந்த எனக்குப் பிள்ளைகளை வளர்க்க பொழுது இல்லை. காஞ்சியில் இருந்த நாதமுனிப்பட்டர் என்ற ஒரு பெரியாரிடம் பிள்ளைகளை ஒப்படைத்து, வளர்க்க ஏற்பாடு செய்தேன். ஆனால் விதி கோரமாக விளையாடி விட்டது. அது நாதமுனிபட்டருக்கு சோழ அரசின் ஆஸ்தான கவிஞரான ஆனந்தவரதக்கூத்தரை நண்பராக்கி விட்டது. ஆனந்தவரதகூத்தர் பெரியபிள்ளையை எங்கேயோ அழைத்துக்கொண்டு போனார். அவன் என்ன ஆனான் என்று இன்றுவரை எனக்குத் தெரியாது.

'சிறியவனை ஈழத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றேன். ஆனால் இந்தக் கொடுமைக்காரி அவனை ஈழத்தில் பறிகொடுத்துவிட்டேன். நான் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே சிம்மகிரிக் காட்டில் கள்வர்கள் பிள்ளையை என்னிடமிருந்து பறித்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். அன்புச் செல்வங்கள் இருவரையும் பறிகொடுத்துவிட்டேன். இறைவா, இருவரும் என்ன ஆனார்களோ....'

பேசும்போதே கோதைக்கு மூச்சு அடைத்தது. திணறினாள். மேலும் அவளால் பேச இயலவில்லை. ஏதோ சொல்ல முயன்று வாய் திறந்தாள். வார்த்தைகள் வரவில்லை. கண்கள் இராசாதிராசனை இமையாது பார்த்துக் கொண்டே நின்றன. அப்படியே விறைத்துக் கொண்டு விட்டன.

அரண்மனை மருத்துவர்கள் அவசர, அவசரமாக அவளுடைய நாடியைப் பிடித்துப் பார்த்தார்கள். தலைமை மருத்துவர் நாசியின் கீழ் விரலை வைத்துப் பார்த்தார். அவர் வாய் சப்பியபடியே அப்பால் நகர்ந்து விட்டார். அந்த வைணவப் பெண் எவ்வளவோ கொடுமைக்காரிதான். மன்னருக்கே இறுதி தேடியவள் தான். ஆயினும் அவளுடைய சோகமான முடிவு அங்கு இருந்தவர்களுக்கு எப்படியோ இருந்தது. அவள் இராசராச சோழருடைய மக்களைக் கொல்லவில்லை என்பதால் அச்சமயம் அங்கிருந்தவர்களுக்கு அவள்மீது ஒருவித அனுதாபமும் ஏற்பட்டது. அரசர் இருந்த நிலையில் அவளைப்பற்றி அதற்குமேல் நினைக்க அங்கிருந்தவர்களுக்கு உள்ளம் ஏது! பிணம் அவ்விடத்தை விட்டு அப்பால் கொண்டு போகப்பட்டது.

சேனாபதி வேதவனம் மேலும் மன்னருக்கு அருகில் நெருங்கி வந்தார். அவர் எதோ பேசத் துடிகிறார் என்பதை அவருடைய வதனம் நன்கு காட்டியது. அரசர் அவரையே உற்றுப் பார்த்தார், வேதவனம் வேதனையோடு பேசினார்:

'அரசே, எனக்கும் தெரியாமல் நானும் ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறேன். ஆனால் அச்செயல் பயனற்றுப் போய் விட்டது. நான் ஈழவேந்தனைச் சந்திக்க மாறு வேடத்தில் இங்கிருந்து கொழும்புவிற்கு சென்றுகொண்டு இருந்தேன் திருமாறன் என்ற புனைப் பெயரில் போய்க் கொண்டு இருந்தேன்.

'ஒருநாள் இரவு பயங்கரமான இருள். சிம்மகிரிக் காட்டில் புரவியில் போய்க்கொண்டு இருந்தேன். அப்பொழுது ஒரு தாயும், சேயும் கள்வர்களிடம் சிக்கிக் கொண்டார்கள் அவர்களைக் காப்பாற்ற முயன்றேன். ஆனால், என்னால் அத்தாயைக் காப்பாற்ற இயலவில்லை. பிள்ளையை மட்டுமே காப்பாற்ற முடிந்தது. அப் பிள்ளையை அனுராதபுரத்திற்கு அழைத்துக் கொண்டு போனேன். அவனை அனுராதபுரத்தில் சிம்மபாகு என்ற தமிழ் போர்வீரனிடம் ஒப்படைத்தேன். அப்போர்வீரன் ஏற்கனவே எனக்குத் தெரிந்தவன். அன்றைய நிலையில் என்னுடைய தலைமீது பல கடமைகள் சுமத்தப்பட்டு இருந்தால், வெகுகாலம் அப்பிள்ளையை மறந்துவிட்டேன்.

'அப்பிள்ளையைப் பற்றி நினைவு காலம் கடந்தே வந்தது. அவனைப் பற்றி விசாரித்தேன். சோழநாடு செய்த துர்ப்பாக்கியம். சிம்மபாகு கொஞ்ச காலத்தில் போரில் இறந்துவிட்டானாம். அத் தம்பதிகளிடம் நான் அடைக்கலமாக ஒப்படைத்த அப் பிள்ளையும், சிம்ம பாகுவினுடைய மனைவியும் என்ன ஆனார்கள் என்று தெரியவே இல்லை. அவர்களைப் பற்றி அறிய

எவ்வளவோ முயன்றேன். எந்தக் தகவலும் கிட்டவே இல்லை. இப்பொழுது கோதை கூறியதிலிருந்து அந்தப் பிள்ளைதான் அரச செல்வங்களின் ஒருவனாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது.'

'அப்படியா? சேனாபதி, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விட்டதே! கடவுள் கருணை புரிய வில்லையே!' மன்னர் அங்கலாய்த்தார்.

இதற்குள் அங்கு பிரமுகர்கள்கூட்டம் அதிகமாகப் பெருகி விட்டது. அந்நிலையில், அரண்மனைக்குள் மற்றவர்கள் வருவதைக் கடுமையாகத் தடுக்கப்பட்டது. ஆனால் மந்திரி பிரதானிகளையும், சிற்றரசர்களையும், நாடு காவல் அதிகாரிகளையும் தடுக்க இயலவில்லை. மன்னரைச் சூழ்ந்திருந்த கூட்டம் பெருகிக் கொண்டே வந்தது. கவிராயர் ஆனந்தவரதக்கூத்தர் எங்கோ ஒரு மூலைக்குத் தள்ளப்பட்டார்.

இச்சமயம் கூத்தர் கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு அரசரை நெருங்கி வந்தார், மன்னர் எதிரில் வந்து தலை நிமிர்ந்து நின்றார். தம்முடைய நிழலாக என்றுமே உடன் அழைத்துக் கொண்டு செல்லும் இளைஞனுடைய கரத்தை தம் வலக்கரத்தால் பிடித்திருந்தார். யாருடைய அனுமதியும் இன்றியே உணர்ச்சி வசப்பட்டு கவிஞர் உரக்கப் பேசினார்.

'மன்னா, அஞ்சற்க! ஆவின் கன்றுக்காக தம்முடைய அருமைப் புதல்வன்மீது தேரைஓட்டிய மனுநீதிச் சோழனும் புறாவுக்காக தம்மையே கொடுத்த சிபிச் சக்ரவர்த்தியும் அவதரித்த செம்பியன் குலம் செய்த புண்ணியங்கள் வீண் போகா. இதோ இந்த மாசறும் பொன்தான் கோதை குறிப்பிட்ட செல்வன். நாதமுனி பட்டரிடமிருந்து நான் அழைத்துச் சென்ற அரச குமாரர்களில் மூத்தவன்.'

'என்ன? கவிராயரே மறுபடியும் சொல்லும். இந்தப் பிள்ளை இராசராச சோழருடைய மூத்த புதல்வனா? சொல்லுங்கள் புலவரே, மீண்டும் சொல்லுங்கள்! என்னுடைய இதயம் குளிர மீண்டும் மீண்டும் சொல்லுங்கள்! நான் கனவு காணவில்லையே?'

'அரசே, இந்தக் கவிஞன் சொல்லுவது முக்காலும் உண்மை. இவன்தான் இராசராச சோழரின் மூத்த புதல்வன்' இந்த நல்ல பிள்ளையின் பெயரே, நல்லமன் என்பதுதான்.'

நல்லமா, அன்பே, என்னுடைய ஆருயிரே, அருகில் வா, தம்பி! மரணத்தின் வாயிலில் நிற்கும் என் வாயில் பாலை வார்த்தாய். சோழ குல விளக்கு அணையாது காப்பாற்றி விட்டாய். கடைசி நேரத்தில் அந்த முக்கண்ணன் என்னுடைய

கவலையைப் போக்கி விட்டான். நிம்மதி பெற்றுவிட்டேன். இனி மகிழ்வோடு மரணத்தை அணைத்துக் கொள்வேன். எனக்குப் புது தெம்பு வந்துவிட்டது. இனி என்னுடைய உயிர் எளிதில் போகாது. அந்த எமதர்மனே எதிரில் வந்தாலும் சற்று கெடு கேட்பேன். என் ஆருயிர் நல்லமனுக்கு இப்பொழுதே முடி சூட்டுவேன். அதைக்கண்டு விட்டுதான் என் கண்கள் மூடும். சேனாபதி விரைவில் முடிசூட்டுவிழா நடக்கட்டும்.

அரசர் நல்லமனுடைய வலது கரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு உற்சாகமாகப் பேசினார். குத்தப்பட்ட தம்முடைய உடல்நிலையை மறந்தார். மற்றவர்களும் அந்த நொடியில் அரசரின் நிலைமையை மறந்துவிட்டார்கள், அரசர் உரக்கக் கூவினார். அவருடைய குரலில் தாபம் பளிச்சிட்டது. மங்கிய அவருடைய கண்களிலே ஒளி சுடர்விட்டது.

ஆனால், சிறுவன் நல்லமனுடைய நிலைமை பரிதாபகரமாக இருந்தது. மன்னர் பேசுவதை அவன் புரிந்து கொண்டான். அரசு கிடைக்கிறது என்பதற்காக அவன் மகிழ்ச்சி அடையவில்லை. அவனுடைய தாமரை வதனம் வாடி விட்டது. தன்னுடைய வரலாறு இப்படித் திசை திரும்பும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. மகிழ வேண்டிய நேரத்தில் அவன் கவலையே அடைந்தான்.

அவன் தன்னுடைய கரத்தை மன்னருடைய கரத்திலிருந்து விடுவித்துக் கொண்டான். கீழே தாழ்ந்து அரசருடைய இரு பாதங்களையும் தொட்டு வணங்கினான். பின்னர், இருகரங்களையும் கூப்பியவாறு மெதுவாகப் பேசினான்:

'அரசே, நான் சிறியவன். அடியேன் ஒரு வார்த்தைக் கூற அனுமதிப்பீர்களா?'

'நல்லமா, எனது ஆருயிரே, ஒரு வார்த்தை என்ன, ஓராயிரம் வார்த்தைகளைப் பேசு! அத்தனையும் கேட்காமல் என்னுடைய உயிர் போகாது. எமனை என்னுடைய காலால் எட்டி உதைத்தே துரத்தி விடுவேன். நீ பேசு. வீணையின் நாதம் போன்ற, வேய்குழலின் கீதம் போன்ற உன்னுடைய மழலைச் சொற்கள் என்னுடைய செவிகளில் தேனாகப் பாயுதடா தம்பி பேசு.'

'மகாபிரபு, நான் பேசப் போவது தங்களுக்கு மகிழ்ச்சி அளிக்காது. தங்களுடைய கருத்துக்கு மாறாக நான் பேசப் போவதற்காக என்னை மன்னித்து அருளுமாறு தங்களுடைய தாள் பணிந்து வேண்டுகிறேன். நான் சிறியவன் கூத்த

பெருமானைக் குருவாகக் கொண்ட எளிய சீடன் நான். அப்பெரியாருடன் பல புண்ணியம்பதிகளுக்குச் சென்றேன். இறைவனை தரிசித்தேன். பல மகான்களைச் சேவிக்கும் பெரும்பேறு பெற்றேன். இந்த அஞ்ஞானி பல ஞான நூல்களை கற்கும் பேற்றினைக் கூத்தப் பெருமான் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். கற்ற ஞான நூல்களும், தரிசித்த பெரியவர்களும் எனக்குப் போதித்த ஒரே பாடம் இதுதான். எளிய மனிதர்களில் ஒரு மனிதனாக வாழ்ந்து கொண்டு மனித குலத்திற்குத் தொண்டு செய்ய வேண்டும் என்பதே அது. சமுதாயத்தில் இன்று மறைந்து வரும் ஆத்மீக, தார்மீக நியதிகளுக்குப் புத்துயிர் அளிக்க என்னால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்பதே அது. எனவே அரசே! என்னை என்னுடைய வழியில் விடுங்கள். இந்தக் கடையனின் சிரத்தின்மீது பெருமைமிக்க சோழ மணிமகுடத்தைச் சுமக்கவைக்க வேண்டாம். அதனை நான் தாங்கும் நிலையில் இல்லை. தங்களுடைய ஆணையைத் தட்டுவதற்காக என்னை மன்னித்து அருளுங்கள் மன்னா!'

நல்லமன் இச்சொற்களை தெளிவாக, தங்கு தடையின்றிக் கூறினான். அவை ஒவ்வொன்று அவனுடைய இருதயத்திலிருந்து வெளியே வந்தன.

அங்கிருந்தவர்கள் அப்பொழுது அங்கு நல்லமன் என்ற இளைஞனைக் காணவில்லை. பிதாமகர் பீஷ்மாச்சாரியாரையும், கருணைவள்ளல் சித்தார்த்தனையும் தான் கண்டார்கள் இச்சொற்களை அசைக்க முடியாத உறுதியுடன் நல்லமன் கூறினான். அவனுடைய முகத்திலே கம்பீரமும், தீர்க்கமான தெளிவும் சுடர்விட்டு ஒளித்தன. சலனங்களுக்கு அப்பாற்பட்ட சத்தியத்தின் குரல் அங்கு பேசியது.

ஆனால் இவ்வார்த்தைகள் மன்னருடைய செவிகளிலே நாராசமாகப் பாய்ந்தன. அவருடைய நெஞ்சை ஈட்டிகளாகக் குத்தின. அவருடைய சென்னியின் மீது இடிகளாக இறங்கின. அவர் பதறிக் கொண்டே நாகுழறப் பேசினார்.

'நல்லமா! என்னுடைய அன்புச் சகோதரா, அப்படிச் சொல்லாதே, என்னுடைய வார்த்தையைத் தட்டிப் பேசாதே. ஊசாலாடிக் கொண்டு இருக்கும் என்னுடைய உயிர் உடனே பிரிந்துவிடும். என்னைக் காப்பாற்று நல்லம்மா!'

அரசர் நல்லமனுடைய இரு கரங்களையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டார். அழுது கொண்டே அவனுடைய

மறுமொழியை எதிர்பார்த்தார், வைத்தவிழி வாங்காது அவனையே உற்றுப் பார்த்தார்.

நல்லமன் தன்னுடைய கரங்களை விடுவித்துக் கொண்டான். மீண்டும் மன்னருடைய பாதங்களில் விழுந்து வணங்கினான், எழுந்து நின்று கண்ணீர் விட்டவாறு பேசினான்:

'மன்னர் மன்னா, இந்தச் சிறியவன் செய்யும் பிழையைப் பொறுத்து அருளுங்கள். அருள்கூர்ந்து என்னை இவ்வுலக வாழ்வு பந்தங்களில் சிக்க வைக்காது அருளுங்கள், மகாபிரபு!'

அப்பொழுது ஆனந்த வரதக்கூத்தர் ஒரு அடி எடுத்து வைத்து அரசரை நெருங்கி வந்தார். அவர் ஏதோ சொல்ல விரும்பினார் மன்னர் கூத்தரைப் பார்த்துப் பணிவோடு வேண்டினார்.

'கூத்தப் பெருமானே, அரசை ஏற்குமாறு தாங்களாவது நல்லமனுக்குச் சொல்லுங்கள். தங்களுடைய சீடனுக்கு ஆணை இடுங்கள். என்னுடைய உயிரைக் காப்பாற்றுங்கள், புலவரே!'

இதற்கு மறுமொழியாக கூத்தர் கூறினார்:

'அரசே, அனைத்தும் விதியின்படியே நடக்கும். அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது. அனைவரையும் ஆட்டுவிப்பவன் ஒருவன் இருக்கிறான். அவன் ஆட்டுவிக்கும்படி ஆடும் சூத்திரப்பாவைகள்தான் நாம் அனைவரும். நம்மால் ஆவது ஒன்றும் இல்லை. நல்லமனை தாங்கள் வற்புறுத்துவது தேவையற்றது என்றே எனக்கும் படுகிறது. அவன் வழியிலேயேஅவனை விட்டுவிடுங்கள். நடப்பது அனைத்தும் நல்லதற்கே. செம்பியன் குலத்தை அந்த முக்கண்ணன் காப்பாற்றுவன். நல்லமன் தோற்றத்தில் சிறுபிள்ளையைப் போல் தென்படுகிறான், ஆனால் அவன் உள்ளத்தால் ஒரு தெளிந்த ஞானி. ஐம்புலன்களை வென்று விட்ட துறவி அவன். இந்த இளம் வயதிலேயே ஞானத்தைப் பெற்றுவிட்டான். இனி இவன் உலக வாழ்விற்கு உதவமாட்டான். சோழகுலம் பெற்றெடுத்த சிவநேசச் செல்வரான கண்டராதித்தரையும் விட இவன் சிறந்து விளங்குவான் என்பதே என்னுடைய கருத்து. இவனால் சோழ குலத்தின் சிறப்பு உயரும். ஆதலால் அரசே! இவனை அதே வழியிலேயே விட வேண்டுகிறேன்.'

'அப்படியா? புலவர் பெருமானே அதுதானா தங்களுடைய கருத்தும்?' மன்னர் விரக்தியோடு கூறினார். பெருமூச்சு விட்டார்.

வெகுநேரம் பேசவே இல்லை. ஆழ்ந்த சிந்தையில் இருந்தார். அனைவரும் வாய் மௌனிகளாக அசையாது நின்று கொண்டு இருந்தார்கள். மன்னர் திடீரென ஏதோ நினைவு வந்தவரைப் போல தமக்குத் தாமே கேட்டுக் கொண்டார்.

'ஆம், நல்லமனுடைய இளவல் என்ன ஆனான்? இறைவா? அவனாவது இருக்கக்கூடாதா? விசயாலய சோழர் வைத்த மரம் பட்டுப் போகாமல் காப்பாற்ற மாட்டாயா? இளையவன் என்னவாகி இருப்பான்? அவன் உயிரோடு இருக்கிறானா அல்லது அவனை ஆண்டவன் அழைத்துக் கொண்டானா? நான் என்ன செய்வேன் சோழீஸ்வரா!'

சற்று முன்னர் நல்லமன் மன்னருடைய சொற்களைக் கேட்கப் பிடிவாதமாக மறுத்தபோது அங்கிருந்த சீவல்லபன் பரபரப்போடு வெளியே சென்றான். இப்பொழுது ஒரு இளைஞன் கரத்தைப் பிடித்து அழைத்துக் கொண்டு வேகமாக வந்தான். சீவல்லபனுடைய முகத்திலே பதட்டமும், ஆத்திரமும் குடிகொண்டு இருந்தன. அவனையே அனைவரும் உற்றுப் பார்த்தார்கள். மன்னரும் மனம் குழம்பிக் கொண்டு அவனை நோக்கினார். சீவல்லபன் தெளிவாக குரலில் பேசினான்:

'அரசே அஞ்சாதீர்கள். சோழகுலம் செய்த புண்ணியம் வீண்போகவில்லை. செம்பியர் திலகமே, தங்களுடைய சத்தியம் பொய்யாகவில்லை. இதோ பாருங்கள், நன்றாகப் பாருங்கள், இவன்தான் சோழ குலத்தை வாழவைக்க வந்த இராசராச சோழருடைய இளைய புதல்வன். பெயர் மகீதரன்.'

'என்ன சொன்னீர்கள்?'

'ஆம், அரசே! இவன்தான் மறைந்த மன்னருடைய இரண்டாவது புதல்வன். இன்று வரை இந்த மகத்தான உண்மை எனக்கே தெரியாது, கோதை சொன்ன விபரங்களின் பேரில்தான் இந்த உண்மைகளை நான் உணர்ந்து கொண்டேன். ஈழத்துக் காட்டில் கோதை பறி கொடுத்த பிள்ளை இவனேதான்.'

'அப்படியா, துர்க்கா பரமேஸ்வரி! என்னை நீ கைவிடவில்லை, நான் கொடுத்து வைத்தவன்.'

'அரசர் மகீதரனை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டார். அவன் உச்சியின் மீது முத்தமாரி பொழிந்தார். 'நான் கனவு காணவில்லையே! சீவல்லபா, என்னை நீங்கள் எல்லாம் சேர்ந்து ஏமாற்றவில்லையே!' என்று அவர் வாய் முணுமுணுத்தது.

'என்ன சீவல்லபரே, இந்த இளம் சிங்கம் இராசராசர் பெற்றெடுத்த இரண்டாவது புதல்வனா?' இவ்வார்த்தைகள்

வேதவனத்தினுடைய வாயிலிருந்து உதிர்ந்தன. இதுவரை அவர் வாய் அடைக்கப்பட்டு இருந்தது. வியப்பால் மரமாக நின்று கொண்டு இருந்தார்.

'ஆம், சேனாபதி! தாங்கள் குறிப்பிட்டீர்களே, அந்த சிங்கக் குட்டி இவனேதான். தாங்கள் சிம்மபாகுவிடம் ஒப்படைத்தது இவனைத்தான். இவன்தான் என்னுடைய உயிரையே ஈழத்தில் காப்பாற்றினான். அதனால், இவனுடைய நேசம் எனக்குக் கிடைத்தது. சிம்மபாகு இறந்துவிட்டான், நான்தான் சிம்மபாகுவினுடைய மனைவியையும், இவனையும் என்னுடன் அழைத்துக் கொண்டு வந்து விட்டேன். இவன்தான் அரச புதல்வன் என்பதற்கு இவன் 'போரில் காட்டிய அளப்பறிய ஆற்றலே தக்க சான்று.' இவை சீவல்லபனின் வார்த்தைகள்.

மன்னருடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. வாடிய அவருடைய வதனம் மீண்டும் வான் மழை கண்ட பயிராக மலர்ந்தது.

'அனைத்தும் அவன் செயல், சோழகுலம் செய்த பேறு.' மன்னர் இருகரங்களையும் கூப்பியவாறு இவ் வார்த்தைகளைக் கூறினார்.

'ஆம், அரசே, சோழகுலம் பெரும்பேறு செய்ததுதான். இந்த மகீதரன் சாதாரணமானவன் அல்ல. நாம் பாண்டி நாட்டுப் போரில் எதிர்பார்த்ததைவிட எளிதாக, விரைவாக வெற்றி பெற்றுவிட்டோம். அதற்கு மூல காரணமே இந்தச் சின்னஞ் சிறுவன்தான். வீரத்திலே இவனுக்கு நிகராகக் காவியங்களில் நாம் காணும் பார்த்தனையும், வீர அபிமன்யுவையும், இந்திர சித்தையும் தான் ஒப்பிட முடியும். தங்களுடைய சூரியகுலம் பெற்றெடுத்த இராமச்சந்திர மூர்த்திக்கும், இளைய பெருமான் இலக்குவனுக்கும் நிகரான வீரன் இவன்.' இவ்வார்த்தைகளை வேதவனம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். அவருடைய கண்களிலே நீர் தாரை தாரையாக வழிந்தது.

'அப்படியா! இந்தப் பாண்டி நாட்டுப் போரின் மகத்தான வெற்றிக்கு மகீதரன்தான் காரணமா? அப்படியாயின் இப்போரைப் பற்றி சாசனங்களிலும் மெய்க்கீர்த்திகளிலும் மகீதரனுடைய சாதனைகளுக்குத் தனி இடம் கொடுக்க வேண்டும்.*

* இந்த பாண்டிநாட்டுப் போரைக் குறிப்பிடும் சாசனங்களில் மகீதரனுக்குத் தனி இடம் கொடுத்திருப்பதைக் காணலாம்.

நல்லமனை அவன் வழியிலேயே விட்டுவோம். இளையவனான மகீதரனுக்கே மணிமுடி சூட்டுவோம். நல்லம்மா, மகீதரா! என்னுடைய அன்புக் கண்களே, ஆருயிர்ச் செல்வங்களே, நீங்கள் இருவரும், இளங்கோவடிகளையும் சேரன் செங்குட்டுவனையும் போல இரு துறைகளிலும் இமயத்தின் உச்சியை எட்டும் புகழ் எய்திப் பெருவாழ்வு வாழ்வீர்களாக!'

அரசர் இரு பிள்ளைகளையும் மார்போடு அணைத்துக் கொண்டார். அப்பொழுது ஆனந்தவரதக் கூத்தர் மேலும் ஒரு அடி எடுத்துவைத்து முன்னால் வந்தார் அவர் முகம் அப்பொழுது ஒளிப்பிழம்பாக மின்னியது. அவர் வாயிலிருந்து சத்திய வாக்கு ஒலித்தது.

'அரசே, இந்த இளவல்கள் இருவர் மட்டுமல்ல, தாங்களும் புகழுடம்புடன் என்னென்றும் வாழ்வீர்கள்! கன்னித் தமிழகம் இருக்கும்வரை, தமிழ் இலக்கியம் இருக்கும்வரை வாழ்வீர்கள். அரசே! இன்று இம் மருத்துவர்களால் தங்களைக் காப்பாற்ற இயலாது போகலாம். ஆனால் நான் தங்களைக் காப்பாற்றுவேன், நான் தங்களைச் சாகவிட மாட்டேன். என்றென்றும் வாழ வைப்பேன். எமனை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொள்வேன். ஊழி உள்ளளவும், தமிழ் உள்ளளவும் தங்களை வாழவைப்பேன், கன்னித் தமிழ் வாழும்வரை கருணை வாழ்வின் அருணனான தாங்களும் வாழ்வீர்கள்: என்னுடைய பாட்டனார் ஒட்டக்கூத்தர் இராசராச சோழர் மீது உலாபாடி அவருக்கு அமரத்துவம் அளித்தார். செயங்கொண்டார் தரணிபுகழ் கலிங்கத்துப் பரணி பாடி முதலாம் குலோத்துங்கருக்கு அமர வாழ்வு அளித்தார்.

'அதே போல அடியேனும் செம்பியர் திலகமான தங்களைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து, 'சங்கர சோழர் உலா' பாடப் போகிறேன் அந்த அமர காவியத்தில் நல்லமனுக்கும், மகீதரனுக்கும் மங்காத இடம் அளிப்பேன். அதன் மூலமாக, என்றுமுள்ள தமிழ் உள்ளளவும் தங்களை வாழ வைப்பேன். இளம் வயதிலேயே ஞானப்பால் உண்டு ஞானம் பெற்ற ஞானசம்பந்த சுவாமிகளை ஒத்த நல்லமனை வாழவைப்பேன். இரகு வம்சத்துத் தவச் செல்வனான இராகவனை ஒத்த மகீதரனுக்கு மங்காத வாழ்வு அளிப்பேன். நீங்கள் மூவரும் என்றும் வாழ்வீர்கள். காலம், நரை, திரை, மூப்பு உங்களை அழிக்க இயலாது.'

'மெத்த மகிழ்ச்சி, ஆனந்த வரதக்கூத்தரே, மெத்த மெத்த மகிழ்ச்சி. இந்த ஒரே யாமத்தில் நான் முழு வாழ்வு வாழ்ந்து விட்டேன். இனி எனக்கு எந்தக் குறையும் இல்லை. என்னுடைய கனவுகள் எல்லாம் நனவுகளாகி விட்டன. மனநிறைவோடு, மகிழ்ச்சியோடு நான் போகிறேன். மகீதரா, ஒரே ஒரு வேண்டுகோள். நீ பதவி ஏற்றவுடன் திருமலையில் இருக்கும் திருமாலைக் கொண்டுவந்து தில்லையில் பிரதிஷ்டை செய்யவேண்டும். அதன் மூலமாக சோழர் குலத்திற்கு ஏற்பட்ட கறையைத் துடைக்க வேண்டும். எனது அருமைத் தம்பி! நான் போய்வருகிறேன். அனைவரும் சிரித்த முகத்தோடு இந்தச் சிறியவனுக்கு விடை கொடுங்கள்: இராசராச சோழருக்குக் கொடுத்த வாக்குறுதியை நான் நிறைவேற்றி விட்டேன். எல்லோருக்கும் வணக்கம்.'

அரசர் அனைவரையும் பார்த்துக் கரங்களைக் கூப்பினார். கண்களில் நீர் வரவில்லை. கண்கள் உதட்டோடு போட்டியிட்டுக் கொண்டு சிரித்தன.

அன்றே அதே வேகத்தில் கவிஞர் பெருமான் ஆனந்த வரதக்கூத்தர் 'சங்கர சோழர் உலா' ஆக்கத் தொடங்கினார். சங்கர சோழனாக, காவியத்தின் கதாநாயகனாக இராசாதிராசனை உருவகப்படுத்திக் கொண்டு உலா ஆக்கினார்.

'மொழி அனைத்தும் வல்லவன்-ஆதிமனுவின்
மேதக்க நல்லமன்'

இவ்வாறு நல்லமனைப்பற்றிச் சங்கரசோழன் உலாவில் குறிப்பிடுகிறார். ஆம், அவன் அனைத்து மொழிகளும் கற்றறிந்த வல்லவன், மனுநீதி வகுத்த ஆதிமனுவைவிடச் சிறந்தவன் என சிறப்பாக பாடியுள்ளார்.

அதேபோல, அரச பொறுப்பை ஏற்ற மகீதரனைப் பற்றிப் பாடியுள்ளார்:

'பைத்தபொரு புலியைப் பல்கோடி வேந்தளிய
வைத்த குமார மகீதரற்கும்'

இவ்வாறு மகீதரனை சிறப்பித்துள்ளார். அது மட்டுமல்ல; ஈழம், பாண்டிய நாட்டுப் போர்களில் குமார மகீதரன்

ஆற்றியுள்ள அரும்பெரும் வீரப் பணிகளை வானளாவ ஏற்றிப் போற்றியுள்ளார்.*

குமார மகீதரன் மூன்றாம் குலோத்துங்க சக்ரவர்த்தி என்ற பட்டப் பெயருடன் சோழ சிம்மாதனம் ஏறினான். தன்னுடைய ஆட்சி காலத்திலே அவன் அரும்பெரும் செயல்களை ஆற்றினான். தாய்த்தமிழைப் பேணி வளர்த்தான். குணவீர பண்டிதரைக் கொண்டு நேமிநாதம் என்ற இலக்கண நூல் செய்வித்தான். மகாபாரதம் தமிழில் பாட ஆவன செய்தான். பவநந்தி முனிவரைக் கொண்டு நன்னூல் இலக்கணம் ஆக்கச் செய்தான். இத்தகைய பல்வேறு பணிகளைச் செய்ததின் மூலமாக தமிழ் உலகிற் தன்னிகரற்ற இடம் பெற்று விட்டான்.

ஆனால் மூன்றாம் குலோத்துங்கனுடைய காலத்தில் இராசாதிராசனுடை கடைசி ஆசை நிறைவேறவே இல்லை. திருமலையில் இருந்த திருமாலைக் கொண்டு போய் தில்லையில் பிரதிஷ்டை செய்யும் பணி நடைபெறவே இல்லை.

ஏன், அதன் பின்னர் நூற்று எண்பத்தெட்டு ஆண்டுகள் அந்தக் கோரிக்கை நிறைவேறவே இல்லை.

பதினான்காம் நூற்றாண்டில் குமார கெம்பண்ணா என்பவர் கோபண்ணா அவர்களை செஞ்சி ஆளுநராக நியமித்தார். ஆளுநர் கோபண்ணா வேங்கடத்தில் வைக்கப் பட்டிருந்த கோவிந்தராசப் பெருமாளைக் கொண்டு வந்தார். ஐயனைத் தில்லையம்பதித் திருக்கோயிலில் மீண்டும் பிரதிஷ்டை செய்தார்!

சோழர்குல மாணிக்கம், தமிழ் தந்த தவப்புதல்வன் செம்பியர் திலகம் இராசாதிராசனுடைய ஆத்மா சாந்தி அடைந்தது.

* * *

*'டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் 1905-ல் 'சங்கர சோழன் உலா' சேகரித்து எடுத்து தமிழ் அன்னைக்குப் புதியதோர் ஆரம் சூட்டியுள்ளார்.

மின்நூல் கூடம்

DIGITAL LIBRARY



Do you enjoy reading but can't get to your local library?

Then let us bring the library to **YOU**!

மின்நூல் ஆக்கம் : சீயான்

